PEOPLE'S BANK

Pride of the Nation

முன்னேற்ற பாதையில் புதியதோர் அத்தியாயம்

ஆண்டறிக்கை 2025

PEOPLE'S BANK
HNB ASSURANCE

முன்னேற்ற பாதையில் புதியதோர் அத்தியாயம்

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக, மக்கள் வங்கியானது அடிமட்டத்தில் இருந்து தொடங்கி நாட்டின் மிகவும் உச்சத்தைத் தொடுகின்ற நிதியியல் நிறுவனமாக வளர்ச்சியடைந்து, இலங்கையுடன் இணைந்து முன்னேற்றமடைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டில், நம்பிக்கை, தாக்குப்பிடிக்கும்தன்மை, தேசிய சேவை என்பன மீது கட்டியெழுப்பப்பட்ட நவீன அடையாளமாக ‘பீப்பிள்ஸ் டவர்’ புதியதோர் அத்தியாயம் படைக்கின்றது. ஒப்பற்ற அடைவு மற்றும் வேகமாக முன்னேறும் டிஜிட்டல்மயமாக்கம் என்பவற்றைக் கொண்டு நாடெங்கும் உள்ள தனிநபர்களையும் வணிகங்களையும் அத்துடன் அரசாங்கத்தையும் நாம் வலுப்படுத்துகிறோம். இலங்கையின் முன்னேற்றமே எமது நோக்கமாக விளங்குகின்ற விதத்தில் “நாட்டுடன் உயர்வோம்” என்பது எமது இயலளவுகளை தொடர்ந்து உயர்த்துவதற்கான எமது கடமைப்பொறுப்பை பிரதிபலிக்கிறது.



உள்ளடக்கம்

04 எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை பற்றிய அறிமுகம்

09 வங்கியைப் பற்றியது

10 எமது வங்கி

12 எமது குழுமம்

14 மைற்கற்கள்

18 விருதுகள்

20 எமது சமூக பொருளாதாரத் தாக்கம்

- 20 நிதியியல் சிறப்பம்சங்கள்
- 22 நிதியல்லாச் சிறப்பம்சங்கள்

25 நிறைவேற்றுநர் மீளாய்வுகள்

26 தலைவரின் செய்தி

32 பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொதுமுகாமையாளரின் மீளாய்வு

36 பணிப்பாளர் சபை

44 பெருநிறுவன முகாமைத்துவம்

54 நிறைவேற்று முகாமைத்துவம்

57 பிரதம முகாமையாளர்கள்

65 தந்திரோபாயம் மற்றும் மதிப்பு உருவாக்கம்

66 எமது செயற்பாட்டுச் சூழல்

74 பங்குதாரர் ஈடுபாடு

80 முக்கிய காரணிகள்

86 தந்திரோபாயம்

92 எமது மதிப்பு உருவாக்க மாதிரி

94 எமது சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மீதான முக்கிய கவனம்

96 ஐ.நா நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுக்கான (UN SDGs) எமது கடப்பாடு



101
முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

102 வணிகப் பிரிவு மீளாய்வுகள்
103 சில்லறை வங்கித்தொழில்
109 வணிகக் கடன்
112 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SME) அபிவிருத்தி மற்றும் நுண்நிதி
116 பெருநிறுவன வங்கிச் சேவை
118 திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கிச் சேவை
122 வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்
125 சர்வதேச வங்கிச்சேவை
127 தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கிச்சேவை
132 கடன் அட்டைகள்
134 அறவீடுகள்
136 சந்தைப்படுத்தல்
138 கிளை முகாமைத்துவம்
142 நிதி மூலதனம்
150 உற்பத்தி மூலதனம்
156 அறிவுசார் மூலதனம்
162 மனித மூலதனம்
180 சமூக மற்றும் உறவு மூலதனம்
183 வாடிக்கையாளர் மூலதனம்
189 வியாபாரப் பங்காளர் மூலதனம்
192 சமுதாய மூலதனம்
196 முதலீட்டாளர் மூலதனம்
198 இயற்கை மூலதனம்

207
ஆளுகை

208 இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை
260 பெருநிறுவன ஆளுகை
298 சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கை
299 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை
300 சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அறிக்கை
301 சபை நிர்வாகக் கடன் முகாமைத்துவக் குழு அறிக்கை
302 சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழு அறிக்கை
303 சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை
304 சபை தந்திரோபாய திட்ட மீளாய்வுக் குழு அறிக்கை
305 தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு அறிக்கை
306 நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று
308 உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை

311
நிதியியல் அறிக்கைகள்

312 நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்
313 நிதியியல் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
316 வருமானக் கூற்று
317 அனைத்துமுள்ளடக்கிய வருமானக் கூற்று
318 நிதி நிலைமைக் கூற்று
320 உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி
322 உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம்
324 காசுப் பாய்ச்சல் கூற்று
325 நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

443
மேலதிகத் தகவல்கள்

444 வருமான கூற்று (அமெரிக்க டொலர்)
445 நிதி நிலைமைக் கூற்று (அமெரிக்க டொலர்)
446 பத்து வருட பொழிப்பு – வங்கி
447 பத்து வருட பொழிப்பு – குழுமம்
448 பாசல் III – துண் III இன் கீழ் சந்தை ஒழுங்குமுறை வெளிப்படுத்தல் தேவைப்பாடு
467 நிலைத்தன்மை அறிக்கைக்கான வெளியக உறுதிமொழி
469 GRI உள்ளடக்க காட்டி
475 சிரேஷ்ட முகாமையாளர்கள்
480 கிளை முகாமையாளர்கள்
486 நிதியியல்/வங்கியியல் விதிமுறைகளின் சொற்களஞ்சியம்
492 பெருநிறுவன தகவல்கள்

எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை பற்றிய அறிமுகம்

இது எமது மூலோபாய முன்னுரிமைகளை அடைவதில் அடைந்த முன்னேற்றம் பற்றிய சமநிலைப்படுத்தப்பட்ட நோக்கொன்றை வழங்குகின்ற 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையாகும். மக்கள் வங்கியான நாங்கள், எவ்வாறு எங்களின் நிதிப் பரம்பலை பயன்படுத்தினோம், வளங்களைப் பகிர்ந்துகொண்டோம், எங்கள் பங்குதாரர்களுக்குத் நிபுணத்தவமிக்கதாக பெறுமதியைக் கொண்டுசேர்க்க எமது ஊழியர்களை எவ்வாறு வலுவூட்டினோம் என்பதையும் இவ்வறிக்கை எடுத்துரைக்கின்றது. அதேபோன்று, முன்னைய நிதியாண்டில் நாம் அடைந்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, தேசம் அதன் மீட்சிப்பாதையில் செல்வதற்கு நாம் எவ்வாறு ஆதரவளித்தோம் என்பதையும் இது விபரிக்கிறது. எங்களின் தொழிற்பாட்டுத் தோற்றவமைப்பு, ஆளுகை நடைமுறைகள், பங்குதாரர் பெறுமதி உருவாக்கம், செயற்திறன் மற்றும் மாறிவரும் சந்தை இயக்கவாற்றலுக்கான எமது பதிலிறுத்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் நியாயமான மதிப்பீட்டையும் வழங்குகின்றது.



நோக்கெல்லையும் வரையறையும்

GRI 2-2, 2-3

2025 ஜனவரி 1 முதல் 2025 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கான அதன் துணை நிறுவனங்களான பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் டிரவல்ஸ் (தனியார்) நிறுவனம் ஆகியவை உள்ளடங்கலாக மக்கள் வங்கியின் தொழிற்பாடுகளை இவ்வறிக்கை உள்ளடக்கின்றது. இந்நிறுவனங்கள் கூட்டாக “குழுமம்” என்று குறிப்பிடப்படுவதுடன் மக்கள் வங்கி குழுமத்தின் தாய்க்கம்பனியாக பணியாற்றுகின்றது. ஒருங்கிணைந்த நிதியியல் நிலை அறிக்கையானது 2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் நிதியியல் செயலாற்றத்தை எடுத்துரைக்கின்றது. தகவல்கள் வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டாலன்றி நிதியியல் அல்லாதவை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை மக்கள் வங்கிக்கு மட்டுமே பொருந்தும்.

தகவல்களின் மீள்கூற்று

GRI 2-4

வங்கியானது வருடாந்த அறிக்கையிடல் சுழற்சியைப் பின்பற்றுவதுடன் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி பெரிய நிதி அல்லது நிதி சாரா தகவல் மீள்கூற்றுகள் எதுவும் செய்யப்படவில்லை. மிக அண்மைய வருடாந்த அறிக்கையானது, 2024 டிசம்பர் 31அன்று முடிவடைந்த 12 மாதங்களை உள்ளடக்கியதாகும் இது வங்கியின் இணையதளமான www.peoplesbank.com இல் கிடைக்கிறது.

அறிக்கையிடலுக்கான எமது அணுகுமுறை

GRI 2-14

எமது ஒருங்கிணைந்த அறிக்கையானது, எமது ஒருங்கிணைந்த குறிக்கோள், ஒத்துழைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை வலியுறுத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட செயல்முறையின் விளைவாகும். பணிப்பாளர்கள் குழு மற்றும் முகாமைத்துவ குழு தலைமையிலான நிர்வாக கட்டமைப்பின் மூலம் துல்லியமான மற்றும் வலுவான அறிக்கையிடலை நாம் உறுதிசெய்கிறோம். அந்தந்த பிரிவுகளிலிருந்து உள்ளீடுகள் கவனமாக இணைக்கப்படுகின்றன, மேலும் அறிக்கை ஒருங்கிணைந்த உத்தரவாத மாதிரி மூலம் உறுதி செய்யப்படுகிறது, இது எமது பெறுமதிமிக்க பங்குதாரர்களுக்கு நம்பகமான மற்றும் அனைத்துமுள்ளடக்கிய தகவல்களை வழங்குகிறது. பெறுமதி உருவாக்கத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையை வழங்குகின்ற 101 – 205 வரையிலான பக்கங்களில் தோன்றுகின்ற முகாமைத்துவ கலாதாராய்வு மற்றும் பகுப்பாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு இலாபம், சமூக பெறுமதி உருவாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் செயலாற்றம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவை செயலாற்ற இயக்கிகள் இணைக்கின்றன.

வெளிவாரி உத்தரவாதம்

GRI 2-5

313-315 ஆம் பக்கங்கள் மீதான இவ்வறிக்கையின் நிதியியல் கூற்றுகள் உள்ளடக்கத்திற்கு இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி உத்தரவாதமளித்துள்ளார். “நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று” உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கை நியமத்திற்கமைவாக, உத்தரவாத ஈடுபாடுகள் இலங்கை நியமங்கள் (SLASC) 3050 (திருத்தப்பட்டது). கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. உத்தரவாத அறிக்கை 308-309 ஆம் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் சட்டரீதியாக பொறுப்பாணையளிக்கபட்டுள்ளதுடன் மக்கள் வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் “நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று” என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி மூலம் நியமிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றன.

இவ்வறிக்கையின் நிலைபெறுதன்மை அறிக்கையிடல் கூறானது உத்தரவாத ஈடுபாடுகள் இலங்கை நியமங்கள் 3000 இற்கமைவாக ஏனர்ஸ்ட் அன்ட் யங் நிறுவனம் மூலம் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அறிக்கை 467-468 ஆம் பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் பின்னணியில், நிதியியல் செயலாற்றம் மீதான தகவல்கள் பற்றி நியாயமான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதுடன் GRI நியமங்கள் 20, 21 இற்கமைவாக தயாரிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் மீது மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

பெறுமதி உருவாக்கம்

GRI 2-6

பொருளாதார வளர்ச்சியையும் மீட்சியையும் நோக்கிய பாதையில் இலங்கை தொடர்ந்தும் செல்வதற்கேற்ப சமூகத்தின் பாரியளவிலான வகுப்பினருக்கு நிதியியல் பணிச் சேவைகளை வழங்குவதற்கு மிகப் பரந்தளவிலான அடைவுடன் முதன்மை நிதியியல் நிறுவனமொன்றாக மக்கள் வங்கி இன்றியமையாது பங்காற்றுகின்றது. எமது வாடிக்கையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் காலத்திற்கு பொருத்தமான உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குவதற்கான வழிகளையும் விதங்களையும் நாம் அயராது நாடுவதுடன் எமது வெளிநாட்டு பணம் அனுப்பல் சேவைகளூடாக வெளிநாட்டு செலாவணி தாங்குஇருப்புகளை கட்டியெழுப்புவதை நோக்கி குறிப்பிடத்தக்களவு பங்களித்துள்ளோம். வலிமையான நிதியியல் மற்றும் நிலைபெறத்தக்க பேரண்ட பொருளாதார கோட்பாடுகளில் வேரூன்றி, அனைத்து பங்குதாரர்களுக்கும் குறிப்பிடத்தக்களவு மேம்பட்ட பெறுமதியை உருவாக்குகின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு மிகுந்த ஆதரவளித்தலுடன் வங்கி பாராட்டத்தக்க நிதியியல் ஆண்டொன்றை நிறுவுகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் மற்றும் வங்கித் தொழில் சேவைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்தின் டித்வா புயலுக்கு பிந்திய மீள் கட்டியெழுப்புதல் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு எமது பரந்த தேசியளவிலான வலையமைப்பை நாம் பயன்படுத்தினோம். பெறுமதி உருவாக்க மாதிரி 92-93 அம் பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கைக் கோட்பாடு

GRI 2-23

சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைபெறுதன்மைமையை தீர்மானிப்பதில் முன்னெச்சரிக்கைக் கோட்பாட்டைப் ஒரு அளவீடாக நாம் பயன்படுத்துகிறோம். எமது தொழிற்பாடுகள் சமூகத்திலும் சுற்றுச்சூழலிலும் ஒட்டுமொத்த சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்திருக்கின்ற அதேவேளை எதிர்மறையான தாக்கத்தின் எந்தவொரு இடர்நேர்வையும் குறைப்பதை உறுதிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம். 166-187 ஆம் பக்கங்கங்களில் இவை விபரிக்கப்பட்டுள்ளன.

பொருண்மை

இவ்வறிக்கை முழுவதும், மிக முக்கிய பொருளாதர, சுற்றாடல் மற்றும் சமூக தாக்கங்களுடனானவை மீதான எமது கவனத்தை செலுத்தி, பொருண்மை எண்ணக்கருவை நாம் முன்னுரிமைப்படுத்தியுள்ளோம். இவ்விடயங்கள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களில் பெறுமதி உருவாக்கத்திற்கான எமது இயலுமையில் முக்கியமாக தாக்கம் ஏற்படுத்தக் கூடியன. எமது பொருண்மை பற்றிய விபரங்களுக்கு தயவுசெய்து 81-83 ஆம் பக்கங்களை பார்க்க. இவ்வறிக்கை முழுவதும் எடுத்துரைக்கப்படுபவற்றின் தரம், தொடர்பு மற்றும் வாசிக்கத்தக்க தன்மை என்வற்றை உயர்த்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளமையினால் செம்மை மற்றும் நம்பகத்தன்மையுடன் கூடிய அறிக்கையிடுதல் எமது அனைத்து அறிக்கைகளினதும் முக்கிய பண்பாகக் காணப்படுகின்றது.

அறிக்கையிடல் கட்டமைப்பு

ஒருங்கிணைப்பட்ட அறிக்கையிடல்	நிதியியல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவன ஆளுகை	சுற்றாடல், சமூக, ஆளுகை மற்றும் நிலைபெறுதன்மை அறிக்கையிடல்
சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் தரநியமங்கள் அமைப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு	இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள்	உலகளாவிய அறிக்கையிடல் முயற்சி (GRI) நியமங்கள் - “உலகளாவிய நிலைபெறுதன்மை நியமங்கள் சபையினால் வழங்கப்பட்ட உலகளாவிய அறிக்கையிடல் முயற்சி தரநிமயங்களுக்கமைவாக”
	இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள்	ஐக்கிய நாடுகள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகள்
	1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான ஏதேனும் திருத்தங்கள்	உரிமம் பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க நிதிச் செயற்பாடுகள் மீதான 2022 இன் 5 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டப் பணிப்புரை
	1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற்சட்டம் மற்றும் அதற்கான எவையேனும் திருத்தங்கள்	சர்வதேச நிதி அறிக்கையிடல் நியம நிலைபெறுதன்மை வெளிப்படுத்தல் எஸ்1
	இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்பரைகள்	சர்வதேச நிதி அறிக்கையிடல் நியம நிலைபெறு தன்மை வெளிப்படுத்தல் எஸ்2
	1953 இன் 24 ஆம் இலக்க செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம்	ISO 14064 - 1:2018 பச்சை வீட்டு வாயு வெளியேற்றம் மற்றும் அகற்றுதல் அளவிடுதல் மற்றும் அறிக்கையிடுதலுக்கான நிறுவன மட்டம்
	2006 இன் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டம்	
	2006 இன் 5 ஆம் இலக்க பணம் தூய்மையாக்குதலை தடுத்தல் சட்டம்	
	2023 டிசம்பரில் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை	
	நிறுவன ஆளுகை கட்டமைப்பு மீது 2025 ஜனவரி 1 தொடக்கம் நடைமுறைக்கு வரும் 2024 இன் 5 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரை	

வழிகாட்டும் கோட்பாடுகள்

இவ்வறிக்கையானது 2025 ஆம் ஆண்டின் முடிவில் எமது செயலாற்றம் பற்றிய நம்பகமான மீளாய்வொன்றை வழங்குவதை உறுதிசெய்வதற்கு பின்வரும் கோட்பாடுகள் மூலமான ஒத்திசைவுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தகவல்களின் தொடர்பு

கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ள குறியீடுகள் ஊடாக தகவல் பாய்ச்சல் இணைக்கப்பட்டுள்ளது.

நிதியியல் மூலதனம்		
நிதியியல் மூலதனம்	மனித மூலதனம்	தயாரிக்கப்பட்ட மூலதனம்
புலமைச் சொத்து மூலதனம்	சமூக மற்றும் உறவு மூலதனம்	இயற்கை மூலதனம்
பங்குதாரர்		
ஊழியர்கள்	வாடிக்கையாளர்கள்	வியாபார பங்காளர்கள்
சமூகம்	முதலீட்டாளர்கள்	ஒழுங்குமுறை படுத்துனர்கள்
உபாய ரீதியான தூண்		
டிஜிட்டல் மேலாதிக்கம்	வளர்ச்சியை இயக்குதல்	பரந்த அடைவு

நம்பகமான எடுத்துரைப்பு: சாதகம், நடுநிலை மற்றும் பாதகமான நோக்கங்கள் உள்ளடங்கலாக எமது செயலாற்றம் பற்றிய சமநிலைப்படுத்தப்பட்ட நோக்கொன்றை நாம் எடுத்துரைத்துள்ளோம்.

ஒத்திசைவும் ஒப்பீட்டுத்தன்மையும்: அளவீட்டுக்கான குறிகாட்டிகள் அறிக்கையிடல் கட்டமைப்புடனும் ஒப்பீட்டுத்தன்மையினை தேவையான போதெல்லாம் சாத்தியமாக வசதிப்படுத்துவதற்கு தொழிற்துறை நியமங்களுடனும் அணிசேர்க்கப்பட்டுள்ளன.

நம்பகத்தன்மை: நிதிசார் மற்றும் நிதிசாரா தகவல்கள் இரண்டினதும் நம்பகத்தன்மையினை உறுதிசெய்வதற்கு உள்ளக செயன்முறைகளும் கட்டுப்பாடுகளும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

சாராம்சம்: இவ்வறிக்கையை பயன்படுத்துவோருக்கு முக்கிய விடயங்களை தொடர்பூட்டுவதில் தகவல்களை சாராம்சமாக எடுத்துரைத்தல் முதன்மைக் குறிக்கோளாக இருந்து வருகின்றது. வேண்டப்படுகின்ற போதெல்லாம் செம்மைக்கும் வெளிப்படைத்தன்மைக்கும் ஆதரவளிப்பதற்கு மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அறிக்கையினை பெறுதலும் பின்னூட்டலும்

GRI 2-3

இவ்வறிக்கையினை எமது வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்:

peoplesbank.lk/last financial-result/

இவ்வறிக்கை பற்றிய உங்களது பின்னூட்டலை அனுப்புவதற்கு:

நிதிப் பிரதானி
நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டு திணைக்களம்.
பீப்பிள்ஸ் டவர்
இலக்கம் 374, டாக்டர் கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை
கொழும்பு 02
+94 11 374 0740 (ex. 0600)
info@peoplesbank.lk
www.peoplesbank.lk

PEOPLE'S TOWER

வங்கியைப் பற்றியது

10
எமது வங்கி

12
எமது குழுமம்

14
மைற்கற்கள்

18
விருதுகள்

20
எமது சமூக பொருளாதாரத் தாக்கம்



எமது வங்கி

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டு, இலங்கை மத்திய வங்கியால் உள்நாட்டில் முறைமை ரீதியாக முக்கியமான வங்கியாக பெயரிடப்பட்டுள்ளதுடன், வங்கித் துறையில் மிகப்பெரிய கிளை வலையமைப்பைக் கொண்டு இயங்கி, நாடு முழுவதும் 15.2 மில்லியன் வாடிக்கையாளர்களுக்கு இவ்வங்கி பணியாற்றுகின்றது. வங்கியில் பணிபுரியும் மொத்த பணியாளர் வலிமை 746 கிளைகள் முழுவதும் பரந்துள்ளது.

2025 ஆம் ஆண்டில், வங்கியானது வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 40.2 பில்லியனையும், சொத்து பெறுமதியாக ரூ. 3.7 ரில்லியனையும் கொண்டு அதன் 64 ஆண்டு கால வரலாற்றில் இதுவரை இல்லாத மிகச் சிறந்த செயற்திறனை கொண்டுசேர்த்தது.

பொதுமக்கள் நலனோம்புகை எமது முன்னுரிமை பொறுப்பாணையாகவிருந்து எமது நாடு தழுவிய சென்றடைவானது நிறுவனத்துறை, அரச துறை, தனிப்பட்ட பிரஜைகள், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி மற்றும் நுண்நிதி வாடிக்கையாளர்கள், திட்ட நிதியிடல் கூட்டு முயற்சிகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற பல்வகை வாடிக்கையாளர் தளத்தினை உள்ளடக்குகின்றது. மக்கள் தொகையின் அனைத்து வகுப்பினர்களினதும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் எமக்கு முன்னுரிமையாக நகர மற்றும் கிராமிய பிரதேசங்களை சென்றடைகின்ற எமது வங்கித் தொழில் சேவைகளூடாக தேசத்தின் நிதியியல் துறைக்கு நாம் கணிசமாக பங்களிக்கின்றோம். சமூகத்தின் பொருளாதார ரீதியாக பின் தங்கிய வகுப்பினர்களுக்கிடையில் நிலைபேறான அபிவிருத்தியில் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நாம் ஆதரவளித்து இலாபத்தன்மையினையும் பொதுமக்கள் நலத்தினையும் எளிதாக ஒன்றிணைக்கின்றோம். 2025 இல் டிஜிட்டல் ரீதியான மாற்றத்தினை நாம் துரிதப்படுத்தி, இலங்கையில் வங்கித் தொழிற்துறையில் முன்னணியில் இருக்கும் டிஜிட்டல் சேவை வழங்குனராக வங்கியினை நாம் இடம்பெறச் செய்துள்ளோம்.

தொலைநோக்கு

உருமாற்ற வளர்ச்சியை நோக்கி நாட்டை ஊக்குவித்தல்

பணிநோக்கு

நாம் கட்டுப்படியான, அடையக்கூடிய மற்றும் செயற்திறனாக வழங்கப்பட்ட தீர்வுகள் ஊடாக தரமான வாழ்க்கை மற்றும் தொழில் முயற்சிகளின் மேம்பாட்டுக்கு பங்களிப்பதற்கான நிதியியல் சேவைகளை வழங்குகின்ற சேவையிலுள்ளோம்.

எமது வாடிக்கையாளர்களை கவனித்துக் கொள்வதற்கும், பாதுகாப்பதற்குமாக எமது மனித வளத்தினை வலுவூட்டி மேம்படுத்துகின்றோம்.

போட்டி ரீதியாக இலாபத்தினை ஈட்டுகின்ற அதேவேளை தேசிய பொருளாதார அபிவிருத்திக்கும் நாம் பங்களிக்கின்றோம்.

எமது வணிக செயல்முறைகளில் நிலைபேறாக இருக்கின்ற அதேவேளை நாம் செயல்புரிகின்ற சமூகத்தினை பழைய நிலைமையில் வைத்திருப்போமென நம்புகின்றோம்.

விழுமியங்கள்

தேசத்தின் பெருமை

வாடிக்கையாளரை மையப்படுத்தலும் விரைவூக்கமும்

நேர்மையும் பொறுப்புக்கூறலும்

தொடர்ச்சியாக கற்றல் கலாச்சாரம் மற்றும் கூட்டுமுயற்சி

வலுவளித்தல் மற்றும் பன்முகத்தன்மை

நீண்ட கால தீவிரமான இலட்சியமிக்க இலக்கு

தொழில்துறையின் சிறந்த பணியாளர் திருப்தி நிலையுடன் கூடிய அதிக வாடிக்கையாளரை கவரும் வங்கியாக திகழுதல்

எமது குழுமம்



எமது குழுமம்
கூட்டிணைப்பு ஆண்டு

1961

வாடிக்கையாளர் பிரிவுகள்

- தனிப்பட்டவர்கள்
- நுண்பாக தொழில்முயற்சிகள்
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள்
- அரசாங்க மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள்
- பெருநிறுவனங்கள்

பிரதான உற்பத்திகளும் சேவைகளும்

- சில்லறை வங்கிச் சேவை
- திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கிச் சேவை
- சர்வதேச வங்கிச் சேவை
- கடனட்டைகள்
- வர்த்தக கொடுகடன்
- நிறுவன வங்கிச் சேவை
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி
- அபிவிருத்தி வங்கிச் சேவை
- கடல் கடந்த வாடிக்கையாளர் சேவை

செயலாற்ற சிறப்புக்கூறுகள் 2025

சொத்துகள்
ரூ.3,708.4 பில்லியன்

வரிக்கு பிந்திய இலாபம்:
ரூ.40.2 பில்லியன்

ஊழியர் எண்ணிக்கை

8,122

கிளைகளின் எண்ணிக்கை

746

75%
சொத்தாண்மை

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு

1995

வாடிக்கையாளர் பிரிவுகள்

தனிப்பட்டவர்கள்

நுண்பாக தொழில்முயற்சிகள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள்

நிறுவனங்கள்

பிரதான உற்பத்திகளும் சேவைகளும்

குத்தகை மற்றும் தவணை கொள்வனவுகள்

நுண்நிதி

வைப்புகள்

கடன்கள்

செயலாற்ற சிறப்புக்கூறுகள் 2025

சொத்துக்கள்: ரூ 280.1 பில்லியன்

வரிக்கு பிந்திய இலாபம்: ரூ 4.5 பில்லியன்

ஊழியர் எண்ணிக்கை

3,237

கிளைகளின் எண்ணிக்கை

112

99%
சொத்தாண்மை

கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு

1993

வாடிக்கையாளர் பிரிவுகள்

தனிப்பட்டவர்கள்

நிறுவனங்கள்

குழு சுற்றுலா பயணிகள்

சர்வதேச/உள்நாட்டுக்குவரும் சுற்றுலாப்பயணிகள்

பிரதான உற்பத்திகளும் சேவைகளும்

உள்வரும் பயணம்

வெளிச்செல்லும் பயணம்

பயண அடைவிட முகாமைத்துவம்

செயலாற்ற சிறப்புக்கூறுகள் 2025

சொத்துக்கள்: ரூ 245.0 மில்லியன்

வரிக்கு பிந்திய இலாபம்: ரூ 56.7 மில்லியன்

ஊழியர் எண்ணிக்கை

19

வணிகர் எண்ணிக்கை

2

மைற்கற்கள்

1961 – 1969

1961 ஜூலை 1 அன்று தொடங்கப்பட்டது.

முதலாவது கிளை கொழும்பு, டியூக் வீதியில் திறக்கப்பட்டது.

அடகு சேவைகள் தொடங்கப்பட்டன.

கூட்டுறவு கிராமிய வங்கித் திட்டம் மற்றும் புதிய விவசாயக் கடன் திட்டம் ஆகியவை ஆரம்பிக்கப்பட்டு, சிறு பண்ணைத் துறைக்கு முன்னோடி கடன் வழங்குநராக வங்கி மாறியது.

1970 – 1979

பொருளாதாரம் செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கு “அத்தமாரு” கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

100 ஆவது கிளை மரதஹகமுல்லவில் திறக்கப்பட்டது.

வங்கியின் ஊழியர் எண்ணிக்கை 5,000 ஆக உயர்ந்தது.

முதல் மீன்வள வங்கி கொரலவெலவில் திறக்கப்பட்டது.

1980 – 1989

நீட்டிக்கப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

300 ஆவது கிளை இங்கிரியவில் திறக்கப்பட்டது.

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 10,000 ஆக உயர்ந்தது.

பீப்பள்ஸ் மேர்சண்ட் நிறுவனம் வங்கியின் துணை நிறுவனமாக நிறுவப்பட்டது.

எமது தலைமை அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கிளைகளில் கணணிமயமாக்கல் செயன்முறை தொடங்கியது, மேலும் ஒரு கறுப்பு வெளிச்ச முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது, இது வாடிக்கையாளர்களுக்கான செயன்முறைப்படுத்தல் நேரத்தை கணிசமாகக் குறைத்தது.

1990 – 1999

முதலாவது பணமீளெடுப்பு இயந்திரம் (ATM) தலைமை அலுவலகக் கிளையில் பொருத்தப்பட்டது.

அரசாங்கத்தின் 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வங்கி ஆதரவளித்தது.

160 கிளைகள் கணணி மயப்படுத்தப்பட்டுள்ளது.

“வனிதா வாசானா” மற்றும் “இசுறு உதான” சேமிப்புத் திட்டங்களும் “சுரத்துற” கடன் திட்டமும் “விதேசிகா” வைப்புத்திட்டமும் தொடங்கப்பட்டன.

2000 – 2009

"ஜன ஜய", சேமிப்பு மற்றும் கடன் திட்டம் தொடங்கப்பட்டது.

மத்திய ATM செயலாக்க முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மொத்த ATM இயந்திரங்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்தது.

மக்கள் தானியங்கி வங்கி முறைமை (PABS) கொண்ட கிளைகளின் எண்ணிக்கை 218ஆக அதிகரித்தது. மேலும் 119 கிளைகள் மத்திய ATM செயலாக்க முறையுடன் இணைக்கப்பட்டன.

திறைசேரி தானியக்கத் பொதி நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதிநவீன மைய வங்கி தொகுப்பு மற்றும் வர்த்தக சேவை தீர்வுகளை நிறுவ வங்கி சில்வர் லேக் சிஸ்டம் SDV BUD மலேசியா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது.

பிட்ச் ரேட்டிங்ஸ் லங்காவிடமிருந்து வங்கி முதன் முதலில் BBB+ பகிரங்க தரப்படுத்தலை பெற்றது.

மைய வங்கி திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கு இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இலங்கை அரசாங்கத்தால் வங்கியில் பங்கு மூலதன முதலீடாக, வங்கி முதல் மூலதனத் தொகுதி ரூ. 2 பில்லியனையும், இரண்டாவது மூலதனத் தொகுதி ரூ. 1 பில்லியனையும், மூன்றாவது மூலதனத் தொகுதி ரூ. 1.5 பில்லியனையும் பெற்றது.

முதல் முறையாக, 2008 ஆம் ஆண்டு அறிக்கைக்கான SAFA (தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பு) விருதை வங்கி பெற்றது.

2010 – 2019

வங்கியின் 2011 ஆண்டு அறிக்கைக்கான 2012 ARC சர்வதேச விருதுகள் நிகழ்வில் தேசிய பிரிவில் ஒரு சிறப்பு விருதையும் மூன்று தங்க விருதுகளையும் வென்றது.

நாடு முழுவதும் 23 SME மையங்கள் நிறுவப்பட்டன. தேசிய பொது ATM மையங்களுடன் இணைக்கப்பட்ட முதல் வங்கியாக மக்கள் வங்கி உருவானது.

வங்கியின் சொத்து பெறுமதி ரூ. 1 ரில்லியனைத் தாண்டி, இந்தத் துறையில் இரண்டாவது பெரிய வங்கியாக உயர்ந்தது.

சிறந்த வங்கி" என்ற மூன்று விருதுகளையும், உலக நிதி வங்கி விருதுகள் 2014 இல் "இலங்கையின் சிறந்த வங்கி குழுமம்" மற்றும் "இலங்கையின் மிகவும் நிலைபேறான வங்கி" ஆகிய விருதுகளையும் மக்கள் வங்கி வென்றது. வங்கி அதன் நிலைபெறுதன்மை கடமைப்பொறுப்புகளை எடுத்துக்காட்டி வகையில் பசுமை வங்கி எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியது.

இலங்கையின் முதல் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கிளையை கொழும்பில் திறந்து, நாட்டின் எந்தவொரு அரச வங்கியையும் விட முதன்முதலில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவகான மதிப்புமிக்க ISO/IEC 27001:2013 தரச் சான்றிதழைப் பெற்றது.

இலங்கையில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நிதியியல் செயலியாக " People's Power" தோற்றம்பெற்றது.

மக்கள் வங்கி (திருத்த) சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின்னர், கடன் பத்திர வெளியீட்டின் மூலம் வங்கி ரூ. 10.0 பில்லியன் திரட்டியது. உபாயத் தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 239-ஐ எட்டியது. இது வெறும் மூன்று ஆண்டுகளில் அடையப்பட்ட சாதனையாகும்.

இலங்கையில் இதுவரை எந்தவொரு வணிக வங்கியும் பெறாத மிகப்பெரிய மற்றும் மிக நீண்ட கால இருதரப்பு நிதியியல் வசதியில் வங்கி கையெழுத்திட்டது.

2020

கொவிட்-19 காலத்தில் வழங்கப்பட்ட தேசத்திற்கு இணையற்ற ஆதரவு, வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டது. தொகுதிக்கடன்கள் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்தது இன்றுவரை தொழில்துறை, அடுக்கு 2 தொகுதிக்கடன்கள் ரூ. 20 பில்லியன் பெறுமதியை அடைந்தன.

சாதக அபிவிருத்தி இலக்குகளின் முதல் மூன்று இடங்களில் இடம்பிடித்ததுடன் அவ்வாறான தேசத்தின் ஒரே அரச வங்கியாகவும் மக்கள் வங்கி திகழ்ந்தது.

2021

வங்கி அதன் 60ஆவது ஆண்டுவிழாவை “தேசத்தின் பெருமை” என்ற கருப்பொருளுடன் கொண்டாடியது.

உள்நாட்டில் ஒரு மில்லியன் பாவனையாளர்களுடன் மிக அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலியாக People's Wave ஆக உருமாறியது. மற்றும் Pay wallet செயலி ஆரம்பிக்கப்பட்டது.

2022

முக்கிய சந்தைப் பிரிவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, Excelsior Elegance மற்றும் எலிகன்ஸ் ஆகிய இரண்டு புதிய வரத்தககநாமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

எங்களின் நிறுவன சமூகப் பொறுப்பு குடை வர்த்தகநாமம் மகாஜன மெஹேவர அறிமுகப்படுத்தப்பட்டது. 2022-2024 ஆம் ஆண்டுக்கான உபாய திட்டமிடல் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டது.

பல விருதுகள் கிடைக்கப்பெற்றன

- வங்கியாளர் சஞ்சிகையினால் உலகின் முதல் 1000 வங்கிகளில் ஒன்றாகப் மக்கள் வங்கி பெயரிடப்பட்டது.
- ஆசியவங்கியாளர் சஞ்சிகையினால், இந்த வங்கியை ஏசியன் பேங்கரின் முதல் 500 வங்கிகளில் ஒன்றாகச் சேர்த்தது.
- சர்வதேச ARC விருதுகள் 2022 நிகழ்வில் இரு தங்க விருதுகள் உட்பட நான்கு விருதுகளைப் பெற்றது.
- 2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை, CMA ஒருங்கிணைந்த அறிக்கையிடல் சிறப்பு விருதுகள் 2022 நிகழ்வில் சிறந்த 10 ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகளில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- தெற்காசிய கணக்காளர்கள் கூட்டமைப்பின் (SAFA) விருதுகளில், பொதுத்துறை வங்கிப் பிரிவில் வங்கி கூட்டாக வெண்கலப் பதக்கம் வென்றது.
- TAGS விருதுகள் 2022 நிகழ்வில் அரச துறைக்கான வெண்கல விருதை வென்றது.
- WFWP விருதுகள் 2022 நிகழ்வில் இலங்கையின் பெண்களுக்கான மிகச் சிறந்த பணியிடமாக அங்கீகரிக்கப்பட்டது.



2023

மேம்பட்ட வங்கி சேவைகளை வழங்க மக்கள் வங்கியானது இந்திய HDFC வங்கியுடன் கைகோர்க்கிறது.

உள்நாட்டு வங்கிப் பிரிவுகளில் வர்த்தக நிதியியல் வணிக பிரிவை வலுப்படுத்தும் நோக்கத்திற்காக, ஜுலை 2023 முதல் ஏழு பிராந்தியங்களில் ஏற்றுமதித் துறை சார்ந்த சிறு மற்றும் நடுத்தர தொழில் அபிவிருத்தி நிலையங்கள் (ஏற்றுமதி மையங்கள்) நிறுவப்பட்டன.

ஜுன் 2023 இல் People's FX Future Plus வெளிநாட்டு நாணய நிலையான வைப்பு கணக்கினை அறிமுகப்படுத்தியது.

இலங்கையில் நுண்நிதித் துறைக்கு ஆதரவளிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வங்கியால் ஜுலை 2023 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மக்கள் சக்தி கடன் திட்டம் அறிமுகப்படத்தப்பட்டது.

செப்டெம்பர் 2023 இல் வங்கி 500 புதிய ஊழியர்களைக் கொண்ட ஒரு தொகுதி வங்கி ஊழியர்களை நியமித்தது.

2024

ஒருபோதுமில்லாத வரிக்குப் பிந்திய அதிகபட்ச இலாபம் ரூ. 25.1 பில்லியன் என்ற சாதனை படைத்தது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் கடன் அளவை கணிசமாகக் குறைத்த அதேவேளையில், தனியார் துறை கடன் வழங்கல் விரிவுபடுத்தப்பட்டது.

100 புதிய நிறுவன வங்கி வாடிக்கையாளர்கள் இணைந்தனர்.

ரூ. 4.4 மில்லியன' டிஜிட்டல் தீர்வு பதிவுகளை எட்டியது.

தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புகளுக்கான (ISMS) சமீபத்திய ISO 27001:2022 தரநிலையின் கீழ் சான்றிதழ் பெற்ற முதல் உள்நாட்டு முறைமை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை வங்கியாக மாறியது.

2025

"பீபள்ஸ் டவர்" மக்கள் வங்கியின் புதிய தலைமை அலுவலம் 2025 ஒக்டோபர் 7 அன்று இலக்கம் 374, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை கொழும்பு 02 என்ற முகவரியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரி மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், கலாநிதி ஹர்ஷனா சூரியப்பெரும ஆகியோரின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வங்கி மட்டத்தில் வரிக்குப் பிந்திய இலாபத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ரூ. 40.2 பில்லியனை எய்திய அதேவேளை, குழுமத்தின் சொத்துக்கள் ரூ. 4.0 ரில்லியனைத் விஞ்சியது.

மக்கள் வங்கி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடனான பங்குடமையுடன் அடுத்த தலைமுறை இளம் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களை மேம்படுத்துகிறது.

வங்கியின் டிஜிட்டல் வங்கித் தளங்கள் பற்றிய விழிப்புணர்வையும் பயன்பாட்டையும் அதிகரித்து "Pay Digital" நிகழ்ச்சிநிரலுக்கு வெற்றிகரமாக ஆதரவளித்து, 5.3 மில்லியனுக்கும் அதிகமான டிஜிட்டல் தீர்வுப் பதிவுகளை விஞ்சியது.

"இலங்கையின் மிகச் சிறந்த பெண்கள்-நட்பு பணியிட விருது 2025" மற்றும் "திறமையைக் கையகப்படுத்தும் சிறந்த நிறுவனம் விருது 2025" உட்பட பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகளைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டது.

விருதுகள்

சிறந்த வலையமைப்பு விருதுகள் 2025

01. மிகவும் பிரபலமான வங்கி மற்றும் நிதி வலைதளம்
02. சிறந்த வங்கி மற்றும் நிதி வலைதளம் – வெள்ளி விருது

பிஸ் வேர்ல்ட்கொப் (உலகவணிக கட்டமைப்பு/ வெற்றிக்கு அப்பால் 2025)

03. வணிக முகாமைத்தவத்தில் சிறந்து விளங்குவதற்கான விருது

பெண்களுக்கு உகந்த பணியிட விருது 2025

04. இலங்கையின் மிகச் சிறந்த பெண்களுக்கு உகந்த பணியிடங்களில் ஒன்றுக்கான விருது

(CPM) சிறந்த முகாமைத்தவ நடைமுறைகள்

05. தங்க வெற்றியாளர் – பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் வசதிக்குட்படுத்தல் (DEI) பிரிவு
06. இருபது சிறந்த நிறுவனங்களில் மக்கள் வங்கிக்கு விருது வழங்கப்பட்டது.
07. வெற்றியாளர் – வங்கித்தொழில் (அரசாங்கத் துறை) பிரிவு
08. வெண்கல வெற்றியாளர் – நிறுவன சமூகப் பொறுப்புப் பிரிவு – கொத்தணி
09. தகுதி விருது – சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் கம்பனி விருது 2025
10. தகுதி விருது – டிஜிட்டல் அறிவுப் பிரிவு

லங்காபே டெக்னோவிஷன் விருதுகள்

11. வெள்ளி விருது – சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவு உபாயத்திற்கான ஆண்டின் சிறந்த நிதி நிறுவனம்
12. தங்க விருது – மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு உற்பத்தி (அரசு வங்கிகள் பிரிவு – இணையம் மற்றும் மொபைல் வங்கி)

சிறந்த மனிதவள விருதுகள் 2025

13. ஆண்டின் சிறந்த ஆற்றல்படைத்தோர் தேர்வு நிறுவனம் 2025

தெற்காசிய வியாபார உன்னத விருதுகள் (SAPS) 2025

14. அரசாங்க வங்கித் துறையில் சிறந்த வங்கி
15. அரசாங்க வங்கித் துறையில் ஆண்டின் சிறந்த நிலைபெறத்தக்க வங்கி

தேசிய வியாபார உன்னத விருதுகள் 2025

16. வெற்றியாளர் – வங்கித் துறை
17. 1ஆவது இரண்டாம் நிலை – மிகப் பெரிய பிரிவு
18. வெற்றியாளர் – உள்நாட்டில் சந்தை அணுகலில் உன்னத நிலை
19. ஒட்டுமொத்த உன்னதத்திற்கான வெண்கல விருது
20. வெற்றியாளர் – திறன் மேம்பாட்டில் சிறந்து விளங்குதல்

உலக வியாபார மீளாய்வு இதழ் விருது 2025

21. இலங்கையில் ஆண்டின் சிறந்த வங்கிச் சேவை வழங்குநர் 2025
22. இலங்கையில் சிறந்த நுகர்வோர் டிஜிட்டல் வங்கி 2025
23. இலங்கையில் சிறந்த கடன் அட்டை சலுகைகள் வழங்கும் வங்கி 2025
24. இலங்கையில் சிறந்த டிஜிட்டல் வங்கித் தீர்வுகள் வழங்குநர் 2025
25. இலங்கையில் சிறந்த டிஜிட்டல் பணப்பைச் செயலி 2025 – பீப்பிள்ஸ் பே
26. இலங்கையில் சிறந்த நிதியியல் வசதிக்குட்படத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2025
27. இலங்கையில் மிகவும் புத்தாக்கமிக்க கடன் அட்டைச் சேவைகள் 2025
28. இலங்கையில் பெண்களுக்கான மிகச் சிறந்த பணியிடங்கள் 2025
29. இலங்கையில் மிகவும் பதிலளிக்கக்கூடிய வங்கி 2025
30. இலங்கையில் மிகவும் நிலைபெறத்தக்க வங்கி 2025

AICPA மற்றும் CIMA – JXG பினக்கிள் விருதுகள் 2025

31. தங்க விருது – ஆண்டின் டிஜிட்டல் மாற்றத் கருத்திட்டம்/சிறந்த நடைமுறை

TAGS விருதுகள் 2025

32. வெண்கல விருது – அரச வங்கித் துறை

தரவு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் விருதுகள் 2025

33. மிக உயர்ந்த செல்லுபடியான தன்மையைப் பேணும் சிறந்த செயலாற்றுநர் (1,000,000 மேற்பட்ட தரவு சமர்ப்பிப்பு அளவு)
34. இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பேணும் சிறந்த செயலாற்றுநர் (1,000,000 மேற்பட்ட தரவு சமர்ப்பிப்பு அளவு)

CMA ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் சிறப்பு விருதுகள் – 2025

35. சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை அரச வங்கித் துறை – இரண்டாம் இடம்

யூரோமனி சிறப்பு விருதுகள் 2025

36. இலங்கையின் சிறந்த டிஜிட்டல் வங்கி
37. பன்முகத்தன்மை மற்றும் வசதிக்குட்படுத்தலுக்கான சிறந்த வங்கி

எமது சமூக பொருளாதாரத் தாக்கம்

நிதியியல் சிறப்பம்சங்கள்

	வங்கி			குழுமம்		
	2025	2024	மாற்றம் %	2025	2024	மாற்றம் %
தொழிற்பாட்டு செயற்திறன் (ரூ. பில்.)						
வட்டி வருமானம்	356.7	349.3	2.1	395.1	377.0	4.8
தேறிய வட்டி வருமானம்	142.4	107.2	32.8	164.7	122.9	34.0
மொத்த வருமானம்	382.0	368.0	3.8	424.0	400.0	6.0
நிதி சேவைகள் மீது வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்	83.4	56.8	46.9	93.0	65.0	43.1
வரிக்கு முந்திய இலாபம்	64.4	41.6	54.9	71.1	47.6	49.4
வருமான வரி	24.2	16.5	46.6	27.6	18.8	46.7
வரிக்கு பிந்திய இலாபம்	40.2	25.1	60.4	43.5	28.8	51.1
நிதியியல் நிலைமை (ரூ. பில்.)						
மொத்த சொத்துக்கள்	3,708.4	3,297.8	12.5	4,010.2	3,471.7	15.5
மொத்த கடன்களும் வருமதிகளும்	1,887.8	1,671.2	13.0	2,164.9	1,824.1	18.7
மொத்த வைப்புக்கள்	3,229.9	2,854.7	13.1	3,380.3	2,947.9	14.7
பங்குதாரர் நிதியங்கள்	219.0	182.0	20.4	270.1	230.0	17.5
செயற்திறன் விகிதங்கள் (%)						
சாரசரி சொத்துக்கள் மீதான ஆதாயம் (வரிக்கு முன்னர்)	1.8	1.3		1.9	1.4	
பங்குரிமை மூலதனம் மீதான ஆதாயம் (வரிக்கு பின்னர்)	20.1	14.7		17.4	13.2	
தேறிய வட்டி இலாப எல்லை	4.1	3.4		4.4	3.7	
வருமான செலவுக்கான விகிதம்	40.1	50.3		43.1	52.2	
சொத்துத் தர விகிதங்கள் (%)						
வலுக்குன்றிய கடன்கள் (கட்டம் 3) விகிதம்	7.7	10.3		6.9	9.7	
வலுக்குன்றியதிலிருந்து (கட்டம் 3) கட்டம் 3 கடன்கள் விகிதம்	48.4	41.5		48.7	42.4	
நியதிச்சட்ட திரவச் சொத்து விகிதம் (%)						
திரவத்தன்மை காப்பு விகிதம் – ரூபாய்	263.3	353.9				
திரவத்தன்மை காப்பு விகிதம் – அனைத்து நாணயங்கள்	218.5	279.5				
தேறிய நிலையான நிதியீட்டல் விகிதம் (%)	162.4	178.9				
ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதம் (%)						
பொது அடுக்கு 1 மூலதனம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு 8.0%)	11.8	10.4		12.8	12.2	
பொது அடுக்கு 1 மூலதனம் ஆகக்குறைந்த (ரூபா. மில்லியன் தேவைப்பாடு 9.5%)	12.2	10.9		13.1	12.6	
மொத்த மூலதனம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு 13.5%)	16.5	16.5		16.8	17.7	
பங்குடமையாளர் விகிதங்கள்						
ஒரு பங்குக்கான ஆதாயம்	40,230	25,088	60.4	43,484	27,559	57.8
ஒருபங்குக்கான தேறிய சொத்துப் பெறுமதி	219,038	181,998	20.4	270,114	229,952	17.5

வரிக்கு முந்திய இலாபம்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 64.4 பில்லியன்** வளர்ச்சி **54.9%**

வரிக்கு பிந்திய இலாபம்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 40.2 பில்லியன்** வளர்ச்சி **60.4%**

மொத்த கடன்களும் முற்பணங்களும்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 1,887.8 பில்லியன்** வளர்ச்சி **13.0%**

மொத்த வைப்புகள்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 3,229.9 பில்லியன்** வளர்ச்சி **13.1%**

தேறிய வட்டி வருமானம்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 142.4 பில்லியன்** வளர்ச்சி **32.8%**

மொத்த நிதியிடப்படாத வருமானம்

ரூ. பில்லியன்



2025 **ரூ. 23.4 பில்லியன்** வளர்ச்சி **30.7%**

நிதியல்லாச் சிறப்பம்சங்கள்

டிஜிட்டல் வாடிக்கையாளர் தீர்வுப் பதிவுகள்	**5.3 மில்லியன்**
2025 இணைந்து கொண்ட புதிய வாடிக்கையாளர்கள்	**540,740**
வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தீர்வு	**90%**
ஊழியர்கள்	**8,122**
கொடுப்பனவு செய்யட்ட நன்மைகளும் சம்பளங்களும்	**ரூ. 38.2 பில்லியன்**
பயிற்சி மணித்தியாளங்கள்	**27 மணித்தியாலங்கள் ஊழியரொருவருக்கு (ஏறத்தாள)**
பயிற்சியில் முதலீடு	**ரூ. 190.3 மில்லியன்**
ஊழியர் தக்கவைத்தல்	**97%**

பெண் ஊழியர்கள்	**4,818**
வெளிநாட்டுப் பயிற்சி கிடைக்கப்பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	**72**
பசுமைக் கிளைகள்	**141**
நிறுவன சமூகப் பொறுப்புச் செயற்பாடுகளில் முதலிடப்பட்டது	**ரூ. 26.9 மில்லியன்**

நிறைவேற்றுநர் மீளாய்வுகள்

26
தலைவரின் செய்தி

32
பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொதுமுகாமையாளரின் மீளாய்வு

36
பணிப்பாளர் சபை

44
பெருநிறுவன முகாமைத்துவம்

54
நிறைவேற்று முகாமைத்துவம்

57
பிரதம முகாமையாளர்கள்

தலைவரின் செய்தி

GRI 2-22

தொடர்ந்து நிலவும் பேரினப்பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் தளராத கவனம், தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் உபாயரீதியான தெளிவு என்பவற்றுடன், மக்கள் வங்கி 2025ஆம் ஆண்டிலும் அதன் வலுவான செயற்திறனை தொடர்ந்து முன்னெடுத்து, ரூ, 40.2 பில்லியன் வரிக்குப் பிந்திய இலாபத்தையும் ரூ. 3.7 ரில்லியன் மொத்த சொத்துக்களையும் பதிவுசெய்தது.

ஆண்டுகாலப்பகுதியில் மக்கள் வங்கி மூலம் அடையப்பெற்ற வெற்றியை விரிவாக ஆவணப்படுத்துகின்ற 2025 ஆம் ஆண்டிற்கான எமது ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையை எமது பங்குதாரர்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தொடர்ந்து நிலவும் பேரினபொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், தளராத கவனம், தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் உபாயரீதியான தெளிவு என்பவற்றுடன், மக்கள் வங்கி 2025ஆம் ஆண்டிலும் அதன் வலுவான செயற்திறனை தொடர்ந்தும் முன்னெடுத்து, ரூ. 40.2 பில்லியன் வரிக்குப் பிந்திய இலாபத்தையும் ரூ. 3.7 ரில்லியன் மொத்த சொத்துக்களையும் பதிவுசெய்தது. இலங்கையின் நிதி முறைமையின் மூலக்கல்லொன்றாகவும், நாட்டின் டிஜிட்டல் மாற்றத்திற்கான வினையூக்கி என்ற வகையிலும் வங்கி அதன் உத்வேகத்தைத் தக்கவைக்க ஒழுக்கமிக்க செலவு முகாமைத்துவம், முன்மதிமிக்க இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம், இலக்கிடப்பட்ட வருவாய் பன்முகப்படுத்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்தது. வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட டிஜிட்டல் சேவைகளை விரைவுபடுத்துவதன் மூலமும், நிதி தொழில்நுட்ப பங்குடமைகளை விரிவுடுத்துவதன் மூலமும், பாதுகாப்பான, விரிவாக்கக்கூடிய தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதன் மூலமும் வங்கி அதன் போட்டி நிலையை மேலும் வலுப்படுத்திய அதேவேளை, நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கும் ஆதரவளித்தது.
எமது நிதிசார்ந்த விவேகமும், தொலைநோக்குமிக்க முதலீடுகளும், தொடர்ச்சியான பணியாளர் பயிற்சி மற்றும் திறன் விருத்தியுடன் இணைந்து, இலங்கையின் டிஜிடல் வங்கித்தொழில் எதிர்காலத்திற்கான நம்பகமான ஊக்கியாக வங்கியின் வகிபாகத்தை வலுப்படுத்தின.

நிதிசார்ந்த தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துதலும் வளர்ச்சியை தூண்டுதலும்

இவ்வாண்டானது மக்கள் வங்கிக்குத் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பையும் உறுதிப்பாட்டையும் அடையாளப்படுத்தியது. மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில், வங்கி அதன் மூலதன நிலையை வெற்றிகரமாகப் பாதுகாத்து, தொழிற்பாட்டுத் வினைத்திறனை மேம்படுத்தி, முக்கிய வணிகப் பிரிவுகள் முழுவதும் நிலைபேறான அபிவிருத்தியைத் தக்கவைத்துக் கொண்டது. வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையையும், நீடித்த நீண்டகால பெறுமதி உருவாக்கத்தின் மீதான அதன் மூலோபாயக் கவனத்தையும் இப்பெறுபேறுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இலாபத்தன்மைக்கு துணையளித்து, ரூ.142.4 பில்லியன் தேறிய வட்டி வருமானத்துடன் வலுவான மையச் செயற்திறனை வங்கி வழங்கிய அதேவேளை, தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் ரூ.16.4 பில்லியனாக அதிகரித்து, வட்டி அல்லாத வருவாய்க்கு கணிசமாகப் பங்களித்ததுடன், வருவாய் பன்முகப்படுத்தலில் முன்கூட்டிய வெற்றியையும் சமிக்ஞைப்படுத்தியது. 4.1% தேறிய வட்டி இலாப எல்லையும் 40.1% வருமானத்திற்கான செலவு விகிதமும் ஆரோக்கியமான வருவாய் வளர்ச்சியுடன் கூடிய வினைத்திறனான செலவுக் கட்டுப்பாட்டைப் பிரதிபலித்தன. டிஜிட்டல் வழிமுறைகளுக்கு மாறுதல், கிளை உகப்பாக்கம், ஒழுக்கமிக்க பெறுகை, மற்றும் மனித மூலதன முகாமைத்துவம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த உறுதியான ஆதாயங்களை இப்பேறுபேறுகள் நிரூபிக்கின்றன. நிலைபெறத்தக்க முன்னேற்றம் இத்தகைய ஏற்பிசைவில் அதிகளவில் சார்ந்திருப்பதனால், எமது டிஜிட்டல் மாறுதலை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

ஒழுக்கமிக்க ஐந்தொகை முகாமைத்துவம் மற்றும் அதிக வட்டி இலாப எல்லைகள் மூலம் உந்தப்பட்டு, வங்கி வலுவான இலாபத்தையும் மேம்பட்ட வருவாயையும் வழங்கியது. வட்டி வருமானம் முதன்மை வருவாய் ஊக்கியாகவிருந்து, கட்டண வருமானமானது வட்டி வீதத் தளம்பல்களுக்கு எதிராக முக்கிய நிலைப்படுத்தியாக உருவெடுத்து, இவை அனைத்தும் சேர்ந்து, ஆரோக்கியமான வருவாய்க் கலவையையும் பங்கொன்றிற்கான உயர்ந்த உழைப்பையும் குறித்துக்காட்டி, செயல்திறன்மிக்க செலவுக் கட்டுப்பாடு மற்றும் மூலதனப் பயன்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறன.

ஒழுங்குமுறைபடுத்தல் குறைந்தபட்சத்தை விட அதிகமாக 16.5% மூலதனப் போதுமை விகிதத்தைப் பதிவுசெய்து, வலுவான மூலதன நிலையுடன் நாம் ஆண்டை நிறைவு செய்தோம், இது கடன்வழங்கும் இயலளவிற்கு தொடர்ச்சியாக ஆதரவளித்தது. வங்கி, உயர் திரவத்தன்மை மிக்கதாகவிருந்து முன்மதிமிக்க அடிப்படையளவுகளுக்கு மேல் உயர் திரவத்தன்மை சொத்து இருப்புகளைப் பேணியது. இவ்வலிமைகள் 2025 ஆம் ஆண்டு முழுவதும் வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தி, கடன் தீர்க்கும் ஆற்றலை விட்டுக்கொடுக்காது அதிக வருவாய் தரும் கடன் பிரிவுகளில் தெரிவுமிக்க வளர்ச்சியை சாத்தியமாக்கின.

செலவுக் குறைப்பு மற்றும் டிஜிட்டல் செயன்முறையைத் தழுவிக்கொள்ளல் ஆகியவையும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றின. கிளை வளங்களை திறம்பட மேம்படுத்தியமை, தனியார் துறையில் ஆழமான ஊடுருவலுக்கு உதவியது, அதேவேளை வளர்ச்சிக்கு மிகவும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கிய உயர் பெறுமதி நடவடிக்கைகளில் ஊழியர்கள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வலுவான இடர்நேர்வு ஆளுகை

வங்கியின் டிஜிட்டல் மாற்றமானது கொடுகடன் மேற்பார்வைக்கான செயலூக்கமிக்க தரவு சார்ந்த அணுகுமுறைக்கு கணிசமாகப் பங்களித்து, சொத்துத் தரத்தை மேம்படுத்தி, இடர்நேர்வு ஆளுகையை வலுப்படுத்தியது. முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைக் கட்டமைப்பிற்குள் மேம்படுத்தப்பட்ட கொடுகடன் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பானது சரியான நேரத்தில் தலையீடுகளைச் சாத்தியமாக்கிய அதேவேளை, தீவிரப்படுத்தப்பட்ட அறவீட்டு முயற்சிகள் சொத்துப்பட்டியல் ஒழுக்கத்தை வலுப்படுத்தின. கடுமையாக்கப்பட்ட கடன் வழங்கும் தரநியங்கள், வளர்ந்து வரும் கொடுகடன் நெருக்கடிக்கான பாதிப்பைக் குறைத்தன. தெளிவான இடர்நேர்வு ஏற்பு வரையறைகள், மேலும் கடுமையான அழுத்தச் சோதனைகள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட ஆளுகை ஆகியவை சொத்துப்பட்டியல் முழுவதும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தின.

அரசாங்க ஆதரவு மற்றும் வர்த்தகநாம நம்பிக்கை உட்பட எமது உபாயரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் தொழிற்பாட்டுத் வினைத்திறனுக்கு அடித்தளமாக விளங்கும் கட்டமைப்புசார் வலிமைகளின் சங்கமம், 2025 ஆம் ஆண்டில் எமது உபாயக் குறிக்கோள்களை உறுதியுடன் அடைய எமக்கு உதவியது. நிறுவனத்தின் நம்பகத்தன்மை, வைப்பாளர்களின் நம்பிக்கை, மற்றும் எமது விரிவான கிளை மற்றும் தானியங்கி பண இயந்திர (ATM) வலையமைப்பு ஆகியவை நகர மற்றும் கிராமிய சமூகங்கள் இரண்டிலும் ஆழமான சந்தை ஊடுருவலையும் பரந்த நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் உறுதிசெய்தன.

தெளிவான பொறுப்பாணைகள், மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு மற்றும் செயற்திறன் பற்றிய அடிக்கடி செய்யப்படும் மீளாய்வுகள் மூலம் வங்கி சபைக் குழுக்களின் செயல்திறனை மேம்படுத்தியது. மூலதனப் போதுமை, சொத்துத் தரம், திரவத்தன்மை மற்றும் உபாய முயற்சிகள் ஆகியவற்றின் மீது வலுவான மேற்பார்வையை இது உறுதிசெய்தது. அதிகரித்த ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்ப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக, உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் இணங்குவித்தல் கண்காணிப்புச் செயன்முறைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. ஒழுங்குமுறைபடுத்தல் அறிக்கையிடலின் செம்மை, பணம் தூய்மையாக்குதலுக்கெதிரான கட்டுப்பாடுகள் மற்றும் நடத்தை இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றில் மேலதிக கவனம் செலுத்தப்பட்டது.

வங்கியின் வலுவான வைப்புத் தளம் மற்றும் உறுதியான திரவத்தன்மை நிலை என்பன நிலைபேறான கடன்வழங்கல் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு குறைந்த செலவிலான, நம்பகமான நிதியிடலை வழங்கிய அதே நேரத்தில், வலுவான மூலதன நிலை மற்றும் ஒழுங்குமுறைபடுத்தல் இணங்குவித்தல் ஆகியவை இடர்நேர்வு அதிர்ச்சியைத் தாங்கும் இயலளவை மேம்படுத்தின. எமது பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் மற்றும் தயாரிப்புத் சொத்துப்பட்டியல் மூலம், இடர்நேர்வு திரட்சி அபாயம் நன்கு கட்டுப்படுத்தப்பட்டு, சில்லறை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் பெருநிறுவனங்கள் அத்துடன் அரசாங்கத் துறைப் பிரிவுகளில் வருமானம் ஈட்ட வழிவகுத்தது.

உன்னதமான வாடிக்கையாளர் சேவை

சிறந்த வாடிக்கையாளர் சேவை எமது வெற்றிப் பயணத்தின் மையமாக விளங்குகின்றது. டிஜிட்டல் மாற்றம் இந்த உறுதிப்பாட்டிற்கு அடித்தளமாக விளங்கும் ஒரு முக்கியத் தூணாகும். அதிக வசதி, சேவை நம்பகத்தன்மை மற்றும் குறைக்கப்பட்ட இடையூறுகள் என்பவற்றை இது வழங்குகிறது. எமது சுயசேவைத் தளங்கள், தமது நிதிகளை நிர்வகிப்பதில் வாடிக்கையாளர்களுக்கு அதிக தகவலறிந்த தீர்மானங்களை எடுக்க வலுவூட்டுவதன் மூலம், நிதியியல் வசதிக்குட்படுத்துதலை நோக்கிய வங்கியின் முயற்சியின் தரம் மற்றும் சென்றடைதலை மேம்படுத்தின.

வாடிக்கையாளர் மையப்படுத்தலானது மக்கள் வங்கியில் உயர்வான முன்னுரிமையாகும். வேகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் மாற்ற முயற்சிகளுடன் இணைந்து, தொழிற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் அதேவேளையில், மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கு எங்களுக்கு உதவியது. நாம் நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாத்த அதேவேளை, அளவிடப்பட்ட அபிவிருத்தியைப் நாடினோம். எமது பல வலிமைகளை நிலைபெறத்தக்க போட்டி அனுகூலமாக மாற்றினோம்.

புத்தாக்கம் எமது உற்பத்தி உருவாக்கத்திலும் தொழிற்பாட்டு மாதிரியில் பொதிந்துள்ள அதேவேளை, உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவிலான மூலோபாய பங்குடமைகள் எமது வர்த்தகநாமப் பெறுமதியையும் வாடிக்கையாளர் விளைவுகளையும் மேம்படுத்தின. எமது வாடிக்கையாளர் பெறுமதி முன்மொழிவை மேம்படுத்தும் வெளிவாரி ஒத்துழைப்புடன் உள்ளக மதிநுட்பத்தை சமநிலைப்படுத்துவதன் மூலம் நாம் சமூகங்களுக்கு சமூக மற்றும் பொருளாதார பெறுமதியை உருவாக்கிய அதேவேளை, நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான புதிய வழிகளையும் திறந்து விட்டோம். உள்ளக மாற்றம், இலக்கிடப்பட்ட பங்குடமைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் சேவைத் தொகுப்பு ஆகியவற்றை இணைப்பதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கும் சமூகங்களுக்கும் பயனளிக்கும் நிலைபெறத்தக்க, தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட நிதியியல் சேவைகளை நாம் வழங்கினோம்.

டிஜிட்டல் ரீதியான மாற்றம்

டிஜிட்டல் மாற்றம் என்பது வங்கியின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், தேசிய டிஜிட்டல்மயமாக்கலுக்கான ஒரு வினையூக்கியாக அதன் வகிபாகத்தை விரிவுபடுத்தவும் வடிவமைக்கப்பட்ட ஒரு தந்திரோபாய, நிறுவனம் தழுவிய செயற்பாடாகும். வாடிக்கையாளர் அனுபவம், தொழிற்பாட்டு நவீனமயமாக்கல் மற்றும் புத்தாக்கத்தை இயலச்செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, எமது அனைத்துப் பிரிவுகளிலும் வணிகம் செய்வதற்கான சுறுசுறுப்பான வழிகளை நாம் அங்கீகரித்தோம். இதன் மூலம் பல்துறை ஒத்துழைப்பை மேம்படுத்தி, சேவை வழங்கலை விரைவுபடுத்தினோம்.

எமது டிஜிட்டல்-சார்ந்த மார்க்க உபாயமானது வசதி, தனிப்பயனாக்கம் மற்றும் நம்பகத்தன்மைக்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மறுவடிவமைத்தது. அனைத்து தளங்களுக்கிடையிலும் தங்குதடையற்ற வாடிக்கையாளர் ஆதரவானது, சில்லறை மற்றும் நிறுவன வாடிக்கையாளர் பயணங்களில் இருந்த தடைகளைக் குறைத்து, முதல் தொடர்பிலேயே தீர்வை மேம்படுத்தி, தரவு சார்ந்த தயாரிப்புப் பரிந்துரைகளைச் சாத்தியமாக்கியது. டிஜிட்டல் வழியில் இணைந்துகொள்ளல், கொடுப்பனவுகள், சிறிய, நடுத்தர தொழில்முயற்சி வங்கிச் சேவைக் கருவிகளில் செய்யப்பட்ட இலக்கு சார்ந்த மேம்பாடுகளின் ஆதரவுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் எமது டிஜிட்டல் வாடிக்கையாளர் தளத்தை 4 மில்லியனுக்கும் மேலாக விரிவுபடுத்தினோம்.

தேசிய அபிவிருத்திக்கான எமது பங்களிப்பு

விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், ஏற்றுமதி மற்றும் உட்கட்டமைப்பு போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு இலக்கிடப்பட்ட நிதியை வழங்குவதன் மூலம் நாம் அரசாங்கத்துடன் கைகோர்த்து, பொருளாதார நடவடிக்கை, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பவற்றைத் தூண்டினோம். அரசாங்கத்தின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் நிகழ்சித்திட்டங்கள் மற்றும் சமூக நல முயற்சிகள் மூலம் அறைநகர்புர மற்றும் கிராமிய சமூகங்களைச் சென்றடைந்தோம். பசுமை நிதிக்கான எமது ஆதரவு, மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக்கு பங்களித்தது, இது தேசிய மின் கட்டமைப்பை அதிகளவில் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவியது. ஒழுக்கமான நிதி முகாமைத்துவம் மற்றும் முறைமை ரீதியான உறுதிப்பாடு மூலம் துணையளிக்கப்பட்ட வங்கியின் மீதான வைப்பாளர்களின் வளர்ந்து வரும் நம்பிக்கை, வர்த்தக நிலைபெறுதன்மை மற்றும் பொதுமக்கள் சேவை ஆகிய எமது இரட்டைப் பொறுப்பாணையை மேலும் வலுப்படுத்தியது.

பொதுமக்கள் நலநோம்புகையும் நிவாரண நடவடிக்கைகளும்

மக்கள் வங்கி, தித்வா புயலால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் சிறிய வணிகங்கள் அவற்றின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்கும் வகையில், ஒரு பிரத்தியேக அனர்த்த நிவாரணத் திட்டத்தைத் தொடங்கியது. இதில், பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் (சுமார் 3%) விசேட சலுகைக் கடன்கள் வழங்குவதை உள்ளடக்கியிருந்தது. இக்கடன்களின் வரையறைகள், தொழிற்பாட்டு மூலதனம் மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இக்கடன்கள், வணிகங்கள் தமது தொழிற்பாடுகளை மீட்டெடுக்கவும், வேலைவாய்ப்பைத் தக்கவைக்கவும், அனர்த்தத்திற்குப் பின்னர் பொருளாதார ரீதியாக மீண்டும் நிலைபெறவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. எமது முன்கூட்டிய ஆதரவு வழங்கும் நடைமுறையை நிரூபிக்கும் வகையில் புயலால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு புனர்வாழ்வுக் கடனை வழங்கியதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டுதலுக்கமைய, புயலால் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு நாம் நிதி நிவாரணத்தையும் வழங்கினோம். இந்நடவடிக்கைகள் உடனடி நிதிச் சுமையைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் தகைமையுடைய கடன்பெறுநர்களுக்கு கடனின் முதன்மை மற்றும் வட்டி திருப்பிச் செலுத்துதலைத் தற்காலிகமாக இடைநிறுத்தல், அபராதக் கட்டணங்கள், தாமதக் கட்டணங்கள் மற்றும் மறுசீரமைப்புச் செலவுகளைத் தள்ளுபடி செய்தல், அத்துடன் அனர்த்தத்தினால் வருமானம் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு சலுகைக் காலங்களுடன் புதிய கடன் வசதிகளை வசதிப்படுத்தல் ஆகியன இதில் அடங்கியிருந்தன. அவசரகால நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுக்காகப் பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் நன்கொடைகளைச் சேகரித்து அனுப்புவதற்காக நாம் விசேட கணக்குகளையும் நிறுவி, இதன் மூலம் பரந்த தேசிய நிவாரண முயற்சிக்கு ஆதரவளித்தோம்.

பொது நலன் மற்றும் வணிக நிலைபெறுத்தன்மை ஆகிய இரண்டையும் நாம் தொடர்ந்து வழங்கும் நம்பிக்கை, மக்கள் வங்கியில் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானத்தையும் வழிநடத்தும் ஒழுக்கமான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட அணுகுமுறைக்கு இது சான்றுபகர்கின்றது.

எமது ஊழியர்கள்

வங்கியின் மிகப்பெரிய சொத்து – அர்ப்பணிப்புள்ள, தொழில்சார் பண்புமிக்க, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட பணியாளர்களே, அவர்களின் உன்னதத்திற்கான அர்ப்பணிப்பு எமது வெற்றியின் ஒவ்வொரு அம்சத்தையும் இயக்குகிறது. அவர்களின் ஆழ்ந்த அறிவும் அசைக்க முடியாத சேவை மனப்பான்மையும் நகர மற்றும் கிராமிய சமூகங்களில் நம்பகமான நிதித் தீர்வுகளை வழங்குவதை உறுதிசெய்கின்ற அதேவேளை அவர்களின் சுறுசுறுப்பு மற்றும் புத்தாக்கிற்கான ஆர்வம் என்பன டிஜிட்டல் பயன்பாடு மற்றும் தொழிற்பாட்டு மேம்பாடுகளை விரைவுபடுத்தியுள்ளது. ஒழுக்கமிக்க இடர்நேர்வு விழிப்புணர்வு, வலுவான இணக்கப்பாடு கலாச்சாரம் மற்றும் தொடர்ச்சியான திறன் அபிவிருத்தி ஆகியவற்றின் மூலம் எமது ஊழியர்கள் சவாலான சந்தை நிலைகளிலும் கூட நம்பிக்கையையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் பாதுகாத்துள்ளனர். சமமாக முக்கியமிக்கதாக, அவர்களின் சமூகம் சார்ந்த முன்முயற்சிகளும் பரிவுமிக்க வாடிக்கையாளர் ஈடுபாடும் வங்கியின் சமூகத் தாக்கத்தைப் பெருக்கி, அவர்களைத் வினைத்திறனான வங்கியாளர்களாக மட்டுமல்லாமல், இலங்கையின் அபிவிருத்திப் பயணத்தில் நம்பகமான பங்காளர்களாகவும் ஆக்கியுள்ளன.

எமது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகைக் கவனம்

மக்கள் வங்கியின் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை கவனமும் நிலைபெறுதன்மை உபாயமானது பொறுப்புமிக்க வங்கிச் சேவை, சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றில் வேரூன்றியுள்ளன. வங்கியானது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை கோட்பாடுகளை அதன் மைய வணிகச் தொழிற்பாடுகளில் ஒருங்கிணைத்து, நிதியியல் வளர்ச்சியானது நீண்டகால சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புடன் இணைந்திருப்பதை உறுதிசெய்கிறது. நிதியியல் நிறுவனம் என்ற வகையில் நாம் பசுமை நிதியுதவியை ஊக்குவித்து, சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்நேர்வு மதிப்பீட்டைக் கொடுகடன் செயன்முறைகளுக்குள் ஒருங்கிணைத்து, சமூக அபிவிருத்தி ஊடாக நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றி, பொறுப்பான நடைமுறைகள் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் மூலம் வங்கியின் தொழிற்பாட்டுத் சுவடுகளைக் குறைத்துள்ளது.

மைய வணிகச் தொழிற்பாடுகளில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை கரிசனைகள் மேலும் மேலும் ஒருங்கிணைக்கப்படுவதால், எதிர்வரும் ஆண்டில் வங்கியின் நிலைபெறுதன்மையானது தந்திரோபாய முன்னுரிமையாகத் தொடரும். கடன்வழங்கல் சொத்துப்பட்டியலினுள் மாற்றம் மற்றும் பௌதீக இடர்கள் இரண்டையும் நிர்வகிப்பதற்காக, காலநிலை இடர்நேர்வுக் கட்டமைப்பு தற்போது மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற அதே நேரத்தில், மேம்படுத்தப்பட்ட பசுமை நிதி மூலம் கடன் நடைமுறைகளை தேசிய மற்றும் உலகளாவிய காலநிலை இலக்குகளுடன் அணிசேரச்செய்கின்றது. உள்ளகமாக, வங்கியானது சக்தி வினைத்திறன், டிஜிட்டல்மயமாக்கல், கழிவு குறைப்பு மற்றும் பொறுப்புமிக்க பெறுகை ஆகியவற்றின் மூலம் அதன் கார்பன் சுவடுகளை மேலும் குறைக்கும் அதேவேளை, நிலைபேறான பெறுகை மற்றும் வசதி முகாமைத்துவ நடைமுறைகளைச் தொழிற்படுத்தும்.

சவால்கள்

2025 ஆம் ஆண்டில் மக்கள் வங்கி, மிதமான அபிவிருத்தி, கடன்பெறுநர்களின் திருப்பிச் செலுத்தும் திறனில் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் அதிகரித்த ஒழுங்குமுறைப்படுத்தல் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்பட்ட சிக்கலான மற்றும் மாறிவரும் பொருளாதாரச் சூழலில் இயங்கியது. சவாலான பேரினப்பொருளாதார நிலைமைகள் சில கடன்பெறுநர்கள் பிரிவுகளுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தி, சொத்துத் தரம் குறித்த சாத்தியமான கரிசனைகளுக்கு வழிவகுத்தன. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, நாம் கடன் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்தினோம், அறவீட்டு முயற்சிகளைத் தீவிரப்படுத்தினோம், ஒதுக்கீட்டு தாங்கு இருப்புகளை மேம்படுத்தினோம், புதிய கடன்களுக்கு முன்மதிமிக்க கடன்வழங்கும் தரநியமங்களை பயன்படுத்தினோம்.

ஆளுகை மற்றும் இணக்கப்பாடு கட்டமைப்புகளைத் தொடர்ந்து வலுப்படுத்துவதை மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை வேண்டியது. ஒழுங்குமுறைப்படுத்தல் தரநியமங்களை முழுமையாக கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக, வங்கி உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்புகள் மற்றும் இணக்கப்பாடு கண்காணிப்பு முறைமைகளை வலுப்படுத்தியது. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் அபிவிருத்திக்கு வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் தாங்கு இருப்புகளைப் பேணுவதற்கு கவனமிக்க மூலதன முகாமைத்துவ தேவைப்படுத்தல், மூலதனப் போதுமை விகிதங்களைத் திருப்திகரமான மட்டங்களில் நிலைநிறுத்துவதற்காக நாம் ஐந்தொகையை தீவிரமாக நிர்வகித்தோம், சொத்து ஒதுக்கீட்டை மேம்பாடு செய்தோம் மற்றும் ஒழுக்கமான கடன் வளர்ச்சியை பிரயோகித்தோம்.

வட்டி வீதங்களில் தளம்பல்கள் போட்டி நிறைந்த சந்தையின் இயக்கவியல் என்பன தேறிய வட்டி இலாப எல்லைகளில் அழுத்தத்தை ஏற்படுத்தின. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, நாம் சொத்து-பொறுப்பு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்தியும், வருமான வழிகளைப் பன்முகப்படுத்தியும், கடன்வழங்கல் மற்றும் வைப்புத் சொத்துப்பட்டியல் முழுவதும் விலை நிர்ணய ஒழுக்கத்தை மேம்படுத்தியும் தொழிற்பட்டோம். அதிகரித்து வரும் தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைக்கவும், செலவு-வருமான விகிதத்தைத் திறம்படக் கட்டுப்படுத்தவும் செலவுக் குறைப்பு முயற்சிகளை நாம் மேற்கொண்டோம்.

2026 மற்றும் அதற்குப் அப்பாலும் எதிர்கால வாய்ப்பு

எதிர்காலத்தை நோக்குகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், கிராமிய சமூகங்கள், பெண் தொழில்முனைவோர் மற்றும் வேறு பின்தங்கிய வகுப்பினர்களுக்கான நிதி அணுகலை நாம் தொடர்ந்து விரிவுபடுத்தி, இயலளவு விருத்தியுடன் கடன்வழங்குதலை இணைத்து, டிஜிட்டல் மாற்றம், சமூக நிலைபெறுதன்மை மற்றும் வாடிக்கையாளர் சேவை உன்னதம் ஆகியவற்றை ஒருங்கிணைப்போம். அணுகல்தன்மை மற்றும் பதிலளிக்கும் திறனை உறுதிசெய்வதற்கும், சமூகத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கும், நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரிப்பதற்கும் தெளிவான சமூக மற்றும் சுற்றுச்சூழல் தரநியமங்களுக்கு எதிராக இம்முயற்சிகள் அளவிடப்படும்.

நன்றி பாராட்டுதல்

எமது வாடிக்கையாளர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் நம்பிக்கையும் ஆதரவும், சேவை உன்னதத்திலும் புத்தாக்கத்திலும் தரத்தை உயர்த்த எம்மை தொடர்ந்து ஊக்குவிக்கின்றன. நாம் ஒன்றிணைந்து, நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தி, சேவை நம்பகத்தன்மையை வலுப்படுத்தி, நாடு முழுவதும் வசதியை மேம்படுத்தி அணுகலை விரிவுபடுத்தும் டிஜிட்டல் முயற்சிகளைத் துரிதப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தியில் நம்பகமான பங்காளராக எமது வகிபாகத்தை வலுப்படுத்தியுள்ளோம்.

நிதி அமைச்சர், பிரதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர், மற்றும் பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரின் தொலைநோக்குப் பார்வை, தலைமைத்துவம் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு என்பவற்றுக்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டு முழுவதும் அவர்கள் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு, மதிப்புமிக்க வழிகாட்டுதல் மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றுக்கு திறைசேரியின் செயலாளர், மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒழுங்குமுறை முறைப்படுத்தல் சார்ந்த அனைத்து விடயங்களிலும் அவர்கள் வழங்கிய அறிவார்ந்த ஆலோசனை மற்றும் பெறுமதிமிக்க மதியுரைக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

பணிப்பாளர் சபையின் தங்குதடையற்ற ஆதரவிற்கும் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2025 ஆம் ஆண்டில் நமது வெற்றிக்கு கணிசமாகப் பங்களித்த உத்வேகத்தைத் தக்கவைப்பதில் அவர்கள் ஆற்றிய அயராத முயற்சிகளுக்காக பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் திரு. கிளைவ் பொன்சேகா தலைமையிலான முகாமைத்துவ அணிக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது சாதனைகளுக்குப் பின்னால் உந்துசக்தியாக விளங்கிய, தொழில்சார்பண்பு மற்றும் வாடிக்கையாளர்-முதன்மை மனப்பான்மை மிக்க ஒவ்வொரு ஊழியருக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகும்.

இணக்கமான பணியிடத்தை பேணிவளர்ப்பதில் வங்கியின் முயற்சிகளுக்கு ஆதரவளித்த தொழிற்சங்கங்களுக்கு அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ச்சி மற்றும் மாறுதலின் அடுத்த கட்டத்தை நோக்கி நாம் அடியெடுத்து வைக்கின்ற வேளையில், அனைத்து பங்குதாரர்களுக்கும் பெறுமதியை வழங்குவதற்கான இலட்சியம், ஒழுக்கம் மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு என்பவற்றுடன் நாம் இதனைச் செய்கிறோம். தேசத்தின் பெருமை என்ற வகையில் மக்கள் வங்கியானது தொழில்நுட்பம், திறமை மற்றும் நிலைபேறான நிதி ஆகியவற்றில் தொடர்ந்து முதலீடு செய்து, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்றத்தை முன்னெடுத்து, டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட, தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்ட இலங்கையை கட்டியெழுப்ப உதவும்.



பேராசிரியர் நாரத பெர்னாண்டோ
தலைவர்
25 பெப்ரவரி 2026

பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொதுமுகாமையாளரின் மீளாய்வு

ஒத்திசைவுமிக்க மற்றும் முன்னோக்குமிக்க தந்திரோபாயங்களூடாக நாம் எமது மூலதனம், நிதியிடல் மற்றும் திரவத்தன்மை நிலை ஆகியவற்றை வலுப்படுத்திய அதேவேளை பணவீக்க அழுத்தங்களை முகாமைசெய்கின்றோம். ஒழுக்கமிக்க மூலதன ஒதுக்கீடு, வியாபார பிரிவுகள் ஊடான மேம்பாடு மற்றும் வலுப்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் என்பன பொருளாதார மற்றும் காலநிலை தொடர்புபட்ட அதிர்வுகளுக்கு எமது தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தியுள்ளன.

தேசத்தின் பெருமையாக மக்கள் வங்கி இலங்கைக்கான அதன் 64 ஆவது ஆண்டுச் சேவையினை அடையாளப்படுத்தி, தாக்குப்பிடிக்கும் தன்மை நோக்கம் மற்றும் அதன் பொதுவான பொறுப்பாணை மற்றும் வணிக வலிமை என்பவற்றுக்கான கவனமிக்க சமநிலை என்பவற்றை தொடர்ந்தும் உருக்கொடுக்கின்றது. பிரதிபலிப்பு மற்றும் புதுப்பித்தல் இரண்டையும் கொண்ட ஆண்டான 2025 இல் வங்கி ரூ. 40.2 பில்லியன் கொண்ட ஒருபோதும் இல்லாத அதிகூடிய வரிக்கு பிந்திய இலாபத்தினை பதிவுசெய்த அதேவேளை, மொத்த சொத்துக்கள் ரூ. 3.7 ரில்லியனை அடைந்தன.

ஒழுக்கமிக்க சொத்து மேற்பார்வை மற்றும் சிந்தனைமிக்க நிறைவேற்றுதல் என்பனவற்றுக்கு இச்செயற்திறன் சான்றளிக்கின்றது. வலுவான மூலதனத்தை நாம் பேணிக்காத்து, முன்மதிமிக்க செலவுக் கட்டுப்பாட்டை பிரயோகித்து, திரவ தன்மையை ஒழுங்குமுறைப்படுத்தல் அடிப்படை அளவுகளுக்கு மேல் வசதியான விதத்தில் பேணினோம். வலிமையான ஆளுகை கட்டமைப்பொன்றினால் நிலைநிறுத்தப்பட்டு, நிலைபெறுதன்மைக்கும் பொறுப்புமிக்க வளர்ச்சிக்கும் விரிவான கடமைப்பொறுப்பொன்றினால் வழிகாட்டப்பட்டு நாம் வைப்பாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி இலங்கையின் மிகவும் நம்பப்படும் நிதியியல் நிறுவனங்களிலொன்றாக எமது நிலையினை மீள உறுதிப்படுத்தினோம்.

எமது பயணமானது பொதுமக்கள் நம்பிக்கையை பாதுகாக்கும் பொறுப்பின் மூலமும் டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் உள்ளடக்குகின்ற நிதியூடாக அனைவருக்கும் பெறுவழியினை விரிவுபடுத்துவதற்கான இலட்சியத்தின் மூலமும் சவால்களையும் வாய்ப்புகளையும் கொண்ட சுழற்சிகளினால் நெறிப்படுத்தப்பட்ட வியக்கவைக்கின்ற மற்றும் மனம் கவருகின்ற இரண்டாகவும் இருந்து வருகின்றது. பொருளாதார அழுத்தங்கள் மற்றும் காலநிலை தொடர்புபட்ட இடையூறுகள் என்பவற்றுக்கு எதிர்வினையாற்றி, நாம் பெறுமதியினை உருவாக்குவதற்கான எமது தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் நோக்கு மீது இயங்கி, சமூகங்களுக்கு ஆதரவளித்து, சுபீட்சத்தை விரிவுபடுத்தினோம். தேசிய முன்னுரிமைகளை முன்னேற்றுவதில், நேரடி மற்றும் டிஜிட்டல் அடைவு இரண்டினூடாகவும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை விரிவுபடுத்துவதில் அத்துடன் நிலைபெறத்தக்க வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பவதில், பெண்தொழில் முயற்சியாளர்களுக்கு உதவுவதில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ந்தும் செயற்படுகின்றோம்.

மையத் தொலைநோக்கு

நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றுகின்ற அதேவேளை அனைவருக்கும் நிதிக்கான பெறுவழியினை விரிவுபடுத்துகின்ற தாக்குப்பிடிக்கத்தக்க, பொறுப்புமிக்க மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு தேசியளவில் உறுதிபூண்டுள்ளதாக இருக்கின்ற எமது தொலைநோக்கு தெளிவானதும் உறுதியானதுமாக விளங்குகின்றது. நாட்டின் ஒவ்வொரு மூலையையும் சென்றடையும் தங்குதடையற்ற பிரசன்னத்தின் மூலம் நிறைவளிக்கப்படுகின்ற இவ்விலட்சியத்தின் இன்றியமையாத இயலச்செய்யும் காரணியாக டிஜிட்டல் மாறுதல் தொடர்ந்தும் பணியாற்றுகின்றது.

பரிணாம வளர்ச்சியடைகின்ற உலகளாவிய மற்றும் உள்நாட்டு தோற்ற அமைப்பிற்கு மத்தியில் நிதியியல் உறுதிப்பாட்டை பேணிக்காக்கின்ற அதேவேளை பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமாக பங்களிப்பின் மீது நாம் கவனம் செலுத்தியுள்ளோம். முன்மதிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவம், ஒழுக்கமிக்க மூலதன முகாமைத்துவம் மற்றும் அளவிடப்பட்ட வளர்ச்சி என்பனவூடாக நாம் நம்பிகையுடன் நிச்சயமற்ற தன்மைகளை திசைப்படுத்திய அதேவேளை நீண்டகால நிலைபெறு தன்மையை பாதுகாத்தோம்.

வழிகாட்டுகின்ற கோட்பாடுகள்

ஆண்டு முழுவதுமான எமது நடவடிக்கைகள் முன்மதி, பொறுப்புக்கூறல், தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் தேசிய பொறுப்பு பற்றிய ஆழ்ந்த உணர்வு என்பன மூலம் வழிநடாத்தப்பட்டன. மூலதனத்தை பாதுகாத்தலும் திரவத்தன்மையை உறுதிசெய்தலும் எமது அணுகுமுறையின் மையமாக விளங்கி, ஒழுக்கமிக்க மற்றும் முன்நோக்கி நோக்குகின்ற இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினால் துணையளிக்கப்பட்டது. கடுமையான இணங்குவித்தல் மற்றும் பங்குதாரர்களுடன் திறந்த ஈடுபாடு என்பன மூலம் மீள் வலிமைப்படுத்தப்பட்ட ஆளுகை நடத்தைகள் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் அடிப்படையாக கொண்டிருந்தன.

நிறுவனசார் மரபுரிமையிலிருந்து வலிமையினை பெற்ற அதேவேளை நவீன இயலளவுகளை தழுவிக் கொண்ட நாம் தேசிய மற்றும் உலகளாவிய சவால்கள் இரண்டுக்கும் பதிலிறுத்துவதில் சுறுசுறுப்பினையும் முன்நோக்கினையும் எடுத்துக் காட்டினோம். முன்னணி அரசுக்கு சொந்தமான வங்கி என்ற வகையில் தேசிய அபிவிருத்திக்கான எமது கடமைப்பொறுப்பு வர்த்தக ஒழுக்கநெறியில் உறுதியாக நிலைநாட்டப்பட்டு நாம் காணப்பட்ட போதிலும்கூட எமது பணிப்புரையினை தொடர்ந்தும் நெறிப்படுத்தி நிலைபெறத்தக்க பெறுபேறுகளை கொண்டுசேர்ப்பதற்கான கவனத்துடன் இரண்டினையும் சமநிலைப்படுத்தினோம்.

முக்கிய சாதனைகள்

ஆண்டுகாலப்பகுதியில் எமது முக்கிய அடைவுகள் பின்வரும் பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விரிவான பகுப்பாய்வுகளுடன் கூடிய பரந்த அடிப்படையிலான மற்றும் தாக்கம் கொண்ட இரண்டையும் உள்ளடக்கியிருந்தன. எனினும் ஒருசில மைற்கற்களை சுருக்கமாக எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் மற்றும் டிஜிட்டல் மாறுதலில் தொடர்ச்சியான முதலீடு என்பவற்றுக்கு மத்தியில் நாம் நிலையான மற்றும் திருப்திகரமான மூலதன போதுமை விகிதமொன்றை பேணினோம். இது ஒழுக்கமிக்க கொடுகடன் வளர்ச்சியையும் முன்மதிமிக்க நிதியியல் முகாமைத்துவத்தையும் பிரதிபலிக்கின்றது. வலுப்படுத்தப்பட்ட கொடுகடன் கண்காணிப்பு, செயலூக்கமிக்க அறவீட்டு முயற்சிகள் மற்றும் அதிகரிக்கப்பட்ட பிணையாக்க நடத்தைகள் என்பன கடன் இடர்நேர்வை முகாமைசெய்வதில் தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஈடுசெய்த அதேவேளை சொத்துத்தர குறிகாட்டிகளில் உறுதிப்பாடு எமது ஆளுகை கட்டமைப்பின் வலிமையை மீள உறுதிப்படுத்தியது.

டிஜிட்டல் தளங்களிலும் தொழிற்பாட்டு வினைத்திறன்களிலும் எமது தொடர்ச்சியான முதலீடு நிறுவனசார் வலிமையினை மேலும் வலுப்படுத்தின. எமது இயலளவுகள் பரீட்சிக்கப்பட்டு எண்பிக்கப்பட்ட வியாபார தொடர்ச்சி தேவைகளுக்கும் காலநிலை தொடர்புபட்ட இடையறுகளுக்கும் எமது சுறுசுறுப்பான பதிலிறுத்துதலில் இது சான்றாக அமைந்திருந்தது.

வாடிக்கையாளரை மையப்படுத்தியதோர் தொழில்

நிதியியல் வலிமையைக் கொண்ட தளமொன்றின் மீது கட்டியெழுப்பப்பட்டு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் விவசாயம், ஏற்றுமதிகள் மற்றும் பொதுத்துறை அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக முன்னுரிமை துறைகளுக்கு நிதியளிப்பதற்கு இலக்கிடப்பட்ட முன்முயற்சிகளை நாம் முன்னேற்றினோம். மக்கள் வங்கி, இலங்கை முழுவதும் 746 கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் கொண்ட அதன் வலையமைப்பு 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பணியாற்றியுள்ளது. டிஜிட்டல் இயலளவுகளையும் உபாய ரீதியான பங்குடமைகளையும் விரிவுபடுத்துவதன் மூலம் நிறைவளிக்கப்படும் இவ்வடைவுடன் எமது வாடிக்கையாளர்களின் பல்வகை தேவைகளை நிறைவு செய்கின்ற அனைத்தையும் உள்ளடக்கிய நிதியியல் சேவைகள் வழங்குனராக நாம் தொடர்ந்தும் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளோம்.

இப்பரந்த தோற்றம் துரிதமாக வளர்ச்சியடைகின்ற டிஜிட்டல் சூழல் அமைப்பொன்றினால் வலுப்படுத்தப்பட்டு தேசம் முழுவதும் நிதியியல் பெறுவழியினை விரிவுபடுத்துவதில் எமது வெற்றியை பிரதிபலிக்கின்றது. வசதியான கொடுகடன், உறுதிநிலைப்படுத்தப்பட்ட வாழ்வாதாரங்கள், பாதுகாக்கப்பட்ட தொழில் மற்றும் துணையளிக்கப்பட்ட சமூக தாக்குப்பிடிக்கும் தன்மை, டிஜிட்டல் வங்கித் தொழிலை விரிவுபடுத்தலானது வசதியையும் பெறுவழியினையும் அதிகரித்த அதேவேளை உள்ளக கட்டுப்பாடுகள் மேம்பட்ட இடர்நேர்வு மேற்பார்வை மற்றும் உயர்வடைந்த சேவை வழங்கல் என்பவற்றை தானியக்கம் வலுப்படுத்தியது.

தேசிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிகழ்ச்சிநிரலை முன்னேற்றுவதில் நாம் ஆலோசனை மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல் ஆதரவுடன் தேவைக்கேற்றவாறான நிதியிடலை ஒன்றிணைத்து வியாபார தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் நிதியியல் இயலளவையும் வலுப்படுத்தினோம். எமது தளங்கள் முழுவதுமான தங்குதடையற்ற சேவை வழங்கல் அணுகுமுறை நகர கிராமிய மற்றும் புறநகர் சமூகங்களுக்கிடையில் இடைத்தளங்களற்ற சேவையினை உறுதி செய்யும். டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இன்றியமையாத திரவத்தன்மை ஆதரவினை நாம் வழங்கி நெகிழ்வுமிக்க மீள் கொடுப்பனவு ஏற்பாடுகளையும் மறுசீரமைப்பு வழிமுறைகளூடாக அறவீட்டை இயலச் செய்தோம்.

பேரின பொருளாதார சரிவுகளை திசைப்படுத்தல்

ஒத்திசைவுமிக்க மற்றும் முன்நோக்குகின்ற உபாயங்களூடாக நாம் எமது மூலதனத்தை, நிதியிடலை மற்றும் திரவத்தன்மை நிலையை வலுப்படுத்திய அதேவேளை பணவீக்க அழுத்தங்களை முகாமைசெய்கின்றோம். ஒழுக்கமிக்க மூலதன ஒதுக்கீடு, வியாபார பிரிவுகள் முழுவதும் உகப்பாக்கம்செய்தல் அத்துடன் வலுப்படுத்தப்பட்ட ஒதுக்குகள் என்பன பொருளாதார மற்றும் காலநிலை தொடர்புபட்ட அதிர்வுகளுக்கு எமது தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தியுள்ளன.

நாம் எமது வைப்பு தளத்தை பன்முகப்படுத்தி, வலுவான திரவத்தன்மை தாங்கி இருப்புகளை பேணி, காசுப்பாய்ச்சல்கள் பற்றிய முனைப்பான மேற்பார்வையினை உறுதிசெய்தோம். மீள்விலையிடல், இடர்நேர்வு அடிப்படையிலமைந்த கொடுகடன் உருவாக்கம் மற்றும் இலக்கிடப்பட்ட வினைத்திறன் வழிமுறைகள் என்பவற்றை அளவமைத்தமை பணவீக்க அழுத்தங்களை முகாமைசெய்கின்ற அதேவேளை வாடிக்கையாளர்களுக்கு வசதியான தன்மையினை பேணிக் காப்பதற்கு எம்மை இயலச்செய்தன.

ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், கணக்காய்வு மற்றும் உத்தரவாதமளித்தல் என்பன அத்திவாரத்திற்கான தூண்களாக காணப்பட்டன. வெளிப்படைத்தன்மை மிக்க வெளிப்படுத்தல்களால் துணையளிக்கப்பட்ட பொறுப்புச்கூறலையும் நேர்மையையும் கொண்ட கலாசாரம் அதிகூடிய தரநியமங்களை கடைப்பிடிப்பதை உறுதிசெய்து பங்குதாரர் நம்பிக்கையினை மீள வலிமைப்படுத்தியது.

செயற்பாடற்ற கடன்களை முன்மதியுடன் கட்டுப்படுத்தல்

நிதி ஆண்டின் முடிவில் செயற்பாடற்ற கடன்கள் விகிதம் 2025 இன் 5.1% உடன் ஒப்பிடுகையில் 4.3% ஆக மேம்பட்டது. கட்டமைக்கப்பட்ட மற்றும் செயலூக்கமிக்க அணுகுமுறையொன்றினூடாக மறுசீரமைப்பு மற்றும் சலுகை ஆதரவுடன் முன்கூட்டிய தலையீட்டினை ஒன்றிணைப்பதன் வாயிலாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சொத்துப்பட்டியல்களுடன் கூடியவர்கள் உள்ளடங்கலாக செயற்பாடற்ற கடன்களை நாம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தினோம்.

இடர்நேர்வை முன்கூட்டியே அடையாளப்படுத்தல் மற்றும் கடன்பெறுநர்களுடன் செயலூக்கமிக்க ஈடுபாடு என்பவற்றை அதிகரிக்கப்பட்ட கொடுகடன் கண்காணிப்பு இயலச்செய்தது. வலுவான மூலதனம் மற்றும் தாங்கி இருப்புகளை ஏற்பாடு செய்வதன் மூலம் துணையளிக்கப்பட்டு சொத்துத் தரத்தை நாம் பேணிக்காத்த அதேவேளை, அறவீட்டினூடாக தொடர்ந்தும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளித்தோம்.

எமது அணி

எங்கள் சாதனைகளின் இதயம் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய அர்ப்பணிப்புடன் கூடிய எமது அணியாகும். அவர்களின் தொழில்சார் பண்பும் தாக்குபிடிக்கும் தன்மையும் வங்கியின் செயற்திறனை தொடர்ந்தும் வடிவமைக்கின்றது.

தொடர்ச்சியான கற்றல், விசேடத்துவ பயிற்சி, கட்டமைக்கப்பட்ட இயலளவு விருத்தி என்பன எமது கலாசாரத்தின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றது. இக்கடமைப் பொறுப்பு நிறுவனசார் சுறுசுறுப்பினை பேணிவளர்த்து எமது தொழில்நுட்ப இயலளவு மற்றும் சமூக நோக்கத்துடன் ஆழமாக அணிசேர்ந்துள்ள தொழிற்படையினை வலுப்படுத்தியுள்ளது.

குறைக்கப்பட்ட சுவடுகளுக்கான நிலைபெறுதன்மை

எமது தொழிற்பாடுகளுக்குள்ளும் சமூக முன்முயற்சிகளுக்குள்ளும் இயற்கை மிகவும் ஆழமாக உட்பொதியச் செய்வதன் மூலம் சுற்றாடல் மேலாண்மைக்கான எமது கடமைப் பொறுப்பினை நாம் மீள உறுதிப்படுத்தியுள்ளோம். Peoples Green Pulse சுற்றாடல் ரீதியான எமது சுவடுகளை குறைத்து மூலவளங்களை பேணிக்காப்பதனை நோக்கிய ஆக்கபூர்வமான படியொன்றை அடையாளப்படுத்தியது.

பசுமை நிதிகள் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கு ஆதரவளித்த அதேவேளை சமூக முயற்சிகள், காலநிலை தாக்குப்பிடிக்கும் தன்மையையும் சமூக நல்வாழ்வையும் வலுப்படுத்தின. டிஜிட்டல் மாறுதல் தொழிற்பாட்டு வினைத்திறனுடன் நிலைபெறு தன்மையினை அணிசேரச் செய்வதற்கான எமது முயற்சிகள் இலங்கையின் காபன் நிகர பூச்சிய 2050 வழிகாட்டலுக்கு வினைத்திறன்மிக்கவாறு பங்களிக்கின்றது.

எதிர்காலத்தை நோக்கி நாம் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கு தொடர்ந்தும் ஆதரவளித்து டிஜிட்டல் மாறுதலை முன்னேற்றி தேசிய காலநிலை முன்னுரிமைகளுடன் நெருக்கமாக அணிசேர்ந்து கொள்வோம்.

தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் ஊடாக மக்கள் வங்கி தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்டு சேவை வழங்கல், ஆளுகை, புத்தாக்கம் மற்றும் நிலைபெறுதன்மை முழுவதும் உன்னதத்தினை எடுத்துக் காட்டுகின்றது. நிதியியல் வலிமையினை வழங்குகின்ற அதேவேளை பாதுகாப்பான மற்றும் அணுகத்தக்க வங்கிச் சேவையை உறுதிசெய்வதில் நாம் உறுதியாகவிருக்கின்றோம். நாம் வர்த்தக செயலாற்றத்தை தேசிய பொறுப்புடன் சமநிலைப்படுத்துவதனால் நிலைபெறத்தக்க வளர்ச்சியை கட்டியெழுப்புவதில் முன்னுரிமை துறைகளில் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்.

நன்றிக்கானதோர் குறிப்பு

எமது சாதனைகள், ஏற்றதாகிக் கொள்ளுதல் மற்றும் உன்னதம் என்பவற்றுக்கான இயலுமை ஏதுவாக அமைகின்ற எமது அணியின் அர்ப்பணிப்பையும் கடமைப்பொறுப்பையும் பிரதிபலிக்கின்றன. போட்டிமிக்க சூழலில் வங்கி வலுவாக செயலாற்றுகின்ற அதேவேளை இலாபங்கள் இறுதியாக சுகாதாரக் கவனிப்பு, கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் பொதுமக்கள் நலனோம்புகை என்பவற்றில் மீள்முதலீடு செய்யப்படுகின்ற தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கு அவர்களின் முயற்சி இயலச்செய்துள்ளது.

எமது தலைவர், பணிப்பாளர் சபை, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் எமது அலுவலர்கள் அத்துடன் மிக முக்கியமாக எமது வாடிக்கையாளர்கள் எம்மை தொடர்ந்தும் மனங்கவரச் செய்கின்ற அவர்களது நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் எனது உண்மையான பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றாக இணைந்து நாம் நோக்குடன் தொடர்ந்தும் முன்னோக்கிச் சென்று வலுவான நிறுவனமொன்றை கட்டியெழுப்பி இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமாக பங்களிப்போம்

கிளைவ் பொன்சேகா
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

2026 பெப்ரவரி 2025

பணிப்பாளர் சபை

சிறப்பான அர்ப்பணிப்பே எங்கள் பணிப்பாளர் சபையை வரையறுக்கிறது.

பேராசிரியர் நாரத பெர்னாண்டோ

தலைவர்

பேராசிரியர் பி.என்.டி. பெர்னாண்டோ, நிதியியல், வங்கி மற்றும் உயர்கல்வி ஆகிய துறைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்துமுள்ளடக்கிய தொழில் வாழ்க்கையைக் கொண்ட ஒரு அனுபவம் வாய்ந்த கல்வி மற்றும் நிதி நிபுணர் ஆவார். அவர் நவம்பர் 2024 இல் மக்கள் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டார், தலைமைத்துவம், தந்திரோபாய திட்டமிடல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் ஏராளமான அனுபவங்களைக் கொண்டுள்ளார்.

பேராசிரியர் பெர்னாண்டோ, மத்திய சீன நோர்மல் பல்கலைக்கழகத்தில் அரச பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார், அங்கு அவர் வளர்ந்து வரும் இலங்கை பங்குச் சந்தையில் சந்தை வினைத்திறன் மற்றும் தொழில்நுட்ப வர்த்தக தந்திரோபாயங்கள் மீதான ஆராய்ச்சியை மேற்கொண்டார். கொழும்பு திட்ட புலமைப்பரிசில் ஊடாக அவர் வெஸ்ட் பெங்கால் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் தனது வியாபார நிருவாகத்தில் முதுமானிபட்டம் பெற்றதுடன் களனி பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவம் (கணக்கியல்) துறையில் பட்டதாரி கற்கையை நிறைவுசெய்துள்ளார்.

ஒரு கல்வியாளர் என்ற வகையில், பேராசிரியர் பெர்னாண்டோ இலங்கையின் கல்வித் துறையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 27 ஆண்டுகளுக்கும் மேலான கற்பித்தல் அனுபவத்துடன், நிதித் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார், மேலும் களனி பல்கலைக்கழகத்தில் வணிகம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். அவரது தலைமையின் கீழ், ஆசிரியர்களுக்கான உலக வங்கி AHEAD மானியங்களைப் பெறுதல், வியாபார நிருவாகத்தில் முதுமானிபட்டத்திற்கான ISO 21001 சான்றிதழ் மற்றும் மத்திய வணிக தொடக்க நிறுவனம் போன்ற புத்தாக்க நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவுதல் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க மைல்கற்களை பீடம் அடையப்பெற்றது.

பேராசிரியர் பெர்னாண்டோ, கொழும்பு பங்குச் சந்தை மற்றும் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற தேசிய நிதி நிறுவனங்களுக்கு ஆலோசகர், மதிப்பீட்டாளர் மற்றும் வள நிபுணர் என்ற முக்கிய பங்கு வகித்துள்ளார். சந்தை நடத்தை மற்றும் முதலீட்டு தந்திரோபாயங்கள் என்பவற்றை மையமாகக் கொண்ட புகழ்பெற்ற சஞ்சிகைகளில் பத்திரிகைகளில் பல ஆராய்ச்சி வெளியீடுகள் அவரது கல்விசார் பங்களிப்புகளில் அடங்கும்.

திரு ஜயந்த திலகரத்ன

பணிப்பாளர்

திரு ஜயந்த திலகரத்ன, தேசிய மற்றும் பல்தேசிய நிறுவனங்களில் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிரேஷ்ட நிர்வாக அனுபவம் கொண்ட சட்ட மற்றும் மனிதவளத் துறையில் மிகவும் திறமையான நிபுணர் ஆவார். அவரது நிபுணத்துவமானது தந்திரோபாய மனிதவள முகாமைத்துவம், சட்ட ஆலோசனை, மாற்ற முகாமைத்துவம், நிறுவன கலாச்சார மேம்பாடு மற்றும் நிதி திட்டமிடல் ஆகியன வரை வியாபிக்கின்றது.

திரு. திலகரத்ன கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமானி மற்றும் சட்ட முதுமானிப் பட்டம் பெற்ற சட்டத்தரணியொருவரார். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) பொது முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டம் பெற்றுள்ளார். ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் (CIPM) உறுப்பினராகவும், பொது முகாமைத்துவத்தில் முதுகலை டிப்ளோமா படிப்பையும் நிறைவுசெய்துள்ளார்.

தனது புகழ்பெற்ற தொழில் வாழ்க்கை முழுவதும், திரு திலகரத்ன தாஜ் ஹோட்டல்களில் மனிதவள பணிப்பாளர், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் தலைமை மனிதவள அதிகாரி மற்றும் மெலிபன் பிஸ்கட் உற்பத்தி நிறுவனங்களில் குழு பொது முகாமையாளர் உள்ளிட்ட பல தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். “பணியாற்ற சிறந்த இடம்” விருதுகளைப் பெறுதல் மற்றும் முக்கிய நிறுவனங்களில் புத்தாக்கமிக்க மனிதவள மூலோபாயங்களை செயல்படுத்துதல் போன்ற மைல்கற்களை அடைவதில் அவரது தொலைநோக்குமிக்க தலைமைத்துவம் ஏதுவாக அமைந்தது.

தனது நிறுவன சாதனைகளுக்கு மேலதிகமாக, திரு. திலகரத்ன கல்வித்துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார், இலங்கையின் முன்னணி பல்கலைக்கழகங்களில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார் மற்றும் CIPM மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற தொழில்சார் நிறுவனங்களிலும் முனைப்புடன் பங்கேற்றுள்ளார்.

திரு கே ஏ விமலேந்திரராஜா

பணிப்பாளர்

திரு கே ஏ விமலேந்திரராஜா இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக, அரச சேவையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ளவர். தற்போது வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக பணியாற்றி வருகிறார். அவர் சட்டத்தரணியொருவராவார்.

திரு. விமலேந்திரராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டமும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார தத்துவத்தில் முதுமானி பட்டமும், மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமானி பட்டமும் பெற்றுள்ளார். அவர் அபிவிருத்தி ஆய்வுகள் மற்றும் பொதுக் கொள்கையில் முதுகலை டிப்ளோமா, சர்வதேச உறவுகளில் முதுகலை டிப்ளோமா, மனிதவள முகாமைத்துவத்தில் டிப்ளோமா, இலத்திரனியல் அரசாங்க கற்கையில் டிப்ளோமா மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா ஆகியவற்றைக் கொண்டுள்ளார். அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்லூரியின் ஒக்ஸ்போர்ட் பின்டெக் திட்டம், ஹார்வர்ட் கென்னடி அரசாங்கக் கல்லூரியின் வர்த்தகக் கொள்கை: நிர்வாகக் கல்வித் திட்டம் என்பற்றில் முதுமானி பட்டம் மற்றும் அஸ்திரேலிய கணினி சங்கத்தின் தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பொது திறைசேரியின் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், நிர்வாக சீர்திருத்தங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளர், பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலைமை தகவல் அதிகாரி, சீனாவின் பெய்ஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அமைச்சர் ஆலோசகர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

திரு விமலேந்திரராஜா தற்போது மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் உறுப்பினராக உள்ளார்.

அவர் ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் Messres De La Rue Lanka Currency and Security Print Ltd., பணிப்பாளர் சபையின் உறுப்பினர், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு வின் ஆணையாளர், முதலீட்டு சபையின் அவதானிப்பாளர் போன்ற பொறுப்புக்களையும் அவர் வகித்துள்ளார். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையிலும் உறுப்பினராகவிருந்ததுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தானத்தின் பணிப்பாளர் சபையின் தலைவராகவும்/பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அவர் சார்க் அபிவிருத்தி நிதியத்திற்கான இலங்கையின் பணிப்பாளராகவும், பொதுநலவாய சிறு அரசுகள் வர்த்தக நிதி வசதிக்கான (CTFF) மேற்பார்வை சபையின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

திரு விமலேந்திரராஜா, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறை மற்றும் பட்டப்படிப்பு பீடத்தின் முதுகலை கற்கைகளுக்கான வருகை விரிவுரையாளருமாவார்.

திரு சந்தன குனியன்கொட

பணிப்பாளர்

(சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் 2025 நவம்பர் தொடக்கம்)

திரு. சந்தன குனியன்கொட, இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் என்பவற்றிலிருந்து இரட்டை சக உறுப்புரிமைகளைப் கொண்ட புகழ்பெற்ற நிதியியல் தொழில்சார் நிபுணரொருவராவார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்திலிருந்து வங்கித் தொழில் மற்றும் நிருவாகத்தில் வியாபார முதுமானி பட்டம், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் பொருளியலில் கலை முதுமானி உள்ளடங்கலாக பரந்த கல்வித் தகமைகளைக் கொண்டவராவார். மேலும் இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகம் (விசேடம்) விஞ்ஞானமானி பட்டத்தினையும் வங்கியாளர்கள் மற்றும் ஐஎப்எஸ் (லண்டன்) Institute of Bankers & IFS (London) நிறுவனத்திலிருந்து வங்கித் தொழில் மற்றும் நிதியியல் உயர்தரச் சான்றிதழையும் (ACBF) பெற்றுள்ளார்.

வர்த்தக வங்கித் தொழிலில் 19 ஆண்டுகள் உள்ளடங்கலாக 26 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில்சார் அனுபவத்துடன் திரு. குனியன்கொட தொழில்சார் மற்றும் கல்விசார் துறைகள் இரண்டிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்துள்ளார். சபைப் பணிப்பாளர், முக்கிய முகாமைத்தவ ஆளணி, தொழில்துறை நிபுணர், சொத்து பொறுப்பு முகாமைத்துவ (ALCO) அதிகாரி போன்ற பல்வேறு உபாய ரீதியான வகிபாகங்களில் பணியாற்றியுள்ளதுடன் சொத்து பொறுப்பு முகாமைத்துவத்தில் உலகச் சம்பியன் அணியின் பாகமாகவும் இருந்தார். அவரது அனுபவம் நிதி, உபாய திட்டமிடல், வியாபார மாறுதல், செயன்முறை மீள்பொறியியற்படுத்தல், செலவு உகப்பாக்கம், மனிதவள முகாமைத்துவம், சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் என்பன வரை வியாபிக்கின்றது.

இவரது தொழில் வாழ்க்கை முழுவதும் திரு. குனியன்கொட NDB வங்கியின் நிதி உபாய திட்டமிடல் மற்றும் வியாபார துணையளித்தல் - உதவி துணைத்தலைவர் மற்றும் டெவலப்மன்ட் ஹோல்டிங் (பிரைவட்) லிமிட்டட் - என்டிபி வங்கி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கிடையிலான கூட்டுமுயற்சி – பணிப்பாளர் உள்ளடங்கலாக முக்கிய முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். இவர் சம்பத் வங்கியில் சொத்து பொறுப்பு முகாமைத்துவ அதிகாரி மற்றும் நிதிக்கான சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியாகவும் இருந்ததுடன் தனது தொழில்வாழ்க்கையை பட்டதாரி பயிலுனராக எய்ட்கென் ஸ்பென்ஸ் பில்சியில் தொடங்கினார். அத்துடன் அண்மையில் உலக வங்கியின் விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழும் கமத்தொழில் அமைச்சின் கீழும் நாட்டின் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட துறைகளுக்குள் நிறுவனசார் அமைப்புக்களை மறுசீரமைப்பதில் நிதி மற்றும் நிர்வாக விசேட நிபுணராக நிபுணத்துவ வழிகாட்டலை வழங்கினார்.

தற்போது திரு. குனியன்கொட MG கம்பனிகள் குழுமத்தின் குழும பிரதம நிதி அதிகாரி (GCFO), விதானகந்த ரி பக்டரி (பிரைவட்) லிமடெட்டில் சபை உறுப்பினர், சிசிபிஜ மெனேஜிங் (பிரைவட்) லிமிடெட்டின் நிறைவேற்று அதிகாரமற்ற தலைவர் பதவிகளிலும் பணியாற்றுகின்றார். இவர் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவன (SAB) பல்கலைகழக முகாமைத்துவ சபையின் கௌரவ உறுப்பினர் ஒருவருமாவார்.



திருமதி கில்லியன் எட்வர்ட்ஸ்

பணிப்பாளர்

திருமதி கில்லியன் எட்வர்ட்ஸ் இலங்கையின் வங்கித் தொழில் துறையில் 36 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய தொழில்சார் வங்கியாளர் ஒருவராவார். DFCC வங்கி மற்றும் செலான் வங்கி பிஎல்சி என்பவற்றுக்கான அவரது சேவையினை வழங்கிய இவர் சிரேஷ்ட நிறுவன முகாமைத்துவ மட்டத்தில் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். அவரது பணி அனுபவம் வாடிக்கையாளர் வங்கிச் சேவையில் மாறுதல்மிக்க ஆண்டுகள் வரை வியாபிக்கின்றது.

1988 இல் செலான் வங்கி பிஎல்சியில் இணைந்துகொண்டு, இவர் அவ்வங்கியை அமைத்த அணியில் முன்னோடி உறுப்பினராகவிருந்த சிறப்புரிமையும் கொண்டிருந்தார். சில்லறை வங்கித் தொழில், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் நுண்பாக, முயற்சிகள் ஆகிய அனைத்து துறைகளிலும் பல ஆண்டுகளைக் கொண்ட விரிவான அனுபவத்தை இவர் கொண்டுள்ளார். செலான் வங்கி பிஎல்சியில் அவரது பதவிக்காலத்தின் போது கிளை முகாமையாளர், பிரதேச முகாமையாளர், பிராந்திய பிரதானி மற்றும் தனிப்பட்ட வங்கித் தொழில் உதவி பொது முகாமையாளர் பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

2011 ஆகஸ்டில் தனிப்பட்ட நிதி சேவைகளின் பிரதானியாக DFCC அபிவிருத்தி வங்கியில் இணைந்த இவர் DFCC அபிவிருத்தி வங்கியில் தனிப்பட்ட நிதியியல் சேவைகள்/சில்லறை வங்கி சேவைகளை அமைப்பதற்கு பொறுப்பாகவிருந்தார். DFCC வங்கியில் மற்றும் DFCC அபிவிருத்தி வங்கி என்பன இணைக்கப்பட்டதுடன் இவர் 2021 மார்ச் வரை சிரேஷ்ட துணைத் தலைவர் - வாடிக்கையாளர் வங்கிச் சேவை பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

திருமதி கில்லியன் எட்வர்ட்ஸ் அவுஸ்திரேலிய தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்திலிருந்து வங்கி முகாமைத்துவத்தில் முதுகலை நிறைவேற்று டிப்ளோமாவையும் பெற்றுள்ளதுடன் அவுஸ்திரேலிய சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினரொருவராவார். இவர் இலங்கை வங்கியாளர்களின் குத்தகைச் சபையில் தலைவர் பதவியை வகித்ததுடன் வங்கித் தொழிற்துறையில் அவரது சாதனைகளுக்காக "முன்னனி 50 தொழில்சார் மற்றும் தொழில்வாழ்க்கை பெண்கள் விருதுகள் இலங்கை மற்றும் மாலைதீவு 2020" இல் கௌரவமளிக்கப்பட்டார்.

இவர் தற்போது கொமர்ஷல் கிரடிட் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி, செலான் டெவலப்மன்ட் பிஎல்சி, மகாவலி தேங்காய் உற்பத்தி நிறுவனம் என்பவற்றின் பணிப்பாளர் சபையில் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக பணியாற்றுகின்றார். இலங்கையின் சுற்றாடலை பாதுகாப்பதை நோக்கி கூட்டாக பணியாற்றுகின்ற இலாப நோக்கற்ற சுற்றாடல் அமைப்பொன்றான சுற்றாடல் அமைப்புக்கள் சம்மேளனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்/பொருளாளராகவும் இருக்கின்றார்.

திரு சஞ்சய பண்டார

பணிப்பாளர்

திரு.சஞ்சய பண்டார கணக்கீடு, கணக்காய்வு, ஆளுகை மற்றும் தலைமைத்துவ துறைகளில் 27 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில்சார் உன்னதத்துடன் கூடிய இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினரொருவராவார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து கணக்கியலில் விஞ்ஞானமானி பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார முதுமானி பட்டத்தையும் பெற்றவராவார்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் (2022/2023) அநேகமாக குறிப்பிடத்தக்க பல புகழ்பெற்ற தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். அங்கு தொழிலை உள்நாட்டில் வலுப்படுத்தி அதன் அங்கீகாரத்தை உலகளவில் மேம்படுத்திய மாறுதல் மிக்க முன்முயற்சிகளுக்கு தலைமை தாங்கினார். இவரது நோக்குமிக்க பங்களிப்புகளானவை ஆசிய பசுபிக் கணக்காளர்கள் சம்மேளனத்தின் சபை உறுப்பினராக (2019-2023) மற்றும் தென்னாசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (2022/2023) இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதை உள்ளடக்கி பிராந்தியம் முழுவதும் தொழிலின் எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் செல்வாக்குமிக்கவாறு குரல் கொடுக்கச்செய்தது.

திரு. பண்டாரவிடம் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஆளுகை வகிபாகங்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளரொருவராக (2022/2023), இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் (AAT) அமைப்பின் சபை உறுப்பினர் (2020/2021), களனி பல்கலைக்கழகத்தின் ஆளும் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். இதற்கு மேலதிகமாக இவர் மத்திய வங்கியின் பங்குதாரர் ஈடுபாட்டு ஆலோசனை குழுவின் உறுப்பினராக நிதியியல் துறைக்கும் கொள்கை ஆராய்ச்சிக்கும் பங்களித்தார்.

கல்வி மற்றும் அறிவுப் பகிர்தலுக்கு ஆழமாக அர்ப்பணித்து திரு. பண்டார 15 ஆண்டுகளுக்கு மேல் முன்னணி அரச பல்கலைக்கழகங்களின் வருகைத்தரு பீட உறுப்பினர் ஒருவராகவிருந்து நிதி மற்றும் கணக்கீட்டு தொழில்சார் நிபுணர்களின் எதிர்கால தலைமுறையினர்களை வளர்க்கின்றார்.

BRD De Silva & Co பட்டய கணக்காளர்களின் பங்காளர் ஒருவருமாகும் இவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் சபை உறுப்பினர், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரநியமங்கள் கண்காணிப்புச் சபையின் சபை உறுப்பினர், கணக்காய்வு தரநியமங்கள் குழுவின் உறுப்பினர் மற்றும் ஆசிய, ஓசியானியா தரநியம நிர்ணயக் குழுவின் (AOSSG) பங்களிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

திரு தீப்தி லொக்கு ஆராச்சி

பணிப்பாளர்

திரு. தீப்தி லொக்கு ஆராச்சி, கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொண்ட சட்டமானி பட்டத்துடன் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழில் வாழ்க்கை அனுபவத்தை பெற்றுள்ளதுடன் 1995 இல் சட்டத்தரணியாக சட்டத்துறையுடன் இணைந்து கொண்டார். மேலும் இவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பட்டயம்பெற்ற காப்புறுதி இடர்நேர்வு முகாமையாளராக தொழில்சார் தகைமைகளை பெற்றுக்கொண்டார்.

திரு. லொக்கு ஆராச்சி 2020 தொடக்கம் 2025 வரை லங்கா ஹொஸ்பிடல் கோப்பிரேசனின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக இறுதியாக பணியாற்றி 2025 யூலையில் நிறைவேற்று நிறுவன வகிபாகங்களிலிருந்து ஓய்வுபெற்றார். கொவிட் உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் நாட்டின் நிதியியல் நெருக்கடியினை எதிர்கொண்ட இக்காலப்பகுதி இலங்கையில் சுகாதார துறையின் வரலாற்றில் மிகவும் சவால்மிக்க காலப்பகுதியாக இருந்ததுடன் சுகாதார துறையின் துரித மாற்றத்தினால் சகல பங்குதாரர்களுக்கும் ஆக்கபூர்வமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. லங்கா ஹொஸ்பிடலில் அவரது தலைமைத்துவ காலப்பகுதியின் போது தலைமைவகித்த முன்முயற்சியானது பங்குடமையாளர்களுக்கு உயர்பெறுமதி இலாபங்களை வழங்குதல், நிலைபெறத்தக்க வர்த்தகநாம பங்குரிமை மூலதனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் இன்றியமையாத கவனிப்பை வேண்டுகின்ற அனைத்து நோயாளர்களையும் பராமரிப்பதற்கு ஒப்பற்ற தெரிவாக வைத்தியசாலையினை இடம்பெறச்செய்து அதற்கு நிறைவளிப்பதற்கு நவீன உலகளாவிய தேர்ச்சிபெற்ற தொழில்சார் நிபுணர்களையும் பெற்றுக் கொள்ளுதல் என்ற நியதிகளில் வைத்தியசாலைகளின் படைப்புகளின் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலை எடுத்துக்காட்டியது. இம்மாறுதல்மிக்க முன்முயற்சிகள், இலங்கையில் அனைத்து பட்டியலிடப்பட்ட வைத்தியசாலை கம்பனிகள் மத்தியிலும் சிறப்பாக செயலாற்றுகின்ற வைத்தியசாலையாக இவ்வைத்தியசாலை தெரிவுசெய்யப்படுவதற்கும் 2022 ஆம் ஆண்டில் திரு. லொக்கு ஆராச்சி சுகாதார சேவை பிரதம நிறைவேற்று அதிகாரியாக தெரிவாவதற்கும் வழிவகுத்தது.

சுகாதார கவனிப்பு துறையுடன் இணைந்து கொள்வதற்கு முன்னர் திரு. லொக்கு ஆராச்சி காப்புறுதி துறையில் 27 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இத்துறையில் அவரது இறுதி நியமனம் HNB Assurance PLC மற்றும் எச்என்பி ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் என்பவற்றின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலராகவிருந்தது. அவரது 27 ஆண்டு தொழில்வாழ்க்கையில் இவர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் அத்துடன் பட்டயம் பெற்ற காப்புறுதி தொழில்சார் அமைப்பின் தலைவர் ஆகிய தொழிற்துறை தலைமைத்துவ பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.

லொக்கு ஆராச்சி, இலங்கையின் காப்புறுதி தொழிற்துறையில் அவரது தலைசிறந்த பங்களிப்புக்காக இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் புகழ்பெற்றவராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், அவரது பாராட்டத்தக்க பங்களிப்பையும் வாழ்க்கையில் அடைவுகளையும் அங்கீகரித்து 2019 காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் ஆண்டு பாராட்டுக்களில் ஐந்து (05) விருதுகளில் ஒன்றைப் பெற்று கௌரவிக்கப்பட்டார்.

திரு நிஷான் வல்கம்பாய

பணிப்பாளர்

திரு. நிஷான் வல்கம்பாய, நிதி, உபாய திட்டமிடல் மற்றும் தொழில்முயற்சி மாற்றம் என்பவற்றில் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்துடன் கூடிய பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (ஐக்கிய இராச்சியம்) சக உறுப்பினரொருவராவார்.

இவர் பாங்கொச் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து முதுகலை டிப்ளோமா ஒன்றினை பெற்றுள்ளதுடன் கெண்டகி பல்கலைக்கழகத்தின் (ஐக்கிய அமெரிக்கா) மற்றும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் நிறைவேற்று கல்வியையும் நிறைவுசெய்துள்ளார்.

தற்போது திரு. வல்கம்பாய உலகளாவிய ஆடைத் தொழில்நுட்ப குழும கம்பனியான மாஸ் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடெட்டில் தொழில்முயற்சி செயன்முறைப்படுத்தல் வடிவமைப்பு மற்றும் ஆளுகை பணிப்பாளராக பணியாற்றுகின்றார். இவர் முன்னர் மாஸ் ஹோல்டிங்ஸ் பணிப்பாளர் -குழும நிதித் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக சிரேஷ்ட தலைமைத்துவ வகிபாகங்களை வகித்துள்ளார். இங்கு இவர் உபாய முயற்சிகள் மற்றும் தொழில்முயற்சி முழுவதுமான மாறுதல் கருத்திட்டங்களுக்கு தலைமை வகித்தார்.

திரு. வல்கம்பாய பிரான்ஸ், ஜேர்மனி, சீனா அதேபோன்று சிங்கப்பூரை தளமாக கொண்ட நிறுவனங்கள் உள்ளடங்கலாக பல்வகை கலாசார மற்றும் புவியியல் பின்னணிகள் முழுவதும் இணைந்த கூட்டுமுயற்சி பங்காளர்கள் மற்றும் சபையின் உறுப்பினர்களுடன் பணியாற்றி பரந்த அனுபவத்தையும் கொண்டவராவார்.

அவரது நிதியியல் நிபுணத்துவத்திற்கு மேலதிகமாக திரு. வல்கம்பாய உற்பத்தித்திறன்மிக்க தயாரித்தல் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளை பிரயோகிப்பதில் விரிவான பாராட்டையும் நேரடி அனுபவத்தையும் கொண்டவர். அவரது அனுபவமானது மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் புடவைப்பிரிவினுள் தொழில்நுட்பவியல் அமைப்பிற்கு உபாய ரீதியான பணிப்புரையினை வழங்கியிருந்து ஏற்பாட்டியல் தொழில்நுட்பம் வரை நீடிக்கின்றது.

திரு. வல்கம்பாய அவரது தொழில்வாழ்க்கையை கணக்காய்வில் கேபிஎம்ஜி சிறிலங்கா நிறுவனத்தில் தொடங்கி, பின்னர் நிறுவன நிதி வரை சென்று நிதியியல் ஆளுகை, முதலீட்டு உபாயம் மற்றும் தொழில் முயற்சி முழுவதுமான செயல்முறை வடிவமைப்பு என்பவற்றில் வலுவான தளத்தினை விருத்தி செய்து கொண்டார்.

திரு சப்ரி கௌஸ்

பணிப்பாளர்

திரு. சப்ரி கௌஸ், முன்னணி சர்வதேச வங்கிகளுடன் 30 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கின்ற வங்கித்தொழில் அனுபவம் பெற்றவர். இவர் வெளிநாட்டு நிதியியல் சந்தைகளில் சேவையாற்றும் 10 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

சப்ரியின் அனுபவம் மத்திய கிழக்கு, ஆசிய நாடுகள் மற்றும் இலங்கை முழுவதும் நீடிக்கின்றது. இவர் பணியாற்றிய சந்தைகளில் வாடிக்கையாளர் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சி வங்கிச்சேவையில் அவற்றின் உரிய வளர்ச்சி கட்டங்கள் மற்றும் வியாபார தொடக்க கட்டங்களில் பணியாற்றியுள்ளார்.

சவூதி அரேபியாவின் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி, ஸ்டான்டட் சாட்டட் வங்கி மற்றும் அல் ராஜி வங்கி அத்துடன் முதலீட்டு கூட்டுத்தாபனம் என்பவற்றில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் தெரிவுச் சந்தையில் முன்னணியாக உருவெடுவதற்கு இவ்வங்கிகள் அனைத்திலும் தொழிற்பாடுகள் மற்றும் உபாயம் வகுத்தல் என்பவற்றுடன் இணைந்து சில்லறை வங்கிச் சேவையினை அமைப்பதற்கு பொறுப்பாகவிருந்தார். 2006 இல் இவர் மலேசியச் சந்தையில் அவற்றின் நுழைவின் போது சில்லறை வங்கிச் சேவை மாதிரியொன்றினை உருவாக்கி தொழிற்பாடுகளை அமைப்பதற்கு சவூதி அரேபியாவின் அல் ராஜி இன்வெஸ்மன்ட் அன்ட் கோப்பரேசன் அதன் தாய்கம்பனி மூலம் அல் ராஜி இன்வெஸ்மன்ட் மலேசியா வங்கியில் சில்லறை வங்கி பிரதானியாக ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

திரு. கௌஸ் இலங்கையில் கொடுகடன் தகவல் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளராகவிருந்தார். இவர் 2022 ஓகஸ்ட் வரை கொழும்பு யூனியன் வங்கி பிஎல்சியில் பிரதித் தலைவராக இருந்தார். இவர் தற்போது விலை கோரப்பட்ட நிதிக் கம்பனியொன்றின் தலைவராவார். ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் வியாபார பாடசாலை மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்போட் டெம்பிரிட்டன் மூலம் நடாத்தப்பட்ட நிறைவேற்று தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுமானி பட்டம் பெற்றுள்ளார்.

மலேசியாவில் அல் ராஜி வங்கியில் சில்லறை வங்கிச்சேவை அங்கீகாரத்தை அமைக்கின்ற போது சப்ரி மலேசியாவின் அல் ராஜி வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவில் தீர்வை அமைப்பதில் முக்கியமாக விளங்கினார். நாட்டில் சிறிய வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பாரிய சமூகத்திற்கு உதவுவதற்கமைவாக இது காணப்பட்டது. மலேசியாவின் உத்தரவாத நிகழ்ச்சிதிட்டத்தின் மத்திய வங்கியுடன் இணைந்து இப்பிரிவுக்கு கடன்வழங்குவதை இது ஈடுபடுத்தியது. மலேசியாவின் பொருளாதார மேம்படுத்தலில் ஈடுபட்டிருந்த பாரிய வகுப்பினரை தரமுயர்த்துவது இதன் முக்கிய கவனமையமாக இருந்தது. தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு பிராந்திய பிரதேசங்கள் பின்பற்றுவதற்கு இது அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சியடைகின்ற நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கியது.

திருமதி சந்தி தர்மரத்ன

பணிப்பாளர்

திருமதி சந்தி தர்மரத்ன, மனித மூலதன முகாமைத்துவம் நிறுவனசார் மாறுதல் மற்றும் டிஜிட்டல் உபாயம் ஆகியவற்றில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஒரு மூத்த வணிகத் தலைவராவார். இவர் 1995 இல் நியூயோர்க்கில் தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கி, 2001 இல் இலங்கைக்குத் திரும்பி, மாஸ் ஹோல்டிங்ஸில் குழும கற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவை தலைமை தாங்கினார்.

பின்னர் இவர் Virtusa வில் மனிதவளத் துணைத் தலைவராகச் இணைந்துகொண்டு, இலங்கைக்கான ATC தலைவர், உலகளாவிய வணிகப் பிரிவு மனிதவளத் தலைவர் மற்றும் மனிதவள டிஜிட்டல்மயமாக்கலின் உலகளாவிய தலைவர் உட்பட பல உள்நாட்டு மற்றும் உலகளாவிய தலைமைப் பதவிகளை வகித்தார். அதன் பின்னர் சந்தி, இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா முழுவதும் தலைமை மக்கள் அலுவலர் மற்றும் தலைமை வளர்ச்சி அலுவலர் போன்ற பல உயர் மட்டப் பதவிகளில் பணியாற்றியுள்ளார். இப்பதவிகளில், இவர் மனிதவளத்தை முக்கிய வணிகச் தொழிற்பாடுகளுடன் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பத்தின் மூலம் திறன் அபிவிருத்தியை விரிவுபடுத்தி, நிறுவனம் தழுவிய வளர்ச்சி மாற்றங்களுக்குத் தலைமை தாங்கி, வருவாய் ஈட்டும் முயற்சிகளில் முக்கியப் பங்காற்றினார். அவரது அணுகுமுறையானது மக்களுக்கு முதலிடமளித்தல், நிலைபெறுதன்மையை இயக்குதல், தொடர்ச்சியான முன்னேற்றத்தால் வழிநடத்தப்படும் மாற்றம் என்பவற்றில் உறுதியாகவிருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்துடனான ஆலோசனைப் ஈடுபாடுகள் ஊடாக சந்தி தேசிய டிஜிட்டல் மற்றும் தொழிற்படை கொள்கைக்கும் பங்களித்துள்ளார். லங்கன் ஏஞ்சல் நெட்வொர்க்கின் முன்னாள் தலைவராக தொழில்முயற்சிசார சூழல் அமைப்பில் ஆழமாக ஈடுபட்டுள்ள அவர், இலங்கை அமெரிக்க வர்த்தக சம்மேளனம், SLASSCOM மற்றும் மனிதவள தொழில்சார்நிபுணர்கள் சங்கம் ஆகியவற்றின் சபைகளில் பணியாற்றியுள்ளார்.

2021இல் இவர் நிறுவனசார் மாற்றம் மற்றும் ஆற்றல் உபாயங்களில் கவனம் செலுத்தும் ஆலோசனை நிறுவனமான Prism Global Solutions இனை நிறுவினார். தற்போது இவர் இலங்கை மற்றும் சிங்கப்பூரில் செயற்படும் ஒரு அமைப்பான Connect to Care Consulting, இலங்கை நிறுவனத்தின் சபை உறுப்பினராகப் பணியாற்றுகிறார். இந்த அமைப்பு, பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் மன்றம் உள்ளடங்கலாக பங்காளர்களுடன் உலகளவில் இணைந்து, அளவிடக்கூடிய, தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்வுகள் மூலம் சமூகங்களை வலுவூட்டி வருகிறது

Echelon's "இலங்கையின் 50 சக்திவாய்ந்த பெண்கள்" மற்றும் "புதிய தாபனங்கள் 100" பட்டியலில் அங்கீகரிக்கப்பட்ட சந்தி, மனிதவளத் தலைமைத்துவம் மற்றும் புத்தாக்கத்திற்காக பல உலகளாவிய மற்றும் உள்நாட்டு விருதுகளைப் பெற்றுள்ளார். அவர் வணிக நிர்வாகம் மற்றும் பொருளாதாரத்தில் இளமானிப் பட்டமும், வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டமும், INSEAD இலிருந்து நிறைவேற்று கல்விசார் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

நிறுவனங்களை நெறிப்படுத்தி, சமூகங்களை மேம்படுத்தவும், அடுத்த தலைமுறைத் தலைவர்களுக்கு உத்வேகமளிக்கவும், வணிக உபாயங்களை மனித ஆற்றலுடன் ஒருங்கிணைத்து, மக்கள் மையப்படுத்தப்பட்ட மாற்றம் மற்றும் நோக்கம் சார்ந்த வளர்ச்சியை சந்தி தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

கலாநிதி ஏ ஜி இளங்ககோன்

பணிப்பாளர்

கலாநிதி கிஷான் இளங்ககோன் இலங்கை, மத்திய கிழக்கு மற்றும் பசுபிக் பிராந்தியம் முழுவதும் மூன்று தசாப்தங்களுக்கு மேலான தலைமைத்துவ அனுபவத்துடன் கூடிய சிரேஷ்ட வங்கித் தொழில் மற்றும் நிதித்தொழில்சார் நிபுணராவார். ஹட்டன் நஷனல் வங்கி, பாக்ளேஸ் வங்கி, எம்சிபி வங்கி மற்றும் யுனைடட் அராப் வங்கி உள்ளடங்கலாக முன்னணி நிதியியல் நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளதுடன் சொலமன்தீவுகளின் POB வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றினார்.

அவரது தலைமைத்துவ வகிபாகங்கள் நிறுவன மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரதானி, பிரதம இடர்நேர்வு அலுவலர் மற்றும் சொத்துப் பட்டியல் முகாமைத்துவ பிரதானி ஆகியவற்றை உள்ளடக்கி வியாபாரம், இடர்நேர்வு மற்றும் ஆளுகை தொழிற்பாடுகள் முழுவதும் பரந்த அனுபவத்தை அவருக்கு வழங்கியது. ஆளுகை, ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தல், மற்றும் நிலைபெறத்தக்க பெறுமதி உருவாக்கம் என்பன மீது இவர் வலுவான கவனம் செலுத்தலுடன் சில்லறை, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள். நிறுவன வங்கித்தொழில், இடர்நேர்வு முகாமைத்துவம், காலநிலை மற்றும் நிலைபெறத்தக்க நிதி என்பவற்றில் விரிவான நிபுணத்துவத்தை கொண்டுசேர்க்கின்றார். இதற்கு மேலதிகமாக. கலாநிதி இளங்ககோன் உள்ளூர் தொழிற்பாடுகளில் பணியாற்றி பாக்கிஸ்தானின் எம்சிபி வங்கியுடனான அவரது பதவிக்காலத்தின் போது இஸ்லாமிய வங்கிச் சேவைக்கான பெறுமதி மிக்க அனுபவத்தையும் பெற்றுக் கொண்டார்.

கலாநிதி இளங்ககோன் மலேசியாவின் முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டத்தையும் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் வியாபார முதுமானி பட்டத்தையும் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்திலிருந்து வியாபாரம் மற்றும் நிதியியல் நிருவாகத்தில் முதுகலை தகைமைகளையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தினதும் பட்டய தொழில்சார் முகாமையாளர்களினதும் சக உறுப்பினராவதுடன் தொழில்சார் வங்கியாளர்களின் அமைப்பு, இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனம் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனம் என்பனவற்றின் உறுப்பினருமாவார். இவர் கடன்வழங்கல் மற்றும் நிலைபெறத்தக்க நிதி என்பவற்றில் MCI (UK) மற்றும் ஏனைய சர்வதேச தொழில்சார் சான்றுப்படுத்தல்களையும் கொண்டிருப்பதுடன் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்திற்கும் பல பல்கலைக்கழங்களுக்கும் வள நிபுணராகவும் பணியாற்றுகின்றார். இலங்கை வங்கியாளர்களின் மன்றத்தின் வங்கித்தொழிற்துறை இடர்நேர்வு தொழில்சார் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக மற்றும் துணைத் தலைவராக தொழில்சார் இடர்நேர்வு முகாமைத்துவ தரநியமங்களை வலுப்படுத்துவதற்கும் பங்களித்துள்ளார்.

விருதுகளை வென்ற தொழில்சார் நிபுணர், கல்வியியளாளர், ஆராய்ச்சியாளர் மற்றும் வெளியீட்டு ஆசிரியர் என்ற வகையில் கலாநிதி இளங்ககோன் வங்கித்தொழில், இடர்நேர்வு முகாமைத்துவம், நடப்பு விவகாரங்கள் பற்றி சர்வதேச மற்றும் உள்நாட்டு சஞ்சிகைகளிலும் தேசிய வியாபார நாளிதழ்களுக்கும் பரந்தளவு பங்காற்றியுள்ளார். இவர் தற்போது பட்டியலிடப்பட்ட நிதிக் கம்பனியொன்றின் சுயாதீன பணிப்பாளரொருவராக பணியாற்றுவதுடன் இடர்நேர்வு முகாமைத்துவம், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி நிறுவன மற்றும் வங்கித்தொழில் நிபுணத்துவ ஆலோசனையை வழங்குகின்றார். இவரது இயலளவில், உபாயம், ஆளுகை, மற்றும் நிதியியல் முன்முயற்களுக்கு ஆதரவளிப்பதற்கு முன்னணி ஆலோசனை நிறுவனங்களுடனும் நிதியியல் நிறுவனங்களுடனும் நெருங்கிப் பணியாற்றுகின்றார். கலாநிதி இளங்ககோன் உலகளவில் முதலாவதாக "ABCDE" தலைமைத்துவ கட்டமைப்பான மனோபாவம். நடத்தை, அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றின் முன்னோடி உருவாக்குனரும் ஆவார். செயலாற்ற உன்னதம் மற்றும் செயல்திறன் மிக்க தலைமைத்துவம் பற்றிய அவரது வாழ்க்கை முறையை இது தன்னகத்தே கொண்டது.

கலாநிதி ஏ ஏ கதிர்காமர்

பணிப்பாளர்

கலாநிதி அகிலன் கதிர்காமர், பொறியியல், ஆராய்ச்சி என்பவற்றில் மிகுந்த நிபுணத்துவத்தினை கொண்ட மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கான கல்விமானொருவராவார். 2024 நவம்பரில் நியமிக்கப்பட்ட இவர் பல்துறை மற்றும் உலகளாவிய அனுபவங்கள் வரை வியாபிக்கின்ற புகழ்பெற்ற பின்னணியுடன் வங்கியுடன் இணைந்து கொண்டார்.

கலாநிதி கதிர்காமர் நியுயோர்க் சிட்டி பல்கலைக்கழகத்தின் பட்டதாரி நிலையத்திலிருந்து மானிடவியலில் கலாநிதி பட்டத்தையும் சமூக ஆராய்ச்சிக்கான புதிய கல்லூரியிலிருந்து பொருளியலில் கலை முதுமானி பட்டத்தையும் ஜோர்ஜியா தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து மின்சார பொறியியலில் விஞ்ஞானிமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவரது தொழில் வாழ்க்கை டோக்கியோவில் பணியாற்றிய போது பொறியியலில் 12 வருட காலத்துடன் தொடங்கி தொழில்நுட்பவியல் புத்தாக்கம் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் அவரது தேர்ச்சிகளை நெறிப்படுத்துகின்றது.

ஆராய்ச்சி மற்றும் கல்வியியளாளராக மாறுதலடைந்த கலாநிதி கதிர்காமர் பரந்தளவிலான சர்வதேச கருத்திட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கடற்தொழில், கமநல மாற்றம், கூட்டுறவு, படுகடன் மறுசீரமைத்தல் மற்றும் பொருளாதார மாற்றுவழிகள் போன்ற முக்கிய தலைப்புகளில் பரந்தளவு வெளியீடுகளை வெளியிட்டுள்ளார். பொருளாதார முறைமைகள் மற்றும் அபிவிருத்தி பற்றிய நுண்நோக்குகள் சமூக பொருளாதார சவால்களுக்கு தீர்வு காண்பதில் சிந்தனைமிக்க தலைவரொருவராக அவரை இடம்பெறச் செய்துள்ளன.

2018 இல் சமூகவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட இவர் முக்கிய சிந்தனை மற்றும் துறைகளுக்கிடையிலான கல்வி ஆராய்ச்சி மேம்பாட்டுக்கு ஏதுவாக இருந்து வருகின்றார்.

பெருநிறுவன முகாமைத்துவம்

மக்களின் நாடிதுடிப்பைத் தொடுகின்ற பெருநிறுவன முகாமைத்துவம்

திரு கிளைவ் பொன்சேகா

பிரதம நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர்

திரு கிளைவ் பொன்சேகா, இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் மூத்த உறுப்பினராகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முதுகலை முகாமைத்துவ நிறுவனத்தில் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் ஆஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CMA) சான்றளிக்கப்பட்ட உறுப்பினருமாவார்.

இவர் முதனிலை வணிகர்கள் சங்கத்தின் தலைவராக பணியாற்றினார்.

திரு. பொன்சேகா தற்போது பீப்பள்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பிஎல்சியின் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகப் பணியாற்றுகிறார். மேலும், இவர் இலங்கை வங்கிகளின் சங்கம், லங்காபே (பிரைவேட்) லிமிடெட் என்பவற்றில் பணிப்பாளர் பதவிகளை வகிப்பதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் ஆளும் சபை உறுப்பினருமாவார்.

முன்னர், இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் IABF/DABF பரீட்சைகளுக்கான முதன்மை ஆய்வாளராக பங்களித்தார்.

திரு பொன்சேகா 2002 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் இணைந்து நவம்பர் 2011 முதல், பிரதி பொது முகாமையாளராக பெருநிறுவன முகாமைத்துவ குழுவில் முக்கிய உறுப்பினராக இருந்து வருகிறார். இப்பொறுப்பில், இவர் வெளிநாட்டு செலாவணி தொழிற்பாடுகள், முதன்மை வணிகர் பிரிவு, முதலீட்டு வங்கி பிரிவு மற்றும் பணச்சந்தை தொழிற்பாடுகளுக்கு தலைமை வகித்த அதேவேளை, உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனான உறவுகளையும் நிர்வகித்தார். அவரது அனைத்துமுள்ளடக்கிய அனுபவத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியில் மூத்த பதவிகளும் அடங்கும்.

2023 ஜனவரி 1 அன்று, திரு பொன்சேகா மக்கள் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக/பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார். 2023 ஆகஸ்ட் 1 அன்று இவர் முறையாக பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

திரு ஈ ஏ எம் திசாநாயக்க

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

திரு ஈ ஏ எம் திசாநாயக்க மக்கள் வங்கியின் முதன்மை உள்ளக கணக்காய்வாளராக பணியாற்றுகின்றார். இவர் கிளை வங்கித்தொழில் மற்றும் உள்ளக கணக்காய்வில் 35 இற்கும் மேற்பட்ட ஆண்டுகளை கொண்ட அனுபவத்தை பெற்றுள்ளதுடன் ஆளுகையினை வலுப்படுத்தல், இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டு நடத்தைகள் என்பவற்றில் வங்கியுடன் இணையப்பெற்றவராவார்.

உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் தலைவர் என்ற வகையில் இவர் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் தொழில்சார் தரநியமங்களுக்கமைவாக பணிப்பாளர் சபைக்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் சுயாதீன மற்றும் குறிக்கோள்மிக்க உத்தரவாதத்தை வழங்குவதில் தலைமைத்துவம் வழங்குகின்றார். உள்ளகக் கணக்காய்வு பிரிவானது வங்கி முழுவதும் செயல்திறன்மிக்க ஆளுகை, இணக்கப்பாடு மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் மீது கவனம் செலுத்துகின்றது.

திரு திசாநாயக்க தொழில்சார் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டுப் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்று, உள்ளகக் கணக்காய்வு மற்றும் நிதி நிர்வாகத்தில் உருவாகி வரும் நடைமுறைகள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் கணக்காய்வுப் பிரிவில் தொழில்சார் தரநியமங்கள், நெறிமுறை நடத்தை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றைப் பேணுவதற்குத் தொடர்ந்து முக்கியத்துவமளித்து வருகிறார்.

இவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினரும் (FCA) பட்டய சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர் அமைப்பின் உறுப்பினரும் (ACCA-UK), இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் (AIT) இணை உறுப்பினருமாவார், இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிருவாகத்தில் விஞ்ஞானமானி பட்டத்தையும் இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்தின் கூட்டிணைப்புடன் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தகவல் முறைமைகள், பாதுகாப்பு கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

திரு விக்கிரம நாராயண

பிரதிப் பொது
முகாமையாளர்

முகாமைத்துவப் பயிலுநராக 1994 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் இணைந்துகொண்டு திரு விக்கிரம நாராயண நிறுவன மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் தந்திரோபாய திட்டமிடல் வங்கியின் பல்வேறு நோக்குகளில் 30 வருட அனுபவம் கொண்டவர். சிறு மற்றும் நடுத்தர வியாபார கடன்வழங்குதல், கருத்திட்ட நிதி, தொழில்முனைவோர் அபிவிருத்தி, வணிக மறுமலர்ச்சி மற்றும் அறவீடு என்பற்றில் சிறப்பு கவனம் செலுத்துதலுடன் கூடிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கலின் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த அனுபவம் கொண்டுள்ளார். இவர் தற்போது மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி, அபிவிருத்தி, நுண் நிதி துறைகளை வழிநடத்துகிறார்.

திரு நாராயண, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றுள்ளார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக முதுகலை முகாமைத்துவ நிறுவனத்திடமிருந்து வங்கித்தொழில் மற்றும் நிதியியல் வியாபார நிறுவாகத்தில் முதுமானி பட்டம் பெற்றுள்ளதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டம் என்பவற்றையும் பெற்றுள்ளார். மேலும், இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராக உள்ளார். கருத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் இடர்நேர்வு பகுப்பாய்வு குறித்து ஹார்வர்ட் பல்கலைகழகத்திடமிருந்து கௌரமிக்க பயிற்சி அடங்கலாக பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றுள்ளார்.

இவர் தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், வங்கியாளர்கள் நிறுவனம் மற்றும் வங்கித் தொழில் ஆய்வுகளுக்கான நிலையம் (இலங்கை மத்திய வங்கி) ஆகியவற்றில் விரிவுரையாளராக உள்ளார். மேலும் 2023 ஜனவரி -2024 நவம்பர் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளராக் பணியாற்றினார். இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் ஆளும் சபை, உறுப்பினராகவும் பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றுகிறார்.

திருமதி நில்மினி பிரேமலால்

பிரதிப் பொது முகாமையாளர்/
பதில் நிதிப் பிரதானி

திருமதி நில்மினி, தற்போது மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்/பதில் நிதிப் பிரதானி பதவியினை வகிக்கின்றார். மக்கள் வங்கியில் 2002 ஆம் ஆண்டு முகாமைத்துவப் பயிலுநராகச் இணைந்துகொண்டு 24 ஆண்டுகள் அனுபவத்தை கொண்டுள்ளார். நிதித் துறையில் 18 ஆண்டுகளுக்கு மேலாகவும், தந்திரோபாய திட்டமிடல், செயலாற்ற முகாமைத்துவம் மற்றும் ஆராய்வுத் துறையில் சுமார் இரு வருடங்களுக்கு மேலாகவும் செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் தர உத்தரவாதம், பீபிள்ஸ் அட்டை திணைக்களத்தில் மூன்று ஆண்டுகளையும் அது உள்ளடக்குகின்றது. நிதித் திணைக்களத்தில் இவர் பணியாற்றிய காலத்தில் பல சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார். நிதியியல் பிரதித் தலைவராக வங்கியின் செயலாற்றத்தை அதிகரிக்க உதவியதுடன், உதவி பொது முகாமையாளராக இவர் வங்கியின் தந்திரோபாய திட்டத்தை திறம்பட உருவாக்கவும் மேம்படுத்தவும் தந்திரோபாய திட்டமிடல், செயலாற்ற முகாமைத்துவம் மற்றும் ஆய்வுத் துறையில் இருந்த போது இவர் பெரிதும் பாடுபட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம் 2 ஆம் வகுப்பு மேல்நிலையுடன் பெற்ற திருமதி நில்மினி, களனி பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டம் பெற்றுள்ளார்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனம் ஆகியவற்றின் சக உறுப்பினராக உள்ளார். இவர் 2009 முதல் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் இருந்துள்ளார். வங்கியியலில் அவரது சேவைக்காக அண்மையில் அவருக்கு இலங்கை வங்கியியளாளர் நிறுவனத்தினால் மூத்த சக உறுப்பினர் விருது வழங்கப்பட்டது. இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் வருகை தரும் விரிவுரையாளராக கடமைபுரிவதன் மூலம் இவர் வங்கியாளர்களுக்கு சேவை செய்துள்ளார். இவர் Institute of Lean Green Belt (ILM) சிக்கன பசுமைப் பட்டி சான்றிதழ் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார். இவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினராவதுடன் CIMA (UK) கற்கையை பகுதியளவில் நிறைவுசெய்துள்ளார்.

இவர் பீப்பள்ஸ் மேர்ச்சண்ட் வங்கியின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், அதே நேரத்தில் பீப்பள்ஸ் மேர்ச்சண்ட் வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவின் தலைவராகவும் இருந்தார். தற்போது பீப்பள்ஸ் மைக்ரோ-கொமர்ஷல் லிமிடெட்டின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் ஆளுகைச் சபையின் மாற்றுப் பணிப்பாளராவும் உள்ளார்.

திரு டி எம் டப் சந்திரகுமார

பிரதிப் பொது முகாமையாளர்

திரு சந்திரகுமார, 1994 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் முகாமைத்துவப் பயிலுநராக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார், வங்கித் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்றுள்ளார். தற்போது இவர் செயற்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் தர உத்தரவாத பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றுகிறார்.

தனது பணிக் காலத்தில், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு அனுபவ நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்று, பல்வேறு வணிக வங்கித்தொழில் முகாமைத்துவ நடைமுறைகளில் அனைத்துமுள்ளடக்கிய அறிவைப் பெற்றார். திரு சந்திரகுமார, 2018 முதல் 2020 வரை உதவிப் பொது முகாமையாளர் (வங்கித்தொழில் உதவிச் சேவைகள்) பதவியை வகித்தார், வழங்கல்கள், போக்குவரத்து, பாதுகாப்பு, பராமரிப்பு பொறியியல், கட்டடப் பொறியியல் மற்றும் வடிவமைத்து வெளியிடுதல் போன்ற ஆறு துறைகளை மேற்பார்வைசெய்தார். இந்த காலகட்டத்தில், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மேலாக, பெறுகை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் பாதகாப்புத் தொழிற்பாடுகள் ஆகியவற்றில் இவர் விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பெற்றார்.

2020 முதல் 2023 வரை இவர் உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழிநுட்ப நிர்வாகம் மற்றும் வணிக உதவி), உதவிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவ திணைக்களம்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவ திணைக்களம்) என்பவற்றில் பணியாற்றினார், அங்கு இவர் கிளை வலையமைப்பு மற்றும் CEFT தொழிற்பாடுகளுக்கு 5S முறைமையைச் செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அனுவத்தைப் பெற்றார்.

திரு சந்திரகுமார களனி பல்கலைக்கழகத்தில் வணிகமானி (சிறப்பு) பிரிவில் இரண்டாம் வகுப்பு மேல் தர வகுப்பு பட்டமும், சுவிட்சர்லாந்து ஜெனீவா சர்வதேச வர்த்தக நிலையத்திலிருந்து (WTO (UNCTAD) சர்வதேச விநியோகச் சங்கிலி முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இவர் ஆஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CMA) இணை உறுப்பினராகவும், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (LICA) உரிம அங்கத்தவராகவும், இலங்கையின் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் நிறுவனத்தின் (MAAT) உறுப்பினராகவும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் (IBSL) உறுப்பினராகவும் உள்ளார். மேலும், இவர் இலங்கையின் விநியோகங்கள் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவனத்தின் (MISMM) நிறுவன உறுப்பினருமாவார்.

திருமதி சமந்தி சேனாநாயக்க

பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கம்

திருமதி சமந்தி சேனாநாயக்க 30 வருட கால சட்டத்தரணியாக அனுபவம் பெற்ற ஒரு சட்ட வல்லுநர் ஆவார், இந்தியாவின் டெல்லி பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் முதுமானி பட்டம் (LLM) பெற்றுள்ளார். மேலும், இணக்கப்பாடு நோக்குகளில் தொழில்சார் தகைமைகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன் மென்செஸ்டர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச இணக்கப்பாடு அமைப்பில் இணக்கப்பாடு சர்வதேச டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

மக்கள் வங்கியில் கம்பனிச் செயலாளராக தனது சட்ட வாழ்க்கையைத் தொடங்கிய திருமதி சேனாநாயக்க, அதன் பின்னர் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு தனிப்பட்ட தொழில்புரிபவராகவும், நிறுவனத் துறையின் உறுப்பினராகவும் பணியாற்றி அனுபவத்தைப் பெற்றுள்ளார். 2001 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் உதவி சட்ட அலுவலராக இணைந்து ஒன்பது ஆண்டுகள் சட்ட அலுவலராக தனது கடமைகளைச் முன்னெடுத்தார்.

2009 மார்ச் 3 அன்று, திருமதி சேனாநாயக்க வங்கியின் இணக்கப்பாடு அலுவலர் பதவியை பொறுப்பேற்றார், பின்னர் 2023 ஏப்ரல் 28 அன்று இவர் பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கப்பாடு பதவிக்கு பதவியுயர்வு பெற்றார்.

இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் இணக்கப்பாடு அதிகாரி பதவிகளையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தகவல் குழுவின் உறுப்பினராகவும் இவர் பதவி வகிக்கிறார். மேலும், இலங்கை கொடுகடன் தகவல் பணியம் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (IBSL) ஆகியவற்றின் மாற்று பணிப்பாளராகவும் இவர் செயற்படுகிறார், மேலும் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவருமாவார்.

திருமதி ஷமீலா லொகு கலுகே

பிரதிப் பொது முகாமையாளர்
திறைசேரி, சர்வதேசம் மற்றும் முதலீடு

திருமதி ஷமீலா லொகு கலுகே 2002 ஆம் ஆண்டு மக்கள் வங்கியில் முகாமைத்துவப் பயிலுநராக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கி, வங்கியின் திறைசேரிப் பிரிவில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்று திறைசேரி முன் அலுவலகத்தின் அனைத்து துறைகளிலும் நேர்முகநிலையுடன் கூடிய விரிவான அறிவு மற்றும் பரந்த அனுபவத்துவத்தை கொண்டுவருகின்றார். 2011 முதல் 2022 வரை முதநிலை வணிகர் பிரிவு அடங்கலாக திறைசேரி முன் அலுவலகத்தின் பல பகுதிகளில் பிரதிநிதியாகப் பணியாற்றுவதுடன் 2017 முதல் திறைசேரிப் பிரிவினதும் முதல்நிலை வணிகர் பிரிவினதும் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் இவர் மேற்பார்வைசெய்தார்.

2023 ஆம் ஆண்டு திறைசேரி, முதலீட்டு வங்கித்தொழில் மற்றும் நிதி நிறுவனங்களின் பிரதிப் பொது முகாமையாளராகப் பொறுப்பேற்று, வெளிநாட்டு செலாவணி, பணச் சந்தை, முதல்நிலை வணிகர் பிரிவு மற்றும் முதலீட்டு வங்கிப் பிரிவு ஆகியவற்றின் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கிய அதேவேளை, சமாந்தரமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடனான வங்கியின் உறவுகளை நிர்வகித்த வங்கியின் நிதியியல் நிறுவனங்கள் திணைக்களத்தின் பொறுப்புகளுக்கு தோல்கொடுத்தார். இதற்கு மேலதிகமாக, 2025 மார்ச் மாதத்தில் இவர் வங்கியின் சர்வதேச வங்கிப் பிரிவின் பிரதானியாக கடமைகளை பொறுப்பேற்று வங்கியின் சர்வதேச வர்த்தக நிதியியல் சேவைகளின் தொழிற்பாடுகளையும் வியாபாரத்தையும் வழிநடாத்துவதற்கு திறைசேரி, சர்வதேச மற்றும் முதலீடு பிரதிப் பொது முகாமையாளராக மீள் பதவியமர்த்தப்பட்டார்.

திருமதி லொகு கலுகே வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்திய பல உள்ளக மற்றும் வெளிவாரி குழுக்களின் முக்கிய உறுப்பினராக விளங்குவதுடன் தலைமைத்துவ அபிவிருத்தி, திறைசேரி தொழிற்பாடுகள், முதலீட்டு வங்கித் தொழில், தொடர்பு வங்கித் தொழில் மற்றும் சர்வதேச வர்த்தக நிதி போன்ற பல துறைகளை உள்ளடக்கி பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்றுள்ளதுடன் வங்கியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொடர்பு முகவர்களுடனான வியாபார கூட்டங்களிலும் பங்கேற்றார்.

இவர் களனி பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான இரண்டாம் வகுப்பு உயர் பிரிவுடன் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் முதுமானி பட்டம் பெற்றுள்ளதுடன் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் திறமை மற்றும் தங்கப் பதக்கங்களுடன் வணிக நிர்வாகத்தில் (நிதி) முதுமானி பட்டம் பெற்றவர். மேலும், இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் திறைசேரி, முதலீடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றில் டிப்ளோமா பெற்றுள்ளதுடன் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினர் ஆவார். இவர் ACI டீலிங் சான்றிதழிலும் ஒரு சிறப்புப் பட்டம் பெற்றுள்ளதுடன் பிரான்சின் ACI நிதிச் சந்தைகள் சங்கத்தால் வழங்கப்படும் ACI இணையவழி FX குளோபல் கோட் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

திருமதி லொகு கலுகே 2017 ஆம் ஆண்டு முதல்நிலை வணிகர்கள் சங்கத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் 2020 முதல் 2023 வரை முதன்மை வணிகர்கள் சங்கத்தின் செயலாளராக பணியாற்றினார், தற்போது முதன்மை வணிகர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றுகிறார். இவர் இலங்கை வெளிநாட்டு செலாவணி சங்கத்தின் உறுப்பினராகவும், தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார். தற்போது இவர் பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபையில் பணியாற்றுகிறார். இவர் இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளன உறுப்பினராகவும் வங்கியின் தொழில் குழுவின் உறுப்பினராகவும் வங்கியின் முக்கிய பிரதிநிதியாக பணியாற்றுகின்றார் 2025 பெப்ரவரி தொடக்கம் இவர் பீப்பிள்ஸ் லிசிங் பினான்ஸ் பிஎல்சி பணிப்பாளர் சபையின் பணிப்பாளரொருவராகவும் பணியாற்றுகின்றார். முன்னர் இவர் 2024 ஆகஸ்ட் – டிசம்பர் காலப்பகுதியில் பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவட்) லிமிட்டட் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு நாலக விஜயவர்தன

சந்தைப்படுத்தல் பிரதானி

திரு நாலக விஜயவர்தன, இலங்கையிலும் கனடாவிலும் சர்வதேச வங்கித் துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்துமுள்ளடக்கிய அனுபவத்தைக் கொண்ட ஒரு அனுபவம் வாய்ந்த நிதிச் சேவை சந்தைப்படுத்தல் நிபுணர் ஆவார். உபாய சந்தைப்படுத்தல் திட்டஅறவீடு, வரத்தகநாம முகாமைத்துவம், நிறுவனம் பற்றிய எண்ணப்பாங்கை அபிவிருத்திசெய்தல், கடன்டை சந்தைப்படுத்தல், வியாபார வங்கித்தொழில் முகாமைத்துவம் போன்ற துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்.

மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர், இவர் சந்தைப்படுத்தல் மற்றும் தனிப்பட்ட வங்கிச்சேவை பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் முதன்மை சந்தைப்படுத்தல் அலுவலர் பதவிகளை பான் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் பிஎல்சியில் வகித்தார். டொரோண்டோவில் கனேடியன் இம்பீரியல் பேங்க ஒப் கொமர்ஸ் (CIBC) இல் காசு முகாமைத்துவ சேவைக்கான தயாரிப்பு முகாமையாளராக பணியாற்றியதுடன் சம்பத் வங்கியில் மூத்த சந்தைப்படுத்தல் அதிகாரியாக பணியாற்றியுள்ளார். திரு. விஜயவர்தன, ஐக்கிய இராச்சிய பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் (FCIM) சக உறுப்பினராவார்.

திரு நலீன் பத்திரனகே

பிரதிப் பொது முகாமையாளர்
கிளை முகாமைத்துவம்

திரு நலீன் பத்திரனகே 2023 தொடக்கம் மக்கள் வங்கியின் - கிளை முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றுகிறார். இப்பதவியில் இலங்கையில் பாரிய வங்கித்தொழில் வலையமைப்புகளுக்கு உபாய ரீதியான தலைமைத்தவத்தையும் தொழிற்பாட்டு மேற்பார்வையையும் இவர் வழங்குகின்றார்.

நாடுபூராகவும் 844 ATM இயந்திரங்கள், 337 பணவைப்பு/மீள்சுழற்றிச் இயந்திரங்கள் மற்றும் 307 சுய வங்கிச் சேவைப் பிரிவுகளைக் கொண்ட வலிமையான சுயசேவை கட்டமைப்பினால் துணையளிக்கப்படுகின்ற 742 கிளைகளையும் சேவை நிலையங்களையும் உள்ளடக்குகின்ற வங்கியின் விரிவாகப் பரந்துள்ள வலையமைப்பின் அனைத்தையும் உள்ளடக்கிய முகாமைத்துவத்தை மேற்பார்வை செயகின்றார். தொழிற்பாட்டு ஆளுகை, சிறந்த சேவை, விநியோகச் சங்கிலி மேம்பாடு மற்றும் நாடு தழுவிய வணிகச் செயற்திறன் முகாமைத்துவம் ஆகியவை அவரது பணிப்பொறுப்புகளில் அடங்கும்.

24 ஆண்டுகளுக்கும் மேல் மக்கள் வங்கியில் உள்ளடங்கலாக வங்கித் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் பணியாற்றிய திரு. பத்திரனகே, 2002 ஆம் ஆண்டில் ஒரு முகாமைத்துவப் பயிலுநராக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார். பல ஆண்டுகளாக, கிளை வங்கிச் சேவை, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம் ஆகியவற்றில் பல்வேறு தலைமைப் பதவிகளை வகித்து, சில்லறை வங்கிச் தொழிற்பாடுகள் மற்றும் மூலோபாய வணிக அபிவிருத்தி என்பவற்றில் ஆழ்ந்த நிபுணத்துவத்தை வளர்த்துக் கொண்டார்.

மாத்தளை மற்றும் கம்பஹா பிராந்தியங்களில் பிராந்திய முகாமையாளராக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட இவர், புத்தாக்கமிக்க மற்றும் செயற்திறனால் இயக்கப்படும் முன்னெடுப்புகள் மூலம் வணிக வளர்ச்சியை வெற்றிகரமாக முன்னெடுத்து, சந்தை நிலையை வலுப்படுத்தி, செயலாற்ற இயலளவை மேம்படுத்தினார்.

மக்கள் வங்கியில் அவரது நிறைவேற்று பொறுப்புகளுக்கு மேலதிகமாக, திரு பத்திரனகே மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள்ஸ் லீசிங் ஹேவ்லொக் புராப்பர்டீஸ் லிமிடெட்டின் தலைவராகவும் பணியாற்றி, தந்திரபோயத் தலைமை மற்றும் ஆளுகை மேற்பார்வையை வழங்குகிறார். மேலும், இவர் 2026 ஜனவரி 29 முதல் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் (CRIB) பணிப்பாளர் சபையின் மாற்றுப் பணிப்பாளரராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம், பரந்த நிதிச் சேவைகள் துறைக்கும் தேசிய கொடுகடன் உட்கட்டமைப்புக்கு தனது பங்களிப்பை வழங்குகின்றார்.

திரு பத்திரனகே கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி (கௌரவ) இரண்டாம் வகுப்பு மேல் பிரிவில் பட்டம் பெற்றுள்ளார். மேலும், இங்கிலாந்தின் Bedfordshire பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தலில் வியாபார நிர்வாகத்தில் முதுமானி பட்டமும் பெற்றுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினருமாவார்.

தனது நிறுவனப் பொறுப்புகளுக்கு அப்பால், வங்கியின் மூலோபாய தொலைநோக்குடன் அணிசேர்ந்திருக்கும் விதத்தில் செயலூக்கமிக்க, இயக்கவாற்றல்மிக்க, உயர் செயலாற்றல் கொண்ட கிளை வலையமைப்புப் பணியாளர் குழுவை உருவாக்குவதில் பயிற்சியாளராக, ஊக்கப்படுத்துபவராக, வளவாளராக முனைப்புடன் பங்களிக்கின்றார்.

திருமதி துஷாரி ஹேவாவசம்

பிரதிப் பொது முகாமையாளர்
வர்த்தகக் கொடுகடன்

திருமதி துஷாரி ஹேவாவசம், தற்போது மக்கள் வங்கியில் வர்த்தகக் கொடுகடன் பிரதிப் பொது முகாமையாளராக பணியாற்றுகிறார். இந்நியமனத்திற்கு முன்னர் இவர் சர்வதேச வங்கிப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றினார்.

2002 ஆம் ஆண்டு வங்கியில் முகாமைத்துவப் பயிலுநராக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய இவர், கொடுகடன், கிளை வங்கித்தொழில், நிறுவன வங்கித்தொழில் மற்றும் சர்வதேச வங்கித்தொழில் உள்ளிட்ட பல்வேறு வங்கித் துறைகளில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்துமுள்ளடக்கிய அனுபவத்தைக் பெற்றுள்ளார். நிறுவன மற்றும் வணிக கடன்வழங்குவதில் அவரது சிறப்புத் தேர்ச்சி இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நீடித்து, ஆழமான தொழில்நுட்ப அறிவையும் வலுவான தலைமைத்துவ இயலளவையும் பிரதிபலிக்கின்றது. 2015 முதல் திருமதி ஹெவாவசம் கொடுகடன் மற்றும் வர்த்தக நிதிப் பயிற்சிக்கான உள்ளக வள நிபுணராகவும் பணியாற்றி, வங்கியின் திறன் அபிவிருத்தி மற்றும் பணியாளர் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

திருமதி துஷாரி ஹேவாவசம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டத்தை (இரண்டாம் வகுப்பு மேல் தர கௌரவம்) பெற்றுள்ளார், மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டிற்கான தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) (UK) மற்றும் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CGMA) (UK) சக உறுப்பினராவதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சக உறுப்பினருமாவார்.

தனது நிறைவேற்று பொறுப்புகளுக்கப்பால், இவர் தற்போது பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீப்பிள்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிடெட் மற்றும் லங்கா பைனான்சியல் சேர்வீசஸ் பீரோ லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளராகப் பணியாற்றுகிறார். தொழில்சார் தலைமைத்துவம் மற்றும் ஆளுகையில் வலுவான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டி, திருமதி ஹெவாவசம், தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் சபை உறுப்பினராகவும், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளன சபை முன்னாள் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

திரு அனுர பெரேரா

பிரதிப் பொது முகாமையாளர் – இடர்நேர்வு முகாமைத்துவம்

தற்போது வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றும் திரு அனுர பெரேரா அனுபவம் பெற்ற தொழில்சார் நிபுணராவார். அவரது தொழில்சார் வாழ்க்கை 1991 இல் தொடங்கியது மற்றும் கிளை வங்கித்தொழில், பிராந்திய நிர்வாகம், திறைசேரி தொழிற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கொடுகடன் கட்டுப்பாடு ஆகியவற்றில் பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

மேலும், திரு அனுர பெரேரா, பீப்பிள்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பிஎல்சி மற்றும் அலையன்ஸ்/பைனான்ஸ் பிஎல்சி – வங்களாதேசம் – ஆகியவற்றின் பணிப்பாளராகவும், பீப்பிள்ஸ் லீசிங் ப்ளீட் மெனேஜ்மென்ட் லிமிடெட்டின் தலைவராகவும் பணியாற்றுகிறார். இடர்நேர்வு முகாமைத்துவம், கடன் முகாமைத்துவம் மற்றும் திறைசேரிச் செயற்பாடுகள் ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தினார். இவர் அலையன்ஸ் பைனான்ஸ் பிஎல்சியின் சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் தலைவராகவும், பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சியின் சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார். மேலும் இவர் பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சியின் சபை முதலீட்டுக் குழு, சபை நிலைபெறத்தக்க குழு ஆகியவற்றின் தலைவர் பதவிகளையும், சபை தகவல் தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர் பதவியையும் வகிக்கிறார்.

திரு பெரேரா களனி பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் இளமானிப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகப் கற்கையில் முதுமானி பட்டமும் பெற்றுள்ளார். தொழில் ரீதியாக, இவர் ACI-தொழிற்பாடுகள் சான்றிதழைப் பெற்றுள்ளார், மேலும் பாரிஸ் நிதிச் சந்தைகள் சங்கத்தின் ACI இணையவழி வெளிநாட்டுச் செலாவணி உலகலாவிய குளோபல் குறியீடு சான்றிதழையும் பெற்றுள்ளார், மேலும் இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராகவும் உள்ளார்.

தலைமைத்துவ முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் கடன் முகாமைத்துவம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் இவர் பங்கேற்றுள்ளார். 2024 ஆம் ஆண்டில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட தலைமைத்துவ முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை திரு பெரேரா வெற்றிகரமாக நிறைவுசெய்தார் அத்துடன் 2025 இல் இவர் ஐரோப்பிய நிலைபெறத்தக்க அபிவிருத்தி அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஜெர்மனியின் கார்ல்ஸ்ரூவில் நடைபெற்ற வருடாந்த உலகளாவிய நிலைபெறத்தக்க நிதி மாநாட்டில் பங்கேற்றார். திரு அனுர பெரேரா, வங்கித் துறை இடர்நேர்வு நிபுணர்கள் சங்கம், இலங்கை வெளிநாட்டு செலாவணி சங்கம் மற்றும் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கம் ஆகியவற்றில் உறுப்பினருமாவார்

திரு ஏ யு ஏ அன்சார்

பிரதிப் பொது முகாமையாளர் – அறவீடுகள்

திரு அகமட் அன்சார், 1993 ஆம் ஆண்டு வங்கியில் பதவிநிலை உதவியாளராக தனது தொழில் வாழ்க்கையைத் தொடங்கினார், கிளை வங்கி, பிராந்திய முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கிளை முகாமைத்துவம், கடன் மீளாய்வு மற்றும் திரும்பப் பெறுதல் துறைகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைப் பெற்றார். கிளை முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றில் இவர் பாராட்டத்தக்க திறன்களை வெளிப்படுத்தியுள்ளார்.

திரு அன்சார், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்புடன் பௌதீக விஞ்ஞானத் துறையில் கௌரவ விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றுள்ளார், மேலும் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார். மேலும், வங்கியில் இணைவதற்கு முன்னர் களனி பல்கலைக்கழகம் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றினார். வங்கி மற்றும் நிதி தொடர்பான இறுதியாண்டு மாணவர்களுக்கு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் பங்கேற்றார். மேற்கூறியவற்றுடன் மேலதிகமாக, இவர் இந்தியா, ஜப்பான், மலேசியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மாலைத்தீவு போன்ற நாடுகளில் பல வெளிநாட்டு அனுபவ பயண நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுள்ளார். இவர், பீப்பிள்ஸ் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள்ஸ் ட்ராவல்ஸ் (பிரைவெட்) லிமிடெட்டின் பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார்.



திரு டி எம் மஞ்சுல திசாநாயக்க

பிரதிப் பொது முகாமையாளர் – மனித வளங்கள்

மக்கள் வங்கியின் மனிதவளப் பிரிவு பிரதிப் பொது முகாமையாளராக தற்போது பணியாற்றும் திரு திசாநாயக்க, வங்கிச் தொழிற்பாடுகள் துறையில் 34 ஆண்டுகளுக்கும் மேலான பரந்த அனுபவத்தையும் ஆழ்ந்த அறிவையும் கொண்டவர்.

1990 ஆம் ஆண்டு வங்கியில் சேர்ந்ததிலிருந்து இவர் கிளை வங்கி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்கள் உள்ளிட்ட பல தொழிற்பாட்டுத் துறைகளில் பணியாற்றியுள்ளார். மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பில் அவரது தொழில்வாழ்க்கை பயணமானது கிளை முகாமையாளராகத் தொடங்கி பிராந்திய முகாமையாளர் வரை, பின்னர் தலைமை அலுவலக மட்டத்தில் உதவி பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் போன்ற நிர்வாகப் பதவிகளில் உச்சத்தை அடைந்த முன்னேற்றகரமான வகிபாகங்களைக் காண்பிக்கின்றது. உதவி பொது முகாமையாளர் (மனிதவளம்) பதவி வகித்ததைத் தொடர்ந்து, மே 2024 இல் திரு திசாநாயக்க மனிதவளத் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளராகப் பொறுப்பேற்றார். அந்தக் காலகட்டத்தில் இவர் நிறுவனத்திற்குள் அனைத்துமுள்ளடக்கிய மனிதவள நிர்வாக தொழிற்பாடுகளை மேற்பார்வையிட்டார்.

நோர்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தில் மனிதவள முகாமைத்துவத்தில் முதுமானி பட்டம், பெட் போர்ட்ஷையர் பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தலில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டம், மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேவை முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி பட்டம் ஆகியன அவரது தொழில்சார் பின்னணியில் குறிப்பிடத்தக்க தகமைகளாகும் மேலும், இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினருமாவார்.

திருமதி டபிள்யூ டி ஏ பீ லியனகுணவர்தன

பிரதிப் பொது முகாமையாளர் – சில்லறை வங்கிச் சேவை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்

திருமதி அருணி லியனகுணவர்தன மக்கள் வங்கியில் சில்லறை வங்கிச் சேவை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகளுக்கான பிரதி பொது முகாமையாளராக பணியாற்றி, வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வளர்ச்சியை முன்னெடுத்தல், தயாரிப்புப் புத்தாக்கம் மற்றும் நீடித்த சில்லறை வணிக விரிவாக்கம் ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்துதலுடன் சில்லறை வங்கிச் செயற்பாடுகள் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டில் வியூகத் தலைமைத்துவத்தை வழங்கிவருகின்றார்.

2002 ஆம் ஆண்டு முகாமைத்துவ பயிலுநராக வங்கியில் இணைந்த இவர் வெளிநாட்டு பணம் அனுப்புதல், வொஸ்ட்ரோ முகவர் உறவுகள், கிளை முகாமைத்துவம்/கிளை தொழிற்பாடுகள் மற்றும் தகவல் தொழிநுட்ப நிர்வாகம் உள்ளிட்ட முக்கிய வங்கித் துறைகளில் கிட்டத்தட்ட 24 ஆண்டுகால பரந்த நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளார். சர்வதேச பணம் அனுப்புதல் வணிகம் மற்றும் பணம் அனுப்பும் அமைப்புகள் மற்றும் முக்கிய வங்கி முறை ஆகியவற்றில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான நிபுணத்துவத்துடன், வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் பிரிவுக்கு சேவை செய்வதில் இவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

திருமதி லியன குணவர்தன இந்தியாவின் ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றுள்ளார். இலங்கை களனி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான முதுமானி பட்டம், இலங்கை, மற்றும் நோர்தாம்ப்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டம் தனிச்சிறப்பு பட்டம் என்பவற்றையும் இவர் பெற்றுள்ளார். இவர் வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினருமாவார்.

இவர் பீப்பிள்ஸ் லீசிங் புராப்பர்ட்டி டெவலப்மென்ட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றுகிறார். அவருடைய தொழில்சார் பொறுப்புகளுக்கு அப்பால், பொது மன்ற உறுப்பினராக இலங்கை தொழில்சார் சங்கங்களின் அமைப்பு மற்றும் சபை உறுப்பினராக தொழில்சார் வங்கியாளர்கள் சங்கம் (APB) உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் தொழில்சார் அமைப்புகளில் பங்கேற்பதன் மூலம் திருமதி லியனகுணவர்தன வங்கி மற்றும் வங்கித் துறைக்கு முனைப்புடன் பங்களிக்கிறார்.

திருமதி சதானா பெரேரா

பிரதிப் பொது முகாமையாளர் – வங்கித் தொழில்

திருமதி சதானா பெரேரா மக்கள் வங்கியின் நிறுவன வங்கித் தொழில் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளராக பணியாற்றுவதுடன் வங்கித் தொழில் மற்றும் நிறுவன துறைகளில் பரந்த தொழில்சார் அனுபவத்தைக் கொண்ட 23 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவையினைக் கொண்டு வருகின்றார். இவர் மக்கள் வங்கியில் 2002 இல் முகாமைத்துவ பயிலுனராக இணைந்து கொண்டு சிரேஷ்ட தலைமைத்துவ வகிபாகங்கள் வரை முன்னேறி கிளைத்தொழிற்பாடுகள், சர்வதேச வர்த்தகநிதி, கரைகடந்த வங்கித் தொழில் மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர் மற்றும் அரசுடமை நிறுவனங்களுடனான உறவுகள் முகாமைத்துவம் தொடர்பான விசேட நிபுணத்துவத்தை கொண்டுள்ளார்.

அவரது தொழில் வாழ்க்கையில் திருமதி பெரேரா வங்கியின் நிறுவன மற்றும் சர்வதேச வங்கித் தொழில் சொத்துப் பட்டியலின் வளர்ச்சிக்கும் செயலாற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளார். நிறுவன வங்கித்தொழில், வர்த்தகவங்கித் தொழில், கரைகடந்த வங்கித் துறைகள் என்பவற்றிற்கிடையில் 750 இற்கும் மேற்பட்ட பெருநிறுவன வாடிக்கையாளர்களின் பல்வகை சொத்துப்பட்டியல்களை வெற்றிகரமாக முகாமைசெய்து, வலுவான தலைமைத்துவ மற்றும் உபாய ரீதியான உறவு முகாமைத்துவ இயலளவுகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

மக்கள் வங்கியில் இணைந்து கொள்வதற்கு முன்னர் திருமதி பெரேரா அவரது வர்த்தக ரீதியான நுண்நோக்குகளை வலுப்படுத்தி சிக்கலான வங்கித்தொழில் தொழிற்பாடுகளை முகாமைசெய்வதற்கு அவரது இயலுமையை மேம்படுத்திய நிறைவேற்றுத்தர பதவிகளை ஆடை, தயாரிப்பு, ஓய்வு, தகவல் தொழில்நுட்ப துறைகளில் வகித்தார்.

திருமதி பெரேரா ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து மனிதவள முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டத்தை இரண்டாம் வகுப்பு உயர் பிரிவுடன் பெற்றுக் கொண்டார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் காடிப் மெட்ரோ பொலிடன் பல்கலைக்கழகத்தில் திறமைச் சான்றிதழ்களுடன் கூடிய வியாபார நிர்வாக முதுமானியையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினரும் தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினருமாவார்.

அவரது நிறைவேற்று பொறுப்புகளுக்கு மேலதிகமாக திருமதி பெரேரா தற்போது பீப்பிள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் பணிப்பாளராக சேவையாற்றி நிதியியல் சேவைகள் துறையில் தலைமைத்துவத்திற்கும் ஆளுகைக்கும் மேலும் பங்களிக்கின்றார்.

திருமதி இந்துமினி ரத்நாயக்க

பிரதிப் பொதுமுகாமையாளர்-வங்கி உதவி சேவைகள்

திருமதி இந்துமினி ரத்நாயக்க வங்கி உதவி சேவைகள் பிரதிப் பொதுமுகாமையாளராக தற்போது பணியாற்றுகின்றார். இப்பதவிக்கு முன்னர் இவர் 2022 தொடக்கம் உதவிப் பொது முகாமையாளராக உபாய திட்டமிடல் செயற்திறன் மற்றும் ஆராய்ச்சி, தனிப்பட்ட வங்கித் தொழில் அத்துடன் கிளை முகாமைத்துவம் போன்றவற்றை மேற்பார்வை செய்தார். திருமதி ரத்நாயக்க 1990 இல் உதவிப் பொது முகாமையாளராக தொழில் வாழ்க்கையை வங்கியில் தொடங்கி 35 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தை கிளை முகாமையாளர், உதவி பிராந்திய முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் உள்ளடங்கலாக பல்வேறு முகாமைத்துவ வகிபாகங்களை ஆற்றியுள்ளார்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமானி பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் பெட்போசயர் பல்கலைக்கழகத்திலிருந்து மனிதவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானி பட்டங்களை பெற்றுள்ளார். இவர் வங்கித் தொழில் மற்றும் நிதியில் டிப்ளோமா தகைமையையும் பெற்றுள்ளார்.



நிறைவேற்று முகாமைத்துவம்

மக்களை வலுவூட்டுகின்ற, ஆற்றலும் நுண் திறன்களும் கொண்டதோர் குழுமம்



01. திரு ஜே ஏ டயஸ்
கடன் அட்டைகள் பிரிவுத் தலைவர்

02. திரு கே ஜி பி எம் காரியவசம்
தலைமை டிஜிட்டல் அதிகாரி

03. திரு ஆர். ரவிகரன்
உதவிப் பொது முகாமையாளர் – கிளை முகாமைத்துவம்

04. திருமதி என் ஏ வி முனசிங்க
உதவிப் பொது முகாமையாளர் – வர்த்தக வங்கிச்சேவை

05. திரு டப்ள்யூ என் தி பெரேரா
உதவிப் பொது முகாமையாளர் – சில்லறை வங்கி (சொத்து உற்பத்திகள்)

06. திரு வை கே ராஜபக்ஷ
கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்

07. திருமதி தி என் ரூபசிங்க
பிரதித் தலைமை சட்ட அதிகாரி

08. திருமதி எஸ் டி என் பிரேமதாச
பிரதித் தலைமை சட்ட அலுவலர்

09. திரு ஏ எஸ் கே கங்கபடகே
உதவிப் பொது முகாமையாளர் (மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வக அலுவலகம்)

10. திரு ஐ கே ஜி சி கே பி இஹலகோரள
உதவிப் பொது முகாமையாளர் – சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்

11. திரு ஐ கே இந்திக
உதவிப் பொது முகாமையாளர் – (கிளை முகாமைத்துவம்)

12. திருமதி ஏ ஜி ஜயசேன
உதவிப் பொது முகாமையாளர் – (நிதி)

13. திருமதி சி வி எபனீசர்
உதவிப் பொது முகாமையாளர் – (திறைசேரி)

14. திருமதி டப்ள்யூ டப்ள்யூ தி ஆர் பெர்னாண்டோ
உதவிப் பொது முகாமையாளர் (முதலீட்டு வங்கிச்சேவை)

15. திரு ஜி எச் யூ எஸ் குணரத்ன
உதவிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)

16. திரு டி எம் டி திசாநாயக்க
உதவிப் பொது முகாமையாளர் (புலனாய்வுகள் மற்றும் விசாரணை)

17. திரு பி ஏ பி ஆர் எஸ் பெரேரா
உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன வங்கிச்சேவை மற்றும் தொடர்பு I)

18. திரு எல் என் தேநுவர
தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி

19. திரு ஈ பி ஏ சிசிர குமார
உதவிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்)

20. திருமதி எஸ் எச் விஜேகோன்
உதவிப் பொது முகாமையாளர் (சபைச் செயலாளர்)

21. திரு எம் ஜி ஐ லக்மால்
கருத்திட்ட முகாமைத்துவ அலுவலகப் பிரதானி

22. திரு பி எஸ் ரணதுங்ககே
உதவிப் பொது முகாமையாளர் (வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்)

23. திருமதி ஜி ஏ ஏ ரணசிங்க
உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளங்கள்)

24. திருமதி ஏ எம் வீ டி எல் அதிகாரி
உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன வங்கிச்சேவை மற்றும் தொடர்பு II)

25. திரு எம் எஸ் கனக்கஹேவகே
உதவிப் பொது முகாமையாளர் (வியாபார மீட்பு மற்றும் புனரமைப்பு)

26. திருமதி எல் என் ஏ என் கே நிஸ்ஸங்க
உதவிப் பொது முகாமையாளர் (வர்த்தக் கொடுகடன்)

27. திரு என் கே விமலசிறி
உதவிப் பொது முகாமையாளர் (வலயக் கொடுகடன் பிரிவு 2)

28. திரு எஸ் எல் எம் எ எஸ் சமரதுங்க
உதவிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்)

29. திருமதி டபிள்யூ டி பி டி புத்திகா
உதவிப் பொது முகாமையாளர் (வலயக் கொடுகடன் பிரிவு 1)

30. திருமதி பீ ஜி என் பி லியனகே
உதவிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி மற்றும் நுண்பாக நிதி)

31. திரு எம் எஸ் சி பீ டி மாரசிங்க
உதவிப் பொது முகாமையாளர் (செயன்முறை முகாமைத்துவம் மற்றும் தர உத்தரவாதம்)

32. திரு பி எம் டி பீ பி பஸ்நாயக
பிரயோக முறைமைகள் பிரதானி

33. திரு ஈ ஜி எஸ் ஏ குலரத்ன
உட்கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் பிரதானி

பிரதம முகாமையாளர்கள்

திரு ஏ ஜயசித்
பிராந்திய முகாமையாளர்
திருகோணமலை பிராந்திய
தலைமை அலுவலகம்.

திருமதி வை கே அதாவுத
சிரேஷ்ட சட்ட அதிகாரி
கம்பஹா பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி பி ஆர் கே என் பெர்னாண்டோ
சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்ட திணைக்களம்

திருமதி எஸ் எம் டி குமாரி
சிரேஷ்ட சட்ட அதிகாரி
அநுராதபுரம் பிராந்திய தலைமை
அலுவலகம்

திருமதி வி பி அபேரத்ன
பிரதம முகாமையாளர்
சர்வதேச வங்கி திணைக்களம்

திரு எச் சி கே குணவர்தன
பிரதம பராமரிப்பு பொறியியளாளர்
பராமரிப்பு திணைக்களம்

திரு ஜி ஆர் எஸ் கோதாகொட
வழங்கல் மற்றும்
களஞ்சியத் திணைக்களம்

செல்வி வி ஜி கனகசபை
கொடுகடன் அறவீட்டுத் திணைக்களம்

திரு என் ஸ்ரீஸ்கந்தா
பிரதம முகாமையாளர்
மையப்படுத்தப்பட்ட நிர்வாக
அலுவலகம்

திரு ஆர் எல் ஜே பீரிஸ்
பிராந்திய முகாமையாளர்
கொழும்பு கிழக்கு பிராந்திய
தலைமை அலுவலகம்

திரு கே கோடீஸ்வரன்
பிராந்திய முகாமையாளர்
மட்டக்களப்பு பிராந்திய
தலைமை அலுவலகம்

திரு எச் எம் யூ எச் ஹேரத்
பிராந்திய முகாமையாளர்
பதுளை பிராந்திய தலைமை
அலுவலகம்

திருமதி டீ ஈ எச் வீரசூரிய

பிரதம வணிகர்
திறைசேரி திணைக்களம்

திருமதி டி எஸ் லோரன்ஸ்

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சர்வதேச வங்கி திணைக்களம்

திரு ஜே ஜயவர்தன

சிரேஷ்ட சட்ட அதிகாரி
கொழும்பு மேற்கு பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி வி கே சுபசிங்க

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்ட திணைக்களம்

திருமதி கே ஏ ஏ எஸ் பீரிஸ்

பிராந்திய முகாமையாளர்
பொலன்னறுவை பிராந்திய
தலைமை அலுவலகம்

திரு டி எஸ் பி என் ரத்நாயக்க

பிரதம முகாமையாளர் கிளை
முகாமைத்துவ திணைக்களம்

திரு ஏ எம் எம் எஸ் எம் ருவைஸ்

பிரதம முகாமையாளர்
பணியாளர் நலன் மற்றும்
பணியாளர் கடன் திணைக்களம்

திரு ஜி டி என் எல் பொத்தேவெல

பிராந்திய முகாமையாளர்
கண்டி பிராந்திய தலைமை
அலுவலகம்

திரு ஏ தனவலவிதான

பிரதம முகாமையாளர்
தனிநபர் வங்கியியல்
திணைக்களம்

திரு எஸ் எம் ஏ ஆர் சேனாநாயக்க

பிரதம முகாமையாளர்
பணியாளர் நலன் மற்றும்
பணியாளர் கடன் திணைக்களம்

திரு ஆர் எம் என் பி குணதிலக

பிரதம முகாமையாளர்
பொறியியல் சேவைகள்
திணைக்களம்

திரு எச் ஜி என் ஆரோஹன

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு மேற்கு பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி எம் எம் ஏ அமரசிறி

பிராந்திய முகாமையாளர்
மொனராகலை பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி எம் வி டி பெரேரா

பிரதம முகாமையாளர் இடர்நேர்வு
முகாமைத்துவம் மற்றும்
கொடுகடன் கட்டுப்பாட்டு

திரு சந்திர குமார்

பிரதம முகாமையாளர்
பீப்பிள்ஸ் அட்டை நிலையம்

திரு எஸ் எம் டி நந்தினி

பிரதம முகாமையாளர்
உள்ளக கணக்காய்வு
திணைக்களம்

திருமதி எம் ஜி சி கே சிறிவீர

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப
திணைக்களம்

திருமதி ஏஸ் ஏ எம் ஏ சூரியப்பெரும

பிராந்திய முகாமையாளர்
களுத்துறை தலைமை அலுவலகம்

திரு யு பி ஏ டீ ஆர் கருணாநாயக்க

பிராந்திய முகாமையாளர் கம்பஹா
பிராந்திய தலைமை அலுவலகம்

திருமதி டபிள்யூ ஏ பி எஸ் ரத்னசிறி

பிராந்திய முகாமையாளர்
இரத்தினபுரி பிராந்திய தலைமை
அலுவலகம்

திரு யு ஜி டி எஸ் பி தென்னகோன்

பிராந்திய முகாமையாளர்
அநுராதபுரம் பிராந்திய தலைமை
அலுவலகம்

திரு என் அருட்செல்வன்

பிரதம முகாமையாளர்
வெளிநாட்டு வாடிக்கையாளர்
சேவைகள் பிரிவு

திரு ஏ ஏ எஸ் செனவிரத்ன

பிரதம முகாமையாளர் உள்ளக
கணக்காய்வு திணைக்களம்

திருமதி டி எம் டி எஸ் திசாநாயக்க

பிரதம முகாமையாளர்
வர்த்தக வங்கித் தொழில் திணைக்களம்

திருமதி ஆர் எச் சமரவிக்ரம

பிரதம முகாமையாளர்
பொது முகாமையாளர்
திணைக்களம்

திருமதி டபிள்யூ எம் ஏ சஞ்சீவனி

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு வடக்கு பிராந்திய
பிரதான அலுவலகம்

திருமதி டி சி இந்துருவ

சிரேஷ்ட சட்ட அதிகாரி
கொழும்பு தெற்கு பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி ஆர் எ எஸ் திஸ்ஸாநாயக

சிரேஷ்ட சட்ட அதிகாரி
சட்ட திணைக்களம்

திருமதி எஸ் ஏ டப்ள்யூ சமரவீர

சிரேஷ்ட சட்ட அதிகாரி
இணக்க திணைக்களம்

திருமதி என் வை பெர்ணான்டோ

உதவிப் பிரதம உள்ளகக்
கணக்காய்வாளர்
உள்ளகக் கணக்காய்வு
திணைக்களம்

திரு எஸ் டி ஜயசிங்க

பிரதி நிதியியல் அதிகாரி
நிதி மற்றும் முகாமைத்துவ
கணக்கீட்டுத் திணைக்களம்

திருமதி எச் பி கே எஸ் குணவர்தன

பிரதி சபை செயலாளர்
தலைவர் அலுவலகம் மற்றும்
செயலகத் திணைக்களம்

திரு எம் எம் ஏ ரத்நாயக

பிரதம முகாமையாளர் பணியாளர் நலன் மற்றும் பணியாளர் கடன் திணைக்களம்

திரு தி சுதாகர்

பிரதம முகாமையாளர்
சர்வதேச வங்கிச் சேவைப் பிரிவு

திரு ஜே டி ஆர் ஞானதிலக

பிராந்திய முகாமையாளர்
கேகாலை பிராந்திய தலைமை அலுவலகம்

திருமதி டி டி கே ஹெட்டியாராச்சி

பிரதம முகாமையாளர்
மனிதவள திணைக்களம்

திருமதி கே ஏ எம் என் பெரேரா

பிரதம முகாமையாளர்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் திணைக்களம்

திருமதி எஸ் டி டபிள்யூ ராஜபக்ஷ

பிரதம முகாமையாளர்
இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கொடுகடன் கட்டுப்பாட்டு

திரு எம் மதியழகன்

பிராந்திய முகாமையாளர்
யாழ்ப்பாணம் பிராந்திய தலைமை அலுவலகம்

திருமதி எச் அபயவிக்ரம

பிராந்திய முகாமையாளர்
கொழும்பு தெற்கு பிராந்திய தலைமை அலுவலகம்

திருமதி கே சீ எஸ் பெரேரா

பிரதம முகாமையாளர் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தித் திணைக்களம்

திருமதி டபிள்யூ எம் டி கங்கா

பிரதம முகாமையாளர்
வியாபார புணரமைப்பு அலகு

திருமதி எம் ஏ என் என் பிரீதிகுமாரி

பிரதம முகாமையாளர்
உள்ளக கணக்காய்வுத் திணைக்களம்

திரு டபிள்யூ ஜீ ஐ பி சீ கொஸ்கொல்லவத்த

பிரதம முகாமையாளர்
திறைசேரி திணைக்களம்

திரு ஏ டி ஆர் பிரியந்த

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப திணைக்களம்

திரு ஈ ஏ வி வர்ணகுல

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப திணைக்களம்

திருமதி எஸ் ஈ விக்ரமரத்ன

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப திணைக்களம்

திரு கே எஸ் ஜே கொடிப்பிலி

பிரதம முகாமையாளர்
தகவல் தொழிநுட்ப திணைக்களம்

திரு எஸ் காரியவசம்

பிரதம முகாமையாளர்
தகவல் தொழில்நுட்ப
திணைக்களம்

திருமதி டபிள்யூ ஜி பீ தமயந்தி

பிராந்திய முகாமையாளர்
அம்பாந்தோட்டை பிராந்திய
தலைமை அலுவலகம்

திருமதி பி என் கஹங்கமகே

பிரதம முகாமையாளர்
இடரநேர்வு மகாமைத்துவம் மற்றும்
கடன் கட்டுப்பாட்டு திணைக்களம்

திரு கே எம் பி பி குலதுங்க

பிராந்திய முகாமையாளர்
அம்பாறை பிராந்திய தலைமை
அலுவலகம்

திருமதி கே டி ஜயதிஸ்ஸ

பிரதம முகாமையாளர்
கிளை முகாமைத்துவ
திணைக்களம்

திருமதி ஜே ஏ டி டி ஏ உடுவாவல

பிராந்திய முகாமையாளர்
மாத்தளை பிராந்திய
தலைமை அலுவலகம்

திரு கே ஏ எஸ் ஐ குமாரபேலி

பிராந்திய முகாமையாளர்
காலி பிராந்திய தலைமை
அலுவலகம்

திரு டி எஸ் பி ஜயசிங்க

பிராந்திய முகாமையாளர்
நுவரெலியா பிராந்திய தலைமை
அலுவலகம்

திரு ஏ எல் சி பி அபேசிங்க

பிராந்திய முகாமையாளர்
மாத்தறை பிராந்திய தலைமை
அலுவலகம்

திருமதி எஸ் டபிள்யூ தேவநாராயணா

பிரதம முகாமையாளர்
டிஜிட்டல்மயமாக்கல்
திணைக்களம்

திருமதி ஆர் பி எஸ் தங்கல்ல

பிரதம முகாமையாளர்
அபிவிருத்தி மற்றும் நுண்
நிதி திணைக்களம்

திருமதி டபிள்யூ டி எஸ் ஜயந்திகா

பிராந்திய முகாமையாளர்
குருநாகல் பிராந்திய தலைமை
அலுவலகம்

ஆர் டி எச் என் விஜேமான்ன

பிரதம முகாமையாளர் விசாரணை
மற்றும் புலனாய்வு திணைக்களம்

திரு கே பி விதான

பிரதம முகாமையாளர்
உள்ளகக் கணக்காய்வு
திணைக்களம்

திருமதி எச் எம் கருணா ஹேரத்

பிராந்திய முகாமையாளர்
புத்தளம் பிராந்திய தலைமை
அலுவலகம்

செல்வி டபிள்யூ ஏ கே சி பி ஜயவர்தன

பிரதம முகாமையாளர் இடர்
முகாமைத்துவம் மற்றும் கடன்
கட்டுப்பாட்டு திணைக்களம்

திருமதி கே பீஷ்மன்

பிராந்திய முகாமையாளர்
வன்னி பிராந்திய தலைமை அலுவலகம்

திரு ஜி கே ஆர் ஆர் பெரேரா

பிரதம முகாமையாளர்
தனிநபர் வங்கிச் சேவைத் திணைக்களம்

திரு எஸ் எம் ஏ பி கே சமரகோன்

பிரதம முகாமையாளர் நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டுத் திணைக்களம்

திருமதி எஸ் கே உடகேயாரச்சி

பிரதம முகாமையாளர்
வர்த்தகக் கொடுகடன் திணைக்களம்

திருமதி எல் ஏ எஸ் சஜீவனி

பிரதம முகாமையாளர்
சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் திணைக்களம்

திருமதி வை வி ஏ டி மிஹிரானி

பிரதம முகாமையாளர்
கரை கடந்த வங்கிப் பிரிவு

திரு டபிள்யூ டி டபிள்யூ ஜி இஹலகே

பிரதம பாதுகாப்பு கண்காணிப்பாளர் பாதுகாப்புத் திணைக்களம்

திரு சி டி கருணாரத்ன

சந்தைப்படுத்தல் பிரதித் தலைவர்
சந்தைப்படுத்தல் திணைக்களம்

திரு டி சமரநாயக்க

பிரதம முகாமையாளர்
தகவல் பாதுகாப்பு திணைக்களம்

திரு ஜே எஸ் டபிள்யூ அதுகோரல

பிரதம முகாமையாளர் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டுத் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம்

PEOPLE'S BANK
Pride of the Nation
Bank Smarter
Digital tools for life on the go
Welcome to the

EXIT

தந்திரோபாயம் மற்றும் மதிப்பு உருவாக்கம்

66
எமது செயற்பாட்டுச் சூழல்

74
பங்குதாரர் ஈடுபாடு

80
முக்கிய காரணிகள்

86
தந்திரோபாயம்

92
எமது மதிப்பு உருவாக்க மாதிரி

94
எமது சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மீதான முக்கிய கவனம்

96
ஐ.நா நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுக்கான (UN SDGs) எமது கடப்பாடு

எமது செயற்பாட்டுச் சூழல்

உலகளாவிய பொருளாதாரம்

மிகவும் பலவீனமான மீண்டெழுந்தன்மையுடன் சமாளித்தவாறு, 2024 ஆம் ஆண்டு நிலவிய 3.3% எனும் அதே வளர்ச்சியினைப் பிரதிபலித்தவாறு, 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதாரம் தொடர்ந்தும் 3.3% ஆகவே இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சி விகிதமானது பெருந்தொற்றுக்கு முன்னரான சராசரிகளை விடக் கீழே காணப்படும் அதேவேளை, விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகளாலும் அதிகரித்துள்ள சக்தி மட்டங்களினாலும் வர்த்தக யுத்தங்களாலும் உந்தப்பட்டுத் தொடர்ந்து நிலவிவரும் பணவீக்கமானது உலகம் முழுவதுமுள்ள வங்கிகள் கடும் போக்குமிக்க நாணயக் கொள்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு நிர்ப்பந்தித்து மூலதனப் பாய்ச்சல்களிலும் கடனுக்கான வட்டியிலும் கடன் பெறுதலுடன் தொடர்புற்றுள்ள இதர செலவுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. சாதகமான நிலை என்றாலும் திடமற்ற நிலையுடன், விருத்தியடைந்த பொருளாதாரங்கள் மந்த கதியினை அடைந்துள்ள அதேவேளை வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்கள் கலப்புச் செயலாற்றுகையினைக் காட்டி, நாணயப் பெறுமதித்தேய்விற்கும் உயர் இறக்குமதிச் செலவுக்கும் புற அதிர்ச்சிகளால் பாதிப்படையக்கூடிய நிலைக்கும் முகங்கொடுத்து வருகின்றன. பூகோள அரசியல் பதற்றங்கள் மற்றும் பூகோளப் பொருளாதாரப் பாதுகாப்புவாதம் என்பன பூகோளப் பொருளதாரப் பிளவுகளுக்கு வழிகோலி, போட்டியிடும் பிரிவுகளை உருவாக்கி, தூய பொருளாதார வினைத்திறனினைத் தடுக்கின்றன.

2025 ஆம் ஆண்டுக்கெனக் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள அபாயநேர்வுகளில் முதனிலையில் பின்வரும் அபாயநேர்வுகள் காணப்படுகின்றன: உயர் உலகளாவிய வரி விதிப்புக்கள் மற்றும் வர்த்தகப் பிளவுகள், அதிகரித்த பூகோளஅரசியல் பதற்றங்கள், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் உயர் கடன் மட்டங்கள், வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களினுள் பலவீனமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள், வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களில் நாணயம் மற்றும் பண்டப் பாதிப்புறுநிலைகள், மற்றும் பூகோளப் பொருளாதாரத்திற்குச் சவாலாக இருத்தல். எவ்வாறாயினும், ஐரோப்பாவினையும் அமெரிக்காவினையும் விஞ்சிச் சென்று துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரமாக இந்தியா தனித்து விளங்கியுள்ளது.

தெற்காசியா 2025 ஆம் ஆண்டில் 6.6% எனும் வளர்ச்சி வீதத்தினை அடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்தியாவில் எதிர்பார்த்ததை விட உயர்வான அரச முதலீடு மற்றும் இலங்கையில் பரந்த அளவிலான மீளல் என்பவற்றுக்கு மத்தியில் இது 2026 ஆம் ஆண்டில் 5.8% ஆக மந்தமடையும் என எதிர்வுகூறப்படுகின்றது. இவ்வாறான மந்தகதியினைத் தாண்டி, தெற்காசிய நாடுகள் பேரினப் பொருளாதாரச் சமனிலையிண்மைகளைத் தீர்ப்பதை நோக்கி முன்னேறிச் செல்வதால், குறிப்பாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளைத் தீர்ப்பதை நோக்கி முன்னேறிச் செல்வதால், ஏனைய வளர்ச்சியடைந்து வரும் சந்தைகள் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களை (EMDEs) விட வளர்ச்சியானது மிகவும் உறுதிநிலையில் தொடர்ந்திருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய வங்கிகள் நாணயக் கொள்கையினை அவதானமாக இலகுபடுத்தியிருக்கும் அதேவேளை பணவீக்கமானது பிராந்தியத்தில் திடப்பட்டுள்ளது அல்லது குறைவடையும் போக்கினைக் கொண்டுள்ளது.

சீனா 5% வளர்ச்சியினை அடைவதற்கு ஏற்றுமதி கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு மிதமான வளர்ச்சியாகும். அரசிறை உதவியும் சொத்துச் சந்தையும் கடந்த 3 வருடங்களாக வீழ்ச்சிப் போக்கில் இருந்தன.

தெற்காசிய நாடுகளில் வளர்ச்சி %



மூலம்: *உலக வங்கி பேரின வறுமைத் தோற்றப்பாடு, உலக வங்கி.*

குறிப்பு: *இந்தியாவுக்கானது, "2025", "2026", மற்றும் "2027" குறிப்பீடு செய்க FY25/26, FY26/27, மற்றும் FY27/28. அரசிறையினை விடப் பஞ்சாங்க வருடத்தினைப் பயன்படுத்தும் ஏனைய நாடுகளுக்கு, "2025", "2026" மற்றும் "2027" பிரதிபலிப்பது FY24/25, FY25/26 மற்றும் FY26/27.*

இலங்கைப் பொருளாதாரம்

நெருக்கடிக்குப் பின்னரான திடப்படுத்தல், கட்டமைப்பு ரீதியான சீராக்கல்கள், வலுவான வரிக் கட்டமைப்பு, நெறிப்படுத்தப்பட்ட அரசாங்கச் செலவினம் மற்றும் படிப்படியான மீளல் என்பன 2024 ஆம் ஆண்டில் 5% பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்சென்று ஒரு வலுவான ஆரம்பத்திற்கான உந்துசக்தியாக அமைந்தன. எதிர்கால அரசிறை மற்றும் கடன் நிலைபெறுதன்மை என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்கான கொள்கை நெறிப்படுத்தல் உள்ளடங்கலாக சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் உயர் சிக்கற்தன்மையுடைய, பல் கட்டங்களைக் கொண்ட, பல் கடன்வழங்குனர் அரசாங்கக் கடன் மீள்கட்டமைப்புச் செயன்முறை இடம்பெறுகையில் சர்வதேச உதவியின் கீழான மறுசீராக்கல்கள் தொடர்கின்றன. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் மிக முக்கியமான வருடாந்த இலங்கை பொருளாதார மாநாடு 2025, தேசிய நிகழ்ச்சிநிரலினை, கடன் நெருக்கடியின் பின்னரான மீளல் எனவும் உறுதிநிலையினை மீளக் கட்டியெழுப்பல் எனவும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை வலுப்படுத்தல் எனவும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கடன் மீள்கட்டமைப்பாக்கத்தின் முக்கியத்துவத்தினைக் காட்சிப்படுத்தல் எனவும் சட்டகமிட்டுள்ளது. பரபரப்பான பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில், புற அதிர்ச்சிகளால் பாதிப்படையக்கூடிய நலிவுற்றுள்ள பொருளாதாரத்தின் மத்தியிலான எச்சரிக்கைமிக்க நம்பிக்கை இருந்தாலும் முன்னேற்றமடைந்துள்ள பேரினப் பொருளதாரச் சூழல் நிலவுகின்றமையும் டிஜிட்டல் நிலைமாற்றத்தில் வாய்ப்புக்கள் உருவாகிவருகின்றமையும் மன மகிழ்வினை அளிக்கின்றன.

மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் %



மூலம்: இலங்கை மத்திய வங்கி

இலங்கை மத்திய வங்கி (CBSL) நாணயக் கொள்கைச் சட்டம் 2025

நெகிழ்வுத்தன்மைமிக்க பணவீக்கத்தினை இலக்காகக் கொண்ட (FIT) நாணயக் கொள்கைச் சட்டகத்தில் நிலைகொண்டு, பணவீக்கக் குறிக்கோள்களுடன் இயைபுறுபவதற்கான குறுகிய கால வட்டி வீதங்களை வழிநடத்துவதுடனும் நிதி முறைமைகளை வலுப்படுத்துவதுடனும் இணைந்து, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து அதனைப் பேணுவதே இலங்கை மத்திய வங்கியின் பிரதான ஆணையாகும். மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் இரட்டை அடுக்கு வட்டி வீத முறைமையும் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய காலக் கடனுக்கான வட்டி வீதங்களும் மத்திய வங்கியின் பிரதான வட்டி வீதத்தினால் பதிலீடு செய்யப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கி ஒரு முதன்மையான வட்டி வீதத்திற்கு நிலைமாறியது. இதுவே உள்நாட்டு விலை உறுதிப்பாடு மற்றும் நிதி முறைமை உறுதிப்பாடு எனும் நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கான இலங்கை மத்திய வங்கியின் 2025 ஆம் ஆண்டின் பிரதான கொள்கைப் பொறிமுறையாகும்.

இலங்கை மத்திய வங்கியின் 2025 ஆம் ஆண்டிற்கான கொள்கை நிலைப்பாடானது, இலக்குவைக்கப்பட்ட நிலைக்குப் பணவீக்கத்தினைக் கொண்டுசெல்லும் அதேவேளை பொருளாதார மீளலுக்கு ஆதரவளிக்கும் வகையில் மிகக் கவனமாக வட்டி வீதத்தினைக் குறைவாகப் பேணிப் பண விநியோகத்தினை அணுகக்கூடியதாக ஆக்குவதைப் பிரதிபலித்தது. பணவீக்க வீதத்தினை விட வட்டி வீதம் உயர்வாக இருக்கும் நிலையினைப் பேணி, புற நிதிப் பாதுகாப்பு வலையினை மீள உருவாக்குவதில் கவனம் குவிக்கும் அதேவேளை உருவாகி வரும் உள்நாட்டு அபாயநேர்வுகளும் உலகளாவிய அபாயநேர்வுகளுமே கொள்கைச் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதான தெரிவடிப்படையாகும்.

வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள்

வங்கி வாடிக்கையாளரின் வைப்புக்குச் சாதாரணமாக வழங்கும் வட்டி வீதமானது (AWDR) 2025 ஆம் ஆண்டின் முடிவின் போது 6.79% ஆக வீழ்ச்சியடைந்த அதேவேளை, வாடிக்கையாளர்களுக்குச் சாதாரணமாக வழங்கும் புதிய வட்டி வீதம் (AWNDR) 5.94% ஆகக் காணப்பட்டது. புதிய கடன்களுக்கான வட்டி வீதங்கள் 10.46% ஆகக் குறைவடைந்ததுடன் இது சந்தையில் கடன்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளைச் சௌகரியமாக மீளச் செலுத்தக்கூடியதாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வழங்கும் தனியார் துறைக் கடன்கள் 15.2% இனால் வளர்ச்சியடைந்து 87 பில்லியனாகக் காணப்பட்டது. இதேவேளை, 2025 ஏப்ரல் மாதமளவில் கால வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் 147 பில்லியனை அடைந்தன.

1. சர்வதேச நாணய நிதியம் உலக பொருளாதாரத் தோற்றப்பாடு இற்றைப்படுத்தல், ஜனவரி, 2026

2. சர்வதேச பொருளாதாரத் தோற்றப்பாடு டெலாய்ட் நுழைபுலங்கள் - www.deloitte.com

3. சர்வதேச பொருளாதாரக் கண்ணோட்டங்கள் உலக வங்கிக் குழுமம்/உலக பொருளாதாரத் தோற்றப்பாடு இற்றைப்படுத்தல் ஜுலை 2025

4. சந்தைச் செயற்பாட்டு அறிக்கை ஜூன் 2025 – CBSL

5. Power Point Presentation

வைப்பு வீதங்கள்

AWDR மற்றும் AWFDR %



சராசரி நிறையிடப்பட்ட வைப்பு வீதம் (AWDR)

சராசரி நிறையிடப்பட்ட நிலையான வைப்பு வீதம் (AWFDR)

கடன் வீதங்கள்

வாராந்தச் சராசரி நிறையிடப்பட்ட முதன்மை வட்டி வீதம் %



AWNDR மற்றும் AWNFDR %



சராசரி நிறையிடப்பட்ட வைப்பு வீதம் (AWNDR)

சராசரி நிறையிடப்பட்ட நிலையான வைப்பு வீதம் (AWNFDR)

AWLR மற்றும் AWNLR %



சராசரி நிறையிடப்பட்ட முதன்மை வட்டி வீதம் (AWLR)

சராசரி நிறையிடப்பட்ட வட்டி வீதம் (AWNLR)

மூலம்: இலங்கை மத்திய வங்கி நாணயம், கடன் மற்றும் வட்டி வீத மாற்றங்கள் மே 2025

கடன்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளைச் சௌகரியமாக மீளச் செலுத்தக்கூடியதாக இருப்பது அதிகரித்த உழைக்கும் மூலதனத்தினை அதிகரித்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், பெருநிறுவனங்கள், ஏற்றுமதித் துறை மற்றும் நுகர்வோர் செலவினம் ஆகியவற்றில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. நிர்மாணத் துறை மீட்டுருவாக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுலாத் துறை வருகைகளில் கணிசமான வளர்ச்சியினைக் கண்டுள்ளது. எவ்வாறாயினும், சுற்றுலாத் துறையில் இருந்து கிடைக்கும் வருவாயின் வளர்ச்சி சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் செலவிடல் என்பவற்றில் பின்தங்கியே காணப்பட்டது. குறைவான வைப்பு விகிதங்களைத் தாண்டி, கால வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 147 பில்லியன்களால் வளர்ச்சியடைந்து வங்கித் துறையின் திரவத்தன்மையினை முன்னேற்றி வங்கிச் சேவை முறைமையில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையினைப் பிரதிபலித்தது.

பணவீக்கப் போக்கு

2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2025 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் பணப்புழக்கத் தளர்வு எனும் ஓர் அரிதான நிலை ஏற்பட்டதுடன் 2025 பெப்ரவரியில் எரிசக்தி விலைகளில் ஏற்பட்ட சடுதியான குறைவினாலும் நாணயப் பெறுமதி அதிகரிப்பினாலும் எரிசக்தி விலைகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக வெட்டுக்களினாலும் குறைவடைந்த கேள்வியினாலும் இது உந்தப்பட்டு -4.2% எனும் மிகக் குறைவான அளவில் காணப்பட்டது. காலப் போக்கில் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் குறைவடைந்த அதேவேளை உணவு சாராப் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. 2025 ஆம் ஆண்டு முழுவதும் நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளக்கப்படும் மொத்தப் பணவீக்கமும் உணவுப் பொருட்கள் மற்றும் சக்தி என்பவை நீங்கலான ஏனையவற்றின் விலை அதிகரிப்பினைக் குறிக்கும் பணவீக்கமும் இலங்கை மத்திய வங்கியின் 5% எனும் இலக்கினை விடத் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன. இலங்கை மத்திய வங்கி முன்பிருந்தே கைக்கொண்ட இறுக்கமான நாணயக் கொள்கை, உலகளாவிய பணவீக்க வீழ்ச்சி மற்றும் குறைவடைந்த பண்டங்களின் விலைகள் மற்றும் சார்பளவில் உறுதியான ரூபா என்பன 2025 ஆம் ஆண்டு முழுவதும் நன்கு பேணப்பட்ட மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட்ட பணவீக்கத்திற்குப் பங்களிப்பு வழங்கின. எவ்வாறாயினும், தாழ்வான பணவீக்கமானது கொள்கை நடவடிக்கைகளினால் மாத்திரம் ஏற்பட்டது என்பதை விட அது ஓரளவுக்கு பலவீனமான உள்நாட்டுக் கேள்வி மற்றும் மந்தமான பொருளாதார மீளல் என்பவற்றினாலும் ஏற்பட்டது.

இலங்கையின் பணவீக்கம் 2026 ஆம் ஆண்டில் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. இவ்வாறு அதிகரிக்கும் பணவீக்கம், இலங்கை மத்திய வங்கியின் இலக்கான 5% இனை நோக்கி வருடத்தின் இரண்டாம் அரைப் பகுதியின் போது நகரும் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. இருந்தாலும், இந்த நகர்வின் வேகமானது உலகளாவிய பண்ட விலைகளின் நகர்வுகள் (எரிச்சக்தி செலவுகள் போன்றவை), புற நிலைமைகள் மற்றும் உள்நாட்டுக் கேள்வியின் வலிமை என்பவற்றில் தங்கியிருக்கும்.

பணவீக்க விகிதம் (முன்னைய வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் CCPI இல் மாற்றம்) %



மூலம்: இலங்கை மத்திய வங்கி

பணப்பரிவர்த்தனை சமநிலை (BOB)

2025 ஆம் ஆண்டில் பொருளாதாரம் நெருக்கடிக்குப் பின்னரான மீளலைத் தொடர்ந்த காரணத்தினால் இலங்கையின் பணப்பரிவர்த்தனை சமநிலை (BOB) ஸ்தானம் வெளித் துறை உறுதிப்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. வருடம் முழுவதும், நடைமுறைக் கணக்கு, தொழிலாளர்களின் கணிசமான பண அனுப்பல்களாலும் அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையினாலும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட பௌதிகப் பொருட்களின் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையினை ஈடு செய்வதற்கு உதவிய தேறிய சேவை உட்பாய்ச்சல்கள் என்பவற்றால் உந்தப்பட்டு தொடர்ச்சியாக மிகையினைப் பதிவுசெய்திருந்தது. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு நடைமுறைக் கணக்கு 399.6 மில்லியன் அமெரிக்க டொலர் மிகையினைக் கொண்டிருந்தது.

இணைந்த நிலுவைகள் 2025 ஆம் ஆண்டின் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதிகளில் அதிகமானவற்றில் தொடர்ந்தும் சாதகமானவையாக இருந்தன என்பதை நடைமுறைக் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்குகள் பற்றிய காலாண்டுத் தரவுகள் காட்டுகின்றன. வரலாற்று ரீதியான நியமங்களுடன் ஒப்பிடுகையில் இது, நீடித்த புற உட்பாய்ச்சல்களையும் ஆரோக்கியமான வெளித் துறையினையும் சுட்டிக்காட்டுகின்றது. முழு வருடத்திற்குமான பரிபூரணமான வருடாந்த அயல்நாட்டுச் செலுத்து நிலையின் மொத்தம் பொதுவாக ஒரு பின்னடைவுடன் வெளியிடப்பட்டாலும், இந்தக் காலாண்டு முடிவுகள் 2025 ஆம் ஆண்டிற்கான மிகைப் பரப்பில் ஒட்டுமொத்தத் தேறிய மீதியினைக் குறிக்கின்றன.

புற உறுதிப்பாட்டுக்கான ஒரு பிரதான குறிகாட்டியான மொத்த உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணய ஒதுக்கங்கள் வருட முடிவின் போது அதிகரித்து 2025 டிசம்பரின் போது 6.8 பில்லியனை எட்டின. இது இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட உயர் மட்டமாகும் என்பதுடன் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கங்களையும் இது வலுப்படுத்துகின்றது. இந்த ஒதுக்கத்திற்கு, தற்போது இடம்பெறும் பேரினப் பொருளாதார உதவிச் சட்டத்தின் கீழ் இலக்குவைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயச் சந்தைத் தலையீடுகள் மற்றும் புற நிதியிடல்கள் என்பன ஆதாரமளித்தன.

மொத்தத்தில், பௌதிகப் பொருட்களின் வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை மற்றும் புறக் கடப்பாடுகள் தொடர்ந்தும் காணப்பட்டமை போன்ற சவால்களின் மத்தியிலும் 2025 ஆம் ஆண்டின் முடிவின் போது இலங்கையின் பணப்பரிவர்த்தனை சமநிலை (BOB) ஸ்தானமானது அதிகரித்த புற மீண்டெழுந்தன்மையினை நோக்கியும் வலுவான அதிகப்படியான இருப்பினை நோக்கியும் நடைமுறைக் கணக்கு மிகைகளை நோக்கிய நீடித்த பிரள்வினை நோக்கியும் காணப்பட்டது.

வங்கித் துறை

வங்கிகள் அதிகப்படியான இருப்புக்களை உருவாக்குகையில், வங்கியியலின் உறுதிப்பாட்டுச் சுட்டி 2025 ஆம் ஆண்டில் மேல்நோக்கி நகர்ந்து மேம்பட்ட மீண்டெழுந்தன்மை மற்றும் கடன் வளர்ச்சி ஆகியவற்றினைக் கோடிட்டுக்காட்டியது.

மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது உறுதிப்பாடும் படிப்படியான மீளலுமே இலங்கையின் வங்கியியல் துறையின் சூழலைக் குறித்து நின்றன. இயங்குதிறன்மிக்க பேரினப் பொருளாதாரச் சூழலிலும் ஒழுங்குறுத்தல் சூழலிலும் இயங்கும் வங்கியியல் துறை. இலங்கை மத்திய வங்கியின் கொள்கை நிலைப்பாடான நிதி உறுதிப்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்பவற்றுக்கு இயைபுற்றது. வெளித் துறை மீண்டெழுந்தன்மைக்குப் பங்களிப்பு வழங்குவதுடன் இணைந்து இந்தத் தேசிய நிகழ்ச்சிநிரலுக்கு ஆதரவு வழங்கி, குறைக்கப்பட்ட வைப்பு வீதங்களில் இருந்து நன்மை பெற்றுவந்த வங்கி, எவ்வாறாயினும், பொருட்படுத்தத்தக்க அபாயநேர்வுகளாக காலங்கடந்த சொத்துக்கள் மற்றும் புற அதிர்ச்சிகள் ஆகியவற்றினால் தொடர்ந்தும் பாதிப்புறக்கூடியதாகவே இருந்தது.

6. இலங்கை மத்திய வங்கி உறுதிப்பாட்டு மீளாய்வு 2025 தொகுப்பு

கடன் வளர்ச்சி பொருளதார மீளலுக்கான சமிக்ஞையினை வழங்கிய காரணத்தினால், பெருநிறுவனங்களின் மத்தியிலும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் மத்தியிலும் கைத்தொழிற்துறைகளின் மத்தியிலும் வியாபாரம் துரிதமடைந்ததால் வங்கியியல் சேவை மீதான கேள்வி அதிகரித்தது. உள்நாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு எளிதில் பணமாக்கக்கூடிய சொத்துக்களைக் கொண்டிருந்த வங்கிகள், புறக் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு அந்நியச் செலாவணித் திரவத்தன்மையினால் பாதிக்கப்பட்டன. பெற்ற கடன்களின் அசலையோ அல்லது வட்டியையோ (செயலூக்கமற்ற கடன்கள்) வங்கிக்கு மீளச் செலுத்தாத கடன்களின் விகிதாசாரம் தொடர்ந்தும் ஒரு சவாலாகக் காணப்பட்டது. இருப்பினும், சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து இது முன்னேற்றமடைந்திருந்தது.

திரவத்தன்மை மட்டங்கள் ஒழுங்குறுத்துகைக்கான ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை விட அனேகமாக உயர்வாகக் காணப்பட்டதுடன் இது தொடர்ச்சியான பொருளாதார நடவடிக்கைக்கான கடன் வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தது. தேறிய வட்டி வருமானம் அதிகரித்த காரணத்தினால் 2025 ஆம் ஆண்டின் முதற் காலாண்டின் போது இலபாமீட்டும்தன்மை முன்னேற்றமடைந்திருந்தது.

கடன் வளர்ச்சியினை மீட்டெடுத்தல், உறுதியான இலாபமீட்டும்தன்மை மற்றும் படிப்படியாக அதிக இருப்புக்களை உருவாக்கல் ஆகியன இலங்கை மத்திய வங்கியின் வங்கியியல் உறுதிப்பாட்டுச் சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு வங்கியியல் துறையில் மேம்பட்ட முழுமையான மீண்டெழுந்தன்மையினைச் சுட்டிக்காட்டுகின்றன. எவ்வாறாயினும், சொத்துத் தரம் என்பது கரிசணைக்குரிய ஒரு விடயமாக இருந்த அதேவேளை, அந்நியச் செலாவணி நிதியிடல் பாதிப்புறுநிலைகள் 2025 ஆம் ஆண்டு முழுவதும் நிலைத்திருந்தன. இருப்பினும், கடன் மீள்கட்டமைப்புச் செய்த காரணத்தினால் வசூலிக்கவே முடியாத கடன்கள் ஒரு கீழ்நோக்கிய போக்கினைச் சுட்டிக்காட்டின,

அரசியல் மற்றும் ஆளுகைச் சூழல்

இலங்கையின் நெருக்கடிக்குப் பின்னரான அரசியல் சூழலானது 2022 ஆம் ஆண்டு வீழ்ச்சியின் பின்னரும் நாடு செலுத்த வேண்டிய கடன்களை உரிய காலத்தில் செலுத்தத் தவறியதன் பின்னரும் உறுதியான அரச வகைப்பொறுப்பு, தூய்மையான அரசாங்கம் மற்றும் நம்பத்தகுந்த பொருளாதார முகாமைத்துவம் என்பவற்றினால் மீள் கட்டமைக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்கள் இந்த மீள்சீராக்கலைத் துரிதப்படுத்தி, ஊழல் எதிர்ப்பு, வெளிப்படைத்தன்மை, மற்றும் மறுசீராக்கலை மையப்படுத்திய நிர்வாகம் என்பவற்றுக்கான ஒரு புதிய ஆட்சி ஆணையினை உருவாக்கி அதன் மூலம் விரைவான, மிகவும் ஒத்திசைவான கொள்கை விநியோகம் மற்றும் முன்னேற்றமடைந்த அரச செயலாற்றுகை என்பவற்றுக்கான எதிர்பார்ப்புக்களை எழுப்பியது. இதற்குச் சமாந்தரமாக, நாட்டின் மீளல் நிகழ்ச்சிநிரல் சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சிநிரலுடன் இணைந்த அரசிறை மற்றும் ஆளுகை மறுசீராக்கல்களுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இதில் இறுக்கமான அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியாண்மைகள் ஆகியவற்றினை இறுக்கமாக மேற்பார்வை செய்தல் என்பன இதில் உள்ளடங்குவதுடன் பொதுமக்களின் அழுத்தங்களுக்கான பதிற்செயற்பாடாக அரசியல் முன்னுரிமைகளைக் குறைப்பதற்கான புலப்படத்தக்க நகர்வுகளும் சேர்கின்றன. இவற்றுடன் சேர்ந்து, இந்த இயங்கியல்கள் ஒழுங்குறுத்தல்களை நவீனமயப்படுத்துவதற்கான அமுலாக்கலை இறுக்கமாக்குவதற்கான, நம்பிக்கையை மீள நிலைநாட்டி, உறுதிப்பாட்டினை நிலைப்படுத்தி, சட்டத்தின் ஆட்சியைப் பற்றிப்பிடிப்பதற்காக வெளிப்படைத்தன்மைமிக்க விதிகளை உருவாக்க அவற்றினை அமுலாக்குவதற்கான தேவையினை வலுப்படுத்துகின்றது.

காலநிலை மாற்றத் தாக்கம்

டிட்வா சூறாவளி ஏற்கனவே பலவீனமாக இருந்த இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி அனைத்து மாகாணங்களிலும் இதனால் ஏற்பட்ட சேதங்கள் 320 பில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பரவலான வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள், மற்றும் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரங்களின் பரிதாபகரமான இழப்புக்கள் பாரதூரமான சமூக அழுத்தங்களையும் பொருளாதார அழுத்தங்களையும் உருவாக்கியுள்ளன. இதற்கு பதிலாக, சேதங்களைக் கட்டுப்படுத்தி, நிவாரண நடவடிக்கைகளை அமுலாக்கி மீளல் மற்றும் மீள்நிர்மாண முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் உடனடியான நடவடிக்கைகளை எடுத்தது. குறுகிய காலத்தில், திட்டமிடப்பட்ட மூலதனம் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களைத் தாமதப்படுத்தி அரசிறை முன்னுரிமைகள் அவசரகால பதிற்செயற்பாடு மற்றும் புனர்நிர்மாணம் என்பவற்றினை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பரந்த அளவிலான பொருளாதார விளைவுகளை இந்த அனர்த்தம் ஏற்படுத்தும் சாத்தியமுள்ளது. விவசாயமும் உணவுப் பாதுகாப்பும் குழப்பப்பட்டுள்ள அதேவேளை வளர்ச்சியடைந்து வந்த சுற்றுலாத் துறையும் கடற்றொழிலும் கடலோர வாழ்வாதாரங்களும் கணிசமான பின்னடைவுகளுக்கு முகங்கொடுக்கின்றன. முக்கியமான புகையிரத உட்கட்டமைப்புக்களுக்கும் வீதி உட்கட்டமைப்புக்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் இந்தச் சவால்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. இதன் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ள மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வருமான இழப்புக்களும் கடன்பெறுவோர் முகங்கொடுக்கும் அழுத்தங்களும் செயற்படாக் கடன்களை அதிகரிக்கலாம் என்பதுடன் இது கடன்களை மீளச்செலுத்துதல் மீது மேலதிக அழுத்தங்களை ஏற்படுத்தி வங்கியியல் முறைமையின் மீண்டெழுந்தன்மையினைச் சோதனைக்கு உட்படுத்தலாம். இதனால், கவனமான அரசிறை மற்றும் நிதித் துறை முகாமைத்துவம் என்பன வருகின்ற மாதங்களில் அத்தியாவசியமானதாக இருக்கும்.

பகுப்பாய்வுக் காரணிகள் (Pestel)	பிரதான போக்குகள்	அபாயநேர்வுகள்	வங்கியியல் துறைக்கான வாய்ப்புக்கள்	மக்கள் வங்கிக்கான விளைவுகள்
அரசியல் சூழல்	உறுதிப்பாடு, மறுசீராக்கல் வேகம், மற்றும் உருவாகிவரும் அரசாங்கக் கட்டமைப்புக்கள் வெற்றிகரமான அரசிறை கடன் மீள் கட்டமைப்பாக்கத்தினை அடைவதற்குஒன்றுசேர்ந்தன. அரசிறைத் திடப்படுத்தல், தீவிரமான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், மற்றும் சர்வதேசப் பொருத்தணைகளுக்கு இயைபுறல் என்பன சர்வதேச சமுதாயத்தின் நம்பிக்கையினை அதிகரித்தது. இது, காலநிலை நடவடிக்கை மற்றும் நிலைபேறான நிதிக் கடப்பாடுகள் என்பவற்றினை முன்னுரிமைப்படுத்திய நிலைபேறான தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்கு உதவியளித்தன	காலநிலை மற்றும் பொருளாதார மறுசீராக்கல் தொடர்பான கொள்கைத் தொடர்ச்சி, ஒழுங்குறுத்துகைத் தலையீடுகள் மற்றும் அரசாங்கத்தின் ஆணையினைக் கொண்ட கடன் வழங்கல் நடைமுறைகளில் மாற்றங்கள் என்பன அடையாளம் காணப்பட்ட அபாயநேர்வுகளாகும் என்பதுடன் இவை வங்கியியல் துறையில் உள்ள அபாயநேர்வு முகாமைத்துவச் சட்டங்களில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். பூகோள அரசியல் பதற்றங்கள் நாட்டின் ஏற்றுமதிகளிலும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கான ஆற்றலிலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி எல்லைகளுக்கு இடையிலான நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.	பிராந்தியத்தில் முதலாவதான தேசிய காலநிலை நிதி தந்திரோபயம் (2025-2030), நிலைபேறான நிதிக்கும் பசுமை வங்கியியலுக்குமான பாதைகளைத் திறக்கின்றது. சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டமும் இணைந்த மறுசீராக்கல்களும் பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டினை வழங்கும் அதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை வலுவூட்டுதல் மூலமான நிதி உள்ளடக்கத்திற்கான அரசாங்கத்தின் கவனம் சந்தையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு உற்பத்தி ஆகிய இரண்டுக்குமான கடன் வழங்கல் பாதைகளை ஆழப்படுத்தி வாடிக்கையாளர் செலவழிப்புப் பங்கினையும் ஆழப்படுத்துகின்றது.	நாணயக் கொள்கையில் இருந்து கடன் முகாமைத்துவத்தினை வேறாக்கியமை ஒட்டுமொத்த முறைமையும் வீழ்ச்சியடைதற்கான அபாயநேர்வினைக் குறைத்து கொள்கை வெளிப்படைத்தன்மையினை வழங்கியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளைத் தரமுயர்த்துவதற்கான அரசாங்கத்தின் ஆணையானது நிதி உள்ளடக்கும்தன்மைக்கான வங்கியின் நிகழ்ச்சிநிரலுடன் ஒருங்கியைந்தது. கொள்கை வகுப்போர்களுடனான தன்முனைப்பான ஈடுபாடு வங்கியின் நிலைபேறானதன்மைக்கு அத்தியாவசியமான தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் பங்காண்மை அமைப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கியது.

பகுப்பாய்வுக் காரணிகள் (Pestel)	பிரதான போக்குகள்	அபாயநேர்வுகள்	வங்கியியல் துறைக்கான வாய்ப்புக்கள்	மக்கள் வங்கிக்கான விளைவுகள்
பொருளதாரச் சூழல்	இலங்கைப் பொருளாதாரம் மந்தமான வளர்ச்சிக் கட்டத்திலுள்ளதுடன் மொத்தத் தேசிய உற்பத்தி 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் போது 5.4% ஆகக் காணப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் வருகை வருட முடிவின் போது 24 லட்சம் என்ற மைல்கல் அடைவினை எட்டியுள்ளது. நிர்மாணத் துறையும் கைத்தொழிற் துறையும் சாதகமான வேகத்தினை பேணியுள்ள அதேவேளை, உற்பத்தித் துறையும் வர்த்தகத் துறையும் மேம்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களாலும் இறக்குமதி நிதியிடல்களாலும் குறைவான வட்டி வீதங்களாலும் நன்மையடைகின்றன. நடுத்தரமான பெறுமானத் தேய்வுடன் ரூபா திடமான நிலையினைப் பேணியது. கடன் வளரச்சி பிரதானமாகத் தனியார் துறையில் துரிதமடைந்தது.	நாணயப் பெறுமானத்தேய்வு, உலகளாவிய பண்ட விலைத் தளம்பல், துரித கடன் விரிவாக்கம், குறிப்பாக, தங்கக் கடன் மற்றும் வாகன இறக்குமதிக்கான கடன் என்பன துறைசார்ந்த செறிவு எனும் அபாயத்தினை ஏற்படுத்துகின்றன. அனர்த்த நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணம் என்பவற்றினால் அரசிறைப் பற்றாக்குறை விரிவடையலாம். நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளக்கப்படும் பணவீக்கம் குறுகிய காலத்தில் அனர்த்தம் தொடர்பான விநியோகச் சங்கிலித் தாமதங்கள் காரணமாக அதிகரிக்கலாம்.	கடன் விரிவாக்கத்தின் உதவியுடன் கடன் வளர்ச்சி மற்றும் வருமானப் பல்வகைமைப்படுத்தல் முன்னேற்றமடைந்தன. வர்த்தக நிதி, டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அதிகரித்த பண அனுப்பல்கள் கட்டண அடிப்படையிலான வருமானத்தினை அதிகரித்தன. பசுமை நிதி தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு, பசுமை முறிகள், கடன்கள் மற்றும் காப்புறுதி உற்பத்திகள் என்பவற்றில் நிலைபேறான முதலீட்டுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தன. வங்கிகளுக்கான சந்தை அடைவு வங்கிச் சேவைகள் பூரணமாகக் கிட்டாத பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி மற்றும் நுண் நிதி வலுவூட்டல் முனைப்புடன் அதிகரித்தன.	வளர்ச்சி, புத்தாக்கம், மற்றும் அபாயநேர்வுக்காகச் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட நிதி பலம் ஆகியன, திடமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் ஆதரவுடன் மக்கள் வங்கி கடன் வழங்குவதை அதிகரிப்பதற்கும் வருமான வழிவகைகளைப் பல்வகைமைப்படுத்தவும் டிஜிட்டல் நிலைமாற்றத்தில் தொடர்ந்து முதலீடு செய்யவும் உதவின.
சமூகச் சூழல்	21.9 மில்லியன் சனத்தொகையுடன் -0.6%, எனும் எதிர்மறை வளர்ச்சி வீதத்தினை எதிர்நோக்கும் இலங்கையின் எழுத்தறிவு வீதம் 2024 ஆம் ஆண்டின் முடிவின் போது 98.3% ஆகக் காணப்பட்டது. ஊழியப் படைப் பங்கேற்பு வீதம் 47.4% ஆகக் காணப்படுவதுடன் தொழில்வாய்ப்பின்மை வீதம் 4.4% ஆகக் காணப்பட்டது. மனித அபிவிருத்திச் சுட்டி 0.774 ஆகக் காணப்படுவதுடன் இது மிதமான சமூக அபிவிருத்தியினைப் பிரதிபலிக்கின்றது. வரையறுக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் விகிதாசாரம் தேசிய ரீதியாக 3.2% என வீழ்ச்சியடைந்தாலும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன[7]. மூப்படையும் மக்கள் தொகையினருக்கு ஓய்வூதியத்துக்கான, சுகாதாரத்துக்கான, மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு இளைஞர்களின் விருத்தி என்பது இன்றியமையாததாக உள்ளது. சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளையும் பெண்களையும் இளைஞர்களையும் நுண் நிதி வசதிகளையும் பாரம்பரிய வங்கியியலினுள் பெரும்போக்காக்கும் தேசிய நிதி உள்ளடக்கல் உபாயமார்க்கத்தின் (ii ஆம் கட்டம்) கீழ் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுடன் நிதியியல் உள்ளடக்கம் கணிசமாக வளர்ச்சியடைந்துள்ளது.	திட்வா சூறாவளி 2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தி, பரந்த அளவிலான இடப்பெயர்வுகளையும் உயிரிழப்புக்களையும் வாழ்வாதார இழப்புக்களையும் மிகப் பாரிய அளவிலான சொத்துச் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளது. பெண்கள், சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதனால் இலக்குவைக்கப்பட்ட நிவாரண மற்றும் மீள்நிர்மாண நடவடிக்கைகள் தேவைப்படுத்தப்படுகின்றன. நாட்டின் டிஜிட்டல்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தினை வங்கிச் சேவை இன்னும் துரிதப்படுத்துவதற்கு டிஜிட்டல் அறிவு இல்லாமை எனும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். டிஜிட்டல் தளங்களில் நம்பிக்கையினை ஏற்படுத்துவது ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, மூத்த பிரஜைகளின் மத்தியில் இவ்வாறு உருவாக்குவது ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. நிதி உள்ளடக்கம் என்பது ஒரு பிரதான ஊக்குவிப்புக் காரணியாக இருந்தாலும், பிராந்திய ரீதியான ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றமையானது உற்பத்திப் புத்தாக்கத்தினையும் இலக்குவைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் செயற்பாடுகளையும் தேவைப்படுத்துகின்றது.	நிதி உள்ளடக்கமானது சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கும் பெண்களின் வலுவூட்டலுக்கும் கிராமிய அபிவிருத்திக்கும் விரிவாக்கப்பட்ட கடன் அணுகலுக்கான, சேமிப்பிற்கான, காப்புறுதிக்கான பாதகளை உருவாக்குகின்றது. விவசாயத்திற்கும் கடற்றொழிலுக்கும் சுற்றுலாத்துறைக்கும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிக்கும் பொருத்தமான அனர்த்த அபாயநேர்வுக் காப்புறுதி உற்பதத்திகள் என்பன காலநிலை அதிர்ச்சியின் பின்னர் வணிக விரிவாக்கத்திற்கும் மீளலுக்கும் நன்மைமிக்கவையாக இருக்கும். நிதி அறிவு மற்றும் டிஜிட்டல் அறிவு பற்றிய விழிப்புணர்வில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், வங்கிச் சேவை முறையாகக் கிட்டாத பிரிவினர்கள் அல்லது வங்கிச் சேவைகளைப் பயன்படுத்தாத பிரிவினர்கள் பெரும்போக்கு வங்கிச் சேவையினுள் நகர்வதற்கு இது வங்கியியல் முறைமையில் நம்பிக்கையினை உருவாக்கும். பல்கலைக்கழகங்கள் முன்னெடுக்கும் இளைஞர்களை மையப்படுத்திய பிரச்சாரங்கள் எதிர்காலத்தில் தேசிய அபிவிருத்தித் தொழில்முயற்சியாண்மையில் திறமையானவர்கள் ஈடுபடுவதற்கான ஒரு செயன்முறையாக அமைகின்றது	சமூகச் சூழலானது நிதி உள்ளடக்கத்திற்கான மற்றும் நாட்டின் கடைக்கோடிப் பகுதியையும் ஆழமாகச் சென்றடைவதற்கான மக்கள் வங்கியின் நிகழ்ச்சிநிரலைக் கோடிட்டுக்காட்டுகின்றது. விரிவான கிளை வலையமைப்புக்கள் மற்றும் வங்கியியலின் கலப்பு டிஜிட்டல் பௌதிக மாதிரி ஆகியன நிதி உள்ளடக்கத்திற்கான அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலுக்குத் தலைமைதாங்கிக் கணிசமான பங்களிப்பினை வழங்கலாம். வங்கியின் மூத்த பிரசை வாடிக்கையாளர் தரவுத்தளத்தினால் மூப்படையும் மக்களின் பிரச்சினைகளை நேரகாலத்துடன் கண்டறிந்து அவற்றிற்குப் பரிகாரம் காண்பதற்கு இப்பிரிவின் மக்களின் தேவைகள் தொடர்பான பயன்மிக்க தகவல்களை வழங்க முடியும்

7. Statistics.gov.lk

பகுப்பாய்வுக் காரணிகள் (Pestel)	பிரதான போக்குகள்	அபாயநேர்வுகள்	வங்கியியல் துறைக்கான வாய்ப்புக்கள்	மக்கள் வங்கிக்கான விளைவுகள்
தொழில்நுட்பச் சூழல்	கொள்கை ஆதரவினாலும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களாலும் உந்தப்பபடும் துரித டிஜிட்டல் நிலைமாற்றம் வங்கியியல் துறைப் புத்தாக்கத்தினையும் வளரும் திறனையும் உந்தச் செய்கின்றன. 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற Sri Lanka FinTech உச்சிமாநாட்டின் தொடக்க விழாவானது 2028 ஆம் ஆண்டளவில் 200 இற்கும் மேற்பட்ட நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தாபித்து தேசிய மொத்தத் தேசிய உற்பத்திக்கு 3% இனைப் பங்களிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. கிராமப் பிரதேசங்களிலும் வங்கிச் சேவை பூரணமாகக் கிட்டாத பிரதேசங்களிலும் முகவர் வங்கிச் சேவை துரிதமாக விரிவடைந்து வருகின்றமையால் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல் அதிகரித்துள்ளது.	துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல் நிலைமாற்றத்துடன் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கான பாதிப்புறுநிலை. இந்தப் பரப்பில் வரையறுக்கப்பட்ட முதலீடுகள் வங்கிகள் நிதி இழப்பிற்கு முகங்கொடுக்கின்ற மற்றும் நன்மதிப்புக்குச் சேதம் ஏற்படுகின்ற அபாயத்தினை ஏற்படுத்தலாம். டீஜிட்டல் அறிவு இல்லாதிருந்து பாரம்பரிய வங்கிச் சேவை விரும்பப்படுகையில் டிஜிட்டல் பிரிவு உருவாக்கப்படலாம். முறைமைகளின் செயலிழப்பினாலும் ஒருங்கிணைப்புச் சவால்களினாலும் மூன்றாம் தரப்புக்களைச் சார்ந்திருப்பதாலும் சேவைத் தொடர்ச்சி அச்சுறுத்தப்படலாம்.	டிஜிட்டல் புத்தாக்கம், நிதித் தொழில்நுட்பப் பங்காண்மைகள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு என்பவற்றினால் உலகப் பரப்பில் வங்கித் துறையினை ஒரு போட்டியாளராக முன்னிறுத்த முடியும். நிலைபேறான பொருளதாரத்தில் டிஜிட்டல்மயமாக்கம் ஒரு பிரதான காரணி என்பதற்கான தெளிவான அறிகுறி புத்தாக்கம் செய்வதற்கான ஒழுங்குபடுத்தல் உதவியாகும்.	தொழில்நுட்பப் புத்தாக்கமும் டிஜிட்டல்மயமாக்கமும் மக்கள் வங்கிக்கு உபாயமார்க்க ரீதியாகக் கட்டாயமானவையாகவும் பிரதான வகையீடாகவும் காணப்படுகின்றது. வங்கி இந்தத் துறையில் உள் நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பல விருதுகளைப் பெற்றுள்ளதுடன் வங்கியானது சமூகத்தின் கிராமப் பிரதேசங்களுக்கும் வங்கிச் சேவை பூரணமாகக் கிட்டாத பிரிவுகளுக்கும் டிஜிட்டல் வங்கியியல் எனும் செய்தியினை எடுத்துச் செல்வதற்கான ஒரு தலைமைத்துவ நிலையில் உள்ளது. இது, பொதுமக்களுக்கான நலனோம்புகையினைக் கருத்திற்கொள்ளல் எனும் வங்கியின் பிரதான விழுமியத்தினைப் பற்றிப்பிடித்து அரசாங்கத்தின் நிதி உள்ளடக்கும்தன்மை நிகழ்ச்சிநிரலுடன் இயைபுறுகின்றது.
சுற்றாடல் சூழல்	2025 நவம்பரில் திட்வா சூறாவளியினை ஏற்படுத்திய காலநிலையினால் தூண்டப்பட்ட மோசமான வானிலைப் பாங்குகளுக்கான உலகளாவிய காலநிலை அபாயநேர்வுச் சுட்டியில் இலங்கை முதல் பத்து நாடுகளின் மத்தியில் தொடர்ச்சியாகத் தரமிடப்பட்டு வருகின்றது. ஏற்பட்ட பௌதிகச் சேதங்களின் மதிப்பிடப்பட்ட அளவு 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பாதிப்புறுநிலையிலுள்ள சமுதாயங்கள் ஆகக்கூடிய தாக்கத்தினை அனுபவிக்கும் வகையில் வெள்ளங்களாலும் மண்சரிவுகளாலும் கடலரிப்பினாலும் நாடு பாதிக்கப்படக்கூடியதாக இருப்பதைச் சூறாவளியின் தாக்கம் கோடிட்டுக்காட்டுகின்றது[8]. எவ்வாறாயினும், பாரிஸ் உடன்படிக்கையுடன் ஒருங்கியைந்து தேசிய காலநிலை நிதி உபாயமார்க்கத்தினை (2025 – 2030) அறிமுகப்படுத்தும் காலநிலை நடவடிக்கைக்கான உறுதியான கடப்பாட்டினை அரசாங்கம் எடுத்து விளக்கியுள்ளது. அனர்த்த அபாயநேர்வுக் காப்புறுதியினையும் பசுமை முறிகளையும் அரச தனியார் பங்காண்மைகளையும் இயற்கை மூலதனக் கணக்கீட்டினையும் நிதிச் சாதனங்களாக அடையாளம் கண்டு அபாயநேர்வுத் தணிப்பு மற்றும் தகவமைப்புக்காக வளங்களைத் திரட்டுவதே இதன் இலக்காகும்.	அபிவிருத்தி நிதிகளை அனர்த்த நிவாரணங்களுக்குச் செலவிடச் செய்யும் காலநிலையுடன் தொடர்புடைய அதிர்ச்சிகளின் அதிகரித்து வரும் எதிர்வுகூற முடியாத நிலையினைப் பௌதிக அபாயநேர்வுகள் உள்ளடக்குகின்றன. காபன் நடுநிலைமைத்தன்மைக்குப் படிப்படியாக நகர்வது சுவட்டு எரிபொருள் தொழிற்துறைகளில் தங்கியிருப்பதைக் குறைக்கலாம் என்பதுடன் இது வங்கிகள் கடன் வழங்கல் உபாயமார்க்கத்தினை மதிப்பிடுவதையும் குறுகிய கால நிவாரண நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதையும் தேவைப்படுத்துகின்றது. உருவாகிவரும் சுற்றாடல் ஒழுங்குவிதிகள், வெளிக்கூறல் தேவைப்பாடுகள், மற்றும் பசுமை வகைப்பாட்டியல் நியமங்கள் தொடர்ந்து இடம்பெறும் இயைபுறலையும் இயலளவு உருவாக்கலையும் அவசியப்படுத்துகின்றன	பசுமை நிதியிடலுக்கான அதிகரித்துவரும் கேள்வி துறையில் நிலைபேறானதன்மைக்கான வருமான வழிகளை அதிகரிக்கின்றது. வங்கியின் உத்தரவாதத்தின் துணையுடன் அனர்த்த அபாயநேர்வு முகாமைத்துவம் புதிய உற்பத்தி உருவாக்கத்தினுள் நிலைமாற்றமடையலாம். நிலைபேறான இயக்கங்களை வங்கிகளினுள் ஒருங்கிணைத்தல், அதிகரித்த பங்குதாரர்கள் நம்பிக்கை, செலவுகளில் இருந்து உச்சப்பயன் பெறுவதை வசதிப்படுத்தி பொறுப்புவாய்ந்த பெருநிறுவனப் பிரஜை என்கின்ற வியாபாரச் சின்ன பிம்பத்தினை உருவாக்குகின்றது. அரச தனியார் துறை அமைப்புக்களுடன் புதிய பங்காண்மைகளை உருவாக்குவது காலநிலைச் செயற்பாட்டுக்கான மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான வளங்களைப் பெற்றுத்தருகின்றது	புல்வேறு விருதுகளாலும் புத்தாக்கமிக்க உற்பத்திகளின் பல்வகைமையினாலும் அங்கீகரிக்கப்பட்டவாறு, வங்கியானது அதன் பசுமை நிதியிடலில் இருந்து நன்மையடைவதற்கான தலைமைத்துவ நிலையில் உள்ளது. உறுதியான அபாயநேர்வு முகாமைத்துவம், கவனமான கடன் மதிப்பீடு, தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிசையும் வகையிலான அனர்த்தத் தயார்நிலை ஆகியன நீண்ட காலத்தில் அவசியமானவையாகும்.

8. Ceylongtoday.lk

பகுப்பாய்வுக் காரணிகள் (Pestel)	பிரதான போக்குகள்	அபாயநேர்வுகள்	வங்கியியல் துறைக்கான வாய்ப்புக்கள்	மக்கள் வங்கிக்கான விளைவுகள்
சட்டச் சூழல்	இலங்கையில் சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைச் சூழல் 2025 ஆம் ஆண்டில் கணிசமான மாற்றங்களுக்கு உட்பட்டது. அபாயநேர்வு முகாமைத்துவம், இயைபுறல் மற்றும் பெருநிறுவன ஆளுகை என்பவற்றின் மீது ஊழல் எதிர்ப்பு என்பதை ஒரு சுலோகமாகக் கொண்டு மிக நுணுக்கமாக் கவனம் குவிக்கப்பட்டது. பெருநிறுவன ஆளுகை மறுசீராக்கல்கள், பாசல் III அமுல்படுத்தல்கள், முறைமை முழுவதுக்குமான நிலைபேறானதன்மைக் கொள்கைகள், AML/CFT மேம்பாடுகள், தொழில்நுட்ப அபாயநேர்வு முகாமைத்துவம், வரிவிதிப்பு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்பன அமுல்படுத்தப்பட்டதுடன் இவற்றினை இறுக்கமாக இயைபுறுவது தேவைப்படுத்தப்படுவதுடன் இவற்றினை மீறுவது அபராதத்திற்குரியதாகும்	வங்கியில் எவ்வடிவில் நிகழும் மீறழும் உயர் செலவில் சட்ட நடவடிக்கையினை எதிர்நோக்கும், மற்றும் நிதி வளங்களையும் ஏனைய வளங்களையும் பயன்படுத்துவதையும் தேவைப்படுத்தும் ஆபத்தினைக் கொண்டுள்ளது.	சமகாலத்தில், தெளிவான வெளிப்படைத்தன்மை, ஒழுங்குறுத்தல் புத்தாக்கம், மற்றும் பல பரப்புக்களில் உற்பத்திப் புத்தாக்கத்திற்கான அவகாசம் என்பவற்றுக்கான அரசாங்கத்தின் கடப்பாட்டினையே இறுக்கமான மறுசீராக்கல்கள் சுட்டிக்காட்டுகின்றன.	வங்கியானது, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி என்பவற்றினைப் பொறுத்த அளவில் இப்பரப்புக்களில் பல விருதுகளை வென்று மிகச் சிறந்த நிலையில் காணப்படுகின்றது. தன்முனைப்பான அபாயநேர்வு முகாமைத்துவம், இயைபுறல் உட்கட்டமைப்பில் தொடர்ச்சியான முதலீடு மற்றும் திறன் உருவாக்கம் என்பன போட்டியில் முன்னணியில் திகழ்வதற்குத் தேவைப்படுகின்றன.

பொருளாதாரத் தோற்றப்பாடு 2026

2026 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதாரத் தோற்றப்பாடு தொடர்ச்சியான அரசிறைத் திடப்படுத்தல்களின் காரணமாகவும பொருளதார நெருக்கடியின் தீவிர நிலையின் போது அமுல்படுத்தப்பட்ட பேரினப்பொருளதார உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளின் காரணமாகவும் தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கைமிக்கதாகக் காணப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் தற்போது நடைபெற்றுவரும் மறுசீராக்கல்கள் பணவீக்க அழுத்தங்களை இலகுபடுத்துவதற்கும் நாணயப் பரிமாற்ற வீதங்களை உறுதிப்படுத்துவதற்கும் ஏனைய நாடுகளுடனான நிதிப் பரிமாற்றங்களின் நிகர நிலையினைத் திடப்படுத்துவதற்கும் ஓரளவிற்கு முதலீட்டாளர் நம்பிக்கையினை மீளக் கொண்டுவருவதற்கும் பங்களிப்பு வழங்கியுள்ளது. 2026 ஆம் ஆண்டின் போதான வளர்ச்சி தனியார் நுகர்வில் ஏற்பட்டுள்ள படிப்படியான மீளல், சுற்றுலா வருவாயில் ஏற்பட்டுள்ள நிலையான மீட்சி, மீண்டெழுந்தன்மையுள்ள தொழிலாளர்களின் பண அனுப்புகை என்பவற்றினால் பிரதானமாக உந்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவை அனைத்தும் 2022 - 2023 காலப்பகுதியின் போதான தேக்கக் காலத்தினைத் தொடர்ந்து உறுதியான முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளன. எவ்வாறாயினும், நெருக்கடிக்கு முன்னர் இருந்த மொத்தத் தேசிய உற்பத்திக்கும் தலா நபர் வருமான மட்டங்களுக்கும் திரும்புவது உறுதியான தனியார் துறை முதலீடு, உற்பத்தித் திறன் இலாபங்கள், பாரம்பரியத் துறைகளுக்கு அப்பால் செல்லும் அர்த்தபூர்வமான ஏற்றுமதிப் பல்வகைமைப்படுத்தல் என்பவற்றில் தங்கியிருக்கும்.

நிலைத்தன்மையான வேகம் தொடர்ச்சியான கொள்கை நம்பகத்தன்மை, மேம்பட்ட வருமானத் திரட்டல், மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவம் என்பவற்றினைத் தேவைப்படுத்தும். கட்டமைப்பு ரீதியான மறுசீராக்கல்கள், குறிப்பாக வரிவிதிப்பு, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்கட்டமைத்தல் மற்றும் ஆளுகை என்பன கடன் உறுதித்தன்மை மற்றும் பேரினப்பொருளாதார உறுதித்தன்மை என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்குப் பிரதானமானவையாக இருக்கும். இதேவேளை, திட்வா சூறாவளியில் இருந்து மீளுவது உட்கட்டமைப்புக்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வாழ்வாதாரங்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்கும் இடம்பெயர்ந்த சமுதாயங்களை மீளக் குடியமர்த்துவதற்கு வளங்களைத் திசைதிருப்பவேண்டியிருப்பதால் அது அரசிறை முன்னுரிமைகளில் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பு உள்ளது. “இலங்கையை மீளக் கட்டியெழுப்பல்” நிதியம் மற்றும் உயர் மட்ட அரச - தனியார் குழுவினை நியமித்தமை என்பன ஒருங்கிணைக்கப்பட்ட புனர்நிர்மாண உதவியைத் திரட்டுவதற்கான முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றது. மொத்தத்தில், உறுதியான அரசிறை முகாமைத்துவம், நிறுவன ரீதியான மறுசீராக்கல்கள், மற்றும் இடைக்காலப் பொருளாதார மீளலை உந்துவதற்குத் தயாரான மீண்டெழுந்தன்மையுடைய தனியார் துறை என்பவற்றின் உதவியுடன் 2026 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் தோற்றப்பாடு படிப்படியான ஆனால் உறுதியான வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றது.

பங்குதாரர் ஈடுபாடு

அரசுக்குச் சொந்தமான உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்ற ரீதியில் பொதுமக்களின் அக்கறையினை உறுதிப்படுத்துவதற்காகத் தொடர்பாடல், ஒத்துழைப்பு மற்றும் உறுதியான உறவு என்பவற்றினைப் ஊக்குவிக்கும் எமது பங்குதாரர் ஈடுபாடானது அறிவார்ந்த தீர்மானம் வகுத்தலுக்காக வாடிக்கையாளர்களையும் ஊழியர்களையும் ஒழுங்குபடுத்துனர்களையும் உள்ளடக்குகின்றது. பங்குதாரர் கரிசணைகளையும் வாய்ப்புக்களையும் கருத்திற்கொண்டு ஆவணச்செய்வதற்கும் அபாயநேர்வுகளைத் தணிப்பதற்கும் இந்த இன்றியமையாத பங்காண்மைகளின் மூலம் பெறுமதியினை வழங்குவதற்கும் பெறுவதற்கும் எமது தந்திரோபாயம் சீரமைக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ அணுகுமுறை

GRI 2-29

நாம் எமது பிரதான உறவுகளை ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் முகாமைத்துவம் செய்கின்றோம். கவனித்துப் பராமரிக்கும் எமது பாரம்பரியம் ஆறு தசாப்தங்களைக் கடந்து, நாட்டின் பல்வகைமைமிக்க சமூக - பொருளாதாரக் குழுக்களில் சிறந்த காலங்களிலும் நெருக்கடிமிக்க காலங்களிலும் வங்கி மேற்கொண்ட முதலீட்டுக்கான மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றது. வங்கியின் உபாயமார்க்கங்களை அமுல்படுத்துவதற்கும் அதன் குறிக்கோள்களை அடைவதற்குமான வங்கியின் ஆற்றல் மீது எந்தப் பங்குதாரர்களின் நடவடிக்கைகள் கணிசமான தாக்கத்தினை என்பதைப் பரிசீலிக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை மூலமே பங்குதாரர்களின் அடையாளம் காணப்படுகின்றனர். இதற்கமைய, பங்குதாரர் குழுக்களை அடையாளம் காணும் செயன்முறைக்கு பின்வரும் மூன்று பிரதான அடிப்படைகள் உதவுகின்றன.

- வங்கியின் உரித்தாண்மை, குறிக்கோள்கள், மற்றும் நடவடிக்கையின் நோக்கெல்லை என்பவற்றினைக் குறித்துரைக்கும் மக்கள் வங்கியின் சட்டம்
- தொடர்ச்சியான வங்கியியல் உரிமத்தினை உறுதிப்படுத்துவதற்காகச் சகல செயற்பாடுகளிலும் ஒழுங்குறுத்தல் இயைபுறல்
- அரசுக்குச் சொந்தமான வங்கி என்ற ரீதியில் இலங்கை மக்களுக்கான வங்கியின் உபாயமார்க்கமிக்க வியாபாரக் குறிக்கோள்கள்

பங்குதாரர் முன்னுரிமைப்படுத்தல்

விரும்பப்படும் பலாபலன்கள் அடையப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு இரு வழி இடையீடுகளை ஈடுபடுத்தும் நன்கு வரையறுக்கப்பட்ட நடைமுறைகளின் தொகுதி ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. எமது பங்கீடுபாட்டாளர் குழுக்களின் அபிலாசைகள் தீர்மானம் வகுத்தலுக்கு மிகவும் முக்கியமானது என்பதால் எமது வியாபாரத்தில் எமது பங்குதாரர்கள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி மதிப்பிடுவதற்கு நாம் ஏழு – படி முறையினைப் பயன்படுத்துகின்றோம்.

1. நோக்கத்தினையும் நோக்கெல்லையினையும் வரையறுத்தல்
2. பங்குதாரர்களை அடையாளம் காணல்
3. வகைப்படுத்தல்
4. செல்வாக்கினை மதிப்பிடல்
5. ஈடுபாட்டு முறை
6. தொடர்பாடல் மற்றும் பதிவுசெய்தல்
7. மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல்



சம்பந்தப்பட்ட மன்றங்களும் குழுக்களும் பங்குதாரர் பின்னூட்டல்களைப் பெறுகின்றன. இவை பின்னர் தொடர்புடைய தீர்மானங்களை வகுக்கையில் பரிசீலிக்கப்படுவதற்காகச் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்படுகின்றன.

எமது பங்குதாரர்கள்

GRI 2-29, 207-3

இலங்கை அரசாங்கம் (GOSL)

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

எமது பிரதான பங்குடைமையாளரும் பங்குதாரரும் இலங்கை அரசாங்கமாகும். விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் அரசாங்கம் 92.27% பங்குடைமையினைக் கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள பல தேசிய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் நாம் பெறுமதியினை உருவாக்குகின்றோம்.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

இலங்கை அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுக்கு நாம் பல வழிகளிலும் உதவுகின்றோம்.

- பொருளாதாரச் செயற்பாடுகளை உருவாக்கும் பரந்த வீச்சிலான வியாபாரங்களுக்கு நிதியளித்தல்
- அபிவிருத்திக்காக SME நுண்நிதித் துறைகளுக்கு நிதியளித்தல்
- சக்திப் பாவனையினைக் குறைப்பதற்கு எமது டிஜிட்டல் தளங்களைத் தரமுயர்த்தல்
- உட்கட்டமைப்பினை மீளுருவாக்குவதற்குக் கருத்திட்ட நிதியிடல்
- எவ்வாறு நாம் ஈடுபடுகின்றோம் என்பதற்காக உயர் புலப்படுநிலை கொண்ட வியாபாரச் சின்னத்தினை நேர்த்தியுடனும் உரிய கவனத்துடனும் முகாமைத்துவம் செய்தல்

சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கும் வழிகாட்டலைக் கோருவதற்கும் தேசிய அபிவிருத்தியில் உதவியினை வழங்குவதற்கும் நிதி அமைச்சுடனும் அரசாங்க அதிகார அமைப்புக்களுடனும் அடிக்கடி இடையீடுகளை மேற்கொள்ளல்.

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- உறுதியான மூலதன நிலையினையும் திரவத்தன்மை நிலைமையினையும் பேணுதல்
- சவால்மிக்க பொருளாதாரச் சூழலில் அரசுக்குச் சொந்தமான ஒரு வங்கி என்ற ரீதியில் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் நம்பிக்கை
- சைபர் பாதுகாப்பின் உயர் மட்டத்தின் மூலம் இயக்க ரீதியான மீண்டெழுந்தன்மை
- சக்தி நுகர்வுக்காக தேசிய சக்தி வலையமைப்பின் மீதான சுமையினைக் குறைப்பதை நோக்கிப் பணியாற்றல்
- அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்புக் கொள்கைகள் என்பவற்றுக்கு உதவுவதற்காக வங்கியின் உபாயமார்க்கங்களையும்/செயற்பாடுகளையும் ஒருங்கிசைவித்தல்
- நுண், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் மற்றும் SME க்களுக்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்தான சலுகைக் கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பிராந்தியச் சமுதாயங்களுக்கும் பயிற்சி மற்றும் தொழில்வாய்ப்பு

பிரதிபலன்கள்

ஒழுங்குறுத்தல் தண்டனைகள் இல்லை

அரசாங்கத்துக்கான மொத்தப் பங்களிப்பு (வரிகள் மற்றும் தீர்வை) ரூ. 49.0 பில்லியன்.

8122 பேருக்குத் தொழில்வாய்ப்பு

ROE 20.1%

பங்கொன்றுக்கான ஈட்டல் ரூ. 40,230

பங்கொன்றுக்கான தேறிய சொத்துப் பெறுமதி ரூ. 219,038

ஏனைய பங்குதாரர்கள்: கூட்டுறவுச் சங்கங்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் 7.73% பங்குடைமையினைக் கொண்டுள்ளன. இந்தத் துறையின் அபிவிருத்தியானது வங்கிச் சேவை இல்லாத பிரிவினருக்கும் வங்கிச் சேவை பூரணமாகக் கிட்டாத பிரிவினருக்கும் நிதி உள்ளடக்கும் தன்மையினைக் கொண்டு உதவுகின்றது.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- அடி மட்டத்தில் பொருளாதார மீண்டெழுந்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக பயிற்சியினை வழங்குவதன் மூலம் ஆளுகையினையும் நிலைபேறானதன்மையினையும் வலுப்படுத்தல்
- இதன் மூலம், தேசிய அபிவிருத்திக்கு அர்த்தபூர்வமான பங்களிப்பினை வழங்குதல்
- சபையின் பிரதிநிதிப் பணிப்பாளருடன் இடையீடு மேற்கொண்டு துறையுடனான எமது தொடர்ச்சியான ஈடுபாட்டுச் செயன்முறை பற்றி அவரை இற்றைப்படுத்தல்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- கூட்டுறவுப் பிரதிநிதிகளுடன் தேவை அடிப்படையிலான இடையீடுகள்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- விசேட கடன்களை வழங்கல்
- வங்கியுடன் வைப்புக்களைப் பேணுவதற்காக விசேட வட்டி வீதங்கள்
- நிதி ஆற்றுப்படுத்தலை வழங்குதல்
- விவசாயத்திற்கும் கடற்றொழிலுக்கும் நுகர்வோர் வர்த்தகத்திற்கும் நிதியளிப்பதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுதல்

பிரதிபலன்

இலங்கை மத்திய வங்கி (CBSL)

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

முன்னணி ஒழுங்குபடுத்துனர் என்ற ரீதியில், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளுடனான மற்றும் பணிப்புரைகளுடனான எமது இயைபுறல் சமரசம் செய்யப்பட முடியாதவையாகும். மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது, எமக்குத் தண்டனைகள் எவையும் வழங்கப்படவில்லை. நாட்டின் ஒழுங்குறுத்தல் மற்றும் சட்டச் சட்டகங்களினுள் நெறிசார் வங்கியியலுக்கான எமது கடப்பாட்டினை எடுத்துக்காட்டுகின்றது.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- அரசுக்குச் சொந்தமான வங்கி என்ற ரீதியில் வங்கியியல் மற்றும் ஆளுகை என்பவற்றில் முன்னுதாரணத்துடன் செயற்படும் வங்கி
- உற்பத்திகளையும் சேவைகளையும் இணைக்கும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல்
- இலங்கை மத்திய வங்கியின் டிஜிட்டல் பணிப்புரைகளை அமுல்படுத்தல் மற்றும் காலநிலைத்த தகவமைப்பினை அறிமுகப்படுத்தல்
- சந்தேகத்துக்குரிய கொடுக்கல்வாங்கல்களை அல்லது வங்கிச் செயற்பாடுகளை நிகழ் நேரத்தில் முறைப்பாடு செய்தல்
- வங்கித் துறையில் மீண்டெழுந்தன்மையினைக் கட்டியெழுப்புவதற்காக எமது நிபுணத்துவத்தினைப் பகிர்ந்து பல்வேறு மாநாடுகளில் பங்குபற்றல்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- இலங்கை மத்திய வங்கியுடன் கைத்தொழிற்துறை மாநாடுகளில் பங்குபற்றல்
- இலங்கை மத்திய வங்கியில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் நேருக்கு நேரான சந்திப்புக்கள்
- மிக முக்கியமான விடயங்களில் தாமதமின்றி வழிகாட்டல்களைத் தேடுதல்
- மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளையும் ஒழுங்குவிதிகளையும் இறுக்கமாகப் பின்பற்றல்
- உரிய காலத்தில் அறிக்கையிடல் மற்றும் வெளிக்கூறல்
- தேசிய அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் இலங்கை மத்திய வங்கியுடன் கூட்டாண்மை அமைத்தல்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- நாட்டில் மீண்டெழுந்தன்மையும் உறுதிமிக்க வியாபாரச் சின்னமாகத் தொடர்ந்து திகழுதல்
- பூரணமாக வங்கிச் சேவைகள் கிட்டாத அல்லது வங்கிச் சேவைகள் இல்லாத பிரிவினரை நிதி ரீதியாக உள்ளடக்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் ஆணை வழங்கப்பட்ட பல முன்னெடுப்புக்களை அமுல்படுத்தியமை
- இலங்கை மத்திய வங்கியின் காலநிலைத் தகவமைப்பு முன்னெடுப்புக்களுக்கு உதவுவதற்காக தொடர்ச்சியான பசுமைக் கடன் வழங்கல்
- நெறிசார் ஆளுகையினை அடிப்படையாகக் கொண்டு வங்கி எதிர்காலத்திலும் இதே நிலையிலே இயங்கும் என்ற ஊகத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக இயங்குதல் மற்றும் அபாயநேர்வு நன்கு தணிக்கப்பட்ட அமைப்பு

பிரதிபலன்கள்

இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித தண்டப்பணமும் அறவிடப்படவில்லை

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சகல பணிப்புரைகளினதும் செயற்திறன்மிக்க அமுல்படுத்தல்

வழங்குனர்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

நெறிமிக்க முறையில் வளங்களைப் பெறல் மற்றும் நல்லாட்சி பற்றிய வங்கியின் உள்ளார்ந்த விழுமியங்களைப் பதியவைத்து நாம் விநியோகத்தர்களுடன் கூட்டாண்மையுடன் பணியாற்றுகின்றோம்.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- விநியோகத்தர்களின் பல்வகைமைமிக்க குழுவிற்கு உதவுவதன் மூலம் பரஸ்பரம் நன்மைபயக்கும் உறவுகளை உருவாக்கல்
- வெளிப்படைத்தன்மைமிக்க கொள்வனவுச் செயன்முறையினை அமுல்படுத்தல்
- உரிய காலத்திலான கொடுப்பனவுகள்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- கேள்வி கோரல் செயன்முறையில் இருந்து அவர்களுக்குப் பணியினை ஒப்படைக்கும் வரையான செயன்முறை
- கள விஜயங்களும் அவசியமாயின் நேருக்கு நேரான சந்திப்புக்களும் அவசியம்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- எம்முடன் சேர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குதல்
- அவர்களின் நிதி ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தல்
- நெறிமிக்க வகையில் வளங்களைப் பெறுவதைப் புகுத்துதல்
- அவர்களின் வியாபாரத் தலங்களில் நல்லாட்சியினை ஊக்குவித்தல்.

விரிவான கூற்றுரைக்காக 189–191 ஆம் பக்கங்களில் உள்ள வியாபாரப் பங்காளர் மூலதனம் எனும் பகுதியினைப் பார்க்கவும்.

பிரதிபலன்

விநியோகத்தர்களுக்கு ரூ. 23.2 பில்லியன் கொடுப்பனவுகள்

e-Gp மூலம் விநியோகத்தர் பதிவு

எக்கொடுப்பனவுகளும் தவணை தவறவில்லை

விநியோகத்தர்களின் நிதி ஆரோக்கியம்

வாடிக்கையாளர்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

அரசுக்குச் சொந்தமான மிக விரிவான வலையமைப்பினைக் கொண்ட முன்னணி வங்கி என்ற ரீதியில், எமது வாடிக்கையாளர்களுள் அரசு, பெருநிறுவனங்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள், தொழில்முனைவோர்கள், தனிநபர்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளடங்குகின்றனர்.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- நிதி உள்ளடக்கும் தன்மையினை மேம்படுத்தல்
- பல்வகைமைமிக்க வாடிக்கையாளர் தளத்தினைப் பேணல்
- கருத்திட்ட நிதியிடல், SME , மற்றும் நுண்நிதியிடல்
- நாடளாவிய கிளை வலையமைப்பு
- பெண் தொழில்முனைவோரை வலுப்படுத்தல்
- வாடிக்கையாளர் கல்வியில் முதலீடு செய்தல்
- சேமிப்புப் பற்றி இளைஞர்களுக்குச் சிறு வயதில் பயிற்சியளித்தல்
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு உதவி
- மேம்படுத்தப்பட்ட பண அனுப்பல் சேவைகளுடன் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வசதியளித்தல்
- செளரியமான வங்கிச் சேவைகளை வழங்கும் மிகச் சிறந்த டிஜிட்டல் ஆற்றல்
- தரவுப் பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு

எமது வியாபாரத் தொகுதிகள் பற்றிய மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து 102-141 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- சமூக ஊடகம்
- பாரம்பரிய ஊடகம், அவசியமெனின்
- நிதி அறிவு மன்றங்கள்
- நேரில் வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கான கிளை வலையமைப்பு
- நேருக்கு நேர் மேற்கொள்ளும் உற்பத்தி மேம்பாட்டுப் பிரச்சாரங்களுக்காக நன்கு பயிற்றப்பட்ட விற்பனை அணிகள்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- தனித்துவமாக உருவாக்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகள்
- பாதிப்புறுநிலையிலுள்ள குழுக்களுக்கான விசேட சேவைகள்
- போட்டிமிக்க கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை அனுமதிக்கும் செலவுச் சிக்கனமிக்க உற்பத்திப் புத்தாக்கம்
- சிறந்த ஆளுகை மற்றும் ஒழுங்குறுத்துகை இயைபுறல் என்பன உறுதிப்படுத்தப்பட்டன
- வணிக நாமம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை வலுப்படுத்தப்பட்டன

விரிவான கூற்றுரைக்காக 183-188 ஆம் பக்கங்களில் உள்ள வாடிக்கையாளர் மூலதனத்தினைப் பார்க்கவும்.

பிரதிபலன்

மொத்த வாடிக்கையாளர் எண்ணிக்கை 15.2 மில்லியன்

540,740 புதிய வாடிக்கையாளர்கள் சேர்ந்துள்ளனர்

981.3 பில்லியன் ரூபா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன

746 கிளைகள்

1,182 ATMகள், CDMகள்/CRMகள்

தொழிற் சங்கங்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

நாம் தொழிற் சங்கங்களைப் பிரதான பங்கீடுபாட்டாளர்களாகக் கட்டமைத்துச் சம்பந்தப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட உறவுகளைப் பேணுகின்றோம். ஊழியர் நலனோம்புகைக்காக வங்கியுடன் பங்காண்மை அமைக்கும் ஆறு இவ்வாறான சங்கங்கள் உள்ளன

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- ஊழியர் விருத்திக்கான வங்கியின் கடப்பாட்டினால் வழிகாட்டப்பட்டு எமது ஊழியர்களில் தாக்கத்தினை ஏற்படுத்தும் தலைப்புக்கள் பற்றிய வெளிப்படைத்தன்மையான தகவல் பகிர்வுக்காக நாம் கிரமமான கலந்துரையாடல்களை வழங்குகின்றோம்.
- பாகுபாடற்ற தொழில் வழங்குனர் என்ற ரீதியில் நாம் நியாயமான தொழில் நடைமுறைகளைப் பிரயோகிக்கின்றோம்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- கூட்டுப் பேரம்பேசல் உதவிக்காக முறைசார் ஈடுபாட்டு மாநாடு
- ஊழியர் நலனோம்புகைத் திட்டங்களை அமுல்படுத்தல்
- செயலாற்றுகை மற்றும் உற்பத்தித்திறன் பற்றிய கலந்துரையாடல்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- பதவிநிலையினர் மற்றும் கட்டமைப்புக்களுடன் இணக்கமான உறவினை உருவாக்குவதற்காகச் சங்கங்களைப் பயன்படுத்தல்
- வங்கியின் சமூகமான செயற்பாட்டினை உறுதிப்படுத்தி தலைமைத்துவத்திற்கும் சங்கங்களுக்கும் இடையில் ஒத்திசைவு
- இடையீடுகள் மற்றும் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை
- உரிய காலத்தில் குறைகளைக் கையாளுதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்தல்

விரிவான கூற்றுரைக்காக 162–179 ஆம் பக்கங்களில் உள்ள மனித மூலதனம் எனும் பகுதியினைப் பார்க்கவும்.

பிரதிபரன்

- ஒத்துழைப்புமிக்க கலந்துரையாடல்
- பரஸ்பரம் நன்மைமிக்க விளைவுகளைத் தரும் வகையில் பிரச்சினைகளைத் தீர்த்தல்
- நிலைபேறான செயற்பாடுகள்
- எமது பங்குதாரர்கள் அனைவருக்கும் தொடர்ச்சியான பெறுமதி விநியோகம்
- பூச்சிய தொழிற்துறை நடவடிக்கை

ஊழியர்கள்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

நாம் நேர்த்தியினை வழங்கி செயலாற்றுகையினையும் உற்பத்தித்திறனையும் தூண்டி பல்வகைமைமிக்க நிபுணத்துவத்துடன் திறன்மிக்க தொழிற்படையினை ஈடுபடுத்துகின்றோம். வழிகாட்டலை வழங்கி, போஷித்து, எதிர்காலத்திற்குத் தயாரான ஓர் அணியினைப் பயிற்றுவிக்கும் வேலைத்தளத்தினை நாம் உருவாக்குகின்றோம்.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- புத்தாக்கத்தினை வெளிப்படுத்துவதற்கான தொழில் வளர்ச்சி
- தொடர்ச்சியாக இடம்பெறும் பயிற்சி மற்றும் அறிவுப் பகிர்வு வாய்ப்புக்கள்
- போட்டித்தன்மைமிக்க நலன் பொதிகள்
- குறைகளைத் தீர்ப்பதற்கான கட்டமைக்கப்பட்ட செயன்முறை
- இதமான வேலைச் சூழல்
- மனநல ஆரோக்கிய உதவிக்கான அணுகல்
- வேலை தொழில் சமனிலைக்கான வலியுறுத்தல்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- பல் மட்டப் பணியாளர் அணிக் கூட்டங்கள் (நாளாந்த/வாராந்த/மாதாந்த அடிப்படை)
- குறைதீர்க்கும் பொறிமுறை
- அவசியமெனின், நேருக்கு நேர் கலந்துரையாடல்
- வருடாந்த மதிப்பீடுகள்
- தொழிற்சங்கங்களுடனான கூட்டங்கள்
- மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரையான செய்திப் பரிமாற்றம்
- ஊழியர் திருப்திக் கணிப்பீடுகள்

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு மூலம் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை உருவாக்கல்
- தனிப்பட்ட அபிலாஷைகளை அடையும் போட்டித்தன்மை மிக்க பொதியினை வழங்கல்
- சந்தையில் சிறந்தது என்பதற்கான வெகுமதி முறைமையினை அமுல்படுத்தல்
- டிஜிட்டல் அறிவினைப் பகிர்வதை ஒருங்கிணைக்கும் எதிர்காலத்திற்கான வேலைச் சூழல்
- மனநல ஆரோக்கிய நிபுணத்துவத்திற்கான அணுகல்
- நிதி ஆரோக்கியத்திற்கான அணுகல்

விரிவான கூற்றுரைக்காக 162–179 ஆம் பக்கங்களில் உள்ள மனித மூலதனம் எனும் பகுதியினைப் பார்க்கவும்.

பிரதிபலன்

மிகவும் ஊக்கம்பெற்ற மற்றும் ஈடுபாடுமிக்க வேலைப்படை

ஊழியர் நட்டஈடு
ரூ. 38.2 பில்லியன்

பயிற்சி முதலீடு
ரூ. 190.3 மில்லியன்

685 பதவியுயர்வுகள்

4,818 பெண் தொழிற்படையினர்

755 புதிய ஆட்சேர்ப்புக்கள்

சமுதாயம்

நாம் எவ்வாறு மதிப்பினை உருவாக்குகின்றோம்

பொது நலனைப் பிரதானமாகக் கொண்ட அரச வங்கி என்ற ரீதியில் நாம் எமது சமுதாயத்திற்கான பெறுமதியினைப் பல வழிகளில் உருவாக்குகின்றோம்.

நாம் எவ்வாறு சேவையாற்றுகின்றோம்

- சகல வயதுக் குழுக்களுக்குமிடையில் சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல்
- SME வாடிக்கையாளர்கள்/பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதியறிவு நிகழ்ச்சித்திட்டம்
- உபாயமார்க்கமிக்க பெருநிறுவனச் சமூகப் பொறுப்புக் கருத்திட்டங்கள் (CSR) மூலம் சமுதாயத்தில் முதலீடு செய்தல்

நாம் எவ்வாறு ஈடுபடுகின்றோம்

- சமூக ஊடகம்
- வியாபாரச் சின்னக் காண்புநிலையின் பாரம்பரிய வடிவங்கள்
- CSR நடவடிக்கைகளின் மூலம் முனைப்பான வெளிப்புற ஈடுபாடு

நாம் எவ்வாறு மதிப்பினை வழங்குகின்றோம்

- தொழில்வாய்ப்புக்களை உருவாக்கல்
- நெருக்கடிச் சூழ்நிலைகளில் உதவி
- இளைஞர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தினைப் பதியவைத்தல்
- மூத்த பிரஜைகள் நிதிச் சுயாதீனத்தினைப் பெறுவதற்கு உதவுதல்
- ஒழுங்குறுத்தல் அபராதங்களைத் தவிர்த்து அவற்றுக்கு இயைபுறல்
- அனைவரின் நன்மைக்காகவும் தேசிய அபிவிருத்தியில் அரசாங்கத்திற்கு உதவுதல்

விரிவான கூற்றுரைக்காக 192–195 ஆம் பக்கங்களில் உள்ள சமுதாய மூலதனம் எனும் பகுதியினைப் பார்க்கவும்.

பிரதிபலன்

- இயங்குவதற்கான வலுப்படுத்தப்பட்ட சமூக உரிமம்
- உயர் வியாபாரச் சின்னப் புலப்படுநிலை
- சமுதாய நம்பிக்கை
- நெருக்கடி நிலையில் "நாட வேண்டிய" ஒரே வங்கி
- ரூ. 26.9 மில்லியன் CSR முதலீடு.
- ரூ. 2.5 பெறுமதியான வருடாந்த ஓய்வூதியப் பங்களிப்பு

முக்கிய காரணிகள்

வங்கிக்கு மிகவும் முக்கியமான விடயங்களைத் தீர்மானிக்கையில் வங்கியானது இரட்டை முக்கிய அணுகுமுறையினைப் பின்பற்றுகின்றது. வியாபாரத்திற்கான பெறுமதியினை உருவாக்குவதிலும் புறச் சூழல் மற்றும் பங்குதாரர்கள் மீதும் இவ்விடயங்களை ஏற்படுத்தும் தாக்கத்தினை வங்கி மதிப்பிடுகின்றது என்பதையே இது குறிக்கின்றது.

முக்கியமானவை என அடையாளம் காணப்பட்டுள்ள முகாமைத்துவ அணுகுமுறை காரணிகள் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (GRI) மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRS) ஆகியவற்றின் தேவைப்பாடுகளுடன் ஒருங்கியைவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான விடயங்கள் எமது வியாபாரங்களின் நிலைபேறானதன்மையினைப் பெரிதும் பாதிக்கலாம். இது வங்கியின் பல்வேறு பிரிவுகளைச் சம்பந்தப்படுத்துகின்ற மற்றும் பிரதான பங்குதாரர் குழுக்களுடன் முனைப்பான ஈடுபாட்டினைச் சம்பந்தப்படுத்துகின்ற ஒத்துழைப்புமிக்க முயற்சியாகும். எமது பங்குதாரர்களுக்கு பெறுமதியினை வழங்குகின்ற அதேவேளை நாம் தொடர்ந்தும் ஓர் வலுவான மற்றும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான அமைப்பு என்பதை உறுதிப்படுத்துவதற்கான வருடாந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையின் போது முக்கிய தலைப்புக்கள் கலந்துரையாடலுக்கும் கலந்தாராய்வுக்குமான பிரதான தலைப்புக்களாகக் காணப்படுகின்றன.

மிகப் முக்கியமான தலைப்புக்களைத் தீர்மானித்தல்

GRI 3-1

தேவைப்பாடு	அடிப்படை	உள்ளடக்கம்	அறிக்கையிடல்
1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் மக்கள் வங்கி உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகக் கூட்டிணைக்கப்பட்டது. வங்கியின் பிரதான நோக்கம் கிராமியச் சேமிப்பினைத் திரட்டுவதாகும். எவ்வாறாயினும், அன்றிலிருந்து, பரந்த வீச்சிலான நிதித் தீர்வுகளை உள்ளடக்குவதிலும் தேசிய பொருளாதாரத்தினை விருத்தி செய்வதில் இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாண்மை அமைப்பதிலும் வியாபாரம் பெருமளவிற்குப் பரிணாமமடைந்தது. இந்தப் பிரதான தொனிப்பொருளின் அடிப்படையில், நிதியிடல் தேவைகளுக்காகவும் உயர் போட்டித்தன்மைமிக்க சந்தையில் வியாபாரமானது நிலைபேறானதாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் நாம் பங்குதாரர்களின் அபிலாசைகளில் தீவிர கவனம் செலுத்துகின்றோம்.	வியாபாரத்தில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி பெறுமதி உருவாக்கத்தில் அல்லது பெறுமதித் தேய்வில் செல்வாக்குச் செலுத்தும் சாத்தியமுள்ள அபாயநேர்வுகளை அடையாளம் காணும் இச்செயன்முறையில் வங்கி ஈடுபட்டுள்ளது.	இந்த உபாயமார்க்கங்களுக்கு அமைவாகப் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளை உருவாக்குவதற்காக வங்கியின் செயலாற்றுகைக்கு இன்றியமையாத தாக்கங்கள் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.	வருடாந்த மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு முக்கிய விடயங்கள் அறிக்கையிடப் -படுகின்றன.

வங்கியின் மையமான நோக்கமாக பொது நலன் இருக்கையில், தேசிய முன்னேற்றத்தினை அடைவதில் முக்கிய மதிப்பீடு தேசிய அபிவிருத்தியினையும் இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாண்மை அமைப்பதையும் முன்னுரிமைப்படுத்துகின்றது. இதற்குக் கவனமாகத் திட்டமிடப்பட்ட ஆறு அடிப்படைகள் உதவுகின்றன.

மக்கள் வங்கியின் சட்ட ஆணை மற்றும் தேசிய கடப்பாடு	பொது நலனுக்கான பொறுப்பினை வங்கி கொண்டிருப்பதே அதன் பிரதான குறிக்கோள் எனப் பாராளுமன்றச் சட்டம் வங்கிக்குப் பணிப்பதால், உபாயமார்க்கமிக்க தீர்மானங்கள் அந்த நோக்கத்தினையும் இலாபமீட்டும்தன்மைக்கான தேவையினையும் பிரதிபலிக்கின்றன.
இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள்	இலங்கை அரசாங்கத்திற்காக பொருளாதார மற்றும் சமூக நலனோம்புகையும் வறுமை ஒழிப்பும் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளதால், வங்கியானது பரந்த அடைவினையும் வலுவான சமூகத் தாக்கத்தினையும் உருவாக்கும் அதேவேளை, உயர் செலவுகளுக்கு முகங்கொடுக்கும் நிலைக்கும் முகங்கொடுக்கின்றது.
உபாயமார்க்கமிக்க முன்னுரிமைகள்	நிலைபேறான வளர்ச்சிக்கான முன்னுரிமைகளை நிறைவேற்றுவதற்காக வங்கியானது தெளிவாக வரையறுக்கப்பட்ட தந்திரோபயத் திட்டத்தில் இயங்குகின்றது.
இயக்க சூழல்	வங்கியின் பிரதான கடப்பாடு பொது நலனாக இருக்கின்ற காரணத்தினால், தேசிய பொருளாதாரத்தின் மீளுக்காகக் கணிசமான பங்களிப்பினை வழங்குவது வங்கியின் பிரதான முன்னுரிமையாக உள்ளது.
பங்குதாரர்கள் பின்னூட்டல் மற்றும் அபிலாஷைகள்	தனது கடப்பாடாகப் பொது நலனைக் கொண்டு ஒரு நிலைபேறான வியாபாரமாக வங்கி இயங்கிவரும் வேளை, சேவை நேர்த்தியினையும் போட்டித்தன்மைமிக்க வங்கியியல் சூழலில் நிதித் தீர்வுகளை அணுகுவதில் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சௌகரியத்தினையும் கோரும் ஏனைய பங்குதாரர்களுக்கான அதன் பொறுப்புப் பற்றியும் அறிந்துள்ளது.
நிலைபேறானதன்மை	தேசத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் நாடு முழுவதும் இலங்கை அரசாங்கத்தின் பொது நலனோம்பலை அமுல்படுத்துவதற்கும் வங்கியின் நிலைபேறானதன்மை இன்றியமையாததாகும்.

முக்கிய தலைப்புக்கள்

GRI 3-2

இல.	தலைப்பு	முன்னுரிமைப் பரிமானங்கள்	E1/E2/S/G வகை	வங்கிக்கான முக்கியத்துவம்	பங்குதாரர்களுக்கான முக்கியத்துவம்	GRI குறிப்பு
1.	ஊழியர் மனநல ஆரோக்கியம்	வேலை – வாழ்க்கைச் சமனிலையினை அடைவதற்கும் வாடிக்கையாளர்களை வங்கியின் வசம் தொடர்ந்து வைத்திருக்கும் உயர் தக்கவைப்பினைப் பேணுவதற்கும் எமது மனித மூலதனத்தின் மனநல ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தல்	S	உயர்வானது	நடுநிலையானது	GRI 401, GRI 404, GRI 406
2.	திறன் முகாமைத்துவப் பயிற்சி, விருத்தி மற்றும் திறன் விருத்தி	சந்தைத் தலைமைத்துவம், வாடிக்கையாளர் தக்கவைப்பு, மற்றும் உயர் வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தல். பாரம்பரிய வாடிக்கையாளர் தளத்தின் புலப்படாத மற்றும் உருவாகிவரும் தேவைகளைப் பூர்த்திசெய்தல். வங்கிக்கு நேரில் வராமல் இலகுவான முறையில் சேவைகளைப் பெற விரும்பும் இளைய தலைமுறையினரின் தேவைகளைப் பூர்த்திசெய்தல்.	S, G	உயர்வானது	நடுநிலையானது	GRI 401, GRI 402, GRI 404, GRI 405, GRI 406, GRI 408, GRI 409
3.	ஊழியர் உற்பத்தித்திறன்	தீவிர போட்டித்தன்மைமிக்க வியாபாரச் சூழலில் உயர் மட்ட ஊழியர் உற்பத்தித்திறன் கட்டாயமானதாகும் என்பதுடன் நிலைபேறான வியாபாரத்திற்காக இவை பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளால் அளவிடப்படுகின்றன.	E1	உயர்வானது	உயர்வானது	GRI 401
4.	வாடிக்கையாளர் அனுபவம்	வங்கியின் தனித்துவமான நலன்களையும் சௌகரியமான டிஜிட்டல் தளங்களையும் அணுகக்கூடிய கிளை வலைமைப்புக்களையும் வழங்கல்.	S	உயர்வானது	உயர்வானது	GRI 418, GRI 417, GRI 411
5.	பொறுப்புவாய்ந்த கடன் வழங்கல்	திரவத்தன்மையினைப் பேணுவதன் மூலமும் உயர் தரக் கடன் வழங்கலையும் மூன்றாம் கட்டத்திற்கு நிதி மாற்றம் செய்வதைக் குறைப்பதையும் முகாமைத்துவம் செய்வதன் மூலமும் வியாபாரத்திற்கும் தேசிய அபிவிருத்திக்கும் உதவுதல்.	E1	உயர்வானது	உயர்வானது	–
6.	விநியோகத்தர் பெறுமதி உருவாக்கம்	தடையற்ற வியாபாரச் செயன்முறைகளை உறுதிப்படுத்துவதற்காக பொருட்களையும் சேவைகளையும் பெறுவதன் மூலமும் ஒப்பந்தங்களை மேற்கொள்வதன் மூலமும் உரிய நேரத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலமும் பொருளாதார வலுவூட்டலை உறுதிப்படுத்தல்.	E1	நடுநிலையானது	தாழ்வானது	GRI 204, GRI 308, GRI 414
7.	அபாயநேர்வு மற்றும் ஆளுகை	உறுதியான அபாயநேர்வுத் தணிப்பு மற்றும் நெறிமிக்க ஆளுகை மூலம் வியாபாரச் சின்னப் பெறுமதியினையும் ஒழுங்குபடுத்துனர் நம்பிக்கையினையும் தக்கவைத்தல்.	G	உயர்வானது	உயர்வானது	GRI 201, GRI 205, GRI 206, GRI 207

இல.	தலைப்பு	முன்னுரிமைப் பரிமானங்கள்	E1/E2/S/G வகை	வங்கிக்கான முக்கியத்துவம்	பங்குதாரர்களுக்கான முக்கியத்துவம்	GRI குறிப்பு
8.	சுற்றாடல் தாக்கம்	சூழலுக்கு நட்பான மற்றும் நிலைபேறான வியாபார நடைமுறைகள் மூலம் நிலைபேறான, பசுமைச் சூழல்.	E2	உயர்வானது	நடுநிலையானது	GRI 302, GRI 303, GRI 305
9.	சமூக பொருளாதாரத் தாக்கம்	வலுவூட்டப்பட்ட பொருளாதாரத்தினை உருவாக்குவதற்காக தேசிய முன்னுரிமைகளுடன் இயைபுறல்.	E1. S	நடுநிலையானது	நடுநிலையானது	GRI 202, GRI 203, GRI 413
10.	சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	ஊழியர்களுக்கு ஒரு பாதுகாப்பான வேலைத்தளத்தினையும் வாடிக்கையாளர்களுக:கு ஒரு வங்கிப் பங்காளரையும் உறுதிப்படுத்தல்.	S, G	உயர்வானது	உயர்வானது	GRI 403, GRI 416
11.	டிஜிட்டல் தலைமைத்துவம்	சந்தையில் கிடைக்கும் நிலைமாற்றமிக்க தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் ஆற்றல்களுடன் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்கள் பரிணமித்துவருகின்றன.	E2	நடுநிலையானது	உயர்வானது	–

E1 – பொருளாதார, E2 – சுற்றாடல், S – சமூக, G – ஆளுகை



மிக முக்கியமான தலைப்புக்களை முகாமைத்துவம் செய்தல்

GRI 3-3

2025 ஆம் ஆண்டிற்கான மிக முக்கியமான தலைப்புக்களை வரையறுக்கையில் நாம் பின்வரும் தொனிப்பொருட்களை அடையாளம் கண்டோம்.

தொனிப்பொருள் ஒன்று - எதிர்காலத்திற்குத் தயாரான மனித மூலதனம்

இயங்குதிறன்மிகு வியாபாரச் சூழலுக்குத் தகவமைக்கக்கூடிய மற்றும் சிரத்தையுடன் கற்கக்கூடிய நோக்கத்தினால் உந்தப்பட்ட அணியே எமது வியாபாரத்தின் நிலைபேறானதன்மைக்கு அத்தியாவசியமானதாகும். பயன்மிக்க கற்றல் அனுபவத்தினை உள்ளடக்கும் திறன் விருத்தியினை வங்கி முன்னுரிமைப்படுத்துகின்றது. பணியாளர்கள் தமது துறையிலும் ஏனைய துறையிலும் தம் திறமையினைப் பயன்படுத்துவதற்கும் தொழில் சுழற்சிக்கும் நீண்ட காலத்தில் தலைமத்துவ விருத்திக்கும் இது வழி வகுக்கின்றது.

மிக முக்கியமான (சார்புடைமை) தலைப்பு	பொருத்தப்பாடு	எமது பதிற்செயற்பாடு	மூலதனத் தாக்கம்	ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைதல் (SDGs)
1. ஊழியர் மனநல ஆரோக்கியம் 2. திறன் முகாமைத்துவப் பயிற்சி, விருத்தி, மற்றும் திறன் மேம்பாடு 3. ஊழியர் உற்பத்தித்திறன்	வங்கியின் பலாபலன்களில் உற்பத்தித்திறனாகப் பிரதிபலிக்கும் கற்றலுக்கு ஊழியர்களின் மனநல ஆரோக்கியம் இன்றியமையாததாகும். எதிர்காலத்திற்குத் தயாரான அணிக்கு வழிகாட்டிப் போஷிக்கும் அதேவேளை வங்கி உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களை அடைவதற்கும் இது உதவுகின்றது.	இந்தப் பிரதான தலைப்புக்களை அமுல்படுத்தி, கண்காணித்து, அறிக்கையிட்டு, முகாமைத்துவம் செய்வதற்கு மனித வளங்கள் திணைக்களம் பொறுப்பானதாகும்.	மனித மூலதன அத்தியாயம் பக்கங்கள் 162-179. சமூக மூலதன அத்தியாயம் பக்கங்கள் 180-197.	3 GOOD HEALTH AND WELL-BEING 5 GENDER EQUALITY 8 DECENT WORK AND ECONOMIC GROWTH

தொனிப்பொருள் இரண்டு - சமூகப் பொறுப்பு

நெறிமிக்க விலைகுறித்தல், தொடர்பாடல், விநியோகம், பொறுப்புமிக்க கடன் வழங்கல் நடைமுறைகள், மற்றும் உரிய காலத்திலான சேவைக் கொடுப்பனவுகள் என்பவை பற்றிய எமது வலியுறுத்தல் வெளியக பங்குதாரர்கள் அவர்களின் அபிலாஷைகளை அடைந்து தேசிய பொருளாதாரத்திற்குச் சாதகமாகப் பங்களிப்பு வழங்குவதற்கு அவர்களை இயலுமாக்குகின்றது. சமூகத்தின் பல பிரிவினர்களும் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த உதவி அவர்களை வலுப்படுத்துவதன் மூலம் அவர்கள் பொருளாதாரத்தில் பெறுமதி உருவாக்குனர்களாகத் தொடர்ந்திருப்பதற்கு நாம் அவர்களுக்கு உதவுகின்றோம்.

மிக முக்கியமான (சார்புடைமை) தலைப்பு	பொருத்தப்பாடு	எமது பதிற்செயற்பாடு	மூலதனத் தாக்கம்	ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைதல் (SDGs)
4. வாடிக்கையாளர் அனுபவம் 5. பொறுப்புவாய்ந்த கடன் வழங்கல் 6. விநியோகத்தர் பெறுமதி உருவாக்கம்	தடையின்றிய செயற்பாட்டினை விநியோகத்தர்கள் உறுதிப்படுத்தியவாறாக நாம் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வியாபாரமாக இயங்கிவருகின்றோம். பொறுப்புவாய்ந்த கடன் வழங்கலை நடைமுறைப்படுத்துவதன் மூலம், வங்கியானது நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்தி நீண்ட காலத்தில் ஒரு நிலைபேறான வியாபாரத்தினை இயக்குகின்றது.	வங்கியின் வியாபார அலகுகளும் கொள்வனவு நடைமுறைகளும் அந்த வியாபாரங்களை இயக்குவதற்குத் தனித்துவமான கொள்கைகளாலும் நடைமுறைகளாலும் ஆளுகை செய்யப்படுகின்றன. இது வங்கியின் அபாயநேர்வுகளை ஏற்பதற்கான திறனையும் தணிப்புச் செயன்முறைகளையும் பங்கீட்டாளர்களிடமிருந்து பெறுமதியினைப் பெறுவதிலும் வழங்குவதிலும் உள்ள ஒழுங்குறுத்தல் இயைபுறலையும் தெளிவாக வரையறை செய்கின்றன.	சமூக மூலதன அத்தியாயம் பக்கங்கள் 180-197 வாடிக்கையாளர் பகுதி பக்கங்கள் 183-188 வியாபாரப் பகுதி பக்கங்கள் 189-191	1 NO POVERTY 10 REDUCED INEQUALITIES 17 PARTNERSHIPS FOR THE GOALS

தொனிப்பொருள் மூன்று – தேசிய தாக்கத்திற்கான நெறிசார் ஆளுகை

இலங்கை அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி உபாயமார்க்கத்திற்கு உதவும் ஒரு பங்காளர் என்ற ரீதியில், நெறிசார் ஆளுகையினையும் உறுதியான அபாயநேர்வுக் கட்டுப்பாட்டினையும் தேசத்திற்கு நீண்ட காலத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் சுற்றாடல் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாடு கொண்டுள்ளோம். இயங்குதிறன்மிக்க வியாபாரச் சூழலுக்குத் தகவமைக்கும் அதேவேளை, தேசம் மீளுருவாக்கம் அடைவதற்கு உதவும் பொது நலனோம்பலே வங்கியின் உபாயமர்க்கங்களின் மையமாக அமைந்துள்ளது.

மிக முக்கியமான தலைப்பு	பொருத்தப்பாடு	எமது பதிற்செயற்பாடு	மூலதனத் தாக்கம்	ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைதல் (SDGs)
7. அபாயநேர்வு மற்றும் ஆளுகை 8. சுற்றாடல் தாக்கம் 9. சமூக பொருளாதாரத் தாக்கம்	நிலைபேறானதன்மை நெறிசார் ஆளுகையின் அடிப்படையிலும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் அபாயநேர்வுத் தணிப்பின் அடிப்படையிலும் வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகளின் அமுல்படுத்தலின் அடிப்படையிலும் நிறுவப்படுகின்றது	வங்கியின் பெருநிறுவன ஆளுகையும் அபாயநேர்வு முகாமைத்துவச் சட்டகமும் மக்களின் பசுமை நாடித்துடிப்பு நிலைபேறானதன்மைக் கொள்கையும் இந்தப் பிரதான தொனிப்பொருட்களை ஆளுகை செய்கின்றன. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் ஆகியன உரிய கால அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அடையாளம் காணப்பட்ட இடைவெளிகள் துரிதமாகத் தீர்க்கப்பட்டுப் பரிகாரம் காணப்படுகின்றன.	நிலைபேறானதன்மை பக்கம் 90 பெருநிறுவன ஆளுகை அறிக்கை பக்கங்கள் 260-309 தொழில்முயற்சி அபாயநேர்வு முகாமைத்துவ அறிக்கை பக்கங்கள் 208-259 இயற்கை மூலதனம் அத்தியாயம் பக்கங்கள் 198-205	11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES 13 CLIMATE ACTION

தொனிப்பொருள் நான்கு – பாதுகாப்பு மற்றும் சௌகரியம்

பரந்த வாடிக்கையாளர் தளத்திற்குச் சௌகரியமான வங்கிச் சேவையினை வழங்கும் வகையில் எமது டிஜிட்டல் ஆற்றல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிலைமாற்றமிக்க தொழில்நுட்பத்தினை ஏற்று நடைமுறைப்படுத்தி, வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு விரைவினையும் துல்லியத்தினையும் நம்பகத்தன்மையினையும் வழங்குகின்றது. இதேபோன்று, வங்கி வளாகமானது சகல பங்குதாரர்களுக்கு பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான சூழலை வழங்குகின்றது.

மிக முக்கியமான தலைப்பு	பொருத்தப்பாடு	எமது பதிற்செயற்பாடு	மூலதனத் தாக்கம்	ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைதல் (SDGs)
10. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு 11. டிஜிட்டல் தலைமைத்துவம்	பரந்த கிளை வலையமைப்பினைக் கொண்ட மற்றும் பெருநிறுவனத் தனிநபர்களையும் உள்ளடக்கிச் செல்லும் வாடிக்கையாளர் தளத்தினைக் கொண்ட ஒரு வங்கி என்ற ரீதியில், சகல அலுவலகங்களுக்கும் கிளைகளுக்கும் எமது முறைமைகளுக்கும் பாதுகாப்பினை வழங்குவது எமது கடமையாகும்.	மனித வளக் கொள்கைகளும் நடைமுறைகளும் பூரணமான முறையில் சுகாதாரத்தினையும் பாதுகாப்பினையும் உள்ளடக்குவதுடன் கிரமமான அடிப்படையில் வியாபாரத் தொடர்ச்சி ஒத்திகைகளும் பயிற்சியும் நடத்தப்படுகின்றன. வங்கியின் அனைத்து வசதிகளிலும் டிஜிட்டல் கட்டமைப்பினை விரிவுபடுத்துவதை வங்கியின் தகவல் தொழில்நுட்ப, டிஜிட்டல் கொள்கை நடைமுறைகள் வலியுறுத்துகின்றன.	உற்பத்தி மூலதனம் மனித மூலதனம் IT மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவை அத்தியாயம் பக்கங்கள் 127-131.	9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

மிகப் பிரதான தலைப்புக்களில் மேற்கொள்ளப்படும் எந்த மாற்றங்களும் முகாமைத்துவத்தினால் கலந்துரையாடப்படுவதுடன் அவசியமெனின் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தந்திரோபாயம்

GRI 2-22, 23, 24

இலங்கை முழுவதும் நிலைபேறான வளர்ச்சியினை மேற்கொள்ளும் ஒரு நம்பிக்கைக்குரிய பங்காளர் என்ற ரீதியில் நாம் எமது பாத்திரத்தினை வலுப்படுத்தி, எமது வாடிக்கையாளர்களுக்கும் பங்கீட்டாளர்களுக்கும் நாம் சேவையாற்றும் பரந்த சமுதாயத்திற்கும் பெறுமதியினை வழங்குவதற்காக எமது நிலைமாற்றமிக்க பயணத்தினைத் தொடர்கின்றோம்.

முக்கிய கவனம்

நாம் புத்தாக்கத்திலும் மீண்டெழுந்தன்மையிலும் வாடிக்கையாளர் மீது கவனம் செலுத்துவதில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இருந்து பயன்பெறுவதிலும் நிதி உள்ளடக்கத்தினை அதிகரிப்பதிலும் எமது இயக்கத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் நிலைபேறானதன்மையினைப் புகுத்துவதிலும் கவனம் செலுத்தினோம். நாம் பொது நலனுக்கான எமது ஆணையுடன் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளில் அரசாங்கத்திற்கு உதவி வழங்கி தீர்மானம் வகுத்தல் முதல் கிளைகளில் சேவை வழங்கல் வரை உலகளாவிய சிறந்த நடைமுறைகளை ஒரு நியமமாகப் பின்பற்றினோம்

உபாயமார்க்கமிக்க குறிக்கோள்கள்

நாம் மூன்று உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களை உருவாக்கி அவற்றினை அடைவதற்கான ஒரு தெளிவான பாதையினை நிர்ணயிப்பதற்காக எமது வளங்களைச் சீரமைத்தோம்.

- உன்னதத்தினை நோக்கிய நகர்வு
- வாடிக்கையாளரை மையப்படுத்திய சேவையை உருவாக்கல்
- எதிர்காலத்திற்குத் தயாராக இருத்தல்

இலக்கை அடைதலுக்கான அணுகுமுறை

எமது உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களை அடைவதற்கு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல காரணிகள் ஒன்றுசேர்ந்தன. அவற்றில் பிரதானமானது, புத்தாக்கத்தின் மீதான மற்றும் டிஜிட்டல் தலைமைத்துவத்தின் மீதான எமது தடையற்ற கவனக்குவிப்பும் தொடர்ச்சியான முயற்சியுமாகும். நாம் அதிநவீன தொழில்நுட்பத்தில் முதலீடு செய்துள்ளோம், பழைய முறைமைகளை அகற்றித் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தியுள்ளோம், டிஜிட்டல் செயன்முறையில் கட்டற்ற நிலைமாற்றத்தினை அடைந்துள்ளோம், கிளை வலையமைப்புக்களை வாடிக்கையாளர் மையங்களாக மாற்றியுள்ளோம், செலவுச் சிக்கனம் மற்றும் மதிநுட்பமான முதலீடுகள் என்பவற்றின் மூலம் நிலைபேறானதன்மையினை நோக்கிப் பணியாற்றுகின்றோம்.

நாம் அமுல்படுத்திய முன்னெடுப்புக்கள் இக்குறிக்கோள்களை அடைவதற்கு வெற்றிகரமாகப் பங்களிப்பு வழங்கியுள்ளன.

உபாயமார்க்கமிக்க முக்கிய கவனப் பரப்புக்கள்	உன்னதத்தினை நோக்கிய நகர்வு	வாடிக்கையாளரை மையப்படுத்திய சேவையை உருவாக்கல்	எதிர்காலத்திற்குத் தயாராக இருத்தல்
	செயற்திறன் மற்றும் விரைவான மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்கு	தரவுகளால் உந்தப்படும் மனப்பாங்கு	வளர்ச்சி மனப்பாங்கு
மக்கள் மற்றும் செயன்முறை மேம்பாடு மூலம் சேவை நேர்த்தி	✓	✓	
இயக்க வினைத்திறன் மற்றும் செலவுத் தலைமைத்துவம்	✓		✓
சேவைக் கலாசாரத்தினால் உந்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்		✓	
வலுப்படுத்தப்பட்ட கடன் செயற்பாடு மற்றும் கடன் தொகுதித் தரம்	✓		✓
தேசிய பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளுடனான ஒருங்கியைபு		✓	✓
டிஜிட்டல் ஆற்றலால் வழிநடத்தப்படும் வியாபார வளர்ச்சி	✓	✓	✓
உபாயமார்க்க ரீதியாக முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் பிரிவுகளுடன் தொடர்புகளை விரிவாக்கல்		✓	✓
உறுதியான பெருநிறுவன ஆளுகை மற்றும் பங்காளர் பாதுகாப்பு	✓		✓
சமனிலையான மற்றும் நிலைபேறான வளர்ச்சி நாட்டம்	✓	✓	✓

பிரதிபலன்

ஒன்றையொன்று சார்ந்திருக்கும் எமது முக்கிய கவனமீட்டப்பட்ட செயற்பாடுகள் தடையின்றி ஒன்றுகலந்து விதிவிலக்கான பிரதிபலன்களை பெற்றுத்தந்துள்ளன. கூட்டிணைந்த அணுகுமுறை சக்திமிக்க கூட்டுச் செயற்பாடுகளை உருவாக்கி, எமது பிரதான வியாபாரத்தினை வலுப்படுத்தி, புத்தாக்கத்தினை அதிகரித்து, எமது சகல வியாபாரங்களிலும் உன்னதமான வாடிக்கையாளர் பெறுமதியினை வழங்குவதற்காக மீண்டெழுந்தன்மையினை ஊக்குவித்துள்ளது.

உபாயமார்க்கமிக்க முக்கியகவனப் பரப்பு	**செயற்படுத்தக்கூடியது** உபாயமார்க்கமிக்க முன்னெடுப்புக்கள் உபாயமார்க்கமிக்க முக்கியகவனப் பரப்புக்களுடன் இயைபுறும் வகையில் ஆக்கப்பட்டன	**பலாபலன்** உபாயமார்க்கமிக்க முக்கியகவனப் பரப்புக்களின் முன்னேற்றத்தினைப் பிரதிபலிப்பதற்கு பல பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன
மக்கள் மூலமும் செயன்முறை மேம்பாடு மூலமும் சேவை நேர்த்தி	பௌதிகச் சான்றினையும் உட்கட்டமைப்பினையும் மேம்படுத்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, செயன்முறை மேம்பாடு, கடன் வழங்கலையும் அறவீட்டுச் செயன்முறையினையும் வலுப்படுத்தல் போன்ற உபாயமார்க்கமிக்க கவனக்குவிப்புப் பரப்புக்களை உள்ளடக்குவதற்கு 13 முன்னெடுப்புக்கள்.	32
செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் செலவுத் தலைமைத்துவம்	தரப்படுத்தல், செயன்முறை எளிதாக்கல், செயன்முறை மற்றும் நடைமுறைகளில் சமச்சீரானதன்மை, செலவு நலன் மற்றும் சாத்தியவளப் பகுப்பாய்வு, மற்றும் அறிவியல் ஆற்றல் திட்டமிடல் போன்ற 8 முன்னெடுப்புக்கள்.	18
சேவைக் கலாசாரத்தினால் உந்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்	சேயற்திறன்மிக்க ஊழியர் ஈடுபாடுகள், வாடிக்கையாளரை மையப்படுத்திய உற்பத்திகள், புதிய அபிவிருத்திகள் போன்ற 12 முன்னெடுப்புக்கள்.	21
வலுப்படுத்தப்பட்ட கடன் செயற்பாடுகள் மற்றும் கடன்தொகுதித் தரம்	ஆரோக்கியமான கடன் தொகுதி மற்றும் இறுக்கமான மீளல் செயன்முறை, அர்ப்பணிப்புமிக்க கடன் உத்தியோகத்தர்களை உருவாக்கல் போன்ற 7 முன்னெடுப்புக்கள்.	24
தேசிய பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் ஒருங்கியைதல்	தொழில்முனைவோர்களையும் பெண்கள் தலைமைதாங்கும் வியாபாரங்களையும் SMEக்களையும் கைத்தொழில்துறை அபிவிருத்திகளையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் பண அனுப்புகையினையும் ஊக்குவித்தல் போன்ற 7 முன்னெடுப்புக்கள்.	14
டிஜிட்டல் ஆற்றலைத் தலைமையாகக் கொண்ட வியாபார வளர்ச்சி	டிஜிட்டல் வழியேயான புதி மேம்பாடுகள், மேம்பட்ட முகாமைத்துவ அறிக்கையிடல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட சூழல் மூலம் வாடிக்கையாளர் புலனுணர்வுகள் போன்ற 10 முன்னெடுப்புக்கள்.	20
உபாயமார்க்கமிக்க வகையில் முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் பிரிவிற்கு விரிவுபடுத்தல்	பெருநிறுவன நிலைப்படுத்தல் மற்றும் வியாபாரச் சின்ன உருவாக்கல், அரசுக்குச் சொந்தமற்ற வியாபாரங்களில் படிப்படியான வளர்ச்சி, புத்தாக்கமிக்க சில்லறை உற்பத்தி உருவாக்கம் போன்ற 15 முன்னெடுப்புக்கள்.	11
வலுவான பெருநிறுவன ஆளுகை மற்றும் பங்குதாரர் பாதுகாப்பு	நிதியிடல் நியமங்களில் உள்ள வெளிவாரியான அபிவிருத்திகளை மேற்பார்வையிடல், வங்கியின் கணக்காய்வு மற்றும் சட்ட தேவைப்பாடுகளின் விரிவாக்கம், தொழிநுட்ப ஆளுகை, மற்றும் இலங்கை மத்திய வங்கியின் இணக்கம், வலுவான தகவல் பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் போன்ற 31 முன்னெடுப்புகள்.	12
சமனிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைபேறான வளர்ச்சி நாட்டம்	பெருநிறுவன வங்கிச் சேவையினைத் தரமுயர்த்துதல், செயற்திறன்மிக்க நிதி முகாமைத்துவம், உபாயமார்க்கமிக்க திட்டம் மற்றும் செயலாற்றுகை மதிப்பீடு உருவாக்கம், சர்வதேசமயமாக்கம் போன்ற 11 முன்னெடுப்புக்கள்.	6

வியாபார மாதிரியில் நகர்வு

2025 ஆம் ஆண்டில், அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற வங்கியின் பாரம்பரியத் தோற்றப்பாட்டில் இருந்து தனியார் துறை வியாபாரத்துடன் தீவிரமாக ஈடுபடும் ஒரு நிறுவனம் எனும் ஓர் உபாயமார்க்கமிக்க நகர்வினை நாம் எடுத்தோம். கட்டண அடிப்படையிலான வருமானம், வட்டி வருமானம் மற்றும் எமது கடன் தொகுதியின் விரிவாக்கம் என்பற்றில் இந்த நிலைமாற்றம் கணிசமான வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கியது. ஆரசாங்கக் கொள்கைகளுடனான நெருக்கமான இணைப்புடன், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் மற்றும் நுண் நிதித் துறைகள் ஆகியவற்றினை வலுப்படுத்துவதற்காக உபாயமார்க்கமிக்க முன்னெடுப்புக்களை ஒருங்கிணைத்ததன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு உதவுவதில் நாம் எமது வகிபாகத்தினை வலுப்படுத்தி, அபிவிருத்திக் கடன் வசதிகளை விரிவுபடுத்தினோம். செலவுச் சிக்கனத்தின் மீது எமது கவனக்குவிப்பினைக் கூர்மைப்படுத்தி, எமது வாடிக்கையாளர்களுக்கும் பங்கீட்டாளர்களுக்கும் பெறுமதியினை வழங்கி நாம் செயற்பாட்டு வினைத்திறனினை உறுதிப்படுத்தினோம்.

செயற்திறனை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள்

எமது தந்திரோபாய குறிக்கோள்களை அடைவதற்காக குறுகிய காலம் முதல் இடைக்காலம் வரையான காலப்பகுதியில் பல பிரதான முன்னெடுப்புக்கள் அமுல்படுத்தப்பட்டன.



குறுகிய காலம்	இடைக்காலம்
செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் செலவுத் தலைமைத்துவம்	மக்கள் மற்றும் செயன்முறை மேம்பாடு மூலம் சேவை நேர்த்தி
கடன் வழங்கும் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டதுடன் வழங்கப்பட்ட கடன்களின் தரம் பேணப்பட்டது	சேவைக் கலாசாரத்தினால் உந்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்
டிஜிட்டல் ஆற்றல் முன்னெடுக்கும் வியாபார வளர்ச்சி	தேசிய பொருளாதார அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் ஒருங்கியைவு
உபாயமார்க்கமிக்க மற்றும் வளர்ந்து வரும் பிரிவுகளினுள் விரிவாக்கம்	வலுவான பெருநிறுவன ஆளுகை மற்றும் பங்காளர்களின் பாதுகாப்பு
	சமனிலையான மற்றும் நிலைபேறான வளர்ச்சி நாட்டம்

நிலைபேறானதன்மைக் கூற்று

GRI 2-22

நிலைபேறானதன்மை என்பது எமது உபாயமார்க்கத்தினதும் செயற்பாடுகளினதும் மையத்தில் நிலைகொண்டுள்ளது. பெறுமதிக்கான எமது நீண்ட காலக் கடப்பாடு அளவிடக்கூடிய இலக்குகள் மற்றும் வெளிப்படைத்தன்மையான அறிக்கையிடல் என்பவற்றின் வழிகாட்டலுடன் எமது வியாபாரம் முழுவதிலும் சுற்றாடல் பேண்தகைமை, சமூகப் பொறுப்பு மற்றும் உறுதியான ஆளுகை (ESG) என்பவற்றினைப் பதியவைப்பதற்கான எமது அணுகுமுறையில் பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டு, ESG இற்கான எமது கடப்பாட்டினை வலுப்படுத்திய நிலைபேறான நிதிக் கொள்கை மற்றும் நடைமுறை வழிகாட்டல்களை நாம் அறிமுகப்படுத்தி அமுல்படுத்தினோம். கடன் வழங்கல், முதலீடு, மற்றும் அபாயநேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியவை பற்றிய கொள்கை எமக்கு வழிகாட்டியது. இவை, நிலைபேறானதன்மை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றினை மேம்படுத்திய முன்னெடுப்புக்களுக்கு உதவுவதற்கு எம்மை இயலுமாக்கியது. பசுமை நிதிப் பகுப்பியல் பற்றிய ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இயைபுறுவதற்கான எமது கடப்பாட்டினை இது பிரதிபலிக்கின்றது. இது தேசிய அபிவிருத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தும் முன்னுரிமைத் துறைகளை அடையாளம் காண்கின்றது. எமது ESG முக்கியகவனம் பற்றிய விரிவான அறிக்கை 94-95 ஆம் பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது.

நிலைபேறானதன்மைக் கொள்கை மற்றும் கடப்பாடுகள்

GRI 2-23

நிலைபேறுமிக்க நிதிக் கொள்கை மற்றும் நடைமுறைகள் வழிகாட்டல்களை (கொள்கை) வியாபகமான ஒரு போர்வையாகக் கொண்டு, ஒவ்வொரு பரப்பினதும் ஆளுகை மற்றும் இயக்கங்களுக்கு ஏற்புடையதான தனித்துவமான கொள்கைகளாலும் நடைமுறைகளாலும் எமது வியாபாரம் ஆளுகை செய்யப்படுகின்றது. இவை இந்த அறிக்கையின் குறிப்பிட்ட அத்தியாயங்களில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவை வியாபாரத்தின் ஒவ்வொரு பரப்புக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

வங்கி அதன் பிரதான வியாபார நடைமுறைகளிலும் சுற்றாடல் பொறுப்பினைப் பற்றிப்பிடிப்பதிலும் சமூக ஒப்புரவிலும் வலுவான ஆளுகையிலும் நிலைபேறானதன்மையினைப் பதியவைப்பதற்குக் கடப்பாடு கொண்டுள்ளது. நாம் நிலைபேறானதன்மை எனும் பார்வையின் மூலமாகக் கடன் வழங்கலை மதிப்பிடுவதுடன் சகல கருத்திட்ட நிதியிடல்களும் கண்டிப்பான சுற்றாடல் பொறுப்பு மற்றும் சமூகப் பொறுப்பு என்பவற்றினைக் கொண்டு வடிகட்டப்படுகின்றன. சமூகத்திற்குச் சாதகமாகப் பங்களிப்பு வழங்கி, கருத்திட்டத்தின் தனிவிளக்க விபரங்களுக்கு அமைவாகச் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காத முன்னெடுப்புக்களுக்கு மாத்திரமே நிதிகள் வழங்கப்படுகின்றன.

ஒரு நிலைபேறான செயற்பாட்டு உபாயமார்க்கமாகத் தகைமைபெற்றது → அல்லது → நிலைமாற்றமடைதல் → அல்லது → கண்காணிப்புப் பட்டியல் → அல்லது → தகைமைபெறவில்லை

தோற்றப்பாடு 2026

நிலைபேறானதன்மை பிரதானமானதாக இருக்கையில், நெறிசார் ஆளுகைக்கான மற்றும் வலுவான அபாயநேர்வு முகாமைத்துவத்திற்கான தளராக் கடப்பாட்டுடன் எமது வங்கியானது நிதி ரீதியாகப் பலமானதாகவும் சமூக ஒப்புரவுமிக்கதாகவும் சுற்றாடல் ரீதியாக வலுவான அமைப்பாகவும் இருப்பதற்கு எமது உபாயமார்க்கமிக்க குறிக்கோள்கள் எமது வங்கியினைத் தொடர்ந்தும் வடிவமைத்து வலுப்படுத்தும். இந்த விரும்பத்தக்க பெறுபேற்றினை அடைவதற்கு நாம் பல பிரதான முன்னெடுப்புக்களில் கவனம் செலுத்துவோம்.

நிலைபேறான வியாபார வளர்ச்சி	வாடிக்கையாளர் திருப்தி மற்றும் வினைத்திறன்மிக்க சேவை விநியோகம்	டிஜிட்டல் தலைமைத்துவம்	ஊழியர் ஈடுபாடு மற்றும் திருப்தி
பங்காளர்களின் நாம் சேவையாற்றும் சமுதாயங்களுக்கும் நீண்ட காலப் பெறுமதி உருவாக்கத்தினை உறுதிப்படுத்தி, எமது செயற்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்தினுள்ளும் நிலைபேறானதன்மை-யினைப் பதிய வைப்பதன் மூலம் நாம் தொடர்ந்தும் மீண்டெழுந்தன்மைமிக்க வளரச்சியினை நிகழச் செய்வோம்.	தனித்துவமான தீர்வுகள், கட்டற்ற சேவை, நம்பிக்கை மற்றும் விசுவாசத்தினைக் கட்டியெழுப்பும் பதிற்செயற்பாட்டுக் கலாசாரம் என்பவற்றின் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதில் எமது கவனம் தொடர்ந்திருக்கும்.	அதி நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம், சௌகரியத்தினையும் அணுகற்தன்மையினையும் மீள்வரைவிலக்கணப்படுத்தும் புத்தாக்கமிக்க தளங்கள் மற்றும் பாதுகாப்பான தீர்வுகளை வழங்குவதன் மூலம் ஒரு டிஜிட்டல் தலைவர் என்கின்ற எமது நிலையினை நாம் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.	பணியாளர் பயிற்சிக் கல்லூரி, தொழில் புரிகையில் வழங்கப்படும் பயிற்சி, மற்றும் சிரேஷ்ட பணியாளர்கள் அறிவினைப் பகிரும் அமர்வுகள் என்பவற்றின் மூலம் தொடரும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி. தேவையேற்படுகையில் வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.
	ஆளுகை மற்றும் வகைப்பொறுப்பு	பல்வகைமைப்படுத்தல் மற்றும் புத்தாக்கம்	செலவுச் சிக்கனத்தில் முன்னிலை பெறல்
	வெளிப்படைத்தன்மையினையும் நெறிசார் நடத்தையினையும் உலகளாவிய ரீதியிலான மிகச் சிறந்த நடைமுறைகளுக்கு இயைபுறுவதையும் உறுதிப்படுத்தி வலுவான ஆளுகைச் சட்டகங்கள் எமது தீர்மானங்களுக்குத் தொடர்ந்தும் வழிகாட்டும்.	எமது முதலீட்டுத் தொகுப்பினையும் கடன் தொகுப்பினையும் புதிய சந்தைகளுக்கும் புதிய உற்பத்திகளுக்கும் விரிவாக்குவது மீண்டெழுந்தன்மையினை மேம்படுத்தும் அதேவேளை, புத்தாக்கமானது துரிதமாகப் பரிணமித்து வரும் நிதிச் சூழலில் தகவமைக்கும்தன்மையினை உந்திச் செலுத்தும்.	செலவுச் சிக்கனத்தினால் உச்சப்பயன் பெறுவதன் மூலமும் செயற்பாட்டில் காட்டும் உன்னதத்தின் மூலமும் நாம் வினைத்திறனைப் பேணி, இலாபமீட்டுந்தன்மையினை வலுப்படுத்தி நிலைபேறான இலாபங்களை வழங்குகின்றோம்.

எமது மதிப்பு உருவாக்க மாதிரி

உள்ளீடுகள்

நிதி மூலதனம்

பக்கங்கள் 142 இருந்து 149

வைப்புக்கள் **ரூ. 3,229.9 பில்.**

வங்கிகளில் இருந்தும் ஏனைய நிறுவனங்களில் இருந்தும் கடன் பெற்றவை **ரூ. 126.0 பில்.**

பின்னிலைப்படுத்தப்பட்ட காலக்கடன்கள் **ரூ. 40.6 பில்.**

உற்பத்தி மூலதனம்

பக்கங்கள் 150 இருந்து 155

சொத்து, ஆலை மற்றும் உபகரணம் **ரூ. 60.7 பில்.**

நாடளாவிய கிளை வலையமைப்பு எண்ணிக்கை **746**

ATMs, CDMs, and CRMs (எண்ணிக்கை) **1,181**

மனித மூலதனம்

பக்கங்கள் 162 இருந்து 179

அர்ப்பணிப்பு மிக்க ஊழியர் அணி **8,122**

பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு **ரூ. 190.3 மில்.**

ஊழியர் ஊதியம் மற்றும் நலன்கள் **ரூ. 38.2 பில்.**

அறிவுசார் மூலதனம்

பக்கங்கள் 156 இருந்து 161

வர்த்தக முத்திரை மதிப்புச் சுட்டெண் **4.0**

83% மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் டிஜிட்டல் முறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் புதிய முதலீடு **ரூ. 1.4 மில்.**

பிட்ச் லங்கா கடன் தரமிடல் **AA–(LKA)**

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

பக்கங்கள் 180 இருந்து 197

முதலீட்டாளர்கள்

பங்காளர் நிதிகள் **ரூ 219.0 பில்.**

வியாபாரப் பங்காளர்கள்

e-GP மூலமான விநியோகத்தர் பதிவு

இணைந்த வங்கிகளின் எண்ணிக்கை **42**

வொஸ்ட்ரோ முகவர்களின் எண்ணிக்கை **94**

வாடிக்கையாளர்கள்

வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை **15.2 மில்லியன்**

புதிய வாடிக்கையாளர்கள் **540,740**

ATMs, CDMs, CRMs எண்ணிக்கை **1,182**

சமுதாயம்

சமுதாய முதலீடு **ரூ. 26.9 மில்.**

சமுதாய மட்ட அடிப்படையிலான அபிவிருத்திக் கடன் வழங்கல் **ரூ. 15.8 பில்.**

உள்ளூறைப் பயிற்சி மூலம் நன்மையடைந்த பல்கலைகழக மாணவர்களின் மொத்த எண்ணிக்கை **713**

இயற்கை மூலதனம்

பக்கங்கள் 198 இருந்து 205

சக்தி நுகர்வு **10,168.4 GJ**

நீர் நுகர்வு **11.0 ML**

பசுமைக் கடன் **LKR 6.9 Bn.**

மொத்த உமிழ்வு **1,901.7 tCO_2e**

செயன்முறை

வியாபாரச் செயற்பாடுகள் மற்றும் உதவிச் சேவைகளால் முன்னெடுக்கப்படுபவை

வியாபாரச் செயற்பாடுகள்

சில்லறை வங்கிச் சேவை, பெருநிறுவன வங்கிச் சேவை, வர்த்தகக் கடன், SME மற்றும் அபிவிருத்தி வங்கிச் சேவை, கடல்கடந்த வாடிக்கையாளர் சேவைகள், சர்வதேச வங்கிச் சேவை, திறைசேரி, முதலீட்டு வங்கிச் சேவை, கடன் அட்டைகள்

உதவிச் சேவைகள்

மனித வளங்கள், IT மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவை, கொள்வனவுச் செயன்முறை, நிர்வாகம், நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு, சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல், அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் இயைபுறல், உபாயமார்க்கத் திட்டமிடல், நிதி முகாமைத்துவம், மூலதன முகாமைத்துவம், கிளை முகாமைத்துவம்.

செலவினை ஏற்படுத்துபவை

வட்டிச் செலவு, உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பம், மனித வளங்கள், நிர்வாகச் செலவுகள், சந்தைப்படுத்தல் செலவுகள்

வருமானம் ஈட்டுபவை

சில்லறை வங்கிச் சேவை, பெருநிறுவன வங்கிச் சேவை, வர்த்தகக் கடன், SME & அபிவிருத்தி வங்கிச் சேவை, கடல்கடந்த வாடிக்கையாளர் சேவைகள், சர்வதேச வங்கிச் சேவை, திறைசேரி, முதலீட்டு வங்கிச் சேவை, கடன் அட்டைகள்.

பிரதான கடன் அபாயநேர்வுகள்

கடன் அபாயநேர்வு, வெளிநாட்டு நாணய அபாயநேர்வு, திரவத்தன்மை அபாயநேர்வு, செறிவாதல் அபாயநேர்வு, தொழில்நுட்ப அபாயநேர்வு, சந்தை அபாயநேர்வு, செயற்பாட்டு அபாயநேர்வு, நன்மதிப்பு அபாயநேர்வு, இயைபுறல் அபாயநேர்வு, மோசடி அபாயநேர்வு, காலநிலை அபாயநேர்வு, அரசியல் அபாயநேர்வு

வெளியீடுகள்

நிதி மூலதனம்

பக்கங்கள் 142 இருந்து 149

- வரிக்கு முந்திய இலாபம் **ரூ. 64.4 பின்.**
- வரிக்குப் பின்னைய இலாபம் **ரூ. 40.2 பின்.**
- சொத்துக்கள் மீதான திரும்பல் (வரிக்கு முன்னையது) **1.8%**
- உரிமை முதல் மீதான திரும்பல் (வரிக்குப் பிந்தியது) **20.1%**

உற்பத்தி மூலதனம்

பக்கங்கள் 150 இருந்து 154

- சொத்து, ஆலை, மற்றும் உபகரணத்திற்கான சேர்க்கைகள் **ரூ. 12.7 பின்.**
- ATMs, CDMs, மூலமான கொடுக்கல்வாங்கல் **ரூ. 2.4 றில்.**
- சகல பங்காளர் சுகாதாரமும் பாதுகாப்பும்

மனித மூலதனம்

பக்கங்கள் 162 இருந்து 179

- புதிய ஆட்சேர்ப்புக்கள் **755**
- பால்நிலை விகிதாசாரம் (ஆண்:பெண்) **2:3**
- பதவியுயர்வுகள் **685**
- தக்கவைப்புக்கள் **97%**

அறிவுசார் மூலதனம்

பக்கங்கள் 156 இருந்து 161

- ஓட்டுமொத்த வாடிக்கையாளர் திருப்தி **93%**
- டிஜிட்டல் தீர்வுப் பதிவு **5.2 மில்லியன்**
- விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் **37**
- ஒன்லைன்/மொபைல் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை சுமார் 200 பில்லியன்
- சேயன்முறை தன்னியக்கமாக்கப்பட்டது

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

பக்கங்கள் 180 இருந்து 197

முதலீட்டாளர்கள்

- பங்கொன்றுக்கான ஈட்டல் (EPS) **ரூ. 40.2 மில்.**
- பங்கொன்றுக்கான தேறிய சொத்துக்கள் **ரூ. 219 மில்.**

வியாபாரப் பங்காளர்கள்

- வியாபாரப் பங்காளர்கள் உள்நாட்டுக் கொள்கவனவுகளின் மொத்தப் பெறுமதி **ரூ. 27.2 பில்.**
- வெளிநாட்டுக் கொள்வனவுகளின் மொத்தப் பெறுமதி **ரூ. 1.1 பில்.**
- புதிய வொஸ்ட்ரோ முகவர் உறவுகள் **6**

வாடிக்கையாளர்கள்

- NPL விகிதாசாரம் **4.3%**
- டீஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் எண்ணிக்கை **197 மில்லியன்**
- டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி **ரூ. 1.73 றில்.**
- வாடிக்கையாளர் இயைபுறல் தீர்வுகள் **89.7%**

சமுதாயம்

- வருடத்தின் போது நடத்தப்பட்ட CSR கருத்திட்டங்களின் எண்ணிக்கை **19**
- சமுதாய மட்ட அபிவிருத்திக் கடன் வழங்கலின் கீழ் அளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை **25,747**
- உள்ளுறைப் பயிற்சியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த இளமானிகளின் எண்ணிக்கை **499**

இயற்கை மூலதனம்

பக்கங்கள் 190 இருந்து 205

- சூரிய சக்தியினைப் பயன்படுத்திப் பிறப்பிக்கப்பட்டவை **4.9 MWh**
- பசுமை நிதியிடலின் கீழான புதிய கடன்கள் **ரூ. 3.6 பில்.**
- GHG உமிழ்வில் ஏற்பட்ட குறைவு **3.0 tCO_2 e**
- மீள் சுழற்சி செய்யப்பட்ட காகிதம் **5,459 Kg**

பிரதிபலன்கள்

பங்குடைமையாளர்

- முதலீடுகள் மீதான திரும்பல்
- வள ஒதுக்கீட்டின் மீதான எதிர்காலக் கவனக்குவிப்பு
- தேசிய அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் பங்காண்மை அமைத்தல்

வாடிக்கையாளர்கள்

- புத்தாக்கமிக்க நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான அணுகல்
- போட்டித்தன்மைமிக்க வீதங்கள் மற்றும் கட்டணங்கள்
- பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை
- ஊழியர்களுக்கான டிஜிட்டல் சௌகரியம்

ஊழியர்கள்

- தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில் வளர்ச்சி
- போட்டித்தன்மைமிக்க நட்டஈடு மற்றும் நலன்கள்
- சாதகமான வேலைச் சூழல்
- வேலை - வாழ்க்கைச் சமனிலையில் முன்னேற்றங்கள்

வியாபாரப் பங்காளர்கள்

- உரிய காலத்திலான கொடுப்பனவுகள்
- உறுதியான மற்றும் நம்பத்தக்க பங்காண்மைகள்
- பொறுப்புவாய்ந்த வியாபார நடைமுறைகள்

சமுதாயம்

- நிதி உள்ளடக்குந்தன்மை
- வியாபார வளர்ச்சி
- சமூக உரிமம்

ஒழுங்குபடுத்துனர்

- நன்கு தாபிக்கப்பட்ட ஆளுகை மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள்
- நுகர்வோர் பாதுகாப்பு/தரவுப் பாதுகாப்பு

ஆதரவு

பொது நல மனப்பான்மை - வலுவான நிர்வாகம் - அமைப்பு - நோக்கு - பணி - இடர்நேர்வு முகாமைத்துவம் - வணிக நெறிமுறைகள் - கொள்கைகள் - நிலைத்தன்மையில் கவனம் செலுத்துங்கள்

எமது பெறுமதி உருவாக்க மாதிரிகள் ஒரு நிலைபேறான வியாபாரத்தினை இயக்குகையில் எமது பங்காளர்களின் அர்த்தபூர்வமான பெறுமதியை வழங்கும் வழியினை வரையறுக்கின்றன. நாம் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பெறுமதி பற்றிய அறிவார்ந்த தீர்மானங்களை வகுப்பதற்கு இவை உதவுகின்ற அதேவேளை, எமது இணைந்த முயற்சிகள் மற்றும் எமது தனித்துவமான பெறுமதி முன்மொழிவுகள் என்பவற்றின் பூரணமான நோக்கெல்லையினை உள்வாங்குகின்றன. தேசிய அபிவிருத்தியில் விரிவான அடைவினைக் கொண்ட நம்பிக்கைக்குரிய பங்காளர் என்ற ரீதியில் இந்த மாதிரியானது எமது அடையாளத்தினை வலுப்படுத்துவதற்கான இன்றியமையாத பாகமாகும்.

எமது சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மீதான முக்கிய கவனம்

சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை என்பவற்றுக்கான கோட்பாடுகள் எம் வியாபாரச் செயற்பாடுகள் அனைத்தினதும் மையமாக உள்ளன. இது ஓர் ஒழுங்குபடுத்தல் முன்னுரிமையாகும். இது ஒழுங்குபடுத்துனரால் அறிமுகப்படுத்தப்பட்ட பசுமைப் பகுப்பாய்வியல், குறிப்பாக நிதியிடல் மற்றும் கடன் வழங்கலுடன் இயைபுறுவதை உறுதிப்படுத்துவதற்காக நாம் பல முன்னெடுப்புக்களை அமுல்படுத்த எம்மை இட்டுச்சென்றது.

எமது முக்கிய கவனம்

பெருநிறுவன நிலைபேறானதன்மைக் கொள்கையின் அறிமுகத்துடன் நாம் 2016 ஆம் ஆண்டில் எமது நிலைபேறான பயணத்தினைத் தொடங்கினோம். இது 2025 ஆம் ஆண்டில் நிலைபேறான நிதிக் கொள்கை மற்றும் நடைமுறை வழிகாட்டல்களை உருவாக்கின.

எமது உபாயமார்க்கம்

சகல வியாபாரச் செயற்பாடுகளிலும் ESG கோட்பாடுகளைப் பதியவைப்பதில் எமது உபாயமார்க்கம் கவனம் குவிக்கின்றது. இந்தப் பெறுமதிகள் எதிர்காலத்திற்காக ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காக நாம் பல முன்னெடுப்புக்கள் மூலம் உள்நிலை ஆற்றல்களை வலுப்படுத்தினோம்.

ஆற்றல் உருவாக்க முன்னெடுப்புக்கள்

கோட்பாடுகள் மறறும் நடைமுறைகள் பற்றிய வலுவான புரிதலை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட பூரணமான ESG நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் நாம் எமது ஊழியர்களில் முதலீடு செய்தோம். இந்த முன்னெடுப்பின் ஒரு பாகமாக, சகல கடன் வழங்கல் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களில் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக குறித்தொதுக்கப்பட்ட கடன் அதிகாரிகள் தேவைப்படுத்தப்பட்டனர்.

கடன் வழங்கல் நடைமுறைகளில் ESG கருதுகோள்களை ஒருங்கிணைப்பதற்காக நிலைபேறானதன்மை நிதிக் குழு மற்றும் பசுமை நிதி மதிப்பீட்டுக் குழு என்பன தாபிக்கப்பட்டன. இந்த மதிப்பீடுகள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் இலங்கையின் பசுமைப் பகுப்பியல் பணிப்புரைகளுடன் இயைபுறுகின்றன.

பெருநிறுவன நிலைபேறானதன்மைக் கொள்கைக்கு மேலதிகமாக, சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, குறிப்பிட்ட துறைகளுக்குப் பசுமைக் கடன் வழங்கல் முன்னெடுப்புக்களை உள்ளடக்கி, நாம் வலுவான நிலைபேறான நிதிக் கொள்கை மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்தினோம். இந்தச் சட்டகமானது பொறுப்புவாய்ந்த வங்கிச் சேவை மற்றும் நிலைபேறானதன்மை என்பவற்றுக்கான எமது கடப்பாட்டுக்கான தெளிவான அத்திவாரத்தினை வழங்குகின்றது.

ஆளுகைக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்துவதற்கான உயர் அமைப்பாக பணிப்பாளர்கள் சபையினைக் கொண்டு, ESG தொடர்பாகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட வகிபாகங்கள், பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை நாம் நிறுவிகம். இவ்வாறான சகல கடன் வழங்கல்களிலும் ESG கோட்பாடுகள் அத்திவாரமாக இருந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் திணைக்களத்திற்கு ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. கண்காணிப்பு, முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடலுக்கான வகைப்பொறுப்பினை அறிமுகப்படுத்துவதற்காக ESG இற்கான அபாயநேர்வு முகாமைத்துவக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பிரதிபலன்கள்

சுற்றாடல்

- காகிதப் பயன்பாட்டினைக் குறைப்பதற்கும் காபன் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கும் விரிவாக்கப்பட்ட டிஜிட்டல் வங்கிச் சேவை.
- 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த டிஜிட்டல் வங்கியாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- லங்கா பே டெக்னோவேசன் விருதுகளில் மிகப் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு உற்பத்திக்கான தங்க விருதினைப் பெற்றுள்ளது.
- சக்தி மற்றும் நீர்ப் பாதுகாப்பில் கவனம் குவித்து கிளைகள் முழுவதிலும் வள வினைத்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தியுள்ளது.
- மேலதிக முன்னெடுப்புக்கள் இயற்கை மூலதனம் (198-205), உற்பத்தி மூலதனம், (150-155) மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவை (127-131) அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சமூகம்

- 2025 ஆம் ஆண்டிற்கான யூரோமனி விருதுகளில் பல்வகைமை மற்றும் உள்ளடக்கத்திற்கான இலங்கையின் மிகச் சிறந்த வங்கியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பிள்ளை விருத்தி, பாரம்பரியப் பாதுகாப்பு, மற்றும் நிதியறிவு முன்னெடுப்புக்கள் உள்ளிட்ட சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ச்சியான முதலீடு.
- மொபைல் மற்றும் டிஜிட்டல் தளங்களின் மூலம் நலன்கள் கிட்டாத சமுதாயங்களுக்காக வங்கிச் சேவைகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகல்.
- மனித மூலதனம், (162-179) சமூக மற்றும் உறவு மூலதனம் (180-197) மற்றும் சமுதாய மூலதனம் (192-195) ஆகிய அத்தியாயங்களில் மேலதிக முன்னெடுப்புக்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

ஆளுகை

- ஆளுகை நேர்த்தி மற்றும் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை என்பவற்றுக்கான விருதுகளைப் பெற்றுள்ளது.
- அபாயநேர்வு முகாமைத்துவம் மற்றும் உபாயநேர்வுமிக்க தீர்மானம் வகுத்தல் ஆகியவற்றினுள் நுளுபு ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தல்.
- உறுதியான இயைபுறல் மற்றும் நெறிசார் நியமங்கள் என்பவற்றினைப் பிரதிபலித்து பல் தேசிய மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளது.

உறுதியான பூலோகத்திற்கான எமது பங்களிப்பு

பூலோக பாதுகாப்பில் வங்கியின் வகிபாகத்தினை வலுப்படுத்தி, சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் எமது சூழலியல் காலடித்தடத்தினைப் பாதுகாப்பதற்கும் நாம் டிஜிட்டல்மயமாக்கம் மூலம் பல் இலக்குவைக்கப்பட்ட நிலைபேறானதன்மை முன்னெடுப்புக்களை ஆரம்பித்தோம்.

திறக்கப்பட்ட காகிதமற்ற கணக்குகள்	கிட்டத்தட்ட 6.0 மில்லியன்	டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள்	கிட்டத்தட்ட 200 மில்லியன்
E அறிக்கைக் கணக்குகள்	கிட்டத்தட்ட 0.6 மில்லியன்	டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி	ரூ. 1.7 ட்ரில்லியனை விட அதிகம்
டிஜிட்டல் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்	கிட்டத்தட்ட 0.3 மில்லியன்	வருடத்தின் போது வழங்கப்பட்ட பசுமைக் கடன்களின் மொத்தப் பெறுமதி	ரூ. 3.6 மில்லியன்.
மொத்த டிஜிட்டல் வங்கிச் சேவைப் பாவனையாளர்கள்	4.2 மில்லியன்	வருடத்தின் போது மொத்தச் சில்லறை இணைய வங்கிச் சேவை (RIB) மற்றும் சில்லறை மொபைல் வங்கிச் சேவை (RMB) பதிவுகள்	0.5 மில்லியன்
மொத்தக் கொடுக்கல் வாங்கல் எண்ணிக்கை – RIB மற்றும் RMB	24.1 மில்லியன்	மொத்தக் கொடுக்கல் வாங்கல் பெறுமதி – RIB மற்றும் RMB	ரூ. 662.6 பில்லியன்.

ஐ.நா நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகளுக்கான (UN SDGs) எமது கடப்பாடு

வறுமையினை அதன் சகல வடிவங்களிலும் முடிவுறுத்துவதற்கும் பூமியை பாதுகாப்பதற்கும் எதிர்காலச் சந்ததியினருக்காக மறுமலர்ச்சியினையும் நிலைபேறான சூழலையும் உறுதிப்படுத்துவதற்காகவும் ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரல் உருவாக்கப்பட்டது. மனித நலனோம்புகையினை மேம்படுத்துவதற்கும் பூமியின் ஆரோக்கியத்தினைப் பாதுகாப்பதற்கும் அவசியமான பிரபஞ்சக் குறிக்கோள்களாக 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வரையறுத்ததன் மூலம் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. எமது இயக்கங்களிலும் தளங்களிலும் நிலைபேறானதன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, எமது நடைமுறைகளை மாற்றி நிறுவனத்தின் ஒவ்வொரு அலகிலும் SDG விழுமியங்களைப் பதியவைப்பது அவசியமானதாகும்.

ஒருங்கிணைந்த அறிக்கையிடல்

இந்த வருடாந்த அறிக்கையில் வெளிக்கூறப்பட்டுள்ளவை எமது இயக்கங்களின் நிதி மற்றும் நிதி சாரா அம்சங்களின் சங்கமத்தினைப் பிரதிபலிக்கின்றது. இவை வங்கியின் நிதி மற்றும் சூழல், சமூக மற்றும் ஆளுகைச் செயலாற்றுகையினை இணைக்கின்றன. வர்த்தக ரீதியாக உறுதியான தொழில்முயற்சியாக இயங்கும் அதேவேளை, எமது சூழலைப் போஷித்து இயற்கை மூலதனத்தினைப் பாதுகாப்பதற்கான எமது அணுகுமுறையினை இந்த அறிக்கை விவரிக்கின்றது. மேலும், கழிவு, கார்பன் டயக்சைட் வாயு, மற்றும் ஏனைய மாசாக்கிகள் போன்ற பாதகமான பண்புகளைப் பொறுத்த அளவில் வங்கியானது உமிழ்வுகள் தொடர்பான ஒரு பூரணமான வெளிக்கூறலை வழங்குகின்றது.
இருப்பினும், வங்கியின் ஒவ்வொரு செயற்பாடும் நிலைபேறானதன்மை நெறிகளால் வழிகாட்டப்படுவதுடன் சிறந்த நடைமுறைகளுக்கான ஒரு மாதிரிச் சூழலை உருவாக்குகின்றது.

கொள்கைச் சட்டம் மற்றும் மேற்பார்வை

2025 ஆம் ஆண்டுக்கான வங்கியின் நிலைபேறான நிதிக் கொள்கை மற்றும் நடைமுறை வழிகாட்டல்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் பொதிந்துள்ள விழுமியங்களைப் பூரணமாக ஒருங்கிணைக்கப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட பெருநிறுவன நிலைபேறான கொள்கையில் இருந்து மேலும் கட்டமைத்துச் செல்கின்றது. பணிப்பாளர்கள் சபை நிலைபேறானதன்மை முன்னெடுப்புக்களை மேற்பார்வை செய்யும் அதேவேளை அவற்றின் செயற்திறன்மிக்க அமுல்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு தனித்துவமான நிலைபேறானதன்மைத் திணைக்களம் பொறுப்பாக உள்ளது.

நடைமுறைப்படுத்தக் கூடியவை

வங்கி இயங்குவதற்கு உதவும் மூலதனத் தொகுதியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைந்துள்ளதுடன் இதன் விளைவான நடைமுறைகள் எமது வங்கி இயக்கங்களில் ஆழமாகப் பதிந்துள்ளன.

சமூக மற்றும் உறவு மூலதனம்	1 NO POVERTY; 2 ZERO HUNGER; 3 GOOD HEALTH AND WELL-BEING; 4 QUALITY EDUCATION; 5 GENDER EQUALITY; 6 CLEAN WATER AND SANITATION; 7 AFFORDABLE AND CLEAN ENERGY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 10 REDUCED INEQUALITIES; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 13 CLIMATE ACTION; 14 LIFE BELOW WATER; 15 LIFE ON LAND; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS; 17 PARTNERSHIPS FOR THE GOALS
உற்பத்தி மூலதனம்	7 AFFORDABLE AND CLEAN ENERGY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 10 REDUCED INEQUALITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 13 CLIMATE ACTION
மனித மூலதனம்	1 NO POVERTY; 3 GOOD HEALTH AND WELL-BEING; 4 QUALITY EDUCATION; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 10 REDUCED INEQUALITIES
அறிவுசார் மூலதனம்	9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS
இயற்கை மூலதனம்	6 CLEAN WATER AND SANITATION; 7 AFFORDABLE AND CLEAN ENERGY; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 13 CLIMATE ACTION; 14 LIFE BELOW WATER; 15 LIFE ON LAND

தாக்க மதிப்பீடு

வங்கியின் செயற்பாடுகள் இறுதியில் சமுதாயங்களில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியவை என்பதால், அதன் செயற்பாடுகள் எவ்வாறு நிலைபேறானதன்மை அபிவிருத்தி இலக்குகளைப் பாதிக்கின்றன என்பதை அளப்பதற்காக வங்கி சாதனங்களையும் மதிப்பீட்டு அளவீடுகளையும் தாபித்துள்ளது. வங்கி அதன் வெளிக்கூறல்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஆளுகைக் கட்டமைப்புக்களையும் அபாயநேர்வுகளையும் வாய்ப்புக்களையும் அறிக்கையிட்டு அதன் மூலம் அறிக்கையின் வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்கும் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்புப் (GRI) போன்ற சர்வதேச நியமங்களுடன் ஒருங்கியைகின்றது. சாதகமான பங்களிப்புக்களையும் கருதப்படாத மோசமான விளைவுகளையும் வங்கி அளந்து தெளிவான மற்றும் சான்றினை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகளை உருவாக்குவதற்காக பரிகாரமிக்க தீர்வுகளை உள்ளடக்குவதற்காக இந்தச் சட்டங்களின் இணைப்பு வங்கியினை இயலுமாக்குகின்றது.

நிலைபேறான கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்குப் போதிய அங்கீகாரம் கிடைக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நாம் உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அரசாங்க அமைப்புக்களுடனும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடனும் ஒத்துழைப்பினை அதிகரித்துள்ளோம். எமது வியாபாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு அளவுகளிலும் பாதித்து, வங்கியுடன் நேரடியான அல்லது மறைமுகமான தொடர்புகளைக் கொண்டுள்ள சகலரினதும் வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சுற்றாடல் அளவீடுகள்: காபன் உமிழ்வு, சக்தி நுகர்வு, நீர்ப் பாவனை, கழிவுப் பிறப்பாக்கம்

சமூக அளவீடுகள்: தொழில் நடைமுறைகள், சமுதாய ஈடுபாடு, பல்வகைமை மற்றும் உள்ளடக்கம்

ஆளுகை அளவீடுகள்: சபைப் பல்வகைமை, நிறைவேற்று அதிகாரிகளின் நட்டஈடு, வியாபார நெறிகள்

இடர்கள் மற்றும் பாதிப்புறுநிலைகள்

ESG பலாபலன்களைக் கண்காணித்து அறிக்கையிடுவதற்காக நாம் தொடர்ந்து GRI வழிகாட்டல்களைப் பின்பற்றி எமது இடர்கள் முகாமைத்துவச் சட்டத்தினைப் பிரயோகித்தோம். கருதப்படாத ஒரு செயற்பாடு ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான சேதங்களின் சுமையினைக் குறைப்பதற்கான உபாயமார்க்கங்களை உருவாக்குவதற்கு இது எமக்கு அனுமதித்தது. நிலைபேறானதன்மைத் திணைக்களம் அவசியமான தேவைப்பாடுகளுடன் நன்கு தயாரான நிலையில் உள்ளதுடன் வங்கி முழுவதிலும் நிலைபேறான கோட்பாடுகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான திறன்களையும் கொண்டுள்ளது. குறிப்பாக, ESG பிரதிபலன்கள் முதலீட்டாளர்களின் மத்தியிலும் வாடிக்கையாளர்களின் மத்தியிலும் வங்கியின் நன்மதிப்பினைக் கணிசமாகப் பாதிக்கலாம் என்பதால் நாம் இதனைக் கொண்டுள்ளோம். வங்கி ஒழுங்குபடுத்தல் இயைபுறலில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் அதன் நன்மதிப்பினையும் வியாபாரச் சின்னத்தினையும் உறுதிப்படுத்தும் அதேவேளை, ஒரு பூரணமாக சமுதாயத்தினை உருவாக்குவதற்காக அதன் களப் பணிகளில் தொடர்ச்சியான மேம்பாடுகளுடன் ESG உடன் தொடர்புடைய சிறந்த நடைமுறைகளையும் மேம்படுத்தி வருகின்றது. எனவே, SDG இற்கான எமது கடப்பாடு, எமது உபாயமார்க்க நிகழ்ச்சிநிரலில் ஒரு முன்னுரிமையாகும்.

பசுமை நிதி

எமது சுற்றாடல் தடயத்தினை மேம்படுத்தி, பாரிய அளவிலான நிலைபேறான கருத்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக ஒரு முதலீட்டுத் தொடரினை உருவாக்கும் நோக்கத்துடன் நாம் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான மாற்றத்தினை வசதிப்படுத்தப் பசுமை நிதியிடலில் ஈடுபட்டுள்ளதுடன் பசுமை முறிகளை விநியோகிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

முன்னுரிமைகளை அடையாளம் காணல்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒருங்கிணைவதற்கு டிஜிட்டல் நிலைமாற்றத்தினைத் துரிதப்படுத்துவது ஒரு பிரதானமான பாகமாகும் என்பதுடன் காகிதமற்ற அல்லது காகிதம் குறைக்கப்பட்ட நிறுவனமாக நாம் நிலைமாறுவதற்கு அது உதவுகின்றது. எவ்வாறாயினும், இந்தத் தொழில்நுட்பங்களின் குறைந்த உமிழ்வுக் காரணிகள் பற்றி நாம் அறிந்துள்ளதுடன் மிகக் குறைவான சுற்றாடல் சேதங்களை ஏற்படுத்தும் தொழில்நுட்பங்களைப் பெறுவதில் நாம் கணிசமாக முதலீடு செய்துள்ளோம். பசுமைக் கட்டிடங்கள் பகலில் கிடைக்கும் வெளிச்சத்தினை ஆகக்கூடுதலாகப் பயன்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ள அதேவேளை பல கிளைகளில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கு நிலைமாறுவது நாம் தேசிய சக்தி வலைப்பின்னலில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு உதவுகின்றது.

மனித மூலதன அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்திக் கோட்பாடுகளுடன் இயக்கங்களை ஒருங்கியைவிப்பதற்கான எமது நீடித்த முயற்சியின் ஓரங்கமாக, நிலைபேறானதன்மைக் கலாசாரத்தினைப் பதியவைப்பதற்கு நாம் பயிற்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுற்றாடல் மற்றும் உயிரியல் பல்வகைமைக் கருத்திட்டங்கள் மூலம் எமது மனித மூலதனத்தில் முதலீடு செய்துள்ளோம்.

எமது வியாபாரங்களிலும் இயக்கங்களிலும் நிலைபேறானதன்மையினை அடைவது பொருளாதார மறுமலர்ச்சிக்கும் சுற்றாடல் பொறுப்பிற்கும் இடையிலான ஒரு சமநிலையினைத் தேவைப்படுத்துகின்றது. இந்தக் காரணிகளுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்பினை அங்கீகரிப்பதன் மூலம் எமது பங்குதாரர் அனைவருக்கும் ஒரு நிலைபேறான வியாபாரத்தினை நோக்கிய மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய எதிர்காலத்தினை நோக்கிய ஒரு பாதையினை நாம் திடமாக உருவாக்குகின்றோம்.

Banking
Redefined,
Just for You
Where trust
meets prestige

முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

102
வணிகப் பிரிவு மீளாய்வுகள்

103 சில்லறை வங்கித்தொழில்

109 வணிகக் கடன்

112 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SME) அபிவிருத்தி மற்றும் நுண்நிதி

116 பெருநிறுவன வங்கிச் சேவை

118 திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கிச் சேவை

122 வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்

125 சர்வதேச வங்கிச்சேவை

127 தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கிச்சேவை

132 கடன் அட்டைகள்

134 அறவீடுகள்

136 சந்தைப்படுத்தல்

138 கிளை முகாமைத்துவம்

142
நிதி மூலதனம்

150
உற்பத்தி மூலதனம்

156
அறிவுசார் மூலதனம்

162
மனித மூலதனம்

180
சமூக மற்றும் உறவு மூலதனம்

183 வாடிக்கையாளர் மூலதனம்

189 வியாபாரப் பங்காளர் மூலதனம்

192 சமுதாய மூலதனம்

196 முதலீட்டாளர் மூலதனம்

198
இயற்கை மூலதனம்



வணிகப் பிரிவு மீளாய்வுகள்

பல்வேறுபட்ட தேவைகளுக்குமான பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்பு படைப்புகளை வழங்கல்

சில்லறை வங்கித்தொழில்

தயாரிப்பு வடிவமைப்பு தொடக்கம் விநியோகம் வரையும் மற்றும் பரிணமித்துவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப வாடிக்கையாளரை மையப்படுத்திய தீர்வுகளை மேம்படுத்துதல், தகவமைத்துக் கொள்ளுதல் வரையும் வங்கியின் சில்லறை தயாரிப்பு சொத்துப்பட்டியலை முகாமைசெய்யும் பொறுப்பாணை சில்லறை வங்கிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எமது கவனம்

தனியார் துறை கடன்வழங்கலை அதிகரித்தல், வைப்புத் திரட்டல் மற்றும் கிளைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் சென்றடைவை விரிவுபடுத்தல், அதன் வழியாக ஐந்தொகையை வலுப்படுத்தல் மீது வங்கி கவனம் செலுத்தியது. வங்கியின் டிஜிட்டல் மாறுதலடைதல் மற்றும் 746 கிளைகள் அத்துடன் சேவை மையங்களைக் கொண்ட வலையமைப்பு என்பன இம்முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமைந்தன. இவ்வாறான விநியோக வழிகளின் ஊடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றவும், அதன் மூலம் வலுவான ஐந்தொகையைப் பேணும் மூலோபாய குறிக்கோளை அடைவதற்கு நாம் நிலைபெற்றிருந்தோம்.

எமது தந்திரோபாயம்

தயாரிப்பு புத்தாக்கம், நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் சிறந்த சேவை ஆகியவற்றின் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களிலான வைப்புத் தளத்தை அதிகரிப்பதற்காக நாம் சந்தையை அணுகினோம். பிறப்பு தொடக்கம் சிரேஷ்ட பிரசைகள் வரை உள்ள அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையில் தீவிரமான வைப்புச் சேகரிப்புப் பிரச்சாரங்களை நாம் முன்னெடுத்தோம். சொத்துத் தயாரிப்புகள் பல்வேறு வழிகளில் வழங்கப்பட்டு கடன் ஏடுகளை விரிவுபடுத்தி சமூகங்களுக்கு துணையளித்தோம்.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களுக்கு, அவர்கள் பயணத்தை ஆரம்பிப்பது தொடக்கம் குடியேறுதல் வரையிலான சேவைகளை வழங்குவதற்காக பிரத்தியேக புலம்பெயர்ந்தோர் கடன் அலகு நிறுவப்பட்டது.

வைப்புகள்

முன்னேற்றகரமான அடகு முறைகள்

தந்திரோபாயம்

வெளிநாட்டில் வாழ்வோர் கடன் பிரிவு

கூட்டுமுயற்சிப் பங்குடமைகள்

இளம் தலைமுறையினருக்கான வங்கிச்சேவை

சொத்துத் தயாரிப்புகள்

சிறப்பம்சங்கள்

சில்லறை வைப்புக்கள்

ரூ. 2.8 ரில்லியனை விஞ்சியது

சில்லறை கடன்கள்

ரூ. 500 பில்லியனை அண்மித்தது

அடகு கடன்வழங்கல் இருப்பு

ரூ. 386.4 பில்லியன்

சில்லறை கடன்களுக்கான தேறிய செயலாற்றமற்ற கடன் வீதம்

1.8%

வைப்புத் திரட்டுதல்

பல்வகை மக்களிடையே சேமிப்புக் கலாசாரத்தை பேணிவளர்ப்பதில் வங்கியின் வைப்புத் தயாரிப்பு வழங்கல்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. நாம் நகர்பகுதி தொடக்கம் கிராமியப் பிரதேசம் மற்றும் ஓரளவு கிராமியப் பகுதி வரையும் பல்வேறு வாழ்க்கை நிலைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ற பன்முகப்படுத்தப்பட்ட தயாரிப்புகளை வழங்குகிறோம். எமது நாடு தழுவிய கிளை வலையமைப்பு மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் வசதிகள் என்பன ஊடாக இத்தீர்வுகளை வாடிக்கையாளர்கள் இலகுவாகவும் வசதியாகவும் பெற்றுக்கொள்ள இயலச்செய்கின்றோம்.

வாடிக்கையாளரின் வாழ்நாள் முழுவதும் செல்வத்தை கட்டியெழுப்ப உதவும் வாழ்க்கைச் சுழற்சி வங்கிமுறை அணுகுமுறையை நாம் பின்பற்றுகிறோம். அது சேமிப்பாகவோ, முதலீடாகவோ, ஓய்வுக்கால நிதியாகவோ அல்லது இளையோர் அபிவிருத்தி எதுவாக இருந்தாலும், எமது தயாரிப்புகள் ஒழுக்கமான சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு துணையளித்தலானது கடன் வசதிகள், பெறுமதி சேர்க்கப்பட்ட நன்மைகள் மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை துரிதப்படுத்துவதற்காக டிஜிட்டல் வங்கி கருவிகள் என்பவற்றை முழு அளவில் கொண்டதாகக் காணப்படுகின்றது. வங்கியின் நிதியிடலின் ஆதாரத்தின் முக்கிய அங்கமாக வைப்புக்கள் விளங்கி, விவசாயம், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி, வீடமைப்பு மற்றும் தனிநபர் நிதி போன்ற முன்னுரிமை துறைகளுக்கு பொறுப்பான முறையில் கடன்வழங்குவதற்கு நிலையான தளத்தை வழங்குகின்றது. எமது வைப்புத் தளத்தின் வலிமையானது, பொது நலனை மையமாகக் கொண்ட நம்பிக்கையான மற்றும் பாதுகாப்பான வங்கி என்ற ரீதியில் மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை பறைசாற்றுகின்றது.

சேமிப்புத் தயாரிப்புகள்

எமது தயாரிப்பு படைப்புகள், இலங்கையில் வதிபவர்களாயினும் சரி, வெளிநாடுகளில் வதிபவர்களாயினும் சரி அனைவரினதும் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளன.

சிறுவர்

இசுறு உதான சேமிப்புக் கணக்கானது பிறப்பு தொடக்கம் ஐந்து வயது வரையிலான சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே சேமிப்பு கலாசாரத்தை பேணிவளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் வைப்புக்கள் மற்றும் புதிய கணக்குகளுக்கு அல்லது ஏற்கனவேயுள்ள கணக்கிற்கு வரவுவைப்பதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட பரிசு வவுச்சர்கள் ஊடாக ஒரு குழந்தையின் நிதியியல் எதிர்காலத்திற்கு பங்களிக்கலாம். ஐந்து வயதை எட்டியதும், இக்கணக்கு தானாகவே சிசு உதான சேமிப்புக் கணக்காக மாற்றப்பட்டு, சேமிப்பின் தொடர்ச்சியை உறுதி செய்கின்ற அதேவேளை குழந்தையின் கல்வி மற்றும் அபிவிருத்தி அபிலாஷைகளுக்கும் துணையளிக்கின்றது.

இளையோர்

YES கணக்கானது இளையோர் வகுப்பினரை இலக்காகக் கொண்டு, அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் அபிலாஷைகளை நிறைவேற்ற துணையளிக்கின்றது. இத்தயாரிப்பு விரிவான வங்கிச் சேவைகளை வழங்குகின்ற அதேவேளை, உயர்கல்வி, தொழில்முயற்சி, வீடமைப்பு, வாகனங்கள், உபகரணங்கள், கணினிகள் மற்றும் ஏனைய நுகர்வோர் தேவைகளுக்கான நிதியியல் வசதிகளையும் வழங்குகின்றது. இளைஞர்கள் தமது தொழில் வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலேயே நிதியியல் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுப்பதன் மூலம், நிதியியல் ரீதியாக பொறுப்புணர்வைக் கொண்ட மற்றும் பொருளாதார ரீதியாக சுறுசுறுப்பான இளையோர் சமூகத்தை உருவாக்க வங்கி துணையளிக்கின்றது.

YES Biz Teen Challenge Trophy 2025

தொழில்முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கும் எதிர்கால தலைமுறையினரை வலுப்படுத்துவதற்குமான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, மக்கள் வங்கி "YES Biz Teen Challenge Trophy 2025" எனும் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. பாடசாலை மாணவர்கள் தமது வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்திலேயே வணிக யோசனைகளை வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக, அவர்களின் தொழில்முயற்சியாண்மை சிந்தனை, படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வளர்ப்பதற்காகவே இம்முன்முயற்சி பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டது.

நாட்டின் நிலைபெறத்தக்க அபிவிருத்தியானது தொழில்முயற்சியின் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது என்பதை அங்கீகரித்து, இளம் மனங்களை எதிர்கால வணிகத் தலைவர்களாக ஊக்குவிக்கும் ஒரு தளமாக வங்கி இத்திட்டத்தை மூலோபாய ரீதியாக நிலைநிறுத்தியுள்ளது. இளைஞர்களிடையே தொழில்முயற்சியாண்மை கலாசாரத்தை வளர்ப்பதன் மூலம் இலங்கையின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் வங்கியின் பரந்த தொலைநோக்கை இச்செயற்திட்டம் பிரதிபலிக்கிறது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம், நாடு முழுவதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. தீவின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய இப்போட்டியானது, அடிமட்ட அளவில் பாடசாலைச் சமூகங்களை ஒன்றிணைத்ததுடன், மாணவர்கள் தமது புத்தாக்கமிக்க மற்றும் நடைமுறைச் சாத்தியமான வணிக யோசனைகளை முன்வைப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியது. கட்டமைக்கப்பட்ட மதிப்பீட்டுச் செயல்முறையின் ஊடாக, பாடசாலை, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் மிகவும் சாதியமான யோசனைகள் அடையாளங்காணப்பட்டன.

இப்போட்டிக்கு அப்பால், இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மிகவும் வளம்பெறத்தக்க வணிக எண்ணகருகளை மேலும் மேம்படுத்துவதற்கும் துணையளிப்பதற்குமான அடுத்த கட்ட நடவடிக்கைகளை வங்கி தற்போது திட்டமிட்டு வருகின்றது. இதில் வழிகாட்டல், நிதியியல் அறிவு மற்றும் இவ் யோசனைகளை நிலையான வணிக முயற்சிகளாக மாற்றுவதற்கான நிதியியல் உதவி ஆகியவற்றை வழங்குவதற்கான வழிமுறைகளை ஆராய்தல் என்பனவும் அடங்கும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பொறுப்புமிக்க நிதியியல் நிறுவனம் என்ற தனது வகிபாகத்தை உறுதிப்படுத்தும் வகையில், மக்கள் வங்கி இம்முதன்மைத் திட்டத்தை வரும் ஆண்டுகளில் தொடர உத்தேசித்துள்ளது. இளையோர் தொழில்முயற்சிகளில் முதலீடு செய்வதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் நீண்டகால அபிவிருத்தி என்பவற்றுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதை வங்கி இலக்காகக் கொண்டுள்ளது.

மகளிர்

பெண்களின் நிதியியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் பொருளாதார வலுவூட்டலுக்கு உதவுவதற்கும் வனிதா வாசனா சேமிப்புக் கணக்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பெண்களின் அதிகரித்து வரும் பங்களிப்பை அங்கீகரித்து, அவர்கள் நிதியியல் ரீதியாக பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கும் அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட நிதியியல்ச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இத்தயாரிப்பு வாய்ப்பளிக்கிறது. சுயதொழில் நிதியுதவி, வீடமைப்பு மற்றும் காணி கொள்வனவுக் கடன்கள், திருமணங்களுக்கான நிதியுதவி மற்றும் பிள்ளைகளின் உயர்கல்விக்கான நிதியுதவி உள்ளடங்கலாக விசேட கடன் வசதிகளை இக்கணக்கு வைத்திருப்பவர்கள் பெற்றுக்கொள்ளலாம். இத்தயாரிப்பின் ஊடாக, பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு துணையளிப்பதிலும், நகர மற்றும் கிராமிய சமூகங்களில் பெண்களிடையே நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதிலும் வங்கி தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது.

சிரேஷ்ட பிரசைகள்

55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பிரசைக்களுக்காக வடிவமைக்கப்பட்ட பரிணத சேமிப்புக் கணக்கானது, ஓய்வுக்காலத்தில் அவர்களுக்கு நிதியியல் வசதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் மேம்பட்ட பலன்களை வழங்குகிறது. இக்கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்குகளை விட அதிக வட்டி வீதங்களை வழங்குவதுடன், வங்கிச் சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான பிரத்யேக வீசா பற்று அட்டை வசதியையும் கொண்டுள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட அம்சங்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வங்கிச் சேவைகள் என்பவற்றை வழங்குவதன் மூலம், சிரேஷ்ட வாடிக்கையாளர்களின் நிதியியல் நல்வாழ்வையும் சுதந்திரத்தையும் மேம்படுத்த வங்கி முயல்கிறது.

தவணை வைப்புக்கள்

சேமிப்புக் கணக்குகளுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான முதலீட்டு வாய்ப்புகளையும் கவர்ச்சிகரமான வருமானத்தையும் வழங்கும் பரந்தளவிலான தவணை வைப்புத் தயாரிப்புகளை மக்கள் வங்கி வழங்குகிறது. போட்டித்தன்மைமிக்க வட்டி வீதங்கள் மற்றும் நெகிழ்வான முதிர்வுக் காலங்கள் என்பவற்றை வழங்குவதன் மூலம் பல்வேறு நிதியியல் இலக்குகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இவ்வைப்புத் திட்டங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

வங்கியின் காலமுறை வைப்புத் தயாரிப்புகள், தனிநபர்கள், முதியோர்கள் மற்றும் நம்பகமான முதலீட்டு விருப்பங்களைத் தேடும் நிறுவன வாடிக்கையாளர்கள் என விரிவான தரப்பினரின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. நெகிழ்வான காலப்பகுதிகள் மற்றும் வசதியான வட்டி செலுத்தும் தெரிவுகளுடன், இத்தயாரிப்புகள் வாடிக்கையாளர்களின் காசுப்பாய்ச்சல் தேவைகளை வினைத்திறனுடன் முகாமைசெய்யும் அதேவேளை, அவர்களின் சேமிப்பை வளர்ப்பதற்கான ஒரு நிலையான வழியை வழங்குகின்றது.

பிசினஸ் எலிகன்ஸ் நடைமுறைக்கணக்கு

மக்கள் வங்கியின் எலிகன்ஸ் பிசினஸ் நடைமுறைக்கணக்கு என்பது இலங்கையின் மக்கள் வங்கியினால் தற்போதுள்ள விவேகமான வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதிக பெறுமதி கொண்ட புதிய வணிக வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட உயர்தர வணிக நடைமுறைக்கணக்காகும். வலுவான நிதியியல் ஒழுக்கம் மற்றும் அதிக கொடுக்கல்வாங்கல்களைப் பேணும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட வங்கிச் சலுகைகளையும் அங்கீகாரத்தையும் வழங்கும் வகையில் இக்கணக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. விசேட நன்மைகள் மற்றும் அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம், வாடிக்கையாளர்கள் வங்கியுடன் முனைப்பான உறவைப் பேணுவதை இக்கணக்கு ஊக்குவிப்பதுடன், அதிக பெறுமதி கொண்ட வணிக வாடிக்கையாளர்களுக்கு விருப்பமான பங்காளராக வங்கியை நிலைநிறுத்துகிறது.

சமூக ஈடுபாடு

வங்கியின் வைப்புத் திரட்டல் நடவடிக்கைகளில் எமது நாடளாவிய ரீதியிலான கிளை வலையமைப்பு ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்ந்தது. சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் சென்றடையும் வகையில், எமது ஊழியர்கள் ஆர்வத்துடன் முன்னெடுத்த சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள், வங்கிச் சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு வாடிக்கையாளர் வட்டத்தை விரிவுபடுத்தவும் உதவின. சில்லறை வங்கித் தொழிலில் நாம் ஈட்டியுள்ள வெற்றிக்கு, எமது கிளை ஊழியர்கள் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய பிரிவினரின் அர்ப்பணிப்பு, துறைசார் நிபுணத்துவம் மற்றும் ஆக்கபூர்வமான செயல்பாடுகளே பிரதான காரணங்களாகும்.

சேமிப்பு பழக்கத்தையும் முதலீட்டையும் ஊக்குவிப்பதற்கான சமுதாய சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகள்

சுதந்திரத்தின் பிறப்பு பிரசாரம்: 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பிராந்திய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இப்பிரசாரம், இசுறு உதான சிறுவர் கணக்கை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது

சர்வதேச மகளிர் தினம்: பொல்கொல்ல ஆசிரியர் பயிற்சி கலாசாலையுடன் இணைந்து கண்டியில் கொண்டாடப்பட்டது.

சிரேஷ்ட பிரசைகள் தினம்: ஒக்டோபர் 1ஆம் திகதி கொண்டாடப்பட்டு, பரிணத கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் மருத்துவத் தேவைகளுக்காக விசேட தள்ளுபடி சலுகைகள் வழங்கப்பட்டன.

1 ஆம் நாள் முதலாம் பாடம் பிரசாரம்: தரம் 1 இல் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், சிசு உதான கணக்கும் ஊக்குவிக்கப்பட்டது.

இளம் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்பு: இளைஞர்களிடையே வணிக யோசனைகளை ஊக்குவிப்பதற்காகவும், YES Teens கணக்கை மீள அறிமுகப்படுத்துவதற்காகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்திட்டம்.

உலக சிறுவர் தினப் பிரசாரம்: ஒக்டோபர் 1 தொடக்கம் டிசம்பர் 31 வரை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டது.

சொத்துத் தயாரிப்புகளை பகிர்ந்தளித்தல்

சம்பளம் பெறுவோர், தொழில் வல்லுநர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் குடும்பங்கள் என்பவற்றிகு ஏற்ற மற்றும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு வங்கி பங்களிப்பு செய்தது. எமது கடன்வழங்கல் கலவையானது மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டிருந்த, அதேவேளை, வலுவான கடன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றின் கீழ் கடன் வளர்ச்சி மற்றும் கடன் சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்துதல் என்பவற்றை நாம் நாடினோம். நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக உற்பத்தித் துறைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. இவ்வருடத்தில் வங்கியின் சொத்து வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாக சில்லறை கடன்வழங்கல் விளங்கியது.

கடன் சொத்துப்பட்டியல்

பல்வேறு வருமான வகுப்பினருக்கும் தொழில்சார் பின்னணிகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட தனிநபர் கடன் தயாரிப்புகளை வங்கி தொடர்ந்து வழங்கியது.

சம்பளம் பெறுவோருக்கான கடன்கள்

தொழில்பெற்றுள்ள தொழில்சார் நிபுணர்களுக்கானது - இத்தயாரிப்பு அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு தனிநபர் நிதியியல் உதவிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்தது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தமது தனிப்பட்ட மற்றும் குடும்ப நிதியியல் தேவைகளை முறையான மீளச் செலுத்தும் ஏற்பாடுகள் ஊடாகப் பூர்த்தி செய்வதை இயலச்செய்கின்றது. மேலதிக கடன் வசதிகள் : சிறந்த முறையில் கடனை மீளச் செலுத்திய வரலாற்றைக் கொண்ட ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கு துணையளிக்கும் வகையில், குறைந்தபட்ச ஆவணங்களுடன் மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்ளும் வசதியை வங்கி வழங்கியது.

வாகனக் கடன்கள்

வாகனமொன்றை உடமையாக்கிக் கொள்வது பல குடும்பங்களின் முக்கிய அபிலாஷையாக இருப்பதால், வங்கியின் வாகனக் கடன் சொத்துப்பட்டியல் தொடர்ந்தும் நிலையான கேள்வியை கொண்டிருந்தது. போட்டித்தன்மைமிக்க வட்டி வீதங்கள் மற்றும் நெகிழ்வான மீளச் செலுத்தும் முறைகள், வாடிக்கையாளர்கள் தமது நிதியியல் இயலளவிற்கேற்ப கடனைப் பெறுவதற்கு உதவின. மேலும், டொயாடா லங்கா நிறுவனத்துடன் இணைந்து டொயோட்டா வாகனங்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலான நிதியியல் வசதிகளையும் வங்கி வழங்கியது.

மாணவர் கடன்கள்

இலங்கை கல்வி அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் மாணவர் கடன் வசதிகள் ஊடாக மனித மூலதன அபிவிருத்திக்கு வங்கி தொடர்ந்தும் துணையளித்தது. இவ்வட்டியற்ற கடன் திட்டங்கள் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு நிதியியல் உதவியை வழங்குவதுடன் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கின்றன.

மக்கள் வீட்டுக் கடன்கள்

சில்லறை கடன் சொத்துப்பட்டியலுக்குள் வீடமைப்பு நிதி மூலோபாய முன்னுரிமையொன்றாக காணப்பட்டது. மக்கள் வீட்டுக் கடன்கள் மற்றும் ஐய நிவச வீட்டுக் கடன்கள் ஊடாக குடியிருப்புச் சொத்துக்களை நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் மற்றும் புனரமைத்தல் போன்றவற்றுக்கு நீண்டகால நிதியியல் வசதிகளை வங்கி வழங்கியது. இத்தயாரிப்புகள் குறிப்பாக இளம் தொழில்சார் நிபுணர்கள் மற்றும் நடுத்தர வருமானம் பெறுவோரை இலக்காகக் கொண்டு 25 ஆண்டுகள் வரையிலான மீளச் செலுத்தும் காலப்பகுதியை வழங்குகின்றன.

C-Suite நிறைவேற்று அலுவலர் கடன்கள்

சிரேஷ்ட நிறுவன தொழில்சார் நிபுணர்களை இலக்காகக் கொண்டு இக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் எளிமைப்படுத்தப்பட்ட பிணைக் கோரிக்கைகளுடன் அதிக கடன் தொகையை வழங்குவதுடன், நிறுவனங்களுடனான பங்குடமைகள் ஊடாக ஏனைய வங்கிச் சேவைகளை வழங்கும் வாய்ப்புகளையும் உருவாக்குகின்றது.

விசேட தொழில்சார் நிபுணர்கடன் திட்டங்கள்

ஆசிரியர்கள், அரச மருத்துவ அலுவலர்கள், முப்படை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் வகுப்பினரின் தனித்துவமான நிதியியல் தேவைகளை அங்கீகரித்து, அவர்களுக்கென பிரத்யேக கடன் திட்டங்களை வங்கி வழங்குகின்றது. இவை சலுகை வட்டி வீதங்கள், நீடிக்கப்பட்ட மீளச் செலுத்தும் காலங்கள் மற்றும் எளிமையான கடன் செயன்முறைகள் என்பவற்றைக் கொண்டன.

புலம்பெயர்ந்தோர் கடன் செயன்முறைப்படுத்தல் அலகு

வெளிநாடு செல்வோர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு துணையளிப்பதற்காக பிரத்யேக அலகு நிறுவப்பட்டது. இது வெளிநாடு செல்வதற்கு முன்னரான நடைமுறைகள் முதல், அங்கு சென்றடைந்த பின்னரான ஆதரவு வரை அனைத்தையும் ஒருங்கிணைப்பதுடன், அவர்களின் குடும்பங்கள் தமது பணத்தை முறையாக முதலீடு செய்யவும் உதவுகின்றது.

தனியார் துறை கூட்டுமுயற்சி

வாகன நிதித் தேவைகளுக்கு பதிலிறுத்தி, நாம் டொயோட்டா லங்கா நிறுவனத்துடன் மூலோபாய பங்குடமையை ஏற்படுத்தினோம். இதன் மூலம் டொயோட்டா தயாரிப்புகளுக்கு முன்னுரிமை வட்டி வீதக் கடன்கள் வழங்கப்பட்டன, இது சில்லறை கடன் பெறுநர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

அடகுச் சேவை

சுவர்ண பிரதீப அடகு முற்பண திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தங்கத்தை பிணையாக கொண்ட கடன்வழங்கல், அவசர நிதியியல்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு முக்கிய சில்லறை கடன்வழியாகத் தொடர்ந்தும் விளங்கியது. போட்டித்தன்மைமிக்க விலை நிர்ணயம் மற்றும் விரைவான செயன்முறைப்படுத்தல் காரணமாக 2025 ஆம் ஆண்டில் இச்சேவை வலுவான உத்வேகத்தைப் பேணி, வங்கியின் ஒட்டுமொத்த கடன்வழங்கல் சொத்துப்பட்டியலுக்கும் கணிசமாகப் பங்களித்தது. குறிப்பாக, கிராமிய மற்றும் நகர வகுப்பினர் இரண்டிலும் இத்தயாரிப்பு பரந்தளவில் பயன்படுத்தப்பட்டது.

வாடிக்கையாளர் வசதி, நிதியியல் கொடுக்கல்வாங்கல் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்தி வங்கி நேரடியாக வாடிக்கையாளரின் கணக்கில் வரவுவைத்தலை அறிமுகப்படுத்தி முறைசாரா கடன்வழங்கும் நபர்களுக்கு பதிலாக ஒரு பாதுகாப்பான மாற்றுவழியை வழங்கியதுடன், அதன் மூலம் வங்கி முறைமை மீதான நம்பிக்கையும் அணுகலும் அதிகரித்தது.

சந்தேகத்திற்கிடமான ஆபரணங்களை அடையாளம் காண்பதற்காக 1,000 இற்கும் மேற்பட்ட கிளை ஊழியர்களின் தேர்ச்சியையும் அறிவையும் தரமுயர்த்துவதற்கு வங்கி கணிசமாக முதலிட்டது. இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையுடன் இணைந்து நடத்தப்பட்ட இப்பயிற்சியின் விளைவாக, தவறான பொருட்களை ஏற்றுக்கொள்வது கணிசமாகக் குறைந்துள்ளது. இதற்காக மேம்பட்ட கண்டறியும் கருவிகளிலும் வங்கி முதலீடு செய்துள்ளது.

டிஜிட்டல் மாறுதலடைதல்

செல்லிட மற்றும் இணைய வங்கிச் சேவைகளை எமது சில்லறை வங்கிச் சேவைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் டிஜிட்டல் மாறுதலை நாம் முன்னேற்றினோம். தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் வாடிக்கையாளர் அனுபவங்கள் எமது சேவையின் தரத்தை உயர்த்தியதுடன், தொலைதூர மற்றும் கிராமிய சமூகங்களையும் சென்றடைந்து நிதியியல் வசதிக்குட்படுத்தலை வலுப்படுத்தியது. இதன் மூலம், இதுவரை வங்கிச் சேவை கிடைக்கப்பெறாதவர்கள் முறையான வங்கி முறைமைக்குள் நுழைய வழிவகை செய்யப்பட்டது.

சவால்கள்

மிகையான திரவத்தன்மையை முகாமைசெய்வதும், போட்டிமிக்க நிலையான வைப்பு வட்டி வீதங்களுக்கும் நிலைபெறத்தக்க கடன் விளைவுகளுக்கும் இடையிலான விட்டுக்கொடுப்பும் எமது தேறிய வட்டி வருமான விகிதங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய சவாலாகும். மிகையான திரவத்தன்மையிலிருந்து ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளைக் குறிப்பாக வங்கி மற்றும் நிதியியல் துறைகளில் முகாமைசெய்து தணிப்பதற்கு, தனியார் துறை கடன்களை வழங்குவதில் நாம் தொடரந்தும் தீவிரமாகச் செயற்படுவோம்.

புவிசார் அரசியல் சூழலில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகள் அரசாங்க நாட்டுக்கான வட்டி வீதங்களில் தளம்பல்களை ஏற்படுத்தி, கடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வலுவான அணுகுமுறையை அவசியப்படுத்தியுள்ளன. வங்கி, மாற்றமின்றிய பெறுமதிக்கான கடன் விகிதங்களை பிரயோகித்தல் உள்ளடங்கலாக முன்மதிமிக்க இடர்நேர்வு நடைமுறைகளைப் பின்பற்றுகிறது.

வங்கியின் நுகர்வோர் கடன் சொத்துப்பட்டியலில் இப்பிரிவு கணிசமான பங்கைக் கொண்டிருப்பதால், திரட்சி இடர்நேர்வு பற்றிய மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. சந்தை நிச்சயமற்ற நிலைமைகளின் கீழும் சொத்துத் தரத்தைப் பாதுகாப்பதற்கும் தாக்குபிடிக்கும் தன்மையை உறுதி செய்வதற்கும், கிரமமான சொத்துப்பட்டியல் மதிப்பீடுகள் மற்றும் அழுத்த பரிசோதனைகள் மூலம் துணையளிக்கப்பட்டு, இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை வங்கி பேணுகின்றது.

சாதாரண வங்கிச் சேவைகளுடன் போட்டியிடும் தயாரிப்புகள் சந்தையில் அதிகரித்துள்ளன. பங்குச் சந்தை முதலீடுகள், பெறுதிச் சாதனங்கள், காப்புறுதி மற்றும் தங்கம் போன்றவற்றில் முதலீடு செய்வதற்காக வாடிக்கையாளர்கள் வைப்புக்களைத் திரும்பப் பெறுவதற்கு தூண்டலளிக்கின்றன.

கடன்வழங்கும் செயல்பாட்டுச் சூழலானது தொடர்ந்து சிக்கலானதாகவும் சவாலானதாகவும் இருந்து வருகின்றது. தேறிய வட்டி வருமான இலாப எல்லைகளை பாதுகாப்பதற்காக திரவத்தன்மையை விழிப்புடன் முகாமைசெய்தல், நிலைபெறத்தக்க கடன் விளைவுகளுக்கெதிராக வைப்பு விலையிடலை மூலோபாய ரீதியாகச் சீரமைத்தல் என்பன முன்னுரிமை பெறுகின்றன. புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் நாட்டுக்கான சந்தை தளம்பல்கள் ஆகியவை கடன் இடர்நேர்வு ஆளுகையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. எமது வங்கியில், மாற்றமின்றிய பெறுமதிக்கான கடன் அளவுருக்கள் மற்றும் முறையான முறைமைசார் அழுத்தப் பரிசோதனைகள் ஆகியவை பாதகமான சூழ்நிலைகளிலும் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்துகின்றன. டிட்வா புயலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் சுமார் 300,000 கடன்பெறுநர்களுக்கு, நாம் நிவாரண நடவடிக்கைகளையும் சலுகைகளையும் வழங்கினோம்.

2026 ஆம் ஆண்டுக்கான எதிர்பார்க்கை

தனிப்பட்ட வங்கி வைப்பு முதலீட்டு தொகுப்பு உள்நாட்டுச் சேமிப்பைத் திரட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, இதன் பயனாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கின்ற கடன்வழங்கல் நடவடிக்கைகளுக்கு துணையளிக்கிறது. இந்நிதியை பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளுக்குத் திருப்புவதன் மூலம், இலங்கையில் தொழில்முயற்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நிலைபெறத்தக்க பொருளாதார முன்னேற்றம் என்பவற்றிற்கு வங்கி தொடர்ந்து துணையளிக்கிறது.

வாடிக்கையாளர் மைய வங்கிச் சேவை, நிதிசார் உள்ளடக்கம் மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கம் ஆகியவற்றில் கொண்டுள்ள உறுதியான அர்ப்பணிப்பின் மூலம், மக்கள் வங்கி நாட்டின் மிகவும் நம்பகமான நிதி நிறுவனங்களில் ஒன்றாகத் தனது நிலையைத் தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றது. அதேவேளை, தனது வாடிக்கையாளர்களுக்கும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திற்கும் நிலைபேண்தகு பெறுமதியை அது வழங்கி வருகின்றது.

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் வணிக நம்பிக்கை என்பவற்றை மேம்படுவதால், கடன் கேள்வி படிப்படியாக அதிகரிக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். சில்லறை கடன் விரிவாக்கத்திற்கான அளவிடப்பட்ட வளர்ச்சி மூலோபாயத்தின் மூலம் அக்கேள்வியை வங்கி பூர்த்தி செய்யும். தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் முறையான இடர்நேர்வுத் தணிப்பு நடவடிக்கைகள் மூலம் பொறுப்பான முறையில் கடன்வழங்குவதை நாம் உறுதிசெய்வோம்.

வணிகக் கடன்

2025 இல் வணிகத் தேவைகளுக்காக நெகிழ்வுமிக்க நியதிகளில் தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான கடன்வழங்கல் தீர்வுகளுடன் வணிகக் கொடுக்கல்வாங்கல்களுக்கான கடன்வழங்கலுக்கும் நிதியிடலை வழங்குவதற்குமான வளர்ந்து வரும் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு வணிகக் கடன் பிரிவினை ஸ்தாபிப்பதற்கு கொள்கைத் தீரமானமொன்று எடுக்கப்பட்டது.

எமது கவனம்

நாடு தழுவிய கிளை வலையமைப்பின் ஊடாக வணிக வளர்ச்சியை வசதிப்படுத்துவது எமது முதன்மை குறிக்கோளாகும். கருத்திட்ட மற்றும் வர்த்தக நிதியிடல் உள்ளடங்கலாக தொழிற்படு மூலதனத் தேவைகள் மற்றும் நீண்டகால முதலீடுகள் என்பவற்றுக்கான வணிகக் கடன் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து அங்கீகரிப்பதன் மூலம் நிலைபெறத்தக்க விதத்தில் சொத்துத் தரத்தைப் பாதுகாக்கின்ற கடன் இடர்நேர்வுகளை முகாமைசெய்கின்றோம். வங்கி உத்தரவாதங்கள் மற்றும் வர்த்தக நிதியியல் உள்ளடங்கலாக நாம் வழங்கும் வசதிகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதோடு பொருளாதார மீட்சிக்கும் பங்களிக்கின்றது.

எமது தந்திரோபாயம்

ஆண்டுப் புரள்வு ரூ. 1 பில்லியனுக்கும் அதிகமாகக் கொண்ட வாடிக்கையாளர்கள் அல்லது வர்த்தக நிதி, கட்டுமானக் கருத்திட்டங்கள் என்பவற்றில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் வணிகக் கடன்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். வாடிக்கையாளர்கள் எமது இணையத்தளம் வழியாகவோ அல்லது அருகிலுள்ள கிளையினை அணுகியோ விண்ணப்பிக்கலாம். இதற்கு மேலதிகமாக 2024 இல் நாட்டின் பிராந்தியங்கள் முழுவதும் நிறுவப்பட்ட ஐந்து ஏற்றுமதி துறைக்கு குறிப்பான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மையங்கள்(ஏற்றுமதி மையங்கள்) (நாம் வழங்கிய நிதியியல் மற்றும் நிதியியல் சாரா சேவைகளைப் பெற்று ஏற்றுமதி நோக்காகக் கொண்ட தொழிற்துறைகளுக்கு வசதியளித்துள்ளன. இதன் வெற்றியைத் தொடர்ந்து, கொழும்பு நகருக்குள் இறக்குமதி வர்த்தகத்தின் கணிசமான பங்கைக் கைப்பற்றும் நோக்கில், 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் புதிய வர்த்தக மையங்களை நிறுவுதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

பிராந்திய கடன் பிரிவுகளை வெற்றிகரமாக தொழிற்படுத்தல் மற்றும் ஏற்றுமதி

முன்மொழியப்பட்ட புறக்கோட்டை இறக்குமதி மையம்

வணிகக் கடனுக்கான வெற்றிகரமான மூலோபாயம்

வணிக வாடிக்கையாளர்களுக்கான தனிநபர் கடன்கள்

வங்கி மற்றும் நிதியியல் துறை வாடிக்கையாளர்கள்

அதிகரிக்கப்பட்ட தனியார் துறை கடன்வழங்கல் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க

நாணயக் கடிதங்கள் மற்றும் வங்கி உத்தரவாதங்கள்

வணிக நிதியிடலுக்கு மேலதிகமாக, வணிக வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட நிதியியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்குத் தனிநபர் கடன் வசதிகளும் வழங்கப்பட்டன.

2025 ஆம் ஆண்டில், வங்கியின் ஒட்டுமொத்த திரட்சி இடர்நேர்வைக் குறைப்பதற்கு ஆற்றல்வாய்ந்த திரவத்தன்மையைக் கொண்ட இலாபகரமான நிதியியல் நிறுவனங்களை நோக்கி எமது கவனத்தைத் திருப்பிய அதேவேளை அரச நிறுவனங்களுக்கான கடன்வழங்கலைக் குறைப்பதன் மூலம் எமது கடன் சொத்துப்பட்டியலை மூலோபாய ரீதியாக மறுசீரமைத்து, ரூ. 50 பில்லியனுக்கும் அதிகமாக குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டினோம். நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் உறுதிப்பாடு, அத்துடன் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கான அரசாங்கத்தின் ஆதரவு என்பன இணைந்து கைத்தொழில் துறைக்குக் கடன்வழங்குவதற்கான வாய்ப்புகளைத் திறந்து, இதனூடாக எமது தொழிற்துறை அடிப்படையிலமைந்த கடன்வழங்கல் சொத்துப்பட்டியலை நிலையுறுதியடையச்செய்துள்ளது.

2025 இல் வழங்கப்பட்ட துறைவாரியான கடன்கள்



துறைகள்	2025 இன் போது வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை	%
விவசாயம்	9,977.9	4
சேவைகள்	9,012.2	4
கைத்தொழில்	143,211.2	60
ஏனையவை	74,897.5	32
மொத்தம்	237,098.8	100

நேரடிக் கடன் வழங்குதலைத் தவிர, எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு வங்கி உத்தரவாதங்கள் மற்றும் நாணயக் கடிதங்கள் ஊடாக சுமார் ரூ. 28.6 பில்லியன் நிதிசாரா வசதிகளை நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்தோம். நெடுஞ்சாலை அபிவிருத்தி மற்றும் தித்வா புயலுக்குப் பின்னரான உட்கட்டமைப்புத் கருத்திட்டங்கள் எனபன வணிக வாய்ப்புகளை மேலும் தூண்டி, நிதிசாரா வசதிப்படுத்தல் சொத்துப்பட்டியலை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடன் மதிப்பீடு

வங்கியின் கடன் கொள்கை வழிகாட்டுதல்களை நாம் கண்டிப்பாகப் பின்பற்றுவதோடு, ஒழுங்குமுறை அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி, எங்கள் கடன் மதிப்பீட்டுச் செயல்முறைகள் மீதான பொறுப்புணர்வைப் பேணி, சேவைத் திறனுக்கான குறைந்தபட்ச மீள்வரு நேரத்தை உறுதிசெய்கிறோம். இந்தத் தரநிலைகள் கடைப்பிடிக்கப்படுவதை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

முன்னரே நிர்ணயிக்கப்பட்ட துறைசார் வெளிப்பாட்டு வரம்புகளுக்கு இணங்க, செறிவு இடர் (concentration risk) தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம். வங்கியின் கடன் கொள்கையில் ESG ஆய்வு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, மேலும் ஒவ்வொரு கடன் வசதியின் மதிப்பீடும் ESG சட்டக இணக்கத்தின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. ESG முறையை கடைப்பிடிப்பது வங்கியின் முன்னுரிமையாகும். மேலும், நாங்கள் சேவைத் தரம், சேவைப் பாதுகாப்பு, கடன் வாங்குபவரின் செயல்முறைகள் மற்றும் அவரது வணிக நடவடிக்கைகளுக்கு எதிரான சமூக எதிர்ப்பு இல்லாதிருத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினோம்.

டிஜிட்டல் கடனளிப்பு

எங்களின் முன்னேற்றமான டிஜிட்டல் திறன்களைப் பயன்படுத்தி, கடன் செயல்முறை கூட்டுறவு கடன் உருவாக்கல் முறை (CLOS) மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் சுமார் 60%-70% வசதிகள் டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்பட்டன. பல்வேறு வசதிகளின் தொகுப்பிற்கான கையேடு அமைப்பை மேம்படுத்துவதற்கும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான CLOS-க்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அபாயங்களும் வாய்ப்புகளும்

வட்டி வீதங்கள் மற்றும் நாணய மாற்று விகிதங்களில் ஏற்படும் நிலையற்ற தன்மையே இலாபத்தன்மைக்கு மிகப்பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது. டித்வா புயல் ஒரு தேசியப் பேரழிவாக இருந்தபோதிலும், அதன் பின்விளைவுகள், புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காகக் நிர்மாணத் துறைக்கு வழங்கப்படும் கடன்களைக் கணிசமாக அதிகரிக்கக்கூடும்.

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்திக்கான தேசிய முன்னுரிமைகளுடன் நமது முன்னுரிமைகளும் பின்னிப் பிணைந்துள்ளதால், பல்வேறு கடன் வசதிகளின் தொகுப்பிற்காக, வலுவான கடன் மதிப்பீடு மற்றும் இடர் முகாமைத்துவக் கவனமாகக் கடைப்பிடித்து, கடன் வழங்கும் செயல்முறையை டிஜிட்டல்மயமாக்குவதற்கான வழிகளைத் தேடும் அதே வேளையில், செயல்பாட்டு மூலதனக் கடன் வழங்குதல், வர்த்தக நிதியளிப்பு மற்றும் பெருநிறுவன வங்கித் தீர்வுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றையும் நாங்கள் முன்னெடுப்போம்.

சிறப்பம்சங்கள்

ரூபா கடன் தொகுப்பு

ரூ. 167.3 பில்.

வெளிநாட்டுக் கடன் தொகுப்பு

28.3 மில். அமெரிக்க டொலர்

மொத்த செயற்படா கடன்கள்

ரூ. 8.4 பில்.

செயற்படா கடன் விகிதம்

4.55%

வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள்

ரூ. 20.8 பில்.

கிளை வலையமைப்பு மூலம் LC நிறுவனங்கள்

ரூ. 88.5 பில்.

(வங்கியின் ஒட்டுமொத்த கடன் தொகுப்பில் 38% பங்கு)

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SME) அபிவிருத்தி மற்றும் நுண்நிதி

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME) மற்றும் நுண்கடன் வணிகங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பது, இந்த ஆண்டில் வங்கியின் ஒரு முக்கிய மூலோபாய முன்னுரிமையாகத் தொடர்ந்தது. அரசின் தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்க, வங்கியானது நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோருக்கு நிதி அணுகலை எளிதாக்குவதோடு, தனது நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSME) கடன் தொகுப்பையும் தொடர்ந்து விரிவுபடுத்தியது. தற்போதுள்ள வாடிக்கையாளர்களுடனான உறவுகளை வலுப்படுத்துவதன் மூலமும், புதிய வணிகங்களை முனைப்புடன் இணைத்துக்கொள்வதன் மூலமும், வங்கியானது நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும், பிராந்திய பொருளாதார நடவடிக்கைகளைத் ஊக்குவிப்பதற்கும், வளர்ந்து வரும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் பங்களித்தது.

எமது கவனம்

பொருளாதார மீட்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் முக்கியப் பங்கை உணர்ந்து, வங்கியானது இலக்கு சார்ந்த கடன் மற்றும் ஆலோசனை ஆதரவின் மூலம் இத்துறையை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. வலுவான வளர்ச்சி ஆற்றல் கொண்ட வணிகங்களைக் கண்டறிவதற்கும், வளர்ந்து வரும் நிறுவனங்களைப் பெரிய வணிக மற்றும் பெருநிறுவனப் பிரிவுகளுக்கு மாற்றுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

தொழில்முனைவோர் மற்றும் வணிக நிறுவனங்களுடன் முனைப்புடன் ஈடுபட்டதன் மூலம், வங்கி தனது நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவன (MSME) வாடிக்கையாளர் தளத்தை வெற்றிகரமாக விரிவுபடுத்தியதுடன், வாடிக்கையாளர் எண்ணிக்கை மற்றும் வணிக அளவு ஆகிய இரண்டிலும், 2025 ஆம் ஆண்டில் இப்பிரிவில் இதுவரை இல்லாத மிக உயர்ந்த வளர்ச்சியையும் அடைந்தது. மேலும், வங்கியானது நாடு முழுவதும் சலுகை நிதித் திட்டங்களையும், அடமான அடிப்படையிலான கடன் திட்டங்களையும் செயல்படுத்துவதன் மூலம் தேசிய வளர்ச்சி முன்னெடுப்புகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தது.

எமது தந்திரோபாயம்

ஒரு அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற முறையில், பொருளாதார மீட்சிக்கான தேசிய முன்னுரிமைகளுடன் எங்கள் மூலோபாயத்தை மும்முனை அணுகுமுறையைக் கையாண்டு சீரமைத்தோம்.

தகுதிவாய்ந்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையையும் வணிக அளவையும் அதிகரிக்க, வாடிக்கையாளர் தளத்தை விரிவாக்குதல்.	தரமான சந்தை ஆய்வு மற்றும் அளவுசார் வங்கிப் பகுப்பாய்வு ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம், வருங்கால வாடிக்கையாளர்களையும் வங்கிச் சேவைகளைப் பெறாதவர்களையும் அணுகி, அவர்களை வங்கியுடன் இணைத்தல்.	கிளை முகாமையாளர்களுக்கு வாடிக்கையாளர் உறவு முகாமையாளர்களாகப் பணியாற்றுவதற்கும், நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) சேவைகளை முனைப்புடன் விளம்பரப்படுத்துவதற்கும் பயிற்சி அளித்து, அவர்களின் திறன்களை மேம்படுத்துதல்.

அணுகுமுறை

வங்கி தனது வாடிக்கையாளர் தளத்தையும் வணிக அளவையும் விரிவுபடுத்துவதற்காக நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) பிரிவை அணுகியது. இதை அடைவதற்கு, வாடிக்கையாளர்களுடன் முனைப்புடன் ஈடுபடும் வகையில் கிளை முகாமையாளர்களிடையே மனநிலை மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாக இருந்தது. இதற்குக் காரணம், சாத்தியமான வாடிக்கையாளர்களின் சில பிரிவினர், அவ்வாறு செய்வதற்கான நிதி வசதி இருந்தபோதிலும், வங்கியை அணுகத் தயங்கினர். இதுபோன்ற சூழ்நிலைகளில், அவர்களின் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவன முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், வங்கி அமைப்பு மற்றும் அதன் பல நன்மைகள் குறித்த அறிவை அவர்களுக்கு வழங்குவது அவசியமாகிறது. இந்த மூலோபாயத்தின் மூலம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் வணிகப் பிரிவுகளில் உள்ள சாத்தியமான வாடிக்கையாளர்களை நுண் மட்டங்களிலிருந்து உயர் மட்டங்களுக்கு எங்களால் உயர்த்த முடிந்தது.

நாடு முழுவதும் பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிக்கும் எங்கள் முயற்சிகளின் ஒரு பகுதியாக, வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்தின் ஆதரவுடன், இந்த விரிவாக்கப்பட்ட வாடிக்கையாளர் தளத்தைப் பயன்படுத்தி அரசாங்க சலுகைக் கடன்களையும் மறுநிதியளிப்புக் கடன்களையும் வழங்கினோம். இந்த முன்னெடுப்புகள் பிராந்திய மையத்தையும் ஆள்புல திறன்களையும் வலுப்படுத்தின.

ஆண்டின் இறுதியில், வாடிக்கையாளர் எண்ணிக்கை மற்றும் வணிக அளவுகள் ஆகிய இரண்டிலும், வங்கியின் வரலாற்றிலேயே மிக உயர்ந்த வளர்ச்சியை இந்தத் துறை அடைந்தது, இது அந்த மூலோபாயத்தின் வெற்றியை எடுத்துக்காட்டுகிறது.

தேசிய முன்னுரிமைகளுடனான இணக்கப்பாடு

தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத முக்கியத் துறைகளுக்கு நிதி ஆதரவு வழங்குவதற்கு வங்கி முன்னுரிமை அளித்தது.
இந்தத் துறைகளில் பின்வருவன அடங்கும்:

- விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த வணிகம்
- உற்பத்தி, மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தி
- புதுப்பிக்கத்தக்க சக்திவளத் திட்டங்கள்
- வர்த்தகம் மற்றும் சேவைகள்
- சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்கள்

பயனாளிகளில் கணிசமான விகிதத்தில் புதுத்தொழில் நிறுவனங்கள், இளைஞர் தொழில்முனைவோர், நுண்தொழில் நிறுவனங்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான வணிகங்கள் அடங்கியிருந்தனர், இது அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

பெண் தொழில்முனைவோரின் வணிகத் திறன்களை வலுப்படுத்தும் நோக்கில், பிரத்யேக மறுநிதியளிப்புத் திட்டங்கள் மற்றும் நிதி அறிவு முன்னெடுப்புகள் மூலம் அவர்களுக்கு மேலும் ஆதரவளிக்கப்பட்டது.



சிறப்பம்சங்கள்

நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவன வாடிக்கையாளர் தளத்தில் அதிகரிப்பு
15.2%

நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வணிக அளவு அதிகரிப்பு
ரூ. 20.8 பில்.

பசுமை மின் திட்டக் கடன் வழங்கப்பட்டது
ரூ. 6.9 பில்.

மக்கள் சக்தி கடன் திட்டம் தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி
74.6%

பேண்தகு திட்டங்கள்

பேண்தகு நிதியளிப்பிற்கான வங்கியின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, சூழலுக்குப் பொறுப்பான முதலீடுகளை ஆதரிப்பதற்காக மக்கள் வங்கி பசுமை மின் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டு, ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்பால் மதிப்பாய்வு செய்யப்பட்ட இலங்கை பசுமை நிதி வகைப்பாட்டிற்கு முழுமையாக இணங்கி இந்த சேவை உருவாக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பு, வங்கித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் கட்டமைக்கப்பட்ட பசுமை நிதிச் சேவைகளில் ஒன்றாகும்.

பேண்தகு நிதி கட்டமைப்பின் கீழ் கடன் மதிப்பீடு மற்றும் கடன் வழங்கலை மேற்பார்வையிடுவதற்காக, ஒரு பிரத்யேக பிராந்திய அளவிலான பணிக்குழு அமைக்கப்பட்டது. பல தரைத்தள மற்றும் கூரைமேல் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ள நிலையில், நீர்மின்சக்தி முன்னெடுப்புகள் மற்றும் பிற நீடித்த நிலைத்தன்மை கொண்ட திட்டங்கள் எதிர்காலச் செயலாக்கத்திற்காக தற்போது மதிப்பீட்டில் உள்ளன.

MSME சேவைத் தொகுப்பு

வங்கி, நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) வணிக வாழ்க்கைச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களில் அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட விரிவான நிதித் தீர்வுகளை வழங்குகிறது. பின்வருவன இவற்றில் அடங்கும்:

- செயல்பாட்டு மூலதன நிதியளிப்பு
- காலக் கடன் வசதிகள்
- சொத்து நிதி தீர்வுகள்
- தனிப்பயனாக்கப்பட்ட நுண்நிதி சேவைகள்

இந்த வசதிகள், நெகிழ்வான நிதிக் கட்டமைப்புகள், நெறிப்படுத்தப்பட்ட கடன் அங்கீகார செயல்முறைகள் மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த செயலாக்க நேரங்கள் ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகின்றன.

டிஜிட்டல் வங்கித் தளங்கள், கடனைத் தடையின்றிப் பெறுவதற்கு வழிவகுப்பதன் மூலம் வாடிக்கையாளர்களின் வசதியை மேலும் மேம்படுத்துகின்றன.

நிதிச் சேவைகளுக்குப் பக்கபலமாக, நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்துவதையும், வங்கிச் சேவைகளைப் பெறாத தொழில்முனைவோரை முறையான வங்கி அமைப்பில் ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஆலோசனை மற்றும் நிதி எழுத்தறிவுத் திட்டங்களையும் வங்கி நடத்துகிறது.

பெண்கள் வலுவூட்டல்

பெண்களின் தொழில்முயற்சியை ஊக்குவிப்பது, வங்கியின் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் தொடர்கிறது. பெண் தொழில்முயற்சியாளர்கள் தங்கள் தொழில்களை நிறுவி விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில், விசேட கடன் சேவைகள், நுண்கடன் தீர்வுகள் மற்றும் சேமிப்புத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

வங்கியானது நிதி அறிவு, வணிக முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பயிற்சித் திட்டங்களையும் நடத்துகிறது. இதன் மூலம் பெண்கள் தங்களின் நிதிச் சுதந்திரத்தை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் வழிவகை செய்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து, Deloitte நிறுவனம், பெண்கள் தொழில் முனைவோருக்கான திறன் விருத்தித் திட்டங்களை வழங்குவதில் மக்கள் வங்கிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கியது.

நுண்நிதி

சேவைகள் கிடைக்கப்பெறாத சமூகத்தினரிடையே நிதி உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதில் நுண்நிதித் துறை ஒரு முக்கியப் பங்கைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது. வங்கியானது கிராம வங்கிச் சேவை மாதிரியைப் பின்பற்றியது, அதில் வாடிக்கையாளர் குழுக்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குப் பொருத்தமான நிதித் தீர்வுகளுடன் நிதி ஆலோசனை சேவைகளும் வழங்கப்பட்டன.

இந்த அணுகுமுறையின் மூலம், தனிநபர்களும் நுண் தொழில் நிறுவனங்களும் முறைசார் நிதி அமைப்பிற்குள் வங்கிச் சேவைகளைப் பெறத் தகுதியான வாடிக்கையாளர்களாக மாறுவதற்கு ஆதரவளிக்கப்பட்டது.

வனிதா சவிய கடன் திட்டத்தின் கீழ், பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் ஒரு வாடிக்கையாளருக்கு 25 மில்லியன் இலங்கை ரூபாய் வரை நிதியுதவி பெறத் தகுதி பெற்றன. இது சிறு வணிகங்களின் விரிவாக்கத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

மக்கள் சக்தி கடன் திட்டம்		விவசாயிகளுக்கான புதிய விரிவான கிராமிய கடன் திட்டம் (NCRCS)		நெல் மற்றும் சோளத்தை அறுவடை செய்வதற்கும் சேமித்து வைப்பதற்குமான அடமானக் கடன் வசதி	
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டு (SMED) கடன் திட்டம்	புத்தொழில் நிறுவனங்களுக்கான பீப்பிள்ஸ் ஸ்பார்க் கடன் திட்டம்	வனிதா சவிய கடன் திட்டம்	பிஸ்னஸ் பவர் கடன் திட்டம்	அஸ்வென்ன கடன் திட்டம்	பசுமை மின் கடன் திட்டம்

அபிவிருத்தி நிதியளிப்பு

வங்கியானது, தனது கிராமிய அபிவிருத்தி நோக்கத்தின் ஒரு பகுதியாக, முக்கியமாக விவசாயத் துறையை மையமாகக் கொண்ட பல்வேறு அபிவிருத்திக் கடன்களை வழங்குகிறது.

கப்ருக அயோஜன கடன் திட்டம்	தென்னை பயிர்ச்செய்கை சபை (CCB), மக்கள் வங்கியுடன் இணைந்து வழங்கும் இந்த சலுகை நிதி உதவித் திட்டம், தென்னை நிலங்களின் அபிவிருத்திக்காக மூலதனத்தை வழங்குகிறது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கம், அதிக உற்பத்தித்திறனை அடைவதற்காக ஒருங்கிணைந்த விவசாய முறைகளை ஊக்குவித்து, தென்னை நிலங்களை முழுப் பண்ணை அலகுகளாக மேம்படுத்துவதற்கு வழிவகுப்பதாகும்.
அஸ்வென்ன கடன் திட்டம்	இத்திட்டம், விவசாயம் சார்ந்த பெரும்பாலான தொழில்களுக்குச் சேவையாற்றும் நுண் மற்றும் சிறு விவசாயிகள், விவசாய உள்ளீடு வழங்குவோர், விவசாய பதப்படுத்துவோர், விவசாய உற்பத்தி சேகரிப்பாளர்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கு நிதியளிக்கிறது.
நெல் பிணைக் கடன் திட்டம்	இந்தக் கடன் திட்டத்தின் மூலம் நெல் ஆலை உரிமையாளர்களுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் நெல்லைக் கொள்முதல் செய்ய ஆதரவளிக்கப்படுகிறது. இது ஆலைகளின் தடையற்ற செயல்பாட்டையும், சந்தைக்கு நிலையான விநியோகத்தையும் உறுதி செய்கிறது.
SEPI-II கடன் திட்டம் சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சி – இரண்டாம் கட்டம்	நாட்டில் இளம் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவளிக்கும் வகையில், தொழிற்பயிற்சி பெற்ற இளைஞர்கள் சுயதொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கு உதவும் வகையில் இந்தக் கடன் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
புதிய அனைத்தையும் முள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (NCRCS)	இந்தத் திட்டம், குறுகிய காலப் பயிர்களை செய்கைசெய்தல், அவற்றின் நாற்றங்கால்கள், வீட்டுத் தோட்டம் மற்றும் களஞ்சிய நிதியளிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நுண் விவசாயிகளின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, அவர்களுக்குக் குறைந்த செலவிலான நிதியுதவியை வழங்குவதன் மூலம் நிதி அமைச்சினால் நிர்வகிக்கப்படுகிறது.

கடன் மதிப்பீடு மற்றும் இடர் முகாமைத்துவம்

கடன் மதிப்பீடு குறித்த எங்கள் அணுகுமுறை, இடர் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. கிளைகளில் உள்ள வாடிக்கையாளர் உறவுகளை நிர்வகிக்கும் முகாமையாளர்களால் பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகள் சேகரிக்கப்பட்ட பின்னர், தகுதியுள்ள வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதற்காக வங்கி அந்தத் தரவுகளை மதிப்பீடு செய்கிறது.

பிராந்திய கடன் பிரிவுகள் ஆரம்பகட்ட மதிப்பீட்டை மேற்கொண்டதோடு, வாடிக்கையாளர் தளத்தையும் வணிக அளவுகளையும் விரிவுபடுத்துவதன் மூலம் 2025-ஆம் ஆண்டில் வங்கியின் வெற்றிக்குப் பங்களித்தன. புதிய கடன் வழங்கல்களுக்கான கடன் சேவை சிறப்பாக இருந்தது, மேலும் செயற்படாகடன் (NPL) விகிதம் 3.0%க்கும் குறைவாகவே இருந்தது.

இந்த அணுகுமுறை, நுண்தொழில் வாடிக்கையாளர்கள் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு மாறுவதை எளிதாக்கியது, ஏனெனில் நேரடி உறவுகள் அவர்களின் வணிகங்களையும் நீண்ட காலத்திற்கான தனித்துவமான நிதித் தேவைகளையும் புரிந்துகொள்ள உதவின.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

வரும் காலத்தில், அதிக ஆற்றல் வாய்ந்த துறைகளான பின்வருவன உட்பட, அவற்றின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் வங்கி தனது நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டுத் தொகுப்பை மேலும் வலுப்படுத்த உத்தேசித்துள்ளது:

- ஸ்மார்ட் விவசாய மற்றும் விவசாய வணிகம் (Smart agriculture and agribusiness)
- புத்தாக்க நிறுவனங்கள்
- பேண்தகு தொழிற்துறைகள்
- சுற்றுலாத் துறை அபிவிருத்தி

இலங்கை வலுவான போட்டித்தன்மை நன்மைகளைக் கொண்டுள்ள மசாலாப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வாசனைப் பொருட்கள் போன்ற தொழில்துறைகளில், குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஆதரவையும் வங்கி விரிவுபடுத்தும்.

மேலும், வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்கு வழிகாட்டும் வகையில், வங்கியானது நிதிசார் எழுத்தறிவுத் திட்டங்களையும் ஆலோசனைச் சேவைகளையும் தொடர்ந்து மேம்படுத்தும் இதற்கான விரிவான செயலாக்கத் திட்டங்கள் 2026-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

பெருநிறுவன வங்கிச் சேவை

பெருநிறுவன வங்கிப் பிரிவு, தனது வாடிக்கையாளர் அணுகுமுறை முறைகளை மறுவடிவமைத்து, ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தியதன் மூலம், 2025-ஆம் ஆண்டில் வங்கியின் கடன் தொகுப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலான தனது பங்களிப்பைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டது.

எமது கவனம்

2025-ஆம் ஆண்டில், பெருநிறுவன வங்கிப் பிரிவு (CBD), தனியார் துறையில் கடன் வழங்கும் வாய்ப்புகளைத் தீவிரமாக கண்டடைவதன் மூலம், கடன் துறையில் தனது பங்கை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியது.

எமது தந்திரோபாயம்

தனியார் துறையை நோக்கிய விரிவாக்கம்

புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கும், தற்போதுள்ள வாடிக்கையாளர்களைத் தக்கவைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்த இலக்கை ஆதரிப்பதற்காக, CBD நிறுவனம் பிரத்தியேக வாடிக்கையாளர் உறவுகளை நிர்வாகிக்கும் முகாமையாளர்கள் (CRMs) மற்றும் வாடிக்கையாளர் நிர்வாகிக்கும் அதிகாரிகளை (CROS) நியமித்து, குறிப்பிட்ட இலக்குகளுடன் தொடர்புகொள்வதற்காக அவர்களுக்குக் குறிப்பிட்ட வாடிக்கையாளர் குழுக்களை ஒதுக்கும் திட்டத்தைத் தொடர்ந்தது. பிரிவிற்காக நிர்ணயிக்கப்பட்ட 12 முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை (KPIs) உன்னிப்பாகக் கண்காணித்தபடியே, எங்களின் அனைத்து இலக்குகளையும் அடைவதில் நாங்கள் பெற்ற பாராட்டத்தக்க வெற்றிக்கு, இந்த அணுகுமுறையும், CROMS மற்றும் CROS அமைப்புகளுக்காக நடத்தப்பட்ட சிறப்பு வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுமே முக்கியக் காரணமாக இருந்தன.

வாடிக்கையாளர் பிரச்சினைகளை தனிப்பட்ட முறையில் பரிசீலித்து சலுகைகளை வழங்குவதன் மூலம் சொத்துக்களின் தரம் தக்கவைக்கப்பட்டது, அதே நேரத்தில் தேவை அடிப்படையிலான அணுகுமுறையில் தீர்வுகளை வழங்குவதற்காக தனிப்பட்ட சந்திப்புகள் நடத்தப்பட்டன. இது புதிய வாடிக்கையாளர்களைச் சேர்த்து கொள்ள உதவியதுடன், கடன் தொகுப்பை விரிவுபடுத்தவும் உதவியது.

சிறப்பம்சங்கள்

மொத்த நிறுவனக் கடன் தொகுப்பு

ரூ. 600 பில்.

வங்கியின் கடன் பதிவேட்டிற்குப் பங்களிப்பு

34%

தனியார் துறை பெருநிறுவனக் கடன்கள்

ரூ. 286 பில்.

தனியார் துறை கடன்களின் வளர்ச்சி

35%

புதிய பெருநிறுவன வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதில் அதிகரிப்பு

88

விடயம் குறித்த தலைப்புகள் மற்றும் கருப்பொருள்கள் குறித்த விரிவான பகுப்பாய்விற்கு, பக்கங்கள் 80-85-ஐப் பார்க்கவும்.

வங்கிச் சேவை மற்றும் நிதித் துறைகள்

நிர்மாணம் மற்றும் உற்பத்தித் துறைகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி வேகம் குறைந்ததாலும், ஏற்றுமதி மற்றும் ஆடைத் தொழில் துறைகள் மெதுவான வளர்ச்சியைச் சந்தித்ததாலும், மோட்டார் வாகன இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிக கடன் தேவையின் காரணமாக, இத்துறைகளை நாங்கள் எச்சரிக்கையுடன் அணுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும், மற்ற துறைகளில் இயல்பான வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொண்டே, நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குள் வாடகை கொள்முதல் மற்றும் குத்தகை வணிகங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டிய நிதித் துறைக்கு எங்கள் கவனத்தைத் திருப்பினோம். வங்கியின் அதிகப்படியான திரவ நிலையானது, இத்துறைக்கு முனைப்புடன் நிதியளிக்க ஒரு வாய்ப்பை வழங்கியது, இது கடன் தொகுப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

வலுவான இடர் மதிப்பீடு மற்றும் நிறுவன வங்கிப் பிரிவு

செயற்படா கடன் தொகுப்பை நிர்வகிப்பதற்காக, CBD கடுமையான இடர் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்தைத் தொடர்ந்தது. இந்தப் பிரிவு, செயற்படா கடன் தொகுப்பை 3% குறைப்பதில் வெற்றி கண்டதுடன், ஓராண்டிற்குள் சிறந்த சொத்துத் தரத்தையும் பேணியது. சிரமங்களை எதிர்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், அவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளைப் பகுப்பாய்வு செய்த பின்னர், தனிப்பட்ட முறையில் சலுகைகள் வழங்கப்பட்டன.

வலுவூட்டப்பட்ட குழு

தனியார் துறை, தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை அணுகுவதற்காக, நன்கு திறமை வாய்ந்த இளைஞர் குழு ஒன்று திரட்டப்பட்டது. வங்கியின் கடன் தொகுப்பை விரிவுபடுத்துவதற்காக, இந்தக் குழு நுணுக்கமான மற்றும் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை அணுகியது. 2025-ல் இந்த வெற்றியின் ஒரு முக்கிய அங்கமாக, நிபுணத்துவ வளங்கள் வழங்கும் மேம்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயிற்சிகள் மூலம், எதிர்காலத்திற்கு ஏற்ற ஒரு CBD குழுவிற்கு வழிகாட்டுவதில் நாங்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பு அமைந்தது.

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

33% வளர்ச்சியை அடைந்து, ரூ.59 பில்லியன் மேலதிக வளர்ச்சியை எட்டும் நோக்குடன், CBD தனியார் துறை வணிகங்களில் தொடர்ந்து கவனம் செலுத்தும். ஐந்து குழுமங்களாக (Clusters) அர்ப்பணிப்பும் ஆர்வமும் கொண்ட விற்பனைக் குழுவை உருவாக்கும் நோக்கில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாறிவரும் பெருநிறுவன வங்கிச் சூழலின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வங்கிச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைப் பயிற்சிக்காக நிபுணத்துவ வளங்களைத் தொடர்ந்து ஒதுக்கீடு செய்ய, நாங்கள் மனிதவளத் துறையுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம்.



திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கிச் சேவை

வங்கியின் நிதி வெற்றியைப் பொருள்ரீதியாக மேம்படுத்துவதிலும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதிலும் திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கிப் பிரிவானது, திரவத்தன்மை, முதலீடுகள், மூலதன ஒதுக்கீடு மற்றும் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளைத் தடையின்றி நிர்வகிப்பதற்காக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், வங்கியின் செயல்பாட்டுத் திறனில் இது ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது.

திறைசேரி

எமது கவனம்

குறைந்துவரும் வட்டி விகிதங்கள், நாணய மதிப்பு மாற்றங்கள் மற்றும் வங்கித் துறைக்குள் தீவிரமடைந்த போட்டித்தன்மை ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்ட ஒரு மாறும் செயல்பாட்டுச் சூழல் இருந்தபோதிலும், திறைசேரிப் பிரிவு 2025-ஆம் ஆண்டில் ஒரு நிலையான செயல்திறனை வெளிப்படுத்தி, வங்கியின் வருவாய் மற்றும் இலாப வரம்பிற்கு கணிசமாகப் பங்களித்தது. விவேகமான திரவத்தன்மை முகாமைத்துவம், அந்நிய செலாவணி நடவடிக்கைகள் மற்றும் மூலோபாய முதலீட்டு செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் வங்கியின் நிதிச் செயலாற்றுகையை ஆதரிப்பதில் இந்தப் பிரிவு ஒரு முக்கியப் பங்கைத் தொடர்ந்து ஆற்றியது..

எமது தந்திரோபாயம்

அந்த ஆண்டில் திறைசேரியின் மூலோபாய முன்னுரிமைகள், நிதி நிலைத்தன்மையைப் பேணுதல் மற்றும் நீடித்த இலாபத்தன்மையை அடைதல் ஆகிய வங்கியின் பரந்த நோக்கங்களுடன் நெருக்கமாக ஒத்துப்போயின. வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் அந்நியச் செலாவணி கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம், வாகனங்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பிற முக்கியப் பொருட்களின் இறக்குமதியை எளிதாக்குவதே முதன்மை நோக்கமாக இருந்தது. அரச மற்றும் தனியார் துறை வங்கிகளிடமிருந்து அதிகரித்த போட்டிக்கு மத்தியில், முனைப்பான சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மூலம் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வது, 2025-ஆம் ஆண்டில் வங்கி முனைப்பாகக் கவனம் செலுத்திய மற்றொரு முக்கிய மூலோபாய முன்னுரிமையாக இருந்தது.

அதே சமயம், வங்கியானது சாத்தியமான அரச நிறுவனங்களைத் தக்கவைத்துக்கொண்டு, தனியார் துறையில் ஊடுருவுவதிலும் கவனம் செலுத்தியது. வர்த்தக அளவை அதிகரிப்பதற்காக, வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளின் இலாப வரம்புகளைக் குறைத்தோம்.

திரவத்தன்மை முகாமைத்துவம்

2025 ஆம் ஆண்டு முழுவதும் திரவத்தன்மை முகாமைத்துவம் திறைசேரிப் பிரிவின் ஒரு முக்கியப் பணியாகத் தொடர்ந்தது. வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவக் கட்டமைப்பு, ஒழுக்கத்தையும் தொலைநோக்குப் பார்வையையும் பிரதிபலித்ததுடன், ஐந்தொகை மீள்திறனுக்கு ஆதரவளித்தது. ஒழுங்குமுறை விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு, மறுமுதலீட்டிற்கான அதிக வட்டி விகிதங்களை எதிர்பார்த்தும், 2026-ல் கடன் வளர்ச்சிக்குத் தயாராகவும், திறைசேரி மற்றும் சொத்து மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவம், பல்வகைப்பட்ட நிதி ஆதாரங்கள், விவேகமான கால அளவு கொண்ட வெளியீடுகள் மற்றும் குறுகிய கால அரசாங்கப் பத்திரங்களில் மூலோபாய ரீதியான முதலீடு ஆகியவற்றின் மூலம் திரவத்தன்மையை முனைப்புடன் நிர்வகித்தன. மேம்பட்ட அந்நியச் செலாவணி வரவுகள் மற்றும் உள்நாட்டு நாணய நிதிகளின் விவேகமான முகாமைத்துவம் ஆகியவற்றின் ஆதரவுடன், வங்கியானது ரூபாய் மற்றும் பிற நாணயங்கள் இரண்டிலும் வசதியான திரவத்தன்மை நிலைகளைப் பராமரித்தது.

குறுக்கு விற்பனை வாய்ப்புகள் (Cross-sell opportunities)

ஏனைய வணிகப் பிரிவுகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுவதன் மூலம், திறைசேரியானது ஒருங்கிணைந்த வங்கித் தீர்வுகளை வழங்குவதற்கு ஆதரவளித்ததுடன், வங்கியின் வங்கிச்சேவை தொகுப்பு முழுவதும் குறுக்கு விற்பனை வாய்ப்புகளையும் ஊக்குவித்தது. வாடிக்கையாளருடனான தொடர்ச்சியான தொடர்பு, திறைசேரி குழுவிற்கு வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கு புரிந்துகொள்ளவும், திறைசேரி தொடர்பான சேவைகளையும் தீர்வுகளையும் வழங்கவும் உதவியது.

எமது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துதல்

கிளை ஊழியர்களே வாடிக்கையாளர் தொடர்பின் முதன்மைப் புள்ளியாகச் செயல்படுவதால், ஊழியர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவும், நீடித்த வாடிக்கையாளர் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கட்டியெழுப்பவும் அவர்களை வலுவூட்டும் வகையில், திறைசேரியானது அறிவு மேம்பாடு மற்றும் திறன் வளர்ச்சி முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்தது.

விற்பனைக் குழு

மீளாய்வு ஆண்டில், திறைசேரியானது வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் வங்கியின் மூலோபாய முன்னுரிமைகள் ஆகிய இரண்டிற்கும் இசைவான பல முன்னெடுப்புகளை மேற்கொண்டது. செயலூக்கமான வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் திட்டமிடப்பட்ட சந்திப்புகள் மூலம், எங்கள் அர்ப்பணிப்புள்ள விற்பனைக் குழுக்கள், புதிய வணிகத்தைப் பெறுதல், வாடிக்கையாளர்களைத் தக்கவைத்தல் மற்றும் உறவுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் வேகத்தைத் தக்கவைத்துக்கொண்டு, வகைகூறலை உறுதிசெய்தன.

சவால்களுக்கு மத்தியில் செயற்படுதல்

பாரம்பரிய வங்கி மற்றும் நவீன நிதி தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து வரும் கடுமையான சந்தைப் போட்டி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே, குறைந்து வரும் இலாப வரம்புகளுக்குள்ளும், மிகவும் நிலையற்ற சூழலிலும் செயல்படுவது அவசியமாகிறது. தெளிவற்ற சந்தைப் போக்குகள் மற்றும் நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில், உகந்த நிலைகளைப் பேணுவதன் மூலமும், விருப்பத் தேர்வுகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுவதன் மூலமும் நமது இடர் வெளிப்பாட்டைச் சமநிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தில் நாங்கள் கவனம் செலுத்தினோம்.

ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனமாக, தனி கடன்படுனர் வரம்பு மற்றும் தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனை கட்டமைப்புகள் உள்ளிட்ட பல கட்டுப்பாட்டு மற்றும் இணக்கம் தொடர்பான தேவைகளுக்குள் செயல்படுவது மிகவும் முக்கியமானதாகும். இதற்காக, நிறுவனங்களுக்கிடையேயான பரஸ்பர இணைப்புகளின் பல அடுக்குகளை பிரித்தறிவது அவசியமாகும் இது நேரம் எடுத்துக்கொள்ளும் செயலாகும். இதற்கிடையில், FinTech நிறுவனங்கள் வழங்கும் திறைசேரி சார்பு வங்கிச் சேவைகள் தொடர்ந்து விரிவடைந்து வரும் சூழலில், இந்த அழுத்தங்களை சமாளிக்கும் போது, குறையும் இலாப விகிதங்களையும் பொருட்படுத்தாமல், அதிகப்படியான திரவத்தன்மையை கவனமாகவும் நியாயமான தீர்மானங்களுடனும் நிர்வகித்து, எங்கள் இலக்குகளை அடைந்தோம்.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

ஒழுங்குமுறை இணக்கத்தை கண்டிப்பாகப் பின்பற்றி, திரவத்தன்மையை நிர்வகித்தல், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அடைதல், மற்றும் வங்கியின் அந்நிய செலாவணி மற்றும் வட்டி விகித நிலைகளில் உள்ள ஈடுபாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றில் குழு தொடர்ந்து கவனம் செலுத்தும்.

வரும் காலத்தில், திறைசேரியானது வர்த்தக உத்திகளை மேம்படுத்துதல், அந்நியச் செலாவணி வர்த்தக அளவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் செயல்திறன் மிக்க திரவத்தன்மை முகாமைத்துவ நடைமுறைகளைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம் வங்கிக்குத் தனது பங்களிப்பை வலுப்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்தும்.

எதிர்வரும் ஆண்டிற்கான முக்கிய முன்னுரிமைகளில், முக்கிய பெருநிறுவன மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுடனான உறவுகளை வலுப்படுத்துதல், மூலோபாய முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் இலாபத்தன்மையை மேம்படுத்துதல், மற்றும் மாறிவரும் ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதல் ஆகியவை அடங்கும்.

முதன்மை வணிக பிரிவு

எமது கவனம்

2025-ஆம் ஆண்டில், மேம்பட்ட சந்தை மனநிலை மற்றும் வலுவான திரவத்தன்மை நிலைமைகளின் ஆதரவுடன், முதன்மை முகவர் பிரிவு (PDU) முதன்மை மற்றும் இரண்டாம் நிலை அரச பிணையங்கள் சந்தைகள் இரண்டிலும் தனது பங்கை வலுப்படுத்தியது. வங்கியின் அரசாங்க பிணையங்களின் தொகுப்பு, ஆண்டுக்கு ஆண்டு 46% விரிவடைந்துள்ளது. இது, மாறிவரும் சந்தைச் சூழலில் வங்கியின் முனைப்பான பங்கேற்பையும் மூலோபாய நிலைப்பாட்டையும் பிரதிபலிக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பொதுக் கடன் திணைக்களத்திலிருந்து, பொதுக் கடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு (PDMO) அரசாங்கப் பிணையங்கள் ஏலச் செயல்முறை மாற்றப்பட்டதே, இவ்வாண்டின் ஒரு முக்கிய செயற்பாட்டு மைல்கல்லாக அமைந்தது.

எமது தந்திரோபாயம்

2025-ல், PDU தனது சந்தை இருப்பை விரிவுபடுத்துவதையும், முதலீட்டுத் தொகுப்பின் செயல்திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு மையப்படுத்தப்பட்ட தந்திரோபாயத்தை பின்பற்றியது. சாதகமான சந்தை நிலவரங்களைப் பயன்படுத்திக்கொண்டு வருவாயை அதிகரிப்பதற்காக, முதன்மை மற்றும் இரண்டாம் நிலை அரசப் பிணையச் சந்தைகள் இரண்டிலும் முனைப்பாகப் பங்கேற்பது இதில் அடங்கும். அதே சமயம், நீடித்த வளர்ச்சி மற்றும் சந்தை நிலைத்தன்மை ஆகிய வங்கியின் பரந்த நோக்கங்களுக்கு ஆதரவளிக்கும் விதமாக, வட்டி விகிதம் மற்றும் திரவத்தன்மை அபாயங்களைக் குறைப்பதற்காக, முதலீட்டுப் பிரிவு (PDU) இடர் முகாமைத்துவத்தில் ஒரு கட்டுக்கோப்பான அணுகுமுறையைப் பின்பற்றி, பல்வேறு முதிர்வுக் காலங்கள் மற்றும் பத்திரக் கருவிகளில் தனது முதலீடுகளைப் பன்முகப்படுத்தியது.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

2026-ஆம் ஆண்டில், வங்கியின் திரவத்தன்மை மற்றும் பேண்தகு வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், ஒழுங்குபடுத்தப்பட்ட இடர் முகாமைத்துவத்தைப் பேணிக்காத்துக்கொண்டே, இந்த முதன்மை வணிகப் பிரிவு (PDU) தனது சந்தை இருப்பை வலுப்படுத்துவதிலும், முதலீட்டுத் தொகுப்பின் செயல்திறனை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.

முதலீட்டு வங்கிச்சேவை

எமது கவனம்

மக்கள் வங்கி படிப்படியாகத் தனது கவனத்தைக் குறைந்த அபாயம் கொண்ட, உயர்தர வெளியீட்டாளர்கள் மற்றும் அரசாங்க ஆதரவுடன் செயற்படும் நிறுவனங்களின் மீது திருப்பியது. அதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் கட்டணம் மற்றும் தரகு வருமானம் அதிகரிக்கப்பட்டதுடன், நிறைவேற்றப்பட்டுள்ள ஆணைகளின் மதிப்பும் வலுப்படுத்தப்பட்டது. வாடிக்கையாளர்களைப் பெறுவதும் தக்கவைப்பதும் தொடர்ச்சியான முன்னுரிமையாக இருந்து, வங்கியை ஒரு நம்பகமான முதலீட்டு ஆலோசகராக மேலும் நிலைநிறுத்தியது..

எமது தந்திரோபாயம்

நாங்கள் பல்வேறு நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கடன் பத்திரங்கள், பிணைப்பத்திரங்கள் மற்றும் கால நிதித் தீர்வுகளை வழங்கி, கடன் கருவிகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளோம். மூலதனச் சந்தைகளில் எங்களது நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, பல்வேறு மூலதனத் திரட்டல் முயற்சிகளுக்கு நாங்கள் முகாமையாளர்களாக, ஏற்பாட்டாளர்களாக, ஆலோசகர்களாக மற்றும் நிதி ஒதுக்கீட்டு முகவர்களாகப் பணியாற்றி, சந்தையில் எங்களது நிலையை வலுப்படுத்தியதோடு, முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் உறுதிப்படுத்தினோம். இந்தச் செயற்பாடுகளின் மூலம், வங்கியின் நிதி இடைத்தரகுச் சேவையானது தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு ஒரு அர்த்தமுள்ள பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வந்தது..

மூலதனச் சந்தை செயற்படுத்தல்

இந்தப் பிரிவு, பெருநிறுவன கடன்பத்திரங்கள் தொடர்பான கடன் வெளியீடு மற்றும் விநியோகப் பணிகளில் ஈடுபட்டது. அது IPO ஆலோசனை வழங்குதல், பெரிய பரிவர்த்தனைகளுக்கான பங்குகளை நிர்வகித்தல், மற்றும் உள்நாட்டு, சர்வதேச முதலீட்டாளர் தொடர்புகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டது.

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல் ஆலோசனை

வங்கி, இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் ஆலோசனை நிறுவனமாகச் செயல்பட்டது இதில் உரிய ஆய்வு ஒருங்கிணைப்பு மற்றும் ஒப்பந்த வடிவமைப்பு ஆகியவையும் அடங்கும்.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

முதலீட்டு வங்கிப் பிரிவானது, மூலதனச் சந்தைகள் மற்றும் பங்கு வர்த்தகம் ஆகியவற்றில் தனது ஆலோசனைத் திறன்களை மேலும் வலுப்படுத்துவதோடு, தனது செயற்பாடுகளைத் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் தந்திரோபாய ரீதியாக சீரமைக்கும். உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும், சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கு வலுவூட்டுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இதன் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட மற்றும் கூட்டுக் கடன் வழங்கல்

நிதி திரட்டலைப் பன்முகப்படுத்தவும் இடர் பரிமாற்றத்திற்காகவும், அந்தப் பிரிவு பத்திரமயமாக்கல்களையும் சொத்து ஆதரவு வசதிகளையும் செயல்படுத்தியது.

முதலீட்டு வங்கிப் பிரிவு, 2025-ஆம் ஆண்டில் பெறுமதிமிக்க பெருநிறுவன நிதி ஆலோசகர் உரிமத்தைப் பெற்றதன் மூலம், முதலீட்டு வங்கித் துறையில் தனது தலைமைத்துவத்தை மேலும் வலுப்படுத்தியதுடன், சிக்கலான மூலதனச் சந்தைப் பரிவர்த்தனைகளில் ஒரு நம்பகமான பங்காளியாகத் தனது வளர்ந்து வரும் அந்தஸ்தையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்த பங்களிப்பின் அடிப்படையில், குளோபல் பேங்கிங் அண்ட் ஃபைனான்ஸ் ரிவியூ விருதுகள் 2025-இல், “இலங்கையின் சிறந்த முதலீட்டு வங்கி” மற்றும் “அடுத்த 100 உலகளாவிய விருதுகள் – முதலீட்டு வங்கியியல்” ஆகிய இரண்டு மதிப்புமிக்க விருதுகளைப் பெற்று இந்த பிரிவு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டது. இந்தச் சாதனைகள், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பேணிக்காக்கும் அதே வேளையில், மேன்மை மற்றும் நிதித் தலைமைத்துவத்திற்கான மக்கள் வங்கியின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன.

ஆழ்ந்த தொழில்நுட்ப நிபுணத்துவம், மூலோபாய தொலைநோக்குப் பார்வை, மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் திறன்களால் வலுவூட்டப்பட்ட ஒரு வலுவான ஆலோசனைத் தளம் ஆகியவற்றின் ஆதரவுடன், இந்த வங்கியானது தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்து செயல்படுவதோடு, இலங்கையின் முதலீட்டு வங்கித் துறையில் தனது போட்டித்திறனைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது.

இந்தப் பிரிவு, People's web செயலி மூலம் பங்கு முதலீட்டுத் திறன்களைச் செயல்படுத்தி, முதலீட்டாளர்களுக்கான அணுகலையும் வசதியையும் மேம்படுத்துவதோடு, டிஜிட்டல் புத்தாக்கத்திற்கான வங்கியின் அர்ப்பணிப்புடன் இணைந்து, வங்கியின் விரிவான டிஜிட்டல்மயமாக்கல் செயல்திட்டத்திற்கும் ஆதரவளித்தது.

நிதி நிறுவனங்கள்

எமது கவனம்

நிதி நிறுவனங்கள் திணைக்களமானது, வங்கியின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதிலும், தடையற்ற எல்லை தாண்டிய வங்கிச் செயல்பாடுகளை எளிதாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. நிதி நிறுவனங்கள் திணைக்களம், உலகெங்கிலும் உள்ள தொடர்பு வங்கிகளுடன் கடன் மற்றும் வர்த்தக வசதிகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இந்த ஏற்பாடுகள், அந்நியச் செலாவணி, பணச் சந்தைகள் மற்றும் பிற நிதிப் பரிவர்த்தனைகளில் சர்வதேசத் தரப்பினருடன் ஈடுபடுவதை சாத்தியமாக்குவதன் மூலம் வங்கியின் திறைசேரி செயல்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றன. தற்போது, மக்கள் வங்கி உலகெங்கிலும் 573 தொடர்பு வங்கி உறவுகளைப் பராமரித்து, விரிவான உலகளாவிய அணுகலை வழங்குகிறது. மேலும், வங்கி தற்போது 20 நாடுகளில் 16 முக்கிய நாணயங்களில் 37 நோஸ்ட்ரோ (Nostro) கணக்குகளைப் பராமரித்து வருகிறது, இது சர்வதேச பரிவர்த்தனைகளை விரைவாகவும் திறமையாகவும் செயல்படுத்த உதவுகிறது.

எமது தந்திரோபாயம்

அதிகரித்து வரும் ஒழுங்குமுறை ஆய்வுகள் மற்றும் இணக்கத் தேவைகளுக்கு மத்தியில், உலகளாவிய தொடர்பாளர் வங்கிச் சேவைத் திணைக்களம் தொடர்ந்து பரிணமித்து வருகிறது. குறிப்பாக, சர்வதேசத் தடைகள் கடுமையாக்கப்படுவதும், உலகளாவிய நிதி நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உரிய விடாமுயற்சி எதிர்பார்ப்புகள் அதிகரிப்பதும், எல்லை தாண்டிய சந்தைகளில் செயல்படும் வங்கிகளுக்கு வளர்ந்து வரும் சவால்களை முன்வைக்கின்றன. செயலூக்கமான தொடர்பு முகாமைத்துவம், தந்திரோபாயம் சார்ந்த கடன் வசதி ஏற்பாடுகள் மற்றும் வலுவான தொடர்பு வங்கி வலையமைப்புகள் ஆகியவற்றின் மூலம், நிதி நிறுவனங்கள் திணைக்களமானது வங்கியின் சர்வதேச வர்த்தகம், திறைசேரிச் செயல்பாடுகள் மற்றும் உலகளாவிய நிதி இணைப்பு ஆகியவற்றை ஆதரிக்கும் திறனுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

2026-ஆம் ஆண்டில், வங்கியின் வளர்ந்து வரும் சர்வதேச வணிகம் மற்றும் எல்லை தாண்டிய பரிவர்த்தனைத் திறன்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், நிதி நிறுவனங்கள் திணைக்களமானது மக்கள் வங்கியின் உலகளாவிய தொடர்பாளர் வங்கி வலையமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தும். முக்கிய நாணயங்கள் முழுவதும் திறமையான தீர்வுத்திறன்களை உறுதி செய்வதற்கும், செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மையைப் பேணுவதற்கும், இந்தப் பிரிவு வங்கியின் நோஸ்ட்ரோ கணக்கு வலையமைப்பைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து மேம்படுத்தும்..

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள் பிரிவானது, உள்வரும் பணப் பரிமாற்ற ஓட்டங்களை சீராக வழிநடத்தி எளிதாக்குவதில் வங்கியின் மையமாகச் செயல்படுவதுடன், வெளிநாட்டில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் குறித்த வழிகாட்டுதலையும் நிபுணத்துவத்தையும் வழங்குகிறது.

எமது கவனம்

உலகளவில் வொஸ்ட்ரோ (Vostro) தொடர்பாளர் பணப் பரிமாற்ற உறவுகளை விரிவுபடுத்துவதன் மூலம், அந்நியச் செலாவணி வைப்புகளை அதிகரிப்பதிலும், தொழிலாளர்களின் சுமூகமான பணப் பரிமாற்றங்களை எளிதாக்குவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். இதன்மூலம், வாடிக்கையாளர்கள் இலங்கையில் உள்ள தங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆதரவளிக்க, நம்பகமான சேமிப்பு விருப்பங்களையும் தடையற்ற நிதிப் பரிமாற்றங்களையும் உறுதிசெய்து, துரிதமான, பாதுகாப்பான மற்றும் மிகவும் வசதியான சர்வதேசப் பரிவர்த்தனைகளை அனுபவிக்க உதவுகிறோம்.

எமது தந்திரோபாயம்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகளுக்கான உத்திகளாக, அந்நியச் செலாவணி வைப்புகளை அதிகரித்தல், தொழிலாளர் பணப் பரிமாற்றங்களின் தடையற்ற ஓட்டத்தை எளிதாக்குதல், மற்றும் உலகம் முழுவதும் புதிய வோஸ்ட்ரோ தொடர்பாளர் பணப் பரிமாற்ற உறவுகளை நிறுவுதல் ஆகியவை நிர்ணயிக்கப்பட்டன.

வெளிநாட்டு நாணய வைப்பு திரட்டல்

புதிய Vostro பணம் அனுப்பும் தொடர்பாளர் உறவுகள்

உள்வரும் தொழிலாளர்களின் பணப் பரிமாற்றங்கள்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்



வெளிநாட்டு நாணய வைப்புத் திரட்டல்

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், வாடிக்கையாளர்களை ஈர்ப்பதையும் தக்கவைப்பதையும் நோக்கமாகக் கொண்ட இலக்கு உத்திகள் மூலம், வணிக மற்றும் தனிநபர் வங்கிப் பிரிவுகள் இரண்டிலும் அந்நியச் செலாவணி வைப்புகளைத் திரட்டுவதை முனைப்பாக முன்னெடுத்துச் செல்கிறது. வங்கி, வெளிநாட்டு நாணய வைப்புகளுக்குப் போட்டித்தன்மை வாய்ந்த வட்டி விகிதங்களை வழங்குவதோடு, விபத்துகள், பயணப் பொருட்கள் மற்றும் மருத்துவச் செலவுகளை உள்ளடக்கிய விரிவான காப்புறுதித் திட்டங்கள் போன்ற கூடுதல் மதிப்புப் பலன்களையும் வழங்குகிறது. மேலும், தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருப்பவர்களுக்கு சலுகை விகிதங்களில் அடகு வைக்கும் வசதிகள், பல்வேறு கடன் வசதிகள், இணையவழி நிதிப் பரிமாற்ற வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கான மதிப்பு மற்றும் நிதி வசதிகள் மேலும் மேம்படுத்தப்படுகின்றன.

PFCA	**எதர இசுர தனிப்பட்ட கணக்கு வெளிநாட்டு நாணய வருமானத்தைப்** பாதுகாப்பாக நிர்வகிப்பதற்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு. எளிதான நிதி அணுகலுடன், தடையற்ற பணப் பரிமாற்றங்களைச் சாத்தியமாக்குகிறது. **எதர இசுர பிரீமியர் கணக்கு** உயர் பெறுமதி வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேக கணக்கு. சலுகை விகிதங்களைத் தனது முக்கிய பிரீமியம் நன்மையாக வழங்குகிறது.
PFCA Minors	**சிறார்கள் எதர உதான சிறார்களின் வெளிநாட்டு நாணயக் கணக்கு** சிறுவர்களின் எதிர்காலத்திற்காக வெளிநாட்டு நாணயத்தைப் பாதுகாப்பாகச் சேமிக்க பெற்றோரை வலுவூட்டல்.
BFCA	**வணிக வெளிநாட்டு நாணயக் கணக்கு** சர்வதேச பரிவர்த்தனைகளில் ஈடுபடும் வணிகங்களுக்காக வடிவமைக்கப்பட்டது. திறமையான நிதி முகாமைத்துவம் மற்றும் பணப்புழக்கத்திற்கு ஆதரவளிக்கிறது..
IIA	**உள்ளக முதலீட்டுக் கணக்கு** வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஒரு பாதுகாப்பான வழித்தடம். வெளிப்படையான மற்றும் இணக்கமான நிதிப் பரிமாற்றங்களை உறுதி செய்கிறது.
DFCA	**இராஜதந்திர வெளிநாட்டு நாணயம்/ராஜதந்திர ரூபாய் கணக்கு** தூதரகப் பணிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது.
VPFCA	**விசா திட்ட விசேட கணக்கு** உள்ளூரில் வதிவிடம் கோரும் வெளிநாட்டினருக்காக. விசா தொடர்பான நிதித் தேவைகளை பாதுகாப்பான மற்றும் இணக்கமான முறையில் ஆதரிக்கிறது.
FXFP	**FX/பியூச்சர்பிளஸ்** பணம் அனுப்பும் வருமானத்திற்கான அதிக வருமானம் தரும் நிலையான வைப்புத்தொகை, எளிதாக வலுவான வருமானத்தை வழங்குகிறது.

புலம்பெயர் கணக்குகள்

CTRA	CTRA மூலதனப் பரிவர்த்தனை ரூபாய் கணக்கு
ERIA	ERIA புலம்பெயர்ந்தோரின் அனுப்பக்கூடிய வருமானக் கணக்கு
NRRA	NRRA வதியாதோர் ரூபாய் கணக்கு
DRA	இராஜதந்திர ரூபா கணக்கு

புதிய வோஸ்ட்ரோ பணம் அனுப்பும் தொடர்பாளர் உறவுகள்

மீளாய்வு ஆண்டில், ஜோர்டான், மலேசியா மற்றும் ருமேனியாவில் புதிய வோஸ்ட்ரோ தொடர்பாளர் உறவுகளை நாங்கள் வெற்றிகரமாக நிறுவியதோடு, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சிங்கப்பூரில் எங்கள் இருப்பை மேலும் வலுப்படுத்தினோம். இந்த மூலோபாய விரிவாக்கங்கள் நமது உலகளாவிய வலையமைப்பை மேம்படுத்தி, எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளைத் திறமையாக ஆதரிக்கும் நமது திறனை வலுப்படுத்தியுள்ளன.

வெஸ்டர்ன் யூனியன் மற்றும் ரியா மணி டிரான்ஸ்ஃபர் போன்ற முன்னணி உலகளாவிய பணப் பரிமாற்ற வலையமைப்புகளுடனான எங்கள் மூலோபாயக் கூட்டணிகள், எங்கள் சர்வதேசத் தொடர்பை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளன. அவர்களின் விரிவான உலகளாவிய தளங்களைப் பயன்படுத்தி, நாங்கள் எங்கள் எல்லை தாண்டிய திறன்களைப் பெருக்கி, எங்கள் வாடிக்கையாளர்களுக்கான சேவை அணுகலையும் மேம்படுத்தியுள்ளோம்.

வங்கியின் API அமைப்புகள் வழியாக மேம்பட்ட கூட்டாளர் தொழில்நுட்பங்களுடன் ஒருங்கிணைவதன் மூலம், பல சர்வதேச வழித்தடங்களுக்கான அணுகலை வழங்கி, பணம் அனுப்பும் செயல்முறைகளை நெறிப்படுத்தி, உலகளாவிய கட்டண அமைப்புகளுக்கான அணுகலை விரைவுபடுத்துகிறது. மேலும், எங்களின் பிரத்தியேக டிஜிட்டல் தீர்வுகளான பீப்பிள்ஸ் வெப்ரெமிட் மற்றும் பீப்பிள்ஸ் இன்ஸ்டன்ட்ரெமிட் ஆகியவை உடனடி நிதிப் பரிமாற்றங்களைச் சாத்தியமாக்கி, வேகம், வசதி மற்றும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துகின்றன.

தொழிலாளர் அனுப்பும் பணம் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகள்

"பீப்பிள்ஸ் ரெமிடென்ஸ் வாசி கோடியய்" குலுக்கல், வங்கியின் முதன்மை விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து முன்னின்று வழிநடத்தி, வங்கியின் நற்பெயரையும் வாடிக்கையாளர் ஈடுபாட்டையும் கணிசமாக மேம்படுத்தி, மக்கள் வங்கிக் கணக்குகளுக்குப் பணப் பரிமாற்ற வரவுகளை ஈர்ப்பதில் வலுவான முடிவுகளை அளித்தது.

2025 ஆம் ஆண்டில், புதிய அந்நியச் செலாவணி வைப்புகளை ஈர்ப்பது, தொழிலாளர்களின் உள்வரும் பணப் பரிமாற்றங்களை நேரடியாக மக்கள் வங்கி கணக்குகளுக்கு ஊக்குவிப்பது, மற்றும் தற்போதுள்ள வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, வங்கியானது "தொலோஸ் மஹே வாசி சக்ரயா" திட்டத்தின் மூலம் தொடர்ச்சியான மூலோபாய ஊக்குவிப்புப் பிரச்சாரங்களைத் தொடங்கியது. இதன் மூலம் வங்கியின் அந்நியச் செலாவணி வைப்புத் தளம் மற்றும் உள்வரும் பணப் பரிமாற்றங்களில் அதன் சந்தைப் பங்கு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தது.

பணம் அனுப்பும் ஓட்டத்தை ஆதரித்தல்

தென் கொரியா, மத்திய கிழக்கு மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு எங்கள் பிரதிநிதிகள் மூலம் எங்களின் நிபுணத்துவம் வழங்கப்படுகிறது. வெளிநாட்டவர்களின் கடன் விண்ணப்பங்களைச் செயலாக்குவதற்கும், e-KYC மூலம் கணக்குத் தொடங்குவதற்கும் உதவுவதற்காக, வங்கி தற்போது உலகளவில் மொத்தம் 16 பிரதிநிதிகளை நியமித்துள்ளது. “வெளிநாடு செல்வதற்கு முன்னர், வெளிநாட்டவர்கள் புறப்படுவதற்கு முந்தைய கடன்கள்” மூலம் நிதி உதவியையும், பயிற்சித் திட்டங்களின் போது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரிகளிடமிருந்து வழிகாட்டுதலையும் பெறுகின்றனர்.

வோஸ்ட்ரோ பணம் அனுப்பும் தொடர்பாளர் உறவுகளுக்கான புதிய வழித்தடங்களைத் தேடுதல்

மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் நன்மைகளுடன் கூடிய புதிய FCY தயாரிப்புகள்

குறுக்குச் சந்தைப்படுத்தல்

மாதம்	விசேட விளம்பரப் பிரச்சாரங்கள்
ஜனவரி	பருவகால உக்குவிப்புகள் “ரன் காசி வாசி”
பெப்ரவரி	சுதந்திர தின வாரம் “நிதஹஸ் பிரணாம”
மார்ச்	சர்வதேச மகளிர் தினம் “வனிதா பிரணாம”
ஏப்ரல்	சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு “களின் அவுருது வாசி”
மே	தொழிலாளர் தினம் “சிரம ஹரசர”
யூலை	மக்கள் வங்கியின் 65வது ஆண்டு விழா “சன்வத்ஸர பிரணாம”
ஒக்டோபர்	சிறுவர் தினம் “தூ தரு பிரணாம”

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

மேற்கு ஐரோப்பா மற்றும் அதிக வாய்ப்புள்ள பிற இடங்களுக்கு முன்னுரிமை அளித்து, பணம் அனுப்பும் சேவைகளுக்கான புதிய வழித்தடங்களை நாங்கள் தீவிரமாக முன்னெடுக்கவுள்ளோம். இந்த விரிவாக்கம், தொழிலாளர் சந்தைகளில் உருவாகி வரும் போக்குகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, வாடிக்கையாளர்களுக்குப் பல்வேறு வங்கித் தீர்வுகளையும் வழங்கும்

தேசியப் பொருளாதாரத்திற்கு இலங்கை வெளிநாட்டவர்கள் ஆற்றிய விலைமதிப்பற்ற பங்களிப்பைப் பாராட்டும் விதமாக, வங்கியானது “பீப்பல் ரெமிட்டன்ஸ் வாசி கோடியய்” மற்றும் “தொலோஸ் மஹே வாசி சக்ரய” ஆகிய விசேட ஊக்குவிப்புப் பிரச்சாரங்களை முறையே ஐந்தாவது மற்றும் இரண்டாவது தொடர்ச்சியான ஆண்டுகளாக வெற்றிகரமாகத் தொடர்கிறது.

வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் வகையில், மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் மேலதிக பெறுமதி சேர் நன்மைகளுடன் வடிவமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணித் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த வங்கி திட்டமிட்டுள்ளது. இந்தச் சலுகைகளுக்குத் துணையாக, வங்கியின் வெளிநாட்டு நாணயச் சேவைகளுக்கான அணுகலை அதிகரிக்கவும், அவற்றின் பயன்பாட்டை மேலும் ஊக்குவிக்கவும் இலக்கு வைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். மேலும், வழக்கமாகப் பணம் அனுப்பும் வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட விசுவாச மற்றும் வெகுமதித் திட்டங்கள், மேலதிக பலன்களையும் அங்கீகாரத்தையும் வழங்குவதோடு, அந்நியச் செலாவணி வைப்புத்தொகைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளித்து, இப்பிரிவில் வங்கியின் சந்தை இருப்பையும் வலுப்படுத்தும்.

சர்வதேச வங்கிச்சேவை

உலகளாவிய வர்த்தகத்திற்கு ஆதரவளிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதமாக, சர்வதேச வங்கிப் பிரிவானது, வாடிக்கையாளர்கள் பெருகிவரும் சிக்கலான உலகளாவிய சந்தைகளில் எளிதாகச் செயல்பட உதவும் சிறப்பு ஆலோசனை சேவைகள் மற்றும் விரிவான வர்த்தக நிதித் தீர்வுகளை வழங்குவதன் மூலம், தடையற்ற எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை எளிதாக்குவதில் தொடர்ந்து உறுதியாக உள்ளது.

எமது கவனம்

2025-ஆம் ஆண்டில், பரந்த அணுகலையும் ஆழமாக வேரூன்றிய நெறிமுறை சார்ந்த வங்கிப் பண்பாட்டையும் கொண்ட வங்கித் துறையின் ஒரு தலைவராக, நாங்கள் உள்ளக கட்டுப்பாடுகளையும் நிபுணத்துவத்தையும் வலுப்படுத்திக்கொண்டே, நிலையான எல்லை தாண்டிய வர்த்தகத்தை செயல்படுத்துதல், சிறப்பு வர்த்தக-நிதித் தீர்வுகளை வழங்குதல் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தினோம்.

எமது தந்திரோபாயம்

விரிவான வர்த்தக நிதித் தீர்வுகளை வழங்கி, வாடிக்கையாளர் திறன்களை வளர்க்கும் அதே வேளையில், சர்வதேச வர்த்தகம் மற்றும் வங்கிச் செயல்பாடுகள் குறித்த சிறப்புப் பயிற்சித் திட்டங்களை வழங்குவதன் மூலம், தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டின் வாயிலாக எங்கள் உள்ளக நிபுணத்துவத்தை நாங்கள் மேம்படுத்தினோம். இந்தச் சந்தைப் பிரிவில் இன்றியமையாததாக விளங்கும், சர்வதேச வர்த்தகம் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் தொடர்பான மாறிவரும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புக்கு வாடிக்கையாளர்களும் ஊழியர்களும் நன்கு பழக்கப்பட்டிருப்பதை நாங்கள் உறுதி செய்தோம்.

வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் நிறுவனத் திறன் ஆகிய இரண்டின் மீதும் கவனம் செலுத்துவது, தடையற்ற, பாதுகாப்பான மற்றும் திறமையான எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை ஆதரிக்க வங்கிக்கு உதவுகிறது, அதே நேரத்தில் சர்வதேச வர்த்தகத்தில் நம்பகமான நிதிப் பங்காளராக அதன் நிலையை வலுப்படுத்துகிறது.

தந்திரோபாய முன்னெடுப்புகள்

ஏற்றுமதி அளவுகளை கணிசமாக அதிகரிப்பதையும், வங்கியின் இறக்குமதி நிதியுதவி வசதிகளை அதிக அளவில் பயன்படுத்துவதையும் மையமாகக் கொண்டு எங்கள் தந்திரோபாய முன்னெடுப்புகள் அமைந்திருந்தன. இந்த நோக்கங்களை அடைவதற்காக, நாங்கள் வர்த்தக-நிதி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதிலும், ஏற்றுமதி செயல்திறனை வலுப்படுத்துவதிலும், சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடக்கூடிய சாத்தியமுள்ள துறைகளில் கால் பதிப்பதிலும் ஈடுபட்டோம்.

வர்த்தக நிதியை வலுப்படுத்துதல்

சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகங்களுக்கு அணுகலை மேம்படுத்தவும் சிறப்பு ஆதரவை வழங்கவும், வங்கி தனது வலையமைப்பு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் உள்ள பிரத்யேக வர்த்தக நிதிப் பிரிவுகளை வலுப்படுத்தியுள்ளது. ஆண்டின் தொடக்கத்தில் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டில் இறக்குமதிக்கான, குறிப்பாக வாகனங்களுக்கான தேவை கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது தொடர்பாக, விரைவான சேவையை வழங்குவதற்காக செயல்முறைகளை நெறிப்படுத்தி, பதிலளிக்கும் திறனை மேம்படுத்தி, குறிப்பாக வாகன இறக்குமதி தொடர்பான வர்த்தகப் பரிவர்த்தனைகளில் நிபுணத்துவ வழிகாட்டுதலை அளிக்க கிளை வலையமைப்பில் உள்ள ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

சிறப்பு நிபுணத்துவத்தை வாடிக்கையாளர்களுக்கு அருகில் கொண்டு வருவதன் மூலம், வங்கியானது சேவைத் திறனை மேம்படுத்துவதோடு, முக்கிய வர்த்தகப் பிராந்தியங்களில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு ஆதரவளிக்கும் தனது திறனையும் வலுப்படுத்துகிறது.

பிராந்திய ஏற்றுமதி மையங்களை வலுப்படுத்துதல்

தேசிய ஏற்றுமதி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதில் பிராந்திய மையங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தேசிய இலக்குடன் இயைந்த ஒரு மிக அவசியமான நடவடிக்கையாக, ஏற்றுமதி தொடர்பான செயல்பாடுகளைக் கையாளும் ஊழியர்களிடையே திறன் மேம்பாட்டிற்கு வங்கி முன்னுரிமை அளித்தது. கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டு முயற்சிகள் மூலம், ஊழியர்களுக்கு ஏற்றுமதி நிதி, ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் சர்வதேச வர்த்தக நடைமுறைகள் குறித்த மேம்பட்ட அறிவு வழங்கப்பட்டது..

இந்த முன்னெடுப்புகள், வணிகங்களுக்குத் திறமையான ஏற்றுமதி நிதித் தீர்வுகளை எளிதாக்குவதோடு, தகவல் அடிப்படையிலான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான வங்கியின் திறனையும் வலுப்படுத்தியுள்ளன.

வர்த்தக நிதி வணிகத்தின் விரிவாக்கம்

வங்கி, வர்த்தக நிதி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதையும் புதிய வணிக வாய்ப்புகளைக் கண்டறிவதையும் நோக்கமாகக் கொண்ட, இலக்கு சார்ந்த சந்தைப்படுத்தல் முன்னெடுப்புகளில் கவனம் செலுத்தியதோடு, மேம்படுத்தப்பட்ட ஊழியர் ஊக்கத்தொகை சட்டகத்தினையும் தொடர்ந்து முன்னெடுத்துவந்தது.

செயலூக்கமான வாடிக்கையாளர் ஈடுபாடு, மூலோபாய கூட்டாண்மைகள் மற்றும் பிரத்தியேக நிதித் தீர்வுகள் ஆகியவற்றின் மூலம், இந்தப் பிரிவு சர்வதேச வணிகப் பரிவர்த்தனைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளித்த அதே வேளையில், வர்த்தக நிதிச் சந்தையில் தனது இருப்பைத் தொடர்ந்து வலுப்படுத்தியது.

முக்கிய சாதனைகள்

2025 ஆம் ஆண்டில், சர்வதேச வங்கிச்சேவை பிரிவு, சிறந்த சேவை, செயல்பாட்டுத் திறன் மற்றும் நிறுவன மேம்பாடு ஆகியவற்றில் தனது அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் பல குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியது..

சிறந்த சேவை மற்றும் அதிகரித்த வணிக அளவுகள்

சரியான நேரத்தில், திறமையான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வங்கித் தீர்வுகளை வழங்கும் நோக்கில், இந்தப் பிரிவு செயல்முறை மேம்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் மைய முன்னெடுப்புகள் மூலம் வாடிக்கையாளர் சேவைத் தரங்களைத் தொடர்ந்து மேம்படுத்தியது. நிர்ணயிக்கப்பட்ட உயர்ந்த சேவைத் தரங்களும், விநியோக மையங்களில் வழங்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட சேவைகளும், குறிப்பாக ஒரு நாளுக்குள் கடன் கடிதம் (டூஊ) வழங்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டதும், அந்த ஆண்டில் வாகன இறக்குமதிகள் மற்றும் பிற இறக்குமதிகளில் வங்கி ஒரு குறிப்பிடத்தக்க சந்தைப் பங்கைப் பெற வழிவகுத்தது.

உள்ளக திறன் விருத்தி

கிளை அளவிலான வர்த்தக நிபுணத்துவத்தை வலுப்படுத்தும் தனது உறுதிப்பாட்டிற்கு இணங்க, இந்தப் பிரிவு வங்கியின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கிளை வலையமைப்பில் பணியாற்றும் ஏராளமான ஊழியர்களுக்கு விரிவான வதிவிடப் பயிற்சித் திட்டங்களை நடத்தியது. இதன் மூலம், வர்த்தக நிதித் தயாரிப்புகள், சர்வதேச வங்கி நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த அவர்களின் அறிவை மேம்படுத்தியது.

ISO 9001:2015 மறுசான்றிதழ்

சர்வதேச தர நிர்ணயங்கள் மற்றும் செயல்பாட்டுச் சிறப்பிற்குத் தொடர்ந்து இணங்குவதை நிரூபிக்கும் வகையில், சர்வதேச வங்கிப் பிரிவு தனது வர்த்தகச் சேவைகளுக்கான வருடாந்த சரிபார்ப்பின் மூலம் ஐளுழு 9001:2015 மறுசான்றிதழை வெற்றிகரமாகப் பெற்றது. உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்தச் சான்றளிப்பு, வலுவான தர முகாமைத்துவ அமைப்புகள், செயல்பாட்டுச் சிறப்பு மற்றும் உயர்ந்த வாடிக்கையாளர் சேவைகளைப் பேணுவதில் இப்பிரிவின் அர்ப்பணிப்பை மீள் உறுதிசெய்வதோடு, சேவை வழங்கல் மற்றும் செயல்முறை முகாமைத்துவத்தில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான வங்கியின் நோக்கங்களுக்கும் உறுதியளிக்கிறது.

சவால்களின் ஊடான மீளாற்றல்

தீவிரமடைந்து வரும் போட்டித்தன்மை, கடுமையாக்கப்பட்ட ஒழுங்குமுறைத் தேவைகள், மற்றும் பேரியல் பொருளாதாரத்தைப் பாதித்த பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும், சர்வதேச வங்கிப் பிரிவு செயல்பாட்டு மீள்திறனிலும் நம்பகமான செயல்திறனிலும் ஒரு வலுவான நிலையைத் தக்க வைத்துக் கொண்டது. இந்தப் பிரிவு, வாடிக்கையாளர்களுக்கு நிதி ரீதியாகவும் அறிவுப் பகிர்வு மூலமாகவும் தொடர்ந்து வலுவூட்டியதோடு, தேசியப் பொருளாதாரத்திற்கும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியது.

அந்நியச் செலாவணி ஏற்ற இறக்கம், மாறிவரும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், உலகளாவிய வர்த்தகப் பதற்றங்கள், புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள், தொழிலாளர் பற்றாக்குறை, மற்றும் முக்கிய துறைமுகங்கள் மற்றும் தளவாட மையங்களில் ஏற்படும் செயல்பாட்டு இடையூறுகள் உள்ளிட்ட பல்வேறு வெளிப்புற அழுத்தங்களால் சர்வதேச வங்கிச் சூழலானது தொடர்ந்து வடிவமைக்கப்பட்டு வருகிறது. இந்தக் காரணிகள், இத்துறை முழுவதும் வர்த்தகப் பரிமாற்றங்களையும் செயல்பாட்டுத் திறனையும் தொடர்ந்து பாதிக்கின்றன.

பெரும் இடப்பெயர்வினால் வளங்களில் கணிசமான குறைவு ஏற்பட்டபோதிலும், சர்வதேச வங்கிப் பிரிவு, உயர் சேவைத் தரங்களைப் பேணி, நெருக்கடிக்கு முந்தைய நிலைகளுக்கு இணையான பரிவர்த்தனைகளை வெற்றிகரமாக நிர்வகித்தது. எமது ஊழியர்களின் அயராத முயற்சியால், ஒரு கடினமான பணி வாடிக்கையாளர் திருப்தி அளிக்கும் முயற்சியாக மாற்றப்பட்டது

செயல்முறைகளை மறுவடிவமைப்பதன் மூலம், செயல்பாடுகளை நெறிப்படுத்தவும், உயர் தரமான விநியோகத்தைப் பேணவும், இந்தப் பிரிவு மற்ற அலகுகளுடன் இணைந்து காலவரையறைகளை நிர்ணயித்தது. விலகல்களின் தொடர்ச்சியான பகுப்பாய்வு மற்றும் மூல காரணப் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம், சர்வதேச வங்கிப் பிரிவு, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பரிவர்த்தனைகளின் தரம் மற்றும் காலக்கெடுவை மேம்படுத்துவதற்காகத் தனது செயல்முறைகளைச் செம்மைப்படுத்தியது.

2026 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்

உலகளாவிய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகங்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வர்த்தக நிதித் திறன்களை வலுப்படுத்துதல், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த, தனிப்பயனாக்கப்பட்ட நிதித் தீர்வுகளை வழங்குதல் ஆகியவற்றில் வங்கி தொடர்ந்து கவனம் செலுத்தும

இந்தப் பிரிவு, டிஜிட்டல் பரிமாற்றத்தின் மூலம் செயல்முறை மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்வதோடு, வங்கியின் சேவை வழங்கலை கணிசமாக வலுப்படுத்துவதற்காக, வாடிக்கையாளர்களுடனான செயலூக்கமான ஈடுபாட்டையும் தொடரும். அதே சமயம், நாங்கள் அளவிடக்கூடிய செயல்திறன் மேம்பாடுகளை முன்னெடுத்து, செயல்பாடுகள், நிர்வாகம் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றில் சர்வதேச சிறந்த நடைமுறைகளை விடாமுயற்சியுடன் நிலைநிறுத்துவோம்.

மேம்பட்டு வரும் பேரியல் பொருளாதார நிலைமைகள், கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் அதிகரித்து வரும் முதலீட்டாளர் நம்பிக்கை ஆகியவற்றின் ஆதரவுடன், மக்கள் வங்கியானது இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதிலும், சர்வதேச வர்த்தகத்தில் நிலையான வளர்ச்சியை எளிதாக்குவதிலும் ஒரு அர்த்தமுள்ள பங்கை வகிக்கத் தயாராக உள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கிச்சேவை

வங்கியின் மாற்றப் பயணத்திற்குத் தொழில்நுட்பமே அடித்தளமாக விளங்குகிறது. இது, வணிக மற்றும் செயல்பாட்டுப் பிரிவுகள் இரண்டிலும் எங்கள் பங்குதாரர்களுக்கு நீடித்த முக்கியத்துவத்தை வழங்க உதவுகிறது. தடையற்ற, பாதுகாப்பான மற்றும் எளிதில் அணுகக்கூடிய வங்கிச் சேவைகளை வழங்குவதற்கும், வாடிக்கையாளர் அனுபவத்தை மறுவரையறை செய்வதற்கும், ஒரு புதிய அளவுகோலாகத் திகழ்வதற்கும், நாங்கள் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தளங்களில் முதலீடு செய்துள்ளோம்.

எமது கவனம்

டிஜிட்டல் அடித்தளத்தை வலுப்படுத்துதல், இணக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் செயல்பாட்டுத் திறனை அதிகரித்தல் ஆகியவற்றில் நாங்கள் கவனம் செலுத்தினோம். அனைத்து தொழில்நுட்ப முன்னெடுப்புகளிலும் ஒரு வலுவான ஆளுகைப் பண்பாட்டை வளர்ப்பதற்காக, ஒரு பிரத்தீயேக திட்ட முகாமைத்துவ அலுவலகம் அமைக்கப்பட்டது. ஒழுங்குபடுத்தப்பட்ட செயலாக்கம், வலுவான இடர் முகாமைத்துவம் மற்றும் மூலோபாய நோக்கங்களுடன் சீரமைத்தல் ஆகியவற்றின் ஒரு முக்கிய உந்து சக்தியாக உருவெடுத்துள்ள இந்த வங்கி, ஒரு கடுமையான பணமோசடி தடுப்பு (AML) அமைப்பு உட்பட, பல இணக்க மற்றும் இடர் முகாமைத்துவத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கவும், ஒழுங்குமுறை காலக்கெடுவிற்கு முன்னதாகவும், SWIFT MX செய்தித் தரநிலைகளை வங்கி முன்கூட்டியே பின்பற்றியது, எங்களிடம் இயல்பாகவே உள்ள தொழில்நுட்பச் சிறப்பால் முன்னெடுக்கப்பட்டதாகும்.

எமது தந்திரோபாயம்

தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சிறப்பிற்கான எங்கள் நோக்கங்களை அடைவதற்காக, நாங்கள் மூன்று முக்கிய முன்னெடுப்புகளைச் செயல்படுத்தினோம்.

முக்கிய பணப்பரிவர்த்தனை உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல்

டிஜிட்டல் உருமாற்றம் மற்றும் பணிப்பாய்வு தன்னியக்கமாக்கலை விரைவுபடுத்துதல்

வலுவான மனித மூலதன முகாமைத்துவத்தை நிறுவுதல்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவை

உட்கட்டமைப்பு நவீனமயமாக்கல்

உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல் ஒரு முக்கிய மூலோபாயக் குறிக்கோளாகத் தொடர்ந்து இருந்து வருவதுடன், விரிவாக்கத்திறனையும், பாதுகாப்பையும் தொழிற்பாட்டு மீள்திறனையும் வலுப்படுத்த பல மைல்கற்கள் எட்டப்பட்டுள்ளன. இந்த வங்கி, நிலைபேறான வளர்ச்சி, விரைவான சேவை வழங்கல், மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் கிளவுட் கம்பியூட்டிங், செயற்கை நுண்ணறிவால் உந்தப்பட்ட பகுப்பாய்வுகள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பற்கு உகந்த நிலையில் உள்ளது.

SD-WAN	மேம்பட்ட பயனர் அனுபவத்திற்காக கிளவுட் சேவைகளுக்கான தடையற்ற அணுகல்..
கண்டெய்னர்மயமான உட்கட்டமைப்பு மெய்நிகர்மயத்தின் பரவலை விரிவுபடுத்துகிறது:	புத்தாக்கம் மற்றும் சந்தைப்படுத்தல் நேரத்திற்கு இன்றியமையாத செயல்பாட்டுத் திறனையும், வேகமான செயலாக்கச் சுழற்சிகளையும் வழங்குதல்.
அதிநவீன பாதுகாப்பு செயல்பாட்டு மையம் மற்றும் வலையமைப்பு செயல்பாட்டு மையம்:	நிகழ்நேரக் கண்காணிப்பு, அச்சுறுத்தல் கண்டறிதல் மற்றும் செயலூக்கமான வலையமைப்பு முகாமைத்துவம் ஆகியவற்றின் மூலம் வணிகத் தொடர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதிசெய்தல்.
தரவு மைய உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்:	மேம்பட்ட அச்சுறுத்தல் கண்டறிதல் மற்றும் மோசடி தடுப்பு, வாடிக்கையாளர் தரவு மற்றும் பரிவர்த்தனைகளைப் பாதுகாத்தல், தாக்குதல் பரப்புகளைக் குறைப்பதற்கான பிணையப் பிரிப்பு மற்றும் சீரோ-டிரஸ்ட் கட்டமைப்பு.
Lanka GovPay தளத்துடனான ஒருங்கிணைப்பு:	அரச கொடுப்பனவுகளுக்கு.
QR குறியீடு மூலம் பணம் செலுத்தும் வசதி:	தொடுகையற்ற பணப்பரிவர்த்தனை அனுபவத்திற்காக.
தரவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல்:	மேம்பட்ட குறியாக்கம் மற்றும் பல காரணி அங்கீகாரம்.
முன்கணிப்புப் பகுப்பாய்வு சார்ந்த டேஷ்போர்டுகள்:	வாடிக்கையாளர்கள் தங்கள் நிதி நிலைமை குறித்து ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க உதவும் வகையில், தனிப்பயனாக்கப்பட்ட நுண்ணோக்குகள், நிதி மதிப்பெண்கள் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கைகளை வழங்குகிறது.

இடர் முகாமைத்துவத்திற்கான கருவிகள்

திறமையான இடர் முகாமைத்துவத்தின் ஒரு முக்கிய அங்கமாக வேகமாக மாறிவரும் மேம்பட்ட பகுப்பாய்வுகள், நிகழ்நேர நுண்ணறிவு மற்றும் கிளவுட்-நெரேட்டிவ் கட்டமைப்புகள், மாறிவரும் ஒழுங்குமுறைத் தரநிலைகளுக்கு இணங்குவதற்காக, தரவு சார்ந்த முடிவுகளை எடுக்கவும், புதிதாக உருவாகும் அச்சுறுத்தல்களை வேகமாகவும் துல்லியமாகவும் கண்டறியவும் வங்கிக்கு உதவின. சிக்கலான சூழ்நிலைகளில் துல்லியத்தை அடைவதற்கும், அதன் மூலம் மீளாற்றலை ஏற்படுத்துவதற்கும், இணைய அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கும் நாங்கள் பல கருவிகளைச் செயல்படுத்தினோம். தகவலறிந்த முடிவெடுப்பதற்காக உயர்தரத் தரவுத் தொகுப்புகளை வழங்கும் மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வு மற்றும் வலுவான தரவுக் களஞ்சிய அமைப்புகளைச் செயல்படுத்துவதில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.



டிஜிட்டல் தடத்தை விரிவுபடுத்துதல்

இலங்கை மத்திய வங்கியின் டிஜிட்டல் வங்கி வழிகாட்டுதலுடன் முழுமையாக ஒத்துப்போகும் வகையில், தேசிய டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் பணமில்லா பரிவர்த்தனை முன்னெடுப்புகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு முதன்மை சேவை வழங்கல் வழிமுறையாக, டிஜிட்டல் வங்கி உத்தியை நாங்கள் மறுசீரமைத்தோம். வங்கியின் டிஜிட்டல் தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லவும், அதன் டிஜிட்டல் தடத்தை விரிவுபடுத்தவும், புதுமையான தீர்வுகளை வழங்கவும் டிஜிட்டல்மயமாக்கல் துறை நிறுவப்பட்டது. மொபைல்-சார்ந்த, காகிதமில்லா மற்றும் கிளை உதவியுடனான டிஜிட்டல் மாதிரிகளுக்கு முன்னுரிமை அளித்து, பல்வேறு அளவிலான டிஜிட்டல் அறிவு கொண்ட எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அணுகலை உறுதிசெய்யும் வகையில் எங்கள் சேவைகளை விரிவுபடுத்தினோம்.

டிஜிட்டல்மயமாக்கல் என்பது நிதி உள்ளடக்கத்தின் ஒரு இன்றியமையாத அங்கமாகும். இது அரசாங்கத்தின் முன்னுரிமையாகவும், அதன் காரணமாக வங்கியின் ஒரு மூலோபாய முன்னுரிமையாகவும் விளங்குகிறது. இணைப்புக்கான தடைகளைத் தகர்க்கவும், தீவு முழுவதும் மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் சென்றடையும் வகையில் எங்கள் அணுகலை அதிகரிக்கவும் நாங்கள் ஒரு பன்முனை அணுகுமுறையைக் கையாண்டோம

- டிஜிட்டல் வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்கள் பரந்தளவில் உள்வாங்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு, நாடளாவிய ரீதியிலான கிளை வலையமைப்பின் ஆதரவை வலுப்படுத்துதல்.
- மாணவர்கள் மத்தியில் டிஜிட்டல் வங்கிச் சேவைகள் மற்றும் நிதி அறிவு (Financial literacy) குறித்த விழிப்புணர்வுத் திட்டங்களை ஆரம்பித்தல்.
- சாதாரண கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றும் பொருட்டு, செலவு குறைந்த USSD அடிப்படையிலான வங்கிச் சேவைகளை வழங்குதல்.
- இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு அறிவு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கேற்றல்.

நிலைத்தன்மை, விரிவாக்கத் திறன் மற்றும் 24/7 டிஜிட்டல் வங்கிச் சேவை கிடைக்கும் தன்மை

- அனைத்து டிஜிட்டல் வங்கித் தளங்களுக்கும் உயர்-கிடைப்பனவு உள்கட்டமைப்பைச் செயல்படுத்துதல்.
- 24/7 சேவை கிடைப்பதை உறுதிசெய்ய, அமைப்பு மற்றும் பரிவர்த்தனைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.
- வாடிக்கையாளர் பாதிப்பைக் குறைப்பதற்காக, கட்டுப்படுத்தப்பட்ட மாற்றம் மற்றும் வெளியீட்டு முகாமைத்துவம்.
- டிஜிட்டல் சேனல்களுக்கான அனர்த்த மீட்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

மைல்கற்கள்

- People's Wave (மொபைல் வங்கிச் சேவை) மற்றும் People's Web (இணைய வங்கிச் சேவை) ஆகியவற்றின் விரிவாக்கம்.
- உடனடிப் பணம் செலுத்துதல், QR பரிவர்த்தனைகள் மற்றும் வணிகர் ஏற்பு ஆகியவற்றிற்காக People's Pay-ஐ வலுப்படுத்துதல்.
- டிஜிட்டல் பதிவுசெய்தல், e-KYC மற்றும் ஒன்லைன் சேவைக் கோரிக்கை வசதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- டிஜிட்டல் ஈடுபாடு மற்றும் வாடிக்கையாளர் தொடர்புக்காக People's Wyn ஐ தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.
- தேசிய பணம் செலுத்தும் மற்றும் தீர்வு அமைப்புகளுடன் மேம்பட்ட இயங்குதன்மை.

வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளும் போக்கு

டிஜிட்டல் வங்கிச் சேவையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் செயலில் உள்ள பயனர்களின் எண்ணிக்கை சீரான வளர்ச்சியைப் பதிவுசெய்ததன் விளைவாக, நிதிப் பரிமாற்றங்கள், கட்டணச் செலுத்துதல்கள் மற்றும் QR கட்டணங்கள் ஆகியவற்றில் பரிவர்த்தனைகளும் பரிவர்த்தனை எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. சில்லறை, சம்பளம் பெறும், ஓய்வூதியம் பெறும் மற்றும் சிறு, நடுத்தர தொழில் பயனர்கள் என அனைவரிடமும் இந்த வளர்ச்சி காணப்பட்டது. அதே சமயம், கிளை உதவியுடன் கூடிய புதிய பயனர் சேர்க்கை, கிராமிய மற்றும் பகுதியளவான நகர்ப்புறங்களில் பரவலான ஊடுருவலைச் சாத்தியமாக்கியது. இது, கிளை அடிப்படையிலான பரிவர்த்தனைகளிலிருந்து டிஜிட்டல் வங்கி சுயசேவைக்கு மாறியுள்ளதை பிரதிபலிப்பதோடு, இந்தத் தளத்தின் விரிவடைந்து வரும் பரவலையும் பொருத்தத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது

டிஜிட்டல் முறையில் இயக்கப்பட்ட தயாரிப்புகள், சேவைகள் மற்றும் வசதிகள்

அனைத்து வாடிக்கையாளர் தொடர்பு புள்ளிகளிலும் கிடைக்கக்கூடிய வகையில், டிஜிட்டல் முறையில் அணுகக்கூடிய தயாரிப்புகளின் தொகுப்பை நாங்கள் வழங்கியுள்ளோம்.

- முழுமையான டிஜிட்டல் கணக்குத் தொடக்கம் மற்றும் வாடிக்கையாளர் அறிமுகம்
- உடனடி நிதிப் பரிமாற்றங்கள், கட்டணச் செலுத்துதல் மற்றும் வணிகர் QR குறியீடுகள் மூலமான பணம் செலுத்துதல்
- டிஜிட்டல் சேவைக் கோரிக்கைகள், எச்சரிக்கைகள் மற்றும் இலத்திரனியல் வங்கிக்கூற்றுக்கள்
- காகிதமில்லா வாடிக்கையாளர் தகவல் தொடர்பு மற்றும் குறைக்கப்பட்ட பௌதீக ஆவணங்கள்
- மொபைல் மற்றும் இணைய வங்கித் தளங்கள் மூலம் மேம்படுத்தப்பட்ட சுயசேவை

பணிப்பாய்வு (Workflow) தானியக்கம்

கணக்குத் தொடங்குதல், சேவைக் கோரிக்கைகள் மற்றும் செயல்பாட்டுச் சரிபார்ப்புகளைத் தானியக்கமாக்குவதன் மூலம், நாங்கள் டிஜிட்டல் வங்கிச் செயல்பாடுகளை நெறிப்படுத்தி, கைமுறைச் செயல்முறைகளையும் நேரடி ஆவணங்களின் தேவையையும் கணிசமாகக் குறைத்தோம். தானியக்கங்கள் செயலாக்க நேரத்தை மேம்படுத்தி, சேவை நிலைத்தன்மையை எளிதாக்கின. அமைப்புமுறை சார்ந்த கட்டுப்பாடுகள், ஆளுகைத் தரநிலைகளை வலுப்படுத்தும் தணிக்கைப் பதிவுகளை மேம்படுத்தின.

டிஜிட்டல் மோசடி முகாமைத்துவம்

எங்களின் டிஜிட்டல் வங்கிச் சூழலமைப்பின் பாதுகாப்பு மற்றும் மீள்திறன் மூலம், நிகழ்நேரப் பரிவர்த்தனைக் கண்காணிப்பு, மேம்படுத்தப்பட்ட மோசடி கண்டறிதல் மற்றும் நிகழ்வுகளுக்குப் பதிலளிக்கும் வழிமுறைகள் வலுப்படுத்தப்பட்டன. வழக்கமான அமைப்பு மீளாய்வுகள் மற்றும் விரிவான இணையப் பாதுகாப்பு மதிப்பீடுகள் மூலம் தளத்தின் ஒருமைப்பாடு மேலும் மேம்படுத்தப்பட்டது. இலக்கு வாடிக்கையாளர் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், பாதுகாப்பான டிஜிட்டல் வங்கிப் பயன்பாட்டு முறைகளை ஊக்குவித்தன

தரவு பகுப்பாய்வு மற்றும் ஆளுகை

2025-ல் நாங்கள் நடைமுறைப்படுத்திய பல மேம்பாடுகள், தரவு சார்ந்த முடிவெடுக்கும் எங்கள் திறன்களை வலுப்படுத்தின. வாடிக்கையாளர் நடத்தைப் போக்குகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து பகுப்பாய்வு செய்ததன் மூலம், உருவாகிவரும் மற்றும் மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளுக்கேற்ப தயாரிப்பு மற்றும் சேவை மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் செயல்பாட்டு நுண்ணோக்குகள் உருவாக்கப்பட்டன.

வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்பை எங்களின் சட்டப்பூர்வப் பொறுப்பாகக் கொண்டு, வலுவான தரவு அணுகல் கட்டுப்பாடுகளும் தனியுரிமைப் பாதுகாப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவை வாடிக்கையாளர் தகவல்கள் நெறிமுறையாகவும் பொறுப்புடனும் கையாளப்படுவதை உறுதி செய்கின்றன

திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

வாடிக்கையாளர் டிஜிட்டல் சேவைகளை மேம்படுத்துவதோடு, எங்கள் மனிதவளத்திற்கு விரிவான பயிற்சி அளிப்பதன் மூலம் உள்ளக திறன்களைத் தொடர்ந்து வலுப்படுத்தினோம். இதன்மூலம், அவர்கள் திறமையான டிஜிட்டல் மத்தியஸ்தர்களாகச் செயல்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு வழிகாட்டி, வங்கியின் “டிஜிட்டலுக்கு முன்னுரிமை” என்ற கலாச்சாரத்தை வலுப்படுத்த அதிகாரம் பெற்றோம்.

சவால்கள்

- இணையவழி பாதுகாப்பு (Cyber security) அச்சுறுத்தல்
- ரான்சம்வேர்
- வளப் பற்றாக்குறை
- தொழில்நுட்ப காலாவதி
- விரிவாக்கம் தாக்குதல் பரப்பை அதிகரிக்கிறது

டிஜிட்டல்மயமாக்கல் என்பது தவிர்க்க முடியாதது, மேலும் தொழில்நுட்பங்கள் மாறும்போது அதுவும் தொடர்ந்து வளர்ச்சியடையும். எனவே, தற்போதைய மற்றும் எதிர்கால வங்கிச் சூழல்களில் உள்ளார்ந்த அபாயங்களும் சவால்களும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இணையவழி பாதுகாப்பு அச்சுறுத்தல்களை, குறிப்பாக சீரோ டே மற்றும் மேம்பட்ட தொடர் அச்சுறுத்தல்களை (APTS) நாங்கள் முக்கியமானவையாகக் கருதுகிறோம், மேலும் அவற்றைத் தணிப்பதற்கு செயலூக்கமான உத்திகள் தேவைப்படுகின்றன. முக்கிய உள்கட்டமைப்பைப் பாதுகாக்க, தொடர்ச்சியான கண்காணிப்பு, விரைவான பதிலளிக்கும் திறன்கள் மற்றும் மேம்பட்ட அச்சுறுத்தல் நுண்ணறிவு ஆகியவை தேவைப்படுகின்றன.

முக்கியமாக நிதி நிறுவனங்களைக் குறிவைத்து, Ransomware மற்றும் phishing இணையவழி திருட்டு தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இணையப் பாதுகாப்பு மற்றும் கிளவுட் நிபுணர்களின் உலகளாவிய பற்றாக்குறை, சிக்கல்களை மேலும் தீவிரப்படுத்தி, பாதுகாப்பான அமைப்புகளை விரிவுபடுத்தும் வங்கியின் திறனைத் தடுத்தது. திறமையான தகவல் தொழில்நுட்ப ஊழியர்களைப் பணியமர்த்துவது ஒரு அதிக செலவுள்ள முதலீடாக இருந்தாலும், அது ஒரு கட்டாயத் தேவையாகும். முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்பதால், இந்த வங்கிக்கு ஊதியத் தொகுப்புகளில் ஒரு வரம்பு உள்ளது

பாரம்பரிய அமைப்புகள் செயல்திறனற்றவையாகவோ அல்லது பாதுகாப்பற்றவையாகவோ மாறி, தொழில்நுட்பப் பழைமைக்கு வழிவகுக்கின்றன. இந்நிலையில், போட்டித்தன்மையை தக்கவைத்துக் கொள்ள, வங்கி தனது நவீனமயமாக்கல் முயற்சிகளை உகந்த செலவில் தொடர வேண்டும். கிராமிய சமூகங்களில் நிதி உள்ளடக்கமும் அதன் விரிவாக்கமும் தாக்குதல் பரப்பை கணிசமாக அதிகரிப்பதால், மீள்தன்மை மற்றும் வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்பிற்காக, இறுதிமுனை பாதுகாப்பும் (endpoint protection), பரவலான சூழல்களில் நிகழ்நேரக் கண்காணிப்பும் அவசியமாகிறது



எதிர்கால வாய்ப்பு நிலை 2026

வங்கியின் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் மாற்றத்தை மேலும் விரைவுபடுத்துவதற்கும், இத்துறையில் வங்கித் துறையில் அதன் தலைமைத்துவத்தை நிலைநாட்டுவதற்கும், 2026-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய ஒரு தொகுதி மூலோபாய நோக்கங்களை நாங்கள் வகுத்துள்ளோம். இந்த நோக்கங்கள், நிதி உள்ளடக்க மற்றும் சிறு, நடுத்தர தொழில் மேம்பாடு தொடர்பான அரசாங்க முன்னெடுப்புகளை ஆதரிக்கும் அதே வேளையில், சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கான வங்கியின் தொலைநோக்குப் பார்வையுடன் நெருக்கமாக ஒத்துப்போகின்றன

நாங்கள் எங்களின் டிஜிட்டல் கடன் வழங்கலை மேலும் விரிவுபடுத்தவும், மொபைல் வங்கிச் சேவையில் கவனம் செலுத்தி இணையவழி வங்கிச் சேவைகளை வலுப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். இந்த முயற்சிகள் தேசிய டிஜிட்டல் அடையாளம் மற்றும் பணம் செலுத்தும் சூழலமைப்புகளுடன் வலுவாக ஒருங்கிணைக்கப்படும்

இந்தத் தளம் வலுவாகவும், எதிர்காலத்திற்குத் தயாராகவும், மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் இருப்பதை உறுதி செய்வதற்காக, இணையப் பாதுகாப்பு, செயல்பாட்டு மீள்திறன் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கம் ஆகியவற்றில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்வோம்.

கடன் அட்டைகள்

கடன் அட்டைப் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள விரைவான அதிகரிப்பு, பணமில்லாப் பரிவர்த்தனைகளுக்கான சமூகத்தின் விருப்பம் வளர்ந்து வருவதையும், நிதியை எளிதாகப் பெறுவதற்கான தேவை அதிகரித்து வருவதையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

எமது கவனம்

தற்போது வங்கித் துறையில் இலத்திரனியல் பரிவர்த்தனைகளே ஆதிக்கம் செலுத்துகின்றன் இதில் கிரடிட் மற்றும் டெபிட் அட்டைகள் முன்னணியில் உள்ளன. நுகர்வோர் செலவினங்களை எளிதாக்குதல், வணிகப் பணப்புழக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம், இவை சந்தைகளையும் வணிகங்களையும் இணைத்து, வர்த்தகத்திற்கான தடைகளை நீக்குகின்றன. வங்கியின் கிரடிட் அட்டை மையம், வங்கியின் நாடு தழுவிய அணுகல் மற்றும் மேம்பட்ட டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி, நிதி அனைவரையும் உள்ளடக்கும் இயக்கத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக விளங்கியது..

எமது தந்திரோபயம்

அட்டை நிலையம், வழங்கப்படும் கடன் அட்டைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், மற்ற சந்தைப் போட்டியாளர்களுடன் திறம்படப் போட்டியிடுவதன் மூலம் சந்தைப் பங்கை மேம்படுத்தவும், கிளை வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட கடன் அட்டை விற்பனை உத்தியைப் பயன்படுத்துகிறது. முதலீட்டுத் தொகுப்பு வளர்ச்சி உத்தியின் ஒரு பகுதியாக, கல்வி, சுகாதாரம் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் போன்ற முக்கிய வாடிக்கையாளர் செலவின வகைகளுக்கு, அட்டை நிலையம் ஆண்டு முழுவதும் தவணை செலுத்தும் திட்டங்களை வழங்குகிறது. இதன் மூலம், பொதுவான கடன் அட்டைச் சலுகைகளுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்கள் தங்கள் மக்கள் வங்கி கடன் அட்டைகளைத் தவறாமல் பயன்படுத்த ஊக்குவிக்கிறது.

முதலீட்டுத் தொகுப்பின் வளர்ச்சியை மேம்படுத்தவும், கடன் அட்டைப் பயன்பாட்டை அதிகரிக்கவும், வங்கி “எதையும் எங்கும் வாங்குங்கள்“ ("Buy Anything Anywhere") என்ற உத்தியைக் கையாண்டுள்ளது. இது, வாடிக்கையாளர்கள் தங்கள் அட்டைகளைப் பலதரப்பட்ட வணிகர் பிரிவுகளில் பயன்படுத்த வழிவகுப்பதோடு, சந்தையில் வங்கியின் இருப்பையும் வலுப்படுத்துகிறது.

சிறப்பம்சங்கள்

சேவைத்துறைகள் விரிவாக்கம்:

23%

கடன் அட்டை பரிவர்த்தனைகள் அதிகரித்ததன் அளவு:

33%

As at 31 December	2025	2024	2023	2022	2021
நிலுவையில் உள்ள கடன் அட்டைகள் (ரூ. மில்லியன்):	10,805.0	8,812.2	6,576.7	5,539.6	4,303.4

தயாரிப்பு வரம்பு

வங்கியின் டிஜிட்டல் புத்தாக்கங்களின் ஆதரவுடன், பொறுப்பான கடன் வழங்கலின் அடிப்படையில் கட்டுப்படியான விலைக் கடனை வழங்கும் வகையில் வங்கியின் தயாரிப்பு வரிசை உருவாக்கப்பட்டுள்ளது:

People's VISA Classic/ MasterCard Classic கடன் அட்டை	அதிகபட்ச கடன் வரம்பு ரூ. 99,000.
People's Bank VISA Gold/MasterCard Gold கடன் அட்டை	கடன் உச்சவரம்பு ரூ. 100,000 – ரூ. 199,000.
People's VISA Platinum/MasterCard Platinum	ரூ. 200,000 முதல் ரூ. 595,000 வரையிலான கடன் வசதி.
People's VISA Signature/MasterCard World Card	உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு நன்மைகள், குறைந்தபட்ச கடன் வசதி ரூ.600,000.
People's Bank Elegance VISA Infinite கடன் அட்டை	பிரீமியம் பயணப் பயன்களுடன், தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளுக்கான புதிய தரம்

புதிய தயாரிப்பு அறிமுகங்கள்

1. வனிதா வசனா கடன் அட்டை – மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
2. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வணிகக் கடன் அட்டை – ஜூன் மாதம் சர்வதேச சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினத்தை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்டது..

விளம்பரப் பிரச்சாரங்கள்

விளம்பர உள்ளடக்கங்களை நிகழ்நேரத்தில் பரப்புவதும், சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களும், சரியான நேரத்தில் பரந்த அளவிலான ஈடுபாட்டைச் சாத்தியமாக்கியதுடன், பிரச்சாரத்தின் பதிலளிப்புத் திறனையும் மேம்படுத்தின.

மாதம்	விசேட விளம்பரப் பிரச்சாரங்கள்
மார்ச்	வனிதா வசனா கடன் அட்டை அறிமுக விழா மற்றும் ஹேவ்லாக் சிட்டி மோல் விளம்பரம்
மார்ச்	ஹேவ்லாக் சிட்டி மோல் விளம்பரம்
மார்ச்–ஏப்ரல்	புத்தாண்டு சலுகை
மே	அன்னையர் தினச் சலுகை
ஜூலை–ஆகஸ்ட்	கண்டி நகர மையம்
ஆகஸ்ட்	லிபர்ட்டி பிளாசா விளம்பரம் – Mini POS அறிமுகம்
ஒக்டோபர்	ஹேவ்லாக் சிட்டி மோல் – HCM 2வது ஆண்டுவிழா சலுகை
டிசம்பர்	பருவகால சலுகை

வணிகர் பெறுமதி சேவை (Merchant Acquiring Business)

எங்கள் வணிக பங்குதாரர் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், சிறு மற்றும் நடுத்தர வணிக சமூகத்தின் நிதி உள்ளடக்கத்தை வலுப்படுத்தவும், அவற்றுக்கு அதிகாரம் அளிக்கவும், மேலும் சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் நுண்நிதித் துறைகளை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிக்கவும் ஒரு Mini POS வணிகர் தீர்வை நாங்கள் அறிமுகப்படுத்தினோம

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

பீப்பிள்ஸ் கார்ட், இலங்கையின் பரந்த டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதையும், குடிமக்களிடையே மேம்பட்ட நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, தனது கடன் அட்டை வணிகத்தை பிராந்திய சந்தைகள் முழுவதும் விரிவுபடுத்துகிறது.

வங்கியானது, வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பிரத்தியேக அட்டை விற்பனைக் குழுவை நியமித்து, தனது கடன் அட்டைச் சேவைகளை வலுப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

மேலும், தடையற்ற மற்றும் சிறப்பான வாடிக்கையாளர் அனுபவத்தை உறுதிசெய்யும் வகையில், மக்களின் கடன் அட்டைகள் மற்றும் பணம் செலுத்தும் முறைகளில்அண்மைய தொழில்நுட்பப் புத்தாக்கங்களை ஒருங்கிணைப்பதில் வங்கி கவனம் செலுத்தும்.

இளைய தலைமுறையினரின் விருப்பங்கள், நடத்தைகள் மற்றும் நிதித் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்களைக் கவர்வதற்கும் சிறப்பு கவனம் செலுத்தப்படும்

அறவீடுகள்

கட்டமைக்கப்பட்ட முறையில் இயங்கும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்பாடான வங்கியின் அறவீட்டுத் திணைக்களம், சொத்துக்களின் தரத்தைப் பேணுவதற்கான தேவையையும், கடன் திருப்பிச் செலுத்துதலில் மனிதாபிமான அணுகுமுறையையும் ஒருங்கிணைக்கிறது. வங்கியின் டிஜிட்டல் உருமாற்றம் என்பது அறவீட்டு நடவடிக்கையின் ஒரு முக்கிய அங்கமாகும். ஏனெனில், தரவு சார்ந்த முன்னுரிமையாக்கமானது, நிலையான கடன் வழங்கலுக்கான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும், அதன் மூலம் நிதி உள்ளடக்க நோக்கத்தை அடையவும், செயலூக்கமான ஈடுபாட்டிற்கு வழிவகுக்கிறது.

எங்கள் கவனம்

வங்கியானது 25 பிராந்தியங்களில் உள்ள நிலுவைத் தொகைகளைக் குறைப்பதிலும், மொத்த செயற்படாகடன் (NPL) நிலுவையைக் குறைப்பதிலும் கவனம் செலுத்தியது.

எமது தந்திரோபாயம்

கண்காணிக்கப்பட்ட அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, 25 மில்லியன் இலங்கை ரூபாய்க்கும் குறைவான நிலுவைகளுக்கான பேச்சுவார்த்தை மூலம் தீர்வை கண்டோம். ரூ. 25 மில்லியனுக்கும் குறைவான நிலுவைகளுக்கான பராட்டே ஏலவிற்பனைகள் (Parate settlements) 2025 டிசம்பர் 31 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன, அதே சமயம் ரூ. 25 மில்லியனுக்கும் அதிகமான வசதிகள் ஒவ்வொரு நிகழ்வின் அடிப்படையிலும் பரிசீலிக்கப்பட்டன. தித்வா புயலின் பின்விளைவுகளைத் தொடர்ந்து, வங்கியானது நிவாரண நடவடிக்கையாக, பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் கடன்களை மறு அட்டவணைப்படுத்தியோ, மறுசீரமைத்தோ அல்லது திருப்பிச் செலுத்தும் கால அவகாசத்தை நீட்டித்தோ ஆதரவளித்தது.

சிறப்பம்சங்கள்

செயற்படா கடனில் குறைப்பு (கிளை வலையமைப்பு):	பதிவழிப்பு கடன் அறவீட்டின் மிகை	செயற்படா கடனில் குறைப்பு (மொத்த வங்கி):
ரூ 1.3 பில்லியன்	**ரூ 39 பில்லியன்**	**ரூ 2.4 பில்லியன்**

பழைய கடன்களில் குறிப்பிடத்தக்க அறவீடுகள்

2025-ல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அறவீட்டு நடவடிக்கைகள் முயற்சிகளின் மூலம் முதலீட்டுத் தொகுப்பின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பட்டது. வங்கியின் செயல்பாடுகள் நாடு முழுவதும் பரவியிருப்பதால், 25 பிராந்தியங்களில் 18 பிராந்தியங்களின் செயற்படாக்கடன் நிலுவைத் தொகை 1.3 பில்லியன் ரூபாய்களால் குறைவடைந்துள்ளது. இது ஆண்டின் தொடக்கத்திலிருந்து நிலுவைத் தொகைகளில் ஏற்பட்ட 6% குறைவுக்குச் சமமாகும். கிளைகள் மற்றும் பெருநிறுவன வங்கிப் பிரிவின் முயற்சிகளின் காரணமாக, திணைக்களமானது மொத்த செயற்படாக்கடன் நிலுவையை 2.4 பில்லியனால் குறைத்து 3% குறைப்பை எட்டியுள்ளது.

நெருக்கடி நிலைமைகளில் வாடிக்கையாளர் மையப்படுத்தல் சேவைகள்

வங்கியின் நிதி மேம்பாட்டிற்கு பங்களிக்கும் திணைக்களத்தின் நோக்கமானது, புயலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணம் வழங்குவதிலிருந்து எங்களைத் தடுக்கவில்லை. கடன்களை மறுசீரமைப்பதற்கான வசதி, திருப்பிச் செலுத்தும் கால நீடிப்பு என்பன, கூட்டு வட்டி இல்லாமல் வழங்கப்பட்டது

டிசம்பர் 31 வரை 25 மில்லியன் இலங்கை ரூபாய்க்கும் குறைவான கடன்களுக்கு பராட்டே ஏல விற்பனையை செயல்படுத்த முடியாவிட்டாலும், அறவீட்டில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக வங்கி பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகள் மற்றும் பிற சலுகைகளை வழங்கியது..

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

வாடிக்கையாளரின் கடன் மீளச் செலுத்தும் நடைமுறையில் இணக்கமான மற்றும் திறமையான முறையில் உதவுவதே இத்திணைக்களத்தின் முதன்மை நோக்கமாகும். அதன்படி, கடன் அறவீட்டு பணிகளைத் தானியக்கமாக்குவதற்கும், அறிக்கையிடல் வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கும், DRM அமைப்பில் மேம்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

கடன் மீளச் செலுத்த முடியாத தீவிர நிகழ்வுகளின்போது, அசையும் அல்லது அசையாப் பிணையங்களை, அவற்றின் பணமாக்கும் திறனுக்கு முக்கியத்துவம் அளித்து, கவனமாக மதிப்பீடு செய்வதற்காகக் கடன் வழங்கும் அதிகாரிகளுடன் ஒருங்கிணைத்தல்.

சந்தைப்படுத்தல்

வங்கியின் சந்தைப்படுத்தல் திணைக்களமானது, பொருத்தப்பாட்டை முக்கியமாகக் கொண்டு தரச்சின்னத்தின் தெரிவுநிலையை உருவாக்கும் அதே வேளையில், வங்கியை வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் இணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. திணைக்களத்தின் முயற்சிகள் வங்கி முழுவதும் பரவி, நிலையான நிதிச் செயல்பாட்டிற்கு கணிசமாகப் பங்களிக்கின்றன.

எமது கவனம்

ஒவ்வொரு பிரிவுக்கும் பொருத்தமான வகையில், அனைத்து வாடிக்கையாளர் தரப்பினருக்கும் செய்திகளைச் சென்றடையும் சந்தைப்படுத்தல் தகவல்களைப் பரப்புவதில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டோம். வாடிக்கையாளர்களின் மனதில் முதலிடம் பிடிக்கும் ஒரு தரச்சின்னமாக எங்களை நிலைநிறுத்திக் கொள்ளும் அதே வேளையில், வங்கியானது தனது வாடிக்கையாளர் வட்டத்தில் உள்ள இலக்குச் சந்தைப் பிரிவுகளுக்குப் பொருத்தமானதாகத் திகழும் வகையில் தரச்சின்னத்தின் முக்கியக் கூறுகளைச் சீரமைத்து, நீண்ட காலத் திட்டத்தையும் முன்வைத்தது.

எமது தந்திரோபாயம்

2025-ஆம் ஆண்டில், மாறிவரும் சந்தை நிலவரங்கள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தரச்சின்னத்தை மறுசீரமைப்பதன் மூலம், மக்கள் வங்கியின் விரிவான உருமாற்றத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதில் சந்தைப்படுத்தல் திணைக்களம் ஒரு முக்கியப் பங்காற்றியது. மிகுந்த போட்டி நிறைந்த சூழலில் இயங்கும் இத்திணைக்களம், நீண்டகால வளர்ச்சி, டிஜிட்டல் பயன்பாடு மற்றும் பரிவர்த்தனை மதிப்பு ஆகியவற்றின் முக்கிய உந்துசக்தியாக விளங்கும் 18-45 வயதுக்குட்பட்ட பிரிவினரிடையே வங்கியின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது

இந்த மூலோபாயம் சார் கவனம், தொழில்நுட்பத் தலைமைத்துவம், தேச அக்கறை மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவம் ஆகிய மூன்று வரையறுக்கும் தரச்சின்ன தூண்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவை அனைத்து சந்தைப்படுத்தல் முயற்சிகளுக்கும் வழிகாட்டி, நிலைத்தன்மை, தெளிவு மற்றும் நீண்டகால தரச்சின்ன வேறுபாட்டை உறுதிசெய்தன.



முன்னணித் தலைமைத்துவத்தை ஊக்குவித்தல்

2025-ஆம் ஆண்டில், வலுவான முதன்மை விழிப்புணர்வைப் பேணுவது ஒரு முக்கிய நோக்கமாகத் தொடர்ந்தது. பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் தளங்கள் இரண்டையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த, பன்முக ஊடகப் பிரச்சாரங்கள் மூலம், வங்கி நாடு முழுவதும் தனது தரச்சின்ன தெரிவுநிலையை உயர் மட்டத்தில் தக்கவைத்துக் கொண்டது.

இந்த முயற்சிகள், மக்கள் வங்கி பரந்த அளவிலான வாடிக்கையாளர்களின் முதல் தேர்வாகத் திகழும் நிதி நிறுவனமாகத் தொடர்ந்து இருப்பதை உறுதிசெய்து, இலங்கையின் மிகவும் நம்பகமான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக முத்திரைகளில் ஒன்றாகத் தனது நிலையை வலுப்படுத்தின.

இலக்கு நோக்கிய ஈடுபாட்டின் மூலம் தரச்சின்னத்தின் தொடர்புத்தன்மையை மேம்படுத்துதல்

பார்வைக்குத் தெரிவதைத் தாண்டி, குறிப்பிட்ட வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு ஏற்றவாறு அர்த்தமுள்ள மற்றும் பொருத்தமான தொடர்பாடல்களை வழங்குவதில் இத்திணைக்களம் அதிக முக்கியத்துவம் அளித்தது. சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைகள், விருப்பங்கள் மற்றும் நிதித் தேவைகளுடன் நெருக்கமாகப் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டதன் மூலம், ஈடுபாடு வலுப்படுத்தப்பட்டு, வாடிக்கையாளர்களாக மாறும் முடிவுகள் மேம்படுத்தப்பட்டன.

வாடிக்கையாளர்களுடனான உணர்வுப்பூர்வமான தொடர்புகளை ஆழப்படுத்துவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, தேசநலன் சார்ந்த ஒரு நிறுவனம் என்ற வங்கியின் அடையாளத்தை வலுப்படுத்துவதற்கும், கூட்டுறவு சமூகப் பொறுப்பு முயற்சிகளும் சமூக ஈடுபாட்டுத் திட்டங்களும் மூலோபாயரீதியாகப் பயன்படுத்தப்பட்டன.

சந்தைப்படுத்தல் மேன்மைக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

இந்த ஆண்டில் சந்தைப்படுத்தல் செயற்திறனை உயர்த்துவதில் தொழில்நுட்பம் ஒரு முக்கிய காரணியாக விளங்கியது. புத்தாக்கங்களை மேம்படுத்தவும், இலக்கு நிர்ணயத் துல்லியத்தை அதிகரிக்கவும், பிரச்சார உகப்பாக்கம் மற்றும் வாடிக்கையாளர் தனிப்பயனாக்கம் ஆகியவற்றுக்காகவும், இத்திணைக்களம் டிஜிட்டல் தளங்கள், தரவுப் பகுப்பாய்வு மற்றும் வளர்ந்து வரும் தகவல் தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தியது.

இந்த முயற்சிகள் சந்தைப்படுத்தல் விளைவுகளை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், பொதுமக்களிடையே டிஜிட்டல் வங்கித் தீர்வுகளைப் பரவலாகப் பயன்படுத்த ஊக்குவிப்பதன் மூலம் வங்கியின் விரிவான டிஜிட்டல் மாற்றத் திட்டத்திற்கும் ஆதரவளித்தன

தரவு சார்ந்த முடிவெடுத்தல் மற்றும் சந்தை நுண்ணறிவு

கட்டமைக்கப்பட்ட ஆராய்ச்சி, அளவீடுகள் மற்றும் பின்னூட்டல் வழிமுறைகள் மூலம், மாறிவரும் சந்தை நிலைமைகளையும் வாடிக்கையாளர் நடத்தையையும் புரிந்துகொள்வதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த நுண்ணோக்குகள், திணைக்களம் துரிதமாகச் செயற்படவும், மூலோபாயங்களைத் தொடர்ந்து செம்மைப்படுத்தவும், மாறிவரும் சந்தை நிலவரங்களுக்கு முன்கூட்டியே பதிலளிக்கவும் உதவின.

இந்தத் தரவு சார்ந்த அணுகுமுறையானது, சந்தைப்படுத்தல் முடிவுகள் அனுமானங்களின் அடிப்படையில் அல்லாமல் உள்ளார்ந்த புரிதலின் அடிப்படையில் எடுக்கப்படுவதை உறுதிசெய்து, செயற்திறனையும் பயனுடைமையையும் மேம்படுத்தியது.

பெருநிறுவன முத்திரை மற்றும் நிறுவன நம்பிக்கையை வலுப்படுத்துதல்

நிதிச் சேவைகளில் நீண்டகால வெற்றி என்பது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையின் மீது கட்டமைக்கப்படுகிறது என்பதை உணர்ந்து, வங்கியின் பெருநிறுவனப் பிம்பத்தையும் ஒட்டுமொத்த தரச்சின்ன மதிப்பையும் மேம்படுத்துவதில் திணைக்களம் தனது கவனத்தைத் தீவிரப்படுத்தியது. வங்கிச் சேவைகள் சார்ந்த பிரச்சாரங்களுக்கு மேலதிகமாக, வங்கியின் விழுமியங்கள், ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய பங்களிப்பு ஆகியவற்றை எடுத்துரைப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்த அணுகுமுறை, மக்கள் வங்கியை ஒரு மீள்திறன் மிக்க, பொறுப்பான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட நிறுவனமாக நிலைநிறுத்தி, வாடிக்கையாளர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் பரந்த பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கையையும் வலுப்படுத்தியது.

ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் மூலம் தாக்கத்தை ஏற்படுத்துதல்

ஒருங்கிணைந்த மற்றும் மூலோபாயம் சார்ந்த அணுகுமுறையின் மூலம், சந்தைப்படுத்தல் திணைக்களமானது வங்கியின் உருமாற்றப் பயணத்திற்கு வெற்றிகரமாக ஆதரவளித்தது – இதன்மூலம் கவனத்தை ஈர்த்தல், பொருத்தத்தை மேம்படுத்துதல், நம்பிக்கையை வலுப்படுத்துதல் மற்றும் பெரிய அளவில் டிஜிட்டல் பயன்பாட்டைச் சாத்தியமாக்குதல் ஆகியவற்றைச் சாதித்தது.

இந்த முயற்சிகள், மக்கள் வங்கியை ஒரு சந்தை முன்னோடியாகவும், நிதி உள்ளடக்கத்தின் முன்னோடியாகவும், இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு நம்பகமான பங்காளராகவும் நிலைநிறுத்துவதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கின.

சவால்கள்

எந்த வடிவத்திலான நிலையற்ற தன்மையும் சந்தைப்படுத்தல் முயற்சியைப் பாதகமாகப் பாதிக்கக்கூடும். அதேபோல், உள்ளடக்கக் குழப்பமும், எந்தவொரு ஊடகம் குறித்த எதிர்மறையான கண்ணோட்டங்களும், அவற்றின் மூலம் வங்கி பரப்பும் தகவல்களின் வீரியத்தைக் குறைத்துவிடக்கூடும்.

746 கிளைகள் மற்றும் சேவை மையங்கள் இருப்பதால், எந்தவொரு குறிப்பிட்ட இடத்திலும் ஏற்படும் சேவைப் பிரச்சனைகள் சமூக ஊடகங்களில் விரைவாகக் கவனத்தை ஈர்க்கின்றன.

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

எங்கள் வாடிக்கையாளர் வட்டம் முழுவதும், பொருத்தமான மற்றும் தெளிவான செய்தியைத் தொடர்ச்சியாகவும் முறையாகவும் வழங்குவோம். எங்கள் செய்திகளுடன் ஒத்துப்போகும் வகையில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்படும். செயற்கை நுண்ணறிவை முழுமையாகப் பயன்படுத்துவது, பயன்படுத்த எளிதான இணையதளம் மற்றும் மொபைல் செயலி தளங்கள் மூலம் வாடிக்கையாளர் ஈடுபாட்டிற்கான நமது டிஜிட்டல் தளங்களை மேலும் வலுப்படுத்தும். இந்த முன்னெடுப்புகள் நமது தரச்சின்னத்தின் தெரிவுநிலையை மேம்படுத்துவதோடு, செலவுத் திறனுள்ளதாகவும், செயற்பாட்டுத் திறன்களுக்குப் பங்களிப்பதாகவும் அமையும்.

கிளை முகாமைத்துவம்

கிளை முகாமைத்துவ திணைக்களம் (CMD), 352 முழுமையான கிளைகள், 391 சேவை மையங்கள் மற்றும் வாடிக்கையாளர் வசதியை வழங்கும் பல டிஜிட்டல் வழித்தடங்களை உள்ளடக்கிய வங்கியின் கிளை வலையமைப்பை மேற்பார்வையிடுகிறது. கிளை முகாமைத்துவ திணைக்களத்தின் வணிக வரம்பில் கடன்கள், முற்பணங்கள், அடகு சேவைகள் மற்றும் வைப்புத்தொகைத் தொகுப்பு ஆகியவை தொடர்பான, வலுவான இடர் தணிப்பு கட்டமைப்பிற்குள் கணக்காய்வு மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்வதும் அதன் பொறுப்பாகும்.

எமது கவனம்

விரைவான டிஜிட்டல் உருமாற்றம் மற்றும் டிஜிட்டல் தடத்தை விரிவுபடுத்தி ஒரு பன்முக வழி வாடிக்கையாளர் அனுபவத்தை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட அதேவேளையில், நிதி உள்ளடக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் கிளை மற்றும் முகவர் வலையமைப்பு மேம்படுத்தப்பட்டது. தரமான கடன்களையும் முற்பணங்களையும் வழங்கி மேற்கொள்ளப்பட்ட தீவிரப் பிரச்சாரங்கள், 2025-ஆம் ஆண்டில் இருந்த உபரி நிதி நிலையைத் தணிப்பதற்கு வலுவான பணப்புழக்க முகாமைத்துவத்தை உறுதிசெய்தன.

எமது தந்திரோபாயம்

ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் வலுவான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ், உபரி பணப்புழக்கத்தை உயர்தரக் கடன்கள் மற்றும் முற்பணங்களாக மூலோபாயரீதியாக மறுபயன்பாடு செய்வதற்கு, நாங்கள் கிளை வலையமைப்பிற்கு வழிகாட்டி ஊக்கப்படுத்தினோம். கட்டண வருவாய் அதிகரித்த அதே வேளையில், தயாரிப்பு மற்றும் சேவை விழிப்புணர்வுக்கான இலத்திரனியல்-கற்றல் தளங்கள் மூலம் பணியாளர் ஈடுபாடு அதிகரிக்கப்பட்டதால், ஒரு வலுவான நிதிநிலை அறிக்கைக்கும் எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு குழுவை உருவாக்குவதற்கும் பங்களித்தது. கிளை மட்டத்தில் உள்ள பிரத்தியேக வாடிக்கையாளர் தொடர்பு அலுவலர்கள், அதிக நிகர மதிப்புள்ள தனிநபர்களுக்கு (HNIs) உதவியளித்து, குறுக்கு விற்பனையின் வெற்றியையும் சேவை வழங்கலையும் மேம்படுத்துதல்.

சேவைத் தரம் மற்றும் திறன் மேம்பாடு

தரமான கடன் வழங்கல் மூலம் வணிக வளர்ச்சி

செயல்பாட்டுச் சிறப்பு மற்றும் ஆளுகையை வலுப்படுத்துதல்

நிதி உள்ளடக்கல்

சேவைத் தரம்

டிஜிட்டல் மாற்றம்

தந்திரோபாய முன்னெடுப்புகள்

வாடிக்கையாளர் நம்பிக்கையை ஆழப்படுத்தவும், செயல்பாடுகளை எதிர்காலத்திற்கு ஏற்றவாறு பாதுகாக்கவும், நிதி உள்ளடக்கச் செயலாக்கம், டிஜிட்டல் மாற்றம் மற்றும் சேவை அணுகல்தன்மை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் எங்கள் தந்திரோபாயத்தைச் செயற்படுத்த பல முக்கிய முன்னெடுப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தரமான கடன் வழங்குவதன் மூலம் வணிக வளர்ச்சி

கிளை முகாமைத்துவ திணைக்களம், தரமான கடன் வழங்குதலுக்கான ஊக்குவிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, கடன் வழங்கல்களில் ஆண்டுக்கு ஆண்டு 26.3% வளர்ச்சியாக, ரூ. 156.5 பில்லியன் நிகர வளர்ச்சி ஏற்பட்டது. சிறப்பாகச் செயல்படும் கிளைகள் அங்கீகரிக்கப்பட்ட அதே வேளையில், கடன் தரம் மற்றும் கடன் தொகுப்புச் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, குறைந்த செயல்திறன் கொண்ட பிரிவுகளுக்குக் கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் நடத்தப்பட்டன.

நிதி உள்ளடக்கம்

வங்கியானது அஸ்வெசும திட்டத்தின் கீழ் 1,15,000 கணக்குகளைத் திறந்தது, இது நாடு முழுவதுமான மொத்தப் பயனாளிகளில் 48% ற்கும் அதிகமான சந்தைப் பங்கைக் குறிக்கிறது. 2023-ல் இந்தத் திட்டம் தொடங்கியதிலிருந்து, நாடு தழுவிய அளவில் உள்ள மொத்த 15 லட்சம் கணக்குகளில், வங்கி 8,43,518 கணக்குகளைத் திறந்து, 56.23% சந்தைப் பங்கைப் பெற்றுள்ளது.

டிஜிட்டல் மாற்றம்

இலங்கையில் வங்கிச் சேவை துறையில் டிஜிட்டல் வாடிக்கையாளர் தீர்வுப் பதிவு 5.3 மில்லியன் என்ற எண்ணிக்கையைத் தாண்டியுள்ளது. எங்கள் டிஜிட்டல் சேவைகள் வரிசையில், தனிநபர் மற்றும் கூட்டுறவு வாடிக்கையாளர்களுக்கான மொபைல் மற்றும் இணைய வங்கிச் சேவைகள், மொபைல் வாலட் செயலி, காகிதமில்லா கணக்குத் தொடக்கம், முக்கிய வங்கிச் சேவைகள், டிஜிட்டல் கொடுப்பனவுகள், வாலட் முகாமைத்துவம் மற்றும் டிஜிட்டல் வழியான வாடிக்கையாளர் சேர்க்கை ஆகியவை அடங்கும். GOVPAY-I அதிகளவில் பயன்படுத்துவதால் செலவுத் திறன்கள் மேம்பட்டு, மனித உழைப்பைச் சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டது. முற்றுமுழுதாக டிஜிட்டல் மாற்றமானது வாடிக்கையாளர் தகவல் வழங்களை வெளிப்படுதன்மை, துள்ளியம், வேகம் மற்றும் அணுகளை மேம்படுத்தியுள்ளது.

சேவை அணுகல்தன்மை

GOVPAY-ஐ செயல்படுத்துதல், 76 காசோலை வைப்பு இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் ATM ஸ்விட்ச்சை நவீனமயமாக்குதல் ஆகியவை பரிவர்த்தனை வேகம், வசதி, காலந்தவறாமை மற்றும் சேவை நம்பகத்தன்மை ஆகியவற்றை பன்மடங்கு அதிகரித்தன

செயல்பாட்டுச் சிறப்பு மற்றும் ஆளுகையை வலுப்படுத்துதல்

“சராசரிக்கும் மேலான சிறப்பு” திட்டமானது, கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் கிளை ஊழியர்களுக்கான இலக்கு சார்ந்த திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகள் மூலம், கிளை வலையமைப்பு முழுவதும் கணக்காய்வுத் தரங்களை மேம்படுத்தி, செயல்முறைத் தரங்களை உயர்த்தியது. “ஸ்ட்ரீம்லைன் 2025” முன்னெடுப்பானது, பொருட்பட்டியல் உகப்பாக்கம் மற்றும் பௌதீக வளங்களை முறைப்படுத்துதல், செலவு முகாமை திறனை மேம்படுத்துதல் மற்றும் செயல்பாட்டுச் சிறப்பை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

சேவைத் தரம் மற்றும் திறன் மேம்பாடு

சேவைக் குறைபாடுகளைக் கண்டறிவதற்காக, குரல்வழி கணக்கெடுப்புகளும் இரகசிய வாடிக்கையாளர் கருத்துக்கணிப்புகளும் நடத்தப்பட்டன. சேவை மேம்பாடுகள் தேவைப்பட்ட இடங்களில், தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு இந்த நுண்ணோக்குகள் உதவின.

வலுப்படுத்தப்பட்ட நிர்வாகம், மேம்படுத்தப்பட்ட சேவைச் சிறப்பு மற்றும் துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டு, விநியோக வழித்தட முகாமைத்துவ திணைக்களத்திற்கு ஒரு திருப்புமுனையான ஆண்டாக அமைந்தது.

சிறப்பம்சங்கள்

டிஜிட்டல் வாடிக்கையாளர் தீர்வுப் பதிவு
5.3 மில்லியன்

2025 ஆம் ஆண்டு நிலவரப்படி அஸ்வெசுமவின் சந்தைப் பங்கு – 56.23%
843,518

2025-ல் திறக்கப்பட்ட புதிய அஸ்வெசும கணக்குகள்:
115,000

கடன்கள் மற்றும் முற்பணங்களில் – ஆண்டுக்கு ஆண்டு 26.3% வளர்ச்சி
ரூ. 156.5 பில்.

வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களுக்கான புதிய ஆட்சேர்ப்பு
683

கட்டண வருமானத்தில் வளர்ச்சி
21.3%

352 கிளைகள் **391** சேவை மையங்கள்

(CBD, OCS மற்றும் வணிகப் மறுதிறனாக்கல் பிரிவு தவிர்த்து)

வைப்புத்தொகைகள்		கடன்கள், முன்பணங்கள் மற்றும் ஏனையவை	
106%	நடைமுறை கணக்கு	தங்கநகை அடகுகள்	104%
110%	சேமிப்பு	செயற்படாக்கடன்கள்	100%
113%	நிலையான வைப்பு	இதர முற்பணங்கள்	112%
120%	வெளிநாட்டு நாணயக்கணக்கு	கட்டண வருமானம்	162%

முழு ஆண்டுக்கான இலாபம் (பரிமாற்ற விலை நிர்ணயத்திற்குப் பின்னர்)

113%

CMD KPI செயலாற்றுகை – ஆண்டு இறுதிக்கு மிகவும் முன்பே, அனைத்து KPI-களிலும் ஆண்டு இலக்குகளை விஞ்சியது.

வாடிக்கையாளர் மையப்படுத்தல்

Engaging with our customers

தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் டிஜிட்டல் வசதி ஆகியவற்றின் கலவையை கடைபிடித்து, நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ச்சியாகத் தொடர்பில் இருந்தோம். இந்த அணுகுமுறையில், பிரத்தியேக உறவு முகாமையாளர்களைப் பணியமர்த்துதல், நேருக்கு நேர் விற்பனை அழைப்புகள், உயர் திறன்கொண்ட கிளைப் பணியாளர்களின் நிபுணத்துவம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவை அடங்கியிருந்தன. பிறந்த குழந்தை முதல் மூத்த குடிமக்கள் வரையிலான தலைமுறையினருக்கு ஏற்ப, நாங்கள் ஊடகங்களையும் அணுகுமுறையையும் கவனமாகத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு தலைமுறைப் பிரிவினரையும் கவரும் மற்றும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் செய்திகளை வடிவமைத்தோம.

டிஜிட்டலுக்கு முதலிடம்

டிட்வா புயலுக்குப் பின்னைய காலகட்டத்தில், அழிவினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களை விரைவாகச் சென்றடைவதற்காக நாங்கள் டிஜிட்டல்-சார்ந்த அணுகுமுறையைக் கையாண்டபோது, எங்களின் அக்கறையான மற்றும் தேர்ந்தெடுத்த திறமை மிகவும் வெளிப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிளை ஆதரவுடன் வழங்கப்பட்ட செயலூக்கமான தொடர்பாடல் மற்றும் அலைபேசி வங்கி வசதி ஆகியவை, மிகவும் தேவையான வங்கிச் சேவைகளின் தொடர்ச்சியை உறுதிசெய்து, வாடிக்கையாளர் நம்பிக்கையையும் மக்கள் வங்கியின் நிரூபிக்கப்பட்ட நம்பகத்தன்மையையும் வலுப்படுத்தின.

புனரமைப்புக்கான விரைவுக் கடன்கள்

புயலுக்குப் பிந்தைய நிவாரணத்தில், சொத்துக்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 3% வட்டியில் வழங்கப்பட்ட கடனும் அடங்கும், அது விரைவாக விநியோகிக்கப்பட்டது. துயரத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிக்கவும், நிவாரண நடவடிக்கைகளில் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படவும், வங்கியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் மற்றும் பிற சமூக ஊடகத் தளங்களில் தகவல்களும் பொது விழிப்புணர்வுச் செய்திகளும் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வந்தன.

முறைப்பாடு முகாமைத்துவ அமைப்பு

407	பெறப்பட்ட முறைப்பாடுகள்
42	தீர்க்கப்பட வேண்டிய நிலுவையில் உள்ளது
365	தீர்க்கப்பட்டது

வங்கியின் மையப்படுத்தப்பட்ட முறைப்பாடு முகாமைத்துவ அமைப்பு (CMS) மூலம் பெறப்பட்ட முறைப்பாடுகளின் மூல காரணப் பகுப்பாய்வை மேற்கொண்டு, திருத்த நடவடிக்கைகளைச் செயல்படுத்த உதவியதுடன், பின்னூட்டத்தின் அடிப்படையில் பெறப்பட்ட நுண்ணோக்குகளை வழிமுறை மேம்பாடு, தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் சேவைத் தர மேம்பாடுகளில் முறையாக ஒருங்கிணைத்தது

முறைப்பாடுகளை நிர்வகிப்பதிலும் தீர்ப்பதிலும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறை அமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட தேவைகளை வங்கி கடுமையாகப் பின்பற்றுகிறது. இந்தத் தேவைகள் வங்கியின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் பொதிந்துள்ளன. முறைப்பாடுகள் தீர்வுப் பணியின் முன்னேற்றம் குறித்து மாதாந்த நிலை அறிக்கை ஒன்று இடர் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

வாடிக்கையாளர் தரவு மற்றும் இடர் முகாமைத்துவம்

வாடிக்கையாளர் தரவு தனியுரிமையை உறுதி செய்வதற்கும், மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வங்கியின் தரவுப் பாதுகாப்பு கொள்கைக்கு இணங்க, வலைய மேம்படுத்தல்கள், டிஜிடல் மாற்றம் மற்றும் பணியாளர் பயிற்சி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்புத் துறையால் தகவல் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டதால், வங்கியின் மீதும் அதன் நம்பகத்தன்மை மீதும் வாடிக்கையாளர் நம்பிக்கை அதிகரித்துள்ளது. வலுவான இரட்டைக் கட்டுப்பாட்டு வழிமுறைகள், கடுமையான கணக்காய்வு நடைமுறைகள் மற்றும் வழக்கமான பின்தொடர்தல்கள் ஆகியவை, திறமையான மோசடி இடர் முகாமைத்துவம், நிகழ்நேர அறிக்கையிடல் மற்றும் உடனடித் தீர்வு ஆகியவற்றை உறுதி செய்தன. 2025-ஆம் ஆண்டில் தரவு தனியுரிமை மீறல்கள் எதுவும் பதிவாகவில்லை.

வாடிக்கையாளர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்யும் வகையில், கிளை வலையமைப்பு வழக்கமான பாதுகாப்பு கணக்காய்வுகள், போதுமான ஆயுதமேந்திய பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் சிசிடிவி கண்காணிப்பு ஆகியவற்றை மேற்கொண்டது

சவால்களில் செயற்படல்

தித்வா புயலால் ஏற்பட்ட சீர்குலைவு, 2025-ஆம் ஆண்டில் வங்கியின் செயல்பாட்டுத் திறனுக்குச் சவாலாக அமைந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் செயல்படும் கிளைச் சேவைகளையும், நடமாடும் வங்கிப் பிரிவுகளையும் நிறுவி, இயல்பு நிலை வங்கிச் சேவைகளை மீட்டெடுத்த முதல் வங்கி மக்கள் வங்கி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில், வங்கியின் டிஜிட்டல் திறன்கள் டிஜிட்டல் தளங்களையும் ATM சேவைகளையும் விரைவாக மீட்டெடுத்தன.

எதிர்கால வாய்ப்பு நிலை 2026

கிளை மட்டங்களில் செயற்படா கடன்களின் விகிதத்தை 2% ற்கும் குறைவாகப் பராமரிக்கும் அதே வேளையில், நிகர கடன் வளர்ச்சியை மையமாகக் கொண்ட தரமான கடன் வழங்குதலுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. செயல்பாட்டுத் திறன்களை உறுதி செய்வதற்காக, கணக்காய்வு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம் ஆகியவை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். கிளைகளை நவீனமயமாக்குதல், டிஜிட்டல் வழிமுறைகளை மேலும் விரிவுபடுத்துதல், மற்றும் மேம்பட்ட வாடிக்கையாளர் சேவைக்காக ATM சுயசேவை முறைகளை உகந்ததாக்குதல் ஆகியவையும் 2026-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வரத் திட்டமிடப்பட்டுள்ளன..

2025-ஆம் ஆண்டில் வங்கிக்குச் சிறப்பாகப் பணியாற்றிய நமது மனித மூலதனத்தை ஊக்குவிக்கவும் தக்கவைக்கவும், ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் திறன்களை மேம்படுத்துதல், சாதனையாளர் விருதுகளை அறிமுகப்படுத்துதல் போன்ற மனிதவள முன்னெடுப்புகளுக்குத் CMD ஆதரவளிக்கும்.

நிதி மூலதனம்

அமைப்புரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த, அரசிற்குரிய வர்த்தக வங்கியாகவும், இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தக வங்கியாகவும் திகழும் மக்கள் வங்கியின், நீடித்த மதிப்பை உருவாக்கும் திறனுக்கு நிதி மூலதனமே அடித்தளமாக விளங்குகிறது. 2025-ஆம் ஆண்டில், வங்கியானது ஒழுங்குபடுத்தப்பட்ட ஐந்தொகை முகாமைத்துவம், வலுவான வைப்புத்தொகைத் திரட்டல், விவேகமான கடன் விரிவாக்கம் மற்றும் வருவாய்த் தரத்தில் நீடித்த முன்னேற்றம் ஆகியவற்றின் மூலம் தனது நிதி மூலதனத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தியது. தேசிய நிதி அமைப்பில் ஒரு முக்கிய நிறுவனமாக, உள்நாட்டு சேமிப்புகளைத் திரட்டுவதிலும், பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளுக்கு நிதி வளங்களைச் செலுத்துவதிலும் வங்கி ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறது. நிதி மூலதனம் தொடர்பான அதன் அணுகுமுறையானது, வங்கியின் இடர் ஏற்புத்திறன், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க, வலுவான மூலதனக் காப்பு நிதிகளைப் பேணுதல், நிலையான மற்றும் பல்வகைப்பட்ட நிதி ஆதாரம், மீள்திறன் கொண்ட திரவத்தன்மை மற்றும் விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எமது கவனம்

விவேகமான நிதி முகாமை, செயற்திறன் மிக்க இடர் கட்டுப்பாடு, மூலதன உகப்பாக்கம் மற்றும் நிலையான வங்கி நடைமுறைகள் ஆகியவற்றின் மூலம் நிதி மூலதனத்தைப் பாதுகாப்பதிலும் வலுப்படுத்துவதிலும் வங்கி தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இது, வங்கி நீண்டகால நிறுவன நிலைத்தன்மையைப் பேணவும், வணிக வளர்ச்சியை ஆதரிக்கவும், பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து மதிப்பை வழங்கவும் உதவுகிறது.

எமது தந்திரோபாயம்

2025 ஆம் ஆண்டில், வங்கியானது தனது ஐந்தொகையை வலுப்படுத்துவதிலும், அதிக இலாபத்தன்மை மூலம் தக்கவைக்கப்பட்ட வருவாயை அதிகரிப்பதிலும், செறிவு அபாயத்தைக் குறைப்பதிலும், வலுவான மூலதனம் மற்றும் திரவத்தன்மை காப்பு நிதிகளைப் பராமரிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்தியது. இந்த அணுகுமுறை தனியார் துறை கடன் வழங்கலின் விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தது, நிச்சயமற்ற தன்மைக்கு எதிரான மீள்திறனை மேம்படுத்தியது, மற்றும் நிலையான வளர்ச்சிக்கான நிதியளிக்கும் வங்கியின் திறனை அதிகரித்தது.

சிறப்பம்சங்கள்

வலுவான இலாபத்தன்மை

வரிக்கு முந்திய இலாபம்	ரூ. 64.4 பில்.
வரிக்கு பிந்திய இலாபம்	ரூ. 40.2 பில்.

வலிமை மற்றும் நிலைத்தன்மை

மொத்த சொத்துக்கள்	ரூ. 3.7 டிரில்லியன்
மொத்த மூலதனப் போதுமான விகிதம்	16.5%

வலுவான திரவத்தன்மை மற்றும் நிதி நிலைமை

திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம்	ரூபாய்	263.3%
	அனைத்து நாணயங்க-ளுக்கும்	218.5%
நிகர நிலையான நிதி விகிதம்		162.4%

ஆரோக்கியமான சொத்துக்களின் தரம்

நிலை 3 கடன்களின் விகிதம் (அரச நிறுவனங்கள் தவிர)	5.2%
நிலை 3 மதிப்பிழப்பு காப்பீட்டு விகிதம் (அரச நிறுவனங்கள் தவிர)	62.2%

நிதிச் செயற்திறன்

குழும நிதியியல் செயற்திறன்

2025-ஆம் ஆண்டில், குழுமம் வலுவான நிதியியல் செயற்திறனை பதிவுசெய்து ஒருங்கிணைந்த வரிக்கு முந்தைய இலாபம் ரூ. 71.1 பில்லியனாகவும், வரிக்குப் பிந்திய இலாபம் ரூ. 43.5 பில்லியனாகவும் அறிக்கையிட்டது. இது 2024-ஆம் ஆண்டில் வரிக்கு முந்திய இலாபத்தில் 49.4% மற்றும் வரிக்குப் பிந்திய இலாபத்தில் 51.2% என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் குறிக்கிறது. இது குழுமம் முழுவதும் மேம்பட்ட செயற்பாட்டுத் திறன், வலுவான முக்கிய வருவாய்கள் மற்றும் கட்டுக்கோப்பான செயலாக்கம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. ஆண்டின் இறுதியில், குழுமத்தின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 4.0 டிரில்லியன் என்ற குறிப்பிடத்தக்க மைற்கல்லைத் தாண்டியது. அதேவேளையில், நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 2.0 டிரில்லியனை எட்டியதுடன், வைப்புத்தொகைகள் ரூ 3.4 டிரில்லியனாக அமைந்தன. இது, கடன்கள் மற்றும் முற்பணங்களில் 20.1% மற்றும் வைப்புத்தொகைகளில் 14.7% என ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

வங்கியின் நிதியியல் செயற்திறன்

மொத்த வருமானம்

வங்கியின் மொத்த வருமானம், ஆண்டுக்கு 3.8% வளர்ச்சி பெற்று, ரூ.382.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியானது, நிதியளிக்கப்பட்ட மற்றும் நிதியளிக்கப்படாத வருமான வழிகள் ஆகிய இரண்டாலும் உந்தப்பட்டது. குறிப்பாக சில்லறை, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனப் பிரிவுகளில் கடன் விரிவடைந்ததால் வட்டி வருமானம் பயனடைந்தது அதே நேரத்தில், வர்த்தக நிதி, பணம் அனுப்புதல், அட்டைகள் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவைகளில் அதிகரித்த செயற்பாடுகளால் நிதிசாரா வருமானம் ஆதரிக்கப்பட்டது.

நிகர வட்டி வருமானம்

நிகர வட்டி வருமானம் (NII) ரூ.142.4 பில்லியனாக கணிசமாக அதிகரித்து, ஆண்டுக்கு 32.8% வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. சந்தை வட்டி விகிதங்கள் சரிந்ததற்கு ஏற்ப, அதிக செலவுள்ள நிலையான வைப்புத்தொகைகள் குறைந்த விகிதங்களில் மறுமதிப்பீடு செய்யப்பட்டதால், அந்த ஆண்டில் வட்டிச் செலவுகள் கணிசமாகக் குறைந்ததே இந்த வலுவான முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்தது. இதன் விளைவாக, நிகர வட்டி எல்லை 2024-ல் இருந்த 3.4%இலிருந்து 4.1%ஆக மேம்பட்டு, முக்கிய வங்கி வருவாயின் தரத்தையும் நிலைத்தன்மையையும் வலுப்படுத்தியது.

நிகர வட்டி வருமானம்



நிதியல்லா வருமானம்

மொத்த நிதிசாரா வருமானம் 30.7% அதிகரித்து ரூ.23.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது, கட்டண அடிப்படையிலான வருமான வழிகளை வலுப்படுத்துவதிலும், பாரம்பரிய கடன் வழங்குதலுக்கு அப்பாற்பட்ட வருவாய் ஆதாரங்களைப் பல்வகைப்படுத்துவதிலும் வங்கியின் தொடர்ச்சியான கவனத்தைப் பிரதிபலிக்கிறது. மொத்த நிதிசாரா வருமானத்தில் 70.0%-க்கும் அதிகமான வருமானம், நிகரக் கட்டணம் மற்றும் தரகு வருமானம் மூலம் ஈட்டப்பட்டது இது 2025-ஆம் ஆண்டில் 15.8% வளர்ச்சி கண்டது. வர்த்தக நிதி, அட்டை சார்ந்த பரிவர்த்தனைகள், பணம் அனுப்புதல் மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவைகள் ஆகியவற்றில் அதிகரித்த அளவுகளே இந்த வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக அமைந்தன.

நிதிசாரா வருமானம்



மொத்த செயற்பாட்டு வருமானம்

மொத்த செயற்பாட்டு வருமானம் 32.5% அதிகரித்து, 2024-ல் ரூ. 125.2 பில்லியனில் இருந்து 2025-ல் ரூ. 165.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. இந்த வலுவான செயலாற்றுகைக்கு, முதன்மையாக நிகர வட்டி வருமானத்தில் ஏற்பட்ட உறுதியான அதிகரிப்பும், அதற்கிணங்க மேம்பட்ட இலாப விகிதமும், அத்துடன் நிகரக் கட்டணம் மற்றும் தரகு வருமானத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியும் காரணமாக அமைந்தன.

மொத்த செயற்பாட்டு வருமானம்



குறைப்பு கட்டணங்கள்

2024-ஆம் ஆண்டில் ரூ. 5.5 பில்லியனாக இருந்த மொத்தகுறைப்பு கட்டணங்கள், 2025-ஆம் ஆண்டில் ரூ. 16.0 பில்லியனாக உயர்ந்தன. திட்வா புயலின் தாக்கத்திற்குப் பதிலளிக்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள், நிலவும் பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முகாமைத்துவ மேலடுக்குகளை வலுப்படுத்த வேண்டிய அவசியம், மற்றும் சில்லறை மற்றும் தனியார் பெருநிறுவனப் பிரிவுகளில் துரிதப்படுத்தப்பட்ட கடன் வளர்ச்சியால் எழும் அதிகரித்த எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு ஒதுக்கீடுகள் ஆகியவற்றால் இந்த அதிகரிப்பு முக்கியமாக உந்தப்பட்டது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான மதிப்புக்குறைவுச் செலவுகள், ரூ. 12.8 பில்லியனாக இருந்ததோடு 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூ. 16.3 பில்லியனாக உள்ளது.

இருப்பினும், சர்வதேச கடன் பத்திரங்களின் (ISBs) மறுசீரமைப்பைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டில் ரூ. 8.8 பில்லியன் மதிப்பிலான ஒரு குறைப்பு கட்டண மறுதலையாக்கம் இடம்பெற்றது. இந்த விதிவிலக்கான அம்சத்தைத் தவிர்த்துப் பார்க்கையில், 2025-ஆம் ஆண்டில் மதிப்பிழப்புக் கட்டணங்களில் ஏற்பட்ட அடிப்படை அதிகரிப்பு ரூ. 1.8 பில்லியன் என்ற அளவில் ஒப்பீட்டளவில் மிதமாக இருந்தது. இது, ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியை விட, அடிப்படை கடன் செலவுப் போக்கு மிகவும் நிலையானதாக இருப்பதைக் காட்டுகிறது. இது வங்கியின் விவேகமான இடர் முகாமைத்துவ அணுகுமுறையையும், போதுமான ஒதுக்கீட்டுப் பாதுகாப்பு நிதிகளைப் பராமரிப்பதில் அதன் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

மொத்த குறைப்பு கட்டணங்கள்



மொத்த செயற்பாட்டுச் செலவுகள்

வணிக விரிவாக்கத்திற்கு ஏற்ப கட்டுப்படுத்தப்பட்ட செலவு வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், 2025-ஆம் ஆண்டில் மொத்த இயக்கச் செலவுகள் 5.5% அதிகரித்தன. முக்கிய வணிகப் பிரிவுகளில் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகளின் காரணமாக, பணியாளர் செலவுகள் 6.7% அதிகரித்தன.

செலவுகள் அதிகரித்தபோதிலும், வங்கி வலுவான செலவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தது. இதன் பிரதிபலிப்பாக, அதன் செலவு-வருமான விகிதம் 2024-ல் 50.3%-லிருந்து 2025-ல் 40.1%-ஆகக் குறைந்து, குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணம் மொத்த செயற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியாகும். மேலும் இது வங்கியின் மேம்பட்டு வரும் செயற்பாட்டு வேகம் மற்றும் வினைத்திறனைப் பிரதிபலிக்கிறது.

செயற்பாட்டுச் செலவுகள்



இலாபத்தன்மை

2025-ஆம் ஆண்டில் வங்கி வலுவான நிதிச் செயலாற்றுகையை வெளிப்படுத்தியதுடன், வரிக்கு முந்திய இலாபம் ரூ. 64.4 பில்லியனாக அதிகரித்து, ஆண்டுக்கு 54.9% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

வரிக்குப் பிந்திய இலாபம், ஆண்டில் 60.4% வளர்ச்சி பெற்று, ரூ. 40.2 பில்லியனாக உயர்ந்தது. இந்த வலுவான நிகர இலாபச் செயற்பாடு, அதிகரித்த மதிப்புக்குறைவுச் செலவுகளை ஏற்றுக்கொண்டு, தனது வரிக் கடமைகளை நிறைவேற்றும் அதே வேளையில், நிலையான வருவாயை ஈட்டுவதற்கான வங்கியின் திறனை வெளிப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக, வரிக்கு முந்திய இலாபம் (PBT) மற்றும் வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) ஆகிய இரண்டிலும் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம், மக்கள் வங்கியின் வலுவான நிதி நிலை, மேம்பட்ட வருவாய் தரம் மற்றும் வளர்ச்சி, செயற்திறன், நீண்டகால மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றில் அதன் தொடர்ச்சியான கவனம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

இலாபத்தன்மை

ரூ. பில்



நிதி நிலை

மொத்த சொத்துக்கள்

2025 ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூ. 3.7 டிரில்லியன் ஆக இருந்தது, இது முந்தைய ஆண்டை விட 12.5% வளர்ச்சியைக் குறிக்கிறது. நிகரக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சி மற்றும் முதலீட்டுத் தொகுப்பின் விரிவாக்கம் ஆகியவற்றால் இந்த அதிகரிப்பு முக்கியமாக ஏற்பட்டது. நிகர கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 208.7 பில்லியன் அதிகரித்துள்ள நிலையில், மொத்த முதலீடுகள் ரூ. 163.2 பில்லியன் அதிகரித்துள்ளன. நிகரக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூ. 208.7 பில்லியன் அளவுக்கு அதிகரித்துள்ளன, அதே நேரத்தில் மொத்த முதலீடுகள் ரூ. 163.2 பில்லியன் அளவுக்கு உயர்ந்துள்ளன. இது கடன் வழங்கல் மற்றும் திரவத்தன்மை வருவாய் சொத்துக்கள் ஆகிய இரண்டிலும் சமச்சீரான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. ஐந்தொகையின் தொடர்ச்சியான விரிவாக்கம், நிதி நிலைத்தன்மையைப் பேணிக்கொண்டே வளரும் வங்கியின் திறனை வெளிப்படுத்துகிறது.



கடன்கள் மற்றும் முற்பணங்கள்

2025-ஆம் ஆண்டில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 13.0% அதிகரித்து, ஆண்டின் இறுதியில் ரூ. 1.9 டிரில்லியனை எட்டியது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடனான தொடர்பைத் தவிர்த்துப் பார்க்கையில், மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 27.5% என்ற வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. வர்த்தக நிதி, அடகு மற்றும் நீண்ட காலக் கடன்களில் ஏற்பட்ட வலுவான உத்வேகத்தால் இந்த வளர்ச்சி ஏற்பட்டது. இது, பொருளாதாரம் முழுவதும் உள்ள குறுகிய கால பணப்புழக்கத் தேவைகள் மற்றும் நீண்ட கால முதலீட்டுத் தேவை ஆகிய இரண்டிற்கும் பதிலளிக்கும் வங்கியின் திறனைப் பிரதிபலிக்கிறது.

கடன் தொகுப்பை மறுசீரமைக்கும் தனது மூலோபாய நோக்கத்திற்கு இணங்க, வங்கியானது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் தனது கடன் வெளிப்பாட்டை 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த 28.7% இலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 19.6% ஆகக் குறைத்துள்ளது. இந்தத் திட்டமிட்ட மாற்றம், தனியார் துறை கடன் வழங்குதலில் அதிக கவனம் செலுத்துவதைப் பிரதிபலிக்கிறது இதன்மூலம் முதலீட்டுத் தொகுப்பு பல்வகைப்படுத்தலை மேம்படுத்தி, செறிவு அபாயத்தைக் குறைக்கிறது.

சில்லறை கடன் வழங்கும் அமைப்பு (RLOS) மற்றும் பெருநிறுவன கடன் வழங்கும் அமைப்பு (CLOS) ஆகியவற்றின் ஆதரவுடன், கடன் வழங்கல் மற்றும் கண்காணிப்பு செயல்முறைகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான மேம்பாடு, கடன் வழங்கும் நேரத்தை மேம்படுத்தவும், கடன் மதிப்பீட்டுத் தரங்களை வலுப்படுத்தவும், செயல்பாட்டுத் திறனை அதிகரிக்கவும் வங்கிக்கு உதவியது. இந்த முன்னெடுப்புகள், அந்த ஆண்டில் சில்லறை, பெருநிறுவன, வர்த்தக, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) மற்றும் மேம்பாட்டு நிதி ஆகிய பிரிவுகளில் வணிக வளர்ச்சிக்கு ஆதரவளித்தன.

மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்



மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் – சேவை வாரியான பகுப்பாய்வு



மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் – துறை வாரியான பகுப்பாய்வு



மொத்த வைப்புத்தொகை

மாறிவரும் சந்தை நிலவரங்களுக்கு மத்தியிலும் வங்கியின் நிதி ஆதாரத்தில் ஏற்பட்டுள்ள சீரான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், வாடிக்கையாளர் வைப்புத்தொகையானது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த ரூ. 2.9 டிரில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 13.1% அதிகரித்து ரூ. 3.2 டிரில்லியனாக உயர்ந்துள்ளது. வங்கியின் மொத்த நிதியுதவியில் சுமார் 87.1% வைப்புத்தொகைகளாக இருந்தன, இது வங்கியின் முக்கிய நிதி கட்டமைப்பின் வலிமையையும் நிலைத்தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

வங்கியின் விரிவான கிளை வலையமைப்பு, இத்துறையிலேயே மிகப்பெரியது, இது நகர்ப்புற, புறநகர்ப்புற மற்றும் கிராமப்புற சந்தைகளில் ஆழமான ஊடுருவலை சாத்தியமாக்கியதுடன், வலுவான மற்றும் நீடித்த வாடிக்கையாளர் உறவுகளையும் வளர்த்தது. குறைந்த வட்டி விகிதச் சூழலில், வங்கியானது தனது குறைந்த செலவிலான வைப்புத்தொகைத் தளத்தையும் வலுப்படுத்தியது. இதன் விளைவாக, நடப்புக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் (CASA) விகிதம் 2024-ல் 34.4%லிருந்து 2025-ல் 34.6%ஆக மேம்பட்டது. இது, சிறு வைப்புத்தொகைகளைத் திரட்டுவதற்கும் நிதியளிப்புத் திறனை மேம்படுத்துவதற்குமான வெற்றிகரமான முயற்சிகளைப் பிரதிபலிப்பதோடு, நிகர வட்டி வரம்புகளுக்கும் சாதகமாகப் பங்களிக்கிறது.

மொத்த வைப்புத்தொகையில் 86.7% ஆக உள்ளூர் நாணய வைப்புத்தொகைகள் ஆதிக்கம் செலுத்தின. இதன் மூலம், அந்நிய செலாவணி விகித ஏற்ற இறக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறைக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் நிலைத்தன்மைக்கு ஆதரவளிக்கப்பட்டது. அந்நிய செலாவணி வைப்புத்தொகைகள் 2024-ல் 11.1%லிருந்து 13.3%ஆக அதிகரித்தன. இது, மேம்பட்ட உள்வரவுகளையும், அந்நிய செலாவணிச் சலுகைகள் மீதான வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் நம்பிக்கையையும் பிரதிபலித்தது. சில்லறை, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பிரிவுகளில் வங்கியின் பரந்த வைப்பாளர் தளம், நிதி திரட்டும் திறனை மேலும் வலுப்படுத்தி, ஒருமுகப்படுத்தல் அபாயத்தைக் குறைத்தது. டிஜிட்டல் வழிகள் மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட வைப்புத்தொகை சேவைகள் மீதான தொடர்ச்சியான கவனம், வைப்புத்தொகையைத் திரட்டுவதற்கும் தக்கவைப்பதற்கும் உதவியது.

மொத்த வைப்புத்தொகை



மொத்த உரிமைமுதல்

மொத்த உரிமைமுதல் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 182.0 பில்லியனிலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 219.0 பில்லியனாக அதிகரித்து, 20.4% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு முக்கியக் காரணம், பங்கிலாபங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட ரூ. 3.6 பில்லியன் விசேட வரி ஆகியவற்றைக் கழித்த பிறகு கிடைத்த ரூ. 40.2 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபமாகும்.

இலாபத்தைத் தக்கவைப்பதில் வங்கியின் விவேகமான அணுகுமுறை, குறிப்பாக அதன் ஒப்பீட்டளவில் மெல்லிய பங்கு மூலதனக் கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு, மூலதன அடித்தளத்தை வலுப்படுத்துவதில் அதன் மூலோபாய முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. வருவாயின் அதிக விகிதத்தைத் தக்கவைத்துக் கொள்வது, ஒழுங்குமுறை மூலதனத் தேவைகளுடன் தொடர்ச்சியான இணக்கத்தை உறுதிசெய்த அதே வேளையில், வணிக வளர்ச்சிக்கு ஆதரவளித்தது. பங்கு வீதத்தில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு, அதிர்ச்சிகளைத் தாங்குவதற்கும் எதிர்காலச் சொத்து விரிவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் வங்கியின் திறனை மேம்படுத்தியது.

மொத்தப் உரிமைமுதல்



மூலதனம் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம்

உள்நாட்டு ரீதியாக முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கி (D-SIB) என்ற வகையில், மக்கள் வங்கி அதன் பொதுப் பங்கு மூலதனம் (CET 1), அடுக்கு 1 மூலதனம் (Tier 1) மற்றும் மொத்த மூலதனம் ஆகியவற்றுக்கான ஒழுங்குமுறை விகிதங்களை முறையே 8.0%, 9.5% மற்றும் 13.5% ஆகப் பேண வேண்டியுள்ளது. நிதிநிலை அறிக்கையின் நிதானமான முகாமைத்துவத்தின் ஊடாகவும், அரச பிணையங்கள் மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்கு இடையிலான மூலோபாய நிதி ஒதுக்கீட்டின் மூலமும், வங்கி 2025 ஆம் ஆண்டு முழுவதும் ஒழுங்குமுறை வரம்புகளுக்கு மேல் வலுவான மூலதன மற்றும் திரவத்தன்மை நிலைகளைப் பேணியது. இம்முயற்சியானது வங்கியின் இலாபத்தன்மைக்கு வலுசேர்த்ததுடன், முறையான மூலதனப் பயன்பாட்டையும் இடர் வெளிப்பாடுகளின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தையும் உறுதிப்படுத்தியது.

2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு, வங்கியின் மூலதன விகிதங்கள் பின்வருமாறு அறிக்கையிடப்பட்டுள்ளன:

பொதுப் பங்கு மூலதன விகிதம் (CET 1 Ratio): 11.8%
அடுக்கு 1 மூலதன விகிதம் (Tier 1 Ratio): 12.2%
மொத்த மூலதன விகிதம் (Total Capital Ratio): 16.5%

இவ்விகிதங்கள், குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு மேலதிகமாகப் போதுமான அளவிலான இடர் தாங்கு திறனை வெளிப்படுத்துகின்றன. இது எதிர்கால வணிக வளர்ச்சியினை, குறிப்பாகத் தனியார் துறைக்கான கடன் வழங்கல்களை முன்னெடுப்பதற்குத் தேவையான இழப்புத் தாங்கும் வலுவை (Loss-absorbing capacity) வங்கிக்கு வழங்குகின்றது.

வங்கியின் வலுவான நிதித் தளம் மற்றும் நிதானமான திரவத்தன்மை இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் ஊடாக, ஆண்டு முழுவதும் திரவத்தன்மை நிலைகள் மிக உறுதியாகப் பேணப்பட்டன. அனைத்து நாணயங்களுக்குமான திரவத்தன்மை ஈட்டு விகிதம் 218.5% ஆகவும், ரூபாவுக்கான திரவத்தன்மை ஈட்டு விகிதம் 263.3% ஆகவும் காணப்பட்டன இவை இரண்டும் 100.0% எனும் ஒழுங்குமுறை குறைந்தபட்ச வரம்பை விட கணிசமான அளவு உயர்வான மட்டங்களாகும். அத்துடன், 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிகர நிலையான நிதி விகிதமானது 162.4% ஆகக் காணப்பட்டது. இது வங்கியின் சொத்துத் தளத்திற்கு நிதி வழங்குவதற்குத் தேவையான நீண்டகால நிலையான நிதியாதாரங்களைக் கொண்ட ஒரு ஆரோக்கியமான நிதிக் கட்டமைப்பை வெளிப்படுத்துகின்றது.

ஒட்டுமொத்தமாக, வங்கியின் வலுவான மூலதனம் மற்றும் திரவத்தன்மை அளவீடுகள் (Metrics), வங்கியின் நிதி மீள்திறன் (Financial resilience), நிதானமான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் சாத்தியமான பொருளாதார மற்றும் சந்தை நிச்சயமற்ற நிலைகளை எதிர்கொண்டு வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வங்கியின் ஆற்றல் என்பவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன

2025 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் பெறுமதி உருவாக்கத்தில், நிதி மூலதனமானது ஒரு பிரதான உந்துசக்தியாக விளங்கியது. வலுவான இலாபத்தன்மை, நிலையான நிதிநிலை அறிக்கை வளர்ச்சி, உயர்தர சொத்துத் தரம், மேம்படுத்தப்பட்ட செயல்பாட்டுத் திறன் மற்றும் உறுதியான மூலதன மற்றும் திரவத்தன்மை பாதுகாப்பு வரம்புகள் ஆகியன ஒன்றிணைந்து வங்கியின் நிதி மீள்திறனை மேலும் வலுப்படுத்தின. இத்தகைய பலங்கள், வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதி வழங்குவதற்கும் வழிவகுத்ததோடு மட்டுமல்லாமல், நம்பிக்கையைப் பாதுகாக்கவும், வளர்ச்சியைத் தக்கவைக்கவும் மற்றும் தேசத்திற்குச் சேவையாற்றும் முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த அரச வங்கி எனும் தனது பங்களிப்பைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் வங்கிக்குத் துணையாக அமைந்தன.

உற்பத்தி மூலதனம்

மக்கள் வங்கியானது கிளைகளின் நாடளாவிய வலையமைப்பு சேவை நிலையங்கள், சுய வங்கிச் சேவை அலகுகள், ATMகள் மற்றும் காசு வைப்பு இயந்திரங்கள் போன்ற வாடிக்கையாளர் தொடர்பு மையங்களையும் இயக்குவதுடன் இவை வங்கியின் உற்பத்தி மூலதனத்தினை உருவாக்குகின்றன. டிஜிட்டல் வங்கிச் சேவை இன்னும் செயற்படாதிருக்கும் தொலைதூரக் கிராமிய சமுதாயங்களில் எமது பிரசன்னமானது நிலைத்த பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கி நிதி உள்ளடக்கும் தன்மையினையும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி மற்றும் நுண் நிதித் துறையின் வளர்ச்சியினை வசதிப்படுத்துகின்றது.

எமது கவனம்

நாம் எமது உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்துவதிலும், எமது வாடிக்கையாளர் தொடர்பு மையங்களை விரிவுபடுத்துவதிலும் கவனம் செலுத்தி தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் ஆற்றலில் முதலீடு செய்துள்ளோம். இது திட்டமிடப்பட்ட மூலதனச் செலவுக்கு வழியமைத்து உறுதியான நிதி நிலைப்பாட்டினால் நிதியிடப்பட்டுள்ளது.

எமது தந்திரோபாயம்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனம் என்ற ரீதியில் வங்கியானது அதன் 65 வது வருடத்தினை அணுகும் அதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முடிவின் போது குழுமச் சொத்துக்களில் 4 டிரில்லியன் இலங்கை ரூபாவினை விஞ்சியுள்ளதுடன் நாம் எமது அனைத்து இயக்கச் செயற்பாடுகளையும் கொழும்பு நகரின் மையப் பகுதியில் உள்ள புதிய தலைமையலுவலகமான பீபிள்ஸ் டவரில் ஒன்றுசேர்த்திருக்கின்றோம். வங்கியானது நாடு முழுவதும் 740 இற்கும் மேற்பட்ட கிளை மற்றும் சேவை வலையமைப்பினை இயக்கி வருவதுடன் அவற்றில் 8,000 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் சேவையாற்றி வருவதுடன் 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்குகின்றது. எமது உட்கட்டமைப்பின் உச்சமாக, எமது சுற்றாடல் நிலைபேறானதன்மைக் கொள்கைக்கு இயைபுற்றவாறு பசுமைக் கட்டிடக் கருத்தியலுக்கு முற்று முழுவதும் அமைவாக பீபிள்ஸ் டவர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குடைய முகாமைத்துவத்தினதும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலைச் சூழலினதும் முழு வடிவமாக இந்தக் கட்டிடம் அமைந்துள்ளதுடன் வங்கியின் பயிற்சிக் கல்லூரி இதில் அமைந்துள்ளதால் இது மனித மூலதனத்தின் தொடர்ச்சியான அபிவிருத்தியாகவும் காணப்படுகின்றது.

நாம் கிளைகளையும் சுய சேவை வலையமைப்பினையும் தரமுயர்த்தி, டிஜிட்டல் மற்றும் SME சேவைகளுக்கு முன்னுரிமையளித்து, வியாபார மாதிரியினை மாற்றியமைத்து, வலையமைப்பு சீராக்கலையும் நவீனமயப்படுத்தலையும் சமகாலத்தில் நிறைவேற்றியுள்ளோம்.

சிறப்பம்சங்கள்

கிளைகள் மற்றும் சேவை மையங்கள்	746
சுய வங்கிச் சேவை அலகுகள்	307
பசுமைக் கட்டிடங்கள்	141
பாவனையில் உள்ள அட்டைகள்	4.4 மில்லியன்
ATM, CDM, CRM மூலமான கொடுக்கல் வாங்கல் பெறுமதி	ரூ. 2,406 பில்லியன்
வழங்கப்பட்ட டிஜிட்டல் கடன்கள்	ரூ. 217.9 பில்லியன்
புதிய டிஜிட்டல் கணக்குகள்	1.0 மில்லியன்

வாடிக்கையாளர் தொகுதி

சனத்தொகையில்

65.6%

தாக்கத்தை ஏற்படுத்திய முக்கியமான விடயங்கள்

பாதுகாப்பு மற்றும் சௌகரியம்

பரந்த கிளையமைப்புடன் பெருநிறுவனங்கள் முதல் தனிநபர்கள் வரையில் வாடிக்கையாளர் தளத்தினைக் கொண்டுள்ள ஒரு வங்கி என்ற ரீதியில், எமது வளாகத்திலும் எமது முறைமைகள் மூலமாகவும் பாதுகாப்பினை வழங்குவது எமது தலையாய கடமையாகும்.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

டிஜிட்டல் தலைமைத்துவம்

N O I S E

தேவைகள் NEEDS	வாய்ப்புக்கள் OPPORTUNITIES	மேம்பாடுகள் IMPROVEMENTS	பலங்கள் STRENGTHS	விதிவிலக்குகள் EXCEPTIONS
வலையமைப்பு உள்ளடக்க மீதி மாறிவரும் கொடுக்கல் வாங்கல் பாங்குகளைப் பிரதிபலிப்பதற்காக நகரங்களில் எமது கிளைகளின் கட்டமைப்பினைச் சீரமைத்து கிராமப்புறங்களிலும் சேவைகள் முறையாகக் கிடைக்காத இடங்களிலும் நேரடி வங்கிச் சேவைக்கான அணுகலைப் பேணி வருகின்றோம்	**ஒரு மையமாக பீபிள்ஸ் டவரைப் பயன்படுத்தல்** மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடல், பயிற்சி மற்றும் வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பற்ற செயற்பாடுகள் என்பன பணிகள் இரட்டிப்பாவதைக் குறைத்து, கொடுக்கல் வாங்கல் ஒன்றுக்கான குறைந்த செயற்பாட்டுச் செலவினை ஏற்படுத்தி விரைவாகத் தீர்மானம் வகுத்தலை ஏற்படுத்தலாம்.	**மிகையாக இருக்கும் அசையாச் சொத்துக்களை வருமானம் தருபவையாக்கி கிளைகளில் இருந்து உச்சப் பயன்பெறல்** குறைவான பயன்பாடுமிக்க கிளைகளை ஆலோசனை வழங்கும் மையங்களாக அல்லது SME மையங்களாக அல்லது இடத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்காக பகிரப்படும் சமுதாயத் தளங்களாக மாற்றுதல்	**மூலதனச் செலவினங்களுக்கான வலுவான நிதி ஆதரவு** 2025 ஆம் ஆண்டுக்கான மேம்பட்ட பெறுபேறுகளும் மூலதன விகிதாசாரங்களும் உற்பத்திச் சொத்துக்களில் உயர் முதலீட்டினை இயலுமாக்கின.	**ஒன்றிணைக்கையில் ஏற்படும் சேவை இடைவெளி அபாயநேர்வுகள்** வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பற்ற செயற்பாடுகளை மத்தியமயப்படுத்துகையில் மாற்றங்களை அவசர கதியில் மேற்கொண்டால் அது தற்காலிக சேவைத் தேக்கத்தினை அல்லது பணிகளைச் செயற்படுத்துவதில் தேக்கத்தினை உருவாக்கலாம்.
மீண்டெழுந்தன்மைமிக்க பிரதான முறைமைகள் அதிகரித்துவரும் டிஜிட்டல் செயற்பாடுகளின் செறிவுக்கும் மத்தியமயப்படுத்தப்பட்ட இயக்கங்களுக்கும் பொருந்தும் வகையில் மைய வங்கியியலையும் சைபர் பாதுகாப்பினையும் வியாபாரத் தொடர்ச்சி ஆற்றலையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.	**சுய சேவை வலையமைப்பினை விரிவுபடுத்தல்** கிளைகளில் இருந்து வழமையான கொடுக்கல் வாங்கலை நகர்த்தி வாடிக்கையாளர் சௌகரியத்தினை முன்னேற்றுவதற்காக ATMகள், CDMகள் மற்றும் SBUக்களை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்தல்.	**அனர்த்த மீளல் மற்றும் மேலதிகப் பாதுகாப்பு முறைமைகளை வலுப்படுத்தல்** மத்தியமயப்படுத்தப்பட்ட இயக்கங்களைப் பாதுகாப்பதற்காக புவியியல் ரீதியாகப் பரவலடைந்த தரவுச் சேமிப்புக்களிலும் வலுப்படுத்தப்பட்ட தரவு – மைய இணைப்புக்களிலும் நாம் முதலீடு செய்துள்ளோம்.	**புலப்படத்தக்க தேசிய தோற்றம்** விரிவான கிளை வலையமைப்பும் புதிய பீபிள்ஸ் டவரும் வியாபாரச் சின்னத்திற்கான நம்பிக்கையினையும் பௌதிக ரீதியாக அணுகக்கூடியதாக இருப்பதையும், குறிப்பாகக் கிராமியச் சந்தைகளில் அணுகக்கூடியதாக இருப்பதையும் வலுப்படுத்துகின்றன.	**கிராமப் பிரதேசங்களில் டிஜிட்டல் பிரிவு** சுய சேவைகளையும் டிஜிட்டல் மார்க்கங்களையும் நோக்கிய பாரிய மாற்றத்தின் போது இணையத் தொடர்புகள் குறைவாகக் கிடைக்கின்ற பிரதேசங்களில் பௌதிக அணுகலைப் பேணாவிட்டால் அது வாடிக்கையாளர்கள் விலக்கிவைக்கப்படும் அபாயநேர்வினை ஏற்படுத்துகின்றது.
செயற்பாட்டு ஒருங்கிணைப்பு உதவி சேவைகளுக்கு இடையூறின்றி, பீபிள்ஸ் டவர் மத்தியமயப்படுத்தலுக்கு உதவுவதற்கான வசதிகள், பௌதிக வளங்கள் மற்றும் பணியாளர்களின் மீள்ஒதுக்கீடுகள்	**மிகையாக இருக்கும் அசையாச் சொத்துக்களை வருமானம் தருபவையாக்கி கிளைகளில் இருந்து உச்சப் பயன்பெறல்** குறைவான பயன்பாடுமிக்க கிளைகளை ஆலோசனை வழங்கும் மையங்களாக அல்லது SME மையங்களாக அல்லது இடத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்காக பகிரப்படும் சமுதாயத் தளங்களாக மாற்றுதல்	**கட்டம் கட்டமான தொழிற்படை நிலைமாற்றம்** சேவைக் கலப்பினை மேம்படுத்தும் அதேவேளை, தொழில்வாய்ப்பினைப் பாதுகாக்க ஆலோசனை வழங்குவதற்கும் SMR உறவுகளுக்கும் டிஜிட்டல் உதவி வகிபாத்திரத்திற்கும் கிளைப் பணியாளர்களைத் தக்கவைத்தல்.	**தெளிவான உபாயமார்க்கப் பாதை** கிளைகளை நவீனமயப்படுத்துவதிலும் சுய சேவை வழிகளை விரிவுபடுத்துவதிலும் உதவிச் செயற்பாடுகளை மத்தியமயப்படுத்துவதிலும் சமகாலத்தில் கவனம் செலுத்துவது ஒத்திசைவான முதலீட்டு முன்னுரிமைகளை வழங்குகின்றது.	**ஓரிடத்தில் குவிப்பதில் உள்ள அபாயநேர்வு** மிகவும் இன்றியமையாத செயற்பாடுகளை பீபிள்ஸ் டவரில் மத்தியமயப்படுத்துகையில் அந்த இடத்திற்குப் போதிய மாற்றுப் பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்காதிருக்கையில் அங்கே பௌதிக இடர்கள் அல்லது சைபர் இடர்கள் ஏற்படும் அபாயநேர்வு அதிகரிக்கின்றது.

வங்கி பங்களிப்பு வழங்கிய ஐநா நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

8 DECENT WORK AND ECONOMIC GROWTH

அணுகத்தக்க சேவைகளை வழங்கி, பெறுமதியினை உருவாக்கி, உள்ளடக்கமிக்க பொருளாதார வளர்ச்சியினையும் தொழில் உருவாக்கத்தினையும் உந்துவதற்காக வங்கி பௌதிக உட்கட்டமைப்பினையும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினையும் வலுப்படுத்தியது.

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

வங்கியின் துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல் உந்தம் புத்தாக்கத்திற்கும் புதிய தயாரிப்புக்களை உருவாக்குவதற்குமான அவகாசத்தினை உருவாக்கி மைய வங்கிச் சேவை முறைமையினைத் தரமுயர்த்தி வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்களில் பாதுகாப்பினையும் சௌகரியத்தினையும் வழங்குகின்றது.

10 REDUCED INEQUALITIES

சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மைகளைக் குறைப்பதற்கான ஒரு வழியாக நிதி உள்ளடக்கத்தினை உருவாக்கி, நாடளாவிய வாடிக்கையாளர் தொடர்பு மையங்கள் மூலமாக வங்கியானது நிதியினை அணுகுவதில் உள்ள சமூக ரீதியான சமத்துவமின்மைகளைக் குறைத்துள்ளது.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

தொடர்ச்சியான டிஜிட்டல்மயமாக்கம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியில் முதலீடு, பசுமை நிதி, மற்றும் இயற்கை மூலதனத்தின் பொறுப்புவாய்ந்த பாவனை பற்றிய விழிப்புணர்வினை உருவாக்கல் என்பவற்றின் மூலம் வங்கியானது பொறுப்புவாய்ந்த நுகர்வினையும் உற்பத்தியினையும் பற்றிப்பிடிக்கின்றது.

13 CLIMATE ACTION

காலநிலைப் பிரக்ஞையுடைய நடைமுறைகளை வங்கியின் பௌதிகச் சொத்துக்களிலும் தொழில்நுட்பச் சொத்துக்களிலும் ஒருங்கிணைத்து, நீண்ட காலப் பெறுமதியினை உருவாக்கி வங்கியானது மீண்டெழுந்தன்மையுடைய, நிலைபேறான உட்கட்டமைப்பினை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது.

சொத்து, ஆலை மற்றும் உபகரணம்

பசுமைக் கட்டிடக் கருத்தியலுக்கான மற்றும் சக்தி வினைத்திறனுக்கான எமது கடப்பாட்டினைப் பிரதிபலித்து, சொத்து, ஆலை மற்றும் உபகரணம் ஆகியவற்றில் நாம் தொடரான நிலைமாற்றமிக்க முதலீடுகளைப் பொறுப்பேற்றோம். வரலாற்றுச் சிறப்புமிக்க எமது பீபிள்ஸ் டவர் கட்டிடத்தினைப் பூர்த்தியாக்கியதற்கு மேலதிகமாக, கிளை வலையமைப்பு முழுவதினூடாகவும் நாம் தொழில்நுட்பத்திற்கும் பாதுகாப்பு உட்கட்டமைப்புக்கும் கணிசமான தரமுயர்த்தல்களை மேற்கொண்டோம். இந்த முன்னெடுப்புக்கள் எமது வியாபாரச் சின்னத்தின் பிரபல்யத்தினையும் பௌதிக விரிவாக்கத்தினையும் டிஜிட்டல் பிரசன்னத்தினையும் மேம்படுத்தி, பசுமைக் கட்டிடம் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்திற்கான உலகளாவிய நியமங்களுடன் வங்கியை ஒருங்கியைவித்தன.

சொத்து, ஆலை மற்றும் உபகரணம் 2025

ரூ. பில்.



சொத்து, ஆலை மற்றும் உபகரணம் 2025



- வங்கிக்குச் சொந்தமான காணி
- வங்கிக்குச் சொந்தமான கட்டிடம்
- நீண்ட காலக் குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணிகளில் உள்ள கட்டிடங்கள்
- மோட்டார் வாகனங்கள்
- தளபாடங்கள்
- இயந்திரம், உபகரணம், மற்றும் சுய வங்கிச் சேவை அலகுகள்
- கணினிகள்

எமது உற்பத்தி மூலதனத்தினை வலுப்படுத்தல்

பீபிள்ஸ் டவர் (People's Tower)

நிலைபேறானதன்மை மற்றும் நவீன வேலைத்தள நியமங்கள் என்பவற்றினைப் பிரதிபலிக்கும் அதி நவீன பசுமைக் கட்டிடக் கருத்தியலை ஒன்றிணைத்து நிர்மாணிக்கப்பட்ட வங்கியின் அடையாளச் சின்னமான பீபிள்ஸ் டவர் தலைமையலுவலகத்தினைக் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தமையே இந்த வருடத்தின் மைகற்கள் நிகழ்வாகும்.

இந்தச் சிறப்புமிக்க அடைவுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், நாம் எமது கிளை வலையமைப்பில் பல முக்கிய மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 9.2 பில்லியன் ரூபாவினை முதலீடு செய்துள்ளோம்.

கிளை வலையமைப்பில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு	அனைத்து வாடிக்கையாளர் தொடர்பு மையங்களிலும் மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை வசதிகள்
தரவு மையங்கள், வன்பொருட்கள், மற்றும் இடர்காப்பு உட்கட்டமைப்பு என்பவற்றுக்கான கணிசமான தரமுயர்த்தல்கள்	வலுப்படுத்தப்பட்ட இயக்கத் தயார்நிலை மற்றும் டிஜிட்டல் தயார்நிலை

கணினிச் செயற்பாட்டு நேரம், பதிற்செயற்பாட்டு நேரம், மற்றும் ஒன்லைன் மற்றும் மொபைல் வங்கிச்சேவை உதவிக்கான முதற் தொடர்புத் தீர்வு ஆகியவற்றில் அளவிடக்கூடிய முன்னேற்றங்களை வழங்குவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட நவீன கட்டிட தொழில்நுட்பம் மற்றும் ICT உட்கட்டமைப்பு. மிக முக்கியமான உபகரணங்களுக்கான தேவைமிகை இரட்டைத் தடையற்ற மின் விநியோகம், தரவு மற்றும் தொடர்பாடல் முறைமைகளைக் குளிரூட்டுவதற்கான சில்லர் அடிப்படையிலான (HVAC) மற்றும் மீண்டெழுந்தன்மையுடைய வலையமைப்பு முறைமைகள் என்பன இடையூறுகளைக் குறைத்து தளங்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பதை அதிகரித்துள்ளன. IP அடிப்படையிலான மேம்பட்ட உள்ளகத் தொடர்பாடல் முறைமையும் நுண்ணறிவடிப்படையில் செயற்படும் அழைப்புப் பாதையும் மத்தியமயப்படுத்தப்பட்ட கண்காணிப்பும் பதிற்செயற்பாட்டு நேரத்தினை மிகவும் வினைத்திறன்மிக்கவையாக ஆக்கின. தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மற்றும் பாதுகாப்பு அணி என்பவற்றுக்கு இடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பும் அதனுடன் சேர்ந்த அணுகல் மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாடும் சிசிடிவி கண்காணிப்பும் துரிதப்படுத்தப்பட்ட சம்பவ பதிற்செயற்பாடும் செயற்பாட்டின் மீண்டெழுந்தன்மைக்காக மேலும் வலுப்படுத்தப்பட்டன. பீபிள்ஸ் டவரில் உள்ள கட்டமைப்பு ரீதியான மற்றும் அடுக்கடுக்கான உட்கட்டமைப்பு நவீனத்துவம் வியாபாரத் தொடர்ச்சியினையும் அனர்த்தத் தயார்நிலையினையும் உறுதிப்படுத்துகின்றது.

பெரும் சம்பவங்களின் போது இன்றியமையாத செயற்பாடுகளையும் செயன்முறைகளையும் பாதுகாப்பதற்காக கடவத்தையில் உள்ள அனர்த்த மீளல் தளத்தில் ஒரு முறைசார் வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமை அமுலில் உள்ளது.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு

புதிய தலைமையலுவலகக் கட்டிடத்திலும் 66 கிளைகளிலும் 28 MW விநியோகிப்பதற்காக நாம் சூரிய PV மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியினை விரிவுபடுத்தினோம். சக்தி வினைத்திறன்மிக்க முன்னெடுப்புக்களும் சக்தி வினைத்திறன்மிக்க இன்வேடர் குளிர்சாதன முறைமைகளும் உயர் சக்தி கொண்ட LED ஒளியூட்டல் பொருத்துகைகளும் தலைமையலுவலகத்திலும் கிளை வலையமைப்பிலும் பயன்படுத்தப்பட்டன. இயற்கை மூலதனம் எனும் அத்தியாயத்தில் சக்தி நுகர்வு மற்றும் சக்திச் செறிவு என்பன விளக்கப்பட்டுள்ளன.

நிலைபேறானதன்மைக்கான பசுமைக் கட்டிடம்

பீபிள்ஸ் டவர் கட்டிடத்தில் பசுமைக் கட்டிட நடைமுறைகளையும் சக்தி வினைத்திறன் முன்னெடுப்புக்களையும் ஏற்று நடைமுறைப்படுத்தியமை நிலைபேறானதன்மையினை வலுப்படுத்தித் தேசிய சக்தி ஒப்பீட்டு மதிப்பீடு ஒழுங்குவிதிகளுடனான இயைபுறலை வலுப்படுத்தின, குறிப்பாக பகல் வேளை கிடைக்கும் வெளிச்சத்தினை உச்சபட்சம் பயன்படுத்துவதற்காக தாழ்வான கண்ணாடி யன்னல் சட்டகங்கள் இங்கு பொருத்தப்பட்டன. இவை குறைக்கப்பட்ட சக்தி நுகர்விற்கும் குறைவான காபன் உமிழ்வுக்கும் மேம்படுத்தப்பட்ட உள்ளகச் சூழல் தரத்திற்கும் பங்களிப்பு வழங்கின.

செயன்முறை டிஜிட்டல்மயமாக்கல்

வங்கியின் துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் முன்னெடுப்பு விநியோகத் திணைக்களத்திற்காக இலத்திரனியல் கொள்வனவுச் செயன்முறை முறைமையினை ஒருங்கிணைத்து வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தி, பணிப் பூர்த்திக் காலத்தினை மேம்படுத்தி செலவுக் கட்டுப்பாட்டினையும் மேம்படுத்தியது. முறைப்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பராமரிப்பு முறைமையை (FAM) பயன்படுத்தியதன் மூலம் பராமரிப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டன. ஒன்லைன் வாகனப் பதிவு முறைமையினைப் பயன்டுத்தியமை செலவுச் சிக்கனத்திற்கும் வழிப் பாதை வினைத்திறனுக்கும் தடுப்புப் பராமரிப்புத் திட்டமிடலுக்கும் பங்களிப்பு வழங்கியது.

2025 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி மூலதன முதலீடுகள் நிலைபேறானதன்மை, டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் வாடிக்கையாளரை மையப்படுத்திய வளர்ச்சி என்பவற்றுக்கான வங்கியின் உபாயமார்க்கமிக்க தொலைநோக்கினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. உற்பத்தி மூலதனத்திற்கான எமது சூழலுக்கு நட்பான அணுகுமுறையும் எமது தொழில்நுட்ப ஆற்றலை வலுப்படுத்தியமையும் செயற்பாட்டு வினைத்திறனை மாத்திரம் மேம்படுத்தாமல் சுற்றாடல் வகைப்பொறுப்புக்கான மற்றும் புத்தாக்கத்திற்கான எமது கடப்பாட்டினையும் கோடிட்டுக்காட்டுகின்றன.

எமது பல்வகைமைமிக்க பங்குதாரர்களுக்கான நீண்ட காலப் பெறுமதி உருவாக்கத்தில் எமது பௌதிக மற்றும் தொழில்நுட்பச் சொத்துக்கள் இன்றியமையாதவையாக உள்ளன.

எமது புவியியல் விரிவாக்கம்

GRI 2-6



வடக்கு

கிளைகள்	22
ATM	49
CDM/CRM	15
SBU	15

வடமத்திய

கிளைகள்	26
ATM	61
CDM/CRM	25
SBU	23

மத்திய

கிளைகள்	44
ATM	106
CDM/CRM	44
SBU	41

வடமேல்

கிளைகள்	32
ATM	83
CDM/CRM	30
SBU	26

ஊவா

கிளைகள்	26
ATM	57
CDM/CRM	19
SBU	19

மேல்

கிளைகள்	102
ATM	261
CDM/CRM	126
SBU	110

கிழக்கு

கிளைகள்	30
ATM	64
CDM/CRM	20
SBU	19

தென்

கிளைகள்	41
ATM	101
CDM/CRM	32
SBU	31

சபரகமுவ

கிளைகள்	32
ATM	62
CDM/CRM	26
SBU	23

தோற்றப்பாடு 2026

2026 ஆம் ஆண்டிலும் ஒருங்கிணைந்த நிலைபேண்தகைமை நிகழ்ச்சி நிரலை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். இதில், எமது நிகர-பூஜ்ஜியம் மற்றும் சேவை தொடர்ச்சிஇலக்குகளை அடைவதற்கு பல்வேறு செயற்திட்டங்கள் ஒன்றிணைக்கப்படும்.



தேசிய கொள்வனவுச் செயன்முறை வழிகாட்டல்களுடன் ஒருங்கிசைவு

விற்பனையாளர் தெரிவு மற்றும் ஒப்பந்த வாசகங்கள் உள்நாட்டு, சான்றுப்படுத்தப்பட்ட பசுமை விநியோகத்தர்களை முன்னுரிமைப்படுத்தி, சகல சேவைக் கொள்வனவுச் செயன்முறைகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் இயைபுறலை உறுதிப்படுத்து-வதற்காக வாழ்க்கைச்சுற்றுச் செலவு மற்றும் மீண்டெழுந்தன்மைத் தெரிவடிப்படை ஆகியவற்றினைத் தேவைப்படுத்தி தேசிய கொள்வனவுச் செயன்முறை விதிகளுடன் ஒருங்கிசையும்.

வங்கிக்குச் சொந்தமான சொத்துக்களில் சூரிய PV விரிவாக்கத்தினை அதிகரித்தல்

தேசிய மின்விநியோக வலையமைப்பில் தங்கியிருப்பதைக் குறைத்துச் செலவுச் சிக்கனத்தினை உச்சப்படுத்துவதற்காக சூரிய சக்தி விரிவாக்கம் தொடரப்படும்.

செயற்பாட்டு மீண்டெழுந்தன்மை மற்றும் உட்கட்டமைப்பு வினைத்திறன்

மிகை இருப்பு மின்வலு, வலையமைப்பு, மற்றும் குளிராக்கல் முறைமைகளில் நாம் முதலீடு செய்து, அனர்த்த மீளல் ஆற்றல்களை விரிவுபடுத்தி, வங்கிச் சேவைகளில் இடையூறு ஏற்படுகையில் மீட்பு நேரங்களைக் குறைத்து, முக்கியமான வங்கிச் சேவைகளைப் பேணுவதற்காக எதிர்வுகூறக்கூடிய பராமரிப்பு மற்றும் துறைகளுக்கு இடையேயான செயற்பாட்டு வழிகாட்டல்களை அமுல்படுத்தல்.

மேம்படுத்தப்பட்ட சக்தி மற்றும் வள முகாமைத்துவம்

வினைத்திறனினை உந்திச் செலுத்துவதற்காக கட்டிடச் சக்தி முகாமைத்துவ முறைமைகளையும் துணை மானிகளையும் நிகழ் நேர தகவல் பலகைகளையும் நிறுவுதல், சக்திச் செறிவு, நீர்ப் பாவனை மற்றும் கழிவு அகற்றல் என்பவற்றுக்கான அளக்கக்கூடிய இலக்குகளை உருவாக்கும். மழை நீர் சேகரிப்பு மற்றும் சக்தி மேம்பாட்டுப் பணிகள் மூலம் இந்த இலக்குகளைத் தொடர்ந்து அடைய முடியும்.

பசுமைக் கிளை உருவாக்கம்

இயற்கை ஒளியைப் பயன்படுத்துகின்ற, வினைத்திறன்மிக்க குளிரூட்டல் வசதிகளைக் கொண்ட, நீர் சேமிப்புப் பொருத்துகைகளைக் கொண்ட கழிவு வேறாக்கல் மற்றும் மீள் சுழற்சி வசதிகளைக் கொண்ட, மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றும் செய்வதற்கான வசதிகளைக் கொண்ட அம்சங்களுடன் குறைவான காபன் வெளியேற்றத்தினைக் கொண்ட கிளைகளை வடிவமைத்தல், மற்றும் வாடிக்கையாளர்களின் வருகையினைக் குறைப்பதற்கான வாடிக்கையாளரை மையப்படுத்திய நிலைபேறானதன்மைச் செய்திகள் வழங்குதல் தொடரும் அதேவேளை அதியுன்னத வாடிக்கையாளர் அனுபவம் வழங்கப்படும்.

அறிவுசார் மூலதனம்

எமது அறிவுசார் மூலதனம் மீண்டெழுந்தன்மை மற்றும் போட்டித்தன்மைக்கு அடிப்படையானதாகும். மிக முக்கியமான, கண்ணுக்குப் புலப்படாத சொத்தான இது நிதி மற்றும் பௌதிக மூலதனங்களுக்கு இணையானதாகும் என்பதுடன் இது பெறுமதி வழங்கலுக்கும் பங்குதாரர்களுக்கும் நம்பிக்கைக்கும் நிலைபேறான வளர்ச்சிக்கும் ஆதரவு வழங்குகின்றது.

எமது கவனம்

ஊழியர் அறிவு மற்றும் திறன் மேம்படுத்தலிலும் தலைமைத்துவ விருத்தியிலும் டிஜிட்டல் அறிவிலும் முதலீடு செய்வதில் நாம் கவனம் செலுத்தினோம். புத்தாக்கம், தொடர்ச்சியான டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் செயற்கை நுண்ணறிவினால் உந்தப்பட்ட வாடிக்கையாளர் சேவை என்பன வலுப்படுத்தப்பட்டு, வலுவான நிறுவனக் கற்றல் கலாசாரத்தினால் கட்டமைக்கப்பட்டன. நாம் நிதி உள்ளடக்கத்திற்காக SME மற்றும் நுண்நிதித் துறை விருத்தியினை அதிகரிக்க அரசாங்கத்துடன் பங்காண்மை அமைத்த காரணத்தினால் இவை மிக முக்கியமாகத் தேவைப்பட்ட தரமுயர்த்தல்களாகும்.

எமது தந்திரோபயம்

எமது வலையமைப்பு முழுவதிலும் டிஜிட்டல் திறன்களுக்காகவும் இயைபுறலுக்காகவும் வாடிக்கையாளர் சேவை உன்னதத்திற்காகவும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இன்றியமையாத திறன்களைக் கொண்டவர்களைத் தக்கவைப்பதற்காகவும் உபாயமார்க்கமிக்க வகிபாத்திரங்களுக்காக அடுத்த தலைமுறைத் தலைவர்களைத் தயார்படுத்துவதற்காகவும் மிகக்கவனமாகத் திட்டமிடப்பட்ட தலைமைத்துவத் திட்டமிடல் மற்றும் பதவித் தொடர்ச்சித் திட்டமிடல் என்பன மேற்கொள்ளப்பட்டன. புத்தாக்கமிக்க ஆய்வகங்களும் தனியார் கருத்திட்டங்களும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு அம்சங்களை மையப்படுத்தி உண்மையான உற்பத்தி மேம்பாட்டினைப் பரிசீலித்தன. வங்கியினுள் பெறுமதியினை உருவாக்கதித் தக்கவைப்பதற்காக நாம் பல்கலைக்கழகங்களுடனும் தொழிற்துறைக் குழுமங்களுடனும் சான்றுப்படுத்தல் அமைப்புக்களுடனும் உறுதியான கூட்டாண்மையை உருவாக்கினோம். இது, நிதி ரீதியாகவும் நற்பெயர் ரீதியாகவும் இன்னுமொரு வெற்றிகரமான வருடத்தினைப் பெற்றுத் தந்தது.

சிறப்பம்சங்கள்

607 பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களுக்கான முதலீடு	ரூ. 190.3 மில்லியன்
டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பத் தரமுயர்த்தல்களில் முதலீடு	ரூ. 769 மில்லியன்
ISO 27001:2022 சான்றுப்படுத்தல்	2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக
வங்கியியல் மற்றும் நிதி என்பவற்றில் தகைமை பெற்ற பணியாளர்கள்	1,966
நுணுக்கமான மற்றும் ஆழமான அனுபவ அறிவுடையவர்களின் வயது எல்லை	36 இலிருந்து 45 வரை
புத்தாக்கக் கருத்திட்டங்களில் முதலீடு	ரூ. 19.3 மில்லியன்
இணையவழி மூலமும் (online) அட்டை அடிப்படையிலான தளங்கள் மூலமும் நடத்தப்பட்ட வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்கள்	83.7%

தாக்கத்தினை ஏற்படுத்திய தொனிப்பொருட்கள்

திறன் முகாமைத்துவம், பயிற்சி விருத்தி, மற்றும் திறன் மேம்பாடு, டிஜிட்டல் தலைமைத்துவம்

திறமை முகாமைத்துவம்

பயிற்சி, மேம்பாடு மற்றும் திறன் மேம்பாடு

டிஜிட்டல் தலைமைத்துவம்

NOISE

N – தேவைகள் NEEDS	O – வாய்ப்புக்கள் OPPORTUNITIES	I – மேம்பாடுகள் IMPROVEMENTS	S – பலங்கள் STRENGTHS	E – விதிவிலக்குகள் EXCEPTIONS
தொழிற்படை டிஜிட்டல் திறன்கள் அறிவுத் தக்கவைப்பு, புலப்படாதவைகளின் ஆளுகை	**டிஜிட்டல் உற்பத்திப் புத்தாக்கம்** பங்காண்மைகள், தரவுகளால் மேற்கொள்ளப்படும் சேவைகளில் இருந்து இலாபமீட்டல்	**அளவீடுகள், ஊக்குவிப்புக்கள், அறிவினை உள்வாங்கும் செயன்முறைகள்**	**வியாபாரச் சின்ன அடைவு விருதுகள்** வாடிக்கையாளர் தள அதிகரிப்பு	**தொழில்நுட்பத் தளங்கள்** தரவு ஆளுகை, வளத் தக்கவைப்பு

ஐநா நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) வங்கி வழங்கிய பங்களிப்புக்கள்

புதிய டிஜிட்டல் தயாரிப்புக்கள், புதிய வன்பொருட்கள் தொடர்பான வங்கியின் தொடர்ச்சியான முதலீடுகள் மற்றும் வங்கியின் செயற்பாடுகளை டிஜிட்டல்மயமாக்கியமை என்பன ஒட்டுமொத்தத் தொழிற்துறைக்கும் புத்தாக்கத்திற்கும் உட்கட்டமைப்புக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளன.

முறைமைகளையும் செயன்முறைகளையும் தரமுயர்த்துவது செயற்பாட்டு வினைத்திறனினையும் நீர் மற்றும் ஏனைய வளங்களின் பாதுகாப்பினையும் மேம்படுத்துகின்றது.

பல்கலைக்கழகங்க-ளுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் பங்காண்மை அமைப்பது, வியாபாரத்தின் நிலைபேறானதன்-மக்காகத் திறனுடையவர்களின் தடையற்ற விநியோகத்தினையும் அறிவுப் பகிர்வுத் தளங்களையும் உருவாக்குகின்றது.

புலமைக் களஞ்சியம்

முறைமைகளதும் செயன்முறைகளதும் தரமுயர்த்தல் செயற்பாட்டு வினைத்திறனையும் மின்வலு, நீர், மற்றும் ஏனைய வளங்களின் பாதுகாப்பினையும் மேம்படுத்துகின்றது. பல்கலைக்கழகங்களுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் கூட்டாண்மை அமைப்பது, வியாபாரத்தின் நிலைபேறானதன்மைக்காகத் திறனுடையவர்களின் தடையற்ற விநியோகத்தினையும் அறிவுப் பகிர்வுத் தளங்களையும் உருவாக்குகின்றது.
வங்கியானது கூட்டுப் அறிவுசார் மூலதனத்தின் களஞ்சியமாக உள்ளது. இங்கே, பல துறைகளையும் பிரிவுகளையும் சேர்ந்த நிபுணர்கள் வங்கியின் பல பங்குதாரர்களுக்கும் மிக உன்னதமான பெறுமதியினை வழங்குவதற்காக ஒன்று திரள்கின்றனர். கலாசார விழுமியங்களையும் அறுபது வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தினையும் கொண்ட முன்னணி வங்கி நிறுவனம் என்ற ரீதியில், எமது புலமை வளங்கள் பல தலைமுறைகளைக் கடந்தவையாகவும் காலச் சட்டகங்களைக் கடந்தவையாகவும் இருப்பதுடன் இவை பாரம்பரிய வங்கிச் சேவை முதல் நவீன கால டிஜிட்டல் வங்கிச் சேவை வரையானதுமாக இருக்கின்றன.

தொழில்முறைத் தகைமைகள்

MSC/MBA/ Postgraduate **898**	BA/BSc பட்டதாரிகள் **1,601**
CIMA/CFA/CMA/CA Sri Lanka **166**	வங்கியியல் மற்றும் காப்புறுதி **1,966**
சட்டமானி பட்டங்கள் (LLB) **91**	Civil/Mechanical/ Electrical Engineers; **19**
சட்டத்தரணிகள் **79**	கட்டிடக் கலைஞர் **01**
அளவீட்டு மதிப்பீட்டாளர்கள் **02**	மென்பொருள் உருவாக்கம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் **230**
டிப்ளோமாதாரிகள் **360**	சான்றிதழ் தகுதியாளர்கள் **3,622**

2025 ஆம் ஆண்டின் போதான ஆட்சேர்ப்புக்கள்

தரம்	சமாந்தரத் தரம்	எண்ணிக்கை
விண்ணப்ப முறைமைகள் தலைவர்	AGM	1
தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்	AGM	1
தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் பிரதம முகாமையாளர்	GR I	1
பிரதம முகாமையாளர் தகவல் பாதுகாப்பு	GR I	1
நிறைவேற்று உதவியாளர்	3-II	1
கருத்திட்ட முகாமையாளர்	3-II	1
அட்டை விற்பனை முகாமையாளர்	3-III	1
உதவிச் சட்ட உத்தியோகத்தர்	3-III	2
தொழில்நுட்ப அபாயநேர்வுப் பகுப்பாய்வாளர்	3-III	1
பயிலுனர் செயலாளர் உதவியாளர்		1
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்		683
மொத்தம்		694

டிஜிட்டல்மயமாக்கல்

டிஜிட்டல் நிலைமாற்ற நிகழச்சிநிரல் என்பது தந்திரோபயமிக்க குறிக்கோளாகும் என்பதுடன் இது அதன் தொழிற்படையின் நிபுணத்துவத்தினையும் அறிவினையும் புத்தாக்க ஆற்றலையும் ஒன்றுசேர்க்கின்றது. வங்கியானது பாவனையாளருக்கு நட்பான வங்கிச் சேவைகளையும் முற்றுமுழுவதும் காகிதமற்ற பணிகளையும் அமுல்படுத்தி கைகளால் மேற்கொண்ட பல செயற்பாடுகளைத் தொடர்ந்தும் டிஜிட்டல்மயமாக்கி வருகின்றது. இது துரிதமான மற்றும் துல்லியமான வாடிக்கையாளர் தரவுப் பாய்ச்சலை உருவாக்கி, செயற்பாட்டு வினைத்திறனினை அதிகரித்து, ஊழியர்கள் பெறுமதி உருவாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை இயலுமாக்கியுள்ளது. நாம் 2025 ஆம் ஆண்டில் டிஜிட்டல் தீர்வுகளின் தொகுதியொன்றினை உருவாக்கியுள்ளோம்.

இந்தப் புத்தாக்கங்கள் சௌகரியத்தினையும் வினைத்திறனினையும் வாடிக்கையாளர் அனுபவத்தினையும் மீள்வரையறை செய்தன. பாதுகாப்பான மற்றும் நிகழ் நேரத்தில் நடக்கின்ற வாடிக்கையாளர் உறுதிப்படுத்தல் செயன்முறை புதிய வாடிக்கையாளர்களைச் சேர்க்கும் நடைமுறையினைத் துரிதப்படுத்தியதுடன் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட கடன் விண்ணப்பங்கள் மற்றும் செயன்முறைப்படுத்தல் என்பன துரிதமான கடன் வழங்கலை இயலுமாக்கி வங்கிச் சேவை கிட்டாதவர்களும் வங்கிச் சேவை முறையாகக் கிட்டாதவர்களும் முறைசார் வங்கியியல் முறைமைகள் மூலம் நிதி உள்ளடக்கத்திற்காக நிதியினை அணுகுவதை ஊக்குவிக்கின்றன.

வலுவான மொபைல் மற்றும் வங்கிச் சேவைத் தளங்களின் உதவியுடன் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பரந்த வீச்சிலான வங்கிச் சேவைகளை அணுகக்கூடியமை கிளைகளுக்கு வாடிக்கையாளர்கள் நேரில் வருவதைக் குறைத்து, வாடிக்கையாளர்களை மையப்படுத்திய எமது டிஜிட்டல் சூழலியல்முறைமை மூலம் வாடிக்கையாளர் சௌகரியத்தினை வழங்குகின்றது

இந்த முன்னெடுப்புக்கள் அரசாங்கத்தின் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி மற்றும் நுண்நிதி அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஊக்கியாக அமைந்ததுடன் சிறிய வியாபாரங்கள் மற்றும் நுண் தொழில்முனைவோர் மத்தியில் முதற் தடவையாக வங்கியினைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதில் இருந்து இதனைச் சான்றாகக் காண முடிகின்றது.

2025 ஆம் ஆண்டின் முடிவில், 4.2 மில்லியன் வாடிக்கையாளர்கள் ஒன்லைன் வங்கிச் சேவைக்காகவும் மொபைல் வங்கிச் சேவைத் தீர்வுகளுக்காகவும் பதிவுசெய்துள்ளனர் என்பதை நாம் பெருமிதத்துடன் அறிக்கையிடுவதுடன் 6 மில்லியன் டிஜிட்டல் கணக்குகள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. இது சகலரும் டிஜிட்டல் முறைமையினை ஏற்றுக்கொண்டுள்ளமையினைக் காட்டுகின்றது



தகவல் தொழிநுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கம் தொடர்பான விரிவான தகவல்களுக்கு 127-131 வரையிலான பக்கங்களை பார்க்கவும்.

தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம்

எமது தகவல் பாதுகாப்பு அணியின் விசேடமான அறிவு டிஜிட்டல் நம்பிக்கைக்கு நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கான அத்திவாரமாக விளங்குகின்றது. எமது மனித மூலதனம், இணைந்த நிபுணத்துவம் மற்றும் எமது தொழில்முறையானவர்களின் திறன்கள் என்பன நுட்பமான சைபர் அச்சுறுத்தல்களின் போது ஓர் இன்றியமையாத சொத்து என்பதை நாம் புரிந்துகொள்கின்றோம். தகவல் பாதுகாப்புத் திணைக்களம் உயர் தகைமைபெற்ற நிபுணர்களின் அணியினைக் கொண்டுள்ளதுடன் இவர்கள் முதன்மையான சர்வதேச சான்றுப்படுத்தல்களைக் கொண்டுள்ளனர்.

ISO 27001:2022 சான்றுப்படுத்தலைப் பெற்றுக்கொண்ட முதலாவது D-SIB ஆக வந்தமையினால் வங்கி ஒரு புதிய ஒப்பீட்டுத் தரத்தினை இலங்கையில் நிர்ணயித்துள்ளது. தகவல் பாதுகாப்பு மற்றும் அபாயநேர்வு முகாமைத்துவம் என்பவற்றுக்கான உயர் சர்வதேச நியமங்களை நாங்கள் அமுல்படுத்துவதை இந்தச் சான்றுப்படுத்தல் மெய்ப்பிக்கின்றது. மக்கள், செயன்முறைகள், மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றினை உள்ளடக்கும் இரகசியத்தன்மை, வாய்மை, நுண்மையான தரவுகள் கிடைக்கின்றமை மற்றும் அவற்றின் முகாமைத்துவம் என்பவற்றின் உயர் சர்வதேச தராதரத்தினை உறுதிப்படுத்துவதற்கு எமது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை இந்தச் சட்டத்துடன் இறுக்கமாக இயைபுறுகின்றது. முறைமைகளைத் திடப்படுத்தவும் சைபர்பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தணிக்கவும் 2025 ஆம் ஆண்டில் பல முன்னெடுப்புக்கள் அமுல்படுத்தப்பட்டன.

நவீன பாதுகாப்பு முறைமைக்கு நிலைமாறுதல்

பாதுகாப்பு இயக்க மையத்தினை (SOC) அமுல்படுத்தியதன் மூலம் வங்கி எதிர்வினைமிக்க பாதுகாப்பு நிலையில் இருந்து முற்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் மாதிரிக்கு நிலைமாறியுள்ளது. கண்டுபிடிப்பு மற்றும் பதிற்செயற்பாடு ஆகியவற்றின் முகாமைத்துவத்துடன், வங்கியின் ஏனைய இன்றியமையாத பிரதான வங்கிச் சேவை முறைமைகள் உள்ளடங்கலாக வங்கியின் டிஜிட்டல் சொத்துக்கள் 24 மணித்தியாலங்களும் கண்காணிக்கப்பட்டன. உலகளாவிய அச்சுறுத்தல் பற்றிய புலனாய்வுத் தகவல்களை மத்தியமயப்படுத்தப்பட்ட பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ முறைமையினுள் ஒருங்கிணைத்ததன் மூலம் பாதுகாப்பு இயக்க மையம் அச்சுறுத்தல்களைக் கண்டுபிடிக்கும் வங்கியின் ஆற்றல்களை மேம்படுத்தியது. இந்த மேம்பாடு நிகழ்நேரத் தரவு ஒப்பீட்டினை இயலுமாக்கி உருவாகிவரும் சைபர் அச்சுறுத்தல்களுக்கு எதிரான முற்கூட்டிய பாதுகாப்பினை இயலுமாக்குகின்றது

பாதுகாப்புப் பரிசோதனை மற்றும் மதிப்பீடுகள்

தகவல் பாதுகாப்புத் திணைக்களம் பாதுகாப்பு மதிப்புரையாளர்களின் ஒத்துழைப்புடன் பூரணமான பாதுகாப்புப் பரிசோதனை மற்றும் உலகளாவிய இயைபுறல் கண்காணிப்பு என்பவற்றினை நடத்துகின்றது. இவற்றுள், வருடாந்த ISO 27001:2022 பாதுகாப்பு நடைமுறைகளின் கண்காணிப்பு, ஒழுங்குறுத்தல் பரிசோதனைகள் மற்றும் பல்வேறு தொழில்நுட்பப் பாதுகாப்பு மதிப்பீடுகள் என்பன உள்ளடங்குகின்றன. மேலும், தரவுத் திரட்டல் மற்றும் கணினி முடக்கத்துக்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக வங்கியானது புறப் பாதிப்புறுநிலைப் பரிசோனை போன்ற தொழில்நுட்பச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இதேபோன்று, ஏற்படக்கூடிய அபாயநேர்வுகளை அடையாளம் கண்டு அவற்றினைத் தணிப்பதற்காக நாம் உள்ளக வழங்கிகள், (Servers) இணை வங்கிச் சேவைகள் மற்றும் கிளை வலையமைப்புக்கள் போன்றவற்றுக்காக உள்ளகப் பாதிப்புறுநிலை மதிப்பீடுகளை மேற்கொண்டோம். பாதுகாப்புப் பரிசோதனையில் ஒரு குறிப்பிட்ட இலக்கினை நோக்கி, வங்கிப் பணியாளர்களின் மீண்டெழுந்தன்மை, செயன்முறைகள் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றினைப் பரிசோதிப்பதற்காக உண்மையான ஆபத்தின் அம்சங்கள் சவாலாக எடுக்கப்பட்டு அவற்றினைக் கையாளும் முறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

ஊடுருவல் பரிசோதனை

பொருத்தமான பயிற்சியினாலும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதாலும் அடையாளப்படுத்தலாலும் செயன்முறைகளை அறிக்கையிடுவதாலும் உதவியளிக்கப்பட்டுப் பணியாளர்களுக்குப் போலி மின்னஞ்சல்களை அனுப்பிப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருடாந்த ஊடுருவல் பரிசோதனை நடத்தப்பட்டது.

வங்கியியல் துறையில் இருந்து பெற்றுக்கொண்ட உண்மையான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மதிப்பீடுகள் கிரமமான காலங்களில் புறத் தரப்பினர்களால் நடத்தப்படுகின்றன. அறிந்து மேற்கொள்ளும் தீர்மானம் வகுத்தலுக்காக நுழைபுலங்கள் பெறப்பட்டு இடைவெளிகள் அடையாளம் காணப்படுகையில் உதவிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன

மூன்றாந் தரப்பு இடர் முகாமைத்துவம்

எமது நிதித் தொழில்நுட்பப் பங்காளர்களும் சேவை வழங்குனர்களும் வங்கியின் இறுக்கமான சைபர்பாதுகாப்பு ஒப்பீட்டுத் தராதரங்களுக்கு இயைபுறுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் நாம் ஒரு மூன்றாந் தரப்பு இடர் முகாமைத்துவச் செயன்முறையினை கட்டாயமாக அமுலாக்குகின்றோம்

அனர்த்த மீட்ப்பு

டிட்வா சூறாவளிக்கு நாம் பதிற்செயற்பாடாற்றிய விதத்தில் இருந்து அனர்த்த மீளலில் வங்கியின் ஆற்றல் சான்றாகத் தெரியவந்தது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 24 மணித்தியாலங்களினுள் நாம் சேவைகளை மீள ஆரம்பித்ததுடன் இவ்வளவு பாரிய அனர்த்தத்தின் போது அத்தியாவசியமான வங்கிச் சேவைகளுக்கான தடையற்ற அணுகலையும் நாம் உறுதிப்படுத்தினோம். டிஜிட்டல் செயலிகள் வங்கியியல் தேவைப்பாடுகளின் வாடிக்கையாளர் அனுபவத்தின் ஒவ்வொரு பரப்பிலும் தாக்கத்தினைச் செலுத்துவதால் எமது வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் செயலிகள் கிடைக்கக்கூடியதாக இருப்பது இன்றியமையாதது என்பதால் திட்டமானது கிரமமாகப் பரிசோதிக்கப்படுகின்றது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

எங்களது "புத்தாக்க மையம்" வாயிலாக நிதித் தொழில் நுட்பப் (FinTech) பங்காளர்களுடன் இணைந்து, வங்கியியல் துறையில் மற்றுமொரு முன்னோடி முயற்சியாகப் புத்தாக்கங்களை நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். ஒரு நிலையான வணிகத்தை நடத்தும் அதே வேளையில், பொது நலனுக்கான எங்களது அர்ப்பணிப்பானது, நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய சமூகங்களுக்குக் குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்கியதன் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதிச் சேர்க்கையை மேம்படுத்துவதுடன், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு ஊக்கியாக எங்களது பங்கை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

ஒழுங்குபடுத்தல் இயைபுறல்

சர்வதேச நியமங்கள் மற்றும் உள்நாட்டு ஒழுங்குவிதிகளுக்கு இயைபுற்று, எமது அடிப்படைத் தொழில்நுட்ப நிலைப்பாடு இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளினால், குறிப்பாக 2001 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பணிப்புரைகளினாலும் அதன் திருத்தங்களினாலும் ஆளுகை செய்யப்படுகின்றன. தேவைப்படுத்தப்பட்டவாறு, தொழில்நுட்ப மீண்டெழுந்தன்மை, சம்பவ அறிக்கையிடல் மற்றும் அபாயநேர்வு மதிப்பீடு ஆகியவற்றுக்கு நாம் இறுக்கமாக இயைபுறுகின்றோம். எமது முறைமைகள் சைபர் தாக்குதல்களை எதிர்ப்பதற்கும் அவற்றில் இருந்து மீள்வதற்கும் ஆற்றல் கொண்டுள்ளன என்பதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கத் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமானது தனிப்பட்ட மற்றும் நிதி ரீதியான வாடிக்கையாளர் தரவுகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் மீட்டல் தொடர்பில் எமது பொறுப்பினை மேலும் அதிகரிக்கின்றது. இந்தப் பொறுப்பினை நாம் எவ்விதக் குறைகளும் இன்றி நிறைவேற்றியுள்ளோம்.

புதிய இலக்குகளை அடைவதற்காக அண்மைக்காலத்திற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

2026 பயிற்சித் திட்டத்திற்கு அமைவாக, பிரதான கவனம் அடிப்படையிலான பயிற்சிப் பரப்புக்களாவன: உபாயமார்க்கமிக்க ஒத்திசைவு, குறிக்கோள்மிக்க திறன் விருத்தி, நீண்ட கால உபாயமார்க்கத் தொலைநோக்கு, ஊழியர் வளர்ச்சி மற்றும் ஈடுபாடு, தொடர்ச்சியான கற்றல்.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்கு, தொழில்நுட்ப ஆற்றல்களினதும் நடத்தை நேர்த்தியினதும் சமனிலையான ஒரு விருத்தியினையே பயிற்சி வலியுறுத்துகின்றது

வங்கியின் உபாயமார்க்கமிக்க முன்னெடுப்புக்களுடன் இயைபுற்று, பணியாளர்களின் கடன் சார் தொழில்நுட்பத் தகைமைகளை அதிகரிப்பதன் மூலம் வங்கியின் கடன் வழங்கும் முறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கடன் பிரிவுப் பணியாளர்களுக்காகக் கடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தொகுதி ஒன்றினை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் வங்கியின் வெளிநாட்டு நாணயப் பண அனுப்பல் தொகுதியினை விரிவாக்குவதற்கு இன்னும் அதிகமான நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும், டிஜிட்டல்மயமாக்கல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் வாடிக்கையாளர் மையப்படுத்துகை மற்றும் வாடிக்கையாளர் மேம்பாடுகள் போன்ற மென் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நேர்த்தியினை அதிகரிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளன.

குறிக்கோள்மிக்க திறன்கள் விருத்தியின் கீழ், குறிப்பிட்ட சில தொழில் வகிபாத்திரங்களில் கவனம் செலுத்தியும் தேவைக் கணிப்பீட்டுத் திட்டமிடல் திறன் குறைபாட்டில் கவனம் செலுத்தியும் அதிக நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், 2026 பயிற்சித் திட்டத்தில், புதிய ஆட்சேர்ப்புக்களும் பதவியுயர்வுகளை இலக்குவைக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வங்கியின் நீண்ட கால தந்திரோபாய தொலைநோக்குடன் இயைபுற்று, பெருநிறுவனத் தொடர்பாடல் திறன் விருத்தி (வியாபாரம் பற்றிய ஆக்கங்கள் மற்றும் சமர்ப்பணத் திறன்கள் உள்ளடங்கலாக) பற்றிய பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2026 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் வேலையுடன் தொடர்புடைய பணிகளை எளிமைப்படுத்துவதற்காக வங்கிச் செயற்பாடுகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வங்கியின் சகல பணியாளர்களுக்காகவும் திட்டமிடப்பட்டுள்ளன.

டிஜிட்டல் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

2026 ஆம் ஆண்டில், பல உபாயமார்க்கமிக்க முன்னெடுப்புக்கள் மூலம் மக்கள் வங்கி அதன் டிஜிட்டல் நிலைமாற்றத்தினை மேலும் துரிதப்படுத்தும். மேம்பட்ட பயனாளர் (User) அனுபவம் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் சேர்ந்த மொபைல் மற்றும் இணைய வழி வங்கியியல் தளங்களின் அதிகரிப்பு, டிஜிட்டல் முறையில் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வராமல் கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் இலத்திரனியல் முறையில் வாடிக்கையாளர் அடையாளத்தைச் சரிபார்த்தல், மற்றும் டிஜிட்டல் சூழலியல் (Ecosystem) முறைமையினைப் பரவலாக்குவதற்காக நிதித்தொழில்நுட்பப் பங்காண்மைகளை ஒருங்கிணைத்தல் என்பன பிரதான நிகழ்ச்சித்திட்டங்களுள் உள்ளடங்குகின்றன. வங்கியானது அதன் கிளை வலையமைப்புக்களில் மதிநுட்பமான வேலைப்பாய்ச்சல் தீர்வுகள் மூலம் செயன்முறைத் தன்னியக்கமாக்கலையும் சுய சேவை வங்கிச் சேவை மார்க்கங்களையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மீண்டெழுந்தன்மை, செயற்பாட்டு வினைத்திறன், மற்றும் வாடிக்கையாளர்களுக்குத் தடையற்ற, பாதுகாப்பான டிஜிட்டல் வங்கிச் சேவை அனுபவம் என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்காகத் தரவுகளினால் செயற்படுத்தப்படும் தீர்மான உதவி மற்றும் மேம்பட்ட சைபர்பாதுகாப்புச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

தோற்றப்பாடு 2026

புத்தாக்கத்தினையும் வாடிக்கையாளர் நம்பிக்கையினையும் செயற்பாட்டு உன்னதத்தினையும் பதியவைத்து எமது அறிவுசார் மூலதனமானது நிலைபேறான பெறுமதி உருவாக்கத்தின் அத்திவாரமாகத் தொடர்ந்து விளங்குகின்றது.

நாம் தொடர்ச்சியாக முறைமைவாய்ந்த வகையில் அறிவினை உள்வாங்கி, திறன் மேம்பாட்டில் முதலீடு செய்து, ஒத்துழைப்புமிக்க கூட்டாண்மைகளை வளர்த்து, நிபுணத்துவத்தினை மதிப்பிடக்கூடிய பிரதிபலன்களாக மாற்றுவோம்.

மனித மூலதனம்

எமது ஊழியர்களே எமது வியாபாரச் செயற்பாட்டின் முதுகெலும்பாகவும் எமது போட்டித்தன்மைமிக்க அனுகூலமாகவும் எமது வெற்றியின் மூலமாகவும் இருக்கின்றனர். சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் மீண்டெழுந்தன்மையுடன் இணைந்து, கற்றலுக்கும் விருத்திக்குமான அவர்களின் பேரார்வம் தேசிய நெருக்கடிகளின் போது நாம் தீரத்துடன் எழுந்து நின்று எமது வாடிக்கையாளர்களுக்கும் தேசத்திற்கும் பெறுமதியினை வழங்குவதற்கு எமக்கு உதவியுள்ளது.

எமது கவனம்

எமது நீண்ட காலத் தொலைநோக்கின் தேடலில், வங்கித் துறையின் பரிணாமமடைந்து வரும் இயங்கியல்களுக்குத் தகவமைக்கும் ஆற்றல்கொண்டு எதிர்காலத்திற்குத் தயாரான மற்றும் சுறுசுறுப்பான தொழிற்படையினை உருவாக்குவதற்கு நாம் தொடர்ந்து கடப்பாடு கொண்டுள்ளோம். இந்தக் கடப்பாட்டின் அத்திவாரமாக, வாடிக்கையாளர் சேவை உன்னதம் மற்றும் எமது உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களை அடைதல் என்பவற்றினைப் பெறுபேறாகக் கொண்டு சந்தைக்கு விரைவாக உற்பத்திகளைக் கொண்டுவருதல், வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியம் ஆகியவற்றுக்கான கலாசாரத்துக்கான விருப்பம் அமைந்துள்ளது.

நாம் புத்தாக்கத்தினை அயராது முன்னெடுத்தோம், தொழில் விருத்திக்கான வாய்ப்புக்களை உருவாக்கி ஒத்திசைவுமிக்க மற்றும் ஒன்றுபட்ட அணியினைப் போசித்தோம். வங்கியின் குறிக்கோள்களுடன் ஒருங்கிசைந்த தனிப்பட்ட வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தி, நிறுவனத்தின் வெற்றிக்கு அர்த்தபூர்வமாக பங்களிப்பதற்காக நாம் எமது மனித மூலதனத்திகை வலுப்படுத்திய அதேவேளை அவர்கள் தங்களின் தொழில் அபிலாசைகளை அடைந்துகொண்டனர்.

எமது தந்திரோபாயம்

முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த சட்டகத்தினுள் தந்திரோபாயமிக்க வகையில் நிலைபெற்று, மனித மூலதனம் என்பது ஒட்டுமொத்த நிறுவன வெற்றியில் இருந்து பிரிக்க முடியாதது என்பதை எமது நிகழ்ச்சிநிரல் பிரதிபலிக்கின்றது. இயலளவு உருவாக்கம் என்பது ஆட்சேர்ப்பில் இருந்து தொழில் முடிவின் பின்னரான நிலைமாற்றம் வரையிலான ஏழு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தந்திரோபாயமிக்க முன்னெடுப்புக்களில் தங்கியுள்ளது. இந்த முன்னெடுப்புக்கள் எமது தொழிற்படையினை நிறுவனத்தின் நீண்டகாலத் தொலைநோக்கு மற்றும் விழுமியங்களுடன் ஒன்றிணைக்கும் அதேவேளை திறன்களைக் கவர்ந்து, போஷித்து, தக்கவைப்பதற்கான எமது கடப்பாட்டினை வலுப்படுத்துகின்றது.

- **தகைமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு**
- **ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதில் பல்வகைமை**
- **தொழிற்படைத் திட்டமிடல்**
- **ஊழியர் ஈடுபாட்டினை மேம்படுத்தல்**
- **டிஜிட்டல்மயமாக்கப்பட்ட செயற்திறன் முகாமைத்துவம்**
- **டிஜிட்டல் கற்றல் மற்றும் விருத்தி**
- **மனநல ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்துவதற்கான இரகசியமான செயன்முறை**

அதிகரித்த வகையில் தந்திரோபாயமிக்கதான வங்கியியல் சூழலில் நாம் எமது மனித மூலதனத்தினை புத்தாக்கம், மீண்டெழுந்தன்மை மற்றும் போட்டித்தன்மைமிக்க அனுகூலம் என்பவற்றினை இயலுமாக்கும் ஒன்றாக அடையாளம் காண்கின்றோம்.

தன்னியக்கமாக்கம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கம்

2025 ஆம் ஆண்டில் புதிய HRIS மூலம் தன்னியக்கமாக்கப்பட்ட செயலாற்றுகை முகாமைத்துவ முறைமையினைப் பயன்படுத்தியமை, ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க செயலாற்றுகை முகாமைத்துவச் செயன்முறையினை இயலுமாக்கியது. ஊழியர்கள் ஆரம்பச் சுய மதிப்பீட்டினைப் பொறுப்பேற்றனர். இதனைத் தொடர்ந்து, நியாயமானதன்மை, வகைப்பொறுப்பு மற்றும் வங்கியினோடு ஒத்திசைவானதன்மை என்பவற்றினை உறுதிப்படுத்தி மேற்பார்வை ரீதியான மதிப்பீடு இடம்பெற்றது.

மனித வளத் திணைக்களம் முன்பு கைமுறையினால் மேற்கொண்ட ஆட்சேர்ப்பு முறையில் இருந்து நவீன முறைக்கு மாறியதால் புதிதாகப் பணியாளர்களைச் சேர்க்கும் சராசரிக் கால அளவு பதினெட்டு மாதங்களில் இருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது. நாம் கணிசமான அளவு செயற்பாட்டு வினைத்திறனினையும் செலவு முகாமைத்துவத்தினையும் அடைந்து திறமையானவர்களை விரைவாக ஆட்சேர்ப்புச் செய்யும் நிலைக்கு வந்தோம். இது புதிய பணியாளர்கள் மிகக் குறுகிய காலத்தினுள் நிறுவனத்திற்கு உற்பத்தித் திறனுடன் பங்களிப்பு வழங்குவதற்கு வழியமைத்தது

துரிதமான தொழில் விருத்தி மற்றும் வெகுமதிகளுக்கான டிஜிட்டல்மயமாக்கப்பட்ட செயலாற்றுகை முகாமைத்துவத்திற்கான HRIS தன்னியக்கமாக்கம்

தொடர்ச்சியான கற்றலை மேம்படுத்தும் டிஜிட்டல் கற்றல் மற்றும் முகாமைத்துவ முறைமை (LMS)

850 கைமுறை வரவு பதிவேடுகளைப் பதிலீடு செய்த விரலடையாள இயந்திரங்கள்

வேலைக்கும் சேவை விநியோகத்திற்கும் பெருமளவு இடையூறு ஏற்படுத்தாமல், பணித் திட்டங்களுடன் ஒத்திசையும் வகையில் ஊழியர்கள் அவர்களின் நேரத்தினை முகாமைத்துவம் செய்வதை இயலுமாக்குவதன் மூலம் கற்றல் மற்றும் முகாமைத்துவ முறைமை (LMS) கற்றலையும் விருத்தியையும் நெகிழ்வுத்தன்மைமிக்கதாக ஆக்கியுள்ளது. வரவு மற்றும் செயற்றிறன் முகாமைத்துவ முறைமை ஆகியனவும் தன்னியக்கமாக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் பசுமை மனித வள நடைமுறைகள் என்பன மனித மூலதன முகாமைத்துவத்தில் ஒரு முக்கியமான வகிபாகத்தினை வகித்து காபன் வெளியேற்றத்தினையும் சக்தி நுகர்வினையும் குறைத்துள்ளன. 850 வரவு பதிவேடுகளை விரலடையாள இயந்திரங்கள் கொண்டு வங்கி பதிலீடு செய்திருப்பதுடன் சம்பளக் கொடுப்பனவு முறைமையினையும் தன்னியக்கமாக்கும் திட்டத்தினைக் கொண்டுள்ளது.

சிறப்பம்சங்கள்

ஊழியர்களின் எண்ணிக்கை	**8,122**
ஆண்:பெண் விகிதாசாரம்	**2:3**
தக்கவைப்பு வீதம்	**97.0%**
ஊழியர் ஒருவருக்கான இலாபம்	**ரூ. 5.0 மில்லியன்**
டிஜிட்டல்மயம்-ஆக்கப்பட்ட செயற்திறன் முகாமைத்துவம்	**100% முடிவடைந்தது**
ஊதியங்கள் மற்றும் நலன்களாக வழங்கப்பட்டவை	**ரூ. 38.2 பில்லியன்**
வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை	**72**
பதவியுயர்த்தப்-பட்டவர்கள்	**685**
ஊழியர் ஈடுபாட்டுக் கணிப்பீடு	**76% ஈடுபாடு**
பணியாளர் ஈடுபாடு மற்றும் திருப்திக் கணிப்பீடு	**69% தொழில் வழங்குனர் என்ற ரீதியில் வங்கி பற்றித் திருப்தியடை-கின்றனர்**
மொத்தப் பயிற்சி மணித்தியாலங்கள்	**220,638**
ஊழியர் ஒருவருக்கான பயிற்சி மணித்தியாலங்கள்	**27 மணித்தியாலங்கள்**
வேலையின் போதான பயிற்சி	**568**
இணையவழி (online) பயிற்சி அமர்வுகள்	**39**

தாக்கம் ஏற்படுத்திய முக்கியமான விடயங்கள்

எதிர்காலத்திற்கான மனித மூலதனம்

எமது நீண்ட கால வெற்றி மற்றும் நிலைபேறானதன்மை என்பன எதிர்காலத்திற்குத் தயாரான எமது தொழிற்படையிலேயே தங்கியுள்ளன. ஏனெனில் அவர்கள் எமது வாடிக்கையாளர்களுக்கான பங்குடைமையாளர்களுக்கான மற்றும் சமுதாயங்களுக்கான பெறுமதியினை உருவாக்குகின்றனர். பின்வருவன எமது மனித மூலதன முகாமைத்துவத்தின் முக்கியமான தொனிப்பொருட்களாகும்.

மனநல ஆரோக்கியம்

திறன் முகாமைத்துவம்

பயிற்சி விருத்தி மற்றும் திறன் மேம்பாடு

பாதுகாப்பு மற்றும் சௌகரியம்

எமது மனித மூலதனத்தின் உடல் மற்றும் மனோ ரீதியான சுகாதாரமும் பாதுகாப்பும் எமது அனைத்து இடங்களிலும் முன்னுரிமைக்குரியதாகும். இதேபோன்று, எமது டிஜிட்டல் ஆற்றல்களின் விரிவாக்கமானது எமது ஊழியர்கள் துரிதமாக வாடிக்கையாளர்களுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு அவர்களை வலுவூட்டுகின்ற அதேவேளை, ஊழியர்கள் கற்றலையும் விருத்தியினையும் நெகிழ்வுத்தன்மைமிக்க முறையில் அணுகுவதையும் இயலுமாக்குகின்றது.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

டிஜிட்டல் தலைமைத்துவம்

N தேவைகள் NEEDS	O வாய்ப்புக்கள் OPPORTUNITIES	I மேம்பாடுகள் IMPROVEMENTS	S பலங்கள் STRENGTHS	E விதிவிலக்குகள் EXCEPTIONS
டிஜிட்டல்மயமாக்கம் திறன் மேம்பாட்டைத் தேவைப்படுத்தியது	தந்திரோபாயமிக்க ஆய்வு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி நிபுணர்களை ஒப்பந்த ரீதியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உறுதியான நிதிப் பெறுபேறுகள் உதவின	ஒன்லைன் கற்றலும் விருத்தியும் பயிற்சி இடைவெளிகளை நிரப்புவதற்கு உதவின	உறுதியான சந்தைப் பிரசன்னம்	நிலவுகின்ற தீவிர போட்டியானது உற்பத்திகளின் துரித அறிமுகத்தினையும் பல தலைமுறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு என்பவற்றினை வழங்குவதையும் தேவைப்படுத்துகின்றது.
சந்தைப் போட்டி நட்டஈட்டுப் பொதிகள் தக்கவைப்புக்காகத் தேவைப்படுகின்றன	தொழில்முறை சார்ந்த வணிக நாமப் பயன்பாட்டினால் முகாமைத்துவப் பயிலுனர்களையும் இலக்குவைக்கப்பட்ட பதவிகளுக்குத் தகுதியானவர்களை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதும் ஊக்குவிக்கப்பட்டன	மனித வளத் தகவல் முறைமையின் (HRIS) அமுல்படுத்தல் நேரத்தினைச் சேமிக்கும் வகையிலான வினைத்திறனான மனித வள முகாமைத்துவத்தற்கு உதவியது	பரந்த அளவிலான கிளை வலையமைப்பு மற்றும் சேவை மையங்கள்	நட்டஈட்டுப் பொதிகளைத் (compensation packages) தரமுயர்த்துவதில் வரம்புகள் ஆட்சேர்ப்பினைத் துரிதப்படுத்துவது கலாசார ரீதியான பொருத்தமின்மைகளையும் செலவு அதிகரிப்பினையும் உருவாக்கலாம்
உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களை வழங்குவதற்குப் பொருத்தமான செயற்திறன் முகாமைத்துவம்	வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் பயிற்சி மற்றும் விருத்திக்கான வளங்களை வழங்கியதுடன் ஒன்லைன் பயிற்சித் தளங்களை அமுல்படுத்துவது வெற்றிகரமான இறுதிப் பெறுபேறுகளை வங்கி வழங்குவதை இயலுமாக்குகின்றது.	பிராந்திய ஆற்றுப்படுத்தல் முயற்சிகளைத் தாபித்ததன் மூலம் மனநல ஆரோக்கியம் மேம்படுத்தப்பட்டது	பயிற்சி, திறன் விருத்தி மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்கான இலகுவான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை வலுவான நிதி நிலை உருவாக்கியது	தேக்கநிலையினைத் தவிர்ப்பதற்கு நவீன மற்றும் துரித பயிற்சிக்கான வாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன பல்வகைமைமிக்க தொழிற்படையில் மனப்பாங்கு மாற்றத்தினை முகாமைத்துவம் செய்வதற்கு தொழில்நுட்ப முதலீடுகள் தேவைப்படுகின்றன
தேவைப்படும் திறன் தொகுதிகளுடனும் தகைமைகளுடனும் சரியானவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்ச்சியான ஒரு சவாலாக இருக்கின்றது	மாறக்கூடிய கொடுப்பனவு மற்றும் தலைமைத்துவ விருத்தியானது சாதகமான தக்கவைப்பு வீதங்களில் தாக்கத்தினை ஏற்படுத்துவதைத் துரிதப்படுத்தியது (97%)	திறன்மிக்க மற்றும் தகைமைமிக்க புதியவர்களின் ஆட்சேர்ப்பினைக் கவர்வதற்கு உயர் புலப்பாட்டினைக் கொண்ட வலுவான வியாபார நாமம் உதவியது	மிகச் சிறந்த டிஜிட்டல் ஆற்றல்கள் இளந்தலைமுறை வாடிக்கையாளர்களை ஈர்க்கின்றன	தகவல் தொழில்நுட்பம், இடர்நேர்வு, ஆளுகை, இணக்கம் மற்றும் நிதி என்பவற்றில் தொழில்முறையானவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் சவால்கள்

ஐநா நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) வங்கி அளித்த பங்களிப்புக்கள்

சகல வாடிக்கையாளர் குழுக்களுக்கும் கடன் பெறுவதற்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் வறுமையினைக் குறைக்கும் நோக்கத்துடன் நிதி உள்ளடக்கம், கடன் வழங்கல் மற்றும் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் முதலீடு செய்தல் என்பவற்றினை விரிவாக்குவதன் மூலம் வங்கி இதனை அடைவதை நோக்கிப் பணியாற்றுகின்றது..

சுகாதாரத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பினை இயலுமாக்கி, ஊழியர்கள் மற்றும் சமுதாயங்களின் மத்தியில் நலனோம்பலை மேம்படுத்தி, நிதியிடல், சமுதாயச் சுகாதார முன்னெடுப்புக்கள் மற்றும் ESG உடன் ஒருங்கிசையும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் சுகாதாரப் பராமரிப்பு அணுகலுக்கு வங்கி உதவியுள்ளது.

வங்கி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்து, கல்வி உட்கட்டமைப்புக்கு உதவி வழங்கி, கல்விச் சமத்துவமின்மையினைக் குறைக்கும் நோக்கத்துடன் குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளை இலக்குவைத்து நிதி அறிவினை மேம்படுத்திக் கல்வி உட்கட்டமைப்புக்கு உதவி வழங்குகின்றது.



நிதி உள்ளடக்கத்தினை விரிவுபடுத்திச் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு உதவி டிஜிட்டல் நிலைமாற்றத்தில் முதலீடு செய்வதன் மூலம் வங்கியானது பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதையும் தொழில்களை உருவாக்குவதையும் நாடு முழுவதும் நிதிச் சேவைகளுக்கான ஒப்புரவுமிக்க அணுகலை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிதி உள்ளடக்கத்தினை விரிவாக்கி, துணைக் கிராமியச் சமுதாயங்களுக்கு உதவி வழங்கி தனது ஆளுகை மற்றும் தொழிற்படையினுள் பல்வகைமையினைப் பொதியவைப்பதன் மூலம் வங்கியானது பொருளாதார மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்தது.

மனித வள ஆளுகை

GRI 2-23,24

மனித மூலதன ஆளுகையானது பிரதிப் பொது முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் வருகின்றது இவர் பிரதம நிறைவேற்று அதிகாரியிடம் நேரடியாக அறிக்கையிடுவதுடன் சபையுடனும் ஊதியக் குழுவுடனும் மனித மூலதனத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் ஏனைய தொடர்புடைய குழுக்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றுகின்றார். சகல ஏற்புடைய தொழில் சட்டங்களுடனும் ஒழுங்குறுத்தல் அறிவுறுத்தல்களுடனும் இயைபுறுவதை உறுதிப்படுத்துவது மனித வளத் திணைக்களத்தின் பொறுப்பாகும் என்பதுடன் வங்கியின் கொள்கைச் சட்டத்தினுள் மனித மூலதனத்தினை உருவாக்குவதற்குப் பொருத்தமான மனித வள முகாமைத்துவ தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதும் அதன் பொறுப்பாகும். எமது தொழிற்படையின் நிதி மற்றும் நிதி சாரா நிலைபேறானதன்மையின் வெளிப்படைத்தன்மைமிக்க அறிக்கையிடலை உறுதிப்படுத்தி, SLFR S1, S2 என்பவற்றுடன் இயைபுற்று, மனித மூலதன முகாமைத்துவத்தினுள் ESG கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது 2026 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

- ஒழுக்காற்றுக் கோவை
- தவறிழைப்பைத் தெரியப்படுத்துபவர்களைப் பாதுகாக்கும் கொள்கை
- பெருநிறுவன ஆளுகை
- நடத்தைக் கோவை

தெளிவான வகைப்பொறுப்பும் வலுவான மேற்பார்வையும் மனித மூலதன உபாயமார்க்கத்தின் அத்திவாரமாகும். திறன்மிக்கவர்களைப் பணியில் அமர்த்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் எமது குறிக்கோள்களை அடைவதிலும் நீண்ட காலத்திற்கான பெறுமதியினை உருவாக்குவதிலும் தங்கியுள்ளது. எமது மனித மூலதனத்தினை உருவாக்குகையில் ஏனைய மூலதனங்களில் நாம் மேற்கொள்ளும் சமரசங்கள் நெறிமிகு நியமங்களைப் பாதுகாப்பதையும் பல்வகைமையினை வழங்குவதையும் வெளிப்படைத்தன்மைமிக்க அறிக்கையிடலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் வங்கியுடனான பயணத்தில் பிரதானமானவையாகப் பதவியுயர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் ஊதியக் கொள்கைச் சட்டகங்கள் என்பவற்றினை அடையாளம் கண்ட பின்னர் நாம் 2025 ஆம் ஆண்டில் அவற்றினை மீளாய்வு செய்தோம். குறைபாடுகள் பற்றிய கட்டமைக்கப்பட்ட பகுப்பாய்வினைப் பிரயோகித்து, உத்தேச சட்டகமானது தற்போது சபையின் மீளாய்வின் கீழுள்ளதுடன் இது 2026 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படும்.

ஏதாயினும் செயற்பாட்டுக் குறைபாடுகள் இருப்பின் அவற்றினைக் கண்டுபிடித்து நாம் ஆளுகைக் கொள்கைகளுடனும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளுடனும் இயைபுறுகின்றோம் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு மனித வளப் பரிசோதனையினை நடத்துவதற்காக நாம் இலங்கை ஊழியர் சம்மேளனத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டோம். இது 2026 ஆம் ஆண்டில் நடத்தப்படும்

ஊழியர்களுக்கான ஓர் ஆரோக்கியமான வேலை - வாழ்க்கைச் சமனிலைக்கான எமது ஒட்டுமொத்த முகாமைத்துவ அணுகுமுறைக்கு மனித வள ஆளுகைக் கொள்கைகளின் தொகுதி வழிகாட்டுகின்றது

குறைகளைக் கையாளுதல்

GRI 2-16, 25

ஊழியர்களின் கரிசணைகளைத் தீர்ப்பதற்காக நாம் குறைகளைக் கையாளுவதற்கான பொறிமுறையினைத் தொடர்ந்து பயன்படுத்தினோம். ஊழியர்களால் அவர்களின் கரிசணைகளையும் முறைப்பாடுகளையும் குறைகளையும் எழுப்பி, சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு அவர்களின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைக்கக்கூடியதாக இருந்தது. வெவ்வேறு மார்க்கங்களில் இருந்து பெற்றுக்கொண்ட முறைப்பாடுகள் ஒரு குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டன. இங்கே சிரேஷ்ட முகாமைத்துவ ஆளணியினர் அவற்றினைப் புலனாய்வு செய்து மேலதிக நடவடிக்கைகளுக்காக பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு/பொது முகாமையாளருக்கு அறிக்கையிடுகின்றனர்.

இதற்கு மேலதிகமாக, “உங்கள் குரல்” என அழைக்கப்படும் ஒரு தளம் இருக்கின்றது. இது உரையாடல்களை அடிப்படையாகக் கொண்ட மனித வளத் தகவல் முறைமையாகும். இது ஊழியர்கள் அவர்களின் கரிசணைகளை உதவிப் பொது முகாமையாளரிடம் நேரடியாக எழுப்புவதற்கு அவர்களை இயலுமாக்குகின்றது.

கூட்டுப் பேரம்பேசல் உடன்படிக்கைள்

GRI 2-30

வங்கியானது ஆறு ஊழியர் சங்கங்களுடன் உத்தியோகபூர்வமான கூட்டுப் பேரம்பசல் உடன்படிக்கைகளைக் கொண்டுள்ளதுடன் ஊழியர் பின்னூட்டல்களுக்காக வெளிப்படையான கொள்கையினைக் கொண்டுள்ளது. உடன்படிக்கைகள் மொத்தத் தொழிற்படையின் 99 சதவிகிதமானவர்களைப் பிரதிநிதித்துவம் செய்து பிரதம முகாமையாளர் வரையிலான சகல ஊழியர்களையும் உள்ளடக்குவதுடன் நேரடியாக உள்ளடக்கப்படாதவர்கள் உள்ளடங்கலாக சகல ஊழியர்களும் ஒப்புரவுடன் நடத்தப்படுவதை வங்கி உறுதிப்படுத்துகின்றது. இது ஒப்புரவுமிக்க வகையில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துகின்றது,

இது உள்ளடக்கும்தன்மையினை உறுதிப்படுத்துகின்றது, அத்துடன் நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க வேலைத்தள நடைமுறைகளுக்கான வங்கியின் கடப்பாட்டினை மேம்படுத்துகின்றது. சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம்பேசல் என்பவை தொடர்பாக வங்கியின் செயற்பாட்டில் இருந்து அடையாளம் காணப்பட்ட எவ்விதமான கட்டுப்பாடுகளும் இருக்கவில்லை. தற்போது செயலூக்கத்தில் உள்ள கூட்டுப் பேரம்பேசல் உடன்படிக்கை மேலும் 3 வருட காலத்திற்காக 2024 ஜனவரி 1 அன்று புதுப்பிக்கப்பட்டது.

ஊழியர் சங்கம்	ஊழியர் எண்ணிக்கை
உத்தியோகத்தர் சங்கம்	233
ஜாதிக சேவக சங்கமய	94
இலங்கை வங்கித் தொழிலாளர்கள் சங்கம்	5,948
இலங்கை வங்கி ஊழியர் சங்கம்	23
அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம்	30
பிரகதி வங்கி ஊழியர் சங்கம்	856
மொத்தம்	7,184

தவறிழைப்பைத் தெரியப்படுத்துபவர்களைப் பாதுகாக்கும் கொள்கை

GRI 2-26

வங்கியின் நிலைபேறானதன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள் தவறிழைப்பினைத் தெரியப்படுத்துபவர்களைப் பாதுகாக்கும் கொள்கையின் கீழ் முகாமைத்துவத்திடம் கொண்டு செல்லப்படலாம். இவ்வாறான அறிக்கையிடல், தவறிழைப்பினைத் தெரியப்படுத்துபவர்களைப் பாதுகாத்து மிக இரகசியமாகக் கையாளப்படுவதுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வங்கி விரைவான நடவடிக்கைகளை எடுத்து அதன் நன்மதிப்பினைப் பாதுகாக்கின்றது. பின்வரும் முறைப்பாடுகள் நேரடி மேற்பார்வையாளருக்கு அறிவிக்கப்படலாம் அல்லது சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு அறிவிக்கப்படலாம்.

i. ஒழுக்கக் கோவையினை மீறுதல்

ii. சட்டக் கடப்பாடுகள் அல்லது ஒழுங்குறுத்தல் கடப்பாடுகளுக்கு இயைபுறத் தவறுதல்

iii. நீதி வழுவுதல்

iv. நிதி மோசடிகள்

ஊழல் எதிர்ப்புச் சட்டமைப்பு

GRI 205-2, 3

வங்கியானது ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பில் பூச்சிய சகிப்புத்தன்மையினைப் பேணுகின்றது. மனித வளத் திணைக்களம் ஊழல்மிக்க நடத்தையினை வரையறை செய்யும் பரிபூரணமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்கி உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்களில் விரைவான, இறுக்கமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்றது.

பிரதம முகாமைத்துவ ஆளணியினருக்கான, பெருநிறுவன முகாமைத்துவத்துக்கான, மற்றும் பணிப்பாளர் சபைக்கான ஊழல் எதிர்ப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் இயைபுறல் பற்றிய பயிற்சியின் அதிகரித்த மட்டம் 2026 ஆம் ஆண்டு நடைபெறும்.

ஊழல் எதிர்ப்புப் பற்றிய பயிற்சி

தொடர்பாடல் செய்யப்பட்ட கொள்கை	சதவிகிதம் (%)	எண்ணிக்கை
சபை உறுப்பினர்கள்	100	10
சகல ஊழியர்களும்	100	சகலரும்
பயிற்றப்பட்டவர்கள்	53	4,314
2025 ஆண்டு ஊழல் சம்பவங்கள்	0.7	59
ஒழுக்காற்று நடவடிக்கை/ பதவியில் இருந்து அகற்றல்	0.8	69

திறன் முகாமைத்துவச் செயன்முறை

GRI 2-7

நாம் பல்வேறு ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில்முறை நாட்டமுடைய 6,599 பேரை நிரந்தர பதவியணியிலும் 1,523 பேரை ஒப்பந்த ஊழியர்களாக முழு நேர அடிப்படையிலும் தொழிலுக்கமர்த்தியுள்ளோம். இது எதிர்காலத்திற்குத் தயாரான அணிக்கான மிகவும் சிறந்த கூட்டினைக் கொண்டுள்ளது. மாறிவரும் சந்தைத் தேவைகள் மற்றும் வியாபார இயங்கியல்களைப் பூர்த்தி செய்வதற்காக நாம் எமது ஊழியர்களின் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றோம்.

திறனுடையவர்களைப் பெறல் மற்றும் ஊழியர் புரள்வு

GRI 401-1

தேசம் முழுவதும் பரவியுள்ள உயர் தரத்திலான தொழிலினை உருவாக்குவதே எமது முன்னுரிமையாகும். வலுவான ஆட்சேர்ப்புக் கொள்கைச் கட்டமைப்பினுள் எமது செயற்பாடுகளுக்கும் விநியோகத் தேவைப்பாடுகளுக்கும் பொருந்தக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள பணியாளர்களையே நாம் தீவிரமாகத் தேடுகின்றோம். வங்கியின் மிகப் பரந்த கிளை வலையமைப்புக்களும் சேவை மையங்களும் தமது சமுதாயத்துடன் நன்கு பரிச்சயமான மற்றும் அச்சமுதாயங்களில் கரிசீலணையுடன் பணியாற்றுவதற்காக அமர்த்தப்படக்கூடிய திறன் படைத்தவர்களை ஈர்ப்பதற்கான ஒரு தனித்துவமான விற்பனைத் திட்டங்களாகும். மேலும், எதிர்கால வங்கியியலாளர்களாக உருவாகுவதற்காக எமது தேவைப்பாடுகளுக்கு நன்கு பொருந்தக்கூடியவர்களைத் தெரிவுசெய்வதற்கு நாம் முகாமைத்துவப் பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டுள்ளோம். திறன்களில் உள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டு செலவினைச் சிக்கனப்படுத்துவதற்காக அவற்றினைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் நிவர்த்தி செய்வதற்கு திறன் விபரத் திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கைமுறைகளினால் சேகரிப்பது முதற்கொண்டு ஒன்லைன் நுழைவுப் பரீட்சைகளை நடத்துவது வரையில் டிஜிட்டல்மயமாக்கம் செலவுச் சிக்கனத்திற்குக் கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது.

பால்நிலை மற்றும் பிராந்திய ரீதியாகத் திறன் படைத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

வருடங்கள்	18-25 வருடங்கள்		26-35 வருடங்கள்		36-45 வருடங்கள்		46-55 வருடங்கள்		>56 வருடங்கள்		மொத்தம்		மொத்தம் %	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
மேல்	140	123	1	1	3	1	2				146	125	53.9	46.1
தென்	36	8									36	8	81.8	18.2
மத்திய	90	28		2							90	30	75.0	25.0
வட மேல்	29	16									29	16	64.4	35.6
ஊவா	55	6									55	6	90.2	9.8
வடக்கு	22	22									22	22	50.0	50.0
சப்ரகமுவ	56	14		1							56	15	78.9	21.1
கிழக்கு	37	7									37	7	84.1	15.9
வட மத்திய	45	10									45	10	81.8	18.2
மொத்தம்	510	234	1	4	3	1	2	0	0	0	516	239	68.3	31.7
சதவிகிதம் %	68.5	31.5	20.0	80.0	75.0	25.0	100.0	0	0	0	68.3	31.7		

முக்கியமான திறன் படைத்தவர்களை ஈர்த்தல் ஒரு சவாலாக இருப்பதுடன் கள அடிப்படையிலான அணிகளைத் தக்கவைப்பதும் ஒரு சவாலாக இருக்கின்றது. இதனைத் தீர்ப்பதற்கு நாம் விசேட திறன்களைக் கொண்டவர்களுக்கு மிகவும் போட்டித்தன்மைமிக்க ஊதியத்தினை வழங்குகின்றோம். எவ்வாறாயினும் வங்கியானது, ஊதியங்கள் மற்றும் நலன்களில் நியதிச்சட்ட வரம்புகளுக்கு இயைபுறவேண்டும் என்பதுடன் நாம் இதைத் தீர்ப்பதற்கு தீவிரமாக முயற்சி செய்கின்றோம். இதனைத் தீர்ப்பதற்காக விசேட திறன் படைத்தவர்களுக்கு நாம் கவர்ச்சிகரமான ஊதியத்தினை வழங்குகின்றோம். தகவல் தொழில்நுட்பம், இடர்நேர்வு முகாமைத்துவம், மற்றும் இயைபுறல் என்பவற்றில் திறன்படைத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது ஒரு சவாலாக இருக்கின்றது.

பால்நிலை மற்றும் பிராந்திய அடிப்படையில் ஊழியர் வெளியேறல்

வருடங்கள்	18-25 வருடங்கள்		26-35 வருடங்கள்		36-45 வருடங்கள்		46-55 வருடங்கள்		>56 வருடங்கள்		மொத்தம்		மொத்தம் %	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
மேல்	5	2	4	15	13	25	5	6	25	36	52	84	38.2	61.8
தென்			1	6	2	2		3	5	4	8	15	34.8	65.2
மத்திய	1	1		3	1	2		2	3	7	5	15	25.0	75.0
வட மேல்						1	3	1	7	7	10	9	52.6	47.4
ஊவா	1	1			1	1	1	1	6	1	9	4	69.2	30.8
வடக்கு		1	1		1		1		3	2	6	3	66.7	33.3
சப்ரகமுவ				2				2	1	5	1	9	10.0	90.0
கிழக்கு				1	1		2	1	1	1	4	3	57.1	42.9
வட மத்திய			1	1	4	2			1	1	6	4	60.0	40.0
மொத்தம்	7	5	7	28	23	33	12	16	52	64	101	146	40.9	59.1
சதவிகிதம் %	58.3	41.7	20.0	80.0	41.1	58.9	42.9	57.1	44.8	55.2	40.9	59.1		

ஊழியர் வெளியேறல் வீதங்களின் பகுப்பாய்வு

	2025	2024	2023
மொத்த ஊழியர் வெளியேறல்	247	304	293
வெளியேறல் வீதம்	3	4	4
தன்னிச்சையான வெளியேறல்	89	121	147
தன்னிச்சையான வெளியேறல் வீதம் %	1	2	2

அணியின் உள்ளடக்கம்

GRI 2-7

பால்நிலை மற்றும் பிராந்திய அடிப்படையில் மொத்த ஊழியர்கள் விபரங்கள் (நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஏனையோர்)

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்	மொத்தம் %
மேல்	1,223	2,005	3,228	40
தென்	302	519	821	10
மத்திய	368	502	870	11
வட மேல்	239	401	640	8
ஊவா	232	247	479	6
வடக்கு	181	236	417	5
சப்ரகமுவ	243	323	566	7
கிழக்கு	280	286	566	7
வட மத்திய	236	299	535	7
மொத்தம்	3,304	4,818	8,122	100

பால்நிலை மற்றும் பிராந்திய அடிப்படையில் நிரந்தர ஊழியர்கள்

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்	மொத்தம் %
மேல்	992	1,724	2,716	41
தென்	238	438	676	10
மத்திய	250	408	658	10
வட மேல்	191	350	541	8
ஊவா	155	205	360	5
வடக்கு	147	186	333	5
சப்ரகமுவ	156	277	433	7
கிழக்கு	227	250	477	7
வட மத்திய	164	241	405	6
மொத்தம்	2,520	4,079	6,599	100

வயது மற்றும் பால்நிலை அடிப்படையில் மொத்த ஊழியர்கள்

வயது	ஆண்	பெண்
18-25	650	521
26-35	516	1,049
36-45	1,291	2,602
46-55	601	370
>56	246	276
மொத்தம்	3,304	4,818

நிலை மற்றும் பிராந்திய அடிப்படையில் நிரந்தரமற்ற ஊழியர் விபரங்கள்

மாகாணம்	ஆண்	பெண்	மொத்தம்	மொத்தம் %
மேல்	231	281	512	34
தென்	64	81	145	10
மத்திய	118	94	212	14
வட மேல்	48	51	99	7
ஊவா	77	42	119	8
வடக்கு	34	50	84	6
சப்ரகமுவ	87	46	133	9
கிழக்கு	53	36	89	6
வட மத்திய	72	58	130	9
மொத்தம்	784	739	1,523	100

பல்வகைமை, சமத்துவம், மற்றும் உள்ளடக்கம்

GRI 405-1

சமமான வாய்ப்புடைய ஒரு தொழில்வழங்குனர் என்ற ரீதியில், எவ்வடிவிலுமான பாகுபாடுகள் இன்றி, வங்கியானது நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க ஆட்சேர்ப்பினையும் மேம்பாட்டினையும் பற்றிப்பிடிக்கின்றது. தேசம் முழுவதும் நாம் பதித்துள்ள காலடித்தடங்கள் வழியே, பரஸ்பர மரியாதை எனும் கலாசாரத்தினுள் பணியாற்றும் உயர் ஊக்கமும் பல்வகைமையுமிக்க தொழிற்படையினையே நாம் ஆட்சேர்ப்புச் செய்கின்றோம். பாகுபாடுமிக்க அல்லது தீங்குமிக்க நடத்தை சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இட்டுச்செல்லும்.

வருடங்கள்	பெருநிறுவன முகாமைத்துவம்		நிறைவேற்று முகாமைத்துவம்		உத்தியோகத்தர்கள் (3-III-Grade தரம் I)		பணியாளர் உதவித் தரம்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
18-25					1			
26-45				2	882	1,946	439	1,203
46-55	4	5	16	8	281	289	34	8
56 க்கு மேல்	5	2	5	2	150	222	13	2
மொத்தம்	9	7	21	12	1,314	2,457	486	1,213
சதவிகிதம் (%)	56.3	43.8	63.6	36.4	34.8	65.2	28.6	71.4

திணைக்கள ரீதியாகவும் பால்நிலை ரீதியாகவும் மொத்த ஊழியர்கள்

வியாபார அலகு	ஆண்	பெண்	மொத்தம்
கிளைகள்	2,217	3,758	5,975
பிராந்திய பிரதான காரியாலயம்	465	407	872
திறைசேரி மற்றும் PDU	13	24	37
பெருநிறுவனம் மற்றும் OSBU	43	110	153
கடல்கடந்த வாடிக்கையாளர் சேவைகள்	37	46	83
அட்டை மையம்	33	36	69
தலைமை அலுவலகம்	494	431	925
வியாபார மறுமலர்ச்சி அலகு	2	6	8
மொத்தம்	3,304	4,818	8,122

வங்கி ஊழியர்களல்லாத தொழிலாளர்கள்

GRI 2-8

வங்கி அதன் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக இவ்வாறான இரண்டு வகை ஊழியர் பதவிநிலைகளை பயன்படுத்துகின்றது. வங்கியியல் துறையில் நடைமுறை அனுபவத்தினைப் பெறுவதற்காகப் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களுக்கும் ஒப்பந்த ஊழியர்களுக்கும் உள்ளுறைப் பயிற்சி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

பாதுகாப்புச் சேவை மற்றும் சாரதிப் பணி போன்ற துணைச் சேவைகளை வழங்குகின்ற இரண்டாம் வகையினைச் சேர்ந்த தொழிலாளர்கள், இவர்களை வெளிவளமாக வழங்கும் கம்பனிகளில் இருந்து பெறப்படுகின்றனர். இவர்கள் வங்கி ஊழியர்களல்ல என்றாலும், வங்கியியல் செயற்பாடுகளுக்கு இன்றியமையாதது எனக் கருதப்படாத புறச் சேவைகளுக்கு இவர்களின் உள்ளீடுகள் அவசியமானவையாகும்.

வகை	மொத்தம்
தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகங்கள்	1,290
வெளிவளத்திடம் ஒப்படைக்கப்பட்ட பாதுகாப்பு	1,346
வெளிவளமாகப் பெறப்பட்ட சாரதிகள்	19
ஊழியர்களல்லாத மொத்தத் தொழிலாளர்கள்	2,655

திறன்மிக்கவர்களைத் தக்கவைத்தல்

திறன்மிக்கவர்கள் எமது வெற்றிக்கு அவசியமானவர்கள் என்பதால் இவர்களைத் தக்கவைப்பது என்பது 2025 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் சவால்மிக்கதாகவே அமைந்திருந்தது. புறநிலையில் தனியார் வங்கிகளும் நிதித் தொழில்நுட்பக் கம்பனிகளும் கவர்ச்சிகரமான சம்பளங்களை வழங்கித் திறன்மிக்கவர்களைத் தீவிரமாக ஆட்சேர்ப்புச் செய்வதாலும், உள்நிலையில், வங்கியினுள் ஒரு துறையில் இருந்து மற்றொரு துறைக்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் மாத்திரம் பணியாளர்கள் நகரும் பழைமையான நடைமுறைச் சிக்கல்களாலும் திறனும் தொழில்நுட்ப ஆற்றலுமிக்க இடைநிலைத் தொழிலாளர்கள் வங்கியை விட்டு வெளியேறுகின்றனர். இது குறுகிய காலத்தில் நிரப்புவதைச் சவால்மிக்கதாக்கும் வெற்றிடத்தினை உருவாக்குகின்றது. மேலும், இது நீண்ட காலத்தில் ஆட்சேர்ப்புச் செலவினை அதிகரித்து, நீண்ட காலத்தில் முக்கியமான பதவிகளுக்கான பதவித் தொடர்ச்சித் திட்டங்களைப் பலவீனப்படுத்துகின்றது. வெளிப்படையான தொடர்பாடலை வலுப்படுத்துவதற்கு, தொழில் விருத்திப் பிரச்சினைகளை ஊழியர்கள் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் சேர்ந்து தீர்ப்பதற்காக ஊழியர் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை (EAPs) தாபிக்கத் திட்டமிட்டுள்ளோம். பல சவால்களுக்கு மத்தியில், வங்கி அதன் பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்தின் மத்தியில் 94% தக்கவைப்பு வீதத்தினைப் பேணுகின்ற அதேவேளை 97% தக்கவைப்பு வீதத்துடன் வருடத்தினைப் பூர்த்திசெய்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

முகாமைத்துவப் பயிலுனர்கள்		வாடிக்கையாளர் சேவை உதவியாளர்		ஏனைய வகைகள்		ஒப்பந்த அடிப்படையிலான ஏனைய ஊழியர்கள்		பெண்		பெண் %	
ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
		652	525				1	653	526	55.4	44.6
2	4	96	186	372	295	13	15	1,804	3,651	33.1	66.9
				269	60			604	370	62.0	38.0
				70	43			243	271	47.3	52.7
2	4	748	711	711	398	13	16	3,304	4,818	40.7	59.3
33.3	66.7	51.3	48.7	64.1	35.9	44.8	55.2	40.7	59.3		

பால்நிலைச் சமத்துவம்

நாம் பல்வகைமையினையும் சமத்துவத்தினையும் உள்ளடக்கும்தன்மையினையும் போசிக்கும் விதத்தில் சமமான வாய்ப்புக்கான எமது கடப்பாடு பிரதிபலிக்கின்றது. பிரதான முகாமைத்துவப் பதவிகளில் 39% பெண்களையும் சிரேஷ்ட முகாமையாளர்களை விட உயர்வான பதவிகளில் 59% பெண்களையும் வங்கி கொண்டுள்ளமையினை எமது ஊழியர் வெளியேறல் விபரச் சுட்டி காட்டுகின்றது. அறவீடுகள் மற்றும் நிதி போன்ற பிரிவுகளில் பலர் தொழில்புரிவதுடன் தொழில் வளர்ச்சியினை அடைவதற்காக இவற்றில் இவர்களின் விசேட திறன்கள் மேலும் விருத்தி செய்யப்படுகின்றன. விசேட தேவையுடையவர்களுக்கு அவசியமான துணைச் சேவைகள் வழங்கப்பட்டு, ஊழியர்களின் நலனோம்புகையினை ஒரு பிரதான தெரிவடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு உள்ளடக்கும்தன்மைமிக்க வேலைத்தளம் உருவாக்கப்படுகின்றது.

பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் வங்கி பூச்சிய சகிப்புத்தன்மைக் கொள்கையினைக் கடைப்பிடிப்பதுடன் திருப்தியற்ற நிலைமைகளில் இருந்து சகல ஊழியர்களையும் பாதுகாப்பதற்காக அமுலிலுள்ள விசேட கொள்கைகளினுள் வன்முறைகள் கையாளப்படுகின்றன.

பால்நிலை ரீதியான பிராந்தியப் பரவல்

பிராந்தியம்	ஆண்	பெண்
அம்பாறை	126	112
அநுராதபுரம்	139	177
பதுளை	154	164
மட்டக்களப்பு	79	106
கொழும்பு வடக்கு	89	164
கொழும்பு கிழக்கு	78	185
கொழும்பு மேற்கு	75	214
கொழும்பு தெற்கு	96	230
காலி	99	195
கம்பஹா	171	375
ஹம்பாந்தோட்டை	103	135
யாழ்ப்பாணம்	95	135
களுத்துறை	92	184
கண்டி	151	277
கேகாலை	92	175
குருணாகல்	156	294
மாத்தளை	81	100
மாத்தறை	100	189
மொனராகலை	78	83
நுவரெலியா	136	125
பொலன்னறுவை	97	122
புத்தளம்	83	107
இரத்தினபுரி	151	148
வன்னி	86	101
திருகோணமலை	75	68
தலைமையலுவலகம்	622	653
மொத்தம்	3,304	4,818

வயது அடிப்படையிலான பிராந்தியப் பரம்பல்

வருடங்கள்	18-25 வயது		26-35 வயது		36-45 வயது		46-55 வயது		>56 வயது மற்றும் அதற்கு மேல்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
மேல்	176	205	223	406	443	1,078	266	172	115	144
தென்	50	44	52	134	138	281	49	31	13	29
வட மேல்	109	67	48	115	134	270	49	34	28	16
மத்திய	42	39	26	79	117	225	41	34	13	24
ஊவா	70	27	29	65	85	122	34	18	14	15
வடக்கு	26	41	29	35	79	133	37	23	10	4
சப்ரகமுவ	72	36	48	85	73	170	35	13	15	19
கிழக்கு	49	26	29	63	113	164	65	26	24	7
வட மத்திய	59	41	32	67	109	159	25	19	11	13
மொத்தம்	653	526	516	1,049	1,291	2,602	601	370	243	271

தொழில் வகை அடிப்படையிலான பால்நிலைச் சமத்துவம்

வகை	ஆண்	பெண்
பெருநிறுவன முகாமைத்துவம்	9	7
நிறைவேற்று முகாமைத்துவம்	21	12
உத்தியோகத்தர்கள் (3 – III – தரம் 1)	1,314	2,457
பணியாள் உதவியாளர்கள் தரங்கள்	486	1,213
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள்	748	711
முகாமைத்துவப் பயிலுனர்கள்/ IT பட்டதாரிகள்	2	4
சாரதிகள்	117	
பாதுகாப்பு பிரிவு	96	
செயலாளர்	21	243
குறைவான தரங்கள்	490	171
மொத்தம்	3,304	4,818

ஊதியத்தில் பால்நிலைச் சமத்துவம்

GRI 405-2

வங்கியின் ஆண் ஊழியர்களுக்கும் பெண் ஊழியர்களுக்கும் கிடைக்கும் வெகுமதிகளுக்கும் நலன்களுக்கும் முழுமையான கொடுப்பனவுச் சமத்துவமே அடிப்படையாகும். எந்த ஏற்றத்தாழ்வும் மாறுபாடும் சேவைக் காலம், விசேட திறன் தொகுதிகள் அல்லது விசேட தேவைப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புடையனவேயன்றி பால்நிலை அடிப்படையிலானவை அல்ல.

வங்கி அதன் அனைத்துத் தொழில் வகைகளிலும் அதேபோல் அனைத்துப் பிரதான செயற்பாட்டு அமைவிடங்களிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் அடிப்படைச் சம்பளத்திலும் மொத்தச் சம்பளத்திலும் 1:1 எனும் விகிதாசாரத்தினைப் பேணுகின்றது. எமது கொள்கையானது சகல ஊழியர்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்தி பூரணமான பாகுபாடின்மையினை உத்தரவாதப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், பதவிக் காலத்திலும் சம்பளத் தரத்திலும் உள்ள வித்தியாசங்களால் சிறிய வேறுபாடுகள் ஏற்படலாம்.

வகை	சராசரி அடிப்படைச் சம்பளம்		அடிப்படைச் சம்பளத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான விகிதாசாரம்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
பெருநிறுவன முகாமைத்துவம்	362,000.00	357,230.00	1.0	0.99
நிறைவேற்று முகாமைத்துவம்	289,480.29	288,474.09	1.0	1.00
உத்தியோகத்தர்கள்	125,287.25	126,500.25	1.0	1.01
பணியாள் உதவியாளர்கள்	74,137.84	74,424.45	1.0	1.00
ஏனைய வகைகள்	59,216.26	55,379.76	1.0	0.94

உள்ளூர்ச் சமுதாயத்தில் இருந்து அமர்த்தப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ விகிதாசாரம்

GRI 202-2

சிரேஷ்ட முகாமைத்துவ மட்டங்கள் பாகுபாடற்ற அடிப்படையில் நிதி, அபாயநேர்வு முகாமைத்துவம், உற்பத்தி மற்றும் சேவைப் புத்தாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நாம உருவாக்கம், ஆளுகை, கணக்காய்வு மற்றும் சட்ட இயைபுறல் என்பவற்றுடன் தொடர்புடைய பல்வகைமைமிக்க துறைகளில் இருந்து தெரிவுசெய்யப்படுகின்றன. வங்கியானது அதன் சகல தொழிற்படையினையும் உள்ளூர்ச் சமுதாயங்களில் இருந்து தெரிவுசெய்வதுடன் அவர்களின் வதிவிடப் பிரதேசங்களில் இருந்தே அவர்கள் பெரும்பாலும் தெரிவுசெய்யப்படுகின்றனர். ஏனெனில், நெருக்கமான உறவுகளை உருவாக்கும் உள்ளூர்ச் சமுதாயங்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் மக்களின் தேவைகளுக்குச் சேவையாற்றுகின்றனர். உள்ளூர்ச் சமுதாயங்களுடன் ஆழமான உறவுகளைப் பிரேரித்து சமய, கலாசார மற்றும் இனத்துவப் பல்வகைமைக்கான எமது உள்ளார்ந்த கடப்பாட்டினை அதிகரிக்க இது உதவுகின்றது.

பயிற்சி மற்றும் விருத்தி

GRI 404-1,2

வங்கியின் தந்திரோபாயமிக்க குறிக்கோள்களுடன் இயைபுறும் பயிற்சிக் கணிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் தயாரிக்கப்படும் வங்கியின் வருடாந்தப் பயிற்சிக் கலண்டருக்கு அமைவாக வங்கி ஊழியர் பயிற்சியினை நடத்துகின்றது. இலக்குவைக்கப்பட்ட விருத்தியினை உறுதிப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட திறன் இடைவெளிகளுக்கு அமைவாகப் பயிற்சி மணித்தியாலங்கள் ஒதுக்கப்படுகின்றன. வங்கியின் செயற்பாடுகள், இடர்நேர்வு முகாமைத்துவம், ஊழல் எதிர்ப்பு, தொழிற் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் பல்வேறு மென்திறன்கள் உள்ளிட்ட ஒரு கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வருடம் முழுவதும் வழங்கப்பட்டது. சராசரியாக, ஒவ்வொரு ஊழியரும் கிட்டத்தட்ட 27 மணித்தியாலங்கள் பயிற்சியினைப் பெற்றுள்ளதுடன் இதற்காக மொத்தம் 190.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. வங்கியின் ஊதியம், பதவியுயர்வுகள் மற்றும் ஏனைய நலன்கள் தொடர்பான தீர்மானம் வகுத்தலிலும் ஊழியர் ஊக்குவிப்பு மற்றும் முன்னெடுப்பினை அதிகரிப்பதிலும் பயிற்சியும் விருத்தியும் பிரதான வகிபாகத்தினை வகிக்கின்றன.

பயிற்சிக் கலண்டர்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்குபற்றுனர்கள்	மணித்தியாலங்கள்
உள்நிலை	491	27710	211,933
புறநிலை	96	474	6,122
கடல்கடந்தவை	20	72	2,583
மொத்தம்	607	28,256	220,638

	2025	2024	2023
பயிற்சிச் செலவு (மில்லியன் ரூபா.)	190.3	121.5	96.6
பயிற்சி மணித்தியாலங்கள்	220,638	196,755	190,671
ஊழியர் ஒருவருக்கான சராசரிப் பயிற்சி மணித்தியாலங்கள்	சுமார் 27 மணித்தியாலங்கள்	சுமார் 26 மணித்தியாலங்கள	சுமார் 25 மணித்தியாலங்கள்
டிஜிட்டல் பயிற்சிக்கான மணித்தியாலங்கள்	39,072	35,287	29,468
இணையவழி (online) பயிற்சி அமர்வுகள்	39	27	25

பால்நிலை அடிப்படையில் ஊழியர் ஒருவருக்கான சராசரிப் பயிற்சி மணித்தியாலங்கள்

ஆண் **சுமார் 24 மணித்தியாலங்கள்**

பெண் **சுமார் 29 மணித்தியாலங்கள்**

வருடத்தில் பயிற்சிக் கவனம் மற்றும் வழங்கல்	2025	2024	2023
வருடத்தின் போது திட்டமிடப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	525	475	375
வருடத்தின் போது நிறைவேற்றப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	607	591	511

உள்ளக வளவாளர்கள் வங்கிப் பணியாளர்களாவர் என்பதுடன் இவர்கள் சம்பந்தப்பட்ட தொழிநுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தங்களின் விடயத்தில் மிகுந்த திறமையுடையவர்களாவர். 2025 ஆம் ஆண்டின் போது 150 இற்கும் மேற்பட்ட உள்ளக வளவாளர்கள் அவர்களின் சேவைகளை வழங்கியுள்ளனர்.

பயிற்சி மற்றும் விருத்திச் செயன்முறை

- தந்திரோபாய திட்ட ஒருங்கிசைவு
- பயிற்சித் தேவைகள் பகுப்பாய்வு
- பயிற்சி முன்மொழிவுகளைப் பெறல்
- வருடாந்தப் பயிற்சித் திட்டத்தினை உருவாக்கல்
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடல்
- பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் திணைக்களங்களுடன் ஒருங்கிணைத்தல்
- பங்குபற்றுனர்களை நியமித்து அவர்களுக்கு அறிவித்தல்
- பயிற்சியினை நடத்துதல்
- பின்னூட்டலையும் வருகைப் பதிவினையும் சேகரித்தல்
- முறைமையினையும் தொடர் முன்னேற்றத்தினையும் இற்றைப்படுத்தல்

இன்னுமொரு மைல்கல்லினை அடைந்து டிஜிட்டல்மயமாக்கப்பட்ட கற்றல் முகாமைத்துவ முறைமையானது பல்வேறு தலைப்புக்களிலும் நடத்திய நேரடிப் பயிற்சிக்கு மேலதிகமாக 39000 டிஜிட்டல் பயிற்சி மணித்தியாலங்களை நிறைவேற்றியுள்ளது. LMS தளத்தின் பூரணமான செயற்பாடு 2026 நடுப்பகுதியளவில் எதிர்பார்க்கப்படுகின்றது. சகல திணைக்களங்களையும் இலக்குவைத்து ஒரு கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பணியாற்றி, ஒன்றிணைக்கப்பட்ட வழங்கலுக்குப் பங்களிப்பு வழங்கும் அணி செயற்பாட்டு ஆற்றல்கள் மற்றும் அணி ஒத்திசைவினைப் பதியவைப்பதற்காக நாம் வகிபாத்திர அடிப்படையிலான மற்றும் செயற்பாட்டின் அடிப்படையிலான பயிற்சியினை வழங்கியுள்ளோம். நிறைவேற்று முகாமைத்துவம் மற்றும் பெருநிறுவன முகாமைத்துவத்திற்காக வெளிநாட்டுப் பயிற்சி சம்பந்தப்படும் தொழில்முறை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் எமது சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தலைமைத்துவத் தயார்நிலையினை வலுப்படுத்தி புற வளவாளர்களுடன் திட்டமிடப்பட்டன.

தொழில் வகையின் அடிப்படையிலான பயிற்சி

தொழில் வகையின் அடிப்படையில் சராசரிப் பயிற்சி மணித்தியாலங்கள்	சராசரிப் பயிற்சி மணித்தியாலங்கள்	
	ஆண்	பெண்
பெருநிறுவன முகாமைத்துவம்	69	93
நிறைவேற்று முகாமைத்துவம்	42	85
உத்தியோகத்தர்கள் (3-III – தரம் I)	35	31
பணியாள் உதவியாளர்கள்	27	26
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள	17	33
முகாமைத்துவப் பயிலுனர்கள்/ IT பட்டதாரிகள்	20	79
ஏனையவை	9	20

LMS ற்கு மேலதிகமாக, பணியாளர் பயிற்சிக் கல்லூரி மென் திறன்களிலும் தனிப்பட்ட விருத்தியிலும் கவனம் செலுத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்து வழங்கியதுடன் இதில் தனிப்பட்ட விருத்தி, வாடிக்கையாளரை மையப்படுத்தியமை, மற்றும் விசேட அறிவுப் பகிர்வு ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தும் தலைப்புக்களும் உள்ளடங்கியிருந்தன

தலைமைத்துவத் தொடர்ச்சியை வலுப்படுத்தி முகாமைத்துவ ஆற்றலை அதிகரிப்பதற்காக, வருடத்தின் போது வங்கி அதன் கட்டமைக்கப்பட்ட தலைமைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்தது. உருவாகி வரும் தலைவர்களுக்கும் இருக்கின்ற தலைவர்களுக்கும் உபாயமார்க்கமிக்க சிந்தனையினையும் மக்கள் முகாமைத்துவத்தினையும் நிறுவனத்தின் நீண்ட காலக் குறிக்கோள்களுக்கு அமைவாக தீர்மானம் வகுக்கும் திறன்களையும் வழங்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது

நிகழ்ச்சித்திட்டம்	இலக்குக் குழு	அமர்வுகளின் எண்ணிக்கை	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
தலைமைத்துவ விருத்தி – வெளிநாடு	பெருநிறுவன முகாமைத்துவம்	2	9
மாற்ற முகாமைத்துவம் மற்றும் பல்வகைமையில் மக்களை முகாமைத்துவம் செய்தல்	கிளை/திணைக்களப் பணியாளர்கள்	10	332
செயற்திறன்மிக்க பயிற்சி, சிறந்த பணி உறவுகளுக்கான வழிகாட்டல்	கிளை முகாமையாளர்கள்	2	72
தலைமைத்துவப் பண்பு மேம்பாடு	கிளை முகாமையாளர்கள், கிளை/திணைக்களம்/ பிராந்தியப் பணியாளர்கள்	8	207
நாளைய தலைவர்களைப் போஷித்தல	கிளை/திணைக்களம்/பிராந்தியப் பணியாளர்கள்	2	66
பணி மற்றும் வேலை – வாழ்க்கைச் சமனிலையினை முன்னுரிமைப்படுத்தல்	கிளை/திணைக்களப் பணியாளர்கள்	12	465
உயர் செயலாற்றுகைக்காக அணி உருவாக்கம், அணிக் கூட்டுச் சக்தி	கிளை/திணைக்களம்/பிரரந்தியப் பணியாளர்கள் மற்றும் பிராந்திய இயைபுறல் உத்தியோகத்தர்கள்	4	124
மொத்தம்		40	1,275

ஊதியம் மற்றும் நலன்கள்

GRI 401-2

சகல நிரந்தர ஊழியர்களுக்கும் அவர்களின் ஊழியர் வகையின் அடிப்படையிலும் திறன்கள், இயல்பாற்றல், மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பவற்றின் அடிப்படையிலும் பரந்த அடிப்படையிலான பணம் சார்ந்த மற்றும் பணம் சாரா நலன்களை வங்கி வழங்குகின்றது. பாகுபாடின்மைக்குக் கடப்பாடு கொண்டுள்ள சமமான வாய்ப்புக்களை வழங்கும் ஒரு தொழில்வழங்குனர் என்ற ரீதியில் வங்கி அதன் ஊழியர்களின் நிலைபேறான வேலை – வாழ்க்கைச் சமனிலையினை மேம்படுத்தும் நிலைபேறான செயற்பாடுகளைப் பேணுவதற்கு நாடுகின்றது. கற்றல், விருத்தி, மற்றும் புதிய திறன் பயிற்சி என்பவற்றில் கணிசமாக முதலீடு செய்து எமது சிரேஷ்ட பணியாளர்களுக்கு பாதுகாப்பான ஓய்வூதிய நலன்களை வழங்குகின்றோம்.

அமுலில் இருக்கும் கூட்டுப் பேரம்பேசல் உடன்படிக்கையானது வங்கிப் பதவிநிலையில் 99% இனை உள்ளடக்குவதுடன் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வரும் புதுப்பிப்புச் சுற்றில் ஊதிய மற்றும் நலன் அதிகரிப்பு ஒருங்கிணைக்கப்படுகின்றது. இந்த உடன்படிக்கையானது 2024 ஜனவரி 1 முதல் 2026 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக 2024 ஜனவரியில் புதுப்பிக்கப்பட்டது.

ஊழியர்கள் பணிக்கொடைக்கும் அத்துடன் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவுகளுக்கும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இயைபாக உரித்துடையவர்களாவர். 2025 நிதி ஆண்டுக்காக வங்கியானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக 26.6 மில்லியன் ரூபாவினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக 2,106.3 மில்லியன் ரூபாவினையும் பங்களிப்பாக வழங்கியுள்ளது

பிரசவ விடுப்பு

GRI 401-3

	2025	2024
தகப்பனாருக்கான விடுப்புக்கு உரித்துடைய ஊழியர்களின் எண்ணிக்கை	4,818	4,736
பிரசவ விடுப்பினை எடுத்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	227	655
பிரசவ விடுப்பு முடிந்த பின்னர் அறிக்கையிடல் காலப்பகுதியில் வேலைக்குத் திரும்பிய ஊழியர்களின் எண்ணிக்கை	115	511
பிரசவ விடுப்பு முடிவடைந்த பின்னர் பணிக்குத் திரும்பிய 12 மாதங்களின் பின்னரும் வங்கியில் தொடர்ந்தும் பணியில் நிலைத்திருக்கும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை	115	511
வேலைக்குத் திரும்பியோர் (%)	50.7	78.0
தக்கவைப்பு வீதம் (%)	100	100

நலன்கள்	விபரிப்பு
ஆயுள் காப்புறுதி	தனிப்பட்ட விபத்துக் காப்புறுதித் திட்டம் சுகாதாரப் பராமரிப்பு
உடல்நலக் கவனிப்பு	சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலை அனுமதி உள்ளிட்ட மருத்துவ நலன்கள், மரணப் பணிக்கொடை
அங்கவீனம் மற்றும் இயலாமை உள்ளடக்கம்	ஆம்
இருப்பு உரித்தாண்மை	இல்லை
ஓய்வூதிய ஏற்பாடு	ஆம்
ஏனையவர்கள்	வருடாந்த போனஸ்கள் மற்றும் கொடுப்பனவுகள், பயணம் சில குறிப்பிட்ட தரங்களுக்கான கொடுப்பனவுகள், விடுமுறை விடுதிகள், பணியாள் கடன்கள், நூலக வசதிகள், வெகுமதிகள் மற்றும் அங்கீகார நிகழ்ச்சித்திட்டங்கள், 25 வருட சேவைப் பாராட்டு நிகழ்ச்சித்திட்டம், வெளியிடப் பணியாளர்களுக்கான தங்குமிட வசதிகள்
பெற்றோருக்கான விடுப்பு	பிரசவ விடுப்பினை மட்டும் வழங்குதல்

ஆகக்குறைவான ஊதியத் தேவைப்பாடுகள்

GRI 202-1

வங்கித் துறை, சட்ட ரீதியாக ஆணை வழங்கப்பட்ட பால்நிலை அடிப்படையிலான ஆகக்குறைவான ஊதியத்தினை நுழைவு மட்டத்தில் குறித்துரைப்பதில்லை. உள்நாட்டில் ஆகக்குறைவான ஊதியத் தேவைப்பாடுகளை விஞ்சும் நுழைவு மட்டச் சம்பளங்களை வங்கி வழங்குகின்றது.

செயற்பாட்டு மாற்றங்கள் தொடர்பான அறிவித்தல் வழங்குவதற்கான ஆகக்குறைவான காலம்

GRI 402-1

செயற்பாட்டு மாற்றங்கள், இடமாற்றங்கள், மற்றும் தொழில் சுழற்சிகள் பாதிக்கப்படும் ஊழியர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் இதன்போது சௌகரியத்துடனும் இலகுவாகவும் அவசியமான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்படுகின்றது. மதியுரை மற்றும் பேச்சுவார்த்தைக்கான அறிவித்தல் காலம் அமுலிலுள்ள கூட்டு உடன்படிக்கைகளினுள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.



தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

GRI 403-2, 3, 4, 5, 6, 7, 9, 10

வங்கியானது எமது ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான வேலைத்தளத்தினைப் பேணுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. வங்கி அதன் செயற்பாடுகளில் காணப்படும் சுகாதார மற்றும் பாதுகாப்புக் கரிசணைகளைத் தீர்த்து சகல ஏற்புடைய பாதுகாப்பு நியமங்களுக்கும் இயைபுறுவதன் மூலம் ஒரு பாதுகாப்பான வேலைச் சூழலை உறுதிப்படுத்துகின்றது. பாதுகாப்பின் வலுவான கலாசாரத்தினை மேம்படுத்தி, ஓர் ஆபத்தற்ற வேலைத்தளத்தினைப் பேணுவதற்கு ஒரு பரிபூரணமான சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கை அமுலில் உள்ள அதேவேளை ஏற்படும் சாத்தியமுள்ள சம்பவங்களில் இருந்து ஊழியர்களைப் பாதுகாப்பதற்கு எமது ஊழியர் விழிப்புணர்வு முன்னெடுப்புக்களையும் பயிற்சியினையும் வலுப்படுத்துகின்றது. வேலையுடன் தொடர்புடைய ஊழியர் மரணங்கள் எவையும் 2025 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்படவில்லை.

வங்கியியல் உதவிச் சேவைளுக்கான பிரதிப் பொது முகாமையாளரிடம் நேரடியாக அறிக்கையிடும் பிரத்தியேகப் பிரிவான ‘தீ மற்றும் அனர்த்த மீளல் பிரிவு’ வங்கியின் பாதுகாப்பு முன்னெடுப்புக்களை மேற்பார்வை செய்கின்றது. கிளைகளையும் தலைமை அலுவலகத்தினையும் சேர்ந்த பணியாளர்கள் பிரதேச ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்றுவதுடன் தொடர்புடைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் பயிற்றப்பட்டுள்ளனர். ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும் அபாயநேர்வு மதிப்பீட்டுக்கும் சம்பவ விசாரணைக்கும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் பொறுப்பினைக் கொண்டிருப்பார். வங்கியின் ஒவ்வொரு திணைக்களத்திற்குமென ஓர் அனர்த்த மீளல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், கொழும்பு தீயணைப்புச் சேவைத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வங்கி தீயணைப்பது பற்றிய வருடாந்தப் பயிற்சியினை நடத்தியது.

தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலும் பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டதுடன், அவசர சூழ்நிலைகளில் தயார்நிலையில் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக முதலுதவிப் பயிற்சிகள் இதன் போது வழங்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டு, வேலையுடன் தொடர்புடைய காயமேற்பட்ட சம்பவங்கள் 15 அறிக்கையிடப்பட்டுள்ளன. வேலையுடன் தொடர்புடைய சுகவீனங்கள் அறிக்கையிடப்படவில்லை.

எமது ஊழியர்களின் தனிப்பட்ட விருத்திக்கும் தொழில்முறை விருத்திக்கும் அவர்களின் மனநல ஆரோக்கியம் ஒரு பிரதான கூறு என்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வங்கி “சுய நலமடைதல் மையத்தினை” (Self Wellness Centre) தாபித்துள்ளது. இங்கே, ஆலோசனை உதவி தேவைப்படுபவர்களின் மனநல ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்காகத் தகைமை பெற்ற நிபுணர்களின் மூலம் ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் அச்சுறுத்தல் இல்லாத வகையிலும் முற்றுமுழுவதும் பாதுகாப்பான சூழலிலும் தீர்க்கப்படுகின்றன என்பதை மனித வளத் திணைக்களம் உறுதிப்படுத்துகின்றது. இந்த ஊழியர்களுக்கு பெற்றோருக்குரிய உதவி வழங்கப்பட்டு இவர்களின் பிள்ளைகளுக்கும் இச்சேவைகள் நீட்டிக்கப்படுகின்றன. வங்கித் துறையில் இவ்வாறாக வழங்கப்படுவது இதுவே முதற் தடவையாகும். ஊழியர்களின் உடல் மற்றும் மனநல ஆரோக்கியத்தினை மேலும் முன்னேற்றுவதற்காக, பங்குபற்ற விருப்பமுடையவர்களுக்காகத் தலைமை அலுவலகத்தில் யோகாசனம் மற்றும் ஒக்சிசனை அடிப்படையாகக் கொண்ட சக்தியில் தங்கியிருக்கும் உடற் பயிற்சிகள் இலவசமாக நடத்தப்படுகின்றன. ஊழியர்களின் சுகாதாரத்திற்கும் நலனோம்புகைக்கும் உதவுவதற்காக முன்னாள் தலைமை அலுவலகத்தில் நவலோக மருத்துவ நிலையம் ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய அடிப்படையிலான ஆட்சேர்ப்பு மற்றும் பணியமர்த்தலை மேற்கொள்வதன் மூலம் வேலை - வாழ்க்கைச் சமனிலைக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. இதனால் நீண்ட பயண நேரங்கள் குறைக்கப்பட்டு ஊழியரின் நாளாந்த வாழ்க்கைக்கு ஏற்படும் இடையூறுகள் குறைக்கப்படுகின்றன. மனித - இயந்திர இடைமுகம் மனித உடலில் நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதால், சௌகரியமான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக எமது வேலை நிலையங்கள் உடல்நலத்திற்கு உகந்த பணியிட அமைப்பின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர்களின் தொடர்ச்சியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்காக வேலைச் சூழல் இதன் மூலம் ஊழியர்களுக்கான ஒரு பாதுகாப்பான வலயமாக மாற்றப்படுகின்றது

2025 ஆம் ஆண்டு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்கள்

சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் செலவினங்கள்	ரூபா மில்.
மருத்துவச் செலவுகள்	2,804.6
தீ மற்றும் பாதுகாப்பு	88.4
மொத்தம்	2,893.0

தொழிற் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சி

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுனர்கள்
மக்கள் வங்கியின் வியாபாரத் தொடர்ச்சித் திட்டம், அனர்த்த மீளல் திட்டங்கள் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	30	1,745
வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமை	1	127
வேலைத்தள தீ மற்றும் பாதுகாப்புக் கருத்தரங்கு	2	69
மொத்தம்	33	1,941

செயலாற்றுகை முகாமைத்துவம்

GRI 404-3

வங்கி அதன் சகல ஊழியர்களுக்காகவும் இரு வழிச் செயலாற்றுகை முகாமைத்துவ முறைமை மூலம் முன்தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தெரிவடிப்படைக்கு அமைவாக வருடாந்தச் செயலாற்றுகை மதிப்பீடுகளை நடத்துகின்றது. இது, ஊழியர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் இடையில் பரஸ்பரப் பின்னூட்டலை இயலுமாக்குகின்றது.

உற்பத்தித்திறனையும் வெகுமதிகளையும் மதிப்பிடுவதற்கான புதிய மதிப்பீட்டு முறைமைக்கு ஊழியர்கள் பழக்கப்பட்டுள்ளதால், ஒன்லைன் வழியேயான இரு வழிச் செயலாற்றுகை முகாமைத்துவ முறைமை தொடர்ந்தும் உந்தம் பெற்றது. சுய மதிப்பீட்டுக் கண்ணோட்டத்தில் இருந்து நோக்குகையில், ஒருவரின் உற்பத்தித்திறன் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்கி, இரண்டாம் நிலை மேற்பார்வையினால் நடத்தப்படும் மதிப்பீடானது அர்த்தபூர்வமான கலந்துரையாடல்களுக்கும் திறன் இடைவெளி அடையாளப்படுத்தல்களுக்கும் பொருத்தமான கற்றல் மற்றும் விருத்திக்கும் இட்டுச்சென்றது. 2025 ஆம் ஆண்டில், வங்கியின் ஊழியர்களில் 100 சதவிகிதமானவர்கள் வருடாந்தச் செயலாற்றுகை மீளாய்விற்கு உட்பட்டு, விருத்தி, அங்கீகாரம் மற்றும் சகல மட்டங்களிலும் தொழில் வளர்ச்சி என்பவற்றினை அடைந்தனர் என்பதை வங்கி உறுதிப்படுத்தியது

பதவியுயர்வுகளும் மாற்றங்களும்

வங்கியின் பதவியுயர்வும் இடமாற்றக் கொள்கைகளும் கீழிருந்து மேலான மற்றும் சம மட்டங்களிலான தொழில் வளர்ச்சிக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சகல மட்டங்களிலும் ஊழியர்களுக்கான அபிவிருத்தி வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன. இந்தக் கொள்கைகள் வெளிப்படைத்தன்மையானவையாகவும் ஒவ்வொரு தரத்திற்கு அமைவாகக் கட்டமைக்கப்பட்டவையாகவும் இருப்பதுடன் தொழில் முன்னேற்றத்தில் நியாயமானதன்மை மற்றும் தெளிவினையும் உறுதிப்படுத்துகின்றன.

சிரேஷ்ட முகாமையாளர் மட்டம் வரையான பதவியுயர்வுகள் எழுத்துப் பரீட்சையினையும் வாய்மூலப் பரீட்சையினையும் அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை, நிறைவேற்று, பெருநிறுவன முகாமைத்துவ நியமனங்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் ஒரு நேர்முகப்பரீட்சைச் செயன்முறை மூலம் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன. தொழில் மேம்பாட்டு வாய்ப்புக்கள் பொதுவாக வெற்றிடங்கள் ஏற்படுகையில் உருவாகி, ஊழியர் வளர்ச்சிக்கான தெளிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட பாதையினை வழங்குகின்றன.

வங்கிச் சேவைத் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, பணியாற்றிக் கொண்டிருக்கும் இடத்தில் இருந்து புதிய ஓர் இடத்திற்கு இடமாற்றங்களை மேற்கொள்கையில், ஊழியர் பயணம் செய்யவேண்டியிருக்கும் தூரம் பற்றிய கரிசனையுடனேயே அந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் ஏற்படும் ஏதாவது அதிருப்தி தொடர்பாகத் தீர்வுக்கான இடமாற்றக் கொள்கையின் நோக்கெல்லையின் கீழ் தாபிக்கப்பட்ட மேன்முறையீடுகள் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும்.

பதவி வரிசைத் திட்டமிடல்

நிறைவேற்று மற்றும் பெருநிறுவன முகாமைத்துவ மட்டங்களில் உபாயமார்க்க ரீதியாகக் கலந்தாராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவி வரிசைத் திட்டம் அமுலில் உள்ளது. இது வங்கிச் சேவையின் நிலைபேறானதன்மைக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதுடன் முகாமைத்துவ வகைக்காக வடிவமைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலைத் திட்டத்தினால் ஆதாரப்படுத்தப்பட்டதாகும்.

வங்கியானது வங்கியாளர்களின் இளம் தலைமுறையினர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிறைவேற்று விருத்தி மற்றும் தலைமைத்துவத் திறன் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்றது. பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பதவிகளை வைத்திருப்பதே இதன் நோக்கமாகும்



ஊழியர் ஈடுபாட்டுச் செயற்பாடுகள்

வெசாக் அன்னதானம் வழங்கல் மற்றும் கல் விகாரையில் மதசில் அனுஷ்டித்தல்

47 வது வருடாந்த நத்தார் பாடல்கள்

பொசன் பூரணை பக்திப் பாடல்கள் மற்றும் அறச் செயற்பாடுகள்

21 வது வருடாந்த கிளைகளுக்கு இடையிலான வினா விடைப் போட்டி

பல்வேறு வகையான விளையாட்டுப் பண்டிகைகள்

ஈடுபாடுமிக்க பணியாளர்கள் வலுவூட்டப்பட்ட அணியாகும் என்பதுடன் இந்த அணி ஒத்துழைப்பு, புத்தாக்கம் மற்றும் உள்ளடக்கும்தன்மை என்பவற்றுக்கான கலாசாரத்தினைப் போஷிக்கின்றது. முறைசாரா ஒன்றுகூடல்களில் ஊழியர் இடையீடுகளை இயலுமாக்கி நாம் தொடரான கட்டமைக்கப்பட்ட ஈடுபாட்டுச் செயற்பாடுகளை நடத்தினோம். இச்செயற்பாடுகளுள் புறச் சமூக நலனோம்புகையும் விளையாட்டு நிகழ்வுகளும் உள்ளகக் கலந்துரையாடல் மன்றங்களும் உள்ளடங்குகின்றன. இவை உற்பத்தித்திறனும் மீண்டெழுந்தன்மையும் கொண்ட எதிர்காலத்திற்குத் தயாரான அணியின் நிறுவன இலக்குகளுடன் பணியாளர் அபிலாஷைகளை ஒத்திசைவிக்கின்றன.

பாகுபாடுமிக்க நிகழ்வுகளும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளும்

GRI 406-1

தொழிற்துறையில் ஆகக் கூடிய பெண் தொழிலாளர்களைக் கொண்ட வங்கியாக மக்கள் வங்கி விளங்குகின்றது. இது வங்கியின் பாகுபாடின்மைக் கொள்கையினை எடுத்துக் காட்டுகின்றது. 59% பெண் ஊழியர்களைக் கொண்ட நாடளாவிய ஒரு நிறுவனம் என்ற ரீதியில் வங்கி அதன் பெண் ஊழியர்களின் வேலை – வாழ்க்கைச் சமனிலை தொடர்பான சவால்களைக் கருத்திற்கொள்கின்றது. உடல் ரீதியான மற்றும் மனோ ரீதியான துன்புறுத்தல்கள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் எவ்வகையிலும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்லும். நாம் எமது செயன்முறைகளை அதிகரித்த விதத்தில் டிஜிட்டல் தளங்களுக்கு மாற்றுவதால் இது பௌதிக வெளிகளுக்கும் மெய்நிகர் வெளிகளுக்கும் ஏற்புடையதாகும்.

2025 ஆம் ஆண்டின் போது, சகல கிளைகளிலும் தலைமை அலுவலகத்திலும் பாகுபாடு பற்றிய முறைப்பாடுகள் எவையும் துன்புறுத்தல்கள் பற்றிய முறைப்பாடுகள் எவையும் வங்கியினால் பதிவுசெய்யப்படவில்லை. எமது ஊழியர்களின் நலனோம்புகை தொடர்பாக நாம் கொண்டுள்ள கடப்பாட்டினையே இது பிரதிபலிக்கின்றது

மனித உரிமைகள், சிறார் ஊழியம் மற்றும் பலவந்த ஊழியம்

GRI 408-1, 409-1

எமது நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் எம் மண்ணின் மீயுயர் சட்டமான அரசியலமைப்புக்கு நாம் கட்டாயமாக இயைபுறுகின்றோம். அத்துடன், எந்த விதமான புறக் காரணிகளையும் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு நபரினதும் பிரிக்க முடியாத உரிமைகளைப் பிரகடனப்படுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 1948 ஆம் ஆண்டு ஏற்று அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தினையும் நாம் கட்டாயமாகப் பின்பற்றுகின்றோம்.

நாம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தி, அனைவரின் உரிமைகளையும் பற்றிப்பிடிக்கும் விதத்தில் எமது வங்கிச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றோம்.

அறிக்கையிடல் காலப்பகுதியின் போது, சிறார் ஊழியம், பலவந்த ஊழியம் அல்லது கட்டாய ஊழியம் ஆகியவற்றுக்கான குறிப்பிடத்தக்க அபாயநேர்வினை எந்த விநியோகத்தரும் அல்லது செயற்பாட்டாளரும் ஏற்படுத்தவில்லை.

“திட்வா” சூறாவளிக்கான பதிற்செயற்பாடாக பணியாளர் நலனோம்புகை

திட்வாவுக்கான பதிற்செயற்பாடாக, நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு வங்கி நிதி மற்றும் உடனடி நிதி உதவியாக 20000 ரூபா வழங்கப்பட்டதுடன் 135 ஊழியர்களுக்கு “மஹஜன மெஹவர செனஹச” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10000 ரூபா வழங்கப்பட்டது. பத்து லட்சம் ரூபா உச்ச எல்லையுடன் “திட்வா” கடன் வசதியும் ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பெருநிறுவன முகாமைத்துவம் மற்றும் பணியாளர் உறுப்பினர்கள் கொழும்பு உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சுத்தம் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டு மீளமைப்புப் பணிகளிலும் உதவினர்.

சவால்கள்

எமது தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்கு வளங்களை வழங்குவதில் அனுபவமும் அறிவும் செயற்திறனும் கொண்ட தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை ஆட்சேர்ப்புச் செய்வது நாம் எதிர்நோக்கும் சவாலாகும். ஆட்சேர்ப்புச் செய்யக்கூடியவர்களாக இருக்கும் தொழில்முறையானவர்கள் அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற ரீதியில் எம்மால் செலுத்த முடியாத ஊதியத்தினைக் கோருகின்றனர்.

தோற்றப்பாடு 2026

டிஜிட்டல்மயமாக்கப்பட்ட கற்றல் மற்றும் விருத்தி என்பவற்றின் உதவியுடன் மீளாய்வு செய்யப்பட்ட பதவியுயர்வுகள், ஆட்சேர்ப்புக்கள் மற்றும் ஊதியத் திட்டம் ஆகியவற்றினை அமுலில் கொண்டு, சந்தையின் நடப்புக் கேள்விகளுக்குப் பொருந்தும் வகையில் எமது நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மனித வள உபாயமார்க்கம் வங்கியின் உபாயமார்க்கமிக்க குறிக்கோள்களுடன் பிணைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை அடைவதற்கும் எமது வெற்றிகரமான செயலாற்றுகைக்கும் இது அத்திவாரமாக உள்ளது. நாம் சவால்களுக்கு முகங்கொடுத்தாலும், எமது பதவிநிலையில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு நாம் எமது திறன்படைத்த நிபுணர்களைத் தொடர்ந்தும் அயராது தேடி வருகின்றோம

சமூக மற்றும் உறவு மூலதனம்

சமூக மற்றும் உறவு மூலதனத்தினை உருவாக்கிப் போஷிப்பது எமது நிலைபேறான வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும். வங்கியின் உபாயமார்க்கமிக்க தோற்றப்பாடாக, வெறுமனே கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் வங்கிச் சேவைக்கு அப்பால் செல்வதற்கு வாடிக்கையாளர்களுடனும் வியாபாரப் பங்காளர்களுடனும் முதலீட்டாளர்களுடனும் சமுதாயங்களுடனும் ஒழுங்குபடுத்துனர்களுடனும் ஆழமான ஈடுபாடு கொள்வது அத்தியாவசியமானதாகும்.

எமது கவனம்

உள்ளடக்கமிக்க டிஜிட்டல் தளங்களின் தொடர்ச்சியான விருத்தியிலும் சமுதாய வலுவூட்டல் முன்னெடுப்புக்களிலும் கவனம் குவித்து எமது கிளை வலையமைப்பின் மூலம் எமது விரிவான பிரசன்னத்தினைப் நாம் பேணினோம். பொது நலனோம்பலை ஒரு பிரதான குறிக்கோளாகக் கொண்ட நம்பிக்கைக்குரிய நிதிப் பங்காளர் என்ற ரீதியில் நாம் பங்கீடுபாட்டாளர் நம்பிக்கையினைத் தொடர்ந்து மேம்படுத்தி இலங்கையின் சமூக – பொருளாதார அபிவிருத்திக்கு அர்த்தபூர்வமாகப் பங்களிப்பு வழங்குகின்றோம்.

எமது தந்திரோபாயம்

சமூக மற்றும உறவு மூலதனத்தினை வங்கி உபாயமார்க்கமிக்க சொத்தாகக் கருதி, பல்வேறு பங்கீடுபாட்டாளர்கள் குழுக்களுக்கு இடையில் நம்பிக்கையின் அடிப்படையிலான பங்காண்மையினை முன்னுரிமைப்படுத்துகின்றது. உள்ளடக்கும்தன்மையுடைய அடைவின் மூலம், எமது விரிவான கிளை வலையமைப்பினையும் டிஜிட்டல் தளங்களையும் பயன்மிக்க வகையில் பயன்படுத்தி, பல்வகைமைமிக்க மக்கள் பிரிவுகளில் நாம் உறவுகளை ஆழப்படுத்தியுள்ளோம். வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கங்கள் மூலமும் வெளிப்படைத்தன்மையுடைய விநியோகத்தர் ஈடுபாடு மூலமும் ஆளுகைச் சட்டகங்களில் வகைப்பொறுப்பு மூலமும் இலங்கையின் சமூக – பொருளாதார வளர்ச்சியில ஒரு நம்பிக்கைக்குரிய பங்காளராக நாம் எமது நிலையினை வலுப்படுத்தியுள்ளோம.

முக்கியமான அடைவுகள்

2025 ஆம் ஆண்டில் புதிதாகச் சேர்ந்துகொண்ட வாடிக்கையாளர்கள்	**540,740**
வாடிக்கையாளர் முறைப்பாட்டுத் தீர்வுகள்	**89.7%**
டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் சுமார்	**200 பில்லியன்**
டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் பெறுமதி	**ரூ. 1.7 ரில்லியன்**
துணை வங்கிகளதும் வொஸ்ட்ரோ முகவர்களதும் எண்ணிக்கை	**136**
உள்நாட்டு விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள்	**96.1%**
பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு முதலீடுகள்	**ரூ. 26.9 மில்லியன்**
சமுதாய மட்ட அபிவிருத்திக் கடன் வழங்கல்	**ரூ. 15.8 பில்லியன்**
அரசாங்கத்திற்கு வழங்கிய பங்களிப்பு	**ரூ. 49.0 பில்லியன்**
உரிமை முதலில் இருந்து கிடைத்த லாபங்கள்	**20.1%**

தாக்கம் ஏற்படுத்திய முக்கியமான விடயங்கள்

விநியோகத்தர்கள் தடையற்ற செயற்பாட்டினை உறுதிப்படுத்தியவாறாக நாம் வாடிக்கையாளரை மையப்படுத்திய வியாபாரத்தினை நடத்துகின்றோம். பொறுப்புவாய்ந்த கடன் வழங்கலை நடைமுறைப்படுத்துவதன் மூலம், வங்கி நிதி உள்ளடக்கும்தன்மையினை மேம்படுத்தி நீண்ட காலத்தில் நிலைபேறான வியாபாரத்தினை நடத்துகின்றது.

- வாடிக்கையாளர் திருப்தி
- வாடிக்கையாளர் தரவுப் பாதுகாப்புப் பொறுப்பு
- பொறுப்புமிக்க கடன் வழங்கல்
- பெறுமதிச் சங்கிலி
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
- டிஜிட்டல் தலைமைத்துவம்



N	O	I	S	E
தேவைகள் NEEDS	வாய்ப்புக்கள் OPPORTUNITIES	மேம்பாடுகள் IMPROVEMENTS	பலங்கள் STRENGTHS	விதிவிலக்குகள் EXCEPTIONS
பங்கீடுபாட்டாளர்களுடன், குறிப்பாக, ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் சமுதாயங்களுடன் நம்பிக்கை மற்றும் வெளிப்படை-த்தன்மையினை வலுப்படுத்தல்.	சமுதாய உறவுகளை ஆழப்படுத்துவதற்காக வங்கியின் விரிவான கிளை மற்றும் டிஜிட்டல் வலையமைப்பினைப் பயன்படுத்தல்.	தனிப்பட்டதாக்கப்பட்ட ஈடுபாட்டுக்காக மேம்பட்ட வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவ முறைமைகளில் முதலீடு செய்துள்ளமை.	அரசுக்குச் சொந்தமான நம்பிக்கைக்குரிய நிதி நிறுவனம் என்ற ரீதியில் வலுவான வணிக நாம நன்மதிப்பு.	மாற்றுப் புத்தாக்க டிஜிட்டல் தீர்வுகளை வழங்கும் தனியார் வங்கிகள் மற்றும் நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களின் போட்டி.
அனுகூலம் கிட்டாத மக்களுக்கு உள்ளடக்கும்த-ன்மையுடைய நிதிச் சேவைகளை விஸ்தரித்தல்.	நிதி உள்ளடக்கம் மற்றும் சேமிப்புக் கலாசாரத்தில் ஒரு தேசியத் தலைவராக நிலைபெற்றுள்ளமை.	டிஜிட்டல் நிலைமாற்றத்தில் தொடர்ந்து முதலீடு. மன்றங்கள், கணிப்பீடுகள், மற்றும் சமுதாய நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் அதிகரித்த பங்கீடுபாட்டாளர் கலந்துரையாடல்.	பல்வகைமைமிக்க மக்கள் பிரிவினராலும் அணுகக்கூடிய பரந்த கிளை வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் தளங்கள்.	சேவைத் தரம் அல்லது வெளிப்படைத்தன்மைக் குறைபாடுகள் இருப்பின் ஏற்படக்கூடிய நன்மதிப்புச் சார்ந்த அபாயநேர்வுகள்
உருவாகும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு டிஜிட்டல் ஈடுபாட்டினை அதிகரித்தல்.	சமூக – பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் ஒத்துழைத்தல்.	வகைப்பொறுப்பு மற்றும் சமூகத் தாக்கம் என்பவற்றினை எடுத்துவிளக்குவதற்காக மேம்பட்ட சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை அறிக்கையிடல்.	சேமிப்பினையும் நிதி அறிவினையும் மேம்படுத்துவதில் நீண்ட காலமாக இருந்து வரும் சமுதாயப் பிரசன்னம் மற்றும் நம்பகத்தன்மை. இயங்குவதற்கான வலுவான சமூக உரிமம்.	வாடிக்கையாளர் நம்பிக்கை மற்றும் உறவு உறுதிப்பாட்டினைப் பாதிக்கும் பொருளாதாரத் தளம்பல் நிலை. ஆட்சேர்ப்புச் சவால்கள்.

ஐநா நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு வழங்கிய பங்களிப்புக்கள்

1 NO POVERTY

வங்கியின் எங்கும் வியாபித்துள்ள கிளைகளும் சேவை நிலையங்களும் அனுகூலம் கிட்டாத மக்களைச் சென்றடைவதற்கு அதிகரித்த ஆற்றலை வழங்கி நிதி உள்ளடக்கமிக்க உந்துசக்திக்கு உதவுகின்றது. ஒவ்வொரு வாடிக்கையாளர் வகைக்கும் பொருந்துகின்ற பரந்த வீச்சிலான சேவைகளையும் உற்பத்திகளையும் வழங்குவதன் மூலம் வறுமை ஒழிப்பும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களுமே இலக்காக இருக்கின்றன

9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE

புத்தாக்கத்துக்கான வங்கியின் ஆற்றல் சகல பரப்புக்களிலும் வாடிக்கையாளர்களுக்கும் டிஜிட்டல்மயமாக்-கத்திற்குமான கலப்பினை வங்கி வழங்குவதிலும் சந்தைக்கும் செயன்முறை மீள்கட்டமைப்புக்குமான வேகத்தினை இயலுமாக்குவதிலும் பிரதிபலித்தது. இந்தத் தேவைப்பாடுகளை வங்கியின் வியாபார நடத்தையில் தொடர்ச்சியான அடிப்படையில் புகுத்துவதற்கான வங்கியின் கடப்பாட்டுக்கான தெளிவான சான்றாக துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல்மயமாக்க உந்தம் காணப்படுகின்றது

10 REDUCED INEQUALITIES

பொது நலனோம்பலையும் நிதி உறுதிப்பாட்டினையும் இணைக்கும் வங்கியின் உபாயமார்க்கம் வங்கியின் வாடிக்கையாளர் தளத்தில் பாரிய மக்கள் பிரிவினை உள்ளடக்குவதற்கான தெளிவான தளத்தினை வழங்கி அதன் மூலம் சமத்துவமின்மைகளைக் குறைப்பதற்கான பங்களிப்பினை வழங்குகின்றது.

12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

பொறுப்புவாய்ந்த நுகர்வு மற்றும் உற்பத்தி: பல தசாப்த காலங்களாகக் கட்டியெழுப்பப்பட்ட அர்த்தபூர்வமான சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக கவனக்குவிப்புடன், அரிதான வளங்களின் பொறுப்புவாய்ந்த நுகர்வின் மூலமும் அழிவுக்குள்ளாகும் ஆபத்திலுள்ள கண்டத்தினைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பணியாற்றுவதன் மூலமும் தேசிய அபிவிருத்திக்கான அதன் ஆணையினை வங்கி வழங்குகின்றது

17 PARTNERSHIPS FOR THE GOALS

பெறுமதியினால் உந்தப்பட்ட பங்காண்மைகளை உருவாக்குவதன் மூலம், உள்நாட்டுச் சந்தையிலும் சர்வதேசச் சந்தையிலும் வங்கி அதன் நன்மதிப்பினை வலுப்படுத்தும் அதேவேளை வாடிக்கையாளருக்கு அதியுன்னத சேவைகளை வழங்குவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட தளங்களுடன் ஒத்துழைக்கின்றது.

வாடிக்கையாளர் மூலதனம்

வாடிக்கையாளர் உறவுகளை நிலைக்கச் செய்வது எமது நிலைபேறானதன்மைக்கான அத்திவாரமாகும். தொடர்பின் ஒவ்வொரு புள்ளியிலும் உள்ள துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல் நிலைமாற்றமும் சேவை நேர்த்தியும் எமது பல்வகைமைமிக்க வாடிக்கையாளர் பிரிவுகளுடன் ஆழமான பிணைப்பினை உருவாக்குவதற்கு இன்றியமையாததாகும்.

எமது வாடிக்கையாளர் பெறுமதி முன்மொழிவு

GRI 2-6

வாடிக்கையாளர்கள் எம்மில் வைத்துள்ள 65 வருட நம்பிக்கையிலிருந்தும் விசுவாசத்திலிருந்தும் கட்டியெழுப்பப்பட்ட தேசத்தின் பொது நலனோம்புகை அம்சத்தினையே எமது வாடிக்கையாளர் பெறுமதி முன்மொழிவு பிரதானமாக அடிப்படையாகக் கொண்டுள்ளது. எமது திட்டமிடல் முன்மொழிவுக்கும் உற்பத்தித் தயாரிப்புக்கும் வாடிக்கையாளர் திருப்தி பிரதானமானதாகும் என்பதுடன் இது கட்டற்றதும் அணுகக்கூடியதுமான வங்கிச் சேவை அனுபவங்களை வழங்குகின்றது. எமது வியாபாரத்தினை நடத்துவதற்காக எமது சமூக உரிமத்துக்கு அப்பாற் சென்று, அனுகூலம் கிட்டாத மற்றும் பின்தங்கிய சமுதாயங்களின் தேவைக்குப் பொருத்தமான உற்பத்திகளுடனும் சேவைகளுடனும் நாம் அவர்களை அடைந்து, செல்வத்தினை உருவாக்கிப் பேணுவதற்கு அவர்களை வலுவூட்டுவதற்காக நிதி அறிவு பற்றிய விழிப்புணர்வினையும் நாம் நடத்துகின்றோம். எமது டிஜிட்டல் தளங்கள் கடந்துசெல்வதற்கு மிகவும் இலகுவானவை என்பதுடன் நாம் தொடர்ச்சியாக வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை விஞ்சி, நிதி வெற்றி மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றில் ஒரு நம்பிக்கைக்குரிய பங்காளர் என்ற ரீதியில் எமது வணிக நாமத்தினை வலுப்படுத்துகின்றோம்.

உன்னதமான சேவையினை வழங்குவதற்கான மேன்மைமிக்க டிஜிட்டல் ஆற்றல்கள் மற்றும் நிலைபேறான கடப்பாடுகள் என்பவற்றின் சேர்க்கை, தனியார் துறையுடனான எமது ஈடுபாட்டினைப் பரவலாக்கிய அதேவேளை எமது வாடிக்கையாளர் தளத்தினைத் தொடர்ந்து விரிவாக்க எம்மை இயலுமாக்கியது. வருடம் முழுவதும் வங்கிக்கு நேரடியாக வருபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையினால், மொபைல் மற்றும் இணைய வங்கி மாதிரிகள் வாடிக்கையாளர்களால் பெரிதும் விரும்பப்பட்டன. சௌகரியமான வங்கிச் சேவைக்கு ஏற்பட்டு வரும் தேவை தீவிரமடைந்ததால், நாம் டிஜிட்டல் நிலைமாற்றத்தினைத் தீவிரப்படுத்தி, வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கங்களையும் செயற்பாட்டு ரீதியான சூழியல் முறைமைகளையும் துரிதப்படுத்தினோம்.

2025 ஆம் ஆண்டின் முடிவின் போதுள்ளவாறாக வங்கி 5 மில்லியன் டிஜிட்டல் வாடிக்கையாளர்களைத் தாண்டியுள்ளது. ஒன்லைன் மற்றும் மொபைல் வங்கிச் சேவையின் ஆதாரத்துடன், வலுவான சைபர் பாதுகாப்பு மற்றும் சிறந்த செயற்பாட்டு வினைத்திறன் என்பவற்றின் உதவியுடன் நாம் உள்ளடக்கமிக்க நிதிச் சேவைகளை வழங்கியுள்ளோம். முன்பு சேவைகள் கிட்டாத பின்தங்கிய கிராமப் பிரதேச மக்களைத் துடிப்பான வாடிக்கையாளர்களாக நிலைமாற்றுவதற்கு எமது டிஜிட்டல் சேவைகள் எம்மை இயலுமாக்கியுள்ளதுடன் நாம் அர்த்தபூர்வமான முறையில் அவர்களின் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கி வருகின்றோம

சௌகரியமான இருமை

பாரம்பரிய நம்பிக்கை மற்றும் துரித நவீனமயமாக்கல் ஆகிய இரண்டினையும் பிரதிபலித்து, டிஜிட்டல் ஆற்றல் கொண்ட நகர்மயமான இளம் தலைமுறையினருக்கும் பழமை பேணும் கிராமிய மூத்த தலைமுறையினருக்கும் மக்கள் வங்கி தொடர்ந்தும் இலங்கையின் மிகவும் உள்ளடக்கும்தன்மைமிக்க நிதி நிறுவனமாக விளங்குகின்றது. இச்சௌகரியமான இருமையானது நிதி உள்ளடக்கத்திலும் டிஜிட்டல் நிலைமாற்றத்திலும் வங்கியினை ஒரு தேசியத் தலைவராக நிலைநிறுத்துகின்றது.

மக்கள் தொகையினர் பற்றிய விபரங்கள்

வாடிக்கையாளர் வயது விபரங்கள்



- வயது வீச்சு 10-15 வயது
- வயது வீச்சு 16-25 வயது
- வயது வீச்சு 26-45 வயது
- வயது வீச்சு 46-60 வயது
- வயது வீச்சு 60 இற்கு மேல்

புவியியல் பரம்பல்

வாடிக்கையாளர் புவியியல் விபரங்கள்



- வெளி மாகாணங்கள்
- மேல் மாகாணம்

18-30 வயது

துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் பிரிவு

மொபைல் வங்கிச் சேவை, மாணவர் கடன்கள், மற்றும் டிஜிட்டல் பணப்பைகள் போன்ற விடயங்களைப் பெருமளவு ஏற்று அமுல்படுத்துதல்

உடனடிக் கொடுப்பனவுகள் மற்றும் நிதித் தொழில்நுட்பப் பாங்கிலான சேவைகளுக்கான கிராக்கியினை உந்திச் செலுத்துதல்

31-50 வயது

கடன் தொகுதிகளுக்களுக்கான பாரிய பங்களிப்பாளர்கள்

வீடமைப்புக் கடன்களில், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதியிடலில் மற்றும் முதலீட்டில் கவனம் குவித்தல்

நீண்ட கால உறவுகளுடன் உறுதியான உயர் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள்

50+ வயது

உறுதியான வைப்புத் தளம்

நிலையான வைப்புக்கள், ஓய்வூதியத்துடன் இணைந்த சேவைகள் மற்றும் பாரம்பரிய வங்கிச் சேவைகள் என்பவற்றினைச் சார்ந்திருத்தல்

டிஜிட்டல் முறைமையினை ஏற்று நடைமுறைப்படுத்துவது உந்தம் பெறுவதுடன் வங்கியில் உயர் நம்பிக்கையினை வலுப்படுத்துகின்றது

நகர்ப்புறப் பிரிவுகள்

டிஜிட்டல் சேவைகள், கடன் அட்டைகள் மற்றும் பெருநிறுவன வங்கிச் சேவை என்பவற்றின் உயர் ஊடுருவல்

தனியார் வங்கிகள் மற்றும் நிதித் தொழில்நுட்ப நிறுவனங்களிடம் இருந்து போட்டிமிக்க அழுத்தங்கள்

பகுதியளவிலான நகர்ப் பிரதேசங்கள் மற்றும் கிராமங்கள்

நுண்நிதி, விவசாயக் கடன்கள், கூட்டுறவு வங்கிச் சேவை என்பவற்றினைச் சார்ந்திருத்தல்

நிதி உள்ளடக்கத்திற்காக உறுதியான அரசாங்க இணைப்புக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

வெளிநாடுகள்

பெருமளவிலான பணஅனுப்புகை உட்பாய்ச்சல்கள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து

அந்நியச் செலாவணி ஈட்டல்கள் மற்றும் குடும்ப நுகர்வு என்பவற்றுக்கு முக்கியமானது

உற்பத்தி அடிப்படையில் வாடிக்கையாளர் பிரிவுகள்

பிரிவு	பிரதான உற்பத்திகள்	வளர்ச்சிப் போக்கு 2025
சில்லறை	சேமிப்புக்கள், வீடமைப்புக் கடன்கள், கடன் அட்டைகள்	உயர் - டிஜிட்டல் முறையினை ஏற்று நடைமுறைப்படுத்துவதால் உந்தப்பட்டது.
SME	வர்த்தக நிதி, உழைக்கும் மூலதனக் கடன்கள்	மிதமானது – எஸ்எம்இ நிகழ்ச்சித்திட்ட வங்கிச் சேவையினால் ஆதாரப்படுத்தப்படுவது
பெருநிறுவன வாடிக்கையாளர்கள்	திறைசேரி, முதலீட்டு வங்கிச் சேவை	உறுதியானது – நிறுவன விசுவாசம்
கிராமிய/விவசாய	நுண்நிதி, கூட்டுறவுக் கடன்கள்	வளர்தல் – நிதி உள்ளடக்க முன்னெடுப்புக்கள

சகல உற்பத்திகள் தொடர்பான பூரண வெளிக்கூறல்கள் மற்றும் உற்பத்திக் கூற்றுரைகள் இந்த அறிக்கையின் வியாபார மீளாய்வுப் பகுதி தொடங்கும் 102 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மிகச் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்கும் முக்கிய அம்சங்கள்

டிஜிட்டல் நிலைமாற்றம்

எமது வாடிக்கையாளர்களுக்குச் சௌகரியமான வங்கிச் சேவையினை அதிகரிப்பதற்காக நாம் டிஜிட்டல் நிலைமாற்றத்தில் தொடர்ந்தும் ஆழமாகச் செல்கின்றோம். மொபைல் மற்றும் இணையச் சேவைகளை விஸ்தரிப்பதன் மூலம், நாம் பிரதான தளங்களை நவீனமயப்படுத்தி, வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தரவுகளினால் இயக்கப்படும் தனிப்பயனாக்கத்தினை அறிமுகப்படுத்துகின்றோம். துரிதமான மற்றும் செயற்திறன்மிக்க செயற்பாடுகளுடனும் எமது சேவையின் நிலைபேறானதன்மையின் துணையுடனும் நாம் வாடிக்கையாளர் விசுவாசத்தினையும் குறுக்கு வியாபார வாய்ப்புக்களையும் மேலும் அதிகரித்துள்ளோம்.

- தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவைப் பிரிவு 127 ஆம் பக்கத்தில் தொடங்குகின்றது

சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தின் அம்சங்கள்

- டிஜிட்டல் நிலைமாற்றம்
- சேவை உன்னதம்
- தனித்துவமான வாடிக்கையாளர் உறவு முகாமையாளர்கள்
- நிதி அறிவு மன்றங்கள்
- பெண்கள் வலுவூட்டல்
- விசுவாசத்தினைப் போஷித்தல்

சேவை நேர்த்தி

வாடிக்கையாளர் சேவை நேர்த்தியினை வாழ்வின் வழியாக ஆக்கி நாம் எமது பணியாளர்களை ஒரு கட்டமைக்கப்பட்ட வகையில் பயிற்றுவித்து உற்பத்தி அறிவிலும் சேவை விதிகளிலும் அவர்களின் திறன்களை அதிகரித்து அவர்களின் மென் திறன் விருத்தியையும் முறைப்பாட்டுத் தீர்வினையும் அதிகரித்துள்ளோம். நாம் 2025 ஆம் ஆண்டில் 192 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளோம். அளக்கத்தக்க அளவீடுகள் மற்றும் தொடர்ச்சியான கற்றல் என்பவற்றினால் ஆதரிக்கப்பட்டு, தொடர்ச்சியான சேவை நேர்த்தியினை வழங்கும் ஆற்றல் கொண்ட எதிர்காலத்திற்குத் தயாரான அணியில் நாம் தொடர்ந்தும் கவனம் குவித்தோம். பல்வகைமைமிக்க வாடிக்கையாளர் குழுமங்கள் வங்கிச் சேவைகளை அணுகுவதற்கான பொருத்தமான வழியினைத் தெரிவுசெய்துள்ளதால் பல்மார்க்கச் சேவை விநியோகம் உள்ளடக்கும்தன்மையினை அதிகரித்தது.

- சில்லறை வங்கிச் சேவைப் பிரிவு மற்றும் உற்பத்தி மூலதனப் பிரிவு முறையே 103 மற்றும் 150 ஆம் பக்கங்களில் தொடங்குகின்றது

நியதிச்சட்டக் கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்கு பீபிள்ஸ் பே டிஜிட்டல் மொபைல் செயலி மூலம் புழுீயல பங்காண்மை அமைத்தது.

விசேட வாடிக்கையாளர் உறவு முகாமையாளர்கள்

விசேட உறவு முகாமையாளர்கள் சில்லறை, எஸ்எம்ஈ, மற்றும் பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு நிதி ஆலோசனையினையும் உதவியினையும் வழங்கி, ஒவ்வொரு முகாமையாளரும் தொடர்புக்கான தனித்த மையமாகச் செயற்படுகின்றார். உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான இந்த ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சி மற்றும் தன்முனைப்பான ஆலோசனை வாடிக்கையாளர் உறவுகளை ஆழப்படுத்த உதவியுள்ளதுடன் குறுக்கு விற்பனை வாய்ப்புக்களையும் வாடிக்கையாளர் தக்கிவைப்பினையும் உந்துகின்றது.

- பெருநிறுவன வங்கிச் சேவைப் பிரிவு 116 ஆம் பக்கத்தில் தொடங்குகின்றது

நிதி அறிவு மன்றங்கள்

செயலமர்வுகள், வெபினார்கள், மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கம் மூலம் வழங்கி, வங்கியின் நிதி மன்றங்கள் செல்வ உருவாக்கத்தினையும் முகாமைத்துவத்தினையும் கடன் முகாமைத்துவத்தினையும் நிலைபேறான நிதித் தெரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. எமது வாடிக்கையாளர்களை வலுவூட்டியமை அவர்கள் அறிந்து மேற்கொள்ளும் நிதித் தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலுமாக்கி நீண்ட கால நிதி மீண்டெழுந்தன்மைக்கு இட்டுச்செல்கின்றது

- சில்லறை வங்கிச் சேவை மற்றும் பெருநிறுவன வங்கிச் சேவைப் பிரிவு முறையே 103 மற்றும் 116 ஆம் பக்கங்களில் தொடங்குகின்றது

வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் பணியாளர் விருத்திக்காக ஒரு தனிவேறான அலைவரிசை பியோ டிவியில் தொடங்கப்பட்டுள்ளது.

மகளிர் வலுவூட்டல்

சில்லறை, எஸ்எம்ஈ, நுண்நிதி மற்றும் சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களில் பால்நிலை பதிற்செயற்பாடுமிக்க கொள்கைகளைப் புகுத்தியதன் மூலம் மகளிர் பொருளாதார வலுவூட்டலில் நாம் எமது முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளோம். பெண் தொழில் முனைவோர்களுக்கு விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு அவர்கள்' நிதிச் சுதந்திரமடைவதற்கு வழி காட்டப்பட்டது. சிவில் சமூகத்துடனும் தொழிற்துறைப் பங்குதாரர்களுடனும் ஈடுபடுவதன் மூலம் பெண்களுக்கான திறன் உருவாக்கத்தில் வங்கி கவனம் குவித்து நிலைபேறான சமூகத் தாக்கத்தினை உந்திச் செலுத்துகின்றது.

வரைபு: வாடிக்கையாளர் பால்நிலை விபரங்கள்

பெண | ஆண்

- வர்த்தகக் கடன் மற்றும் எஸ்எம்ஈ மற்றும் நுண்நிதி அபிவிருத்திப் பிரிவுகள் முறையே 109 மற்றும் 112 ஆம் பக்கங்களில் தொடங்குகின்றன.

விசுவாசத்தினைப் போஷித்தல்

நாம் சகல வியாபாரப் பிரிவுகளிலும் உற்பத்திப் பொதிகள், டிஜிட்டல் ஈடுபாட்டுப் பிரச்சாரங்கள் மற்றும் பண்டிகைக்கால ஊக்குவிப்புக்கள் என்பவற்றுடன் பல வெகுமதிகளையும் பல் அடுக்குகளைக் கொண்ட விசுவாசத் திட்டங்களையும் அமுல்படுத்தினோம். வாடிக்கையாளர் பின்னூட்டல் வளையங்களும் விசுவாசப் பகுப்பாய்வுகளும் தக்கவைப்பினையும் பணப்பைப் பங்கினையும் கண்டறிந்ததுடன் பங்காண்மை மேம்பாடுகள் நாளாந்தப் பயன்பாட்டுப் பெறுமதிகளை வழங்கின.

ரன் காசி வாசிச் சீட்டிழுப்பு – பெற்றுக்கொண்ட உயர் பண அனுப்புகைக்காக	வனிதா பிரனாம – ஆகக்கூடுதலான தொழிலாளர் பண அனுப்புகையினைப் பெற்றுக்கொண்ட கணக்கினைக் கொண்ட 10 பெண்கள்
வாசி கோட்டியய் 2025 மூலம் வெளிநாட்டுப் பண அனுப்புகைகளுக்கான விசேட ஊக்குவிப்புப் பிரச்சாரம்	இளம் தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக பீபிள்ஸ் பிஸ் டீன் சலேன்ஜ் 2025
உலக எஸ்எம்இ தினத்தினைக் குறிப்பதற்காக எஸ்எம்இ வியாபாரக் கடன் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது	பீபிள்ஸ் டெபிட் காட் வைத்திருப்பவர்களுக்காக கெடரடம தேகி ஊக்குவிப்புப் பிரச்சாரம்
டிஜிட்டல் வங்கிச் சேவை விழிப்புணர்வுப் பிரச்சாரங்களின் விஸ்தரிப்பு (பீபிள்ஸ் பே, இணைய வங்கிச் சேவை, மொபைல் வங்கிச் சேவை)	பேஸ்புக், இன்ஸ்டகிராம், டிக்டொக், யுடியுப் மற்றும் லின்க்ட்இன் மூலம் செயலாற்றுகையினால் உந்தப்பட்ட சமூக ஊடகப் பிரச்சாரங்கள்
சர்வதேச மகளிர் தினத்துடன் பொருந்தும் வகையில் பெண் தொழில்முனைவோர் பிரச்சாரம்	சிசு உதான சேமிப்புக்கள் மூலம் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் கருத்தரங்குகள்
நுண்நிதி விழிப்புணர்வு மற்றும் சமுதாய அடைவுத் தொடர்பாடல்	கடன் அட்டை வாழ்க்கைப் பாங்கு நிலைப்படுத்தல் பிரச்சாரங்கள் (ஹெவ்லொக் மோல் மற்றும் கண்டி சிடி செண்டர்)
டெபிட் அட்டைப் பயன்பாடு துரிதப்படுத்தல் பிரச்சாரங்கள்	வீடியோ – பெஸ்ட் உள்ளடக்க உபாயமார்க்கம்

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் தேசிய ஏற்றுமதி வலுவூட்டல் முன்னெடுப்புக்கள்

வாடிக்கையாளர் திருப்தி

பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை

407

தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை

365

இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

193

2025 டிசம்பர் 31 இன் போதுள்ளவாறாகத் தீர்க்கப்படுவதற்கு நிலுவையாக இருக்கும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

42

நிதி குறைகேள் அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை

37

நெறிமிக்க வங்கிச்சேவை நடைமுறைகள்

GRI 206-1

ஒரு வலுவான ஆளுகை மற்றும் அபாயநேர்வு முகாமைத்துவச் சட்டகத்தினுள் வங்கி அதன் சகல செயற்பாடுகளிலும், அதாவது உற்பத்தி உருவாக்கம் முதல் சேவை வழங்கல் மற்றும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் வரையில் பொறுப்புமிக்க வகையிலும் வகைப்பொறுப்புமிக்க வகையிலும் உயர் நெறிமிக்க தராதரங்களைப் பற்றிப்பிடிக்கின்றது.

தெளிவான தொடர்பாடல்

எமது பெறுமதி முன்மொழிவுகள் மும்மொழிகளிலும் எடுத்துக்கூறப்படுவதுடன் இவை உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை உள்ளடக்குகின்றன. தேவைப்படும் தகவல்கள், வீதங்கள் மற்றும் கட்டணங்கள் எமது கிளைகளில் நன்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் எமது இணையத்தளங்கள் வழியேயும் அணுகக்கூடியவையாக உள்ளன. ஒவ்வொரு உற்பத்தியும் அல்லது சேவையும் தெளிவான மற்றும் துல்லியமான விதிகளையும் நிபந்தனைகளையும் கொண்டுள்ளதுடன் எமது வாடிக்கையாளர்கள் வங்கியியல் தொடர்பாக நன்கறிந்து தீர்மானம் வகுப்பதற்கு அவர்களை இயலுமாக்குகின்றது. பூரண வசதிகளுடன் இயங்கும் தொடர்பு மையம் நன்கு பயிற்றப்பட்ட பணியாளர்களால் வாடிக்கையாளர்களின் சந்தேகங்களைத் தீர்த்து முறைப்பாடுகளைப் பதிந்து பின்னூட்டல்களையும் பெறுகின்றது.

ஊழியர் திறன் மேம்பாடு

வாடிக்கையாளர்களுக்குத் துல்லியமான தகவல்களையும் தீர்வுகளையும் அவசியமெனின் நிதி ஆலோசனைகளையும் வழங்கக்கூடிய ஆற்றலும் அறிவும் கொண்ட ஊழியர்களின் திறன்களை நாம் தொடர்ந்து மேம்படுத்துகின்றோம்.

பொது நலனோம்புகை

அரசாங்கத்துடன் பங்காண்மை அமைத்து, வலுவூட்டப்பட்ட சமூகத்துக்கான மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பொருளாதாரத்துக்கான எமது பங்களிப்பாக நாம் தேசிய அபிவிருத்தி முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதில் உதவி வருகின்றோம். போட்டிக்கு எதிரான நடத்தை, முற்றுரிமை எதிர்ப்பு மற்றும் தனியுரிமை நடைமுறைகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டில் எச்சம்பவங்களும் முறைப்பாடு செய்யப்படவில்லை.

வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

GRI 416-1

பெருநிறுவனங்கள் முதற்கொண்டு தனிநபர்கள் வரை பரவியிருக்கும் வாடிக்கையாளர் தளத்துடன பரந்த கிளை வலையமைப்பினைக் கொண்டுள்ள ஒரு வங்கி என்ற ரீதியில் ஒரு வலுவான முறைமையின் மூலம் எமது சகல அலுவலகங்களிலும் கிளைகளிலும் பாதுகாப்பினை வழங்குவது எமது கடமையாகும்.

எமது சகல கிளைகளும் வாடிக்கையாளர்களதும் ஊழியர்களதும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மனதிற்கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அலுவலகங்களும் கிளைகளும் நன்கு காற்றோட்டமானவையாக அமைக்கப்பட்டு பகல் நேர வெளிச்சத்தில் இருந்தும் நன்மை பெறப்படுகின்றது. ஒவ்வொரு அமைவிடத்திலும் தீயணைப்புக் கருவிகளும் தீ விபத்தின் போது பயன்படுத்துவதற்கான முதலுதவிப் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பாராத நிகழ்வுகளைச் சமாளிப்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பணியாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அவசர நிலையில் மக்களை வெளியேற்றல் தொடர்பில் பயிற்சி வழங்கப்படுகின்றது.
.

> வாடிக்கையாளர் சௌகரியத்திற்காக கேகாலையில் அதிநவீன வங்கிச் சேவைக் கட்டிடத் தொகுதி

சந்தைப்படுத்தல் தொடர்பாடல், உற்பத்திச் சேவைத் தகவல்கள் மற்றும் லேபலிடல்

GRI 417-1, 2, 3

எமது சந்தைப்படுத்தல் ஆவணம் தெளிவான, துல்லியமான மற்றும் பூரணமான முறையில் மும்மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) வழங்கப்பட்டு, நன்மைகள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றின் பூரண வெளிக்கூறல் மூலம் வாடிக்கையாளர்கள் வலுவூட்டப்படுகின்றனர். நாம் வழங்குபவற்றினை வெளிப்படைத்தன்மையான முறையில் பிரதிநிதித்துவம் செய்து இலங்கை மத்திய வங்கியின் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கு இறுக்கமாக இயைபுறுகின்றோம். பசுமை நிதியிடல் உற்பத்திகள் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வழங்கல்கள் என்பன சுற்றாடல் நிலைபேறானதன்மையுடன் ஒருங்கிசையும் வகையில் அமைக்கப்பட்டு கடன் நிதியிடல் தகைமைக்கான சட்டகம் எமது சந்தைப்படுத்தல் ஆவணத்தில் தெளிவாக உள்வாங்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில், சந்தைப்படுத்தல் தொடர்பாடல், உற்பத்திச் சேவைத் தகவல் மற்றும் லேபலிடல் தொடர்பான இயைபுறாமை தொடர்பில் எவ்விதமான சம்பவங்களும் இடம்பெறவில்லை

வாடிக்கையாளர் தரவு அந்தரங்கம்

GRI 418-1

நாம் அதிநவீன தகவல் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எமது செயற்பாடுகளில் சைபர் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தி உட்கட்டமைப்பு நவீனமயமாக்கலை முன்னெடுத்துள்ளோம். வங்கியின் பரந்த டிஜிட்டல் நிலைமாற்ற நிகழ்ச்சிநிரலினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இந்த முதலீடுகள் மீண்டெழுந்தன்மையினையும் தரவுப் பாதுகாப்பினையும் அதிகரித்துள்ளன. 2025 ஆம் ஆண்டின் போது, வாடிக்கையாளர் அந்தரங்கம் மீறப்பட்டமை தொடர்பாக அல்லது வாடிக்கையாளர் தரவுகள் தொலைந்தமை தொடர்பாக எச்சம்பவமும் முறைப்பாடு செய்யப்படவில்லை.

2026 ஆம் ஆண்டுக்கான தோற்றப்பாடு

இயங்குதிறன் மிக்கதும் தொலைநோக்குடையதுமான ஒரு வங்கி என்ற ரீதியில், உலகளாவிய மற்றும் தொழில்நுட்பச் சவால்களுக்குத் தகவமைப்பதன் மூலமும் இலங்கையின் பரந்த பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவதன் மூலமும் நாம் நிலைபேறான வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்களிப்பு வழங்குவோம். டிஜிட்டல்மயமாக்கம் இந்தப் பயணத்தின் ஒரு பிரதான கூறாகும். மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்கி, வாடிக்கையாளர் அனுபவத்தினை அதிகரித்து நிலைபேறான வளர்ச்சியினை அதிகரிக்கும் அதேவேளை நாம் 2026 ஆம் ஆண்டில் டிஜிட்டல் நிலைமாற்றத்தினைத் தொடர்ந்து துரிதப்படுத்துவோம்.

தொழில்முறையானவர்களின் ஒரு கூட்டு என்கின்ற ரீதியில், ஒவ்வொரு வியாபாரப் பிரிவும் 2026 ஆம் ஆண்டுக்கான அதன் குறிப்பிட்ட திட்டங்களை 102 ஆம் பக்கத்தில் தொடங்கும் வியாபார மீளாய்வுப் பகுதியில் தெளிவாக விளக்கியுள்ளன

வியாபாரப் பங்காளர் மூலதனம்

எமது வியாபாரப் பங்காளர்களுள் சேவை வழங்குனர்கள், விநியோகத்தர்கள், உபாயமார்க்கமிக்க பங்காண்மைகள் மற்றும் தொழிற்துறை மன்றுகள் உள்ளடங்குவதுடன் இவர்கள் வங்கியியல் அலுவல்களில் நாம் அர்த்தபூர்வமாக ஈடுபடுவதற்கும் தேசிய அபிவிருத்திக்கு நாம் பங்களிப்பதற்கும் எம்மை இயலுமாக்குகின்றனர். புலப்படும் வழிகளிலும் புலப்படா வழிகளிலும் எமது வியாபாரத்திற்குப் பெறுமதி சேர்ப்பதன் மூலம் இவர்கள் வினைத்திறனினை அதிகரிப்பதற்கு உதவி, தங்குதடையற்ற சேவையினை உறுதிப்படுத்தி, பெறுமதி வழங்கலை அதிகரிக்கின்றனர்.

வியாபாரப் பங்காளர் வகைகள்

GRI 2-6

வியாபார வளர்ச்சிப் பங்காளர்கள்	**இணை வங்கிகள்**	**வொஸ்ட்ரோ முகவர்கள்**	**வணிக உரிமைப் பங்காளர்கள்**	**அரச நிறுவனங்கள்**
	இவை சர்வதேச வர்த்தகத்திலும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றத்திலும் எல்லைகளுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களிலும் வசதிப்படுத்தல்களை மேற்கொள்வதில் இன்றியமையாதவை என்பதுடன் எல்லைகளுக்கு இடையிலான வங்கிச் சேவைகளிலும் அத்தியாவசியமான கூறுகளாகும்.	எமது சர்வதேச வங்கிச் சேவைப் பங்காளர்களின் கணக்குகளை முகாமைத்துவம் செய்கையில், மின்னணு மற்றும் அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் வைப்புக்களுக்கும் மீளப்பெறல்களுக்கும் அவசியமானவை என்பதுடன் இதனால் சர்வதேச வர்த்தகம் இலகுவாக்கப்படுகின்றது.	வணிக உரிமைப் பங்காளர்கள் எமது நாளாந்த வியாபாரத்தினை இயக்குவதில் எமக்குப் பல வழிகளிலும் உதவி வழங்கி, எமது செயற்பாட்டுத் தொகுதியின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றனர்.	அரசுக்குச் சொந்தமான வங்கி என்ற ரீதியில், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் எமது வாடிக்கையாளர் தொகுதியில் முக்கியமான பாகமாகும்.
விநியோகத்தர்கள்	**பயன்பாட்டுச் சேவை வழங்குனர்கள்**	**பொருள் விநியோகத்தர்கள்**	**நிலையான சொத்து விநியோகத்தர்கள்**	**பயணம் மற்றும் போக்குவரத்து விநியோகத்தர்கள்**
	மின்சாரம், நீர், தொலைத்தொடர்பாடல் ஆகிய சேவைகளை வழங்குபவர்கள் எமது வியாபாரக் கட்டமைப்பில் பதிக்கப்பட்டுள்ளதுடன் இது இல்லாமல் எம்மால் இயங்க முடியாது	செயற்பாட்டுத் தொடர்ச்சியினை உறுதிப்படுத்தும் நெறிமிக்க மூலத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட உயர் தரத்திலான பொருட்களை வழங்குவதன் மூலம் பொருள் விநியோகத்தர்கள் எமது செயற்பாடுகளில் இன்றியமையாத வகிபாத்திரத்தினை வகிக்கின்றனர். இது எமது சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பினை வலுப்படுத்தி நிலைபேறானதன்மைக்கான முன்னெடுப்புக்களுக்கு உதவுகின்றது.	பொருட்கள், உபகரணம், தளவாடங்கள், பொருத்துகைகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றினை விநியோகிப்பவர்களும் வாகன விற்பனையாளர்களும் அசையாச் சொத்து விற்பனையாளர்களும் நாம் எம் பங்கீடுபாட்டாளர்கள் அனைவருக்கும் பெறுமதியினை வழங்குவதற்கு எம்மை இயலுமாக்குபவர்களாக உள்ளனர்.	பயணம் மற்றும் போக்குவரத்து விநியோகத்தர்கள் எமது இயக்கத்தின் இன்றியமையாத பாகமாகும் என்பதுடன் இதனால் பணியாளர் பயணத்திற்கு மாத்திரமன்றி நாடெங்கும் வாடிக்கையாளர் விஜயத்திற்கும் நன்மை கிடைக்கின்றது.

பாரம்பரியப் பணியாளர்கள்	மென்பொருள் விநியோக-த்தர்கள்	தொடர்பாடல்	கழிவு முகாமைத்துவம்	கடன் சேகரிப்பு முகவர்கள்	மனித வள வழங்குனர்கள்
	வங்கியின் இலட்சியமிக்க டிஜிட்டல் உந்தத்திற்கு எமது மென்பொருள் விநியோக-த்தர்களால் நன்கு ஆதரவளிக்கப்ப-டுகின்றது	எமது தொடர்பாடல் உபகரணத்தினைப் பராமரிப்பது முக்கியமான தேவையாகும் ஏனெனில் இன்றைய இடையீடுமிக்க பரிமாற்றங்கள் இப்பரப்பில் உள்ள மீயுயர் உட்கட்டமைப்-பினையே பெரிதும் சார்ந்துள்ளன	மூன்றாந் தரப்பு மீள்சுழற்சியாளர்கள் மாநகர சபைகளுடனும் நகர சபைகளுடனும் சேர்ந்து வங்கி வளாகம் சிறந்த நிலையில் உள்ளது என்பதை உறுதிப்படுத்த உதவி எமது ஊழியர்களதும் வாடிக்கையாளர்களதும் சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் பங்களிப்பு வழங்குகின்றது.	அறவீடு அல்லது கடன் சேகரிப்பு முகவர்கள் சவால்மிக்க காலப்பகுதியின் போது அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளனர். இவர்களின் முயற்சிகள் 2025 ஆம் ஆண்டின் போது எமது அபார வெற்றிக்கு ஒரு விதத்தில் பங்களிப்பு வழங்கியுள்ளன.	வங்கியினுள் உள்ள வங்கிச் சேவை சாராத கடமைகள் வெளிவள ஊழியர்களால் வினைத்திறன்மிக்க முறையில் கையாளப்பட்டு அதனால் எமது ஊழியர்கள் அவர்களின் நேரத்தினை அதிக பெறுமதி சேர்க்கும் சேவைகளுக்கும் வாடிக்கையாளர் இடையீட்டுக்கும் அர்ப்பணிப்பது இயலுமாகியது.

ஏனையோர்	ஒப்பந்தப்பணியாளர்கள்	வளாக வழங்குநர்கள்
	நன்கு பராமரிக்கப்படுகின்ற மற்றும் நல்ல அமைவிடங்களில் அமைந்துள்ள வளாகங்கள் எமது உயர் புலப்பாடுமிக்க வணிக நாமத்தின் தொடர்ச்சிக்கான ஓர் ஊக்கியாகும். இது புலப்படாத ஆனால் உணரத்தக்க பெறுமதியினைச் சேர்க்கின்றது. எமது ஒப்பந்தக்காரர்களையும் வளாகங்களையும் வழங்குபவர்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றினைக் கருத்திற்கொண்டு அவர்களின் சேவைகளை வினைத்திறன்மிக்க முறையில் வழங்கிவருகின்றனர்.	

சர்வதேச வியாபாரப் பங்காளர்கள்

எமது வியாபாரத்தின் இன்றியமையாத பாகம் பண்டங்களைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதாகும். எமது சர்வதேச வியாபாரப் பங்காளர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ள பாதுகாப்பான, நம்பிக்கைமிக்க தொழில்வல்லுனர்களின் வலையமைப்பாகும். இவர்கள் வங்கிச் சேவையுடன் நேரடியாகத் தொடர்புறாத பொருட்களைப் பெற்று, போக்குவரத்துச் செய்து விநியோகிக்கின்றனர். உறுதியான உறவுகளை வங்கி ஒன்றுதிரட்டியுள்ளது. இது பூகோள அரசியல் பிளவுகள், வர்த்தக யுத்தங்கள், சர்வதேசப் பதற்றங்கள் போன்ற கொந்தளிப்பு மிக்க காலப்பகுதியில் மிகவும் பயன்மிக்கதாக அமைந்தது. காலப் போக்கில், வங்கி அதன் சர்வதேசப் பங்காளர்களுடன் உறுதியான உறவினை வளர்த்தமை, பூகோளப் பிளவுகள் மற்றும் சர்வதேசப் பதற்றங்கள் போன்ற கொந்தளிப்புமிக்க நிலைமைகளில் வளர்ச்சிக்கு உதவியுள்ளது

வெளிப்படைத்தன்மைமிக்க கொள்வனவுச் செயன்முறை நடைமுறைகள்

கொள்வனவுத் தீர்மானங்களில் ஒத்திசைவான தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு. செலவுச் சிக்கம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் என்பவற்றினை மேம்படுத்தும் அதேவேளை சகல சட்டங்களுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இயைபுறுவதைக் கொள்வனவுச் செயன்முறைக் கொள்கை உறுதிப்படுத்துகின்றது. இதன் வெளிப்படைத்தன்மையும் நியாயமானதன்மையும் ஆளுகை நடைமுறையில் வங்கியின் உள்ளார்ந்த நெறிமிக்க நியமங்களை எடுத்துக்காட்டுவதுடன் இது தீர்மானம் வகுத்தலிலும் ஊடுருவுகின்றது. இறுக்கமாக முகாமைத்துவம் செய்யப்பட்டுக் கண்காணிக்கப்படும் கேள்வி கோரல் செயன்முறையுடன், கொள்வனவுச் செயன்முறையின் போது சகல தொழில்நுட்ப விபரங்களையும் மதிப்பீடு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தொழிற்துறையினைச் சார்ந்த நிபுணர்களைக் கொண்டுள்ளது. இக்குழு இயக்கச் செலவு மற்றும் மூலதனச் செலவு ஆகியவற்றுக்கான வரவு செலவுத்திட்டங்களை உருவாக்குகின்றது. இது வருடம் முழுவதும் கொள்வனவுகளுக்கான அத்திவாரத்தினை இட்டு, செலவுகளை நுட்பமாகக் கட்டுப்படுத்தி, வங்கியின் வெற்றிகரமான செயலாற்றுகைக்குப் பங்களிப்பு வழங்குகின்றது

எமது விநியோகத்தர்களுடன் செழிப்பினைப் பகிர்தல்

GRI 204-1

வகை	2025	2024
பதிவுசெய்யப்பட்ட விநியோகத்தர்களின் எண்ணிக்கை	இது கேள்வி கோரல் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசப்படுவதுடன் இலத்திரனியல் கொள்வனவுச் செயன்முறை நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.	நாம் 2020 ஆம் ஆண்டு நிதி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலத்திரனியல் கொள்வனவுத் தளத்தினைப் பயன்படுத்துவதுடன் விநியோகத்தர் பதிவுகளை நடைமுறைப்படுத்துவதில்லை.
இணை வங்கிகளின் எண்ணிக்கை	42	42
வொஸ்ட்ரோ முகவர்களின் எண்ணிக்கை	94	88
விநியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் (இலங்கை ரூபா பில்லியன்)	28.3	22.3
உள்நாடு	27.2 (96.11%)	20.9 (93.7%)
வெளிநாடு	1.1 (3.89%)	1.4 (6.3%)

பெறுமதி சேர்க்கைக்கான அம்சங்கள்

உறுப்பாண்மை மற்றும் சங்கங்கள்

GRI 2-28

எமது பொறுப்புக்களில் பொது நலனோம்பல் உள்ளடங்குவதுடன் பல்வேறு தொழிற்துறை மன்றுகளில் எமது பிரசன்னமானது அரசாங்கம் அபிவிருத்திக்கான அதன் தேசிய நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்வதற்காக அரசாங்கத்துடன் பங்காண்மை அமைப்பதற்கு எமக்குப் பெரிதும் உதவுகின்றது. ஒரு வங்கி என்ற ரீதியில் எமது கூட்டுக் குரலும் எமது செழிப்பான அனுபவமும் அடைவும் நகர்ப்புற, பகுதியளவில் நகர்ப்புற, கிராமிய மற்றும் விவசாயச் சமுதாயங்களின் அபிலாசைகள் பற்றிய புரிதலும் தொலைநோக்குடைய வங்கியியல் ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டலுக்குப் பங்களிப்பதற்கான ஒரு தளத்தினை எமக்குப் பெற்றுத் தந்துள்ளது.

நாம் பின்வருவனவற்றின் உறுப்பினராக இருப்பதையிட்டுப் பெருமிதமடைகின்றோம

- இலங்கை வங்கியாளர் நிறுவகம்
- இலங்கை வர்த்தக சம்மேளனம்
- இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாத) லிமிடட்.
- வங்கியியல் துறை அபாயநேர்வுத் தொழில்வாண்மையாளர் சங்கம் – இலங்கை
- ஆசிய – பசிபிக் கிராமிய மற்றும் விவசாயக் கடன் சங்கம்
- வங்கிகளின் இயைபுறல் உத்தியோகத்தர்கள் சங்கம், இலங்கை
- இலங்கை நிதி குறைகேள் அதிகாரி (உத்தரவாத) லிமிடட்.
- வங்கியாளர்கள் தீர்வையகச் சங்கம்
- இலங்கை ஊழியர்கள் சம்மேளனம்
- முதன்மை விநியோகஸ்தர்கள் சங்கம்
- இலங்கை அந்நியச் செலாவணிச் சங்கம்
- இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம்
- ஸ்விப்ட்
- லங்கா பே (பிரைவேட்) லிமிடட்

பெறுமதி சேர்க்கைக்கான முக்கிய அம்சங்கள்

- உறுப்பாண்மை மற்றும் சங்கங்கள்
- விநியோகத்தர் பரிசீலிப்பு மற்றும் சுற்றாடல் மதிப்பீடுகள்
- கொள்வனவுச் செயன்முறை

வாடிக்கையாளர் பரிசீலனை மற்றும் சுற்றாடல் மதிப்பீடு

GRI 308-1, 414-1

விநியோகங்களைப் பெறுகையில், உற்பத்தி செய்கையில், பெறுமதி சேர்க்கையில் மற்றும் விநியோகிக்கையில் விநியோகத்தர்கள் வங்கி இயைபுறும் நிலைபேறானதன்மை நடைமுறைகள் உள்ளடங்கலாக உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இயைபுறவேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது அமலாக்கவும் படுகின்றது. விநியோகத்தர்கள் அவர்களின் உற்பத்திச் செயன்முறையின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இயைபுறுவது மிக முக்கியமானதாகும் என்பதுடன் சிறார் ஊழியம் மற்றும் பலவந்த ஊழியம் மீதான தடையினை இறுக்கமாகப் பின்பற்றல் உள்ளடங்கலாகத் தொழில் ஒழுங்குவிதிகளுக்கு இறுக்கமாக இயைபுறுவதை எடுத்து விளக்கவேண்டும

கொள்வனவுச் செயன்முறை

- கேள்வி கோரல் செயன்முறைகளுக்காக முதலில் சபையின் அங்கீகாரம் கோரப்படும் அதேவேளை, புதிய விநியோகத்தர்களின் பசுமை மற்றும் நெறிசார் தராதரங்களை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் இறுக்கமான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். டிஐஐ அட்டைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணம் போன்ற முக்கியமான மற்றும் உயர் நுண்மைமிக்க பொருட்கள் சர்வதேசக் கேள்வி கோரல் செயன்முறை மூலம் கொள்வனவு செய்யப்படுவதுடன் இதன் போது வங்கி தெரிவுசெய்யப்பட்ட சர்வதேச விநியோகத்தர்களுடன் நீண்ட காலப் பங்காண்மைகளைப் பேணுகின்றது.
- சகல விநியோகச் சங்கிலிகளும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தெரிவடிப்படைக்கும் ஏனைய கட்டாயமான நடைமுறைகளுக்கும் (அதாவது, பண்டங்கள், சிறார் ஊழியம் மற்றும் பலவந்த ஊழியத்தினால் தயாரிக்கப்பட்டவை அல்ல போன்ற) இயைபுறுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காகச் சகல புதிய விநியோகத்தர்களும் சுற்றாடல் மற்றும் சமூக இயைபுறலுக்காகப் பரிசீலிக்கப்படுகின்றன.
- டிஜிட்டல் கொள்வனவுச் செயன்முறையில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தி, கேள்விகள் அதிகரித்த அளவில் ஒன்லைன் செயன்முறை மூலமே திரட்டப்படுகின்றன.
- நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட கட்டாயத் தேவைப்பாடான இலத்திரனியல் அரசாங்கக் கொள்வனவு முறைமையில (ந-பீ) விநியோகத்தர்கள் பதிவுசெய்ய வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றனர

2026 ஆம் ஆண்டுக்கான தோற்றப்பாடு

உள்நாட்டில் கொள்வனவு செய்தல் முன்னுரிமைக்குரியதாக இருக்கும் அதேவேளை நாம் எமது சகல வியாபாரப் பங்காளர்களுடனும் உறுதியான உறவினைத் தொடர்ந்து பேணுவோம். தேவையேற்படுகையில், எமது எதிர்காலத் தேவைகளைச் சார்ந்தும் அங்கீகரிக்கப்பட்ட ஒபெக்ஸ் வரவு செலவுத்திட்டத்தினுள்ளும் வங்கியானது வியாபாரப் பங்காளர் தொகுதியினை விஸ்தரிப்பதை ஆராயும். நாம் சிக்கனமான மற்றும் பசுமையான செயற்பாடுகளை நோக்கி நகர்கையில், நிலைபேறான வியாபாரச் செயற்பாடுகளுக்காக வளப் பயன்பாட்டினை உச்சப்படுத்த நாம் செலவுச் சிக்கனத்தினை முன்னெடுப்போம்.

சமுதாய மூலதனம்

அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனம் என்ற ரீதியில், நிலைபேறான சமூக – பொருளாதார அபிவிருத்தியினையும் உள்ளடக்கமிக்க வளர்ச்சியினையும் தான் சேவையாற்றும் சமுதாயங்களை வலுவூட்டுவதையும் மக்கள் வங்கி முன்னுரிமைப்படுத்துகின்றது. எமது நிதி விவேகம் மற்றும் பொதுநல ஆணையம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி நாம் பொறுப்புவாய்ந்த கடன் வழங்கலிலும் நிதி அறிவு நிகழ்ச்சித்திட்டங்களிலும் திறன் மேம்படுத்தலிலும் சமத்துவம் மற்றும் சமுதாய மறுமலர்ச்சி ஆகியவற்றுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்கும் ஒருங்கிணைந்து ஈடுபடுகின்றோம்.

வலுவூட்டல் அம்சங்கள்

பொறுப்புவாய்ந்த அபிவிருத்திக் கடன் வழங்கல்

GRI 203-1

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முனைவுகளின் பொருளாதாரச் செயற்பாடுகளைப் பிரதான வங்கியியலினுள் சேர்க்கும் நீண்ட கால நோக்குடன் அபிவிருத்திக் கடன் வழங்கலுக்காக இத்துறைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. இதுவரை முறைசாரா நிதி நிறுவனங்களால் சேவை பெற்று வந்த நிலையில், உருவாகி வரும் பல்வேறு வியாபாரங்கள் வளர்ந்து வெற்றி பெறுவதற்காக நாம் அவற்றிற்கு அறிவூட்டவும் நிதி அறிவூட்டவும் உதவி வழங்கவும் நிதியளிக்கவும் ஒருங்கிணைந்த முயற்சியில் இறங்கியுள்ளோம். குறிப்பாகச் சுற்றுலாத் துறை வளர்ந்து வரும் நிலையில், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முனைவுகளைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் தீவிர அவதானத்திற்கும் இது உதவியளித்துள்ளது. கிராமிய மற்றும் உப கிராமியச் சமுதாயங்களைச் சென்றடைவதற்கான வழிகளை உருவாக்குவதில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட ஒரு வங்கி என்ற ரீதியில், நிலைபேறானதன்மையினை ஒரு முன்னுரிமையாகக் கொண்டு இந்தச் சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதில் முதலீடு செய்வதற்கு நாம் தயார் நிலையில் இருக்கின்றோம்.

வலுவூட்டல் அம்சங்கள்

- பொறுப்புமிக்க அபிவிருத்திக் கடன் வழங்கல்
- மறைமுகமான பொருளாதாரத் தாக்கம்
- பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு
- சமுதாய ஈடுபாடு

2025 டிசம்பர் 31 இன் நிலவரப்படி சமுதாய அடிப்படையிலான அபிவிருத்திக் கடன் வழங்கல்

அபாயநேர்வு வகை	வங்கியினால் நிதியளிக்கப்பட்டவை		மீள்நிதித் திட்டங்கள் மூலம் நிதியளிக்கப்பட்டவை	
	கடன்களின் எண்ணிக்கை	நிலுவையாகவுள்ள தொகை ரூபா மில்லியன்	கடன்களின் எண்ணிக்கை	நிலுவையாகவுள்ள தொகை ரூபா மில்லியன்
விவசாயம்	14,335	7,043.55	2,453	775.95
வர்த்தகம்	3,448	2,283.20	273	95.49
நுகர்வு	15	10.75	–	0
நிதி	157	3,755.12	7	0.46
வீடமைப்பு மற்றும் சொத்து உருவாக்கம்	183	114.95	23	23.27
கைத்தொழில்	1,489	783.05	133	30.7
ஏனைய பொருளாதாரச் செயற்பாடுகள்	2,114	362.06	369	38.68
சேவை	608	350.13	58	2.79
சுற்றுலாத்துறை	67	70.53	15	53.44
முழு மொத்தம்	22,416	14,773.34	3,331	1,020.78

மறைமுகமான பொருளாதாரத் தாக்கங்கள்

GRI 203-2

நிதி உள்ளடக்கம் எமது வங்கியியல் சேவைகளின் இன்றியமையாத அம்சமாகும். எமது கிளை வலையமைப்புக்களினதும் சேவை நிலையங்களினதும் பரந்த அடைவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்களும் கிராமியச் சமுதாயங்களுக்கும் அனுகூலம் கிட்டாத சமுதாயங்களுக்கும் அத்தியாவசியமான நிதிச் சேவைகளை வழங்குவதற்கான மிகச் சிறந்த ஊக்கிகளாகும். ஈடுகொடுக்கக் கூடிய கடன்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் சிறிய அளவிலான நுண்தொழில்முயற்சிகள் செழிப்பதற்கு அவற்றுக்கு உதவி வழங்கி அவற்றினை வலுவூட்டி வாழ்வாதாரங்களையும் உள்ளடக்கமிக்க பொருளாதார விருத்தியினையும் மேம்படுத்தின.

நாடெங்குமுள்ள பொருளாதார ரீதியாக அனுகூலம் கிட்டாத பிரிவினருக்கும் பெண் தொழில்முனைவுப் பிரிவினருக்கும் தன் கதவுகளைத் திறந்த பெருமையினை மக்கள் வங்கி கொண்டுள்ளது. முரண்பாடு நிலவிய காலப்பகுதியில் கூட நாம் எமது பங்களிப்பை தக்கவைத்துக் கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து எமது சேவைகளை இன்னும் விரிவாக்கியுள்ளோம்.

உள்ளடக்கும்தன்மை எமது உபாயமார்க்கமிக்க ஆதாரமாக இருக்கையில் கிழக்கு மற்றும் வடக்குப் பிராந்தியங்களில் உள்ள எமது ஊழியர்கள் மும்மொழி தெரிந்தவர்களாக இருப்பதுடன் இவர்கள் செயற்திறன்மிக்க தொடர்பாடலுக்கும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பு வழங்குகின்றனர். மேலும், எமது சகல சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் பொருட்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் தகவல் சார்ந்த தீர்மானம் மேற்கொள்வதற்கும் அவசியமெனின் ஆலோசனை பெறவும் இயலுமாக்கப்படுகின்றது.

பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு

GRI 411-1

நாடு முழுவதும் நாம் கொண்டுள்ள ஆழானதும் உள்ளார்ந்ததுமான இருப்பு, குறிப்பாகக் கிராமப் பிரதேசங்களில் நாம் கொண்டுள்ளவை, நாம் சேவையாற்றும் சமுதாயங்களின் மத்தியில் சாதகமான மாற்றங்களை உருவாக்குவதற்கு உதவியுள்ளது. உள்ளடக்கத்தினை மேம்படுத்தி வாழ்வாதாரங்களை வலுவூட்டியதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கான ஒரு நம்பிக்கையான பங்காளர் மற்றும் அவசியமான நிறுவனம் என்கின்ற ரீதியில் நாம் எமது வகிபாத்திரங்களை வலுப்படுத்தியுள்ளோம். 2025 ஆம் ஆண்டில் நாம் பல வழிகளிலும் எமது சமுதாயங்களுக்குத் தொடர்ந்து உதவி வழங்கியுள்ளோம். மேலும், சுதேச மக்களின் உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் பற்றி எவ்விதமான முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சமுதாய ஈடுபாடு

GRI 413-1

கலாசாரம் மற்றும் சமயம், கல்வி, நிதியறிவு, மற்றும் சமூக நலனோம்புகை என்பவற்றினை இலக்குவைக்கும் பல்வேறு செயற்பாடுகள் மூலம் சமூக ரீதியாகப் பொறுப்புவாய்ந்த ஒரு நிறுவனம் என்ற ரீதியில் நாம் எமது சமுதாய ஈடுபாட்டினை ஆழப்படுத்தியுள்ளோம். சிவில் சமூகத்துடன் பங்காண்மை அமைத்து, நிலைபேறான எதிர்காலத்திற்காக வலுவூட்டப்பட்ட சுயசார்புக் குழுக்களை அணிதிரட்டும் நோக்கத்துடன் நாம் அனுகூலம் கிட்டாத சமுதாயங்களுக்கு நடைமுறை ரீதியான உதவிகளை வழங்கினோம். வாழ்வாதாரங்கள் மற்றும்

மீண்டெழுந்தன்மை ஆகியவற்றின் மீதான நீண்ட காலத் தாக்கங்களுடன் இந்த முன்னெடுப்புக்களில் நாம் கணிசமாக முதலீடு செய்துள்ளோம்.

கலாசாரம் மற்றும் சமயம்

கண்டி எசல பெரஹெர 2025

பெருந்திரளான உள்நாட்டவர்களையும் வெளிநாட்டவர்களையும் கவர்ந்திழுக்கும் உலகப் புகழ்பெற்ற அணிவகுப்பினையும் பாரம்பரியத்தினையும் கொண்ட பிரதான நிகழ்வான கண்டி எசல பெரஹரவுக்கு வங்கி 2025 ஆம் ஆண்டில் அனுசரனை வழங்கியது. இலங்கையின் கலாசாரப் பாரம்பரியத்தின் முக்கிய அங்கமான இந்தப் பிரபலமான நிகழ்வுக்கு உதவியதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அநுராதபுரத்தில் உள்ள புனித ஜயசிரி மஹா போதிக்கான பெத்மக பாதை அங்குரார்ப்பணம்

புனித சிறி மஹா போதி வளவின் மேற்கு நுழைவாயிலுக்கான பெத்மகே பாதை நிர்மாணிப்பினை வங்கி பூர்த்தி செய்தது. இது வங்கியின் தொடர்ச்சியான மஹாஜன மெஹவர நிகழ்ச்சித்திட்டக் கட்டமைப்பின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டது.

அநுராதபுரத்தில் பொசன் வைபவம்

சமய நல்லிணக்கத்திற்கான எமது கடப்பாட்டினை மீளுறுதிப்படுத்தி புனித பொசன் பூரணை தினத்தினைக் கொண்டாடுவதற்காக அநுராதபுரத்தில் பல நன்மையான காரியங்கள் நிறைவேற்றப்பட்டன. 42 வது வருடம் தொடர்ச்சியாக, புனித மஹாபோதி வளாகத்தில் சில் அனுஷ்டித்த 25000 பக்தர்களுக்கு வங்கி அன்னதானம் வழங்கியது. மேலும், 19 வது தடவையாக, ருவன்வெலி மஹா சேயவில் “பொசன் பக்திப் பாடல்” நிகழ்வினை மக்கள் வங்கி நடத்தியது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் தேசிய மற்றும் சமயச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக மக்கள் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதேவேளை இது வங்கிப் பணியாளர்களின் கலை திறன்களைக் ஊக்குவிக்கும் விதமாகவும் அமைந்தது. இசை நிகழ்ச்சி மூத்த இசை வித்தகரான கருணாரத்ன விஜேவர்தனவினால் நெறிப்படுத்தப்பட்டது. பக்திப் பாடல்கள் மக்கள் வங்கிப் பணியாளர்களாலும் நிவத்தகச்செத்திய மஹா வித்தியாலய மாணவர்களாலும் பாடப்பட்டது. வங்கியின் அநுராதபுரப் பிராந்திய அலுவலகம் முழு நிகழ்ச்சித்திட்டத்தினையும் ஏற்பாடு செய்திருந்தது.

நத்தார் பாடல்கள்

நத்தார் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி கிறிஸ்தவ சங்கத்தினால் கரோல் பாடல் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது.

வகை	முதலீடுகள் ரூபா மில்லியன்	செயல்திட்டங்களின் எண்ணிக்கை	பலாபலன்கள்
கலாசாரம் மற்றும் சமயம்	11.8	12	சமுதாயங்களின் மத்தியில் ஒத்திசைவுமிக்க மற்றும் ஆதாரமிக்க வாழ்விற்காக இனத்துவ மற்றும் சமய நல்லிணக்கத்தினை மேம்படுத்துகின்றது.
கல்வி	11.7	02	கற்றல் மற்றும் அர்த்தபூர்வமான ஈடுபாட்டில் நவீன முறையில் ஈடுபடுவதற்காக எதிர்காலத் தலைமுறையினை வலுவூட்டுகின்றது.
சுகாதாரம் மற்றும் சமூகச் செயற்பாடுகள்	3.2	05	ஆரோக்கியமான தேசத்திற்காக சுகாதாரம், நீண்ட ஆயுள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு என்பவற்றினை உறுதிப்படுத்தல்.

கல்வி

மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

கல்வி மற்றும் இளைஞர் விருத்திக்கான வங்கியின் கடப்பாட்டினை மீளுறுதிப்படுத்தி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் 11 மில்லியன் ரூபா செலவில் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட வின்சன்ட் சுபசிங்ஹ ஞாபகார்த்த விடுதிக் கட்டிடத்தினை வங்கி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தது.

பட்டமானி உள்ளுறைப் பயிற்சிகள்

பட்டமானிகளை எதிர்காலச் தொழில் சந்தைகளை எதிர்நோக்கச் செய்வதற்கும் இலகுவாக இயங்குதிறன்மிக்க பொருளாதாரச் சூழலுக்குத் தகைமைப்படுத்துவதற்கும் நாம் அவர்களுக்கு உள்ளுறைப் பயிற்சியினை வழங்கினோம்.

14

அரசாங்கப் பல்கலைக்கழகங்கள்

06

தனியார் பல்கலைக்கழகங்கள்

713

2025 டிசம்பர் 31 இன் போதுள்ளவாறாகப் பயன்பெற்ற மாணவர்கள்

499

2025 ஆம் ஆண்டு நிலவரப்படி நிகழ்ச்சித்திட்டத்தினுள் இணைந்த புதிய மாணவர்கள்

அறிவுப் பகிர்வு

முன்னேற்றத்திற்காகவும் நிதி அறிவுக்காகவும் தேவைப்படும் திறன்களைப் பதியவைப்பதற்காகவும் இயலளவினைக் கட்டியெழுப்புவதற்காகவும் அறிவினைப் பகிரும் செயலமர்வுகள் பிரதானமாகக் கிராமப் பிரதேசங்களில் நடத்தப்பட்டன.

நிகழ்ச்சித்திட்டங்கள்/முன்னெடுப்பு	தொனிப்பொருள் குறிக்கோள்	விபரிப்பு	பிராந்தியம்/மாவட்டம்	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
சிறிய மற்றும் நடுத்தர நிறுவன வாடிக்கையாளர்களுக்கான தொழில்முனைவோர் மகிமை	பெண் தொழில்முனைவோருக்கு மத்தியில் நிதி அறிவு உருவாக்கம்	நிதி முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றம்	கொழும்பு வடக்கு, தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கு	32

சுற்றாடல் பேணல்

சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைக் குறிக்கோள்கள் எமது செயற்பாட்டின் மையமாகும். வங்கியின் துரிதப்படுத்தப்பட்ட டிஜிட்டல் நிலைமாற்றமானது, சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை மட்டப்படுத்தி வியாபாரம் நடத்துவதற்கான வங்கியின் உபாயமார்க்கமிக்க நோக்கத்திற்கான தெளிவான அறிகுறியாகும். டிஜிட்டல் மயமாக்கலானது கடதாசிப் பாவனையினையும் கழிவகற்றலையும் கணிசமாகக் குறைத்துள்ளதுடன் பசுமைக் கட்டிடங்கள் தேசிய சக்திப் பாவனையினைக் குறைப்பதற்குப் பங்களிப்பு வழங்கி பசுமைக் கடன் வழங்கல் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கு உதவி வழங்கியுள்ளது.

உயிரியல் பல்வகைமை பேணலில் எம் முயற்சிகள் எமது சூழியல் பூங்காக் கருத்தியல்களில் பிரதிபலிக்கின்றன. இங்கே உள்நாட்டு இனங்களை நடுவது ஊக்குவிக்கப்பட்டுப் பேணப்படுகின்றது. அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கண்டத்தினைப் பாதுகாப்பதை நாம் பரிபூரமாண முறையில் அணுகுகின்றோம். எமது செயன்முறைகளையும் செயற்பாட்டு வினைத்திறன்களையும் மறுசீரமைப்பு செய்வதற்காக நாம் உள்நோக்கிப் பார்க்கின்றோம். இது எமது சூழலுக்குப் புலப்படக்கூடிய மற்றும் புலப்படாத பெறுமதிகளைச் சேர்க்கின்றது.

ESG கவனக்குவிப்பினை 94 – 95 ஆம் பக்கங்களிலும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வங்கியியலை 127 ஆம் பக்கத்திலும் இயற்கை மூலதனத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளீடுகளை 198 ஆம் பக்கத்திலும் மேலதிக விபரங்களுக்காக பார்க்கவும்.

2026 ஆம் ஆண்டுக்கான தோற்றப்பாடு

மஹாஜன மெஹவர எனும் மையக் கருத்தியலுடன் எமது பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. எமது பாரிய வளங்களையும் விரிவான வலையமைப்பினையும் பயன்படுத்தி நாம் எமது சமுதாயங்களின் மத்தியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து உதவியினையும் வலுவூட்டலையும் எதிர்பார்ப்பினையும் வழங்குகின்றோம். வங்கி சேவை வழங்கும் சூழலிலும் சமுதாயங்களிலும் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் நாம் தேசத்தின் கிராமப் பிரதேசங்களுக்குப் பங்களிப்பு வழங்குகின்றோம். இங்கே நிதி நலனின் கருவாக வங்கி உள்ளார்ந்த பங்களிப்பை/இருப்பை கொண்டுள்ளது.

சமுதாய வாழ்வின் மீது பரந்த மற்றும் அர்த்தபூர்வமான தாக்கத்தினை உருவாக்குவதற்கு நாம் பல பிரதான நிகழ்ச்சித்திட்டங்களில் முதலீடு செய்வோம். மேலும், வங்கியின் பௌத்த சங்கம், இந்து சங்கம், முஸ்லிம் மஜ்லிஸ் மற்றும் கிறிஸ்தவ அமைப்பு ஆகியன 2026 ஆம் ஆண்டில் பல்வேறு பெருநிறுவனச் சமூகப் பொறுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு, சமுதாயத்திற்கு உதவி வழங்கி, எந்தவொரு நிலைபேறான அமைப்பினதும் இன்றியமையாத அம்சமான சமய மற்றும் இன நல்லுறவினை எடுத்துக்காட்டும்.

முதலீட்டாளர் மூலதனம்

அரச உடமையான வங்கி என்ற வகையில், எமது பிரதான முதலீட்டாளர் மற்றும் கட்டுப்படுத்துகின்ற பங்குதாரர் நிதி அமைச்சினால் பிரதிநிதிப்படுத்துகின்ற இலங்கை அரசாங்கம் ஆகும். 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட (2019-ல் திருத்தப்பட்ட) சமநிலை பங்கு மூலதனம் 92.27% வைத்துள்ள இலங்கை அரசுடன் கூட்டுறவு சங்கங்களினால் உரித்துடமையான மிகுதி 7.73% ஐக் கொண்டு இலங்கையிலுள்ள (இரண்டாவது) மிகப்பெரிய அரச துறை வங்கியாக மக்கள் வங்கி கருமமாற்றி வருகின்றது.

பொருளாதார பங்களிப்பு

GRI 201-1

2025-ல் பகிரப்பட்டு மற்றும் விநியோகிக்கப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி எமது வியாபார செயல்பாடுகளில் விரைவான வளர்ச்சி, செலவு மீதப்படுத்துகின்ற பூர்வாங்க வேலைகளில் திறமை, பலமுள்ள இடர் முகாமைத்துவம் மற்றும் ஒழுக்க ரீதியான ஆளுமை செய்கை ஒழுங்குகளின் தொடர்ச்சியான செயற்பாட்டையும் குறிப்பிடுகின்றது.

டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான	2021 ரூபா ’000	2022 ரூபா ’000	2023 ரூபா ’000	2024 ரூபா ’000	2025 ரூபா ’000	வளர்ச்சி (%) 2025 எதிரே 2024
வருமான மூலங்கள்/வழிவகைகள்						
வட்டி	197,330,011	321,935,983	394,794,898	349,292,146	356,669,240	2.1%
நாணயமாற்று	(1,405,861)	17,053,885	8,584,947	(435,708)	3,344,122	667.5%
தரகு மற்றும் கட்டணங்கள்	8,268,168	16,397,745	13,806,168	14,923,343	18,312,109	22.7%
மூலதன இலாபம்	143,459	184,223	347,203	537,614	263,377	-51.0%
ஏனையவை	2,914,043	1,656,773	4,708,927	3,660,594	3,420,314	-6.6%
மொத்தம்	207,249,820	357,228,609	422,242,143	367,977,989	382,009,162	3.8%
வருமான பயன்பாடு						
வட்டி என்ற வகையில் வைப்பாளர்கள் / கடன் பெறுநர்களுக்கு	114,869,171	246,177,918	340,473,452	242,050,205	214,291,533	-11.5%
சம்பளம் என்ற வகையில் ஊழியர்களுக்கு	22,711,335	26,602,748	24,493,737	35,834,826	38,230,657	6.7%
பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவோருக்கு	12,276,709	15,882,049	21,352,264	21,265,446	22,865,436	7.5%
நிதி சார் சொத்துக்கள் மீதான தேறிய மதிப்பு குறைப்பு நட்டம்	14,472,820	33,346,451	7,437,572	5,450,173	15,993,696	193.5%
அரசாங்கத்திற்கு வரிகள் விசேட வரி வசூல் மற்றும் பங்கிலாபம்	16,328,960	13,944,390	13,926,049	33,476,273	48,968,336	46.3%
சமுதாயத்திற்கு	12,665	38,213	40,721	35,964	26,886	-25.2%
வளர்ச்சிக்காக தக்கவைக்கப்பட்டவை	26,578,159	21,236,840	14,518,348	29,865,102	41,632,619	39.4%
மொத்தம்	207,249,820	357,228,609	422,242,143	367,977,989	382,009,162	3.8%

தேசத்திற்கான முக்கிய பங்களிப்பு - 2025

தேசிய பங்களிப்பு	2025	2024
அரசாங்கத்திற்கு - வரிகள் விசேட வரி வசூல் மற்றும் பங்கு இலாபம் (ரூபா பில்லியனில்)	48.97	33.48
மூலதனத்தின் (முதலீட்டு) மீதான இலாபம் (%)	20.1	14.7
சொத்துக்கள் மீதான இலாபம் (%)	1.8	1.3

மூலதனத்தின் மீதான இலாபம் %



சொத்துக்கள் மீதான இலாபம் %



மேலதிக விபரங்களுக்கு பக்கம் 142 இல் தொடங்குகின்ற நிதிசார் மூலதன பிரிவை பார்க்கவும்.

தேசத்திற்கு நிதி சாராத பங்களிப்பு

வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு மேலதிகமாக, வங்கி பங்குலாபங்களை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கி, அவை ஓய்வூதியம் மற்றும் அஸ்வெசும கொடுப்பனவுகள் மூலம் பொதுமக்களுக்கு மாற்றப்படுகின்றன, இது கிராமப்புற சமூகங்களின் அன்றாட வாழ்க்கையை நிலைநிறுத்துகிறது. மேலும், வங்கியின் டிஜிட்டல் உட்கட்டமைபால் வலுப்படுத்தப்பட்ட, நாடு தழுவிய கிளை வலையமைப்பு மூலம், சிறு மற்றும் நடுத்தர தொழில் (SME) மற்றும் நுண்நிதித் துறைகள் பெரிதும் ஆதரிக்கப்பட்டு, இதுவரை வங்கிச் சேவைகள் சென்றடையாத மற்றும் குறைந்த வங்கிச் சேவை உள்ள துறைகளில் உள்ளடக்கிய சூழலை உருவாக்கியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்ற வடிவில் உரம், மருந்து, பெட்ரோலியம், நிலக்கரி மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களின் மொத்த கொள்வனவுக்கு பிரதான பங்களிப்புச் செலுத்துவதாக உறுதிப்படுத்துகின்ற அத்தியாவசிய பாரிய அளவு பொது பொருட்கள் மற்றும் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்களில் அரச உடைமை நிறுவனங்கள் (SOEs) ஊடாக இணைந்துள்ள இரண்டு பொதுத்துறை சார்ந்த வங்கிகளில் ஒன்றாக இந்த வங்கி விளங்குகின்றது. வங்கி வசதிகளற்ற அல்லது குறைந்த வங்கி சேவைகளைப்பெறும் கிராமப்புற மக்களுக்கு முறையான மற்றும் பாதுகாப்பான நிதி சேவைகளை வழங்கி நிதிசார் உள்ளடக்கத்தை உறுதி செய்கிறோம்.

வரிவிதிப்பு

GRI 207-1, 2, 3

நடப்பாண்டில், தேசியப் பொருளாதாரத்திற்காக வரிகள் மூலம் 43.19 பில்லியன் ரூபாயை நாங்கள் பங்களிப்பு செய்துள்ளோம். இதில் வருமான வரியாக 24.18 பில்லியன் ரூபாயும், நிதிச் சேவைகள் வரியாக 19.01 பில்லியன் ரூபாயும் உள்ளடங்குகின்றன.

வங்கியின் வரி நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய, உள்வாரித் தணிக்கை மற்றும், இணக்கப்பாட்டுப் பிரிவு ஒரு வலுவான கண்காணிப்புப் பொறிமுறையைச் செயல்படுத்துகின்றது. அத்துடன், முறையான வரிச் செயல்பாடுகள் ஊடாக வங்கியானது தனது சமூகப் பொறுப்புணர்வையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது. அறநெறி சார்ந்த நடத்தைகளில் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவப் பண்பு ஆகியவற்றின் மூலம், சமூகப் பொறுப்புணர்வு சார்ந்த விடயங்களில் வங்கியின் பங்களிப்பு நிகரற்ற ஒன்றாக விளங்குகின்றது.

வங்கியின் வரிப் பிரிவானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் நெருக்கமான மற்றும் முன்மாதிரியான ஒத்துழைப்பைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாறிவரும் வரி நடைமுறைகளுக்கு மத்தியில், வரி ஏய்ப்பு அல்லது எவ்விதமான விதிமீறல்களும் அற்ற ஒரு தூய்மையான இணக்கப்பாட்டை வங்கி எக்காலத்திலும் பேணி வருகின்றது. எக்காரணம் கொண்டும் சட்டரீதியான வரிப் பொறுப்புகளில் இருந்து விலகாமல், முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதை இப்பிரிவு உறுதி செய்கின்றது.

இயற்கை மூலதனம்

வங்கி தொடர்ந்து சுற்றுச்சூழல் சார்ந்த கருத்துக்களை முக்கிய இடர் முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்து வந்தது. இந்தப் பகுதி இயற்கை மூலதனத்தை பொறுப்புடன் எவ்வாறு நிர்வகிக்கிறோம் என்பதையும் நிலைத்தன்மை அளவுகோல்களை நிதி அறிக்கையிடல் செயல்முறைகளுடன் எவ்வாறு இணைத்தோம் என்பதையும் விளக்குகின்றது.

எமது கவனம்

புரிந்து கொள்ளக்கூடிய நாட்டின் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு எமது ஜாக்கிரதையான பொறுப்புக்களை குறைவாக மதிப்பிட்டு இலங்கையின் பலவிதமாக காணி வடிவமைப்புகள் ஊடாக எமது பரவலான மையம் அடையப் பெறுகின்றது. ஆகவே இயற்கை வளங்களின் பொது நலனை பாதுகாப்பதன் முக்கிய அம்சமாக சமுதாயங்களின் நலன் மற்றும் பரந்த பொருளாதாரத்தை பாதுகாப்பதற்காக கருமமாற்றுவது எமக்கு முக்கியமாக இருக்கின்றது. சுற்றாடல் ரீதியான பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் பொறுப்பு வாய்ந்த வள முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்குமான எமது முயற்சிகளை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம். அத்துடன் உயிரின ஆராய்ச்சி அறிவின் அடிச்சுவட்டை குறைப்பதற்கு உத்தேசித்துள்ளோம்.

எமது தந்திரோபாயம்

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பசுமை நிதி வரிசைப்படுத்தல் வரிசையில் இயற்கை மூலதனத்தில் எமது பாவனையை கவனத்தில் கொள்வதற்கான முயற்சிகளை நாம் தீவிரப் படுத்தியுள்ளோம். நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் நிதிசார் உற்பத்திகள், சேவைகள் மற்றும் செயற்பாடுகளுக்கான அத்திவார கட்டமைப்பாக இதனை நாம் சேர்த்துள்ளோம். இது காலநிலை சாந்தப்படுத்தல், சேர்ப்பு, உயிரின மாற்றம் பாதுகாப்பு மற்றும் வள திறமை போன்றவற்றுக்குப் பங்களிப்பு செலுத்துகின்ற பசுமை கடன் வழங்கல் முன்னுரிமைப்படுத்துகின்ற திட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி நிலையான விவசாயம் மற்றும் மாசுபடுதல் கட்டுப்பாடு போன்றவற்றினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற துறைகள் உட்பட நிதிசார் தீர்வுகளுக்கு நாம் உச்சவரம்பு விதித்துள்ளோம்.

எமது பாரிய பங்குதாரருடன் சுறுசுறுப்பாக இணைந்து நிலையான நிதியியல் தலைவர் என்ற வகையில் எமது பங்களிப்பை நாம் பலப்படுத்தியுள்ளோம். வளர்ச்சியை உட்கொள்வதற்கு நாட்டின் இயற்கை மூலதனத்தை பாதுகாப்பதற்கு நாம் செயல்பட்டு வருகின்றோம்.

நிதிசார் நிறுவனம் என்ற வகையில் மின் சக்தி, நீர், எரிபொருள் மற்றும் கழிவு முகாமைத்துவம் எமது அடிச்சுவடு மற்றும் பொறுப்பு வாய்ந்த பாவனையூடாக கிளை மற்றும் முகவர் நிலைய வலைப் பின்னலைக் கட்டி எழுப்புதல் மற்றும் பராமரித்தலுக்கு இயற்கை மூலதனத்துடன் வரையறுக்கப்படுகின்றது. பாதகமான அழுத்த சுற்றாடல் செயற்பாடுகளில் நாம் இணைந்து கொள்வதில்லை. அத்துடன் பசுமை கடன் வழங்களுக்காக சிக்கனமான கடன் பகுப்பாய்வு ஊடாக அதன் உயர்வுக்கு சாதகமான பங்களிப்பை வழங்குவோம்.

2025ல் வழங்கப்பட்ட பசுமை நிதி கடன்கள்	ரூபா 3.6 பில்
சூரிய கொள்ளளவுடன் கூடிய கிளைகளின் மொத்த எண்ணிக்கை	141 கிளைகள் 4.9 MW உற்பத்தியுடன்
நீர் பாவணை குறைக்கப்பட்டது	0.9 மெகா லீட்டர்ஸ்
மின்சார பாவணை	8,191.4 Gj
குறைக்கப்பட்ட GHG வெளியீடுகள்	3.0 டொன் CO_2e
இந்த ஆண்டில் காகித மீள் சுழற்சி	5,459 கி.கிராம்

பயனளிக்கப்பட்ட முக்கிய தலைப்புக்கள்

இலங்கை அரசுக்கு அதன் தேசிய அபிவிருத்தி உபாயத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற பங்காளர் என்ற வகையில் நீண்ட காலப்பகுதியில் ஒழுக்க ரீதியான ஆளுமை, திடமான இடர் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றமை தேசத்திற்கு அழுத்தத்தை தோற்றுவிக்கும். நாம் சக்தி வாய்ந்த வியாபார சுற்றாடலுக்கு இணைகின்ற பொழுது தேசத்தை கட்டி எழுப்புவதற்கும் உயர்த்துவதற்கும் உதவி புரிகின்ற எமது உபாயத்தின் மத்திய பாகமாக பொது சேமநலம் விளங்குகின்றது.

- இடர்பாடு மற்றும் ஆளுமை
- சுற்றாடல் ரீதியான அழுத்தம்
- சமூக பொருளாதார அழுத்தம்

N தேவைகள் NEEDS	O வாய்ப்புக்கள் OPPORTUNITIES	I மேம்பாடுகள் IMPROVEMENTS	S பலங்கள் STRENGTHS	E விதிவிலக்குகள் EXCEPTIONS
இயற்கை மூலதனக் கணக்கீட்டை முதன்மை நிதி அறிக்கையிடலில் ஒருங்கிணைப்பதை மேம்படுத்துதல்.	பசுமை நிதி உற்பத்திகளை வளர்ப்பதற்கான உறுதியான உள்ளார்ந்த ஆற்றல்.	நிதி சார் அறிக்கை போன்ற இயற்கையாக மூலதன அளவீட்டு முறைமை தொடர்பான அறிவிப்புச் செய்வதனை உயர்த்துதல்.	நிலையான முதலீடுகளுக்காக வழங்கப்பட்ட கொள்ளளவு உறுதியான சொத்து அடிப்படை மற்றும் தொடர்ச்சியான வைப்பு வளர்ச்சி.	சுற்றாடல் ரீதியான அழுத்தத்தை குறைப்பதில் பங்குதாரரின் எதிர்பார்ப்புகள்.
மேம்படுத்தப்பட்ட வெளிப்படுத்தலுக்காக (கார்பன் தடம், வளப் பயன்பாடு, கழிவு மேலாண்மை போன்றவை), இயற்கை மூலதனம் சார்ந்த அளவீடுகளைக் கணக்கிடுவதற்கான ஒரு வலுவான பொறிமுறை.	அபிவிருத்திக்கான SME மற்றும் மைக்ரோ பைனான்ஸ் துறையை மையப்படுத்திய நிலையான நிதித்துறையில் தலைவர் என்ற வகையில் வங்கியை நிலை நிறுத்துவதற்கான ஆற்றல்.	நிலையான இலக்குகளை பலவீனப்படுத்த முடியுமான உயர் சுற்றாடல் இடர்பாடுகளுடன் அரச உடைமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு திறந்திருத்தல்.	இலாபகரத்தன்மையை நிர்வகிக்கின்ற பொழுது மதிப்புக் குறைப்பை நிறுவகிப்பதற்கு நிரூபிக்கப்பட்ட அடிச்சுவடு பதிவு.	முதலீட்டாளர் மற்றும் காலநிலை மாற்றத்தில் ஒழுங்கான எதிர்பார்ப்பு மற்றும் சர்வதேச நிலையான தரங்களை சேர்த்துக் கொள்ளல்
முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில், சர்வதேசக் கட்டமைப்புத் தரங்களுடன் வலுவான ஒருங்கிசைவைப் பேணுதல்.	காகித பாவனை மற்றும் செயற்பாட்டு புகையை குறைப்பதற்கு நெம்புகோள்களின் தொகுதி திறமையாக பயன்படுத்தல்.	சரியான காலநிலை தொடர்பான வெளிப்பாடுகள் மற்றும் கடன் பெறுவதை இணைப்பதற்கு ஒழுங்கான மையப் பகுதியை அதிகரித்தல்.	அரச உடைமையான வங்கி என்ற வகையில் ஆழமாகப் பதிய வைக்கக்கூடிய பார்வை மற்றும் நம்பிக்கை மற்றும் பரந்த சேதத்தை சென்றடைதல்.	சிநேகபூர்வமான வங்கி தீர்வுகளுக்கான வளர்ச்சி பெறும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள்.

UNSDGs அழுத்தம் அடைந்துள்ளது

சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்

வங்கி அதன் சுற்றாடல் ரீதியான செயற்பாடுகளின் ஒரு பகுதியாக நீரைப் பாதுகாக்கின்றது.

வழங்கக்கூடிய மற்றும் சுத்தமான மின் சக்தி

வங்கி கிளைக் கட்டிடங்கள் சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துதல்.

நிலையான நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்

கஷ்டப் பிரதேசங்களில் குறைந்த சலுகை கொண்டுள்ளோருக்கு பாடசாலைகளுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் சூரிய மின் சக்தியை வழங்குவதற்கு சமுதாய திட்டங்கள் ஊடாக வங்கி நிலையான சமுதாயங்களை ஊக்குவிக்கிறது.

பொறுப்பு வாய்ந்த பாவனை மற்றும் உற்பத்தி

டிஜிட்டல் தீர்வை சேர்த்துக் கொள்வதன் மூலம் காகித பாவனையை குறைத்து வங்கி வளங்களை பாதுகாப்பதுடன் எல்லா கட்டிடங்களிலும் மின்சார பாவனையை பாதுகாக்கின்றது.

காலநிலை செயற்பாடு

வங்கி அதன் GHG வெளியீட்டினை கண்காணிப்பு செய்கிறது.

மின்சக்தி முகாமைத்துவம்

GRI 302-1, 3

வங்கியின் டிஜிட்டல் மயமாக்கல் மின் சக்தியை சேமிக்கும் செயற்பாட்டினை சாத்தியமாக்கும் சக்தி வாய்ந்ததாக இருப்பது போன்று அதிகரித்து வருகின்ற மின்சார தேவைக்கான வேதியியல் வினையூக்கியாகவும் விளங்குகின்றது. சாதன எண்ணிக்கை பெருகுதல் மற்றும் சில வெப்பத்தின் அளவுக்கு மின்சார பயன்பாட்டை உயர்த்துகின்ற கதிர்வீச்சு மற்றும் புவியின் வேலைப்பளு AI இல் தரவு நிலையங்கள் மற்றும் Cloud சேவைகள் 24x7 மின்சார பாய்ச்சலுடன் வளர்ச்சி அடைகின்றன.

குறைந்த போக்குவரத்து மற்றும் காகித பாவனை மின் வலு செலவினங்களை குறைப்பதற்குரிய எல்லை வரையறைக்கு உதவுகின்ற பொழுது தன்னியக்க கட்டுப்பாடுகள் மின்சக்தி பாவனை அழுத்தத்தை ஏற்படுத்துவதனால் எவ்வாறாயினும் டிஜிட்டல் கட்டுப்பாடுகள் மின்சக்தி உச்ச நிலைக்கும் திறமைக்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது. திறமை வாய்ந்த முறை ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறு புதுப்பிக்கத்தக்கவையின் உயர் பங்கினை அடையக்கூடியதாக விநியோகம் மற்றும் தேவையை இணைப்பதற்கு டிஜிட்டல் சமிக்ஞைகள் பாவனைக்கு எடுப்பான கம்பிச் சட்டங்கள் மற்றும் தேவை பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றது.

2025-ல் 67 கிளைகள் சூரிய மின் தாங்கு தளங்களை பொருத்தியுள்ளன. அத்துடன் சூரிய மின் சக்தியை பயன்படுத்துகின்ற கிளைகளின் மொத்த எண்ணிக்கை 141 ஆகும். மீள்ஆய்வுக்கு உட்பட்ட இந்த ஆண்டில் மொத்த மின்சக்தி பரவலாக்கம் தொகை 4,852 MW ஆகும்.

மேலதிகமாக வங்கி LED, குறைந்த மின் சக்தி பாவனை கொண்ட டங்ஸ்டன் மின்விளக்குகளை தொடர்ந்து பதிலீடு செய்து வருகின்றது. அத்துடன் மின் சக்தி திறமையை மேம்படுத்தும் தலைகீழான மொடல் (Inverter models) கொண்ட பூரண காற்று சீராக்கி அலகுகளை பதிலீடு செய்துள்ளது.

பசுமை நிதியிடல்

எதிர்காலத்திற்கு ஆயத்தமான வங்கி நிறுவனம் என்ற வகையில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகின்ற போது சேமநலம் எமது செயற்பாடுகளின் மையப் பகுதியாக விளங்குகின்றது. மேலும் நாம் புவியின் பாதுகாப்பை பாரிய பொறுப்புடன் தெரிந்து கொண்டுள்ளோம். எமது முன்னுரிமைகளில் பிரதான அடையாளம் என்ற வகையில் பசுமை பொருளாதாரத்தை நோக்கி மெதுவாக ஆனால் உறுதியுடன் நகர்கின்ற தேசம் என்ற வகையில் கரிப்பொருள் அற்ற மற்றும் மின் சக்தி மீள் நீட்சியைத் துரிதப்படுத்துவதற்கு மொத்த தொகை ரூபா 3.6 பில்லியன் 23 கடன்கள் வடிவில் பணம் கொடுத்து வருகின்றோம்.

ரூபா 0.84 பில்லியன் கூரை மேல் சூரிய மின் சக்தி பொருத்துதல்கள்

ரூபா 2.52 பில்லியன் கீழ் மாடி மேலே ஏற்றப்பட்ட சூரிய மின்சக்தி திட்டங்கள்

ரூபா 0.25 பில்லியன் மின்சார வாகன இணைப்பு

வாடிக்கையாளர் காபன் காகித அடிச்சுவடுகளை குறைப்பதற்கும் தேசிய மின் சக்தியை பலப்படுத்துவதற்கும் குறைந்த செயற்பாட்டு செலவினங்களை கவனத்தில் கொள்வதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை பெருநிறுவன மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சி துறை சார்ந்தோரை குறைவான கரிப் பொருள் செயற்பாடுகளுக்கு மாற்றுவதற்கு துணை புரிகின்றது.

எமது விவரமான விளக்கங்களுடன் பசுமையான முயற்சிகள் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் குறித்து தயவுசெய்து IT மற்றும் டிஜிட்டல் வங்கி செயற்பாடு தொடர்பாக பக்கங்கள் 127-131 வரை பார்க்கவும்.

மின் சக்தி மூலம்	சக்தி வகை	பாவனை மட்டம் 2025 (Giga Jules)	பாவனை மட்டம் 2024 (Giga Jules)
புதுப்பிக்க முடியாதவை	மின்சாரம்	8,191.4	6,235.7
புதுப்பிக்க இயலாத எரிச்சக்தி	பெட்ரோல்	330.8	244,2
	டீசல்	1,646.2	2,292.9
மொத்தம்		10,168.4	8,772.9
பணியாளர் ஒருவருக்கான சக்திச் செறிவு	9.05 GJ		

நாம் People's Tower இன் செயற்பாட்டு உள்ளடக்கத்தை மேம்படுத்தியுள்ளதால் 2024 இல் மின்சார பாவனை 6,235.7 கீகா ஜுல்ஸ் இல் இருந்து 2025 இல் 8,191.4 கீகா ஜுல்ஸ் வரை அதிகரித்துள்ளோம்.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெடுப்புகள்

GRI 201-2

ISO14064-3 2019 கடன் சாட்சிப் பத்திரமளித்தல்

அறிக்கையிடும் காலப்பகுதி	2025 ஜனவாரி 04 - 2025 டிசம்பர் 31 வரை
நிறுவனம்	மக்கள் வங்கி இலங்கை - தலைமையகம்
கூற்று இலக்கம்	SL/PB/20260309
வழங்கிய திகதி	09.03.2026
உறுதிப்படுத்தல் மட்டம்	நியாயமானது
மொத்த புகை	1901.71 தொன் CO_2e
நேரடி புகை	408.31 தொன் CO_2e
மொத்த மறைமுக புகை	1493.40 தொன் CO_2e
இயற்கை உயிர் புகை	பொருத்தமில்லை

எமது மின்சக்தி பாவனையை மேலும் உள்ளடக்குவதற்கு பல முயற்சிகளை நாம் அமல்படுத்தியுள்ளோம்.

- கிளைகள் மற்றும் தன்னியக்க இயந்திரங்களின் கூரைமேல் சூரிய மின் வலு பொருத்துதல்களை அதிகரித்துள்ளோம்.
- மின்சக்தி சேமிப்பு செயற்பாடுகள் தொடர்பாக பயிற்சி திட்டங்களை நடத்தியுள்ளோம்.
- பீபள்ஸ் டவரில் பசுமை கட்டிட தரவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- மின்சார பாவணையை குறைப்பதற்கு எல்லா புதிய இயந்திர மற்றும் மின்னியல் உபகரணங்களின் “மின் சக்தி திறமை விகிதம்” கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.
- மின்சக்தி சேமிப்பதற்கு பரவலாக LED மின்விளக்குகளை பயன்படுத்தியுள்ளோம்.
- மின் சக்தி திறமை விகிதத்தில் IT உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
- தன்னியக்க கண்காணிப்பு ஆற்றல் கொண்ட சவுண்ட் ப்ரூப் (Sound proof) குறைவான புகை, எரிபொருள் திறன் கொண்ட ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வங்கியினூடாகவும் எமது பங்குதாரர் ஊடாகவும் பொறுப்பு வாய்ந்த பாவனைக்குரிய எமது செயற்பாடு பிரபஞ்சத்தில் பல வழிகளிலும் தெளிவானதாக உள்ளது.

கூரைமேல் மற்றும் வர்த்தக சூரிய மின் சக்திக்காக நிதியிடல்	சூரிய இணைப்பை துரிதப்படுத்துவதற்கான பங்குடைமை	தேசிய சூரிய மின்சக்தி அசைவுறுதலுடனான ஒழுங்கு	அக நடவடிக்கைகள்
கம்பிச் சட்டம் (Grid draw) இழுப்பை குறைத்து வாடிக்கையாளருக்கும் கிளைகளுக்கும் தள உற்பத்தியை நிர்மாணிக்க கூடியதாக மேல் கூரை மற்றும் கம்பி சட்டங்கள் இணைக்கப்பட்ட திட்டங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட “சூரிய மின்சக்தி” கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.	வாடிக்கையாளர்கள் மற்றும் உள்ளார்ந்த ஆற்றலுடன் வங்கி சொத்துகள் ஊடாக சூரிய மின்வலு ஆக்கத்திறனை வேகமாக கையாளுதல் வெள்ளை வரம்பிடப்பட்ட நிதியிடல் ஊடாக கூரைமேல் சூரிய மின்சக்தி அடைய பெறுவது எளிதாக்குவதற்கும் புதுப்பிக்கத்தக்க மின்வலு உற்பத்தியாளர்களுடன் பங்கு உடைமை.	நிர்மாணிப்போர் விலைப்பட்டியல் மற்றும் கம்பிச் சட்ட உள்ளக இணைப்பு தெரிவுகள் பாரிய அளவில் கிடைக்க பெறுவதன் மூலம் திட்ட மிட்ட பொருளாதாரத்தை அடையக்கூடியதாக வங்கி தரம் உயர்த்தலுக்கான நிலைமைகளை உருவாக்கி 2025இல் கூரைமேல் சூரிய மின்சக்தி கொள்ளளவு கொண்ட தேசிய திட்டங்கள் (சூரிய பல சங்ராமய) விஸ்தரிக்கப்பட்டுள்ளது.	பாவனையைக் குறைப்பதற்கு LED மின்விளக்கு திறமை வாய்ந்த HVAC பலவிதமான வேகத்துடன் செலுத்தப்படுகின்றதுடன் கட்டிட முகாமைத்துவ முறைமைகள் போன்ற தொடர்ச்சியான மின்சக்தி திறமைகளைக் கொண்டிருத்தல். பகல் வேலைகளில் சூரிய மின்வலு உற்பத்தி உயர்வடைகின்ற போது சுமை ஏற்றும் முகாமைத்துவம் மற்றும் உரிய காலத்தில் செய்பவர்களைப் பயன்படுத்தி நிரல் இடுதல் மற்றும் ஆபத்தல்லாத அபரிமிதமான சுமைகளை இடம் மாற்றுதல் ஈடு செய்கின்ற கம்பி சட்ட பாவனைக்கு புதுப்பிக்கத்தக்க மின்வலு அல்லது சான்றிதழ்களை கொள்வளவு செய்தல். மக்கள் கொடுப்பனவு மற்றும் தள்ளுபடி (APPS) பாவனை அதிகரிப்பு மற்றும் கிளை குறைவான மின்சக்தி பாவனையை மறுசீரமைப்புடன் தொடர்ச்சியான டிஜிடல் மயப்படுத்தல்.

வாயு வெளியீட்டு முகாமைத்துவம்

GRI 305-1, 2, 3, 4, 5

வாயு வெளியீடு போக்குவரத்து மற்றும் உபகரண செயற்பாட்டுக்கு வரையறுக்கப் பட்டிருந்த போதிலும் 2024ல் ISO14064-3:2019 சீராக்களுடன் நாம் அடையப்பெற்ற வெற்றி GHG வாயு வெளியீட்டை குறைப்பதற்கு தொடர்ச்சியான எமது முயற்சிகள் எமக்கு உதவி புரிந்துள்ளன. பூஜ்ஜிய இணக்கப்பாடற்ற சம்பவங்களுடன் 2025-ல் நாம் கண்டிப்பாக அத்தாட்சி படுத்தல் தேவைகளுக்கு இணங்க செயல்பட்டுள்ளோம். புகையை நிர்வகிப்பதற்காக நாம் அடிப்படையான மற்றும் இனம் காணும் மற்றும் மீள் மதிப்பீட்டு முறைகளின் ஆவணப்படுத்தல் முறையை பிரயோகித்துள்ளோம்.

இணங்காணல் அலகு

உகந்த தன்மை	நிறைவான நிலை	உறுதியான நிலை	சரி நிலை	ஒளி ஊடுருவல்
உத்தேசிக்கப்பட்ட பாவனையாளர்களின் தேவை எதிர்கொள்வதற்கு மறைமுகமான புகை அல்லது அப்புறப்படுத்தலில் தேவையை கவனத்தில் கொள்ளல். உதாரணமாக வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள், முதலீட்டாளர்கள், அரசு NGOs நிறுவனங்கள் அல்லது அவர்களது சொந்தங்கள் அல்லது ஏனையவர்களுடன் இணைந்த.	எல்லா சம்பந்தப்பட்ட வளங்கள் சேர்ப்பதற்கு எந்த மறைமுகமான புகைகள் மற்றும் அப்புறப்படுத்தல்கள் பொருட்பட்டியலுக்கான சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய தேவை என்பதை கவனத்தில் கொள்ளல்	அர்த்தமுள்ள ஒப்பீடுகளை செய்வதற்கு மறைமுகமாக மற்றும் அப்புறப்படுத்தல் தேவை உட்படுத்தப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளல். (உதாரணம் பொருட் பட்டியலில் GHG தொடர்பான தகவல்.)	நிச்சயம் அற்ற நிலையிலிருந்து நியாயமாக நீக்கப்பட உள்ள மொத்த பொருட்பட்டியலுக்கு சொந்த அல்லது ஏனைய வளங்களுடன் இணைத்து மறைமுகமான புகை மட்டும் அப்புறப்படுத்துவதற்கு உட்படுதல் அவசியமா என்பதை கவனத்தில் கொள்ளலாம்.	நியாயமான நம்பிக்கையுடன் தீர்மானங்கள் எடுப்பதில் இருந்து உத்தேசிக்கப்பட்ட பாவனையாளர்களை தடை செய்தல் வெளிப்பாடு இன்றி மறைமுக புகை மற்றும் அப்புறப்படுத்தல் நியாயமற்றதா என்பதை கவனத்தில் கொள்ளல்.

மதிப்பீட்டு அளவுகோல்கள்

மீள் மதிப்பீடு அலகு	செல்வாக்குமட்டம்	இடர்பாடு அல்லது வாய்ப்பு	துறை குறிப்பிட்ட வழிகாட்டல்	புறம்பான வளங்கள்	ஊழியர் இணைதல்
பாவனை செய்யப்படுகின்ற புகை அல்லது அப்புறப்படுத்தல் பரிமாண ஐயப்பொருள் பாவனை செய்யப்படுகின்றன.	புகையை குறைத்தல் மற்றும் அப்புறப்படுத்துவதனையும் கண்காணிப்பதற்கு ஸ்தாபனம் கொண்டுள்ள ஆற்றலின் பரப்பளவு. (உதாரணமாக மின்சக்தி திறமை, சூழல் வடிவமைப்பு, வாடிக்கையாளர் இணைதல் குறிப்பு விதிகள்.)	இடர்பாட்டுக்கு நிறுவனத்தின் வெளிப்படுத்தலுக்கு பங்களிப்பு செய்கின்ற புகை அல்லது அப்புறப்படுத்தல். (உதாரணமாக நிதி சார் ஒழுங்கமைப்பு விநியோக தொடர் உற்பத்தி மற்றும் வாடிக்கையாளர் நீதிமன்ற வழக்கு நற்பெயர் ரீதியான இடர்பாடுகள் போன்ற காலநிலை தொடர்பான இடர்பாடுகள் அல்லது அதன் வியாபாரத்திற்கான வாய்ப்பு. உதாரணம் புதிய சந்தை புதிய வியாபார மாதிரி.)	துறை சார் குறிப்பிட்ட வழிகாட்டல் மூலம் வழங்கப்பட்டவாறு வியாபார துறையினால் முக்கியத்துவம் தெளிவு பெறாத GHG புகை	எடுத்துக்காட்டாக உள்ளக வியாபார செயற்பாடு புறம்பான வளங்களின் செயற்பாடுகளின் விளைவாக எழுகின்ற புகை மற்றும் அப்புறப்படுத்தல்.	மின்சக்தி பாவனையை குறைப்பதற்கு ஊழியர்களை ஊக்கப்படுத்த முடியுமான புகைகள் அல்லது காலநிலை மாற்றத்தை சூழ தூய நோக்குடன் குழுக்களை ஒன்றிணைத்தல். (உதாரணம் மின்சக்தி பாதுகாப்பு ஊக்குவிப்பு (Carpooling) உள்ளக நிலக்கரி விலையிடல்)

GHG பொருட்பட்டியல் சுருக்கம் 2025

உள்ளடக்கம்	வெளிப்பாடு மூலம்	GHG வெளிப்பாடு ($tonCO_2e$)				மொத்த வெளிப்பாடு
		CO_2	CH_4	N_2O	HFC	தொன் CO_2e
உள்ளடக்கம் 1 நேரடி வெளிப்பாடு	காகித எரியும் நிலை	17.835	0.131	0.000		17.967
	மொபைல் எரியும் நிலை	259.538	0.533	2.677		262.749
	நிலையற்ற வெளியீடு	0.022			127.572	127.594
	உள்ளடக்கம் 1 மொத்தம்	277.373	0.665	2.677	127.572	408.309
உள்ளடக்கம் 2 மறைமுக வெளிப்பாடு	கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரம்	875.495				875.495
	உள்ளடக்கம் 2 மொத்தம்	875.495				875.495
உள்ளடக்கம் 3 ஏனைய மறைமுக வெளிப்பாடு	கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்	0.710	0.002	0.007		0.720
	வியாபார பிரயாணம் காணி	0.136	0.002	0.002		0.139
	வியாபார பிரயாணம் காற்று	52.058				52.058
	ஊழியர் அலுவலக பயணம்	464.100	1.090	2.472		467.662
	கழிவு உருவாக்கம்	0.446				0.446
	கடத்தல் மற்றும் விநியோகக்கட்டம்	91.903				91.903
	கொள்வனவு செய்யப்பட்ட நீர்	4.971				4.971
	உள்ளடக்கம் 3 மொத்தம்	614.324	1.094	2.481		617.899
மொத்தப் புகை		1767.193	1.758	5.159	127.572	1901.704

GHG வெளியீட்டு ஒப்பீடு 2025 மற்றும் 2024

நிதி ஆண்டு	மொத்த வெளியீடு ($tonC O_2e$)	வகை 1 வெளியீடு ($tonC O_2e$)	வகை 2 வெளியீடு ($tonC O_2e$)	வகை 3 வெளியீடு ($tonC O_2e$)	வகை 4 வெளியீடு ($tonC O_2e$)	வகை 6 வெளியீடு ($tonC O_2e$)
2024	1904.7	305.9	720.1	801.5	0.7	76.5
2025	1901.7	408.3	875.5	520.6	0.5	96.9

ஓர் ஊழியிற்க்குரிய GHG வெளியீட்டு தீவிரத்தின் மேல் அளவு 2024 இல் 2.6 தொன் CO_2e உடன் ஒப்பிடுகையில் 2025ல் 2.2 தொன் CO_2e ஆக இருந்துள்ளது. அறிவிக்கும் ஆண்டுக்காக மொத்த GHG வெளியீட்டில் 2014 இல் 1904.7 தொன் CO_2e உடன் ஒப்பிடுகையில் 1901.7 தொன் CO_2e குறைவு காணப்படுகின்றது. CO_2 சிறு ஓட்டை ஒழுகுதல் ஒலிப்பதற்கு வங்கி முறையான தீயணைப்பு கண்காணிப்புகளை நடத்துகின்றது. GHG புகையை குறைப்பதற்கு கம்பனிக்கு சொந்தமான வாகனங்களுக்கு ஒரு வழி காரிய திட்டம் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

எமது உற்பத்திகள் சேவைகள் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளை நடத்துதல் தொடர்பான GHG வெளியீட்டு திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கு பக்கங்கள் 94 95 எமது ESG மையம் தொடர்பான பிரிவு முழு மொத்த செயற்பாடுகள்ளை கொண்டுள்ளது.

ஒப்பீட்டு நோக்கத்திற்காக GHG வெளியீடு மற்றும் அப்புறப்படுத்துவதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை ஆண்டு 2022 ஆகும்.

GWP பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகள்

	100 ஆண்டுகால அடிவடைத்துக்கான GWP மதிப்பீடுகள்
	ஆறாவது மதிப்பீட்டு அறிக்கை (AR 6)
CO_2	1
CH_4	29.8/27
N_2O	273
$CHCLF_2$	2,256

வாயு வெளியீட்டு காரணிகள் தொடர்பான மூலங்கள்

https://www.ipccnggip.iges.or.jp/public/2006gl/pdf/2_Volume2/V2_2_Ch2_Stationary_Combustion.pdf

https://ceypetco.gov.lk/wpcontent/uploads/Import-Specification.pdf

https://www.ipccnggip.iges.or.jp/public/pdf/2_Volume2/V2_3_Ch3_Mob ile_Combustion.pdf

https://ceypetco.gov.lk/wpcontent/uploads/Import-Specification.pdf

https://www.icao.int/environmental-protection/environmental-tools/ice

நீர் பாதுகாப்பு

GRI 303-1, 5

பல கிளைகள் நீர் வளங்கள் தேங்கி நிற்றல் மற்றும் மீள பயன்படுத்தல் ஊடாக நாம் தொடர்ந்து மழை நீர் அறுவடையை செய்து வருகின்றோம். தலைமையகத்தில் 2024 ஆம் ஆண்டில் இல் 11942 மெகா லிட்டர் நீருடன் ஒப்பிடுகையில் 2025 இல் 11010 லீட்டர் நீர் பாவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வங்கி சேவைகளில் சார்ந்துள்ள வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்ற வகையில் ஆரம்பத்தில் குடித்தல், கழுவுதல், மற்றும் சுகாதார வசதிகளுக்கு வரையறுக்கப்பட்ட நீர் பாவனை தேவைகளை கொண்டிருந்தன.

வங்கியின் நீர்ப்பாவனை செயற்பாடுகள் பின்வருமாறு.

தலைமையக கட்டிடம்

- **குடிக்கும் நீர்:** குடிக்கும் நோக்கத்திற்காக போத்தலில் இடப்பட்ட நீர் பயன்படுத்தப்படுகின்றது.
- **கழுவுதல்:** கழுவும் நோக்கத்திற்காக தேசிய நீர் வளங்கள் சபையிலிருந்து பெறப்படுகின்ற நீர் பயன்படுத்தப்படுகின்றது.
- **கழிவுநீர்:** கழிவு நீர் மாநகர சபை மார்க்கத்தினுள் வெளியேற்றப்படுகின்றது.

பாசிக்குடா ஊழியர் குழாம் பயிற்சி நிலையம்

- **குடித்தல் மற்றும் கழுவுதல்.** குடித்தல் மற்றும் கழுவுவதற்காகவும் ஓர் Reverse osmosis (R/O) எதிரிணடையான ஜவ்வூடு பரவல் R/O பொறித்தொகுதி கிணற்று நீரை தூய்மைப்படுத்துவதற்கு தொழிற்படுகின்றது.
- **கழிவுநீர்:** கழிவு நீரை தூய்மைப்படுத்துவதற்கு கிடைக்கின்ற சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதி வசதிகள் பின்னர் தோட்டம் அமைத்தல் நோக்கங்களுக்காக மீள பயன்படுத்தப்படுகின்றது.

தங்காலை பிராந்திய தலைமையகம். RHO

- **கழிவுநீர்:** ஏனைய அமைவிடங்களுக்கு சமனாக கழிவு நீரை தூய்மைப்படுத்துவதற்கு சாக்கடை சுத்திகரிப்பு பொறி தொகுதி காணப்படுகிறது.

அம்பாறை பிராந்திய தலைமை அலுவலகம்:

- **கழிவுநீர்:** இதன் அமைவிடத்தில் கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக கழிவு நீர் சுத்திகரிப்பு பொரித்தொகுதி காணப்படுகிறது.

வவுனியா பிராந்திய தலைமை அலுவலகம்.:

- **கழிவுநீர்:** ஏனைய பிராந்திய தலைமையகங்கள் போன்று கழிவுநீரை தூய்மைப்படுத்துவதற்காக சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதி கிடைக்கக்கூடியதாக உள்ளது.

ஹக்மன கிளை:

- **கழிவுநீர்:** ஏனைய கிளைகள் மற்றும் அலுவலகங்கள் போன்று கழிவுநீரை தூய்மைப்படுத்துவதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி காணப்படுகின்றது.

கழிவு முகாமைத்துவம்

GRI 306-1

வங்கி கழிவின் ஒரு பகுதி ஊழியர்களின் உணவு மற்றும் காகித கழிவிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது. இதை மாநகர சபை மற்றும் நகர சபைகளினால் நிர்வகிக்கப்படுகின்ற சேகரிப்பு மற்றும் மீள் சுழற்சியுடன் ஒழுங்கமைப்பு தேவைகளுக்கு அமைவாக அனுப்பப்படுகின்றன. நாமும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாவது தரப்பு மீள் சுழற்சியாளர்களுடன் இணைந்துள்ளோம்.

கழிவுநீர் தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் முன்வைக்கப்பட்ட பகுதிக்குரிய கண்டிப்பான பின்பற்றுகளுடன் வெளியேற்றப்படுகின்றன.

வங்கியின் கேள்வி நடைமுறை வரிசை ஒழுங்கில் மின்னியல் கழிவு நீர் சுழற்சி சேவை வழங்குனர்கள் நியமிக்கப்படுகின்றனர். அத்துடன் வங்கியின் மின் கழிவு நீர் நிராகிக்கப்படுகின்றது. சாத்தியமான போதெல்லாம் அங்கு மின்சக்தி பாவணை மற்றும் சேவை காலத்தை கவனத்துடன் தொடர்ந்து மின்னியல் உபகரணத்தை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்தப்படுகின்றது.

எல்லா இரகசியமற்ற காகிதம் மீள் சுழற்சிக்காக ஓர் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரி சேவை வழங்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. வாடிக்கையாளர் தரவு பாதுகாப்பு மீதான கண்டிப்பான வழிகாட்டல்களை பின்பற்றி பொறுப்பு வாய்ந்த முறையில் இந்த செயற்பாடு ஆவணப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வங்கியின் மேற்பார்வையின் கீழ் எதிர்கால விநியோகத்திலிருந்து தவிர்த்து கொள்வதற்கு இரகசிய தரவுகளை உள்ளடக்கிய காலவதியான ஆவணங்கள் ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அல்லது அழிக்கப்பட்டுள்ளன. அறிவு முகாமைத்துவம் தயார் நிலை மற்றும் அழியாமல் நிலைத்திருத்தல் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கலாசாரத்தை தழுவியுள்ளதால். IT பிரிவு மூலம் ஈட்டி முனையில் பிரதான ஆவணங்களின் டிஜிட்டல் களஞ்சியப்படுத்தல் முகாமைத்துவ முறை உள்ளடக்கத்தினுள் சமகாலத்தில் நிகழக்கூடியதாக உள்ளது.

குறைக்கப்பட்ட காகித பாவனை

விரிவுபடுத்தப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் காகித பாவனையை கணிசமான அளவில் குறைத்துள்ளதுடன் எமது சுற்றாடல் ரீதியான பாத சுவடுகளை வளர்த்துள்ளது. அத்துடன் காகிதாதி கொள்வனவில் செலவு அனுகூலமான நிலைக்கு பங்களிப்பு செய்துள்ளது.

SBUS, KIOSKS, ATMs, மற்றும் CDMS பரவலான நாடளாவிய ரீதியான வலை பின்னல் மூலம் ஆதரவு அளிக்கப்பட்ட வங்கியின் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கிளைகள் ஊடாக காகித பாவணையை குறைப்பதில் முக்கிய பங்கினை வைத்துள்ளது. மேலதிகமாக நாம் இரகசியமற்ற கழிவு காகிதத்தை பொறுப்புடன் நிர்வகிப்பதற்கு ஒரு வெளிவாரி சேவை வழங்குனருடன் தொடர்ந்து பங்காளராக இருந்து வருகின்றோம்.

நாம் 2024 இல் 2122 கிலோகிராம் கிராமுடன் ஒப்பிடுகையில் 2025-ல் 5459 கிலோ கிராம் காகிதத்தை மீள் சுழற்சி செய்துள்ளோம்.

எமது கார்பன் காகித சுவடுகளை குறைத்தல்

டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் சக்தி மற்றும் கழிவு முகாமைத்துவம் புதுப்பிக்கத்தக்க சக்தி பரவலாக்கம் மற்றும் பசுமை நீதி சார்ந்தமையின் இணைவு 2025 ஆம் ஆண்டில் எமது கார்பன் காகித சுவடுகளை குறைப்பதில் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு செலுத்தியுள்ளது. இதன் பூர்வாங்க வேலைக்கு மக்களின் பசுமை உயிர் நாடி ஆளுமை கட்டமைப்பை வழங்குகின்ற நிலையான கொள்கை உறுதியான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. எமது உற்பத்தி வடிவமைப்பு மற்றும் அரச தலைமையிலான பூர்வாங்க வேலைகளில் பங்கெடுத்தமை பரந்த காலநிலை நிதி தந்திரோபாயம் மற்றும் தேசிய புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்குகளை அடைவதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

காலநிலை தொடர்பான இடர்பாடுகள் மற்றும் வாய்ப்புகள்

GRI 201-2

இடர்பாடுகள்	வாய்ப்புக்கள்
கடன் தொகுப்பு இடர் வெளிப்பாடு விவசாயம் கடற் தொழில் மற்றும் கரையோர உல்லாசப் பிரயாணத்துறை போன்ற பாரிய கைத்தொழில்கள் இயற்கை அழிவுகள் மற்றும் கடல் மட்டம் உயர்வடைதல் காரணமாக உயர் கடன் செலுத்த தவறுகின்ற இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றது. இது பெரும்பாலும் கடன் செலுத்த தவறுகின்ற நிலையை தொடர்ச்சியாக உயர்த்தியுள்ளது.	**புதுப்பிக்கத்தக்க சக்திக்கு கடன்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.** சூரிய மின்சக்தி காற்று மற்றும் இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தி இலக்குகளுடன் ஹைட்ரோ கருத்திட்டங்கள் வரிசையில் வருங்காலத்தில் மேலும் வியாபார வாய்ப்புகளை சமர்ப்பிக்க உள்ளது.
கிளை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் செலவுகள் அதிகரிப்பு அழுத்தத்தை கொண்டிருப்பின் இயற்கை அழிவுகள் கிளை வலைப்பின்னலுக்கு அழுத்தத்தை ஏற்படுத்த முடியும்.	**நிலையான விவசாய கடன்** காலநிலை நீள் மீட்சி கட்டமைப்பு நடைமுறைகள் ஒத்துழைப்பு கிராமிய அபிவிருத்தி மற்றும் கடன் செலுத்த தவறுகின்ற இடர்பாடு உயர்வடைந்துள்ளது.
விநியோக சங்கிலி தொடர் உடைந்த நிலை விநியோகத்தர்கள் வங்கி செயற்பாடுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காலநிலை தொடர்பான தகுந்த நிலைமைக்கு முகம் கொடுக்கலாம். அவ்வாறே தடையற்ற சேவை வழங்களுக்கு அடிமையான பொருட்கள் வழங்களை உலகம் சார்ந்த அரசியல் பதற்ற நிலை தோற்றுவிக்க முடியும்.	**பசுமை கடன் பத்திரம்** ESG மையப்படுத்தல் முதலீட்டாளர்களை கவரும் நிலையான அடிப்படையான பசுமை கடன் பத்திரங்களை வழங்குதல்

2026 ஆம் ஆண்டுக்கான நோக்கு

2026க்குள் மக்கள் வங்கி அதன் வளர்ச்சி தந்திரோபாய மத்திய தூணை நிலைபெறச் செய்து அதன் நிதியிடல் உரிமைப் பங்கு பட்டியலின் முக்கியத்துவத்தை கூட்டுவதற்கு எதிர்பார்க்கின்றது. புதுப்பிக்கத்தக்க சக்தி பொருளாதார சிநேகபூர்வமான கைத்தொழில்கள் மற்றும் காலநிலை மேல் தன்மை நிலைமைகள் குறித்து வங்கியின் மையப் பகுதி பசுமை பொருளாதாரத்தை நோக்கி இலங்கையின் மாற்றத்திலான தீர்மானத்தில் பங்கு கொள்கின்றது.

காலநிலை இடர்பாடுகளுக்கு எதிராக நீள் மீட்சி பெற ஒத்துழைப்பதற்கு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை கவர்வதற்கும் பசுமை நிதியிடல் விசைத்திறன் மற்றும் நிலையான பொருளாதார செயற்பாடுகளின் இயக்குவோர் என்ற வகையில் மக்கள் வங்கி தாமாகவே அதன் ஸ்தாபனத்தை பெறுகின்றது.

அதன் நிலையான இயக்கத்தின் ஒரு பகுதியாக சக்தி புகழாரம் கொண்ட தரங்களை எதிர்கொள்வதற்கு IT முறைகளைப் பெற்று சூரிய சக்தி செயற்பாடுகள் மற்றும் எரிபொருள் சக்திக்கு பதிலாக மின்சார வாகனங்களை செயற்படுத்தி வங்கி ஒருங்கிணைத்துள்ளது.

2026க்குள் வங்கி உள்ளக செயற்பாட்டு கோட்பாடுகளில் நிலைபெற்று பசுமை தரங்கள் வரிசை கிரமத்துடன் பெரும்பாலும் அதன் கிளை வலையமைப்பினை கொண்டிருப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

இலங்கையில் நிலையான நிதியில் தலைமைத்துவத்தை கொண்டுள்ளது என்ற வகையில் மக்கள் வங்கியின் முழு மொத்த அணுகுமுறை அதன் நம்பகத்தன்மைக்கு பலமூட்டுகின்றது. அது வெளிவாரியாக நியாயமாக பசுமை கருத்திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல் மாத்திரம் இன்றி உள்ளக ரீதியாக நம்பிக்கை மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான வரையளவை கட்டி எழுப்புகின்ற இரட்டை தந்துரோபாயத்தை நிலை பெறச் செயற்படுகின்ற நிறுவனமாகவும் திகழ்கின்றது

EXIT
EXIT

ஆளுகை

208
இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

260
பெருநிறுவன ஆளுகை

298
சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கை

299
சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை

300
சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அறிக்கை

301
சபை நிர்வாகக் கடன் முகாமைத்துவக் குழு அறிக்கை

302
சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழு அறிக்கை

303
சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை

304
சபை தந்திரோபாய திட்ட மீளாய்வுக் குழு அறிக்கை

305
தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு அறிக்கை

306
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

308
உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை

இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

முன்னொருபோதும் இடம்பெற்றிராத பேரண்டப்பொருளாதார நெருக்கடி மற்றும் இறையாண்மைக் கடன் மறுசீரமைப்புக் காலத்தைத் தொடர்ந்து, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு இலங்கையின் பொருளாதார மீட்சியில் திருப்புமுனையான கட்டமொன்றாக விளங்குகிறது. இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகள், பணவியல் ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் ஆதரவுடன், உள்நாட்டு நிதி அமைப்பு படிப்படியான ஸ்திரத்தன்மையையும், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையையும்வெளிப்படுத்தியது.

எமது கவனம்

இம்மாறிவரும் பின்னணியில், வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு, மீள்திறன், மூலதனப் பாதுகாப்பு, திரவத்தன்மையின் உறுதிப்பாடு மற்றும் கட்டுப்பாடான இடர்நேர்வின் ஏற்பு ஆகியவற்றில் திடமாகக் கவனம் செலுத்தியது. நெருக்கடியின் அனுபவம், இடர்நேர்வு தொலைநோக்கு ஆளுகை, விவேகமான நிதிநிலைமை முகாமைத்துவம் மற்றும் வலுவான அழுத்தச் சோதனைத் திறன்களின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

எமது மூலோபாயம்

பொருளாதார சீர்குலைவின் உச்சக்கட்டத்தின் போது, அதிகரித்த கடன்சார் இடர்நேர்வு, வட்டி விகித ஏற்ற இறக்கம், நாணயப் பெருமானத்தேய்வு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட திரவநிலைமைகள் ஆகியவை வங்கி இடர்நேர்வுக்கான வாய்ப்புக்களை கணிசமாக மாற்றியமைத்தன. இவ்வாண்டில் பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளானவை, ஸ்திரத்தன்மையின் அறிகுறிகளைக் காட்டியதால், வங்கியானது வளர்ச்சி வாய்ப்புகளை விவேகமான இடர்நேர்வு கட்டுப்பாடுகளுடன் சமநிலைப்படுத்தி, எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையான நிலைப்பாட்டை மேற்கொண்டது.

இவ்வாண்டின் முக்கிய முன்னுரிமைகளில் பின்வருவன அடங்கும்:

- கடன் மீளச்செலுத்தல் தகுதி நியமங்களை வலுப்படுத்துதல் மற்றும் மறுசீரமைக்கப்பட்டதும், பாதிக்கப்படக்கூடியதுமான வெளிப்பாடுகளை மேம்படுத்தப்பட்ட முறையில் கண்காணித்தல்.
- முன்னோக்கிய பேரண்டப் பொருளாதார அமைப்பு மூலம் SLFRS 9-இன் கீழ் போதுமான மதிப்பிழப்பு ஒதுக்கீட்டைப் பேணல்.
- திரவ இருப்புகள் மற்றும் நிதியியற் செறிவுகளைத் தீவிரமாக நிர்வகித்தல்

- ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மூலதனப் போதுமையைக் கண்காணித்தல்.
- இறையாண்மை, வட்டி விகிதம் மற்றும் வெளிவாரித்துறைசார் திடீர் நிகழ்வுகளை உள்ளடக்கும் வகையில் அழுத்தச் சோதனை கட்டமைப்புகளை மேம்படுத்துதல்
- தூண் II இடர்களின் கீழ் காலநிலை இடர்நேர்வு மதிப்பீட்டு செயன்முறைகளை ஒருங்கிணைத்தல்
- தொழில்நுட்பம்சார் இடர்நேர்வு மற்றும் இணையப் பாதுகாப்பு செயன்முறையை வலுப்படுத்துதல்
- முக்கியமான தகவல்களின் இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பான கையாளுதலை உறுதிசெய்ய தரவுப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல்

வங்கியானது, நிர்வாகசபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், தெளிவாக வரையறுக்கப்பட்டதுமான இடர் ஏற்பு கட்டமைப்பிற்குள் தொடர்ந்தும் செயற்பட்டது. இதன் மூலம், வணிக உத்தியானது மூலதன வலிமை மற்றும் பணப்புழக்கத் திறனுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்தது. பணிப்பாளர்கள் குழுவின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (BIRMC), உருவாகிவரும் இடர்நேர்வுகள், குறிப்பாக இறையாண்மை தொடர்பான பாதிப்புகள், துறைசார் செறிவு இடர்நேர்வுகள் மற்றும் மீட்புடன் தொடர்புடைய கடன் செயலாற்றுகைப் போக்குகள் ஆகியவற்றின் மீது உன்னிப்பான அவதானத்தை மேற்கொண்டது.

பணவீக்கம்

ஊக்கமளிக்கும் விதமாக, மிதமான பணவீக்கம், நாணய மாற்று விகிதத்தில் நிலவும் ஸ்திரத்தன்மை மற்றும் வட்டி விகித இயல்பாக்கம் ஆகியவை கடன் வாங்குபவர்களின் மீளச் செலுத்தும் திறனில் படிப்படியான மீட்சிக்கு ஆதரவளித்துள்ளன. இருப்பினும், கட்டமைப்பு ரீதியான பாதிப்புகளும், வெளிவாரியான நிச்சயமற்ற தன்மைகளும் நீடிக்கின்றன. இதனைகையாள்வதற்குத் தொடர்ச்சியான விழிப்புணர்வும், இடர்நேர்வு உத்தியை சிரத்தையுடன் செயற்படுத்துவதும் அவசியமாகிறது.

வைப்புதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், பொறுப்பான கடன் விரிவாக்கத்தை ஆதரிப்பதற்கும், இலங்கை நிதியியல் முறைமையின் நிலைத்தன்மை மற்றும் நீடித்த மீட்சிக்குப் பங்களிப்பதற்கும் வங்கி ஈடுபாட்டுடன் செயற்படுகிறது. சமீபத்திய நெருக்கடியின் படிப்பினைகள், மீள்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை நமது செயற்பாடுகளின் மையத்தில் நிலைநிறுத்தி, இடர்நேர்வுகளில் நாம் செயற்படும் விதம் குறித்த கலாச்சாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

காலநிலைசார் இடர்நேர்வு

சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் வானிலை தொடர்பான இடையூறுகளால் ஏற்படும் காலநிலை தொடர்பான இடர்நேர்வு, 2025-ஆம் ஆண்டில் முக்கிய கவனத்தை ஈர்த்தது. தித்வா புயல் குறிப்பிடத்தக்கதொரு வானிலை பேரிடர் நிகழ்வாக அமைந்தது. இது நாடு முழுவதும் பரவலான வெள்ளப்பெருக்கையும், விவசாய நிலங்கள் மற்றும் சிறு வணிக நிறுவனங்களுக்குச் சேதத்தையும் ஏற்படுத்தியது. இந்த இடையூறுகள், குறிப்பாக விவசாயம், நுண்ணிய மற்றும் சிறு நிறுவனங்கள் போன்ற அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளில், கடன் வாங்குபவர்களின் மீளச்செலுத்தும் திறனையும், சொத்துக்களின் தரத்தையும் பெரிதும் பாதித்தன. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், நிதியியற் ஸ்திரத்தன்மை மற்றும் நீண்டகால சொத்துத் தரத்திற்கு காலநிலை தொடர்பான இடர்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதை உணர்ந்து, அவற்றை நிர்வகிப்பதற்கான தனது அணுகுமுறையை வங்கி தொடர்ந்தும் வலுப்படுத்தியது.

காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் இடர்நேர்வானது, இரண்டு முதன்மைப் பரிமாணங்கள் மூலம் மதிப்பிடப்படுகிறது: அவையாவன வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளின் அதிகரித்த அதிர்வெண் மற்றும் தீவிரத்தன்மையால் எழும் பௌதீக இடர்கள், மற்றும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கிய கொள்கை, ஒழுங்குமுறை, தொழில்நுட்ப மற்றும் சந்தை மாற்றங்களிலிருந்து உருவாகும் நிலைமாற்ற இடர்நேர்வுகள் ஆகியனவாகும். விவசாயம், சுற்றுலா மற்றும் கடலோர உட்கட்டமைப்பு போன்ற காலநிலை உணர்திறன் கொண்ட துறைகளில் இலங்கைக்கு உள்ள தொடர்பைக் கருத்தில் கொண்டு, வங்கி தனது கடன் மதிப்பீடு, துறைசார் இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் அழுத்தச் சோதனை கட்டமைப்புகளில் காலநிலை தொடர்பான அம்சங்களை இணைத்துள்ளது.

வங்கி மேற்பார்வை குறித்த இலங்கை மத்திய வங்கியின் புதிய வழிகாட்டுதல்களுக்கு இணங்க, வங்கி தரவு சேகரிப்பு, சூழ்நிலை பகுப்பாய்வு ஆற்றல்கள் மற்றும் முதலீட்டுத் தொகுப்பு காலநிலை இடர் நேர்வுக் கண்காணிப்பு ஆகியவற்றை படிப்படியாக மேம்படுத்தி வருகிறது. அளவுசார் அளவீட்டு முறைகள் தொடர்ந்து வளர்ந்து வந்தாலும், வங்கி தனது ஒட்டுமொத்த இடர் ஏற்பு கட்டமைப்பில் காலநிலை இடரை ஒருங்கிணைப்பதற்கும், நாட்டின் நீண்டகால பொருளாதார மீள்திறனுக்கு பங்களிக்கும் பொறுப்பான, நிலைபேறான நிதியிடலை ஆதரிப்பதற்கும் ஈடுபாட்டுடன் செயற்படுகிறது.

வங்கி இடர்நேர்வு முகாமைத்துவம் தொழிற்பாடு-நோக்கங்களின் கண்ணோட்டம்

மூலோபாய நோக்கங்கள்

- நிதி மீள்திறனைப் பாதுகாத்தல்
- இடர்நேர்வு ஏற்பை இடர்நேர்வு ஏற்பு ஆற்றலுடன் சீரமைத்தல்
- நிலைபேறான வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்
- இடர்நேர்வு-வருவாய் இயக்கவியல் உச்சப்பயன்பாடு குறித்த ஆளுகை

ஆளுகை மற்றும் மேற்பார்வை

- இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்
- சுதந்திரமான சவாலை வழங்குதல்
- கொள்கைகள் மற்றும் வரம்புகளின் ஒருமைப்பாட்டை உறுதி செய்தல்
- நிர்வாகசபை மற்றும் நிர்வாகத்திற்கு வெளிப்படையான அறிக்கையிடலை எளிதாக்குதல்

ஒழுங்குபடுத்தல் மற்றும் இணக்கம்

- குறிப்பாக மூலதனம் மற்றும் திரவத்தன்மை தொடர்பான ஒழுங்குபடுத்தல்சார் இணக்கத்தைப் பராமரித்தல்
- உருவாகி வரும் ஒழுங்குபடுத்தல்சார் அபிவிருத்திகளை உட்பொதித்தல்
- வினைத்திறனான மேற்பார்வை ஈடுபாட்டிற்கு ஆதரவளித்தல்

இடர்நேர்வை இனங்காணல்

- கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, சட்டமுறை, நன்மதிப்பு, மூலோபாய மற்றும் அதிகரித்து வரும் இடர்நேர்வுகளை முழுமையாகக் கண்டறிதல்
- முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள்
- முன்னோக்கிய இடர்நேர்வு மதிப்பீடு

கடன் மற்றும் முதலீட்டுத் தொகுப்பு இடர்நேர்வு

- சொத்துத் தரத்தைப் பாதுகாத்தல்
- செறிவு இடரநேர்வினை நிர்வகித்தல்
- கடன் ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு செயன்முறைகளை வலுப்படுத்துதல்
- முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள்

சந்தை மற்றும் பணப்புழக்க இடர்நேர்வு

- வட்டி விகிதம், அந்நிய செலாவணி மற்றும் வர்த்தக வெளிப்பாடுகளைக் கண்காணித்து கட்டுப்படுத்துதல்
- திரவத்தன்மையின் இடையகங்களைப் பராமரித்தல்
- நெருக்கடியான சூழ்நிலைகளில் மூலதனத்தின் போதுமான தன்மையைப் பாதுகாத்தல்

செயற்பாட்டு மற்றும் நிதிசாரா இடர்நேர்வு

- செயற்பாட்டு ரீதியிலான மீள்திறனை மேம்படுத்துதல்
- இழப்பு நிகழ்வுகளைக் குறைத்தல்
- தரவு ஒருமைப்பாடு, திரட்டல் மற்றும் அறிக்கையிடலை வலுப்படுத்துதல்
- வணிகத்தின் நீடித்ததன்மையை உறுதி செய்தல்

தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு

- தகவல் தொழில்நுட்ப ஆளுகையை வலுப்படுத்துதல்
- டிஜிட்டல் உட்கட்டமைப்பைப் பாதுகாத்தல்
- இணைய மீள்திறன் மற்றும் கிடைக்கும்தன்மையை உறுதி செய்தல்

இடர்நேர்வு கையாளும் கலாச்சாரம் மற்றும் நடத்தை

- வலுவான இடர்நேர்வுக் கலாச்சாரத்தை உருவாக்குதல்
- முதல் மற்றும் இரண்டாம் நிலை பொறுப்புகளைத் தெளிவுபடுத்துதல்
- இடர்நேர்வு விழிப்புணர்வு மற்றும் பயிற்சியை ஊக்குவித்தல்.

காலநிலை மற்றும் வளர்ந்து வரும் இடர்கள்

- காலநிலை மாற்றம் மற்றும் நிலைமாற்ற இடரை ஒருங்கிணைத்தல்
- பேரியல் பொருளாதாரம், புவிசார் அரசியல் மற்றும் துறைசார் இடர்களைக் கண்காணித்தல்
- வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் பதிலளிப்பைச் செயல்படுத்துதல்

நன்மதிப்பு இடர்நேர்வு

- பொது மற்றும் பங்குதாரர்களின் கண்ணோட்டத்தை முகாமை செய்தல்
- பண்டக்குறிசார் நன்மதிப்பு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையைப் பாதுகாத்தல்

இடர்நேர்வு முன்விபரக் கண்ணோட்டம்

2025 ஆம் ஆண்டில் பல காரணிகள் ஒன்றிணைந்து, விரிவானதும், மற்றும் பன்முகமானதுமான இடர்நேர்வு சூழலை உருவாக்கின.

மேம்பட்ட இலாபத்தன்மை மற்றும் நிலைபேறான வருவாய் வளர்ச்சி

2025 ஆம் ஆண்டில், மக்கள் வங்கி வரலாற்று ரீதியிலான, உயர் இலாபத்தன்மையையும் வலுவான வருமான வளர்ச்சியையும் பதிவு செய்தது. வங்கி சாதனை அளவிலான வரிக்கு முந்தைய இலாபங்களை அடைந்ததுடன், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதன் தேறிய வட்டி வருமானம் மற்றும் கட்டண வருமானத்தை கணிசமாக விரிவுபடுத்தியது இது நேர்மறையான வணிகச் செயற்திறனைப் பிரதிபலிக்கிறது. இச்செயற்திறன், வங்கியின் இழப்புகளை ஈடுசெய்யும் திறனை மேம்படுத்தவும், மூலோபாய முயற்சிகளை ஆதரிக்கவும் உதவும் ஒரு வலுவான வருவாய் அடித்தளத்தை எடுத்துக்காட்டுகிறது.

திடமான மூலதனம் மற்றும் திரவநிலை

மக்கள் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன விகிதங்கள் குறைந்தபட்ச வரம்புகளுக்கு மேலாகவே நிலவியுள்ளன் மேலும் 2025 ஆம் ஆண்டில் அடுக்கு I மற்றும் மொத்த மூலதன ஆற்றல் விகிதங்கள் இரண்டும் வசதியான மட்டங்களில் இருந்தன. திரவத்தன்மைப் பாதுகாப்பு விகிதங்களும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு மேலாகவே இருந்தமையானது குறுகிய கால நிதி அதிர்ச்சிகளுக்கு எதிரானதும், வலுவானதுமான மீள்திறனைக் குறிக்கிறது.

இருப்பினும், வெளிப்புற வர்த்தகத் தடைகள் உட்பட பேரியல் பொருளாதாரச் சூழலில் நிலவும் தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மைகள், விழிப்புடன் கூடிய வட்டி விகித இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆற்றல்மிக்க திரவநிலைத் தற்செயல் திட்டமிடலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. நிதியளிப்புச் செலவுகளின் நிலைபேறானதன்மையைப் பாதுகாப்பதற்கும், வருவாயில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களைக் குறைப்பதற்கும் இக்கருத்தாய்வுகள் மையமாக இருந்தன.

கடன் இடர்நேர்வு

வங்கியின் மீதான தாக்கம்	வங்கியின் பதில் நடவடிக்கை
தீவு முழுவதும் எமது பரந்த செயற்பாட்டு வரம்பின் காரணமாக, கடன் வழங்குதலில் இருந்து எழும் முக்கிய இடர்நேர்வாக, கடன் இடர்நேர்வாகும். கடன் வழங்கல் தொகுப்பானது, வங்கியின் மொத்த சொத்துக்களில் 46.7% ஆக உள்ளதுடன், இடர்நேருமென-எடையிடப்பட்ட சொத்துக்களில் 42.7% ஆகும்..	• கடன் சார்ந்த தீர்மானங்களில் பயனுறுதிப்பாட்டை வலுப்படுத்த, வங்கி குறிப்பிட்ட கடன் ஒப்புதல் அதிகாரங்களை வலய உதவிப் பொது முகாமையாளர்களுக்கு (AGMs) வழங்கியுள்ளது. இந்த அதிகாரப் பகிர்வு, கடன் முன்மொழிவுகளை உரிய நேரத்தில் மதிப்பீடு செய்து ஒப்புதல் அளிக்க உதவுவதோடு, நிறுவப்பட்ட மேல்நிலைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகள் மூலம் தொடர்ச்சியான மேற்பார்வையையும் உறுதி செய்கிறது. • வணிகம் சாராத நிறுவனங்களுக்காக ஒரு புதிய இடர் மதிப்பீட்டுத் தாள் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கருவி, அரசு சார்ந்த மற்றும் பிற வணிகம் சாராத கடன் வாங்குபவர்களின் கடன் தகுதியைத் தரப்படுத்தப்பட்ட முறையில் மதிப்பீடு செய்ய உதவுகிறது. இது தகவலளிக்கப்பட்ட கடன் தொடர்பிலான தீர்மானங்களுக்கும், கடன் தொகுப்பு முழுவதும் சீரான இடர் வகைப்பாட்டிற்கும் ஆதரவளிக்கிறது. • கடன் வாங்குபவரின் இலாபத்தன்மை மற்றும் நிதிச் செயலாற்றுகையைச் சிறப்பாக மதிப்பிடுவதற்காக, வங்கியானது, விரிவுபடுத்தப்பட்ட சொத்து மீதான வருவாய் (ROA) கணக்கீட்டுத் தாளைச் செயற்படுத்தியது. இக்கருவி, வலுவான அளவுசார் பகுப்பாய்வு மற்றும் இடர் சரிசெய்யப்பட்ட செயலாற்றுகை அளவீடுகள் மூலம் கடன் தொடர்பில் தீர்மானமெடுக்கும் திறனை வலுப்படுத்துகிறது • சாத்தியமான கடன் பலவீனங்களைக் காட்டும் கடன் வாங்குபவர்களுக்கான கட்டமைக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை உள்ளடக்கி, கண்காணிப்புப் பட்டியல் செயன்முறையில் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் செம்மைப்படுத்தப்பட்ட செயன்முறை, இடர்நேர்வு அபாயங்களை முன்கூட்டியே நிர்வகிக்கவும், நெருக்கடியை முன்கூட்டியே கண்டறியவும், சரியான நேரத்தில் சீரமைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகிறது. • வங்கியின் இடர்நேர்வு ஏற்புத்திறன் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுடன் ஒத்துப்போகும் வகையில், தொழில் துறைகள் மற்றும் தனிப்பட்ட கடன் வாங்குபவர்களுக்குத் மீளமைக்கப்பட்ட கடன் வரம்புகள் நிறுவப்பட்டன. இந்த வரம்புகள் விவேகமான முதலீட்டுத் தொகுப்பு பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதோடு, துறைகள் மற்றும் கடன் வாங்குபவர் பிரிவுகள் முழுவதும் உள்ள செறிவு இடரைக் கட்டுப்படுத்துகின்றன • 2025-ஆம் ஆண்டில், வங்கியானது அரச நிறுவனங்களுக்கான தனது கடன் வெளிப்பாட்டைக் குறைத்துக்கொண்டே இருந்தது. இதற்காக, விவேகமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த நிதி மீள்திறனை மேம்படுத்துவதற்கான வங்கியின் அர்ப்பணிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நிலைபேறான நிதி முகாமைத்துவம் மற்றும் தனியார் துறை கடன் வழங்கலில் விரிவாக்கம் செய்வதற்கான உத்தியொன்றைப் பின்பற்றியது. ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை ஒற்றைக் கடன் வாங்குபவர் வரம்புகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான கடுமையான கடன் வரம்புகளுடன், இலாபகரமான மற்றும் நிலைபேறான தொடர் நிறுவனமொன்றாகச் செயற்படுவதற்கான வங்கியின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒழுங்குமுறைச் சூழல் உருவாகியுள்ளது • தொடர்ச்சியான கடன்சார் கண்காணிப்பு மற்றும் காலமுறை மீளாய்வு செயன்முறைகள் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறையின் மையமாகத் தொடர்ந்தன. கடன் அதிகாரிகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கடன் கட்டுப்பாட்டுத் துறை ஆகியவை உருவாகும் இடர்களை முன்கூட்டியே கண்டறிந்து, உள்வாரியான கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தரநிலைகளுடன் தொடர்ச்சியான இணக்கத்தை உறுதிசெய்தன.

செயல்பாட்டு இடர்

வங்கியின் மீதான தாக்கம்	வங்கியின் பதில் நடவடிக்கை
வங்கியின் பரந்த செயற்பாடு, விரிவான வாடிக்கையாளர் தளம் மற்றும் நாடு முழுவதும் பரவியுள்ள ஊழியர்கள், எந்தவொரு செயற்பாட்டு இடர்நேர்விற்கும் அதை எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக்குகின்றன. வினைத்திறனாகவும், சரியான நேரத்திலும், மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் குறைந்தபட்ச பாதிப்புடன் முகாமை செய்யப்படாவிட்டால், இச்சீர்குழைவானது மிகப்பெரிய நம்பிக்கை இழப்பு, மன உறுதி இழப்பு மற்றும் கணிசமானளவு நிதி இழப்பிற்கும் வழியமைக்கும்..	• 2025 ஆம் ஆண்டில், வங்கி முழுவதும் ஒரு கட்டமைக்கப்பட்ட சம்பவ அறிக்கை மற்றும் மறுஆய்வு செயல்முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், வங்கி தனது செயல்பாட்டு இடர் மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்தியது. இந்த முயற்சி, சம்பவங்களை முறையாகப் பதிவு செய்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை முறைப்படுத்தியது, இது மேம்பட்ட மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலைச் சாத்தியமாக்கியது. மேலும், இது தற்போது நடைமுறையில் உள்ள இடர் தணிப்பு நடவடிக்கைகளின் செயல்திறனை மதிப்பீடு செய்கிறது மற்றும் வங்கியின் செயல்பாட்டு மீள்திறன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட எதிர்கால உத்திகளை கோடிட்டுக் காட்டுகிறது. • 2025 ஆம் ஆண்டில், புதிதாகப் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களிடையே வலுவானதொரு இடர்நேர்வைக் கையாளும் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், செயற்பாட்டு ரீதியிலான இடர்நேர்வு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், மற்றும் உள்வாரியான கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் கட்டமைக்கப்பட்டதொரு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது • பிராந்திய இடர்நேர்வு அலுவலர்களின் (RROs) திறன்களையும் தகுதிகளையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதொரு வதிவிடப் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன் மூலம், அவர்கள் வளர்ந்து வரும் இடர்நேர்வு சவால்களை எதிர்கொள்ளவும், ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போகவும், வங்கியின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு இணங்க தங்கள் கடமைகளைத் திறம்படச் செய்யவும் நன்கு தயாராக இருப்பதை உறுதிசெய்தது • ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் (IRMF), 2025-ஆம் ஆண்டில் செயற்பாட்டு இடர்நேர்விற்கு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது. இது வங்கியின் விரிவான வலையமைப்பு, பன்முக வாடிக்கையாளர் தளம் மற்றும் நாடு தழுவிய பணியாளர் இருப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. இவை இயல்பாகவே செயற்பாட்டு இடர்நேர்வு நிகழ்வுகளுக்கான பாதிப்பை அதிகரிக்கின்றன. இதைச் சமாளிக்க, அனைத்து வணிக மற்றும் செயல்பாட்டுப் பிரிவுகளிலும் பொறுப்புகளை முறைப்படுத்தப்பட்ட முறையில் பகிர்ந்தளிப்பதன் மூலம் செயற்பாட்டு இடர்நேர்வு ஆளுகை மேலும் வலுப்படுத்தப்பட்டது. தெளிவாக வரையறுக்கப்பட்ட தூண்டுதல் நிகழ்வுகள், ஒருங்கிணைந்த இடர்ணர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு நெறிமுறைகளுக்கு இணங்க முறையாக மேல்நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டன. இது சரியான நேரத்தில் கண்டறிதல், கண்காணித்தல் மற்றும் தீர்வு காண்பதை உறுதிசெய்தது. மேலும், பொறுப்புடைமையை வலுப்படுத்தவும், இடையூறுகளைக் குறைக்கவும், பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவும் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு வழிமுறைகளும் வெளிப்படையான வெளிப்படுத்தல்களும் பேணப்பட்டன • முழு கிளை வலையமைப்பு முழுவதும் இடர் விழிப்புணர்வு, இணக்கப் பண்பாடு மற்றும் கட்டுப்பாட்டு ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்காக பிராந்திய இடர்நேர்வு அதிகாரி வலையமைப்பு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம், செயலூக்கமான இடர் முகாமைக்கு ஆதரவளித்து, ஏற்படக்கூடிய செயல்பாட்டுத் தடைகளைக் குறைத்தது • டிஜிட்டல்மயமாக்கப்பட்ட வாடிக்கையாளர் புகார் முகாமைத்துவத்தின் செயற்திறனையும். செயற்பாட்டுத் தாக்கத்தையும் மேம்படுத்துவதற்காக அது மேலும் வலுப்படுத்தப்பட்டது. இது, வலுப்படுத்தப்பட்ட நிகழ்நேரக் கண்காணிப்புத் திறன்களை உறுதிசெய்து, அதன்மூலம் வாடிக்கையாளர் புகார்களுக்கு விரைவான தீர்வையும், சேவை வழங்குதலில் அதிக நிலைத்தன்மையையும் சாத்தியமாக்கியது • துறை மட்டத்தில் இடர்நேர்வு வெளிப்படைத்தன்மை, கட்டுப்பாட்டு செயற்திறன் மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக, இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு (RCSA) செயன்முறை மேலும் மேம்படுத்தப்பட்டது • வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்புடன் சீரமைப்பை உறுதிசெய்யும் வகையில், செயற்பாட்டு இடர்நேர்வுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்ந்து காலமுறைப்படி மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டன

சந்தை இடர்நேர்வு

வங்கியின் மீதான தாக்கம்

வட்டி விகிதங்கள், அந்நியச் செலாவணி விகிதங்கள் மற்றும் சந்தை விலைகளில் ஏற்படும் பாதகமான நகர்வுகளால் எழும் சந்தை இடரநேர்விற்கு வங்கி தொடர்ந்து உட்பட்டுள்ளது. குறிப்பாக, இன்னும் மீண்டு வரும் உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் பெருகிவரும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலில் இந்த இடர்நேர்வு ஏற்படுகிறது. இந்த ஆண்டில், இலங்கை ஒப்பீட்டளவில் நிலையான ஆனால் மாறிவரும் பணவியல் நிலைமைகளைக் கொண்டிருந்தது வட்டி விகிதங்கள் நிலைபெற்று, பணப்புழக்கம் மேம்பட்டது. அதே நேரத்தில், இறக்குமதித் தேவை மற்றும் வெளித்துறை இயக்கவியல் ஆகியவற்றால் உந்தப்பட்ட அவ்வப்போதைய ஏற்ற இறக்கங்களுடன், அந்நியச் செலாவணி விகிதம் மிதமான மதிப்பிழப்பைப் பதிவு செய்தது.

வங்கியின் பதில் நடவடிக்கை

ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல காரணிகள் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த சந்தை இடர்நேர்வை உருவாக்குகின்றன.

- **கடன் செறிவு அளவீட்டை மேம்படுத்துதல்**
  - ஹெர்/பிண்டால்-ஹிர்'மன் குறியீட்டு (HHI) கட்டமைப்பை விரிவுபடுத்தி, புவியியல் செறிவு இடரை உள்ளடக்கியது. இது பிராந்தியங்கள் முழுவதும் முதலீட்டுத் தொகுப்பு பல்வகைப்படுத்தலின் மிகவும் நுணுக்கமான மதிப்பீட்டைச் சாத்தியமாக்குகிறது.
- **ICAAP-இல் காலநிலை இடர்நேர்வை ஒருங்கிணைத்தல்**
  - மூலதனப் போதுமான தன்மை மற்றும் சொத்துத் தரத்தைப் பாதிக்கக்கூடிய பௌதீக மற்றும் மாற்ற இடர்நேர்வுகள் இரண்டையும் அங்கீகரித்து, ICAAP கட்டமைப்பிற்குள் காலநிலை இடரநேர்வை ஒரு தூண் II இடரநேர்வாக இணைத்தது. இந்த இணைப்பு, காலநிலை தொடர்பான வெளிப்பாடுகளுக்கான மேம்பட்ட இடர் அளவீட்டைச் சாத்தியமாக்குவதுடன், வளர்ந்து வரும் நிலைபேறானதன்மை இடர்நேர்வுகளை முன்கூட்டியே நிர்வகிப்பதற்கும் நீண்ட கால நிதியியல் மீள்திறனை வலுப்படுத்துவதற்கும் வங்கியின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது
  - வங்கியின் இடர்நேர்வு விவரக்குறிப்பில் பௌதீக மற்றும் மாற்ற இடர்நேர்வுகளின் சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு, காலநிலை தொடர்பான அழுத்தச் சோதனை வழிமுறைகளை உருவாக்கியது.
  - முன்கூட்டிய இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்க, அந்நியச் செலாவணி வெளிப்பாடுகளின் நிகழ்நேரத் தெரிவுநிலையை மேம்படுத்தியது.
  - வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் சீரமைப்பை உறுதிசெய்யும் வகையில், சந்தை இடர்நேர்வு தொடர்பான கொள்கைகள் மற்றும் குறிப்பு விதிகளைத் தொடர்ந்து காலமுறைப்படி மதிப்பாய்வு செய்து புதுப்பித்தது.
  - வங்கியின் இடர்நேர்வு ஏற்புத்திறன், சந்தை நிலவரங்கள் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் சீரமைப்பை உறுதிசெய்ய, இடர் வரம்புகளை மதிப்பாய்வு செய்து புதுப்பித்தது.
- **பண்ட இடர்நேர்வு மதிப்பீட்டின் அறிமுகம்**
  - தங்க விலை ஏற்ற இறக்கத்தை ஒரு முக்கிய சந்தை இடர்நேர்வு காரணியாக அங்கீகரித்து, அடகுத் தொகுப்பிலிருந்து எழும் பண்ட இடர்நேர்வு மதிப்பீட்டை முறைப்படுத்தியது.
- **துறை சார்ந்த அழுத்தச் சோதனை**
  - பாதிக்கப்படக்கூடிய துறைகளில் இலக்கு அழுத்தச் சோதனையை நடத்தியதுடன், அவற்றுள் அடங்குபவையாவன:
    - கட்டுமானம் மற்றும் பொறியியல்
    - ஹோட்டல்கள், பயணம் மற்றும் சுற்றுலாத்துறை
    - உற்பத்தி
  - சாத்தியமான கடன் மற்றும் சந்தை இடர்நேர்வுத் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு, பேரியல் பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் வங்கி சார்ந்த இடர்நேர்வுக் காரணிகள் ஆகிய இரண்டையும் இணைத்தது.
- **சொத்து மற்றும் பொறுப்பு இடர்நேர்வுப் பகுப்பாய்வு மேம்பாடுகள்**
  - பின்வருவனவற்றின் விரிவான பகுப்பாய்வின் மூலம் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்தை வலுப்படுத்தியது:
    - முதிர்வுப் பொருத்தமின்மைகள் (MAL)
    - உணர்திறன் இடைவெளிகள் (SAL)
    - நடத்தை சார்ந்த அனுமானங்கள்

அடகு வைப்பது தொடர்பான சந்தை இடர்நேர்வு

வங்கிச்சேவையானது, வர்த்தக நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை என்பதால், தங்க விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய அதன் அடகு நடவடிக்கைகள் மூலம் மட்டுமே பண்ட விலை மாற்றங்கள் வங்கியை மறைமுகமாகப் பாதிக்கின்றன. அதன்படி, தங்கச் சந்தையில் ஏற்படும் நிலையற்ற தன்மை, வங்கியின் இடர்நேர்வு தன்மை மற்றும் அடகுத் தொகுப்பின் செயற்திறன் ஆகியவற்றில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அடகு வைப்பது தொடர்பான சந்தை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக, வங்கி தனது போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது குறைவாக, ஒரு சவரனுக்கான மிதமான அடகு முன்பணத்தைத் தொடர்ந்து பராமரித்து வருகிறது. அத்துடன், கடன்-மதிப்பு விகிதத்தை (LTV) 70%இற்கும் குறைவாகப் பராமரித்து, அடகு வைக்கப்பட்ட பொருட்களின் தங்க உள்ளடக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, விவேகமான கடன் மதிப்புகளையும் பராமரித்து வருகிறது. திருடப்பட்ட அல்லது போலியான பொருட்களுக்கு விரிவான காப்பீட்டுப் பாதுகாப்பைத் தொடர்வதோடு, மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சரிபார்ப்பு என்ற காரணியையும் வங்கி செயற்படுத்தியுள்ளது. கடன் வழங்கப்பட்ட பிறகு, வங்கி பொருட்களின் சுயாதீன மதிப்பீடு, ஒரு மாதிரியின் தினசரி சரிபார்ப்பு மற்றும் மீட்கப்படாத தீவிரமான நிலைகளில், மீட்கப்படாத பொருட்களை ஏலம் விடுதல் போன்ற செயன்முறைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது.

தொழில்நுட்பம்/இணையப் பாதுகாப்பு இடர்நேர்வு

வங்கியின் மீதான தாக்கம்

இலங்கையிலும் உலக அளவிலும் நிதிச் சேவைகள் விரைவாக டிஜிட்டல் மயமாக்கப்படுவதால், வங்கியானது தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு இடர்நேர்வுகளுக்கு அதிகளவில் உட்படுகிறது. இணையவழி வங்கித் தளங்கள், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட அமைப்புகள் மீதான அதிகரித்து வரும் சார்புநிலை, இணைய அச்சுறுத்தல்கள், தரவு மீறல்கள் மற்றும் சேவைத் தடங்கல்களின் அபாயத்தை அதிகரிக்கிறன. இவை வாடிக்கையாளர் நம்பிக்கை, செயற்பாட்டுத் தொடர்ச்சி மற்றும் நிதிச் செயலாற்றுகையைப் பாதிக்கக்கூடும். மேலும், மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளும், உலகளவில் அதிகரித்து வரும் அதிநவீன இணையத் தாக்குதல்களும் இந்த இடர்நேர்வு நிலையை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

வங்கியின் பதில் நடவடிக்கை

2025-ஆம் ஆண்டில் தொடர்ச்சியான டிஜிட்டல் வாடிக்கையாளர் சேர்க்கை மற்றும் கைப்பேசி மூலமான வங்கிப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, விரிவாக்கப்பட்ட டிஜிட்டல் செயற்பாடுகளை ஆதரிக்கவும், சேவைத் தடங்கல்கள் அல்லது இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கவும், வங்கியானது வலுவான தகவல் தொழில்நுட்ப அமைப்புகள், இணையப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வு கட்டமைப்புகளை உறுதி செய்தது.

பாதுகாப்பான செயற்பாடுகளைப் பராமரிக்கும் அதே வேளையில் பயனுறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கான வங்கியின் உத்தியின் ஒரு பகுதியாக, 2025-ஆம் ஆண்டிலும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் செயல்முறை மேம்பாடுகளில் முதலீடு தொடர்ந்தது. வலுப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகள், பாரிய அளவிலான டிஜிட்டல் பயன்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாட்டு இடர்நேர்வுகளைக் குறைக்க உதவின.

காலநிலை இடர்நேர்வு

வங்கியின் மீதான தாக்கம்

தீவிர வானிலை நிகழ்வுகளால் இலங்கைக்கு ஏற்படும் அதிகரித்த பாதிப்பு மற்றும் மாறிவரும் உலகளாவிய நிலைபேறானதன்மைத் தரநிலைகள் ஆகியவற்றின் பின்னணியில், வங்கியானது பௌதீக மற்றும் மாற்றக்கால காலநிலை தொடர்பான இடர்நேர்வுகளுக்கு அதிகளவில் உட்படுகிறது. அதிகரித்து வரும் வெள்ளம், வறட்சி மற்றும் பிற காலநிலை தொடர்பான அனர்த்தங்கள், குறிப்பாக விவசாயம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs) மற்றும் பிராந்தியத் துறைகளில், கடன் வாங்குபவர்களின் மீளச் செலுத்தும் திறனைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில், பிணையங்களின் மதிப்பையும் பாதிக்கின்றன. ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் மற்றும் நிலைபேறான நிதிசார் முன்முயற்சிகள் உட்பட, குறைந்த கார்பன் பொருளாதாரங்களை நோக்கிய உலகளாவிய மற்றும் உள்நாட்டு மாற்றங்கள், சொத்துத் தரம், துறைசார் கடன் ஒதுக்கீடு மற்றும் நிதி அணுகல் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

வங்கியின் பதில் நடவடிக்கை

2025 ஆம் ஆண்டிலும், வங்கியானது காலநிலை இடரநேர்வைத் தனது நிறுவன இடர்நேர்வுக் கட்டமைப்பில் ஒரு முக்கிய காரணியாக ஏற்றுக்கொண்டுள்ளது. இது கடன் வாங்குபவர்களின் கடமைகளை நிறைவேற்றும் திறனில் சாத்தியமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், கவனிக்கப்படாவிட்டால், வங்கியின் சொத்துத் தரத்தைக் குறைக்கும் என்றும் அடையாளம் கண்டது. குறிப்பாக, காலநிலை நிலையற்ற தன்மையானது வருவாய் ஓட்டங்களையும் பிணைய மதிப்புகளையும் நேரடியாகப் பாதிக்கக்கூடிய காலநிலை உணர்திறன் கொண்ட துறைகளில் உள்ள கடன் வாங்குபவர்களுக்கு இது பொருந்தும். கடன் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பில் காலநிலை இடர்நேர்வுக் கருத்தாய்வுகளை ஒருங்கிணைத்ததன் மூலம், உருவாகிவரும் காலநிலை தொடர்பான அழுத்தங்களால் பாதிக்கப்படக்கூடிய இடர்நேர்வுகளை வங்கி முன்கூட்டியே மதிப்பிட்டு அளவிட முடிந்தது. இந்த ஆண்டில் காலநிலை தொடர்பான இந்த இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக, வங்கி தனது இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளில் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ள நிலைபேறான நிதிக் கோட்பாடுகளையும், காலநிலை இடர்நேர்வு நடைமுறைகளையும் கடைப்பிடித்தது.

அதன்படி, ஒரு மதிப்பெண் அட்டை அடிப்படையிலான காலநிலை இடர்நேர்வு மதிப்பீட்டு முறையின் மூலம் காலநிலை தொடர்பான பாதிப்புகளைக் கண்டறிந்து அளவிடுவதற்காக, காலநிலை இடர்நேர்வு பரிசீலனைகள் முதலீட்டுத் தொகுப்பு கண்காணிப்பு மற்றும் இடர்நேர்வு மதிப்பீட்டு செயன்முறைகளில் முறையாக உட்பொதிக்கப்பட்டன. இந்த முறையானது, துறைகளின் மதிப்பெண்களில் உட்பொதிக்கப்பட்ட இயற்பியல் மற்றும் இடைநிலை இடர் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய துறைசார் காலநிலை உணர்திறனின் அடிப்படையில் முதலீட்டுத் தொகுப்பை மதிப்பிடுகிறது. காலநிலை இடர்நேர்வு மதிப்பெண் அட்டையின் முடிவுகள், வங்கியின் ICAAP மற்றும் அழுத்தச் சோதனைச் சூழல் ஆகிய இரண்டிலும் செயலூக்கமான இடர்நேர்வு முகாமைக்காக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இது, காலநிலை தொடர்பான அழுத்தங்களால் பாதிக்கப்படக்கூடிய பாதிப்புகளை வங்கி முன்கூட்டியே கண்டறிந்து, மதிப்பிட்டு, கண்காணிக்க உதவுகிறது. இந்த மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு, உருவாகிவரும் பாதிப்புகளை முன்கூட்டியே கணித்து, சரியான நேரத்தில் இடர் தணிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் வங்கியின் திறனை வலுப்படுத்தியது.

இந்த ஆண்டில் காலநிலை தொடர்பான பாதிப்புகளைத் தணிப்பதற்காக, வங்கி தனது கடன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளில் ஏற்கனவே உட்பொதிக்கப்பட்டிருந்த நிறுவப்பட்ட நிலைபேறான நிதிக் கொள்கைகள் மற்றும் காலநிலை இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தது. ஒட்டுமொத்தமாக, இந்த நடவடிக்கைகள் வங்கியின் நிதி மீள்திறனை வலுப்படுத்துகின்றன் அழுத்தமான சூழ்நிலைகளில் மீட்சித் திறனை ஆதரிக்கின்றன் மேலும் நீண்டகால நிலைபேறானதன்மை மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் இணக்கத்தை உறுதி செய்கின்றன.

சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு (ESG Risk)

வங்கியின் மீதான தாக்கம்	வங்கியின் பதில் நடவடிக்கை
மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு வெளிப்படுத்தல்களுக்கு விரிவான அறிக்கையிடல் தேவைப்பட்ட, அதே நேரத்தில் பசுமை நிதி மற்றும் முன்னுரிமை நிதித் துறைகளுக்கு மூலதன ஒதுக்கீட்டில் ஒரு மாற்றம் தேவைப்பட்டது. சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு இடர்நேர்வுகள் நீண்ட கால உக்திசார் திட்டமிடலில் ஒருங்கிணைக்கப்பட்டன.	நீண்ட கால நிதிச் செயற்திறன், நற்பெயர் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றின் மீது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) இடர்களின் அதிகரித்து வரும் தாக்கத்தை உணர்ந்து, அவற்றை அடையாளம் காணுதல், மதிப்பிடுதல் மற்றும் நிர்வகிப்பதற்கான தனது கட்டமைப்பை வங்கி தொடங்கியது. சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகள் வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைக் கட்டமைப்பிற்குள் உட்பொதிக்கப்பட்டுள்ளன் மேலும் கடன், செயற்பாட்டு, இணக்கம் மற்றும் நற்பெயர் இடர் உள்ளிட்ட முக்கிய இடர் வகைகளில் அவை மதிப்பிடப்படுகின்றன. கடன் வழங்கும் முடிவுகளில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர் திரையிடல், துறைசார் செறிவு கண்காணிப்பு மற்றும் அதிக இடர் உள்ள தொழில்களுக்கான மேம்படுத்தப்பட்ட உரிய விடாமுயற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. ஆளுகைக் கண்ணோட்டத்தில், சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு மேற்பார்வையானது நிர்வாகசபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் மூலம் செயற்படுத்தப்படுகிறது. மேலும், பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், மூலோபாயரீதியில் முடிவெடுப்பதில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் பல்துறை முகாமைக் குழுக்கள் இதற்கு ஆதரவளிக்கின்றன. இந்த ஆண்டில், வங்கியானது சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு குறித்த உள்வாரிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இது பொறுப்பான நிதியுதவியை மேலும் வலுப்படுத்தியதுடன், காலநிலை மற்றும் நிலைபேறானதன்மை சூழ்நிலைக் கருத்தாய்வுகளை அழுத்தச் சோதனைக் கட்டமைப்புகளில் படிப்படியாக இணைப்பதற்கான நடவடிக்கைகளையும் தொடங்கியது. இலங்கை தனது பொருளாதார மீட்சி மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்த செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வேளையில், வளர்ச்சியைப் பொறுப்பான இடர்நேர்வு ஏற்புடன் சமநிலைப்படுத்துவதற்கும், நிலைபேறான துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கும், ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு முகாமை மூலம் நீண்டகாலப் பங்குதாரர் மதிப்பைப் பாதுகாப்பதற்கும் வங்கி உறுதிபூண்டுள்ளது. சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு தொடர்பான பின்வரும் முக்கியக் கூறுகளில் வங்கி கவனம் செலுத்துகிறது.

சுற்றுச்சூழல்	சமூக	ஆளுகை
• காலநிலை மாற்றம் மற்றும் கார்பன் உமிழ்வுகள் • ஆற்றல் பயனுறுதிப்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு • கழிவு முகாமைத்துவம் மற்றும் மாசுக் கட்டுப்பாடு • நீர் பயன்பாடு மற்றும் பல்லுயிர்வகைமைப் பாதுகாப்பு • காலநிலை மாற்றம் மற்றும் பௌதீக அபாயங்களுக்கான வெளிப்பாடு • பசுமைக் கடன் மற்றும் நிலைபேறான நிதி • காலநிலை அபாய அழுத்தச் சோதனை • தொகுப்பு கார்பன் தட அளவீடு • துறைசார் வெளிப்பாட்டு வரம்புகள்	• பணியாளர் நலன் மற்றும் பன்முகத்தன்மை • நிதி உள்ளடக்கல் • வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் நியாயமான அணுகுமுறை • தரவு தனியுரிமை மற்றும் இணையப் பாதுகாப்பு • சமூக முதலீடு • மனித உரிமை இணக்கப்பாடு • பொறுப்பான கடன் வழங்கும் நடைமுறைகள் • சிறிய மற்றும் நடுத்தர (SME) நிறுவனம் மற்றும் குறுநிதி அணுகல் • வாடிக்கையாளர் புகார் முகாமைத்துவம் • நியாயமான விலை நிர்ணயம் மற்றும் வெளிப்படைத்தன்மை • அதிகப்படியான கடன் சுமையைத் தடுத்தல்	• நிர்வாகசபைக் கட்டமைப்பு மற்றும் சுதந்திரம் • இடர்நேர்வு முகாமைக் கட்டமைப்பு • உள்வாரியான கட்டுப்பாடுகள் • ஊழல் தடுப்பு மற்றும் பணமோசடி தடுப்பு இணக்கம் • வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்கள் • வாரிய ஒருங்கிணைந்த இடர்நேர்வுக் குழுவின் மேற்பார்வை • கடன் கொள்கையில் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வு ஒருங்கிணைப்பு • மீளப் பெறும் விதிகள் • தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் • ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுக்கு இணங்குதல்

தரவுப் பாதுகாப்பு மற்றும் பிரத்தியேக மேற்பார்வை

அதிகரித்து வரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளையும், தனிப்பட்ட தரவுகளைச் சுற்றியுள்ள அதிகரித்தஇடர்நேர்வுச்சூழலையும் உணர்ந்து, வங்கியானது 2025-ஆம் ஆண்டில் இடர்நேர்வு முகாமைத் துறையின் கீழ் ஒரு பிரத்தியேக தரவுப் பாதுகாப்புப் பிரிவை (DPU) நிறுவுவதன் மூலம் தனது தரவு ஆளுகைக் கட்டமைப்பை முறைப்படுத்தியது. 2022-ஆம் ஆண்டின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் இலக்கம் 9-க்கு இணங்க உருவாக்கப்பட்டதும், பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறையில் (GDPR) உள்ளவை உட்பட, சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரத்தியேக மற்றும் தரவுப் பாதுகாப்பு கொள்கைகளைப் பிரதிபலிப்பதுமான வங்கியின் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்குவதை மேற்பார்வையிடுவதற்கு தரவுப் பாதுகாப்பு அலகு பொறுப்பாகிறது.

இந்தக் கொள்கைக்கு இணங்க, தனிப்பட்ட தரவுகளைச் சட்டப்பூர்வமாகவும், நியாயமாகவும், பாதுகாப்பாகவும் செயலாக்குவதை உறுதி செய்வதற்கும், அங்கீகரிக்கப்படாத அணுகல், இழப்பு, தவறான பயன்பாடு, மாற்றம் அல்லது வெளிப்படுத்தல் ஆகியவற்றிலிருந்து தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்க பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கும் வங்கி முதன்மைப் பொறுப்பை ஏற்கிறது. இந்தப் பொறுப்பானது, அனைத்து உள்வாரிச் செயலாக்க நடவடிக்கைகளுக்கும், அத்துடன் வங்கியால் ஈடுபடுத்தப்பட்ட மூன்றாம் தரப்புச் செயலாக்கிகள் மற்றும் விற்பனையாளர்களுக்கும் பொருந்தும் அவர்கள் வங்கியின் தரவுப் பாதுகாப்புத் தரநிலைகள் மற்றும் ஒப்பந்தப் பாதுகாப்புகளுக்கு இணங்க வேண்டும்.

மேலும், தரவுப் பயன்பாட்டு அலகு (DPU), வங்கியையும் அதன் ஊழியர்களையும் சட்டப்பூர்வமான தரவுச் செயலாக்கம் மற்றும் சட்டத்தின் விதிகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் மீது மேற்பார்வையிடுகிறது, அத்துடன் தரவு செயலாக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை எளிதாக்குகிறது.

அதிக அபாயமுள்ள செயலாக்கத்திற்கான தரவுப் பாதுகாப்பு தாக்க மதிப்பீடுகள் (DPIAs) மீது வழிகாட்டுதலையும் மேற்பார்வையையும் வழங்குகிறது, மேலும் தரவுப் பாதுகாப்பு ஆணையத்தால் வெளியிடப்படும் அனைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் ஒத்துழைத்து, அவற்றைக் கடைப்பிடிக்கிறது. இந்த ஆளுகை ஏற்பாடுகள் மூலம், வங்கி தனது தரவுப் பாதுகாப்பு கட்டமைப்பு, ஒழுங்குமுறை இணக்க நிலை மற்றும் அனைத்துத் துறைகள் மற்றும் கிளை வலையமைப்பு முழுவதும் தரவுப் பாதுகாப்பு அபாயங்களுக்கு எதிரான செயற்பாட்டு மீள்திறனை வலுப்படுத்துகிறது. அனைத்து தனிப்பட்ட தரவு செயலாக்க நடவடிக்கைகளும் வங்கியின் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு (DPP) இணங்க நடத்தப்பட வேண்டும்.

தரவுப் பாதுகாப்பு அலகின் (DPU) உருவாக்கம், வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைக் கட்டமைப்புடன் சீரமைத்து, தரவின் பொறுப்பான மற்றும் நெறிமுறைப் பயன்பாட்டை உறுதி செய்வதோடு, சட்ட, ஒழுங்குமுறை மற்றும் நற்பெயர் அபாயங்களைக் குறைப்பதன் மூலம் வங்கியின் கட்டுப்பாட்டுச் சூழலை கணிசமாக வலுப்படுத்துகிறது.

ஒழுங்குமுறை மற்றும் இணக்கம்

மக்கள் வங்கி, மாறிவரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகள் நிறைந்த சூழலில் இயங்கியதுடன், நெருக்கடிக்குப் பிந்தைய நிதித்துறை சீர்திருத்தங்களுக்கு ஏற்ப விவேகமான மேற்பார்வை தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டது. வங்கியின் உயர் மூலதனப் போதிய தன்மை மற்றும் வலுவான பணப்புழக்க நிலைகள் ஒரு நிலையான ஒழுங்குமுறை இடர்நேர்வுக் கண்ணோட்டத்திற்கு பங்களித்தன. இடர்நேர்வுத் தரவுத் திரட்டல் தரநிலைகள், பணமோசடி தடுப்புக் கட்டமைப்புகள் மற்றும் அதிகரிக்கப்பட்ட வெளிப்படுத்தல் தேவைகள் ஆகியவற்றுக்கு இணங்குவது, ஒழுங்குமுறை நம்பிக்கையைத் தக்கவைப்பதற்கும் சிறந்த நடைமுறைகளுடன் சீரமைப்பை உறுதி செய்வதற்கும் இன்றியமையாததாக இருந்தது.

நன்மதிப்பு குறித்த இடர்நேர்வு மற்றும் பங்குதாரர் நம்பிக்கை

சாதனை படைத்த பெறுபேறுகளின் உத்வேகத்தில், வங்கி தனது சிறப்பிற்கான அர்ப்பணிப்பையும் பங்குதாரர் நம்பிக்கையையும் நிலைநிறுத்தியது. வெளிப்படையான இடர்நேர்வு முகாமை மற்றும் திறமையான தகவல்தொடர்பு ஆகியவற்றில் வங்கியின் அசைக்க முடியாத கவனம், பங்குதாரர் நம்பிக்கையை வலுப்படுத்தியதுடன், 2025 ஆம் ஆண்டில் இடர்நேர்வு தொகுப்பு மேற்பார்வை மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான அதன் ஒழுக்கமான அணுகுமுறையை அடிக்கோடிட்டுக் காட்டியது.

2025 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளிடம் நம்பகத்தன்மையைப் பேணுவது, கடுமையான வெளிப்படுத்தல் நடைமுறைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்பு அளவுருக்களுக்குள் இடர் வெளிப்பாடுகளின் நிரூபிக்கக்கூடிய முகாமை ஆகியவற்றால் வலுப்படுத்தப்பட்டது.

இடர்நேர்வைக் கையாளும் கலாச்சாரம் மற்றும் ஆளுகை

2025-ஆம் ஆண்டின் பன்முக இடர்நேர்வுச் சூழலைச் சமாளிக்கும் வங்கியின் திறனுக்கு ஒரு வலுவான இடர் கலாச்சாரம் இன்றியமையாததாக இருந்தது. இடர் விழிப்புணர்வு, ஆளுகை நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் வணிகப் பிரிவுகள் முழுவதும் இடர் பொறுப்பை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் தொடர்ச்சியான கவனம், சுழற்சி மற்றும் கட்டமைப்பு சார்ந்த இடர் காரணிகளுக்கு ஒருங்கிணைந்த பதிலளிப்பை ஆதரித்தது.

சுயாதீனமான சவால் செயல்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்புகள், முக்கியமான இடர் வெளிப்பாடுகள் சிரேஷ்ட தலைமை மற்றும் பணிப்பாளர்கள் குழுவிற்கு திறம்படத் தெரிவிக்கப்படுவதை மேலும் உறுதிசெய்து, ஒட்டுமொத்த இடர்நேர்வு மேற்பார்வையை வலுப்படுத்தின.

வங்கியின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை கட்டமைப்பு

வங்கியானது, அதன் மூலோபாய நோக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, அதன் வணிகச் செயற்பாடுகளிலிருந்து எழும் இடர்களைக் கண்டறிதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை கட்டமைப்பை நிறுவியுள்ளது. இந்தக் கட்டமைப்பு, திறமையான மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் ஒரு வலுவான ஆளுகைக் கட்டமைப்பால் ஆதரிக்கப்படுகிறது. இடர்நேர்வு ஆளுகையானது, அமைப்பு முழுவதும் தெளிவாக வரையறுக்கப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அவை, நிர்வாக சபைக் குழுக்கள் மற்றும் சிரேஷ்ட நிர்வாகத்தால் மேற்பார்வை வழங்கப்படுகிறது.

வங்கியின் இடர்நேர்வு முகா கட்டமைப்பு, அனைத்து முக்கிய இடர் வெளிப்பாடுகளையும் உள்ளடக்கியதுடன், தெளிவாக வரையறுக்கப்பட்ட நிறுவன ஏற்பாடுகள், நவீன அமைப்புகள், திறமையான செயல்முறைகள் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளால் ஆதரிக்கப்படும் ஒரு கட்டமைக்கப்பட்ட வழிமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பு, வங்கியின் செயற்பாடுகளிலிருந்து எழும் சாத்தியமான இடர்நேர்வுகள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் இழப்புகளைக் கண்டறிதல், நிர்வகித்தல் மற்றும் தணித்தல் ஆகியவற்றிற்கு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அணுகுமுறையை செயற்படுத்துகிறது.

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை கட்டமைப்பின் முக்கிய கூறுகள்

- இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பு
- இடர்நேர்வு ஏற்புத்தன்மையை வரையறுத்தல்
- இடர்நேர்வு அகிலத்தை வரையறுத்தல்
- மூன்று பாதுகாப்பு கோடுகள்
- அழுத்தச் சோதனை மற்றும் இடர் மதிப்பீட்டு மாதிரிகள்

இடர் ஆளுகைக் கட்டமைப்பு

வங்கியின் இடர் ஏற்புத்திறனைத் தீர்மானித்தல், இடர்நேர்வு முகாமைக் கொள்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல், மற்றும் இடர்நேர்வு வெளிப்பாடுகளின் திறமையான முகாமையைக் கண்காணித்தல் உள்ளிட்ட இடர்நேர்வு மேற்பார்வைக்கான இறுதிப் பொறுப்பை பணிப்பாளர்கள் குழு ஏற்கிறது. இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில், பணிப்பாளர்கள் குழுவிற்கு, குழு அளவிலான துணைக்குழுக்களும் முகாமை அளவிலான செயற்குழுக்களும் ஆதரவளிக்கின்றன. இவை, திறமையான குழு மேற்பார்வையைப் பேணிக்கொண்டே, இடர்நேர்வு உருவாக்கம் மற்றும் இடர்நேர்வு ஒப்புதல் ஆகியவற்றுக்கு இடையே முறையான பிரிவினையை உறுதி செய்கின்றன.

பணிப்பாளர்கள் குழுவும் அந்தந்த இடர்நேர்வுக் குழுக்களும், தங்களின் பங்கு, அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளைத் தெளிவாக வரையறுக்கும்விதத்தில், முறையாக அங்கீகரிக்கப்பட்ட சாசனங்களுக்கு இணங்கச் செயற்படுகின்றன.

இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு.

நிர்வாக சபை
இடர் ஏற்புத்தன்மையை நிர்ணயித்தல்,இடர்நேர்வு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தலுக்கு பொறுப்புகூறல்

துணைக்குழுக்களின் சபை

முதலீட்டு வங்கியியல் குழுச்சபை (BIBC)

- அனைத்து முதலீடு தொடர்பான முடிவுகளையும் தொடர்புடைய கொள்கைகளையும் அங்கீகரிக்கிறது

ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை குழுச்சபை (BIRMC)

இந்தக் கொள்கை சார்ந்த அணுகுமுறையின் மூலம், இடர் சார்ந்த பரிசீலனைகள் உத்திசார் திட்டமிடல், மூலதன ஒதுக்கீடு மற்றும் அன்றாடச் செயற்பாடுகளில் முறையாக உட்பொதிக்கப்படுகின்றன. இந்தக் கட்டமைப்பு, இடர் சார்ந்த ஒன்றோடொன்று சார்புநிலைகளின் செயலூக்கமான நிர்வாகத்தைச் சாத்தியமாக்குவதோடு, அழுத்தச் சோதனை மற்றும் உள்ளக மூலதனப் போதுமான மதிப்பீட்டுச் செயன்முறை (ICAAP) போன்ற பகுப்பாய்வுக் கருவிகளின் பயன்பாட்டையும் ஆதரிக்கிறது.

சாதகமற்ற சூழ்நிலைகளில் மீள்திறனை மதிப்பிடுவதற்கு, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாக சபை மட்டிலான குழுக்களுக்கு வழக்கமான அறிக்கையிடல், ஆளுகைக்

கண்காணிப்பை வலுப்படுத்துவதோடு, இடர்நேர்வு ஏற்பு வங்கியின் மூலோபாய நோக்கங்கள் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்கிறது.

முன்னோக்கிச் செல்லும் பாதை

வங்கியின் இடர்நேர்வு ஆளுகை மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதற்காக, நாம் ஒரு தானியங்கு ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை முறைமையை (IRMS) செயற்படுத்தும் பணியில் இருக்கிறோம். இந்த முறைமை அனைத்து வணிகப் பிரிவுகளிலும் உள்ள இடர்நேர்வு தரவுகளை ஒருங்கிணைத்து, முக்கிய இடர்நேர்வு குறிகாட்டிகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்கவும், தடையற்ற அறிக்கையிடலுக்கும், மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் வலுவான சீரமைப்பிற்கும் வழிவகுக்கும். கடன், சந்தை, செயற்பாட்டு மற்றும் வளர்ந்து வரும் இடர்களை ஒரு ஒருங்கிணைந்த தளத்தில் இணைப்பதன் மூலம், இடர்நேர்வுத்த தெரிவுநிலையை மேம்படுத்தவும், செயலூக்கமான தணிப்பு உத்திகளை ஆதரிக்கவும், மற்றும் ஒட்டுமொத்த நிறுவன அளவிலான இடர்நேர்வு முகாமையை வலுப்படுத்தவும் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

மூலோபாய இடர்நேர்வு

பொருத்தமற்ற வணிக உத்திகள், திறனற்ற செயலாக்கம், அல்லது வெளிப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குப் போதுமான அளவு பதிலளிக்கத் தவறுதல் ஆகியவற்றின் விளைவாக வங்கியின் வருவாய், மூலதனம் அல்லது நீண்ட கால நிலைத்தன்மையில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கத்திலிருந்து மூலோபாய இடர் எழுகிறது. பேரியல் பொருளாதார நிலையற்ற தன்மை, போட்டி அழுத்தங்கள், ஒழுங்குமுறை மேம்பாடுகள், தொழில்நுட்ப மாற்றம் மற்றும் மாறிவரும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றால் உருவாகும் வேகமாக மாறிவரும் சூழலில், மூலோபாய இடர்நேர்வுகளை விவேகத்துடன் நிர்வகிப்பது வங்கியின் முக்கிய முன்னுரிமையாகத் தொடர்கிறது.

வங்கி, தனது இடர்நேர்வு ஏற்புத்திறன், மூலதன வலிமை மற்றும் சந்தை நிலைப்பாடு ஆகியவற்றுடன் நீண்டகால நோக்கங்களைச் சீரமைக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட உத்திசார் திட்டமிடல் செயன்முறையின் மூலம் உத்திசார் இடரை நிர்வகிக்கிறது. நிர்வாகசபையானது, வங்கியின் உத்திசார் திசையை மேற்பார்வையிடுகிறது; வணிக முன்னெடுப்புகள், விரிவாக்கத் திட்டங்கள், தயாரிப்புப் புத்தாக்கங்கள் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்கள் ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்புத்திறன் மற்றும் நீடித்த வளர்ச்சி நோக்கங்களுடன் ஒத்துப்போவதை இது உறுதி செய்கிறது. மாறுபட்ட பொருளாதாரச் சூழல்களில் மீள்திறனை மதிப்பிடுவதற்காக, உத்திசார் திட்டங்கள் விரிவான நிதி முன்னறிவிப்புகள், மூலதனத் திட்டமிடல் மதிப்பீடுகள் மற்றும் சூழ்நிலைப் பகுப்பாய்வுகளால் ஆதரிக்கப்படுகின்றன.

உத்திசார் இலக்குகள், முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் மற்றும் இடர் வரம்புகளுக்கு எதிராகச் செயற்திறனை மதிப்பிடுவதற்குத் தொடர்ச்சியான கண்காணிப்பு வழிமுறைகள் நடைமுறையில் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களிலிருந்து ஏற்படும் விலகல்கள், சிரேஷ்ட நிர்வாகம் மற்றும் தொடர்புடைய பணிப்பாளர் குழுக்களால் உரிய நேரத்தில் மீளாய்வு செய்யப்பட்டு, திருத்த நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும், தகவமைக்கும் திறனையும் நீண்டகாலப் போட்டித்தன்மையையும் மேம்படுத்துவதற்காக, டிஜிட்டல் இடையூறு, காலநிலை தொடர்பான நிகழ்வுகள், ஒழுங்குமுறைச் சீர்திருத்தங்கள் மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் போன்ற வளர்ந்துவரும் இடர்கள் குறித்த முன்னோக்கு மதிப்பீடுகளையும் வங்கி தனது உத்திசார் ஆலோசனைகளில் இணைத்துக்கொள்கிறது.

அழுத்தச் சோதனை மற்றும் உள் மூலதனப் போதுமான மதிப்பீட்டுச் செயன்முறை (ICAAP) ஆகியவை, பாதகமான சூழ்நிலைகள் மற்றும் உத்திசார் முடிவுகளின் மூலதனத் தாக்கங்களை மதிப்பிடுவதன் மூலம், உத்திசார் இடர்நேர்வு முகாமைக்கு மேலும் துணைபுரிகின்றன. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை, வளர்ச்சி இலக்குகள் நிதி நிலைத்தன்மை மற்றும் விவேகமான இடர்நேர்வு முகாமையுடன் சமநிலையில் இருப்பதை உறுதி செய்கிறது.

கட்டுப்பாடான நிர்வாகம், கடுமையான திட்டமிடல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம், வங்கியானது மூலோபாய இடர்களைக் குறைப்பதோடு, நிலையான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளவும், தனது பங்குதாரர்களுக்கு நீடித்த மதிப்பை வழங்கவும் தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறது.

நன்மதிப்புசார் இடர்நேர்வு

நன்மதிப்புசார் இடர்நேர்வு என்பது வங்கிக்கு ஒரு முக்கியக் கருத்தாகும் ஏனெனில் இது எதிர்மறையான கருத்துக்கள், பொது ஆய்வு அல்லது நடத்தைக் குறைபாடுகள் ஆகியவற்றால் பங்குதாரர்களின் நம்பிக்கை, வணிக மதிப்பு மற்றும் நீண்டகால வணிக நிலைத்தன்மை ஆகியவற்றில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கத்தின் சாத்தியக்கூறுகளைப் பிரதிபலிக்கிறது. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மற்றும் தகவல் சார்ந்த சூழலில், நன்மதிப்பிற்கு ஏற்படும் சேதம் விரைவாக நிதி, செயற்பாட்டு அல்லது மூலோபாய விளைவுகளாக மாறக்கூடும், எனவே வங்கியின் மீள்தன்மைக்கு அதன் செயலூக்கமான மேலாண்மை மிகவும் முக்கியமானது.

வங்கியானது, நேர்மை மற்றும் பொது நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆளுகை, கொள்கைகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளின் கலவையின் மூலம் நன்மதிப்புசார் இடர்நேர்வினை நிர்வகிக்கிறது. நிர்வாகசபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஆகியவை மேற்பார்வை வழங்குகின்றன் இடர்நேர்வு முகாமை நடைமுறைகள், நிறுவன நடத்தை மற்றும் மூலோபாய முடிவுகள் ஆகியவை வங்கியின் நெறிமுறைத் தரங்கள், ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போவதை உறுதி செய்கின்றன. உள்வாரியான கொள்கைகள், நடத்தை விதிகள் மற்றும் இணக்கக் கட்டமைப்புகள் ஆகியவை பணியாளர் நடத்தை, வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் சந்தை நடத்தை ஆகியவற்றிற்குத் தெளிவான தரநிலைகளை அமைத்து, வங்கியின் நன்மதிப்பிற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நிகழ்வுகளின் நிகழ்தகவைக் குறைக்கின்றன.

நன்மதிப்புசார் இடர்நேர்வு, முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள், ஊடக மற்றும் பங்குதாரர் மனநிலை பகுப்பாய்வு, வாடிக்கையாளர் கருத்து வழிமுறைகள் மற்றும் உள்வாரியான அறிக்கையிடல் வழிகள் மூலம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. சரியான நேரத்தில் ஆய்வு, முடிவெடுத்தல் மற்றும் சரிசெய்யும் நடவடிக்கைகளை உறுதி செய்வதற்காக, முக்கிய நிகழ்வுகள் அல்லது புதிதாக எழும் சிக்கல்கள் உயர் மேலாண்மை மற்றும் இயக்குநர் குழு அளவிலான குழுக்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. சட்டம், இணக்கம், இடர் மற்றும் பெருநிறுவனத் தகவல் தொடர்பு ஆகிய துறைகளுடனான பல்துறை ஒருங்கிணைப்பு, நன்மதிப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கான பதில்கள் சீரானதாகவும், வெளிப்படையானதாகவும், திறம்பட்டதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

நற்பெயர் அபாயமானது, செயற்பாட்டு, உத்திசார், இணக்க மற்றும் ESG தொடர்பான அபாயங்கள் உள்ளிட்ட பிற அபாய வகைகளுடன் பெரும்பாலும் இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் வங்கி அங்கீகரிக்கிறது. அதன்படி, ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமை நடைமுறைகள், சூழ்நிலை பகுப்பாய்வுகள் மற்றும் அழுத்தச் சோதனைப் பயிற்சிகள் ஆகியவை நிதி மற்றும் செயற்பாட்டுத் தாக்கங்களுடன் நன்மதிப்புசார் தாக்கங்களையும் கருத்தில் கொள்கின்றன.

கட்டுப்பாடான நிர்வாகம், செயலூக்கமான கண்காணிப்பு மற்றும் நெறிமுறை மற்றும் ஒழுங்குமுறைத் தரங்களுடன் இணங்குதல் ஆகியவற்றின் மூலம், பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவும், அதன் பொது நிலையை நிலைநிறுத்தவும், நிலைபேறான வளர்ச்சியை ஆதரிக்கவும் வங்கி முயல்கிறது மேலும், நிதி மற்றும் செயற்பாட்டு அபாயங்களுடன் நன்மதிப்பு அபாயமும் ஒரு உக்திசார் முன்னுரிமையாக நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

	2025 டிசம்பர் 31	2024 டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிலை
வெளிப்புற மதிப்பீடு (ஃபிட்ச் மதிப்பீடு)	AA-	AA-

பணியாளர் இடர்நேர்வு

பணியாளர் இடர்நேர்வு என்பது, முறையற்ற பணியாளர் நடவடிக்கைகள், போதுமான மனிதவளம் இல்லாமை, அல்லது தொழிலாளர் தொடர்பான விதிமுறைகளுக்கு இணங்காதிருத்தல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய நிதி அல்லது செயற்பாட்டு இழப்புகளின் சாத்தியத்தைக் குறிக்கிறது. நாடு முழுவதும் பரந்து விரிந்த மற்றும் புவியியல் ரீதியாகப் பரவியுள்ள ஒரு பெரிய பணியாளர் படையைக் கொண்டிருப்பதால், வங்கி இந்த இடர்களுக்கு உள்ளாகிறது. இது செயற்பாட்டுத் தொடர்ச்சி, சேவையின் தரம் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடும்.

2025 ஆம் ஆண்டிலும், வங்கி ஓரளவிற்குத் திறமையாளர் வெளியேற்றத்தைத் தொடர்ந்து சந்தித்தது. இது போட்டித்தன்மை, பணியாளர் திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றைப் பராமரிப்பதில் சவால்களை ஏற்படுத்தியது. இந்த இடர்களைக் குறைப்பதற்காக, வங்கி தனது கிளை வலையமைப்பு முழுவதும் பணியாளர் நிர்வாகத்திற்கு ஒரு சீரான கட்டமைப்பை வழங்கும் விரிவான மனிதவளக் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளைச் சார்ந்துள்ளது. இந்தக் கொள்கைகள் திறமையான ஆட்சேர்ப்பு, தக்கவைப்பு மற்றும் பணியாளர் திட்டமிடலை ஆதரிக்கின்றன. இதன் மூலம் செயற்பாடுகளில் ஏற்படும் இடையூறுகளைக் குறைக்கவும், பணியாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் நிதிச் சிரமங்களிலிருந்து பாதுகாக்கவும், பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலைப் பராமரிக்கவும் உதவுகின்றன.

மனிதவள நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலமும், பணியாளர் நடைமுறைகளை மூலோபாய நோக்கங்களுடன் சீரமைப்பதன் மூலமும், பணியாளர் வெளியேற்றத்தைக் குறைக்கவும், முக்கியத் திறமையாளர்களைத் தக்கவைக்கவும், சேவை வழங்குதலில் தொடர்ச்சியை உறுதி செய்யவும் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது. பணியாளர் மேம்பாடு, ஈடுபாடு மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றில் தொடர்ச்சியான கவனம் செலுத்துவது, செயற்பாட்டு மீள்திறன் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், மனிதவள இடர்நேர்வுகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான வங்கியின் திறனுக்கு அடித்தளமாக அமைகிறது.

சட்ட ரீதியான இடர்நேர்வு

சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒப்பந்தக் கடப்பாடுகள் அல்லது உள்ளகக் கொள்கைகளுக்கு இணங்கி செயற்படத் தவறுவதன் காரணமாக ஏற்படக்கூடிய நிதி இழப்பு, ஒழுங்குமுறைத் தடைகள் அல்லது நற்பெயருக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு ஆகியவற்றுக்கான சாத்தியக்கூறுகளை சட்ட ரீதியான இடர்நேர்வு குறிக்கின்றது. ஒப்பந்த முகாமைத்துவத்தில் நிலவும் குறைபாடுகள், வழக்குகள், சட்டவாக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் அல்லது சட்டபூர்வக் கடப்பாடுகளைச் சரியாக நிறைவேற்றத் தவறுதல் ஆகியவற்றிலிருந்து இந்த இடர்நேர்வு உருவாகலாம். ஒரு பெரிய, சிக்கலான செயற்பாட்டுச் சூழலைக் கொண்டுள்ள நிலையில், வங்கியின் செயற்பாடுகளைப் பாதுகாப்பதற்கும், பங்குதாரர்களைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கும் சட்ட ரீதியான இடர்நேர்வை வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்வது மிக அவசியமானதாகும்.

பாசல் (Basel) ஒழுங்குமுறை வழிகாட்டல்களுக்கு இணங்க, சட்ட ரீதியான இடர்நேர்வானது செயற்பாட்டு ரீதியான இடர்நேர்வின் ஒரு துணைப்பிரிவாகக் கருதப்படுகிறது. சட்ட ரீதியான இடர்நேர்வு ஏற்படுவதற்கு சாத்தியமான வெளிப்பாடுகள் பெரும்பாலும் குறைபாடுமிக்க செயன்முறைகள், மனிதத் தவறுகள் அல்லது கட்டமைப்பு ரீதியான தோல்விகள் போன்ற காரணங்களினால் ஏற்படுகின்றன என்பது இதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வங்கி, சட்ட ரீதியான இடர்நேர்வை ஒரு கட்டமைக்கப்பட்ட சட்டகத்தின் ஊடாக முகாமைத்துவம் செய்கிறது. இது வலுவான ஆளுகை, முன்கூட்டிய கண்காணிப்பு மற்றும் விசேட சட்ட மேற்பார்வை ஆகியவற்றை உள்ளடக்கியது. ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த வழிகாட்டல்களை சட்டப் பிரிவு வழங்குகிறது, மேலும் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்தல், முரண்பாடு தீர்வு குறித்து ஆலோசனை வழங்குதல் மற்றும் வளர்ந்து வரும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி செயற்படுதல் ஆகியவற்றுக்குத் துணைபுரிகின்றது. இணங்குவிப்பு, இடர்நேர்வு மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளுடனான ஒருங்கிணைப்பானது, சாத்தியமான சட்ட ரீதியான இடர்நேர்வு வெளிப்பாடுகளை முன்கூட்டியே அடையாளம் காண்பதற்கும், அவற்றை முழுமையாக மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் உடனடியாகத் தீர்ப்பதற்கும் உறுதியளிக்கிறது.

ஒழுங்குமுறை மாற்றங்கள், ஒப்பந்தக் கடப்பாடுகள் மற்றும் புதிதாக எழும் சட்டச் சிக்கல்கள் போன்றவற்றை நடைமுறையிலுள்ள கண்காணிப்பு வழிமுறைகள் கண்காணிக்கின்றன. சரியான நேரத்தில் தலையீடு செய்வதற்கும், தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் இடர்நேர்வைத் தணிப்பதற்கும் ஏதுவாக சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான மற்றும் நிருவாக சபை மட்டத்திலான குழுக்களுக்கு முக்கியமான இடர்நேர்வு வெளிப்பாடுகள் மற்றும் வழக்கு விவகாரங்கள் அறிக்கையிடப்படுகின்றன. மேலும், ஒப்பந்த ரீதியான அங்கீகாரங்கள், ஆவணப்படுத்தல் நியமங்கள் மற்றும் துரிதப்படுத்தல் நெறிமுறைகள் ஆகியவற்றிற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் வங்கி பேணி வருகிறது. இது நிலைபெறு தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடன் இணக்கமான முறையில் செயற்படுவதனை உறுதி செய்கிறது.

தீர்க்கதரிசனமான சட்ட மேற்பார்வை, வலுவான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கப்பாட்டு கலாசாரம் ஆகியவற்றின் ஊடாக, சட்ட ரீதியான இடர்நேர்வைக் குறைப்பதற்கும், பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் நிலையான வணிக வளர்ச்சிக்குத் துணைபுரிவதற்கும் வங்கி முனைகின்ற அதே வேளையில் செயற்பாட்டு ரீதியதான தாக்குப் பிடிப்பு மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றைத் தொடர்ச்சியாகப் பேணுகின்றது.

சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) இடர்

சுற்றுச்சூழல் சவால்கள், சமூகக் காரணிகள் அல்லது ஆளுகை தொடர்பான குறைபாடுகளினால் வங்கியின் நிதிச் செயற்பாடு, நற்பெயர் மற்றும் நீண்டகால நிலைபெறுதன்மை ஆகியவற்றில் ஏற்படக்கூடிய சாத்தியமான மோசமான பாதிப்புகளை சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) இடர்நேர்வுகள் குறிக்கின்றன. இன்றைய மாறிவரும் ஒழுங்குமுறை, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பின்னணியில், பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், செயற்பாட்டு ரீதியாக தாக்குப்பிடிக்கும் தன்மையைப் பேணுவதற்கும் மற்றும் நிலைபெறுதன்மை கொண்ட வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் ESG இடர்நேர்வுகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

கடன், செயற்பாட்டு, மூலோபாய மற்றும் நற்பெயர் சார்ந்த இடர்நேர்வு வெளிப்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இடர்நேர்வு வகையாக ESG இடர்நேர்வுகளை வங்கி அங்கீகரிக்கிறது. சுற்றுச்சூழல் இடர்நேர்வுகளில் காலநிலை மாற்றம், இயற்கை பேரழிவுகள் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவற்றுக்கான வெளிப்பாடுகள் உள்ளடங்குகின்றன இவை கடன் பெறுநர்கள், சொத்துக்கள் அல்லது செயற்பாடுகளைப் பாதிக்கலாம். சமூக இடர்நேர்வுகள் பணியாளர் முகாமைத்துவம், மனித உரிமைகள், சமூகத்

தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் நடைமுறைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவை. அதே வேளையில் ஆளுகை இடர்நேர்வுகள் இணக்கப்பாட்டுத் தோல்விகள், ஒழுக்க நெறிமுறைப் பிறழ்வுகள் மற்றும் பலவீனமான மேற்பார்வைக் கட்டமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

ESG இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்காக, மூலோபாயத் திட்டமிடல், கடன் மதிப்பீடு மற்றும் முதலீட்டுத் தீர்மானங்கள் உள்ளிட்ட தனது நிறுவன இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகத்திற்குள் வங்கி சுற்றுச்சூழல், சமூகவியல் மற்றும் ஆளுகைசார் காரணிகளை ஒருங்கிணைத்துள்ளது. சாத்தியமான மோசமான பாதிப்புகள் அடையாளம் காணப்படுவதையும் அவை தணிக்கப்படுவதையும் உறுதி செய்வதற்காக, துறைசார் பகுப்பாய்வுகள், உரிய விழிப்புக்கவனம் (due diligence) மற்றும் இடர்நேர்வுக்கு ஈடுகொடுக்கும் எல்லைகள் (risk appetite limits) ஆகியவற்றில் ESG காரணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. மேற்பார்வை, தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடனான இணக்கப்பாடு ஆகியவற்றை ஆதரிப்பதற்காக, ESG இடர்நேர்வு வெளிப்பாடுகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் என்பன சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் நிருவாக மட்டத்திலான குழுக்களுக்கு அறிக்கையிடப்படுகின்றன.

மேலும், வங்கி தனது செயற்பாடுகளைத் தேசிய மற்றும் உலகளாவிய நிலைபெறுதன்மை முன்னுரிமைகளுடன் சீரமைத்து, நிலைபெறுதன்மை கொண்ட நிதி முயற்சிகள், பசுமைக் கடன்கள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய முதலீட்டு நடைமுறைகளை ஊக்குவிக்கிறது. கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் வழிமுறைகள், பணியாளர் பயிற்சி மற்றும் ஆளுகை நியமங்களுடன் இணைந்து, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் புதிதாக எழும் ESG இடர்நேர்வுகளை முன்கூட்டியே கணித்து அதற்குப் பதிலளிக்கும் வங்கியின் திறனை மேம்படுத்துகின்றன.

இந்த முறையான மற்றும் தீர்க்கதரிசனமான அணுகுமுறையின் ஊடாக, நீண்டகாலப் பெறுமதியைப் பாதுகாப்பதற்கும், பங்குதாரர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் மற்றும் நிலைபெறுதன்மை கொண்ட பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் வங்கி முனைகின்ற அதே வேளையில் முன்மதியுடைய கட்டுப்பாட்டையும் செயற்பாட்டு ரீதியாக தாக்குப்பிடிக்கும் தன்மையையும் பேணுகின்றது.

காலநிலை இடர்நேர்வு

காலநிலை இடர்நேர்வானது வங்கியின் பரந்த ESG இடர்நேர்வு சட்டகத்தின் ஒரு முக்கிய அங்கமாக, குறிப்பாக சுற்றுச்சூழல் பரிமாணத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், கடன் தரம், மூலதனப் போதுமாந்தன்மை, திரவத்தன்மை மற்றும் நீண்டகால மூலோபாய ரீதியாக தாக்குப்பிடிக்கும் தன்மை ஆகியவற்றில் இது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கத்தின் காரணமாக, இது ஒரு தனித்துவமான நிதி இடர்நேர்வு காரணியாக முகாமைத்துவம் செய்யப்படுகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் குறைந்தளவு கார்பன் பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியமான நிதி மற்றும் நிதிசாரா பாதிப்புகளை காலநிலை இடர்நேர்வு குறிக்கின்றது. காலநிலை தொடர்பான முன்னேற்றங்கள் தீவிரமடைந்து வருவதால், தீவிர வானிலை நிகழ்வுகளின் அதிகரித்துவரும் நிகழ்வாயிடை மற்றும் தீவிரம், வளர்ந்து வரும் ஒழுங்குமுறைத் தேவைகள், கொள்கை ரீதியான பதிலிறுப்புகள் மற்றும் சந்தை எதிர்பார்ப்புகளுடன் ஒன்றிணைந்து, நிதி நிறுவனங்களுக்கான செயற்பாட்டுச் சூழலைத் தொடர்ந்து மறுவடிவமைப்பு செய்கின்றன. இது தீர்க்கதரிசனமான இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மூலோபாய இசைவாக்கம் ஆகியவற்றை அவசியப்படுத்துகின்றது.

காலநிலை மாற்றமானது தனது வணிக மாதிரியில் குறிப்பிடத்தக்களவு நிதிசார் தாக்கங்களையும் செயற்பாட்டுத் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது என்பதையும், அது சொத்துப்பட்டியல் செயற்பாடு, மூலதனத் திட்டமிடல், நிதி திரட்டுவதில் தாக்குப்பிடிக்கும் தன்மை, வணிகத் தொடர்ச்சித் தன்மை மற்றும் நீண்டகால மூலோபாய வழிகாட்டல் ஆகியவற்றில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதையும் வங்கி அங்கீகரிக்கிறது. மேலும், காலநிலை இடர்நேர்வை “பௌதீக இடர்நேர்வு” மற்றும் “நிலைமாற்ற இடர்நேர்வு” என வங்கி வகைப்படுத்துகிறது.

வெள்ளம், வறட்சி மற்றும் தீவிர வானிலை நிலைமைகள் போன்ற கடுமையான நிகழ்பாடுகள் மற்றும் கடன் பெறுநரின் மீள்செலுத்தும் திறனைக் குறைக்கக்கூடிய அல்லது செயற்பாடுகளைத் தடைப்படுத்தக்கூடிய நீண்டகால சுற்றுச்சூழல் மாற்றங்கள் ஆகியவற்றின் மூலமே பௌதீக ரீதியான இடர்நேர்வுகள் ஏற்படுகின்றன. அதேவேளையில், குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கிய நகர்வுடன் தொடர்புடைய கொள்கை மாற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், சந்தை மாற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றின் மூலம் நிலைமாற்ற இடர்நேர்வுகள் உருவாகின்றன. இவை குறிப்பிட்ட துறைகள் மற்றும் தரப்பினரைப் பாதிக்கக்கூடும்.

காலநிலை தொடர்பான வெளிப்பாடுகளை முறையாக அடையாளம் காண்பதற்கும் அளவிடுவதற்கும், மதிப்பெண் அட்டை (scorecard) அடிப்படையிலான காலநிலை இடர்நேர்வு மதிப்பீட்டு முறையை வங்கி பின்பற்றியுள்ளது. இந்த முறையானது, துறைகளின் மதிப்பெண்களுடன் இணைக்கப்பட்டுள்ள பௌதீக மற்றும் நிலைமாற்ற இடர்நேர்வு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய துறைசார் காலநிலை உணர்திறனின் அடிப்படையில் சொத்துப்பட்டியலை மதிப்பீடு செய்கின்றது. காலநிலை இடர்நேர்வு மதிப்பெண் அட்டையின் முடிவுகள், தீர்க்கதரிசனமான இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக வங்கியின் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மையைப் பரீட்சிக்கும் செயன்முறை (ICAAP) மற்றும் அழுத்தப் பரீட்சிப்பு முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

வங்கி தனது சொத்துப்பட்டியலின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்தும் அதே வேளையில், தேசிய காலநிலை முன்னுரிமைகளை ஆதரிக்கும் பசுமை மற்றும் நிலைபெறுதன்மை கொண்ட நிதியிடல் வாய்ப்புகளை அடையாளம் காணவும் விளைகின்றது.

தீர்க்கதரிசனமான கண்காணிப்பு, சூழ்நிலைசார் பகுப்பாய்வு மற்றும் மூலோபாய ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் ஊடாக, காலநிலை தொடர்பான நிச்சயமற்ற தன்மைகளுக்கான தனது தயார்நிலையை மேம்படுத்துவதையும், அதே வேளையில் நிலைபெறுதன்மை கொண்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கத்திற்கு பங்களிப்பதையும் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

மூலதன முகாமைத்துவம் மற்றும் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மைச் சட்டகம்

வங்கியானது அதன் இடர்நேர்வு விபரம், ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மற்றும் நீண்டகால மூலோபாய வழிகாட்டலுக்கு இணையான போதுமான மூலதனத் தாங்கிகளைப் (capital buffers) பேணுவதற்காக வடிவமைக்கப்பட்ட வலுவான மற்றும் கட்டுப்பாட்டுடன் கூடிய மூலதன முகாமைத்துவச் சட்டகத்தை நிலைநிறுத்துகின்றது. வங்கி நன்கு மூலதனத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் அதேவேளையில், நிலைபெறுதன்மை கொண்ட வணிக வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், ஒழுங்குமுறை வரம்புகள் மற்றும் உள்ளக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிராக மூலதனப் போதுமாந்தன்மை கடுமையாகக் கண்காணிக்கப்படுகிறது.

உள்ளக மூலதனப் போதுமாந்தன்மையைப் மதிப்பிடும் செயன்முறை (ICAAP) என்பது வங்கியின் நிறுவனம் தழுவிய இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகத்தின் ஒரு அடித்தளமாக அமைகின்றது. இது குறைந்தபட்ச ஒழுங்குமுறை மூலதனத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட அனைத்து முக்கியமான இடர்நேர்வுகளையும் விரிவாக மதிப்பீடு செய்வதற்கு வசதியளிக்கின்றது. இந்தச் செயன்முறையின் ஒரு பகுதியாக, வங்கி ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான மூலதனக் கணிப்புகளை மேற்கொள்வதுடன், அதன் மூலோபாய வணிகத் திட்டங்கள், வளர்ச்சி இலக்குகள் மற்றும் மாறிவரும் இடர்நேர்வு சூழல் ஆகியவற்றுடன் மூலதனத் திட்டமிடலைச் சீரமைக்கின்றது. இந்த முன்னோக்கு அணுகுமுறையானது, எதிர்பார்க்கப்படும் விரிவாக்கத்தை ஆதரிப்பதற்கு மூலதனம் போதுமானதாக இருப்பதை உறுதி செய்வதுடன் முன்மதியுடைய இடர்நேர்வு காப்பீட்டைப் பேணுகின்றது. ICAAP ஊடாக, கடன், சந்தை, செயற்பாட்டு, திரவத்தன்மை மற்றும் புதிதாக எழும் இடர்நேர்வுகள் உள்ளிட்ட பரந்த அளவிலான இடர்நேர்வு வெளிப்பாடுகளை வங்கி முறையாக மதிப்பீடு செய்வதுடன், சாதாரண மற்றும் அழுத்தமான செயற்பாட்டு நிலைமைகளின் கீழ் அதற்குரிய மூலதனத் தேவைகளையும் வங்கி தீர்மானிக்கின்றது.

இந்தச் சட்டகமானது அழுத்தப் பரீட்சிப்பு, சூழ்நிலைசார் பகுப்பாய்வு மற்றும் மூலதனக் கணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய வலுவான வழிமுறைகளால் ஆதரிக்கப்படுகின்றது. இவை ஒட்டுமொத்தமாக மோசமான பொருளாதார மற்றும் நிதிச் சூழ்நிலைகளின் கீழ் வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பீடு செய்ய உதவுகின்றன. இச் சூழ்நிலைகள் பேரண்டப் பொருளாதார அதிர்ச்சிகள், வட்டி வீத ஏற்ற இறக்கங்கள், கடன் தரம் குறைதல், திரவத்தன்மை கட்டுப்பாடுகள் மற்றும் காலநிலை தொடர்பான நிகழ்வுகள் போன்ற புதிதாக எழும் இடர்நேர்வுகளையும் உள்ளடக்குகின்றன. இந்த பயிற்சிகளின் முடிவுகள் வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மை பற்றிய பெறுமதியான நோக்குகளை வழங்குவதுடன், சாத்தியமான பலவீனங்களையும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் இவை பொருத்தமான அவசரகால நடவடிக்கைகள் மற்றும் மூலதனத் தாங்கிகளை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கின்றன.

மூலோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் ICAAP முக்கிய பங்கு வகிக்கின்றது. இது இடர்நேர்வுக்கு ஈடுகொடுக்கும் எல்லையை (risk appetite) வணிக மூலோபாயத்துடன் சீரமைப்பதில் ஒரு முக்கிய உள்ளீடாகச் செயற்படுகின்றது. இது மூலோபாய முயற்சிகளின் மூலதனத் தாக்கங்களை மதிப்பீடு செய்யவும், வணிகப் பிரிவுகளில் மூலதன ஒதுக்கீட்டை மேம்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களானவை ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர்நேர்வு அளவுருக்களுக்குள் தொடரப்படுவதை உறுதி செய்யவும் வங்கிக்கு உதவுகின்றது.

வளர்ந்து வரும் ஒழுங்குமுறை எதிர்பார்ப்புகளுடனும் தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுடனும் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக, ICAAP சட்டகமானது தொடர்ச்சியான சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறது. இந்தத் தொடர்ச்சியான முன்னேற்றச் செயன்முறையானது, பெருகிய முறையில் இயங்குதன்மை கொண்ட இடர்நேர்வு சூழலில் வலுவான மூலதன நிலையைப் பேணவும், இடர்நேர்வை உள்வாங்கும் திறனை மேம்படுத்தவும் மற்றும் நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்வதற்குமான வங்கியின் திறனை வலுப்படுத்துகின்றது.

தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் மீட்புத் திட்டமிடல்

வங்கியானது தனது முக்கியமான செயற்பாடுகளின் தொடர்ச்சியைப் பேணுகின்ற அதேவேளையில், கடுமையான அழுத்தச் சூழ்நிலைகளுக்கான தயார்நிலையை உறுதி செய்வதற்காக ஒரு விரிவான மீட்புத் திட்டமிடல் சட்டகத்தை நிறுவியுள்ளது. வெளியக ஆதரவை நம்பியிருக்காமல், மோசமான நிலைமைகளுக்கு வங்கி வினைத்திறனாகப் பதிலளிப்பதன் மூலம் நிதிசார் ஸ்திரத்தன்மையைப் பேணவும் பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் இந்த மீட்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் வணிகத்தை முன்னெடுத்துச் செல்லும் திறனில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படும் பட்சத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய நம்பகமான மீட்பு விருப்பங்கள், தெளிவான ஆளுகை ஏற்பாடுகள், முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் மற்றும் துரிதப்படுத்தும் நெறிமுறைகள் ஆகியவற்றை அடையாளம் காணும் ஒரு விரிவான சட்டகத்தை இந்த மீட்புத் திட்டம் (RCP) வகுத்துள்ளது. இந்த RCP ஆனது வங்கியின் உள்ளக மூலதனப் போதுமாந்தன்மையைப் மதிப்பிடும் செயன்முறை (ICAAP), வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவக் கட்டமைப்பு (BCMS), வணிகத் தொடர்ச்சித் திட்டம்/இடர்மீட்சித் திட்டம் (BCP/DRP), இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகம், அவசரகால நிதித் திட்டம் மற்றும் நெருக்கடி முகாமைத்துவ ஏற்பாடுகளுக்கு ஒரு துணை அங்கமாக அமையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வங்கி சார்ந்த, சந்தை தழுவிய மற்றும் ஒருங்கிணைந்த அழுத்த நிகழ்வுகள் உட்பட பலவிதமான கடுமையான ஆனால் சாத்தியமான அழுத்தச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச் சூழ்நிலைகள் மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள், நிதிச் சந்தை சீர்குலைவுகள் மற்றும் நிறுவனம் சார்ந்த அதிர்ச்சிகளின் கீழ் வங்கியின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மதிப்பீடு செய்கின்றன. அளவுகோல் மற்றும் பண்புசார் மீட்புக் குறிகாட்டிகள் தெளிவான வரம்புகளுடன் வரையறுக்கப்பட்டுள்ளன. இது வங்கி தனது குறைந்தபட்ச ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளை மீறுவதற்கு முன்னரே, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் நிருவாக மட்டத்திலான குழுக்களின் தலையீட்டுடன் சரியான நேரத்தில் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.

மூலதனம், திரவத்தன்மை, ஐந்தொகை மற்றும் செயற்பாட்டு பரிமாணங்களில் மீட்பு நடவடிக்கைகளின் சாத்தியக்கூறுகளை RCP அடையாளம் காண்பதுடன், அழுத்தமான நிலைமைகளின் கீழ் அவற்றின் வாழ்வுத்தன்மை, வினைத்திறன் மற்றும் செயற்பாட்டு வேகம் ஆகியவற்றையும் மதிப்பீடு செய்கிறது. முக்கிய மீட்பு நடவடிக்கைகளில் வங்கியின் முக்கிய செயற்பாடுகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட மூலோபாய நடவடிக்கைகளாக மூலதனத்தை வலுப்படுத்தும் செயல்கள், திரவத்தன்மை மேம்பாட்டு உத்திகள், ஐந்தொகை மேம்படுத்தல், செலவு சீரமைப்பு முயற்சிகள் மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் சேவை மற்றும் முகவராண்மை மதிப்பு என்பன உள்ளடங்குகின்றன.

சவால்கள்

பேரண்டப் பொருளாதாரம் மற்றும் மரபுசார் கட்டமைப்பு அழுத்தங்கள்

சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான நிதி மற்றும் நாணய நெருக்கடியைத் தொடர்ந்து, இலங்கைப் பொருளாதாரம் தொடர்ந்தும் மீட்சிப் பாதையில் இருந்து வந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆதரவுடனான திட்டத்தின்கீழ் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்ந்ததோடு, பணவீக்கத்தை ஸ்திரப்படுத்துதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும், பரந்த நிதிச் சூழல் தொடர்ச்சியான சவால்களை ஏற்படுத்தியது. தொடர்ச்சியான நிதி மற்றும் கட்டமைப்பு அழுத்தங்களுக்கு மத்தியில், வங்கிகள் ஒரு சிக்கலான பொருளாதார நிலைமையைக் கையாண்டதுடன், தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் முன்மதியுடைய சொத்துப்பட்டியல் மேற்பார்வை ஆகியவற்றில் தமது கவனத்தைச் செலுத்தின.

அதிகரித்த கடன் இடர்நேர்வு மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் (SOE) வெளிப்பாடுகள்

இவ்வாண்டின் போது வங்கி எதிர்நோக்கிய ஒரு தீர்மானமிக்க சவாலானது, அரச நிறுவனங்களுடனான (SOEs) மரபுரிமைச் செல்வம் குறித்த வெளிப்பாடுகளாகும். இவற்றுள் பல நிறுவனங்கள் பலவீனமான செயற்பாட்டு நடவடிக்கை காரணமாகப் பாரிய கடன் இடர்நேர்வைக் கொண்டிருந்தன. இவ்வாண்டின் போது இத்தகைய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுடனான வெளிப்பாடுகளை மூலோபாய ரீதியாகக் குறைக்கும் பொருட்டு, மக்கள் வங்கியானது நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் கவனமான தீர்ப்பனவுகளை மேற்கொண்டதுடன், மூலதனம் மற்றும் வருவாய் நிலைகளில் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக கட்டுக்கோப்புடன் கூடிய இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தது.

சொத்துப்பட்டியலின் தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தும் முன்மதியுடைய கடன் வழங்கும் மூலோபாயம்

மேலதிக திரவத்தன்மையை வினைத்திறனாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன், உயர்தரக் கடன் வழங்கும் வாய்ப்புகளை நோக்கி நிதியை வழிப்படுத்துவதில் வங்கி கவனம் செலுத்தியுள்ளது. அரச நிறுவனங்களுடனான (SOEs) மரபுரிமைச் செல்வம் பற்றிய வெளிப்பாடுகளிலிருந்து தனியார் துறை வாடிக்கையாளர்களின் பரந்த தளத்தை நோக்கி கவனமாக நகர்வது இந்த மூலோபாயத்தின் ஒரு முக்கிய பகுதியாக அமைந்திருந்தது. இந்த மாற்றமானது கடுமையான கடன் மதிப்பீடுகள் மற்றும் முன்மதியுடைய சொத்துப்பட்டியல் மேற்பார்வை ஆகியவற்றின் மூலம் வழிநடத்தப்பட்டதுடன், கடன் வழங்கும் நடவடிக்கைகள் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகத்துடன் சீரமைக்கப்படுவதை உறுதி செய்தது. இடர்நேர்வுகள் ஒன்றுதிரள்வதைக் குறைப்பதற்கும், சொத்துப்பட்டியலின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கும் பல்வேறு துறைசார் பன்முகப்படுத்தல் மற்றும் புவியியல் ரீதியான பன்முகப்படுத்தல் ஆகியன வலியுறுத்தப்பட்டது. அரச நிறுவனங்களுடனான மரபுரிமைச் செல்வ உறவுகள், இலக்கு வைக்கப்பட்ட தீர்ப்பனவுகள் மூலம் கவனமாக முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், இது கடந்தகால வெளிப்பாடுகளை ஒழுங்குமுறைப்படி குறைப்பதற்குத் துணைபுரிந்த அதேவேளையில், கடன் தரத்தைப் பாதுகாப்பதற்காக முறையான உரிய விழிப்புக்கவனத்துடன் புதிய தனியார் துறை ஈடுபாடுகளும் உருவாக்கப்பட்டன. இந்த மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல், கண்காணிப்பு மற்றும் மீளாய்வுச் செயன்முறைகள் உள்ளிட்ட செயற்பாட்டு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகங்கள் பலப்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் ஊடாக, வங்கியானது அதன் ஒட்டுமொத்த கடன் ஏட்டின் ஒருமைப்பாடு, ஸ்திரத்தன்மை மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மையைப் பேணுகின்ற அதேவேளையில், தனது தனியார் துறை கடன் வழங்கும் சொத்துப்பட்டியலையும் வெற்றிகரமாக விரிவுபடுத்தியது.

செயற்பாட்டு ரீதியான சவால்கள் மற்றும் டிஜிட்டல் உருமாற்றச் சவால்கள்

வங்கியின் டிஜிட்டல் உருமாற்றத்தை நோக்கிய உந்துதல் மற்றும் நிதிசார் உள்வாங்குகை விரிவாக்கம் ஆகியவை ஒரு முக்கிய மூலோபாய பலமாக இருந்தபோதிலும், அவை தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம், தரவு ஆளுகை மற்றும் இணையப் பாதுகாப்புத் தாக்குப்பிடிக்கும் தன்மை (cybersecurity resilience) ஆகியவற்றில் அதிகப்படியான தேவைகளை அறிமுகப்படுத்தின. டிஜிட்டல் உள்வாங்குகை மற்றும் கைபேசி வங்கிச் செயலி ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியால் வெளிக்கொணரப்பட்ட டிஜிட்டல் உள்வாங்குகை விரிவாக்கம் காரணமாக வங்கிக்கு தனது பொறித்தொகுதிகள் முழுவதும் வலுவான செயற்பாட்டு ரீதியான கட்டுப்பாடுகளையும் தொழில்நுட்ப ரீதியான கட்டுப்பாடுகளையும் உட்சேர்க்க வேண்டிய தேவையை ஏற்படுத்தின. இந்த முயற்சிக்குத் திறமையான மனிதவளம், தாக்குப்பிடிக்கும் தன்மையுள்ள உட்கட்டமைப்பு மற்றும் விரிவான கட்டுப்பாட்டுச் சட்டகங்கள் ஆகியவற்றில் தொடர்ச்சியாக முதலீடு செய்வது அவசியமாகின்றது. இந்தத் திறன்களை வலுப்படுத்தியதன் மூலம், வங்கியினால் தனது செயற்பாடுகளின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையைப் பேண முடிந்த அதேவேளையில், வாடிக்கையாளர்களுக்குத் தடையற்ற டிஜிட்டல் அனுபவத்தை வழங்கவும் முடியுமாக இருந்தது.

காலநிலை இடர்நேர்வுத் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்தல்

காலநிலை தொடர்பான இடர்நேர்வுகள் 2025 ஆம் ஆண்டில் ஒரு சவாலான கவனத்திற்குரிய துறையாக நீடித்தன. குறிப்பாக அதிகரித்த வானிலை மாறுபாடுகள் மற்றும் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட மோசமான வானிலை நிலைமைகள் போன்ற உள்நாட்டு ரீதியான தீவிர நிகழ்வுகளின் பின்னணியில் இது முக்கியத்துவம் பெற்றது. இந்த நிலைப்பாடுகள், வங்கியின் சொத்துப்பட்டியலுக்குள் உள்ள சில துறைகளிலும் வாடிக்கையாளர் பிரிவுகளிலும் பௌதீக ரீதியான காலநிலை இடர்நேர்வுகள் ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கத்தை எடுத்துக் காட்டின. அதேநேரம், நிலைபெறுதகு நிதியிடல் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புக்கூறல் குறித்த வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகள், வங்கியின் பரந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் காலநிலை இடர்நேர்வு ஒருங்கிணைப்பைத் தொடர்ச்சியாக வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்தின.

இதற்கு அமைவாக, கடன் மதிப்பீடுகள் மற்றும் துறைசார் இடர்நேர்வு மீளாய்வுகளில் சுற்றுச்சூழல் காரணிகளை உள்வாங்குவதன் மூலம், தனது காலநிலை இடர்நேர்வு மதிப்பீட்டுச் செயன்முறைகளை வங்கி மேலும் வலுப்படுத்தியது. பாதிப்புக்குள்ளாகக்கூடிய தொழில்துறைகளைக் கண்காணிக்க மேம்படுத்தப்பட்ட வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டதுடன், சாத்தியமான இடையூறுகளைச் சிறப்பாக எதிர்வுகூறுவதற்காக சொத்துப்பட்டியல் மேற்பார்வையில் அழுத்தக் காரணிகளும் உட்சேர்க்கப்பட்டன. மேலும், வங்கி பொறுப்புணர்வுடன் கூடிய கடன் வழங்கும் நடைமுறைகளை ஊக்குவித்ததுடன், சாத்தியமான இடங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைபெறுதகு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் வணிக வளர்ச்சியை நீண்டகாலத் தாக்குப்பிடிக்கும் தன்மை இலக்குகளுடன் சீரமைத்தது.

தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

தீவிரம் அடைந்துவரும் இணையவழி அச்சுறுத்தல்கள், விரைவான டிஜிட்டல் உருமாற்ற முயற்சிகள், வெளிவாரி சேவை வழங்குநர்களில் அதிகரித்த அளவில் தங்கியிருக்கும் நிலை மற்றும் தீவிரமடைந்து வரும் ஒழுங்குமுறை ஆய்வுகள் என்பன இவ்வாண்டின் போது வங்கியின் செயற்பாட்டுச் சூழலில் அதிகப்படியான இடர்நேர்வு கொண்ட தொழில்நுட்ப ரீதியான நிலைப்பாட்டினை உருவாக்கின. டிஜிட்டல் வழித்தடங்களின் விரிவாக்கம், பொறித்தொகுதிகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தரவு அடிப்படையிலான செயற்பாடுகள் காரணமாக இணையவழிப் பாதுகாப்பு, கட்டமைப்பின் தாக்குப்பிடிக்கும் தன்மை, தரவு ஒருமைப்பாடு மற்றும் வெளிவாரி தொழில்நுட்ப இடர்நேர்வு வெளிப்பாடுகள் அதிகரித்திருந்தன. இந்த மாற்றங்கள், தொழில்நுட்ப ரீதியான இடர்நேர்வு மேற்பார்வையில் மிகவும் கட்டமைக்கப்பட்ட மற்றும் தூரநோக்குமிகு அணுகுமுறை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தின.

இதற்கு அமைவாக, புதிதாக எழும் பலவீனங்களைச் சரியான நேரத்தில் அடையாளம் காணவும், மதிப்பீடு செய்து அவற்றைக் குறைக்கவும் வங்கியானது தனது தொழில்நுட்ப ரீதியான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை விரிவாக மேம்படுத்தியது. இதில், இடர்நேர்வுகளை மேம்படுத்தப்பட்ட முறையில் அடையாளப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியமை, காலமுறை தொழில்நுட்ப இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடுகள் (RCSAs), வலுப்படுத்தப்பட்ட பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் பரிசோதனை முறைகள், மற்றும் முக்கியமான உட்கட்டமைப்புகளின் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு ஆகியன முக்கிய முயற்சிகளாகும்.

இத்தகைய முறையான தலையீடுகள் மூலம், இவ்வாண்டின் போது எதிர்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த சவால்களை வங்கி வினைத்திறனாகக் கையாண்டதுடன், தனது கட்டுப்பாட்டுச் சூழலை வலுப்படுத்தி, செயற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தியது. இந்த நவீனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பானது, ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான இடர்நேர்வுக்கு ஈடுகொடுக்கும் எல்லைக்குள் நின்று வங்கியின் பரந்துபட்ட டிஜிட்டல் உருமாற்றச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளையில், உருவாகி வரும் தொழில்நுட்ப இடர்நேர்வுகளை முன்கூட்டியே கையாளும் வகையிலும் வங்கியைத் தயார்படுத்தியுள்ளது.

வெளியக நிச்சயமற்ற தன்மைகளும் சந்தை நிச்சயமற்ற தன்மைகளும்

உலகளாவிய பொருளாதாரத் தளம்பல்கள் 2025 ஆம் ஆண்டில் நிதி நிறுவனங்களுக்கு ஒரு சவாலான பின்னணியை உருவாக்கின. இவ்வாறான சூழலிலும், உள்நாட்டு நிதி நிலைமைகள் ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகளைக் காட்டின. இது வங்கி தனது செயற்பாடுகளை முன்மதியுடன் முன்னெடுப்பதற்கு வழிவகுத்தது. தொடர்ச்சியான வெளிவாரியான நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, திரவத்தன்மை மற்றும் வட்டி வீத வெளிப்பாடுகளைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டியிருந்தது. இதனால், ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக வங்கி தனது இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்தியது. இந்த நடவடிக்கைகளின் மூலம், செயற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையைப் பாதுகாக்கவும், வாடிக்கையாளர்களுக்கான சேவைகளின் தொடர்ச்சியை உறுதி செய்யவும் முடிந்ததுடன், பங்குதாரர்களிடையே நம்பிக்கையைத் தக்கவைக்கவும் முடிந்தது.

இச்சவால்களுக்கு மத்தியிலும், மக்கள் வங்கியானது தனது தாக்குப்பிடிக்கும் தன்மையையும் தகவமைத்துக் கொள்ளும் திறனையும் வெளிப்படுத்தியது. வங்கி சாதனை மிகு இலாபங்களை ஈட்டியதுடன், தனது சொத்துத் தளம் மற்றும் வைப்புச் சந்தை ஆகியவற்றையும் விரிவுபடுத்தியது. அத்துடன், அதிக இடர்நேர்வு கொண்ட வெளிப்பாடுகள் ஒன்றுதிரள்வதைக் குறைத்து, மூலதனப் போதுமான தன்மை விகிதங்களை வலுப்படுத்தியது. பேரண்டப் பொருளாதாரம் சார்ந்த சிக்கல்கள் 2025 முழுவதும் நீடித்த போதிலும், இந்த முடிவுகள் வங்கியின் மூலோபாய வளர்ச்சித் தேவைகளுக்கும் கட்டுப்பாட்டுடன் கூடிய இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் இடையிலான ஒரு சரியான சமநிலையை எடுத்துக்காட்டின.

பெருநிறுவன ஆளுகை

சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அரச உடைமை வங்கியான மக்கள் வங்கி, தனியார் வங்கிகளை விட இயல்பாகவே மிகவும் சிக்கலான ஒரு வரம்புறுகை ஆளுகைக்குள் செயலாற்றுகின்றது. வங்கியியல் துறைக்குப் பொருந்தக்கூடிய கடுமையான முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதோடு, வங்கியின் ஆளுகை முறைமையானது 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களினதும் ஏற்பாடுகளினால் வழிநடத்தப்படுகின்றன.

மக்கள் வங்கி ஒரு பட்டியற்படுத்தப்படாத நிறுவனமாக இருந்தாலும், வங்கி மனமுவந்து இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்படும் பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக்கு கோவையினைக் கடைப்பிடிக்கின்றது. இதன் மூலம் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுக்க நெறிசார் நடத்தை ஆகியவற்றில் உயர் நியமனங்களை பேணுவதில் அதன் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகிறது.

பணிப்பாளர் சபையானது வங்கியின் உயர்ந்த ஆளுகை அங்கமாக சேவை செய்கின்றதோடு, அங்கீகரிக்கப்பட்ட சபை சாசனத்திற்கும் பணிப்பாளர்களுக்கான நடத்தைக் கோவைக்கு அமைவாக செயற்படுகின்றது. இவ்வரம்புறுகைகள் உயர்ந்த மட்டத்திலான மேற்பார்வையில் எதிர்பார்க்கப்படும் பங்குகள், பொறுப்புக்கள் மற்றும் நடத்தை நியமங்களை வரையறுக்கின்றன. அதேசமயம், நிறுவனத்தின் அனைத்து மட்டங்களிலும் நேர்மை மற்றும் தொழில்சார் பண்பு ஆகியவற்றை உட்புகுத்தி உறுதிப்படுத்துவதற்காக, வங்கி ஊழியர் நெறிமுறைக் கோவையினை வலியுறுத்துகின்றது.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலில் பொது மக்களின் அக்கறையை மேன்மேலும் வலுப்படுத்தும் முகமாக, வங்கியானது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) அறிக்கையிடல் வரம்புறுகையை பின்பற்றியுள்ளது. இவற்றில், அதன் ஆண்டறிக்கையை தயாரிக்கப்பட்டு, முன்னிலைப்படுத்துவதற்கு வழிகாட்டும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்புறுகை (2021) மற்றும் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (GRI) நியமங்கள் (2021) ஆகியவை அடங்கும்.

இணக்கப்பாடு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் மற்றும் நிதியியில் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று என்பவற்றில் உறுதிமொழியினை வழங்குவதுடன் இவை முறையே பக்கங்கள் 313 முதல் 315 வரையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகையில் வழங்கப்பட்ட 2024 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையுடன் இணக்கப்பாடு கண்டுள்ள மட்டத்தினையும சான்றளிக்கின்றார்.

2025 இற்கான முக்கிய முன்னிறுத்தம்

1. வங்கியின் மூலோபாய திட்டத்திற்கு இணையாக உள்ள இணக்கப்பாட்டையும் ஆளுகையையும் பலப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல், பேரண்ட பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல், இடர் நேர்வு முகாமைத்துவத்தினை அதிகரித்தல் மற்றும் நிலைபேறுடைமையினை பதித்தல்.
2. மனித வளம் மற்றும் செயன்முறை உருவாக்கம் மூலம் விசேடத்துவம்மிக்க பணியை வழங்கல்.
3. செயன்முறை முன்னேற்றங்கள் மற்றும் கிரயத் தலைமைத்துவத்திற்கான கட்டமைப்பு சார்ந்த உருமாற்றம்.
4. சேவை கலாசார நகர்வின் மூலம் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்.
5. சுகாதார தேக்கங்களிற்கு கொடுக்கடன் முகாமைத்துவத்தை பலப்படுத்தல்.
6. அரசாங்க கொள்கைகளுடன் ஒருங்கிணைந்து தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு துணைபுரிதல்.
7. நிலைத்து நிற்கும் வணிக வளர்ச்சிக்கான டிஜிட்டல் ஆற்றலை மேம்படுத்தல்.
8. இளம் மற்றும் உயர் சாத்தியமான வாடிக்கையாளர் பிரிவுகளை மூலோபாய முறையில் மேம்படுத்தல்.
9. வங்கியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தெளிவான உபாய நோக்கத்தை ஏற்படுத்தல்.

ஆளுகை கட்டமைப்பு

வெளிவாரி ஆளுகைக்கான தேவைப்பாடுகள்

- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டவாறு)
- இ. ம. வ. பணிப்புரைகள்
- 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க அந்நியசெலாவணி கட்டுப்பாட்டு சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பண தூய்மையாக்கல் தடுப்புச் சட்டம்
- உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான பெருநிறுவக ஆளுகையில் 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரை
- டிசம்பர் 2023 இல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட பெருநிறுவன ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவை
- உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பின் உலகளாவிய அறிக்கையிடல் நியமங்கள்
- ஐக்கிய நாடுகளின் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள்
- சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (IFRS) அறநிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல்

உள்வாரி ஆளுகைக்கான் தேவைப்பாடுகள்

- 1961 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டவாறு)
- சபையின் சாசனம்
- உப-குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் குறிப்பு விதிமுறைகள்
- பணிப்பாளர்களுக்கான வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள்
- விரிவான கொள்கைகளும் செயன்முறைகளும்
- ஊழியர்களுக்கான நெறிமுறைக்கோவை
- வாடிக்கையாளர் சாசனம்
- உள்ளகக் கணக்காய்வு
- உள்ளகக் கட்டுப்பாடுகள்
- உள்வாரி மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP)

முக்கிய ஆளுகைக் கொள்கைகள்

பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை | நியாயத்தன்மை | பொறுப்பு

எமது பெருநிறுவன விழுமியங்கள்



பெறுமதி உருவாக்கம்

பங்குதாரர் மதிப்பு உருவாக்கம் | தந்திரோபாய விளைவுகள்

சபையின் தொகுப்பு

GRI 2-9, 405-1

பாலின பன்முகத்தன்மை

காலப்பகுதி-1 ஜனவரி 2025 முதல் 16 செப்டெம்பர் 2025 வரை (16 செப்டெம்பர் 2025 படி)



ஆண் | பெண்

பாலின பன்முகத்தன்மை

காலப்பகுதி-17 செப்டெம்பர் 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை (31 டிசம்பர் 2025 படி)



ஆண் | பெண்

சபை சமநிலை

காலப்பகுதி-1 ஜனவரி 2025 முதல் 16 செப்டெம்பர் 2025 வரை (16 செப்டெம்பர் 2025 படி)



நிறைவேற்றுநரல்லா | சுயாதீனமல்லாத | சுயாதீனம் | நிர்வாகம்

சபை சமநிலை

காலப்பகுதி-17 செப்டெம்பர் 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை (31 டிசம்பர் 2025 படி)



நிறைவேற்றுநரல்லா | சுயாதீனமல்லாத | சுயாதீனம் | நிர்வாகம்

வயதுப் பன்முகத்தன்மை

காலப்பகுதி-1 ஜனவரி 2025 முதல் 16 செப்டெம்பர் 2025 வரை (16 செப்டெம்பர் 2025 படி)



50 வயதிற்கு மேல் | 30-50 வருடங்கள் | 30 வயதிற்கு கீழ்

வயதுப் பன்முகத்தன்மை

காலப்பகுதி-17 செப்டெம்பர் 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை (31 டிசம்பர் 2025 படி)



50 வயதிற்கு மேல் | 30-50 வருடங்கள் | 30 வயதிற்கு கீழ்

கூட்டுத் திறன்கள்

GRI 2-17

காலப்பகுதி-1 ஜனவரி 2025 முதல் 16 செப்டெம்பர் 2025 வரை (16 செப்டெம்பர் 2025 படி)

தொழில்துறை/பின்னணி அனுபவம்	விசேடத்துவமுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை
வங்கித்தொழில் மற்றும் நிதியியல்/நிதியியல் முகாமைத்துவம்	2
நிதியியல் கணக்கீடும்/வணிக நிர்வாகம்/ முகாமைத்துவம்	4
ACA/FCMA/CGMA/CIMA	2
மனித வளம் மற்றும் முகாமைத்துவம்	2
LLB/LLM/ Attorney- at- Law	2
பொருளியல்/அபிவிருத்தி கற்கைகள் /நிர்வாகம் /சர்வதேச அலுவல்கள் /மானுடவியல்	3
தகவல் தொழிநுட்பம்/பொறியியல்	2

காலப்பகுதி-17 செப்டெம்பர் 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை (31 டிசம்பர் 2025 படி)

தொழில்துறை/பின்னணி அனுபவம்	விசேடத்துவமுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை
வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முகாமைத்துவம்	3
நிதியியல் கணக்கீடு/வணிக நிர்வாகம்/ முகாமைத்துவம்	7
ACA/FCMA/CGMA/CIMA	4
மனித வளம் மற்றும் முகாமைத்துவம்	2
LLB/LLM/ Attorney- at- Law	3
பொருளியல்/அபிவிருத்தி கற்கைகள்/நிர்வாகம்/ சர்வதேச அலுவல்கள்	3
தகவல் தொழிநுட்பம்	2
காப்புறுதி	1

ஆளுகைக் கட்டமைப்பும் தொகுப்பும்

GRI 2-9

வங்கியின் பெருநிறுவன ஆளுகை வரம்புறுகைகள் இரண்டு பிரதான அடுக்குகளைக் கொண்டதாகும்: சபை, இது தந்திரோபாய திசை, நிதியியல் குறிக்கோள்கள், வளங்கள் விநியோகம் மற்றும் இடர்நேர்வு சகிப்புத்தன்மை ஆகியவற்றில் கூட்டாண்மை முகாமைத்துவத்துடன் ஒன்றிணைந்து மேற்பார்வையினை வழங்குகின்றது. அதேவேளை முகாமைத்துவமானது வங்கியின் அனைத்து பங்காளர்களுக்கும் பரஸ்பர நன்மைகள் உருவாக்கும் சபையின் கொள்கைகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாய் உள்ளது.

மக்கள் வங்கியின் பெருநிறுவன ஆளுகை வரம்புறுகை



சபை மற்றும் அதன் குழுக்களின் தொகுப்பு

பக்கங்கள் 38 முதல் 43 வரை காணப்படும் பணிப்பாளர்கள் சபையின் சுயவிபரங்கள் மற்றும் பணிப்பாளர்கள் வகிக்கும் ஏனைய முக்கிய பதவிகள், அவர்களது காலங்கள் மற்றும் பணிப்பாளர்களது திறன்கள் போன்ற மேலதிக விபரங்களை பார்வையிடவும்.

காலப்பகுதி-1 ஜனவரி 2025 முதல் 16 செப்டெம்பர் 2025 வரை (16 செப்டெம்பர் 2025 படி)

	நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள்	சுயாதீன பணிப்பாளர்கள்	பாலினம்	குறைவாக பிரநிதிநிதித்துவம் பெற்ற சமூகக் குழுக்கள்	பங்குதாரர்களின் பிரநிதிநிதித்துவம்
பணிப்பாளர்கள் சபை	5	1	5 ஆண்கள் 0 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 4 அங்கத்தவர்கள் சிறப்புத் தேர்வு குழுவினால் நியமிக்கப்பட்ட 1 அங்கத்தவர்.
சபை மனிதவளங்கள் மற்றும் வேதனக்குழு	01 ஜனவரி 2025 - 07 ஜூலை 2025				
	3	0	3 ஆண்கள் 2 பெண்கள்		
	08 ஜூலை 2025 - 16 செப்டெம்பர் 2025				
	2	0	2 ஆண்கள் 0 பெண்		
சபை நிறைவேற்று கடன் குழு	01 ஜனவரி 2025 - 07 ஜூலை 2025				
	3	0	3 ஆண்கள் 0 பெண்		
	08 ஜூலை 2025 - 16 செப்டெம்பர் 2025				
	2	0	2 ஆண்கள் 0 பெண்		
சபை மூலோபாயத் திட்ட மீளாய்வுக் குழு	2	0	2 ஆண்கள்		

காலப்பகுதி-17 செப்டெம்பர் 2025 முதல் 31 டிசம்பர் 2025 வரை (31 டிசம்பர் 2025 படி)

	நிறைவேற்று அதிகாரம் கொண்ட/நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்கள்	சுயாதீன பணிப்பாளர்கள்	பாலினம்		ஆர்வலர்களின் பிரநிதிநிதித்துவம்
பணிப்பாளர்கள் சபை	10	07	08 ஆண்கள் 02 பெண்	அரச மற்றும் தனியார் துறையின் தொழில்வல்லுநர்கள்	நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 3 அங்கத்தவர்கள் சிறப்புத் தேர்வு குழுவினால் நியமிக்கப்பட்ட 7 அங்கத்தவர்கள்.
சபைப் பெயரிடல் குழு	03	01	03 ஆண்கள்		
சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு	03	02	03 ஆண்கள்		
சபை முதலீட்டு வங்கியியல் குழு	03	03	02 ஆண்கள் 01 பெண்		
சபை நிறைவேற்று கடன் குழு	17.09.2025 இருந்து 13.11.2025				
	02	00	02 ஆண்கள் 00 பெண்		
	14.11.2025 இருந்து 31.12.2025				
	03	02	02 ஆண்கள் 01 பெண்		
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு	03	02	03 ஆண்கள்		
சபை கணக்காய்வுக் குழு	03	03	02 ஆண்கள் 01 பெண்		
சபை மூலோபாயத் திட்ட மீளாய்வுக் குழு	03	02	03 ஆண்கள்		

2025 டிசம்பர் 31ன் படி சபை மற்றும் சபை உப குழுக்களின் தொகுப்பு

பணிப்பாளரின் பெயர்	பதவி	நியமன திகதி	வயது (வருடங்கள்)	பாலினம் (ஆண்/ பெண்)	அங்கத்துவ நிலை	சபை உபகுழு அங்கத்துவம்								
						BAC	BHRCC	BIRMC	BECC	BNGC	BIBC	BITC	BSPRC	RPTRC
பேரா. பி என் டி பெர்னாண்டோ	தலைவர்	13.11.2024	56	ஆண்	சுயாதீனமல்லாத							M	C	
திரு எம் ஜே திலகரத்ன	பணிப்பாளர்	18.11.2024	59	ஆண்	சுயாதீனமல்லாத		C	M	M	M				
திரு ஆர் பி ஆர் எமர்சன்	பணிப்பாளர்	27.11.2024	69	ஆண்	சுயாதீனமல்லாத		M		C				M	
கலாநிதி எ எ கதிர்காமர்	பணிப்பாளர்	28.11.2024	54	ஆண்	சுயாதீனமல்லாத		M		M					
திரு கே எ விமலேந்திரராஜா	பணிப்பாளர்	27.02.2025	58	ஆண்	சுயாதீனமல்லாத			M		M				
திரு சி எஸ் குனியங்கொட	பணிப்பாளர்	21.08.2025	51	ஆண்	சுயாதீனம்			C			C	M	M	M
திருமதி ஜி எ எம் எட்வர்ட்ஸ்	பணிப்பாளர்	17.09.2025	59	பெண்	சுயாதீனம்	M			C		M			C
திரு எஸ் எம் எஸ் சஞ்சய பண்டார	பணிப்பாளர்	17.09.2025	51	ஆண்	சுயாதீனம்	C					M			
திரு டி பி லொக்குஆராச்சி	பணிப்பாளர்	08.10.2025	60	ஆண்	சுயாதீனம்		M	M		C				
திரு என் எஸ் பி வல்கம்பாய	பணிப்பாளர்	15.10.2025	46	ஆண்	சுயாதீனம்	M						C		
திரு எம் எச் எஸ் கவுஸ்	பணிப்பாளர்	31.10.2025	63	ஆண்	சுயாதீனம்		M		M				M	M
திருமதி சி எச் டி அபயகுணவர்த்தன	பணிப்பாளர்	18.11.2025	52	பெண்	சுயாதீனம்									

C – தலைவர் M – அங்கத்தவர்

பெருநிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறைக் கோவையுடனான இணக்கப்பாடு

சபை (கொள்கை A.1)

மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். 08.04.2024 மற்றும் 19.05.2025 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, சிறப்புத் தேர்வுக்குழுவின் பரிந்துரைக்கு இணங்க சுயாதீனமான பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். சபையானது தலைவர் மற்றும் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அனைத்து பணிப்பாளர்களும் அரச மற்றும் தனியார் துறையின் பிரபலமான தொழில்வல்லுனர்கள் ஆவார்கள். சபைத் தலைவரான பேரா. பி.என். டி. பெர்னாண்டோ நிதியியல், வங்கித்தொழில் மற்றும் உயர்கல்வி ஆகிய துறைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் அனுபவமுள்ள ஒரு அனுபவமிக்க கல்வியாளர் மற்றும் நிதியியல் நிபுணர் ஆவார்.

வழமையான சபைக் கூட்டங்களை நடாத்துதல்

(கொள்கை A.1.1)

சபையானது ஆகக் குறைந்தது மாதத்திற்கொருமுறை கூடுகின்றது மற்றும் அவசியத்தின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. சபையானது 2025 இன் போது 21 தடவைகள் கூடியுள்ளதுடன் அனைத்து சபைக் கூட்டங்கள் உயர்ந்த சமூகமளிப்பு, செயலூக்கமான பங்குபற்றல் மற்றும் ஆக்கபூர்வமான மற்றும் திறந்த கலந்துரையாடல்களினால் வருணிக்கப்படுகின்றது.

பணிப்பாளர்கள் அனைத்து சபைக் கூட்டங்களிலும் அவர்கள் அங்கத்தவர்களாய் உள்ள குழுக்களது கூட்டங்களிலும் சமூகமளிக்க வேண்டியுள்ளது.

சபைக் கூட்டங்களில் சமூகமளிக்கவியலாத நிகழ்வுகள் பொதுவாக முன் தனிப்பட்ட கடப்பாடுகள் அல்லது சுகயீனம் காரணமாக ஏற்பட்டன.

மேலாக, சபை அங்கத்தவர்கள் அல்லாத சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை அங்கத்தவர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ள குறிப்பிட்ட விடயங்களை விளித்துரைப்பதற்காக வரவேற்பின் பேரில் கூட்டங்களில் பங்கேற்கலாம். வங்கியின் மூலோபாயம் தொடர்பான விடயங்களில் ஒரு வழமையான அடிப்படையில் சபை மற்றும் உப குழுக்களுக்கு முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு பெறுநிறுவன முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் மற்றும்/அல்லது வெளிவாரி நிபுணர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

2025இல் சபைக் கூட்டங்கள் மற்றும் உரிய குழு கூட்டங்களில் ஒவ்வொரு பணிப்பாளரதும் வருகையானது கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

பணிப்பாளரின் பெயர்	நிலை	சபைக் கூட்டம்	BAC	BHRRC	BIRMC	BECC	BNGC	BIBC	BITC	BSPRC	RPTRC
பேரா பி என் டி பெர்னாண்டோ	சுயாதீனமல்லாத	21/21	–	–	–	–	–	–	–	4/4	–
திரு எம் ஜே திலகரத்ன	சுயாதீனமல்லாத	21/21	–	4/4	2/2	22/23	2/2	–	–		–
திரு ஆர் பி ஆர் எமர்சன்	சுயாதீனமல்லாத	16/16	–	3/3	–	19/19	–	–	–	2/2	–
கலாநிதி எ எ கதிர்காமர்	சுயாதீனமல்லாத	11/11	–	2/2	–	12/13	–	–	–	–	–
திரு கே எ விமலேந்திரராஜா	சுயாதீனமல்லாத	18/21	–	–	3/3	–	2/2	–	–	–	–
திரு சி எஸ் குனியங்கொட	சுயாதீனம்	10/10	–	–	3/3	–	–	1/1	–	2/2	1/1
திருமதி ஜி எ எம் எட்வர்ட்ஸ்	சுயாதீனம்	6/6	4/4	–	–	4/4	–	1/1	–	–	1/1
திரு எஸ் எம் எஸ் சஞ்சய பண்டார	சுயாதீனம்	6/6	4/4	–	–	–	–	1/1	–	–	–
திரு டி பி லொக்குஆராச்சி	சுயாதீனம்	5/6	–	1/1	1/1	–	2/2			–	–
திரு என் எஸ் பி வல்கம்பய	சுயாதீனம்	6/6	4/4	–	–	–	–	–	–	–	–
திரு எம் எச் எஸ் கவுஸ்	சுயாதீனம்	5/5	–	1/1	–	4/4	–	–	–	2/2	1/1
திருமதி சி எச் டி அபயகுணவர்த்தன	சுயாதீனம்	4/4	–	–	–	–	–	–	–	–	–

ESG மேற்பார்வை

GRI 2-12

வங்கியின் நீடித்து நிலைத்திருக்கும் உபாயத்தை மேற்பார்வை செய்வது சபையின் பொறுப்பு ஆகும் இதில் சூழல், சமூக மற்றும் ஆளுகை சார் இடர்நேர்வு முகாமைத்த்துவம் மற்றும் மூலோபாய வரம்புறுகையில் ESG மறுபயன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

சைபர் பாதுகாப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகள், தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு மீறல் அறிக்கை

நிதியியல் தோற்றப்பாடானது அதிகளவு டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதால், மக்கள் வங்கியானது சைபர் இடர்நேர்வினை பிரதானமான இடர்நேர்வாக அடையாளங்கண்டுள்ளது. எதிர்வினை பாதுகாப்பில் இருந்து சைபர் தாக்குப்பிடித்தலிற்கு எமது யுக்தி மாற்றப்பட்டுள்ளது.அதேவேளை, தடையற்ற வாடிக்கையாளர் சேவையை தொடர்ந்து வழங்கும் அதேவேளையில், அதிநவீன சைபர் எதிரிகளை முன்கூட்டியே கண்காணித்து, தாங்கி நின்று, மீண்டு வர வங்கிக்கு திறன் இருப்பதை உறுதி செய்கின்றது.

மக்கள் வங்கியானது, இ. ம. வ. யின் முறைப்படுத்தல் தேவைப்பாடுகளிற்கு இணங்குவதை உறுதிசெய்யும் அதேவேளையில், சைபர் இடர்நேர்வுகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கும், முன்னெடுப்பதற்கும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் செயன்முறைகளால் துணையளிக்கப்படுகின்ற ஒரு விரிவான சைபர் பாதுகாப்பு வரம்புறுகையை பராமரிக்கின்றது.

தெளிவாக விளக்கப்பட்ட பங்குகள் மற்றும் பொறுப்புக்கள், கட்டமைக்கப்பட்ட இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் பரிகார முறைமை மற்றும் பௌதீக, சூழல் பாதுகாப்பு கொள்கைகளை விழித்தல், தகவல் சொத்துக்கள் முகாமைத்துவம், முறைமை அணுகல் கட்டுப்பாடு, ஊடக கையாளல்கள் மற்றும் தகவல் சொத்தின் இரகசியத்தன்மை, நேர்மை மற்றும் கிடைக்கும் திறனை உறுதிப்படுத்துவதற்குரிய காப்பு மற்றும் மீட்பு ஆகியவற்றுடன் மாற்றத்தின் பொது உறுதியான ஆளுகை மற்றும் வெளியீட்டு முகாமைத்துவம் போன்றவற்றை உள்ளடக்கிய வலுவான கட்டுப்பாடுகளை வங்கியானது நிறுவியுள்ளது.

பாதுகாப்புக் குறைபாடுகளைத் தொடர்ந்து கண்டறிந்து, மதிப்பிட்டு, சரி செய்வதற்காக இடர்நேர்வு சார் திருத்த முகாமைத்துவ அணுகுமுறையின் ஆதரவுடன் ஒரு முறையான நலிவுறுநிலை மதிப்பீடு மற்றும் முகாமைத்துவ செயல்முறைகள் நடைமுறையில் உள்ளது. நிகழ்நேர அச்சுறுத்தலைக் கண்டறிதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வினைத்திறனான நிகழ்வுப் பதிலளிப்பைச் செயற்படுத்த, மேம்பட்ட பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு, தானியக்கம் மற்றும் பதிலளித்து தீர்வுகளை பயன்படுத்தும் ஒரு பாதுகாப்பு செயற்பாட்டு மையத்தை வங்கியானது இயக்குகின்றது. முனையங்கள், வலையமைப்புக்கள் மற்றும் தொடர்பாடல் மார்க்கங்கள் முழுவதும் தரவு அசைவுகளை கண்காணிப்பதன், கட்டுப்படுத்துவதன் மூலம் உணர்த்திறனான தகவல்களைப் பாதுகாத்து, அங்கீகரிக்கப்படாத அணுகல் மற்றும் தரவுக் கசிவினை தடுக்க தரவு இழப்பினை தவிர்த்தல் தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், அனைத்து புதிய பிரயோகங்களும் கணினி மேம்பாடுகளும், செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் கடுமையான பாதுகாப்பு மதிப்பாய்வுகள் மற்றும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும் கண்டறியப்பட்ட பாதிப்புகள், நிறுவப்பட்ட பாதுகாப்புத் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உடனடியாகச் சரிசெய்யப்படுகின்றன.

வங்கியானது, ஒரு விரிவான மூன்றாம் தரப்பு மற்றும் விற்பனையாளர் இடர்நேர்வு முகாமைத்துவ வரம்புறுகையை பராமரிக்கிறது. இதன் மூலம், அனைத்து வெளிவாரி சேவை வழங்குநர்களும் உரிய கவனம், இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு இணங்குவதற்கான தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

மேலும், ஊழியர்களின் விழிப்புணர்வை வலுப்படுத்தவும், நிறுவனம் முழுவதும் ஒரு வலுவான இணையப் பாதுகாப்புக் கலாச்சாரத்தை வளர்க்கவும், இணையத்தள ஏமாற்ற ஒப்புருவாக்கம் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

சபையின் பங்கு

GRI 2-12

(கொள்கை A.1.2)

சபையானது தலைமைத்துவம், மேற்பார்வை கட்டுப்பாடு, அபிவிருத்தியினை வழங்குவதற்கும் வங்கியின் நீண்டகால வெற்றியினை உறுதிசெய்வதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. அவர்கள் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கவிதிகளின் பிரகாரம் பங்குதாரர்களுக்கு பெறுமதி உருவாக்குவதற்கு வசதியளிக்கின்றார்கள். சபையானது சரியான கலாச்சாரத்தினை வளர்க்கவும், விழுமியங்களை புகுத்தவும் மற்றும் வங்கி முழுவதும் நெறிமுறையான நடத்தையினை ஊக்குவிப்பதற்கும் பொறுப்பாளியாய் உள்ளது.

சபைக்காக ஒரு முறையான விடயங்களின் அட்டவணை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இது அது நிகழ்காலத்தில் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக வழக்கமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. சபைக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட விடயங்கள் கீழே அட்டவணையில் உள்ளது.

ஆளுகை	மூலோபாயமும் திசைகளும்	இடர்நேர்வு முகாமைத்துவ பொறுப்புக்கூறலும் கட்டுப்பாடும்
ஆளுகை ஒழுங்குகளை மீளாய்வு செய்தல்	தந்திரோபாயம் மற்றும் வருடாந்த பாதீட்டின் அங்கீகாரம்	நிதிக் கூற்றுக்கள், சந்தைக்கான ஏனைய இற்றைப்படுத்தல்கள் மற்றும் பங்கிலாப பரிந்துரைகளின் அங்கீகாரம்
சபைக் குழுக்களுக்கான அங்கத்துவத்தின் குறிப்பு விதிமுறைகள்	கையகப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கையின் அங்கீகாரம்	நிதிக் கூற்றுக்கள், சந்தைக்கான ஏனைய இற்றைப்படுத்தல்கள் மற்றும் பங்கிலாப பரிந்துரைகளின் அங்கீகாரம்
	இடர்நேர்வு முகாமைத்துவ மூலோபாயங்கள் மற்றும் இடர் ஆர்வத்தின் உறுதிப்பாடு	அதிகார மட்டங்கள், நிதியியல் மற்றும் திறைசேரி கொள்கைகளின் அங்கீகாரம்
		உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மீளாய்வு
		சுகாதார மற்றும் பாதுகாப்பு கொள்கைகளின் அங்கீகாரம்

சபை வங்கியின் நோக்கம் மற்றும் விழுமியத்தினையும் அந்த நோக்கத்தை அடைவதற்கான மூலோபாயத்தையும் தீர்மானிப்பதுடன் அதன் விழுமியங்களை அமுல்படுத்துகின்றது. இது வங்கி உயிர்வாழவும் மற்றும் செழிக்கவும் உறுதிசெய்கின்றது.

சபையானது வங்கியிலுள்ள அனைவருக்கும் மூலோபாய குறிக்கோள்களையும் மற்றும் கூட்டாண்மை விழுமியங்களையும் தெரிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. எனவே சபையானது வங்கியின் மூலோபாயத் திசைக்கும் முகாமைத்துவத்தின் வழிகாட்டலுக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாளியாக வருகின்றது.

சபையானது உள்ளக மற்றும் வெளியக இணைப்புகள் மற்றும் தொடர்பாடல்களுக்கான பொறிமுறைகள் விபரிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

அத்துடன் வங்கியின் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் தொகுப்பு மற்றும் தொடர்பாடல்களையும் உறுதிசெய்கின்றது. இது செயற்பாட்டின் பாங்கு, வெளிவாரி மற்றும் உள்ளக உறவுமுறைகள், சந்தையும் வணிகமும், தேவையான விளைவு வீதம், மற்றும் செயற்திறன் நியமங்கள், வளர்ச்சி மற்றும் கொள்கை மாற்றங்கள் மற்றும் பாதீட்டு செயன்முறைகளைத் திட்டமிடல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இந்தச் செயல்முறையில், வங்கியானது ஊழியர்களுடனும் வெளிவாரி தொகுதியினருடன் ஒரே விதமாக கதைத்தல் வேண்டும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரே முதன்மை பேச்சாளராக சேவையாற்றல் வேண்டும்.

வங்கியின் முதன்மையான நோக்கம் அதன் மூலோபாய வரம்புறுகையினுள் குறிப்பிடப்பட்ட நோக்கத்தின் பிரகாரம் செல்வத்தை உருவாக்குவதாகும். இது தொடர்பில் வங்கியானது,

- வங்கியின் மூலோபாயங்கள், கொள்கைகள், வணிகத் திட்டங்கள், இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ செயன்முறை மற்றும் பொறிமுறை மற்றும் முகாமைத்துவ செயற்திறன் வரன்முறை என்பவற்றை அங்கீகரிப்பதுடன், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தொடர்ச்சியான அடிப்படையில், அளவிடக்கூடிய/இனங்காணக்கூடிய இலக்குகளுடன் அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள திட்டங்களை உருவாக்கப்படுவதனை ஒழுங்குசெய்தல்.
- பொறுப்பற்ற அல்லது பெரிதும் புறக்கணிக்கின்ற விதத்தில் அல்லாது, திடமான வணிகக் கொள்கைகள் மற்றும் விவேகமான வங்கியியல் நடைமுறைகளின் பிரகாரம் செயற்படல்வேண்டும்.
- வங்கியின் மூலதனம் மற்றும் சொத்துக்களை பாதுகாத்தல்:
- துறையில் மற்றும் பொருளாதாரத்தினுள் முழுவதுமாக வங்கியின் சாத்தியமான படிமையினை பராமரித்தல்.

சபையானது அதன் பொறுப்புக்களில் சிலவற்றை சபையின் குழுக்களுக்கு ஒப்படைத்துள்ளது. ஒவ்வொரு குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியின் நோக்கெல்லை மற்றும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் இந்த அறிக்கையின் பக்கங்கள் 298 முதல் 305 வரை வழங்கப்பட்டுள்ளது.

வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறுதித்தன்மையினை கண்காணிப்பானது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கும் சபை கணக்காய்வு குழுவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியின் ‘இடர்நேர்வு சகிப்புத்தன்மையினை’ தீர்மானிக்கும் இறுதி பொறுப்பினை சபை வைத்தள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையானது சபையினால் மீளாய்வு செய்யப்படுவதுடன், இது இனங்காணப்பட்ட இடர்நேர்வுகள் மற்றும் உறுதியின்மைகளை கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடலை உள்ளடக்கும். மேலாக, சபையானது இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் தலைவர்களினால் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்கின்றது.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குதல்

GRI 2-27

(கொள்கை A.1.3)

பணிப்பாளர்கள் சபையானது கூட்டாகவும் தனியாகவும் வங்கியினால் நடாத்தப்படும் வணிகத்திற்கு பொருத்தமான சட்டங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றது. எனவே, பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை பராமரிப்பதற்கு அனைத்து உரிய செயன்முறைகள் மற்றும் கொள்கைகள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்கு சபையானது பொறுப்பாளியாகும்.

மேலும், அனைத்து இ.ம.வ வழிகாட்டுதல்களுக்கும் இணங்குவதை எளிதாக்குவதற்காக, சபை ஒரு அங்கீகரிக்கப்பட்ட பணி நடைமுறையைக் கொண்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், வங்கி ஒரு வலுவான ஒழுங்குமுறை இணக்க நிலையைப் பராமரித்தது. பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் அல்லது விதிமுறைகளுக்கு இணங்காததற்காக வங்கி எந்த அபராதத்தையும் எதிர்கொள்ளவில்லை.

சில விடயங்களில் நேரத்திற்கு நேரம் சுயாதீன நியாயப்பாட்டினை பெறுவதற்கான அவசியத்தினை ஏற்றுக்கொள்கின்றது. இதன் பிரகாரம், சபையின் அங்கத்தவர்கள், அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களுடன் இணைந்த ஏதேனும் விடயத்தில் வங்கியின் செலவில் சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளைப் (சட்டம், கணக்கீடு மற்றும் நிதியியல் ஆலோசனை உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மட்டும் வரையறைசெய்யப்படாத) பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

சபைச் செயலாளர்

(கொள்கை A.1.4)

அனைத்து பணிப்பாளர்களும் சபையின் செயலாளருக்கான அணுகலை கொண்டுள்ளார்கள். சபை செயலாளர் அனைத்து உடன்பாடு கண்ட செயன்முறைகள் மற்றும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அவதானிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான சபைக்கு பொறுப்பாளியாவார்.

மேலாக, சபையின் செயலாளர், அனைத்து சபை உப குழுக்களுக்கும் செயலாளராக சேவையாற்றுவதுடன், அனைத்து சபைக் கூட்டங்கள் மற்றும் குழுக்களின் கூட்டங்களது நிகழ்ச்சிக் குறிப்புகளை பராமரிக்கின்றார். சபைச் செயலாளரின் ஏனைய பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- சபைக் கூட்டங்கள் மற்றும் உப குழு கூட்டங்களை நடாத்துதல் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்தல்.
- மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் பொருத்தமான சட்டவாக்கங்களுக்கு அமைய நடவடிக்கைகளை நடாத்துதல். பெறுநிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றப்படுவதற்கு வசதியளித்தல், அதனுடன் தொடர்புடைய சட்டவாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க பணிப்பாளர்களுக்கு உரிய அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கு துணையளித்தல்.
- நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கும் முகாமைத்துவத்திற்கு இடையே தொடர்பாடல் இணைப்பாகச் செயற்படல்.
- முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணையாக தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களில் பொருத்தமான வெளிப்படுத்தல்களை உறுதிசெய்தல்.
- பொருத்தமான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதில் மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் ஏனைய உரிய சட்டவாக்கங்களில் சபையுடன் கலந்தாலோசித்து சட்ட ஆலோசனையினைப் பெறுதல்.

பணிப்பாளர்களின் சுயாதீன நியாயப்பாடுகள்

(கொள்கை A.1.5)

வங்கியின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவதற்கு பணிப்பாளர்கள் ஒரு சுயாதீன நியாயப்பாட்டினை கொண்டுவருவதற்கான தேவையுள்ளது. அனுபவமிக்க தொழில்வல்லுநர்களாக, அவர்களது கடமைகள் மற்றைய நபர்களின் செல்வாக்கின்றி செயலாற்றப்படல் வேண்டும். சபையானது நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களிடமிருந்து இயக்காற்றலான, ஆக்கபூர்வமான பங்களிப்பினை ஊக்குவிக்கின்றது.

ஒவ்வொரு பணிப்பாளரும் ஆண்டுதோறும் பெருநிறுவக ஆளுகை கோவைக்கு இணங்கத் தமது சுயாதீன தன்மையை உறுதிப்படுத்துகிறார்கள்.

பணிப்பாளர்கள் போதுமான நேரத்தையும் முயற்சியையும் அர்ப்பணித்தல்

(கொள்கை A.1.6)

பணிப்பாளர்கள் ஒரு கூட்டத்திற்கு முன்னர், சபை ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கும் விடயங்களது பின்பற்றலில் மேலதிக தகவல்கள் மற்றும் விளக்கங்களை கோருவதற்கும் போதுமான நேரத்தை ஒதுக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அனைத்து பொறுப்புக்களும் திருப்பதிகரமாக நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்வதற்காக ஒவ்வொரு கூட்டத்திலும் போதுமான நேரம் ஒதுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு பணிப்பாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

பணிப்பாளர்களுக்கான பயிற்சி

GRI 2-17

(கொள்கை A.1.7)

தொடர்ச்சியான அபிவிருத்திக்கு அனைத்து பணிப்பாளர்களும் உரிய பயிற்சியினை பெறுவதற்கு உரித்துடையவர்கள். சபை/குழுக்களுக்கு பணிப்பாளர்களது பங்களிப்புகள் பொருத்தமாக இருப்பதனை உறுதிசெய்வதற்காக, தொடர்ச்சியான பயிற்சிகள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுவதுடன், இவை அவர்களது அறிவு, திறன்கள் மற்றும் வங்கி செயற்படும் வணிகம் மற்றும் சந்தைகளில் புரிந்துணர்வினை வழமையாக புதுப்பிப்பதற்காகும்.

இது வங்கியின் செயற்பாடுகள், பெறுநிறுவன ஆளுகை, சட்டம் முறைமைப்படுத்தல் முன்னேற்றங்கள் மற்றும் நிலைபெறுதன்மை குறித்து, பணிப்பாளர் குழுவின் பங்கு பற்றிய அறிக்கை ஆகியவற்றில் சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் அல்லது ஆலோசகர்களினால் எழுத்துமூலமான அறிக்கைகள் மற்றும் முன்னிலைப்படுத்தல்களை உள்ளடக்கும்.

பணிப்பாளர் பயிற்சி மற்றும் நியமனம் சார் பரிசீலனை

(கொள்கை A.1.8)

புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும் ஆளுகைப் பொறுப்புக்கள் மற்றும் துறைசார் விடயங்களை உள்ளடக்கிய ஒரு முறையான பதவியேற்பு செய்யப்படுவதை வங்கி உறுதிப்படுத்துகின்றது. பணிப்பாளர்களின் தேவைக்கேற்ப தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. நியமனத்திற்கு முன்னர் ஒவ்வொரு பணிப்பாளரும் கொள்கை A.1.8 மற்றும் CA இலங்கை கோவை- 2023ன் அட்டவணை Bக்கு இணங்க போதுமான நேரத்தை ஒதுக்கும் திறன், நலன்சார் முரண்பாடுகள் இன்மை மற்றும் தேவையான தகுதிகளைக் கொண்டிருத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றார்கள்.

தலைவர் மற்றும் பி.நி.அ./பொது முகாமையாளர்

GRI 2-11

(கொள்கை A.2)

தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரி (பி. நி.அ.)/பொது முகாமையாளரும் (பொ.மு.) மக்கள் வங்கியின் தலைமைத்துவத்திற்கு கூட்டாக பொறுப்பாளியாயுள்ளதுடன், நேர்மை மற்றும் நன்னடத்தையின் உயர் நியமங்களை ஊக்குவிப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளதுடன், தலைவர் மற்றும் பி.நி.அ./பொ.மு. இற்கும் இடையே பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புக்களில் தெளிவான மற்றும் வினைத்திறனான பிரிவு காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் ஒரு தனியான பங்கினை வகிப்பதுடன் இவை ஒன்றுக்கொன்று நிரப்புவதுடன் இது ஒரு தனி நபருக்கு கட்டற்ற தீர்மானங்களுக்கான அதிகாரங்கள், மற்றும் கட்டுப்பாடுகளைத் தவிர்த்து அதிகாரத்தின் சமநிலையினை உறுதிப்படுத்துவதற்காகும்.

சபையினை தலைமை தாங்குவதற்கும், வழிநடத்துவதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் ஒரு நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளராக தலைவர் பொறுப்பாளியாயுள்ளார். இது சபையின் சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் பொறுப்புக்களை முழுவதுமாக நிறைவேற்றுவதற்கும் வினைத்திறனான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் ஆகும். பி.நி.அ./பொ.மு. இன் பிரதான பங்கு வங்கியின் நாளாந்த செயற்பாடுகளை முகாமைப்படுத்துவதாகும்.

(கொள்கை A.2.1)

தலைவர் மற்றும் பி.நி.அ./பொ.மு. பதவி நிலைகள் தெளிவாக வேறாக்கப்பட்டுள்ளன, இது ஒரு நபரினால் தீர்மானம் மேற்கொள்வதில் கட்டற்ற அதிகாரத்தினை தடுப்பதற்காகும். தலைவர் மற்றும் பி.நி.அ./பொ.மு. ஆண்டறிக்கையின் பக்கங்கள் 38 மற்றும் 46 இல் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

தலைவரது பங்கு

GRI 2-11, 12

(கொள்கை A.3)

பி.நி.அ./பொ.மு. மற்றும் முகாமைத்துவ சபையினால் உடன்பாடுகண்ட மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை வினைத்திறனாக அமுலாக்குவதினை உறுதிப்படுத்துவதற்கு தலைவர் பொறுப்பாளியாவார். தலைவர் சிறந்த ஆளுகை நடைமுறைகளின் பின்பற்றலுக்கான பாரபத்தியத்தினை வழங்குவதற்கும், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளுடன் வினைத்திறனான தொடர்பாடல்களை உறுதிசெய்வதற்கான மேற்பார்வையினை வழங்குவதற்கும் பொறுப்பாயுள்ளார். தலைவர் ஒரு சிரேஷ்ட நிறைவேற்றுநரல்லாது ஒரு நிறைவேற்றுநரல்லாத பங்கினை மக்கள் வங்கியில் வகிக்கின்றார்.

முறையான விதத்தில் சபை நடவடிக்கைகளை முன் நடாத்துதல்

(கொள்கை A.3.1)

தலைவர் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு மாத்திரமன்றி வங்கி மற்றும் பங்குதாரர்களின் சிறந்த அக்கறைகளை பாதுகாப்பதற்கு சபையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாவார். இதன் பிரகாரம் தலைவர் பின்வருவனவற்றிற்கு பொறுப்பாளியாவார்:

- சபைக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டு வினைத்திறனாக நடாத்தப்படுவதனை உறுதிசெய்தல்
- ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலினை தயாரித்தல், ஏனைய பணிப்பாளர்கள், பல்வேறு உபகுழுக்களின் அங்கத்தவர்கள் அல்லது சபை செயலாளரினால் முன்மொழியப்பட்ட விடயங்களை கவனத்திலெடுத்தல் வேண்டும்
- சபை அங்கத்தவர்கள் துல்லியமான, நேரத்துடனான மற்றும் தெளிவான தகவல்கள் பெறுவதனை உறுதிப்படுத்தல்
- சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் துல்லியமான பதிவுசெய்யப்பட்டு பணிப்பாளர்களிடையே சுற்றனுப்பப்படுவதனை உறுதிசெய்தல்
- சபைக்கு தலைமைத்துவம் மற்றும் ஆளுகையினை வழங்குதல், இது உரிய நேரத்தில் சபையும் தனித்தனி பணிப்பாளர்களும் சிக்கல்களை கலந்துரையாடுவதற்கான ஒரு உகந்த சூழலினை உருவாக்குதல்
- வெளிப்படைத்தன்மை கலாச்சாரத்தினை ஊக்குவித்தல் மற்றும் சபையின் விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான மற்றும் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்களில் மற்றும் இதன்மூலம் சபையின் பயனுறுதியான செயற்பாட்டிற்கான பங்களிப்பிற்கு வசதியளித்தல்
- குழுமத்தின் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை விருத்திசெய்வதில் மற்றும் மதிப்பிடுவதில் சபை முற்றான மற்றும் ஆக்கபூர்வமான பங்கினை வகிப்பதனை உறுதிசெய்தல் மற்றும் சபையின் தீர்மானங்கள் வங்கியின் சிறந்த அக்கறையில் எடுக்கப்படுவதையும் இவை சபையின் ஒருமித்த கருத்தினை நியாயமான பிரதிபலிப்பதாகவும் இருப்பதனை உறுதிசெய்தல்
- அர்த்தமுள்ள பின்னூட்டத்தினை உருவாக்குவதற்கு சுய மதிப்பீட்டிற்காக தலைமைத்துவத்தினை வழங்குதல், இது சபையின் பயனுறுதித்தன்மையினை மேலும் மேம்படுத்தல்

முதலாவது நியமனத்தின்போது மற்றும் வழமையான இடைவெளிகளில் (ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையேனும்) அல்லது சூழ்நிலைகள் மாற்றமடையும் எந்த நேரத்திலும், அனைத்து பணிப்பாளர்களும் நன்னம்பிக்கையில் பதிவுசெய்வதற்காக சபைக்கு வங்கியுடன் ஒரு சாத்தியமான முரண்பாட்டு அக்கறையினை உருவாக்கக்கூடிய ஏதேனும் வணிகங்கள் அல்லது ஏனைய அக்கறைகளை வெளிப்படுத்தல் வேண்டும், இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- ஏதேனும் வேறு கம்பனி, பங்குடைமை அல்லது ஏனைய வணிக முயற்சிகளில் அனைத்து வணிக அக்கறைகள் (நேரடியான அல்லது மறைமுகமான)
- வர்த்தக, வணிக அல்லது ஏனைய பொருளாதார வங்கிகளில் அங்கத்துவம், மற்றும்
- ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களில் ஏதேனும் அக்கறை (நேரடியான அல்லது மறைமுகமான)

பணிப்பாளர்கள் ஏனைய வங்கிகள் அல்லது தொடர்புடைய தரப்பினருடனான அவர்களது நடவடிக்கைகள் அல்லது கடப்பாடுகளில் ஏதேனும் முரண்பாட்டு அக்கறைகளை அல்லது ஏதேனும் முரண்பாடுடையதான தோற்றங்களை தவிர்க்கின்றார்கள். சபையினால் கருதப்படவேண்டிய ஒரு விடயத்தில் ஒரு பணிப்பாளர் ஒரு முரண்பாட்டு அக்கறையினைக் கொண்டிருப்பாராயின், சபை அதனை பொருண்மையானதென தீர்மானித்திருந்தால், அவ்விடயமானது சுற்றனுப்பல் மூலமாக அல்லது ஒரு குழுவின் மூலமாக கையாளப்படலாகாது (ஒரு சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தினை தொடர்ந்து அந்நோக்கத்திற்காக நிறுவப்பட்ட ஒரு பொருத்தமான சபை குழு அன்றி). ஆனால் ஒரு சபைக் கூட்டம் இருக்கும். பணிப்பாளர்கள் ஏதேனும் சபைத் தீர்மானத்தில், அவர்கள் அல்லது யாராவது அவர்களது சகாக்கள் ஒரு பொருண்மையான அக்கறையினைக் கொண்டிருப்பார்களாயின், வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதுடன், சபைக் கூட்டத்தில் சமூகமளித்த குறைவெண்ணில் கணக்கிடப்படமாட்டார்கள்.

மற்றுமோர் வங்கியின் பணிப்பாளர், அத்தகைய வங்கியானது, வங்கியின் ஒரு துணைக்கம்பனி அல்லது இணைக்கம்பனியாய் இருந்தாலொழிய, எந்தவொரு பணிப்பாளரும் நியமிக்கப்படவோ, தெரிவுசெய்யப்படவோ அல்லது முன்மொழியவோ மாட்டார்கள்.

நிதியியல் மதிநுட்பம்

(கொள்கை A.4)

மக்கள் வங்கியின் சபையானது போதுமான நிதியியல் அறிவு மற்றும் மதிநுட்பத்துடனான அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் விடயங்களில் வழிகாட்டலை வழங்கும் சிரேஷ்ட பட்டயக் கணக்காளர்கள் மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களுக்கும் மேலாக, எஞ்சிய பணிப்பாளர்கள் அவர்களது விரிவான தொழில்சார் அனுபவத்தினூடாக போதுமான நிதியியல் மதிநுட்பத்தினை பெற்றுள்ளார்கள்.

சபையின் சமநிலை

(கொள்கை A.5)

மக்கள் வங்கியின் சபையானது ஐந்து நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர்களுடன் சிறந்த சமநிலையினைக் கொண்டுள்ளதுடன், இவர்களுள் ஒருவர் ஒரு சுயாதீன கொள்திறனில் கடமையாற்றுகின்றார் 16 செப்டெம்பர் 2025 படி மற்றும் பத்து நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர்களுள் ஏழு ஒரு சுயாதீன கொள்திறனில் கடமையாற்றுகின்றார்கள் 31 டிசம்பர் 2025 படி.

அனைத்து சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களும் முகாமைத்துவத்திலிருந்து சுயாதீனமாயுள்ளதுடன், அவர்களது தடையற்ற மற்றும் சுயாதீன நியாயப்பாட்டினை நிறைவேற்றுவதுடன் பொருண்மையான தலையிடும் அல்லது பொருண்மையாக தலையிடலாம் என நியாயமாக உணர்ந்துகொள்ளக்கூடிய ஏதேனும் வணிகங்கள் அல்லது ஏனைய தொடர்புகளிலிருந்து விடுபட்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளரும் குறிப்பிட்ட வரன்முறைக்கு எதிராக சுயாதீனம்/சுயாதீனமற்ற எனும் ஒரு கையொப்பமிடப்பட்ட பிரகடனத்தினை சமாப்பிக்கின்றார்கள். அதனுடன் சுயாதீனத்தன்மையினை தீர்மானிப்பதற்காக வரன்முறையுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக அவர்கள் மதிப்பிடப்படுகின்றார்கள்.

மீளாய்வாண்டின்போது, பதிலீட்டு பணிப்பாளர்களை நியமிப்பதற்கு அவசியமான எந்தவொரு சூழ்நிலையும் எழவில்லை. தலைவர் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளர் ஆகையினால் ஒரு சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுயாதீனத்தன்மையை நிர்ணயித்தல்

(கொள்கை A.5.5)

சபையானது அனைத்து நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர்களின் ஆண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்து, CA இலங்கை பெருநிறுவக ஆளுகை மீதான சிறந்த நடைமுறை நெறிமுறை 2023-க்கு இணங்க அவர்களின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்தது.

சுயாதீனமானவர்களாகக் கருதப்படும் பணிப்பாளர்களின் பெயர்கள் இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன, மேலும் நெறிமுறைக்கு இணங்க, சுயாதீன மற்றும் சுயாதீனமற்ற பணிப்பாளர்களின் பொருத்தமான சமநிலையை சபை பராமரிப்பதை உறுதிப்படுத்துகிறது.

தகவல்கள் வழங்கல்

(கொள்கை A.6)

சபைக் கூட்டங்கள் பணிப்பாளர்களுக்கு போதுமான முன்கூட்டிய அறிவித்தல்கள் வழங்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சபை அல்லது குழு கூட்டத்திற்கு முன்னர், கூட்டம் இடம்பெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர், நிகழ்ச்சி நிரல் உள்ளடங்கலான அனைத்து உரிய ஆவணங்கள், உள்ளடக்கம் மற்றும் முகாமைத்துவ முன்னிலைப்படுத்தல்கள் பொழிப்பு என்பன அனைத்து பணிப்பாளர்களுக்கும் கிடைக்கப்பெறுவதனை சபைச் செயலாளர் உறுதிசெய்கின்றார். கூட்டங்களில் சமூகமளிக்க வியலாத பணிப்பாளர்கள் ஆவணப்படுத்தப்பட்ட கூட்டக் குறிப்புகள் ஊடாக இற்றைப்படுத்தப்படுவதுடன், இவை அடுத்த கூட்டத்தில் கூட்டக் குறிப்புகளிலிருந்து பின்பற்றப்படவேண்டிய விடயங்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கான கணக்குகள் அடுத்து வரும் மாதத்தில் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர்களிடையே, ஒவ்வொரு பிரிவினதும்/துணை நிறுவனத்தினதும் முக்கிய நிதிச் செயற்திறன் குறிகாட்டிகளுடன் சுற்றனுப்பப்படுகின்றன. வழங்கப்பட்ட தகவல்கள் போதாது அல்லது தெளிவில்லை என சபை உணர்ந்தால், அவர்கள் மேலதிக விளக்கங்கள் அல்லது மேலதிக தகவல்களை வேண்டுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள். மேலதிய தகவல்கள் வழங்குவது அவசியம் என கருதும்போது உரிய முகாமைத்துவ ஆளணியினர் கூட்டங்களுக்கு அழைக்கப்படலாம்.

சபைக்கான பணிப்பாளர்கள் நிலைமை 31 டிசம்பர் 2025 படி

பணிப்பாளரின் பெயர்	நிலை
பேரா பி என் டி பெர்னாண்டோ	தலைவர்–சுயாதீனமல்லாத/நிறைவேற்றுநரல்லாத
திரு எம் ஜே திலகரத்ன	பணிப்பாளர்–சுயாதீனமல்லாத/நிறைவேற்றுநரல்லாத
திரு கே ஏ விமலேந்திரராஜா	பணிப்பாளர்–சுயாதீனமல்லாத/நிறைவேற்றுநரல்லாத
திரு சி எஸ் குனியங்கொட	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திருமதி ஜி ஏ எம் எட்வர்ட்ஸ்	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திரு எஸ் எம் எஸ் சஞ்சய பண்டார	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திரு டி பி லொக்குஆராச்சி	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திரு என் எஸ் பி வல்கம்பய	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திரு எம் எச் எஸ் கவுஸ்	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத
திருமதி சி எச் டி அபயகுணவர்த்தன	பணிப்பாளர்–சுயாதீனம்/நிறைவேற்றுநரல்லாத

சபைக்கான நியமனம்

GRI 2-10

(கொள்கைகள் A.7 மற்றும் A.8)

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2024ம் ஆண்டு 03ம் இலக்க வங்கிச் சட்டத் தீர்மானத்திற்கு அமைவாக குறைந்தளவான பணிப்பாளர்களின் எண்ணிக்கை 10 மற்றும் கூடியளவிலான பணிப்பாளர்களின் எண்ணிக்கை 13 ஆகும்.

மேலும், 05.04.2024 தேதியிட்ட பொதுத்துறை நிறுவன சீர்திருத்தங்கள் குறித்த அமைச்சரவைக் குறிப்பாணையின்படி, மொத்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் சுயாதீன பணிப்பாளர்களின் எண்ணிக்கை பெரும்பான்மையாக உள்ளது மற்றும் சுயாதீன பணிப்பாளர்களுக்கான பரிந்துரையானது சிறப்புத் தேர்வுக் குழுவால் செய்யப்படும்.

இதற்கு மேலாக மக்கள் வங்கியின் சட்டத்தின் பிரகாரம், இரு பணிப்பாளர்கள் கூட்டுறவுத்துறை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் அமர்த்தப்படுவார்கள்.

பணிப்பாளர்களுக்கான பொருத்தமானதும் தகுதியானதுமான வரன்முறையின் கீழ் பணிப்பாளர்களுக்கான அனைத்து நியமனங்களும் இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

பன்முகத்தன்மை பிரதிநிதித்துவம் தொடர்பாக எவ்விதமான விசேட குறிப்பிடல்களும் காணப்படவில்லை.

பக்கம் 266-இல் கொடுக்கப்பட்டுள்ள “பணிப்பாளர்களின் நியமனங்கள் மற்றும் ஓய்வுகள்/பதவி விலகல்கள்” குறித்த பிரிவையும், பக்கம் 302-இல் உள்ள பணிப்பாளர் குழு நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவின் (BNGC) அறிக்கையையும் பார்க்கவும்.

சபைச் செயற்திறன் மதிப்பிடல்

GRI 2-18

(கொள்கை A.9)

வருடந்தோறும் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் அவரது பயனுறுதித்தன்மையில் ஒரு சுய மதிப்பீட்டினையும் சபை ஒரு குழுவாகவும் நடாத்துகின்றது. இது கோவையில் சபை செயற்திறன் மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட அனைத்து வரன்முறைகளையும் ஒருங்கிணைத்துள்ளது. பதில்கள் சபைச் செயலாளரினால் தொகுக்கப்பட்டு ஒரு பொழிப்பு அறிக்கையாக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துதல்

(கொள்கை A.10)

- பணிப்பாளர்கள் தொடர்பாக கோவையில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் இந்த ஆண்டறிக்கையில் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன:
- பக்கங்கள் 38 முதல் 43 வரை பெயர், தகைமைகள், சுருக்கமான சுயவிபரம் மற்றும் நிபுணத்துவத்தின் தன்மை.
- பக்கம் 267 இல் ஆண்டு 2025 இல் இடம்பெற்ற சபை மற்றும் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் வருகையும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பக்கம் 266 இல் பணிப்பாளர்கள் தலைவராக அல்லது அங்கத்தவராக சேவையாற்றும் குழுக்களின் பெயர்கள்.
- பக்கங்கள் 294 முதல் 297 வரை தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்.

பி.நி.அ இன் மதிப்பிடல்

(கொள்கை A.11)

மதிப்பீட்டுச் செயன்முறையானது சபைக்கும் பி.நி.அ./பொ.மு. இற்கும் பி.நி.அ./பொ.மு. இன் செயற்திறன் மற்றும் தலைமைத்துவம் தொடர்பாக ஒரு ஆக்கபூர்வமான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான ஒரு முறையான வாய்ப்பினை வழங்குகின்றது. பி.நி.அ./பொ.மு. இற்கான மு.செ.கு. மூலோபாய திட்டமிடல் மற்றும் செயற்திறன் முகாமைப்படுத்தலின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இது காலாண்டுதோறும் ஒரு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு சபைக்கு அவர்களது மீளாய்விற்காக மாதாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த இலக்குகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டு பி.நி.அ./பொ.மு. இன் வருடாந்த மதிப்பிடல் செயன்முறைக்கு ஒரு அடிப்படையாக பயன்படுத்தப்படுகின்றது. ஏதேனும் பாதகமான வேறுபாடுகளுக்கு எடுக்கவேண்டிய திருத்தல் நடவடிக்கையும் விளக்கங்கள் சபைக்கு வழங்கப்படுவதற்கு பி.நி.அ./பொ.மு பொறுப்பாளியாவார்.

பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுநர்களது ஊதியச் செயன்முறை

GRI 2-19, 2-20

(கொள்கைகள் B.1, -B.3)

சபை ஊதியமானது நிதி அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. எந்தவொரு பணிப்பாளரும் அவரது சொந்த ஊதியத்தினை தீர்மானிப்பதில் உள்ளடக்கப்படுவதில்லை. BHRRC பி.நி.அ./பொ.மு. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரது ஊதியம் மற்றும் நலன்கள் தொடர்பாக சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதுடன், இவை கூட்டு உடன்படிக்கை மற்றும் வங்கியின் ஊதியக் கொள்கையின் பிரகாரம் மற்றும் குறிப்பு விதிமுறைகளினுள் காணப்படல் வேண்டும்.

ஊதியமானது உயர் செயற்திறனான, தகைமையுடைய, மற்றும் அனுபவமுடைய வங்கியின் ஊழியர்களை கவர்வதற்காகவும், தக்கவைப்பதற்காகவும் மற்றும் ஊக்கப்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. சபை மறுபுறத்தில் நிதி அமைச்சருக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதுடன், கூட்டு உடன்படிக்கையின் கீழ் அவர்களது ஊதியத்திற்கான அங்கீகாரத்திற்கான இறுதி அதிகாரத்தை அமைச்சர் கொண்டுள்ளார்.

BHRRC அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றும்போது அவசியமென கருதப்படும்போது வெளியிலிருந்து தொழில்சார் ஆலோசனையினை நாடுகின்றது. ஊதியக் கொள்கையினை வெளிப்படுத்தும் கூற்று மற்றும் BHRRCஇன் தலைவர் மற்றும் அங்கத்தவர்களின் பெயர்கள் பக்கம் 299இல் காணப்படும் BHRRCஇன் அறிக்கையில் காணப்படுகின்றது. பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஊதியமானது பக்கம் 350இல் வழங்கப்பட்டுள்ளது.

வங்கியின் தலைமைச் செயல் அதிகாரி/பொது முகாமையாளர், பெருநிறுவன நிர்வாக உறுப்பினர் ஆவார். மேலும், பெருநிறுவன நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாக அவருக்குக் கீழ் செயல்படுகின்றனர். பெருநிறுவன நிர்வாகத்திற்கான மொத்த ஊதியம், பக்கம் 297இல் தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

பங்குதாரர்களுடனான உறவுகள்

(கொள்கைகள் C.1, C.2)

ஒரு அரச வங்கியாக, இலங்கை அரசாங்கத்தை பிரதான பங்குதாரராகக்கொண்ட மக்கள் வங்கி நிதி அமைச்சின் நேரடியான அதிகார வரம்பினுள் வருகின்றது. நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்திருப்பதை உறுதிசெய்வதற்காக சபையானது நிதி அமைச்சுடன் தொடர்புடன் உள்ளது.

ஆண்டறிக்கையானது, ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு நிதி அமைச்சினூடாக சுற்றனுப்பப்படுகின்றது. வங்கியானது அமைச்சு தொடர்பான விடயங்களில் நிதி அமைச்சுடன் தொடர்பிலுள்ளது.

பாரிய மற்றும் பொருண்மையான கொடுக்கல் வாங்கல்கள்

(கொள்கை C.3)

பக்கங்கள் 294 முதல் 297 வரை வழங்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 43 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, வங்கியின் அல்லது குழுமத்தின் தேறிய சொத்து தளத்தில் பொருண்மையாக மாற்றம் தேவையான எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை. பொருளாதாரம், சூழல் மற்றும் மக்கள் மீதான நிறுவனத்தின் தாக்கங்களை முகாமைப்படுத்துவதற்கான பொறுப்பினை சபையானது பகிர்ந்தளித்துள்ளது. சபை பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரை நியமித்துள்ளது. அனைத்து சிரேஷ்ட முகாமைத்தவத்தினரது நியமனத்திலும் சபை பங்குபற்றுவதுடன், வங்கிக்கு முக்கியமான அறிவுசார் மூலதனத்தினை ஊக்கப்படுத்துவதனையும் பாதுகாப்பதனையும் உறுதிசெய்வதுடன், முகாமைத்துவம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு பொருத்தமான மற்றும் போதுமையான பயிற்சி காணப்படுவதனையும் உறுதிசெய்வதோடு சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு ஒரு தொடர்ச்சி திட்டமிடல் இருப்பதையும் உறுதிசெய்தல் வேண்டும்.

நிதியியல் அறிக்கையிடல்

(கொள்கை D.1)

ஆண்டறிக்கையானது நிதியியல் நிலைமை, செயற்திறன் மற்றும் வாய்ப்புக்களில் ஒரு சமநிலையான கருத்தினை முன்னிலைப்படுத்துகின்றது.

புரிதல் மற்றும் தெளிவினை அதிகரிப்பதற்காக தகவல்களை முன்னிலைப்படுத்துவதில் எடுத்துரைப்புகளும் காட்சிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எமது செயற்திறனில் இந்த அறிக்கையில் மற்றும் நிதி அமைச்சு மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் உள்ளடங்கலான பொருத்தமான அதிகாரசபைகளுக்கு முன்னிலைப்படுத்தப்பட்ட ஏனைய தொடர்பாடல்களிலும் நாம் ஒரு சமநிலையான கருத்தினை வழங்கியுள்ளோம். நிதியியல் செயற்திறனில் ஆண்டறிக்கையில் மற்றும் இடைக்கால தொடர்பாடல்களிலும் சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக வங்கியானது ஒவ்வொரு முயற்சியினையும் எடுத்துள்ளது.

கோவையினால் தேவைப்படும் பின்வரும் வெளிப்படுத்தல்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன:

- நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்பிலான கூற்று. பக்கம் 312 ஆனது அவர்களது பொறுப்புக்களது கூற்றினை உள்ளடக்குகின்றது.
- பக்கம் 306 முதல் 307 வரை நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று.
- பக்கங்கள் 101 முதல் 205 வரை முகாமைத்துவ கருத்துக்கள்.
- பக்கம் 312 இல் காணப்படும் பணிப்பாளர்களது பொறுப்புக்களிலான கூற்றில் கம்பனியின் செயல்நிலைத் தொடர்ச்சி கூற்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 43 இல் பக்கங்கள் 294 முதல் 297 வரை காணப்படும் பணிப்பாளர்களது அறிக்கையில் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பக்கங்கள் 94 முதல் 95 வரை ESG நிலைத்தன்மை அறிக்கை.

D.1.4 ஆண்டு அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்களின் பொறுப்பு குறித்தும், அவற்றை அவர்கள் எவ்வாறு முழுமையான, நியாயமான, சமச்சீரான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கருதுகிறார்கள் என்பது குறித்தும், பக்கம் 312இல் உள்ள "நிதிநிலை அறிக்கைகளுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு" என்ற தலைப்பின் கீழ் விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பணிப்பாளர்கள், ஆண்டு அறிக்கை மற்றும் பல்வேறு காலாண்டு வெளியீடுகள் மூலம், நிறுவனத்தின் நிதி நிலை, செயல்திறன், ESG/ நிலைத்தன்மை, இடர்நேர்வுகள் மற்றும் வாய்ப்புகள், வணிக மாதிரி மற்றும் அதன் எதிர்காலக் கண்ணோட்டம் ஆகியவற்றை பங்குதாரர்கள் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

இடர்நேர்வு, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வுக் குழு

(கொள்கை D.2,D.3,D.4 மற்றும் D.5)

நெறிமுறையின் இணைப்புடன் சீரமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையைச் சேர்த்து, குழுவின் அதிகார வரம்புகளை விவரிக்கவும்.

- விரிவான இடர்நேர்வு ஏற்பு வெளிப்படுத்தல்
- உள் கட்டுப்பாட்டு செயல்திறன்
- முறையான குழு சாசனங்கள்

பங்குதாரர் நலன்களையும் வங்கியின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் திடமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளுக்கான பொருத்தமான மற்றும் போதுமையான செயன்முறைகளை உருவாக்குவதற்கும் அமுலாக்குவதற்குமான அதன் பொறுப்பினை சபை அறிந்துள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பாக சபைக்கு BAC துணையளிப்பதுடன், BIRMC இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பன அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் சபைக்கு துணையளிக்கின்றது. இவர்களது பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் பக்கங்கள் 298 முதல் 305 வரை காணப்படும் குழு அறிக்கைகளில் வழங்கப்பட்டுள்ளன.

BIRMC வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவினால் துணையளிக்கப்படுகின்றது. வங்கியின் இடர் முகாமைத்துவ செயன்முறையிலான ஒரு விரிவான அறிக்கை பக்கங்கள் 208 முதல் 259 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன. BAC வங்கியின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டினால் துணையளிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமை மற்றும் பயறுதித்தன்மையினை மீளாய்வு செய்து ஒரு வழமையான அடிப்படையில் BAC இற்கு அறிக்கையிடுகின்றது. BAC இன் கடமைகள் அத்தகைய கணக்காய்வுகளின் நோக்கெல்லை மற்றும் விளைவுகளை வைத்திருத்தல் உள்ளடங்கலானவை மற்றும் அவற்றின் பயனுறுதித்தன்மை மீளாய்வு செய்யப்படுகின்றது. BAC வங்கியின் கணக்காய்வினை மேற்கொள்ளும் வெளிவாரி கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுடன் தொடர்பினைக் கொண்ட பிரதான பங்கினையும் வகிக்கின்றது.

வங்கி தற்போது, பெருநிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறை நெறிமுறை 2023-இன் இணைக்கப்பட்டுள்ள பிரிவைப் பின்பற்றுகிறது. இருப்பினும், பிரிவு D.4.2-இன் கீழ் உள்ள பின்வரும் பகுதிகளைக் குறிப்பாகக் கருத்தில் கொண்டு:

(vi) நிறுவனத்தின் காப்பீட்டுத் திட்டத்தை மேற்பார்வையிட்டு, அது போதுமானதாகவும் வலுவானதாகவும் இருப்பதை உறுதி செய்தல் – போதுமான காப்பீட்டுப் பாதுகாப்பையும் திறமையான மேற்பார்வையையும் உறுதி செய்வதற்காக, வங்கியானது உள் சுற்றறிக்கைகள் மூலம் காப்பீட்டுத் திட்ட வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.

(viii) ESG இடர்நேர்வுகளை கண்காணிப்பதற்கான ஒரு செயல்முறை இருப்பதை உறுதி செய்தல் – தற்சமயம், ESG இடர்நேர்வுகள் முதன்மையாக வங்கியின் காலநிலை இடர்நேர்வு முகாமைத்துவ வரம்புறுகையின் மூலம் கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் கோவை மற்றும் பெறுநிறுவன ஆளுகை அறிக்கை

(கொள்கைகள் D.6)

வங்கியானது வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் ஆகிய இரண்டு கோவைகளைக் கொண்டுள்ளதுடன், ஒன்று பணிப்பாளர்களுக்கும் மற்றையது ஊழியர்களுக்கும் பொருத்தமானதாகும். வெளித்தோன்றும் வணிகச் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு BHRRC உரிய கோவைகளை வழமையாக மீளாய்வு செய்து அவை பொருத்தமானதாகவும் போதுமையானதாகவும் இருப்பதனை உறுதிசெய்கின்றது.

வணிக நடத்தை மற்றும் நெறிமுறைக் கோவைகள், பெறுநிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகள் கோவையின் அட்டவணை 1 இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு நெறிமுறைகள் ஆளுகை அறிக்கையைச் சேர்க்கவும்:

- நெறிமுறைகள் மீதான சபையின் மேற்பார்வை குறித்த பிரகடனம்
- பெறப்பட்ட/முடிக்கப்பட்ட முறைகேடு புகார் வழக்குகளின் சுருக்கம்
- நலன் முரண்பாடுகள் அறிவிப்பு செயல்முறை மற்றும் அதன் விளைவுகள்
- ஊழியர்கள் மற்றும் நிர்வாகக் குழுவிற்கான நெறிமுறைகள் பயிற்சி புள்ளிவிவரங்கள்

நிறுவன ஆளுகை வெளிப்பாடுகள்

(கொள்கைகள் D.7)

பக்கங்கள் 266 முதல் 275 வரை உள்ள இந்த நிறுவன ஆளுகை அறிக்கை, கொள்கை D7 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன ஆளுகைக்கான சிறந்த நடைமுறை நெறிமுறையுடனான இணக்கத்தின் அளவை வெளிப்படுத்த வேண்டிய தேவைக்கு இணங்குகிறது.

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்பு கொள்கையின் சுருக்கம்

வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ வரம்புறுகையில் தகவல் பாதுகாப்பு ஒரு முக்கிய அங்கமாகும் என்பதை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கிறது. இதன்பொருட்டு, வங்கியின் டிஜிட்டல் சொத்துக்கள், வாடிக்கையாளர் தரவு மற்றும் நிதி ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான முதன்மை ஆவணமாகச் செயல்படும் ஒரு விரிவான தகவல் பாதுகாப்புக் கொள்கையை பணிப்பாளர் சபை அங்கீகரித்து, அவ்வப்போது மதிப்பாய்வு செய்கிறது. இந்தக் கொள்கையானது ISO 27001:2022 சர்வதேசத் தரத்துடன் சீரமைக்கப்பட்டுள்ளது மற்றும் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவ வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுகிறது.

கொள்கையின் முக்கிய நோக்கங்கள்

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையானது பின்வரும் மூலோபாயத் தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

- இரகசியத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் கிடைக்கும்தன்மை: முக்கியமான வாடிக்கையாளர் மற்றும் நிறுவனத் தரவுகள் அங்கீகரிக்கப்பட்ட பயனர்களுக்கு மட்டுமே அணுகக்கூடியதாகவும், அங்கீகரிக்கப்படாத மாற்றங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டதாகவும், வணிகச் செயல்பாடுகளுக்குத் தேவைப்படும்போது கிடைக்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்தல்.
- இடர்நேர்வு அடிப்படையிலான பாதுகாப்பு: பாதுகாப்பு குறைபாடுகளைக் கண்டறிய வழக்கமான இடர்நேர்வு மதிப்பீடுகளைக் கட்டாயமாக்குதல் மற்றும் மாறிவரும் அச்சுறுத்தல் சூழலின் அடிப்படையில் பாதுகாப்பு முதலீடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- ஒழுங்குமுறை இணக்கம்: சட்ட மற்றும் நற்பெயர் அபாயங்களைக் குறைப்பதற்காக, தேசிய டிஜிட்டல் சட்டங்கள் மற்றும் நிதித்துறை ஒழுங்குமுறைகளுடன் 100% இணக்கத்தை உறுதி செய்தல்.
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சைபர் பாதுகாப்பு கொள்கை சுருக்கத்தைச் சேர்க்கவும்
- சைபர் இடர்நேர்வை மேற்பார்வையிடும் நிர்வாக வழிமுறைகளைச் சேர்க்கவும்

பங்குதாரர் உறவுகள்

(கொள்கைகள் E மற்றும் F)

கோவையின் பொருத்தமான ஏற்பாடுகள் பொருத்தமற்றது ஏனெனில் மக்கள் வங்கியின் பிரதான பங்குதாரர் இலங்கை அரசாங்கம் என்பதனாலாகும்.

பொருட்களின் இணையம் மற்றும் சைபர் பாதுகாப்பு

(கொள்கை G.1)

மாறிவரும் சூழலமைப்புடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் கண்டறிந்து நிர்வகிப்பதற்கான வங்கியின் செயல்முறையை சபை தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. இந்த வரம்புறுகை, வங்கியின் பாதுகாப்பான வலையமைப்புடன் இடைமுகம் கொள்ளும் அனைத்து தகவல் தொழில்நுட்பச் சாதனங்களும் அவை உள் சாதனங்களாக இருந்தாலும், மூன்றாம் தரப்புச் சாதனங்களாக இருந்தாலும், அல்லது வாடிக்கையாளர் பயன்படுத்தும் சாதனங்களாக இருந்தாலும் வரைபடமாக்கப்பட்டு கண்காணிக்கப்படுவதை உறுதி செய்கிறது. இந்த இடை இணைப்புகளால் வங்கியின் செயல்பாட்டு மீள்திறனில் ஏற்படக்கூடிய சைபர் பாதுகாப்பு தாக்கங்களை சபை மதிப்பீடு செய்கிறது. நிறுவப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளிலிருந்து ஏதேனும் குறிப்பிடத்தக்க விலகல்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத அணுகல் முயற்சிகள் ஏற்பட்டால், உரிய நேரத்தில் மூலோபாயத் தலையீடு மற்றும் இடர்நேர்வு தணிப்பை உறுதி செய்வதற்காக, அவை சபையின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு குழுவிடம் நேரடியாகத் தெரிவிக்கப்படுகின்றன.

(கொள்கை G.2)

எங்கள் இணையப் பாதுகாப்பு உத்தியை வழிநடத்த ஒரு தலைமைத் தகவல் பாதுகாப்பு அதிகாரிக்கு (CISO) அதிகாரம் அளிப்பதன் மூலம், ஒரு பாதுகாப்பான நிதிச் சூழலை உருவாக்குவதில் சபை உறுதியாக உள்ளது. பணிப்பாளர் குழுவின் நேரடி ஒப்புதல் பெற்ற நிதி மற்றும் அதிகாரத்துடன், தலைமைத் தகவல் பாதுகாப்பு அதிகாரி (CISO) இடர்நேர்வு முகாமையை நமது முக்கிய வணிக மாதிரியில் ஒருங்கிணைக்கும் ஒரு முழுமையான தகவல் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்துகிறார்.

இந்த ஆளுகைக் கட்டமைப்பு, நமது பாதுகாப்பு நிலை, சம்பவங்களுக்குப் பதிலளிக்கும் அமைப்புகளின் செயல்திறன் மற்றும் சுதந்திரமான தகவல் தொழில்நுட்பத் தணிக்கைகளின் முடிவுகள் குறித்த வழக்கமான அறிக்கைகளை சபை பெறுவதை உறுதி செய்கிறது. மேலும், சபை வங்கியின் விற்பனையாளர் முகாமைத்துவம் மற்றும் பேரிடர் மீட்புத் தயார்நிலையை மேற்பார்வையிடுகிறது, இதன் மூலம் சைபர் பாதுகாப்பு காப்பீடு மற்றும் வலுவான உள் கட்டுப்பாடுகள், வளர்ந்து வரும் டிஜிட்டல் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒரு பன்முகப் பாதுகாப்பை வழங்குவதை உறுதி செய்கிறது.

(கொள்கை G.3)

நிறுவன நிர்வாகத்தின் மிக உயர்ந்த தரநிலைகளைப் நிலை நிருத்துவதற்காக, வங்கியின் மூலோபாய முடிவெடுக்கும் செயல்பாடுகளில் இணையவழி இடர்நேர்வு முகாமைத்துவ ஒருங்கிணைக்கப்படுவதை சபை உறுதி செய்கிறது. டிஜிட்டல் அச்சுறுத்தல் சூழலின் சிக்கலான தன்மையைக் கையாள்வதற்காக, சபையின் ஆண்டு கால அட்டவணையில் கணிசமான நேரம் ஒதுக்கப்படுகிறது.

தலைமைத் தகவல் பாதுகாப்பு அதிகாரியின் (CISO) பாதுகாப்பு உத்தியை சபை கூர்ந்து ஆராய்வதற்கும், சைபர் பாதுகாப்பு முதலீடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும், மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்வதற்கும் இந்தக் கலந்துரையாடல்கள் ஒரு தளத்தை வழங்குகின்றன. மேலும், வங்கியின் கட்டுப்பாட்டுச் சூழலின் செயல்திறனைச் சரிபார்த்து, வளர்ந்து வரும் சைபர் அச்சுறுத்தல்களுக்கு எதிராக அந்த அமைப்பு மீள்திறனுடன் இருப்பதை உறுதி செய்வதற்காக, சபை சம்பவ அறிக்கைகளையும் சுயாதீன தணிக்கைப் பரிந்துரைகளையும் மதிப்பாய்வு செய்கிறது.

(கொள்கை G.4)

சுதந்திரமான காலமுறை ஆய்வு மற்றும் உறுதிப்படுத்தலின் மூலம் சைபர் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் செயல்திறனை சபை உறுதி செய்கிறது.

தொழில்துறையின் பாதிப்புத்தன்மை, நிறுவனத்தின் வணிக மாதிரி மற்றும் சம்பவக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், சுதந்திரமான காலமுறை ஆய்வுகளின் நோக்கத்தையும் அவ்வப்போதைய தன்மையையும் தீர்மானிக்கலாம்.

(கொள்கை G.5)

வலுவான பெருநிறுவன ஆளுகைக் கொள்கைகளுக்கு இணங்க, சைபர் பாதுகாப்பு அபாயங்களைக் கண்டறிவதற்கும் நிர்வகிப்பதற்கும் பயன்படுத்தப்படும் விரிவான வழிமுறைகளை சபை வெளிப்படுத்துகிறது. வங்கியின் பாதுகாப்பு நிலையை மேற்பார்வையிடுவதில் சபையின் நேரடி ஈடுபாடும், நமது ஒட்டுமொத்த மூலோபாய இடர்நேர்வு முகாமைத்துவ வரம்புறுகையின் சைபர் தற்காப்புத் திறனை ஒருங்கிணைப்பதை உறுதி செய்வதும் இதில் அடங்கும்.

நிலைபேறுடமை

GRI 2-9,12,13,14

(கொள்கை H)

சபையானது வங்கிக்கு ஒரு நிலைபேறுடமைக் கொள்கையினை அங்கீகரித்ததுடன், அதன் தத்துவம், குறிக்கோள்கள் மற்றும் சமூக மற்றும் சூழல் அபிவிருத்திக்கான தந்திரோபாய இலக்குகளை உறுதிப்படுத்துவதற்காக ஒரு ஆளுகைக் கட்டமைப்பினை நிறுவி அமுல்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம், இலாபம், மக்கள், பூகோளம் ஆகிய வங்கியின் செயற்பாடுகள் அனைத்திலும் அனைத்து பூகோளவியல் பிரிவுகளிலும் புகுத்தப்பட்டுள்ளன. வங்கியின் நிலைபேறுடைய வணிக முன்னெடுப்புகள் கோவையின் கொள்கைகளுக்கமைய பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன:

கொள்கை 1 – பொருளாதார நிலைபேறுடமை – பக்கங்கள் 142 முதல் 149 வரை காணப்படும் நிதிசார் மூலதனம்

கொள்கை 2 – சூழல் – பக்கங்கள் 198 முதல் 205 வரை இயற்கை மூலதனம்.

கொள்கை 3 – தொழிலாளர் நடைமுறைகள் – மனித மூலதனம் பக்கங்கள் 162 முதல் 179 வரை

கொள்கை 4 – சமூகம் – சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் பக்கங்கள் 180 முதல் 197 வரை.

கொள்கை 5 – உற்பத்திப் பொறுப்பு – சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்: வாடிக்கையாளர்கள் பக்கங்கள் 183 முதல் 188 வரை

கொள்கை 6 – உரிமைப்பங்குதாரர்களை இனங்காணல், ஈடுபாடு மற்றும் பயனுறுதியான தொடர்பாடல், உரிமைப்பங்குதாரர்களின் ஈடுபாடு பக்கங்கள் 74 முதல் 79 வரை

கொள்கை 7 – அறிக்கையிடும் செயன்முறையின் ஒரு பாகமாக நிலைபேறுடமை அறிக்கையிடல் உருவாக்கப்பட்டவண்ணமுள்ளதுடன் இது வழமையாக இடம்பெறும் – எமது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையினைப் பற்றி பக்கங்கள் 4 முதல் 7 வரை.

சபை கணக்காய்வுக் குழு மற்றும் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினூடாக சபையானது வழமையாக அமைப்புமுறைகள், செயன்முறைகள் மற்றும் வழிமுறைகளை மீளாய்வு செய்கின்றது. இது கட்டுப்பாட்டில் உள்ளக முறைகளின் பயனுறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகும். எனவே, எந்நேரமும் உயர்ந்த மட்டத்தில் அதன் அறிக்கையிடல் மற்றும் நிதியியல் விளைவுகளின் துல்லியத்தன்மை மற்றும் அதன் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றலினை உறுதிப்படுத்துவதற்காகும்.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை தொடர்பான 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டல் மற்றும் அதற்கான திருத்தங்கள்

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
1.	**நிருவாக சபையின் அதி உயர் பொறுப்பு கூறல் மற்றும் பதிவழித்தல்**	வங்கியின் ஆளுகை, மூலோபாயம், நிதியியல் உறுதிப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான இறுதிப் பொறுப்புக்கூறலை நிருவாக சபை கொண்டுள்ளது. தொழிற்பாடுகள் அனைத்து சட்டங்களுக்கும் இணங்குவதையும், பாதுகாப்பான வங்கித் தொழில் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதையும் பணிப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும், அத்துடன் அனைத்து அக்கறைதாரர்களின் நலன் கருதி புறவயமான தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஒரு பணிப்பாளர் தனது எதிர்ப்பை முறையாகப் பதிவு செய்தால் ஒழிய, நிருவாக சபையின் அனைத்து தீர்மானங்களும் கூட்டுத் தீர்மானங்களாகவே கருதப்படும்.	இணங்கப்பட்டுள்ளது
1.1	**நிருவாக சபையின் பொறுப்புக்கள்**	வங்கியின் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்காக நிருவாக சபையானது “கவனக் கடமை” மற்றும் ”விசுவாசக் கடமை” ஆகியவற்றை பின்வரும் வழிகளில் நிறைவேற்றியுள்ளது	
(அ)	நீண்டகால மூலோபாய இலக்குகள், கூட்டாண்மைப் பெறுமானங்களை நிறுவுதல் மற்றும் அவற்றை வங்கி முழுவதும் பரப்புதல் மற்றும் ஏற்றுக்கொள்ளச் செய்தல்.	2025-2027 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்காக நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாயத் திட்டம் ஒன்று அமுலில் உள்ளது. மூலோபாயத் திட்டமிடல் திணைக்களமானது 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான 2025-2027 சுழற்சி மூலோபாயத் திட்டத்தை ஏற்கனவே உருவாக்கியுள்ளது. நோக்கங்கள் தொடர்பான தொடர்பாடல்கள் மின்னஞ்சல் ஊடாக ஊழியர்களிடையே சுற்றோட்டம் செய்யப்பட்டன.	
(ஆ)	இடர்க் கொள்கை மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த வியாபார மூலோபாயத்தை அங்கீகரித்தல்.	மூலோபாயத் திட்டமானது வங்கியின் இடர் சட்டகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும், நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) வங்கியின் புதிய மூலோபாயங்கள், புதிய மூலோபாயங்களினால் ஏற்படும் இடர்கள் மற்றும் அவ்வாறான இடர்களைத் தணிப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை கலந்தாலோசிக்கின்றது. உ-ம்: 2025 இன் மீட்சித் திட்டங்கள், வெளிநாட்டுச் செலாவணி இடைவெளி எல்லைகள் மற்றும் உப எல்லைகளின் திருத்தம்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	மூன்று பாதுகாப்பு வழிகளுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் வலுவான இடர் ஆளுகைக் கலாசாரத்தை நிறுவுதல்.		இணங்கப்பட்டுள்ளது
	(i) பிரதான இடர்களை அடையாளம் காணுதல் மற்றும் இடர்களை விவேகத்துடன் முகாமைத்துவம் செய்வதற்கான பொருத்தமான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.	பிரதான இடர்களை அளவிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கும் மற்றும் புதிய மூலோபாயங்களில் இருந்து உருவாகும் இடர்களை அடையாளம் காணுவதற்கும் மற்றும் அவ்வாறான இடர்களைத் தணிப்பதற்கான வழிகளுக்கான முறைமைகளை நடைமுறைப்படுத்தும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் அமுலில் உள்ளன. வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கையை BIRMC மீளாய்வு செய்துள்ளது.	
	(ii) வங்கியின் மூன்று பாதுகாப்பு வழிகளுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட நிறுவனப் பொறுப்புக்களை நிறுவுதல், அதாவது	மூன்று பாதுகாப்பு வழிகளின் கீழ் நிறுவனப் பொறுப்புக்களை நிறுவுதல் மற்றும் நோக்கங்களுக்கான பொறுப்புக்களைச் சுயாதீனமாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கு இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பன ஆளணியினரால் முறையாக வலுப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்தல்.	
	(iii) இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் பொறுப்புக்களைச் சுயாதீனமாகவும், புறவயமாகவும், வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கு முறையாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதையும், போதிய ஆளணி மற்றும் வளங்களைக் கொண்டுள்ளதையும் உறுதிசெய்தல். இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் பொறுப்புக்கள் முறையே அட்டவணை II, III மற்றும் IV இல் வழங்கப்பட்டுள்ளன.	மூன்று பாதுகாப்பு வழிகளின் கீழ் நிறுவனப் பொறுப்புக்களை நிறுவுதல் மற்றும் நோக்கங்களுக்கான பொறுப்புக்களைச் சுயாதீனமாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்கு இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வு என்பன ஆளணியினரால் முறையாக வலுப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்தல்.	
	(iv) வங்கியின் மூலோபாய, மூலதன மற்றும் நிதியியல் திட்டங்களுடன் ஒத்துப்போகும் வகையில் வங்கியின் இடர் விருப்பார்வத்த வரையறுத்தல், இது இடர் விருப்பார்வ அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.	வங்கியின் மூலோபாய, மூலதன மற்றும் நிதியியல் திட்டங்களுடனான சீரமைப்பை வெளிப்படுத்தும் வங்கியின் இடர் விருப்பார்வ அறிக்கையை வங்கி உருவாக்கியுள்ளது.	

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
	(V) குறிப்பிட்ட இடர் நாட்ட எல்லைகள் மீறப்படும் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டுதல், இதில் அதிகப்படியான இடர்களை ஏற்பதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள், நிலைமை மேல்மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும் நடைமுறைகள் மற்றும் நிருவாக சபைப் பணிப்பாளர்களுக்கு அறிவித்தல்கள் என்பன உள்ளடங்கும்.	ஆண்டின் போது, இடர் நாட்ட எல்லை மீறல்கள் நிருவாக சபைக்கு அறிவிக்கப்படுவதுடன், ஒரு தடுப்பு நடவடிக்கையாக எல்லை மீறல்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.	
(ஈ)	நிருவாக சபையின் சுயாதீனத்தன்மை மற்றும் தேவையற்ற செல்வாக்கைத் தடுத்தல்	அதிகாரத்தின் போதிய சமநிலையை மற்றும் அனைத்துப் பணிப்பாளர்களின் உயிர்ப்பான பங்களிப்பை உறுதிசெய்யும் வகையில் நிருவாக சபையின் கலவை கட்டமைக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் நிருவாக சபையின் செயன்முறைகளில் ஏதேனும் ஒரு தனிப்பட்ட உறுப்பினர் அல்லது குழு ஆதிக்கம் செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறைக்கப்படுகின்றன. எனவே, நிருவாக சபையின் தீர்மானங்கள் அக்கறைதாரர்களுக்குத் தீங்கானதாகவோ அல்லது பாதகமானதாகவோ அமையாது.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	அனைத்து அக்கறைதாரர்களுடனான தொடர்பாடல்	இலங்கை மத்திய வங்கி (CBSL) வங்கியின் ஒழுங்குபடுத்துநராக உள்ளதுடன், மத்திய வங்கியினால் கோரப்படும் நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த ரீதியிலான பல்வேறு தகவல்களை வங்கி கண்டிப்பாகப் பின்பற்றி வழங்குவதுடன், வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கள மற்றும் களஞ்சாரா பரிசோதனைகளுக்கான தகவல்களையும் வழங்குகின்றது. நிதியியல் நுகர்வோர் பாதுகாப்புக் கொள்கையை வங்கி நடைமுறைப்படு-த்தியுள்ளதுடன், இது வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் கொள்கையையும் உள்ளடக்கியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு, வங்கியின் முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரிகளைத் தொடர்புகொள்வதற்கான தொலைபேசி இலக்கங்களை வங்கி வழங்கியுள்ளது. இதற்காக 24 மணி நேரமும் செயற்படும் மும்மொழி வாடிக்கையாளர் துரித சேவை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மைத் தொடர்பாடல் கொள்கையொன்றும் அமுலில் உள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)	உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள்	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமையின் போதியதன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மீளாய்வு செய்யும் நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுவினால் (BAC) இது தொடர்பில் நிருவாக சபைக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்தொழிற்பாட்டை நிறைவேற்றுவதில் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களிடமிருந்தான அறிக்கைகளை BAC மீளாய்வு செய்துள்ளதுடன், இது தொடர்பான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகளையும் மீளாய்வு செய்துள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(எ)	தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்களின் ஆளுகை மற்றும் கட்டுப்பாடு	வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் மற்றும் அக்கறை முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், வங்கியினால் மற்றும் அதன் துணை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடைய தரப்பினருடனான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் (RPT) மீளாய்வு செய்வதில் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக்குழு (RPTRC) நிருவாக சபைக்கு உதவுகிறது. ஒட்டுமொத்தப் பங்குதாரர்களின் நலன்கள் கருத்திற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதும், அத்துடன் பணிப்பாளர்கள், முக்கிய முகாமைத்துவப் பதவியணியினர் (KMP) மற்றும் பிரதான பங்குதாரர்கள் தமது பதவிகளிலிருந்து தேவையற்ற நன்மைகள் எவற்றையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை உறுதிசெய்வதுமே இக்குழுவின் வகிபாகமாகும். வங்கியின் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் 2025 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் கொள்கையினால் ஆளப்படுகின்றன. தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல்கள் (RPT) தொடர்பான வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்குத் தேவையான அனைத்து வெளிப்படுத்தல்களும் செய்யப்படுவதையும் இந்தச் செயன்முறை உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)	அனர்த்த மீட்சி மற்றும் வியாபாரத் தொடர்ச்சிக் கூட்டாண்மை ஆளுகை	நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதிலும், தொழிற்பாட்டு ரீதியிலான மீள்திறனை உறுதி செய்வதிலும், அத்துடன் பிரதானமாக நியதிச்சட்டக் கட்டளைகளுக்கு அமைவாக மைய-வங்கித் தொழில் முறைமைகள் போன்ற முக்கியமான தொழிற்பாடுகளைப் பேணுவதிலும் அவற்றின் போதியதன்மையை உறுதிப்படுத்துவதற்காக, வங்கியின் வியாபாரத் தொடர்ச்சி மற்றும் அனர்த்த மீட்சித் திட்டங்களின் வருடாந்த மீளாய்வு ஒன்றை நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) மேற்கொள்கிறது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஒ)	இடருடன் ஒருங்கிணைந்த ஊதியத்தின் ஆளுகை	தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த ஆளணியினரைக் கவர்ந்திழுத்தல், ஊக்கமளித்தல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட விரிவான ஊதிய முறைமையொன்றை வங்கி கொண்டுள்ளது. மேலும், வங்கி வருடாந்தச் செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், அதன் முடிவுகள் பிரதான செயலாற்றல் சுட்டி (KPI) அடிப்படையிலான கொடுப்பனவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஊழியர்களை மதிப்பிடுவதற்கான வருடாந்த அதிகரிப்பு முறைமையொன்றும் உள்ளது. நிருவாக சபையின் மனித வள மற்றும் ஊதியக் குழு (BHRRC), முக்கிய முகாமைத்துவப் பதவியணியினரின் (KMPs) பிரதான செயலாற்றல் சுட்டிகளை காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்கிறது. நிருவாக சபைப் பணிப்பாளர்களின் ஊதியமானது நிதி அமைச்சினால் அமைக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமையத் தீர்மானிக்கப்படுகின்றது. சுயாதீனப் பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான வழிகாட்டல்கள், நிதி அமைச்சின் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைக்கும் வரை நிலுவையில் உள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(ஓ)	“பிரதான முகாமைத்துவ ஆளணியினரை” (KMP) அடையாளங்காணல்	வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMPs), தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் உதவிப் பொது முகாமையாளர்கள் என அடையாளங்காணப்பட்டுள்ளனர். கொள்கைகளில் கணிசமான செல்வாக்குச் செலுத்துபவர்கள், செயற்பாடுகளை வழிநடத்துபவர்கள் மற்றும் வியாபாரச் செயற்பாடுகள், தொழிற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆவர். நியமிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் அனைத்து நியமனங்களும் BNGC இனால் பரிந்துரைக்கப்பட்டு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றன. அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகளையும் கருத்திற்கொண்டு, வங்கியின் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல்வாங்கல் கொள்கையில் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வரையறுக்கப்பட்டுள்ளனர்.	இணங்கப்பட்டுள்ளது
(ஔ)	ஆளுகைச் சட்டகத்தில் நிருவாக சபை, பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முகாமைத்துவத்தின் வகிபாகங்கள்	நிருவாக சபைப் பணிப்புரைச் சட்டமானது நிருவாக சபைக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விவரிப்பதுடன், அதன் அதிகார வரம்பு மற்றும் பிரதான பொறுப்புக்கூறல்களை முறைப்படி நிறுவுகிறது. மறுபுறம், கூட்டாண்மை முகாமைத்துவத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களின் அதிகாரம் மற்றும் முக்கிய பொறுப்புக்கள் அவர்களது உரிய வேலை விவரிப்புகளில் முறையாக வரையறுக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(க)	முகாமைத்துவப் பொறுப்புக்கூறல் மற்றும் வங்கியின் விவகாரங்களின் மூலோபாயச் செயற்படுத்தல்	நிருவாக சபையானது வங்கியின் மூலோபாயத் திட்டத்திற்கு ஒப்பான செயலாற்றலைச் சுறுசுறுப்பாக மீளாய்வு செய்கிறது. இதற்கு, நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம், பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மாற்றங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான விடயங்களை உள்ளடக்கிய, அவற்றுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பான அதன் குழுக்களின் அறிக்கைகள் உதவுகின்றன. மேலும் நுண்ணறிவைப் பெறுவதற்கு, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய பிரதான முகாமைத்துவ ஆளணியினரிடமிருந்து அவர்களது அதிகார வரம்பிற்குட்பட்ட விடயங்கள் தொடர்பான தொடர்ச்சியான சமர்ப்பிப்புகளை நிருவாக சபை கோருவதுடன், பொருத்தமான தொழிற்பாட்டு விடயங்கள் தொடர்பான விளக்கங்களை வழங்குமாறும் அவர்களைக் கோருகிறது. மக்கள் வங்கிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் படி, பணிப்பாளர்களின் நியமனம் அமைச்சரால் மேற்கொள்ளப்படுகிறது. இவர்களில் இருவர் கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுவர். எவ்வாறாயினும், சுயாதீனப் பணிப்பாளர்களின் தெரிவு மற்றும் நியமனம் விசேட தெரிவுக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.	இணங்கப்பட்டுள்ளது
(கா)	சொந்த ஆளுகை நடைமுறைகளின் வினைத்திறனை மதிப்பிடுதல்	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவு மற்றும் நியமனம் BNGC இனால் மேற்கொள்ளப்பட்டு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்படுகிறது. மீளாய்வுக்காக 2025 ஆம் ஆண்டிற்கான பூர்த்தி செய்யப்பட்ட நிருவாக சபையின் செயலாற்றல் மதிப்பீட்டுப் படிவங்கள் (சுய/நிருவாக சபை/குழுக்கள்) அனைத்து நிருவாக சபை உறுப்பினர்களிடமிருந்தும் பெறப்பட்டன. அத்துடன் இதற்கான பதிலளிப்புகள் BNGC கூட்டத்திலும், அதனைத் தொடர்ந்த நிருவாக சபைக் கூட்டத்திலும் கலந்தாலோசிக்கப்பட்டன. வங்கியின் ஆளுகை நடைமுறைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்காக, கருத்திற்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆண்டின் போது பின்தொடரப்பட்டு மேம்படுத்தப்படுகின்றன. மதிப்பீட்டுச் செயன்முறையானது ஆளுகைத் தரங்களில் மேம்பாட்டை உறுதிசெய்வதுடன், மூலோபாய நோக்கங்களை அடைவதில் நிருவாக சபையின் செயலாற்றலை ஒருங்கிணைக்கிறது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(கி)	பணிப்பாளர்களின் சுய-மதிப்பீடு	வங்கி வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு பணிப்பாளராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய-மதிப்பீட்டு முறைமையொன்றைக் கொண்டுள்ளது. நிருவாக சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு தனிநபராகத் தனது சொந்த வினைத்திறன் மற்றும் ஒட்டுமொத்த நிருவாக சபையின் வினைத்திறன் ஆகியவற்றின் மீதான சுய-மதிப்பீட்டை மேற்கொண்டனர். மேலும், ஒவ்வொரு பணிப்பாளரும் ஒரு பணிப்பாளராகப் பணியாற்றுவதற்கான தனது "தகுதி மற்றும் பொருத்தப்பாட்டை" மதிப்பீடு செய்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(கீ)	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான தொடர்ச்சித் திட்டம்	நிருவாக சபையின் பெயர்குறித்தல் மற்றும் கூட்டாண்மை ஆளுகைக் குழுவானது (BNGC), பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் தொடர்தன்மைக்கான விண்ணப்பதாரர்களைத் திட்டமிடுவதற்கும் மதிப்பிடுவதற்கும் ஒரு செயலூக்கமான செயன்முறையை உருவாக்கியுள்ளதுடன், அவர்களின் தயார்நிலையை உறுதி செய்வதற்கான அபிவிருத்தித் திட்டங்களையும் கொண்டுள்ளது. நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான தொடர்ச்சித் திட்டம் அமுலில் உள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(கு)	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் ஒழுங்கான கூட்டங்கள்	கூட்டாண்மை நோக்கங்களை நோக்கிய முன்னேற்றமானது நிருவாக சபையின் வழக்கமான நிகழ்ச்சி நிரலில் உள்ள ஒரு விடயமாகும், மேலும் கூட்டாண்மை முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் இது தொடர்பான நிருவாக சபை மட்டத்திலான கலந்துரையாடல்களில் வழக்கமாக ஈடுபடுகின்றனர். மேலதிகமாக, அவர்கள் நிருவாக சபைக் கூட்டங்களிலும் அதன் குழுக்களிலும் கொள்கை மற்றும் அவர்களது துறைகள் தொடர்பான ஏனைய விடயங்கள் குறித்த சமர்ப்பிப்புகளை மேற்கொள்வதற்காக வழக்கமான அடிப்படையில் கலந்துரையாடல்களுக்கு அழைக்கப்படுகின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(கூ)	ஒழுங்குமுறைச் சூழல் மற்றும் ஒழுங்குபடுத்துநர்களுடன் வினைத்திறனான உறவைப் பேணுதல்	பணிப்பாளர்கள் தமது பொறுப்புகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு வசதியாக, நிருவாக சபைக் கூட்டங்களின் போது பிரதான முகாமைத்துவ ஆளணியினரால் ஒழுங்குமுறை முன்னேற்றங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது. நிருவாக சபைக் கணக்காய்வுக்குழு (BAC) மற்றும் நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் அவர்களது கூட்டங்களின் போது உள்ளகக் கணக்காய்வு, இடர் மற்றும் இணக்கப்பாட்டுத் தலைவர்களால் ஒழுங்குமுறை முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்கப்படுகிறது. நிருவாக சபை உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) ஏற்பாடு செய்யப்படும் பணிப்பாளர் கருத்துக்களங்களிலும் கலந்துகொள்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(கெ)	வெளிவாரி கணக்காய்வாளர்களைப் பணியில் அமர்த்துதல்	கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார்.	இணங்கப்பட்டுள்ளது
(கே)	அன்பளிப்புகள் மற்றும் ஊக்கத்தொகைகள் தொடர்பான வழிகாட்டல்கள்	நிதி மற்றும் நிதிசாரா அன்பளிப்புகள், சலுகைகள் அல்லது சட்டவிரோதமான முறையில் எதையும் பெற்றுக்கொள்வது மற்றும் வழங்குவது தொடர்பாக விரிவான வழிகாட்டல்களை வங்கி நிறுவியுள்ளது. இந்த வழிகாட்டல்கள் நிதி திரட்டும் நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது விநியோகஸ்தர்களுடனான தனிப்பட்ட உறவுகளையும் நிர்வாகச் சுற்றறிக்கைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு நிர்வகிக்கின்றன. இது கூட்டாண்மை ஆளுகை தொடர்பான திருத்தப்பட்ட சிறந்த நடைமுறைக்கோவை மற்றும் மக்கள் வங்கியின் நடத்தைக்கோவை ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிருவாக சபை கையேட்டு ஆவணத்தின் கீழ் "பணிப்பாளர்களுக்கான ஒழுக்கக்கோவை" என்ற பிரிவை நாங்கள் கண்டுள்ளோம்.	இணங்கப்பட்டுள்ளது
(கை)	தொழில்முறை, ஒழுக்கநெறி மற்றும் விவேகமான நடத்தைக் கலாசாரம்	பணிப்பாளர்களுக்குப் பொருந்தக்கூடிய வியாபார நடத்தைக் கோவை மற்றும் ஒழுக்கநெறிகளைக் குறிப்பிடும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட "நிருவாக சபை வழிகாட்டல் சாசனம்" வங்கியில் உள்ளது. பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்காகவும் வங்கி "ஒழுக்காற்றுக் கோவையை" நடைமுறைப்படுத்தியுள்ளது, இது ஒழுக்கநெறி சார்ந்த நடத்தைக்கான தெளிவான எதிர்பார்ப்புகளை நிறுவுகிறது. இது வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட தீர்மானம் எடுத்தல், மரியாதையான பணியிடத் தொடர்புகள் மற்றும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தரங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் ஆகியவற்றில் ஊழியர்களை வழிநடத்துகிறது.	இணங்கப்பட்டுள்ளது
(கொ)	மேற்பார்வை அக்கறைகளை சரியான நேரத்தில் சீர்செய்தல்	புதிய ஒழுங்குமுறைத் தேவைகளை உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் சரியான நேரத்தில் ஒருங்கிணைப்பதை ஆதரிப்பதற்காக கட்டாய நிருவாக சபைக் குழுக்களை நிறுவுதல் உள்ளிட்ட பல முக்கிய நடவடிக்கைகளை வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. இணக்கப்பாட்டு நடவடிக்கைகளின் தொடர்ச்சியான பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக இக்குழுக்கள் வழக்கமான மீளாய்வுகளையும் நடத்துகின்றன.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(கோ)	தகவல் வெளியிடுவோர் கொள்கை	வங்கி தனது தகவல் வெளியிடுவோர் சாசனத்தின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாசாரத்தைப் பேணுகின்றது. ஊழியர்கள் ஒழுக்கநெறி மீறல்கள் மற்றும் கவலைகளைத் தெரிவிப்பதற்கு பாதுகாப்பான, இரகசியமான மற்றும் அநாமதேயத் தளமொன்றை இது உறுதிப்படுத்துகிறது. தடையற்ற அறிக்கையிடலை எளிதாக்குவதற்காக,அவசர அழைப்பு இலக்கங்கள் மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரிக்கு நேரடி அணுகல் உள்ளிட்ட பல வழிகளை வங்கி வழங்குகிறது. அத்துடன் ஊழியர்கள் விடயங்களை ஆளுகையின் மிக உயர்ந்த மட்டம் வரை கொண்டு செல்லும் தெரிவையும் கொண்டுள்ளனர். தகவல் வெளியிடுவோர் சாசனம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மீளாய்வு செய்யப்படுகிறது.	இணங்கப்பட்டுள்ளது
(கௌ)	நிலைபேறு மற்றும் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) ஒருங்கிணைப்பு	நீண்ட கால நிலைபேறான தன்மை மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாட்டை முன்னெடுப்பதற்காக, வங்கியின் வியாபார மூலோபாயத்தில் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) கொள்கைகளை முழுமையாக ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை நிருவாக சபை அங்கீகரித்ததுடன் வலியுறுத்தியது. பசுமையான, காலநிலை-நட்பு மற்றும் சமூக ரீதியாக உள்ளடக்கிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு (நிலைபேறான விவசாயம் மற்றும் வாடிக்கையாளர் மட்டத்தில் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான நடைமுறைகளை ஏற்றுக்கொள்வது உட்பட) ஆதரவளிக்கும் வகையில் கடன் வழங்கல், முதலீடுகள் மற்றும் கிளைச் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை நுளுபு கொள்கை வழிகாட்ட வேண்டும் என பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். இக்கொள்கையானது வெறும் இணக்கப்பாட்டுச் செயற்பாட்டிற்கு அப்பால், அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் வங்கியின் மூலோபாயத் திட்டத்துடன் ஒத்துப்போக வேண்டும் என்பதையும், நிலைபேற்றுத்தன்மையை அனைத்து வியாபாரத் தீர்மானங்களிலும் உட்புகுத்துவதற்கு முறையான ஆளுகைக் கட்டமைப்புகள், வள ஒதுக்கீடு மற்றும் தொடர்ச்சியான இணக்கப்பாட்டு கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் நிருவாக சபை மேலும் வலியுறுத்தியது.	இணங்கப்பட்டுள்ளது
1.2	**தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமித்தல்**	மக்கள் வங்கிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்படி, அமைச்சர் தனது உறுப்பினர்களுக்கிடையிலிருந்து நிருவாக சபையின் தவிசாளரை நியமிப்பார். சுயாதீனமற்ற, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரான பேராசிரியர் பி.என்.டி பெர்னாண்டோ நிருவாக சபையின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. கிளைவ் பொன்சேகா அவர்களை பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக நிருவாக சபை நியமித்ததுடன், குறித்த நியமனத்திற்கு இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. அதிகாரம் ஓரிடத்தில் குவிவதைத் தடுப்பதற்காக தவிசாளருக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் இடையே தெளிவான பிரிவினை இருப்பதை நிருவாக சபை வழிகாட்டல் சாசனம் பேணுகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
1.3	**நிருவாக சபைக் கூட்டங்களின் மீள்தன்மை மற்றும் நடாத்துதல்**	நிருவாக சபையானது வழக்கமான மாதாந்தக் கூட்டங்களை நடத்துவதுடன், எழும் விடயங்களைக் கையாள்வதற்குத் தேவையான விசேட கூட்டங்களையும் நடத்துகின்றது. மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து விடயங்கள் குறித்தும் பணிப்பாளர்கள் தீவிரமான கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றனர். தொடர்ச்சியான மேற்பார்வையைப் பேணுவதற்காக, சுற்றோட்டத் தீர்மானங்களின் பயன்பாட்டை வங்கி விதிவிலக்கான சூழ்நிலைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தியுள்ளதுடன், அத்தகைய தீர்மானங்கள் அடுத்த நிருவாக சபைக் கூட்டத்தில் முறைப்படி உறுதிப்படுத்தப்படுகின்றன. நிருவாக சபைக் கூட்டங்கள் நேரில் நடைபெற்றன. நேரில் கலந்துகொள்ள முடியாத எந்தவொரு நிருவாக சபை உறுப்பினரும் கூட்டங்களில் மெய்நிகர் ரீதியாகக் கலந்துகொண்டு கலந்துரையாடல்களில் தீவிரமாகப் பங்களிக்க முடியும். முழு விபரங்களும் அடங்கிய வருகைப்பதிவுகளும் மொத்த மீள்திறன் கூட்டங்களும் பக்கம் 267 இல் வழங்கப்பட்டுள்ளது	ள்இணங்கப்பட்டுள்ளது
1.4	**நிருவாக சபையின் நடைமுறைகள்**		
(அ)	நிருவாக சபைக் கூட்டங்களின் வழக்கமான நிகழ்ச்சி நிரலுக்காக பணிப்பாளர்களால் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்	பணிப்பாளர்கள் வங்கியின் வியாபாரச் செயற்பாடுகள், இடர் முகாமைத்துவக் கட்டமைப்புகள் அல்லது ஊழியர்களின் நடத்தை தொடர்பாக தவிசாளருடன் கலந்தாலோசிப்பதன் மூலம் நிகழ்ச்சி நிரல் விடயங்களை முன்மொழியலாம்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	கூட்ட அறிவித்தல்	நிருவாக சபை மீளாய்வு செய்வதற்குப் போதிய கால அவகாசம் இருப்பதை உறுதி செய்வதற்காக, கூட்ட அறிவித்தல், நிகழ்ச்சி நிரல் மற்றும் பெரும்பாலான ஆதரவு ஆவணங்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பணிப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இது முழுமையான தயாரிப்பிற்கு இடமளிப்பதுடன், கூட்டத்திற்கு முன்னதாக ஏதேனும் அவசர முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(இ)	பணிப்பாளர்களின் வரவு	கட்டளைகளுக்கு இணங்க பணிப்பாளர்களின் வரவு கண்காணிக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிப்பாளர்களும் ஆண்டின் போது நடைபெற்ற கூட்டங்களில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு கூட்டங்களில் கலந்துகொண்டனர், மேலும் எந்தவொரு பணிப்பாளரும் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காமல் இருக்கவில்லை. மேலதிக தகவலுக்கு பக்கம் 267 இல் உள்ள "வழக்கமான நிருவாக சபைக் கூட்டங்களை நடாத்துதல்" என்பதைப் பார்க்கவும்.	இணங்கப்பட்டுள்ளது
1.5	**நிறுவனச் செயலாளரை நியமித்தல்**		
(அ)	நிறுவனச் செயலாளரின் நியமனம் மற்றும் பொறுப்புகளை நிர்ணயித்தல்	நிருவாக சபையின் செயலாளர், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவான ஒரு சட்டத்தரணி ஆவார். நிருவாக சபையானது செல்வி ஷியாமா விஜேகோன் அவர்களை நிருவாக சபைச் செயலாளர் தரத்திற்கு நியமித்துள்ளது. நிருவாக சபைச் செயலாளரின் பொறுப்புகள் வேலை விவரிப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	நிறுவனச் செயலாளரின் வகிபாகம் மற்றும் அணுகல்	நிருவாக சபைச் செயலாளர், உயர்தர கூட்டாண்மை ஆளுகையைப் பேணுவதற்கும், அனைத்து நிருவாக சபை நடவடிக்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய ஒழுங்குமுறை கடப்பாடுகள் வினைத்திறனாக பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்கும் தொழில்முறை ஆலோசனை மற்றும் ஆதரவுடன் நிருவாக சபை உறுப்பினர்களுக்கு உதவுகிறார்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	பணிப்பாளர்களுக்கான தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தியை நடைமுறைப்படுத்தல்	நிருவாக சபைச் செயலாளர், BNGC/நிருவாக சபையின் பரிந்துரையுடன் பயிற்சி, ஆற்றல் மேம்பாடு மற்றும் தொழில்முறை அபிவிருத்தி திட்டங்களை எளிதாக்குகிறார். பணிப்பாளர்கள் மாறிவரும் ஆளுகைத் தரநிலைகள் மற்றும் துறைசார் போக்குகள் குறித்துத் உடனுக்குடன் அறிந்துகொள்வதையும், தமது கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்ற முழுமையாகத் தயாராக இருப்பதையும் இந்த முயற்சிகள் உறுதி செய்கின்றன.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	நிருவாக சபை அறிக்கைகளை பேணுதல் மற்றும் ஆய்வு செய்தல்	நிருவாக சபைச் செயலாளர் அனைத்து நிருவாக சபைக் கூட்டங்களின் அறிக்கைகளைப் பேணிப் பதிவு செய்கிறார். இவை பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் தவிசாளரின் ஆரம்ப மீளாய்வைத் தொடர்ந்து நிருவாக சபைப் பணிப்பாளர்களுக்குச் சுற்றோட்டம் செய்யப்படுகின்றன. இந்த அறிக்கைகள் அடுத்த கூட்டத்தில் முறையாக மீளாய்வு செய்யப்பட்டு, பணிப்பாளர்களால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அல்லது சேர்த்தல்கள் (ஏதேனும் இருப்பின்) உள்ளடக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிப்படைத்தன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, கடந்தகால நிருவாக சபை ஆவணங்கள் மற்றும் குறிப்புகளின் காப்பகத்தைப் பார்க்க பணிப்பாளர்களுக்குப் பாதுகாப்பான மின்னணு அணுகல் வழங்கப்படுகிறது. மேலும், நிருவாக சபைச் செயலாளர் இப் பதிவுகளை நிருவாக சபையின் ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களுக்கு ஒரு சான்றாதாரமாகவும், ஒழுங்குபடுத்துநர்களின் பயன்பாட்டிற்காகவும் போதுமான விபரங்களுடன் பேணுகிறார்.	இணங்கப்பட்டுள்ளது
1.6	**நிருவாக சபைக் கூட்ட குறிப்புகளைப் பேணுதல்**	கூட்டங்களின் அறிக்கைகள் ஏனையவற்றுடன் சேர்த்து, நிருவாக சபை தனது ஆலோசனைகளில் பயன்படுத்திய தரவு மற்றும் தகவல்களின் சுருக்கம், நிருவாக சபையினால் பரிசீலிக்கப்பட்ட விடயங்கள், உண்மை கண்டறியும் விவாதங்கள் மற்றும் முரண்பாடு அல்லது கருத்து வேறுபாடுள்ள விடயங்கள், நிருவாக சபையின் மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் சாட்சியங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள், வங்கி எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் BIRMC இன் அறிக்கைகள் உள்ளிட்ட இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் மேலோட்டம் மற்றும் தீர்மானங்கள் மற்றும் நிருவாக சபை தீர்மானங்களை உள்ளடக்கியுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
1.7	**சுயாதீன தொழில்முறை ஆலோசனையைப் பெறுதல்**	பொருத்தமான சூழ்நிலைகளில் வங்கியின் செலவில் சுயாதீன தொழில்முறை ஆலோசனையைப் பெறுவதற்கான நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை அமுலில் உள்ளது. பணிப்பாளர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான போதெல்லாம் சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளைப் பெறலாம். இந்தச் செயன்முறையை ஒருங்கிணைப்பதற்கு நிருவாக சபைச் செயலாளர் பொறுப்பாக இருப்பார்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
1.8	**நலன் முரண்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்** GRI 2-15		இணங்கப்பட்டுள்ளது
	(அ) ஏனைய நிறுவனங்களுடனான செயல்பாடுகள் மற்றும் கடப்பாடுகளில், பணிப்பாளர்கள் நலன் முரண்பாடுகள் அல்லது சாத்தியமான நலன் முரண்பாடுகளைத் தவிர்க்கின்றனர். (ஆ) ஒரு பணிப்பாளர் தமக்கோ அல்லது தமது நெருங்கிய உறவினருக்கோ அல்லது தமக்கு கணிசமான நலன் உள்ள ஒரு நிறுவனத்திற்கோ தொடர்புடைய ஒரு விடயம் குறித்த எந்தவொரு கலந்துரையாடலிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். அத்துடன் அது தொடர்பான தகவல்களை நேரடியாகவோ அல்லது மின்னணு முறையிலோ அணுகக் கூடாது.	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது, சாத்தியமான நலன் முரண்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் வழிகாட்டல்களை வழங்குகிறது. பணிப்பாளர்கள் நியமிக்கப்படும் போதும், காலாண்டு அடிப்படையிலும், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம் உடனடியாகவும் தமது நலன்கள் குறித்த வெளிப்படுத்தல்களைச் செய்ய வேண்டும். நலன் முரண்பாடுகள் ஏற்படும் போது பணிப்பாளர்கள் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்கின்றனர்: ● தொடர்புடைய நிகழ்ச்சி நிரல் விடயம் விவாதிக்கப்படும் காலப்பகுதியில் கூட்டத்திலிருந்து வெளியேறுதல். ● அனைத்துக் கலந்துரையாடல்கள், கருத்து வெளிப்பாடுகள் மற்றும் தீர்மானம் எடுக்கும் செயல்முறையிலிருந்து விலகியிருத்தல். ● நிர்ணயிக்கப்பட்ட கூட்ட நடவெண்ணிக்கை கணிப்பிலிருந்து நீக்கப்படுதல். ● தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் குறித்த தகவல்களை நேரடியாகவோ அல்லது மின்னணு முறையிலோ பெறாதிருத்தல். பணிப்பாளர்கள் தங்களுக்கு இடையேயும், அதேபோன்று பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் இடையிலான உறவுகள் மிதமிஞ்சிய நெருக்கம் அல்லது தகாத செல்வாக்கிற்கு இட்டுச் செல்லாத மட்டத்தில் இருப்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர்களின் வெளிவாரி நியமனங்கள் குறித்த தகவல்கள் பக்கம் 38-43 இல் உள்ள அவர்களின் விபரக் குறிப்புகளில் காணப்படலாம். நலன் முரண்பாட்டுக் கொள்கையை உருவாக்கும் பணியில் வங்கி ஈடுபட்டுள்ளது.	
	(இ) பணிப்பாளர்கள் தங்களுக்கு இடையேயும், அதேபோன்று பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் இடையிலான உறவுகள் மிதமிஞ்சிய நெருக்கம், தகாத செல்வாக்கு அல்லது கட்டாயப்படுத்துதலுக்கு இட்டுச் செல்லாத மட்டத்தில் இருப்பதை உறுதி செய்கின்றனர். (ஈ) நலன் முரண்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்குமான கொள்கையை நிருவாக சபை அங்கீகரிப்பதுடன் அதன் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்யும்.		
1.9	**நிதியியல் நெருக்கடியின் போது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டிய கடமை**	வங்கி கடன்தீர்க்கும் திறனுடன் உள்ளதுடன் அதன் நிதியியல் நிலைக்கு எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளவில்லை. ஏதேனும் சாத்தியமான கடன்தீர்க்க முடியாத நிலை அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடனாளர்களுக்கு கொடுப்பனவுகளை நிறுத்துவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னர், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு எச்சரிக்கை செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான முறையான நடைமுறை அமுலில் உள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
1.10	**(விவேகமான தேவைகளுடன் இணங்குதல்) சட்டரீதியான மூலதன மட்டங்களைப் பேணுதல்**	ஒழுங்குமுறை அளவுகோல்கள் மற்றும் உள்ளக இடர் வரம்புகளுக்கு எதிராக வங்கியின் மூலதன நிலையை நிருவாக சபை தீவிரமாக மதிப்பீடு செய்கிறது. ஆண்டின் போது வங்கி அனைத்து குறைந்தபட்ச மூலதனப் போதியளவு தரநிலைகளுக்கும் இணங்கியுள்ளது. நிதியியல் செயல்திறன் மீளாய்வு மூலம் முகாமைத்துவமானது மூலதன நிலையை மாதாந்தம் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கிறது. 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டல்களின் கீழ் தேவைப்படும் விரிவான Basel III மூன்றாம் தூண் (Pillar 3) வெளிப்படுத்தல்கள், பக்கம் 448-466 இல் உள்ள இணைப்பு 2 இல் வழங்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
1.11	**வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையை வெளியிடுதல்**	வங்கியின் வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையானது இவ்வருடாந்த அறிக்கையின் 260 முதல் 309 வரையான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
2.	**நிருவாக சபையின் கட்டமைப்பு மற்றும் பல்வகைமை**	நிருவாக சபையானது 07 சுயாதீனப் பணிப்பாளர்கள் உட்பட 12 பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன், இது வங்கியின் நலன்களுடன் உயர்ந்தளவிலான தன்னாட்சி மற்றும் அர்ப்பணிப்புடனான ஒருங்கிணைப்பை உறுதி செய்கிறது. பல்வேறு துறைகள், பாலினங்கள் மற்றும் தொழில்முறைப் பின்னணிகளைக் கொண்ட நிருவாக சபையின் பல்வகைமையானது அனுபவம் மற்றும் நுண்ணறிவு ஆகியவற்றின் வலுவான கலவையை உறுதி செய்கிறது. ஒவ்வொரு பணிப்பாளரும் பல்வேறு தொழில்முறைத் துறைகளில் தமக்குள்ள பரந்த நிபுணத்துவத்தின் மூலம் கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு ஆக்கபூர்வமான சவால்களை விடுக்கும் கலாசாரத்தை வளர்ப்பதற்கும், சிக்கலான, மாறும் தன்மையான விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கின்றனர். வங்கித் தொழில் மற்றும் நிதி, கணக்கீடு, வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், பொறியியல், மானிடவியல் உள்ளிட்ட பல துறைகளிலுமான விசேட அறிவை ஒருங்கிணைப்பதன் மூலம் வங்கியின் பல்வகைமைக்கான அர்ப்பணிப்பினை நிருவாக சபை மேலும் எடுத்துக்காட்டுகிறது. மேலதிக தகவல்களுக்கு 263 ஆம் பக்கத்தில் 2025 டிசம்பர் 31 ஆந் திகதியிலான “கூட்டுத் திறன்கள்” என்பதைப் பார்க்கவும்.	இணங்கப்பட்டுள்ளது
2.1	**பணிப்பாளர்களை நியமிப்பதற்கான நடைமுறை**	1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2024 ஏப்ரல் 08 மற்றும் 2025 மே 19 ஆந் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நியமிக்கப்பட்ட விசேட தெரிவுக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக, நிருவாக சபைக்கான நியமனங்கள் நிதியமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்றன. 2024 ஏப்ரல் 05 ஆந் திகதியிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் இணைப்பு 1 இன் 3.8 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட விசேட தெரிவுக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக சுயாதீனப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது ஊழியர்கள் எவரும் வேறொரு வங்கி அல்லது அதன் துணை நிறுவனம் அல்லது இணை நிறுவனத்தில் நியமிக்கப்படவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
2.2	**பணிப்பாளர்களின் எண்ணிக்கை** (i) நிருவாக சபையில் உள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 இற்குக் குறையாமலும் 13 இற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். பணிப்பாளர்களின் எண்ணிக்கை வங்கியின் தொழிற்பாடுகளின் பருமன், அளவு, பல்வகைமை மற்றும் சிக்கற்தன்மை என்பவற்றிற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். (ii) நிருவாக சபையானது 31.12.2025 இற்குள் குறைந்தது ஒரு பெண் பிரதிநிதியையாவது கொண்டிருக்க வேண்டும், அத்துடன் 10 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள நிருவாக சபைகள் 2026 டிசம்பர் 31 இற்குள் குறைந்தது இரண்டு பெண் பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.	நிருவாக சபையானது 2025 செப்டெம்பர் 17 முதல் 2025 டிசம்பர் 31 வரை ஏழு (7) இற்குக் குறையாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன், 2025 ஜனவரி 01 முதல் 2025 செப்டெம்பர் 16 வரையான காலப்பகுதியில் நிருவாக சபை ஐந்து (05) பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. 2025 டிசம்பர் 31 ஆந் திகதி நிலவரப்படி நிருவாக சபை இரண்டு (02) பெண் பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. ● திருமதி ஜி.ஏ.எம். எட்வர்ட்ஸ் ● திருமதி சீ.எச்.டி. அபயகுணவர்தன	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
2.3	**நிறைவேற்றுப் பணிப்பாளர்கள்**	நிருவாக சபையில் (BOD) நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் எவரும் இல்லை.	இணங்கப்பட்டுள்ளது
2.4	**நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்**	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள், மூலோபாயம், செயலாற்றுகை மற்றும் வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் சுயாதீனமான தீர்மானங்களை வழங்குவதற்கும் வங்கியின் நிலைபேறான தன்மைக்குப் பங்களிப்பதற்கும் அவசியமான விசேட நிபுணத்துவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுகளைக் கொண்ட அனுபவம் வாய்ந்த தொழில்வல்லுநர்கள் ஆவர்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
2.5	**சுயாதீனப் பணிப்பாளர்கள்**	நிருவாக சபையானது ஏழு (07) சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, இது நிருவாக சபையின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மையாகும். 16.09.2025 வரை நிருவாக சபை ஒரு சுயாதீனப் பணிப்பாளரைக் கொண்டிருந்ததுடன், 16.09.2025 இற்குப் பின்னர், ஏழு சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் நிருவாக சபையில் உள்வாங்கப்பட்டனர். 2025 ஆம் ஆண்டில் பணியாற்றிய சுயாதீனப் பணிப்பாளர்கள்: • திரு. சி.எஸ். குணயங்கொட (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திருமதி. ஜி.ஏ.எம். எட்வர்ட்ஸ் (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திரு. எஸ்.எம்.எஸ். சஞ்சய பண்டார (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திரு. டி.பி. லொக்குஆராய்ச்சி (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திரு. என்.எஸ்.பி. வல்கம்பாய (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திரு. எம்.எச்.எஸ். கௌஸ் (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்) • திருமதி. சி.எச்.டி. அபயகுணவர்தன (சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள்)	
(அ)	சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களின் (INEDs) கட்டமைப்பு	நிருவாக சபையானது ஏழு (07) சுயாதீன/நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது, இது மொத்தப் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையாகும்.	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
(ஆ) (i) முதல் (ix) வரை	சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள்	நெறிப்படுத்தியரால் பரிந்துரைக்கப்பட்ட சுயாதீனத்தன்மைக்கான அளவுகோல்களை நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர். இந்த ஒழுங்குமுறை நியமங்களுடனான தொடர்ச்சியான இணக்கப்பாட்டினை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களின் வருடாந்த மதிப்பீட்டை நிருவாக சபை மேற்கொள்கிறது. அமைச்சுப் பிரதிநிதிகளான பேராசிரியர் பி.என்.டி. பெர்னாண்டோ, திரு. கே.ஏ. விமலெந்திரராஜா மற்றும் திரு. எம்.ஜே. திலகரத்ன ஆகியோர் தவிர்ந்த.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	கூட்டாண்மைத் தொடர்பாடல்களில் சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் பணிப்பாளர்களின் வகைகளை வெளிப்படுத்துதல்	நிருவாக சபை உறுப்பினர்கள் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து கூட்டாண்மைத் தொடர்பாடல்களிலும் (உ-ம்: வங்கியின் இணைய முகப்பு) சுயாதீன/ நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களின் நிலையை வங்கி தெளிவாக வெளிப்படுத்துகிறது. நிறைவேற்று, நிறைவேற்றதிகாரமற்ற மற்றும் சுயாதீன நிலைகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட நிருவாக சபையின் கட்டமைப்பின் விரிவான பகுப்பாய்வு 271 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
2.6	**சுயாதீன நிருவாக சபை உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மற்றும் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான நடைமுறைகள்**	மேலதிகப் பணிப்பாளரை நியமிப்பதற்கான எவ்வித ஏற்பாடுகளும் மக்கள் வங்கிச் சட்டத்தில் இல்லை என்பதுடன், 2025 ஆம் ஆண்டில் அத்தகைய சூழ்நிலை எதுவும் எழவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
2.7	**நிருவாக சபைக் கூட்டங்களுக்கான கோரம் (குறைவெண்) மற்றும் கட்டமைப்புத் தேவைகள்**	2025 நிதியாண்டிற்கான நிருவாக சபை உறுப்பினர்களின் வரவின்படி, அனைத்து நிருவாக சபைக் கூட்டங்களிலும் தேவையான கோரம் இணங்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
3.	**பணிப்பாளர்களின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள்**		
3.1	**தகுதி மற்றும் தகுதியுடைமையை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள்**	நிருவாக சபை நியமனங்கள் தொடர்பில் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 42 ஆம் பிரிவுகளுடன் வங்கி முழுமையான இணக்கப்பாட்டினைப் பேணுகிறது. மேலும், நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரிடம் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஒவ்வொரு பணிப்பாளரின் தகுதி மற்றும் தகுதியுடைமையை வங்கி உறுதி செய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
3.2	**பணிப்பாளர்களின் பொருத்தப்பாட்டிற்கான மேலதிகத் தேவைகள்**		
(அ)	பணிப்பாளரின் வயது 70 ஐத் தாண்டக்கூடாது	70 வயதிற்கு மேற்பட்ட பணிப்பாளர்கள் எவரும் இல்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கான பதவிக்கால எல்லைகள்	நிருவாக சபையின் பணிப்பாளர்கள் எவரும் ஒன்பது வருட சேவைக்காலத்தைத் தாண்டவில்லை.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(இ)	பணிப்பாளர்கள், வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்ட கம்பனிகள்/நிறுவனங்களில் பணிப்பாளர்களாக இருத்தல் ஆகாது.	வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்ட கம்பனிகள்/நிறுவனங்களில் பணிப்பாளர்கள் எவரும் பணிப்பாளர் பதவிகளை வகிக்கவில்லை. பணிப்பாளர் பதவிகள் தொடர்பான விபரங்கள் 38-43 ஆம் பக்கங்களில் உள்ள "நிருவாக சபை மற்றும் சுயவிபரங்கள்" என்பதில் வழங்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பணிப்பாளரின் அர்ப்பணிப்பு மற்றும் நேர ஒதுக்கீடு	நிருவாக சபையினால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குப் போதிய நேரத்தை ஒதுக்கி, அனைத்துப் பணிப்பாளர்களும் தங்களது வகிபாகங்கள் தொடர்பில் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.	இணங்கப்பட்டுள்ளது
3.3	**வங்கிப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் நியமனங்களுக்கான ஆற்றுப்படுத்தல் காலம்**	2025 ஆம் ஆண்டில் இலங்கையில் தொழிற்படும் வேறெந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் (LCB) பணிப்பாளராகவோ அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியாகவோ பணிப்பாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
4.	**தொழிற்பாடுகளைக் கையளித்தல்**		
4.1	**பொறுப்புக்களைப் பகிர்தல்**	மக்கள் வங்கிச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் மூலம் நிருவாக சபைக்கு தனது அதிகாரங்களை வங்கியின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கையளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன், தேவைக்கேற்ப அதனை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மீளப் பெற முடியும்.	இணங்கப்பட்டுள்ளது
4.2	**நிருவாக சபையின் மேற்பார்வை மற்றும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள்**	அனைத்துப் பிரதான மூலோபாயத் தீர்மானங்களும் நிருவாக சபையின் நேரடிக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டிருப்பதை உறுதிசெய்வதற்காக, ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான முறையான அட்டவணையொன்றை நிருவாக சபை பயன்படுத்துகிறது.	இணங்கப்பட்டுள்ளது
4.3	**அதிகாரங்களைக் கையளிப்பதற்கான வரையறைகள்**	நிருவாக சபை மற்றும் ஏனைய பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான (KMPs) அதிகாரக் கையளிப்பானது, சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் மூலோபாய ரீதியாக மேற்பார்வை செய்வதற்குமான நிருவாக சபையின் திறனுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
4.4	**அதிகாரக் கையளிப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல்**	கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் வங்கியின் தேவைகளுக்குப் பொருத்தமானதாகத் தொடர்ந்தும் இருப்பதனை உறுதிசெய்வதற்காக அவை நிருவாக சபையினால் காலவரையறையுடன் மீளாய்வு செய்யப்படுகின்றன. மேலும், கடன் அனுமதிச் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப கையளிக்கப்பட்ட கடன் அதிகார (DCA) எல்லைகள் திருத்தப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
5.	**தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**		
5.1	**தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி இடையிலான பொறுப்புக்களைப் பகிர்தல்**	தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வகிபாகங்களுக்கிடையில் தெளிவான வேறுபாடு பேணப்படுவதுடன், அவை இரண்டு தனிநபர்களால் வகிக்கப்படுகின்றன. எந்தவொரு தனிநபரும் கட்டுப்பாடற்ற தீர்மானமெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்காத வகையில், கடமைகளின் இந்த வேறுபாடானது அதிகாரம் மற்றும் ஆதிக்கத்தின் சமநிலையை உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
5.2	**தவிசாளரின் பொருத்தப்பாடு**	அமைச்சரவைப் பத்திரத்தின் 2.3 ஆம் பிரிவின்படி, புதிதாக நியமிக்கப்பட்ட தவிசாளர் தனது முழுமையான மூன்று வருடப் பதவிக்காலத்தைத் தவிசாளராக சேவையாற்ற முடியும். எவ்வாறாயினும், தவிசாளர் ஒரு சுயாதீனமற்ற பணிப்பாளராக இருப்பதனால், 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட வழிகாட்டலின் 5.2 ஆம் பிரிவிற்கு இணங்க, சிரேஷ்ட சுயாதீனப் பணிப்பாளர் ஒருவர் (திரு. சி.எஸ். குணயங்கொட) நியமிக்கப்பட்டுள்ளார்.	
5.3	**தவிசாளரின் பொறுப்புக்கள்**		
(அ)		நிருவாக சபையானது கூட்டாண்மை ஆளுகையின் உயர்ந்த நியமங்களைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த அர்ப்பணிப்பில் தவிசாளரின் வகிபாகம் மையமாக உள்ளதுடன், நிருவாக சபையை வழிநடத்துவதும் அதன் ஒட்டுமொத்த வினைத்திறனை உறுதிசெய்வதும் அவரது முதன்மைப் பொறுப்பாகும். ஆளுகைச் சட்டகத்திற்கு அமைவாகத் தவிசாளர் தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)		நிருவாக சபை தனது பொறுப்புக்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதை உறுதிசெய்து, நிருவாக சபையின் மேற்பார்வை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கும் இடையில் தெளிவான வேறுபாட்டைப் பேணி, தவிசாளர் மூலோபாயத் தலைமையை வழங்கினார். அனைத்துப் பிரதான பொருத்தமான விடயங்களும் உரிய நேரத்தில் கலந்தாலோசிக்கப்படுவதைத் தவிசாளர் உறுதிசெய்தார்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(இ)		சக பணிப்பாளர்களின் உள்ளீடுகளை உள்ளடக்கி, அனைத்து கூட்ட நிகழ்ச்சி நிரல்களும் தவிசாளரால் தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்டன. தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக, விரிவான விளக்கமளிக்கும் பத்திரங்கள் உரிய நேரத்தில் விநியோகிக்கப்படுவதை தவிசாளர் உறுதிசெய்தார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)		நிருவாக சபைக்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகவே போதுமான தகவல்கள் கிடைப்பதை உறுதிசெய்தல். நிருவாக சபை விவாதங்களில் சுயாதீனமான கண்ணோட்டங்கள் ஒன்றிணைக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பணிப்பாளர்களின் ஈடுபாட்டினை தவிசாளர் சிறப்பாக வழிநடத்தினார்.	இணங்கப்பட்டுள்ளது
(உ)		நிருவாக சபைக் கூட்டங்களில் இடம்பெறும் விவாதங்களில் பணிப்பாளர்கள் ஆக்கபூர்வமாக பங்களிப்புச் செய்வதுடன், வங்கியின் நலனைக் கருத்தில் கொண்டு சிறந்த தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)		நிருவாக சபை பணிப்பாளர்களின் அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருப்பதுடன், அவர்கள் நிருவாக சபைக் கூட்டங்களில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை உறுதிசெய்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(எ)		விமர்சன ரீதியான மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களை தவிசாளர் ஊக்குவித்தார். தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையின் போது எவ்வித பாரபட்சமுமின்றி மாற்றுக்கருத்துக்கள் சுதந்திரமாக வெளிப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)		பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் மேற்பார்வையில் அல்லது வேறு ஏதேனும் நிறைவேற்று கடமைகளில் தவிசாளர் நேரடியாக ஈடுபடுவதில்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஐ)		வங்கியின் பிரதான பங்குதாரரான இலங்கை அரசாங்கத்துடன் நிருவாக சபை பயனுள்ள தொடர்பாடலை பேணி வருகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
5.4	**பிரதம நிறைவேற்று அதிகாரியின் (CEO) நடத்தை**		
(அ)		வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் வியாபார முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உயர்மட்ட நிறைவேற்று அதிகாரியாக பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) விளங்குகின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)		பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் வேறு எந்தவொரு உரிமம்பெற்ற வங்கியிலோ அல்லது வெளி நிறுவனத்திலோ ஒரு ஊழியராகவோ அல்லது பணிப்பாளராகவோ கடமையாற்றுவதில்லை.	
(இ)		கைத்தொழில் சார்ந்த நியமனங்கள் அல்லது வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் பதவிகளைத் தவிர, வேறு எந்தவொரு உரிமம்பெற்ற வங்கியிலோ அல்லது நிறுவனத்திலோ பிரதம நிறைவேற்று அதிகாரி ஊழியராகவோ அல்லது பணிப்பாளராகவோ எப்பதவியையும் வகிக்கவில்லை.	
5.5	**பிரதம நிறைவேற்று அதிகாரியின் (CEO) பொருத்தப்பாடு**	வங்கியின் செயற்பாடுகளின் அளவு, பல்வகைத்தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 44அ பிரிவுக்கு அமைவாக, பிரதம நிறைவேற்று அதிகாரியின் அதிகாரம், அந்தஸ்து, அறிவு, திறன்கள் போன்றவற்றின் அடிப்படையில் அவரது பொருத்தப்பாட்டை உறுதிசெய்ய பணிப்பாளர் சபை கடுமையான செயன்முறையொன்றை பேணுகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
6.1	**நிருவாக சபைக் குழுக்களுக்கான தேவைப்பாடுகள்**		இணங்கப்பட்டுள்ளது
(அ)	ஒவ்வொரு குழுவும் நேரடியாக நிருவாக சபைக்கு அறிக்கை செய்ய வேண்டும்.	வங்கியானது 05 கட்டாய நிருவாக சபையின் உப குழுக்களைப் பேணுகின்றது, அவையாவன: நிருவாக சபைக் கணக்காய்வுக்குழு (BAC), நிருவாக சபையின் மனித வள மற்றும் ஊதியக் குழு (BHRRC), நிருவாக சபையின் நியமனங்கள் மற்றும் ஆளுகைக் குழு (BNGC), நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு (RPTRC) என்பனவாகும். ஒவ்வொரு குழுவும் நிருவாக சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டது.	
(ஆ)	நிருவாக சபை ஒவ்வொரு குழுவினதும் அதிகாரத்தை வரையறுக்க வேண்டும், குறிப்பாக, அக்குழு நிருவாக சபையின் சார்பாக செயற்பட அதிகாரம் கொண்டுள்ளதா அல்லது ஒரு குறிப்பிட்ட விடயத்தை ஆராய்ந்து நிருவாக சபைக்கு பரிந்துரைகளுடன் அறிக்கை செய்ய மாத்திரம் அதிகாரம் கொண்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.	நிருவாக சபை ஒவ்வொரு குழுவினதும் அதிகாரம் மற்றும் நோக்கெல்லையை வரையறுத்துள்ளதுடன், விடயங்களை ஆராய்ந்து சபைக்கு பரிந்துரைகளுடன் அறிக்கை செய்யப் பணிக்கப்பட்டுள்ளது.	
(இ)	ஒவ்வொரு குழுவும் நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியதி வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.	ஒவ்வொரு குழுவிற்கும் நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியதி வரையறைகள் காணப்படுவதுடன், ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக அவை அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுகின்றன.	

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஈ)	எல்லாக் குழுக்களும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கும், கூட்டக் குறிப்புக்கள் மற்றும் பதிவுகளை போதுமான விவரங்களுடன் குழுவின் தவிசாளரின் மேற்பார்வையின் கீழ் பேணுவதற்கும் ஒரு செயலாளரை நியமிக்க வேண்டும். அனைத்துக் குழுக்களினதும் கூட்டக் குறிப்புக்கள் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	கூட்டக் குறிப்புக்கள் மற்றும் பதிவுகளைப் பேணுவதற்குப் பொறுப்பான ஒரு செயலாளர் ஒவ்வொரு குழுவிற்கும் நியமிக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு குழுவினதும் கூட்டக் குறிப்புக்கள் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. நிருவாக சபைச் செயலாளர் அனைத்து நிருவாக சபையின் உப குழுக்களுக்கும் செயலாளராகக் கடமையாற்றுகிறார்.	
(உ)	ஒவ்வொரு குழுவினதும் கூட்ட நடப்பெண் அக்குழுவின் உறுப்பினர்களில் குறைந்தது அரைவாசிப் பேரைக் கொண்டிருக்க வேண்டும்.	ஒவ்வொரு குழுவினதும் கூட்ட நடப்பெண்ணானது, அக்குழுவின் உறுப்பினர்களில் குறைந்தது அரைவாசி பேர் என்ற வகையில் அக்குழுவின் நியதி வரையறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.	
(ஊ)	ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், வகிபாகங்கள் மற்றும் அவற்றின் செயலாற்றுகை குறித்த அறிக்கையொன்றை வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிருவாக சபை சமர்ப்பிக்க வேண்டும்.	ஒவ்வொரு குழுவினதும் செயலாற்றுகை வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டு நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.	
6.2	**கணக்காய்வுக் குழு**		
(அ)	இக்குழுவின் தவிசாளர் ஒரு சுயாதீனப் பணிப்பாளராக இருக்க வேண்டும் என்பதுடன், அவர் நிருவாக சபையின் அல்லது வேறு எந்தவொரு நிருவாக சபைக் குழுவின் தவிசாளராகவும் இருக்கக் கூடாது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை கணக்கீட்டு அமைப்பொன்றில் அங்கத்துவமம் பெற்றிருப்பதுடன்இ நிதிஇ கணக்கீடு மற்றும்/கணக்காய்வு ஆகிய துறைகளில் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.	இலங்கை பட்டயக் கணக்கறிஞர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினரான சுயாதீன, நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் ஒருவரை சபை தவிசாளராக நியமித்துள்ளதுடன், அவர் பணிப்பாளர் சபையின் அல்லது வேறு எந்தவொரு சபைக் குழுவினதும் தவிசாளராகக் கடமையாற்றுவதில்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	இக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், அவர்களில் பெரும்பான்மையானோர் சுயாதீனப் பணிப்பாளர்களாகவும் இருக்க வேண்டும். வங்கியின் செயற்பாடுகளின் அளவு, வீச்சு, பல்வகைத்தன்மை மற்றும் சிக்கல்தன்மை என்பவற்றுக்குப் பொருத்தமான வகையில், நிதி, கணக்கீடு மற்றும் கணக்காய்வு ஆகிய துறைகளில் கூட்டான சமநிலையான திறன்களையும் நிபுணத்துவ அறிவையும் உறுப்பினர்கள் கொண்டிருக்க வேண்டும்.	இக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வங்கியின் செயற்பாடுகளின் அளவு, வீச்சு, பல்வகைத்தன்மை மற்றும் சிக்கல்தன்மை என்பவற்றுக்குப் பொருத்தமான வகையில் நிதி, கணக்கீடு மற்றும் கணக்காய்வு ஆகிய துறைகளில் தொழில்முறைத் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்ட நிறைவேற்று அதிகாரமற்ற மற்றும் சுயாதீனப் பணிப்பாளர்களாவர்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	இக்குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது என்பதுடன், இது மறுதலையாகவும் பேணப்பட வேண்டும்.	இக்குழுவின் உறுப்பினர்கள் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதில்லை என்பதுடன், இது மறுதலையாகவும் பேணப்படுகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பின்வரும் விடயங்கள் தொடர்பில் குழு பரிந்துரைகளை வழங்க வேண்டும்:		இணங்கப்பட்டுள்ளது
	(i) உரிய நியதிச்சட்டங்களுக்கு இணங்க கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதற்காக வெளிவாரி கணக்காய்வாளரை நியமித்தல்.	மக்கள் வங்கி ஒரு அரச உரிமையாண்மை வங்கியென்பதால், அதன் வருடாந்த கணக்காய்வானது தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அல்லது கணக்காய்வாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு சுயாதீன கணக்காய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது..	
	(ii) வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல்.	கணக்காய்வாளர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்களில் குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.	
	(iii) பொருத்தமான கணக்கீட்டு நியமங்களைப் பிரயோகித்தல்.	கணக்கீட்டு நியமங்களில் ஏற்படும் மாற்றங்களை குழு மீளாய்வு செய்து கலந்தாலோசித்துள்ளதுடன், திருத்தப்பட்ட நியமங்களை வங்கி பிரயோகிப்பதையும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்கிறது.	

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
	(iv) வெளிவாரி கணக்காய்வாளரின் சேவைக் காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் இராஜினாமா அல்லது பதவிநீக்கம், அத்துடன் வெளிவாரி கணக்காய்வாளரின் ஈடுபாடு ஆறு வருடங்களுக்கு மேற்படலாகாது என்பதுடன் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை குறித்த ஈடுபாட்டுப் பங்குதாரர் மாற்றப்பட வேண்டும.	அனைத்து வருடாந்த கணக்காய்வுகளும் இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளராவார்.	
(உ)	வெளிவாரி கணக்காய்வாளரின் சுயாதீனத்தன்மை, நேர்மை மற்றும் புறவயத்தன்மை (நடுநிலைமை) அத்துடன் கணக்காய்வுச் செயன்முறைகளின் வினைத்திறன் ஆகியவற்றை மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும்.	வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர், கணக்காய்வாளர் நாயகம் ஆவார்.	
(ஊ)	வெளிவாரி கணக்காய்வாளரால் கணக்காய்வு அல்லாத சேவைகளை வழங்குதல்	வங்கியின் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் நாயகம் என்பதால் இது பொருத்தமற்றது.	
(எ)	கணக்காய்வின் நோக்கெல்லையைத் தீர்மானித்தல்	கணக்காய்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நிருவாக சபை கணக்காய்வுக் குழுக் (BAC) கூட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAS) அமைவாக வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வின் தன்மை மற்றும் நோக்கெல்லையை குழு கலந்தாலோசித்து இறுதி செய்துள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
	(i) கூட்டாண்மை ஆளுகை தொடர்பான உரிய பணிப்புரைகள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் மீதான முகாமைத்துவத்தின் உள்ளகக் கட்டுப்பாடு ஆகியவற்றுடனான வங்கியின் இணக்கப்பாடு குறித்த மதிப்பீடு.	பெருநிறுவன ஆளுகை மற்றும் நிதிசார் அறிக்கையிடல் மீதான நிர்வாகத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான தொடர்புடைய வழிகாட்டல்களுக்கு இணங்க, ஒரு விரிவான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	
	(ii) உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகளுக்கு அமைவாக வெளிவாரி நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.	உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகளுக்கு அமைவாக வெளிவாரி நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.	
	(iii) ஒன்றுக்கு மேற்பட்ட கணக்காய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு.	நாட்டின் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு கணக்காய்வாளர் நாயகமே வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளராவார்.	
(ஏ)	உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் மீதான அறிக்கை	வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையை உறுதி செய்வதற்கும், கணக்கீடு மற்றும் ஏனைய உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையை உறுதி செய்வதற்கும், கணக்கீட்டுக் கொள்கைகள்/முறைமைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு தொடர்பில் விரிவான மீளாய்வுகளை குழு மேற்கொள்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(ஐ)	நிதியியல் அறிக்கையிடல் மேற்பார்வை	மக்கள் வங்கியின் நிதிக்கூற்றுக்களின் நேர்மையைக் கண்காணிப்பதற்கு குழு பொறுப்பாகும். காலாண்டு மற்றும் வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள், அத்துடன் வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் என்பன குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் போதெல்லாம் வங்கியின் நிதியியல் தகவல்களை மீளாய்வு செய்வதற்கான முறையான செயன்முறையொன்று நடைமுறையில் உள்ளது. குழுவின் மீளாய்வானது பிரதானமாக பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது: (i) அறிக்கையிடப்பட்ட தகவல்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மதிப்பிடுதல். (ii) கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்களை மீளாய்வு செய்தல். (iii) கணக்காய்விலிருந்து எழும் குறிப்பிடத்தக்க சீராக்கங்களை மதிப்பீடு செய்தல். (iv) கணக்குகளைத் தயாரிப்பதில் நிறுவனத்துக்குத் தொடர்ச்சியாகக் காணப்படும் பிரச்சினை குறித்த எடுகோளின் பொருத்தப்பாட்டினை உறுதிசெய்தல். (v) ஏற்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட, ஒழுங்குமுறைத் தேவைகளுடனான இணக்கப்பாட்டை உறுதி செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஒ)	இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வுகள் தொடர்பில் வெளிவாரி கணக்காய்வாளருடனான கலந்துரையாடல்கள்	நிர்வாகக் குழு கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதியுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(ஓ)	முகாமைத்துவக் கடிதம் மற்றும் வங்கியின் பதிலளிப்பு மீதான மீளாய்வு	நிருவாகச் சபை கணக்காய்வுக்குழு (BAC) முகாமைத்துவக் கடிதத்தையும் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட பதில்களையும் மீளாய்வு செய்துள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கடிதம் BAC கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.	இணங்கப்பட்டுள்ளது
(ஔ)	உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டின் மேற்பார்வை		இணங்கப்பட்டுள்ளது
	(i) உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்தல் மற்றும் திணைக்களம் தனது பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்தல்.	2026 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்துடன் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கெல்லை மற்றும் தொழிற்பாடுகளை குழு கலந்தாலோசித்துள்ளதுடன் பரிந்துரைத்துள்ளது.	
	(ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுச் செயன்முறையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்தல், அத்துடன் தேவைப்படும் இடங்களில் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்தல்.	2026 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் நிருவாக சபைக் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளக கணக்காய்வின் நோக்கெல்லையை நிருவாக சபைக் கணக்காய்வுக் குழு கலந்தாலோசித்துள்ளது.	
	(iii) பிரதம உள்ளக கணக்காய்வாளர் (CIA) மற்றும் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பதவியணியினரின் செயலாற்றுகை மதிப்பீடு அல்லது கணிப்பீட்டை மீளாய்வு செய்தல்.	CIA இன் செயலாற்றுகை மதிப்பீடு நிருவாக சபைக் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட உறுப்பினர்களின் செயலாற்றுகை தொடர்பான கலந்துரையாடல்கள் BAC கூட்டங்களில் இடம்பெற்றன.	
	(iv) உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டிற்கான CIA, சிரேஷ்ட பதவியணியினர் மற்றும் வெளிவாரி சேவையளிப்பவர்களின் ஏதேனும் நியமனம் அல்லது பதவிநீக்கத்தைப் பரிந்துரைத்தல்.	2025 ஆம் ஆண்டில் தலைவர், சிரேஷ்ட பதவியணியினரின் நியமனம் அல்லது பதவிநீக்கம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. உள்ளக கணக்காய்வாளர் வங்கிக்கு வினைத்திறனாக உறுதியளிப்பை வழங்குவதை BAC உறுதிசெய்கிறது.	
	(v) CIA மற்றும் ஏதேனும் வெளிவாரி சேவையளிப்பவர்கள் உட்பட உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பதவியணியினரின் இராஜினாமாக்கள் குறித்து குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்தல், அத்துடன் இராஜினாமா செய்யும் சிரேஷ்ட பதவியணியினர் மற்றும் வெளிவாரி சேவையளிப்பவர்களுக்கு இராஜினாமா செய்வதற்கான காரணங்களைச் சமர்ப்பிக்க ஒரு வாய்ப்பினை வழங்குதல்.	2025 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர்/ சிரேஷ்ட பதவியணியினரின் இராஜினாமாக்கள் எதுவும் இடம்பெறவில்லை.	
	(vi) உள்ளக கணக்காய்வுச் செயற்பாடானது கணக்காய்வு செய்யும் செயற்பாடுக-ளிலிருந்து சுயாதீனமானதாக இருப்பதையும், பக்கச்சார்பின்மை, தேர்ச்சி மற்றும் உரிய தொழில்சார் கவனத்துடன் முன்னெடுக்கப்ப-டுவதையும் உறுதிசெய்தல்.	வங்கியின் உள்ளக கணக்காய்வுப் பட்டயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பக்கச்சார்பின்மை, தேர்ச்சி மற்றும் உரிய தொழில்சார் கவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வு நடவடிக்கையை முன்னெடுப்பதில் உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் சுயாதீனமானதாக விளங்குகின்றது.	
(க)	உள்ளக விசாரணைகள்	உள்ளக விசாரணைகளின் பிரதான கண்டுபிடிப்புகள் மற்றும் அவை தொடர்பான முகாமைத்துவத்தின் பதில்களை குழு கருத்தில் கொள்வதுடன், தேவையேற்படும் போது மற்றும் பொருத்தமான இடங்களில் நிருவாக சபைக்குப் பரிந்துரைக்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(கா)	BAC கூட்டங்களில் பங்குபற்றுபவர்கள்	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM), பிரதம உள்ளக கணக்காய்வாளர் (CIA), நிதிப் பிரதானி (HOF), பிரதிப் பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவம் (DGM – RM), பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கப்பாடு (DGM – Compliance), ஏனைய பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் பிரதிநிதியொருவர் ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(க)	அதிகாரம், வளங்கள் மற்றும் தகவல்களை அணுகுதல்	நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுவானது தனது நியதி வரையறைகளுக்கு உட்பட்ட எந்தவொரு விடயத்தையும் விசாரிப்பதற்கான அதிகாரத்தையும், அதற்காகத் தேவைப்படும் வளங்கள் மற்றும் தகவல்களை முழுமையாக அணுகுவதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளதுடன், அவசியமெனக் கருதினால் பொருத்தமான அனுபவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த வெளிவாரி சுயாதீன தொழில்முறை ஆலோசனைகளைப் பெறுவதற்கான அதிகாரத்தையும் கொண்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(கீ)	ஒழுங்கான கூட்டங்கள்	நிருவாக சபைக் கணக்காய்வுக்குழு (BAC) நவம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுடன், ஒழுங்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டன.	இணங்கப்பட்டுள்ளது
(கு)	கூட்டக் குறிப்புக்களைப் பேணுதல்	கூட்டக் குறிப்புக்கள் நிருவாக சபைச் செயலாளரால் பேணப்படுகின்றன.	இணங்கப்பட்டுள்ளது
(கூ)	அம்பலப்படுத்துவோர் கொள்கை		இணங்கப்பட்டுள்ளது
	(i) நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டுவோர் கொள்கையின் வினைத்திறனான நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்தல்.	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டுவோர் கொள்கை நடைமுறையில் உள்ளதுடன், அது அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுகின்றது.	
	(ii) இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நியாயமான மற்றும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், தகுந்த தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முறையான ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளதை உறுதிசெய்தல்.	தவறுகளைச் சுட்டிக்காட்டுவோரின் விடயங்களைக் கையாள்வதற்கும், அவ்வாறான விடயங்கள் தொடர்பில் நியாயமான மற்றும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், தகுந்த தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வங்கியானது ஒரு செயன்முறையைக் கொண்டுள்ளது.	
6.3	**மனித வள மற்றும் ஊதியக் குழு** **GRI 2-19, 20**		
(அ)	குழுவின் தவிசாளர்	நிருவாக சபையின் தவிசாளராகக் கடமையாற்றாத ஒரு பணிப்பாளர் இக்குழுவின் தவிசாளராகச் செயற்படுகின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	சுயாதீனப் பணிப்பாளர்களின் பங்களிப்பு	இக்குழுவில் கடமையாற்றும் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் சுயாதீனப் பணிப்பாளர்களாவர்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	BHRRCக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரின் (CEO/GM) பங்குபற்றல்	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, ஏனைய நேரங்களில் அவர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையைத் தீர்மானித்தல்.	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதியியல் கொடுப்பனவுகள் தொடர்பான ஊதியக் கொள்கையை இக்குழு தீர்மானிக்கிறது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் (SOEs) நிருவாக சபை நியமனம் தொடர்பில் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் (PED) 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பணிப்பாளர்களுக்கான ஊதியம் தீர்மானிக்கப்படுகிறது.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல்.	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இக்குழு நிர்ணயிக்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்.	நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் செயலாற்றுகையை இக்குழு அவ்வப்போது மதிப்பீடு செய்வதுடன், ஊதியம், நன்மைகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக்களின் ஏனைய கொடுப்பனவுகளை மீள்திருத்தம் செய்வதற்கான அடிப்படையைத் தீர்மானிக்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(எ)	வேலைவாய்ப்பு நிறுத்தப்படும் போது அல்லது ஓய்வுபெறும் போது பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு வழங்கப்படவுள்ள ஏதேனும் விசேட கொடுப்பனவுகள்/நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நன்மைகளுக்குப் பங்குதாரர்களின் முன் எழுத்துமூல அங்கீகாரம் பெறப்படுவதை உறுதிசெய்தல்.	வேலைவாய்ப்பு நிறுத்தப்படும் போது அல்லது ஓய்வுபெறும் போது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு வழங்கப்படவுள்ள ஏதேனும் விசேட கொடுப்பனவுகள்/நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நன்மைகளுக்காகத் திறைசேரி செயலாளரிடமிருந்து முன் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெறுவது, நிருவாக சபைக்குப் பரிந்துரைப்பதன் மூலம் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றது. வேலைவாய்ப்பு நிறுத்தப்பட்ட போதோ அல்லது ஓய்வுபெற்ற போதோ பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு எவ்வித விசேட கொடுப்பனவோ/நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நன்மைகளோ வழங்கப்படவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)	ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுடன் ஒருங்கிணைப்பதற்கான நடைமுறை	ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் வங்கியின் இடர், மூலதனம், திரவத்தன்மை மற்றும் உழைப்புகள் ஆகியவற்றின் மட்டங்களைக் கருத்தில் கொண்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கு, நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுடன் இக்குழு ஒருங்கிணைந்து செயற்படுகிறது. எனினும், நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு 2025 அக்டோபரில் ஸ்தாபிக்கப்பட்டது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஐ)	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு (முஆீ) வழங்கப்படும் செயலாற்றுகை அடிப்படையிலான கொடுப்பனவுகளுக்கான மீளப்பெறும் ஏற்பாடுகள் தொடர்பான கொள்கை.	மோசடி மற்றும் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை போன்ற சந்தர்ப்பங்களில், ஏற்படுத்தப்பட்ட நிதியியல் இழப்பின் அளவிற்கு, வங்கியின் ஒழுக்காற்றுக் கோவைக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
6.4	**நிருவாக சபை நியமனங்கள் மற்றும் ஆளுகைக் குழு (BNGC)** GRI 2-10		
(அ)	ஆக்கமும் சுயாதீனத்தன்மையும்	நிருவாக சபையின் தவிசாளராகக் கடமையாற்றாத ஒரு சுயாதீனப் பணிப்பாளர் இக்குழுவின் தவிசாளராகச் செயற்படுகின்றார். பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, ஏனைய நேரங்களில் அவர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார். பக்கம் 300 இல் உள்ள "BIRMC இன் அறிக்கையை" பார்க்கவும்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் (KMP) நியமனம்	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை அடையாளம் காணுதல், நியமித்தல் மற்றும் பரிந்துரைத்தல் ஆகியவற்றுக்கான முறையான மற்றும் வெளிப்படையான செயன்முறையொன்றை நடைமுறைப்படுத்துவது இக்குழுவின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	தகுந்த மற்றும் பொருத்தமான நபர்களை உறுதிசெய்தல்	ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்-டுள்ளவாறும், 3 மற்றும் 8.2 ஆம் இலக்கப் பணிப்புரைகளில் வழங்கப்பட்டுள்ள நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும், பதவிகளை வகிப்பதற்குப் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தகுந்த மற்றும் பொருத்தமான நபர்கள் என்பதை இக்குழு உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பிரதான இடர் முகாமைத்துவ அதிகாரி (CRO), பிரதிப் பொது முகாமையாளர் – முகாமைத்துவக் கணக்காய்வு (DGM – MA) மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரி ஆகியோரின் நியமனம்	தேவையேற்படும் அடிப்படையில் பிரதிப் பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவம் (DGM – RM) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கப்பாடு (DGM – Compliance) ஆகியோரைத் தெரிவு செய்வதில் நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினதும், பிரதம உள்ளக கணக்காய்வாளரை (CIA) தெரிவு செய்வதில் நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுவினதும் (BAC) கருத்துக்களை இக்குழு பெற்றுக்கொள்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	பணிப்பாளர்களை மீண்டும் தேர்வுசெய்தல்	நிருவாக சபையின் பொறுப்புக்களை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதில் சம்மந்தப்பட்ட பணிப்பாளர் வழங்கிய பங்களிப்பு மற்றும் செயலாற்றுகையை அவ்வப்போது மதிப்பீடு செய்வதன் மூலம், தற்போதைய பணிப்பாளர்களை மீண்டும் தெரிவு செய்வதைக் குழு கருத்தில் கொள்வதுடன் பரிந்துரைக்கிறது (அல்லது பரிந்துரைக்காமல் விடுகிறது).	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)	சுயாதீனத்தன்மையைக் கண்காணித்தல்	நிருவாக சபைக்கு சுயாதீனப் பணிப்பாளர்கள் 2025 ஆகஸ்ட் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் (w.e.f.) நியமிக்கப்பட்டமையால், BNGC 2025 அக்டோபரில் ஸ்தாபிக்கப்பட்டது.	இணங்கப்படவில்லை
(எ)	பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP) நியமனங்களுக்கான தகுதி அளவுகோல்கள்	பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி மற்றும் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்குப் பரிசீலிக்கப்படுவதற்குத் தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் பிரதான பண்புகள் போன்ற அளவுகோல்களை இக்குழு நிர்ணயிக்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)	நிருவாக சபைக்குரிய தொடர்ச்சித் திட்டம் மற்றும் புதிய நிபுணத்துவம்	வங்கியின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் மேலதிக/புதிய நிபுணத்துவத் தேவைகள் மற்றும் ஏற்படும் வெற்றிடங்களுக்கான தொடர்ச்சித் திட்டம் ஆகியவற்றை அவ்வப்போது கருத்தில் கொள்வதும் பரிந்துரைப்பதும் இக்குழுவின் பிரதான தொழிற்பாடுகளாகும்.	இணங்கப்பட்டுள்ளது
(ஐ)	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான (KMPs) தொடர்ச்சித் திட்டம்.	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரை (KMPs) பணியமர்த்துவதற்கு, வங்கி ஒரு வலுவான தொடர்ச்சித் திட்டத்தைக் கொண்டிருப்பதை இக்குழு உறுதிசெய்கிறது. இது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது: (i) வங்கியின் செயற்பாடுகளின் அளவு, வீச்சு, பல்வகைத்தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் தொடர்ச்சிக்காக பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் பதவிகளை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த மற்றும் திறமையான நபர்களை (உள்ளக/வெளிவாரி) அடையாளம் காணுதல் (ii) உரிய துறைகளுக்கான திறன்/அறிவு இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றைத் தணிப்பதன் மூலம், உரிய பதவிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசுகளைப் பயிற்றுவித்தல் மற்றும், (iii) வருடாந்த அடிப்படையில் தொடர்ச்சித் திட்டத்தை மீளாய்வு செய்தல்.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஒ)	தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாடு	வங்கித்துறைக்குப் பொருத்தமான ஏற்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பேரியினப் பொருளியல் விடயங்கள், கொள்கைகள், சமீபத்திய தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் வளர்ந்து வரும் நிதியியல் துறை மற்றும் சந்தை மேம்பாடுகள் குறித்து பணிப்பாளர்களுக்குத் தொடர்ச்சியான அடிப்படையில் அறிவூட்டப்படுவதை இக்குழு உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஓ)	பணிப்பாளர்களின் பயிற்சி மற்றும் மேம்பாடு	பணிப்பாளர்களின் பயிற்சித் தேவைகளை அடையாளம் கண்டு, பணிப்பாளர்களுக்கான பயிற்சி, ஆற்றல் கட்டியெழுப்பல் மற்றும் தொழில்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக நிருவாக சபைக்கு ஒழுங்கான அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல்.	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
(ஔ)	நிருவாக சபை கட்டமைப்பைக் கண்காணித்தல்	கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்காக, நிருவாக சபை மற்றும் நிருவாக சபைக் குழுக்களின் கட்டமைப்பு, அளவு, தகைமைகள் மற்றும் ஆக்கம் ஆகியவற்றை இக்குழு மீளாய்வு செய்கிறது. 2025 அக்டோபரில் BNGC தாபிக்கப்பட்டது.	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
(க)	ஆளுகைக் கட்டமைப்பின் மீளாய்வு	அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் கைத்தொழில்/சர்வதேச சிறந்த நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு, வங்கியின் ஒட்டுமொத்த கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு, வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படுவதை இக்குழு உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
6.5	**நிருவாக சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC)**		
(அ)	தவிசாளரின் சுயாதீனத்தன்மை	நிருவாக சபையின் அல்லது வேறு எந்தவொரு நிருவாக சபைக் குழுவினதும் தவிசாளராகக் கடமையாற்றாத ஒரு சுயாதீனப் பணிப்பாளர் இக்குழுவின் தவிசாளராகச் செயற்படுகின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	குழுவின் ஆக்கம்	வங்கி மற்றும் நிதியியல் சேவைகள் துறையினுள் இடர் முகாமைத்துவ விடயங்கள் மற்றும் நடைமுறைகளில் சிறந்த கூட்டு அனுபவத்தைக் கொண்டுள்ள இரண்டு (2) சுயாதீனப் பணிப்பாளர்களுடன் சேர்த்து, மூன்று (3) நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை இக்குழு கொண்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	ஏனைய குழுக்களிலிருந்து வேறாக்கப்பட்டமை	இக்குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுவின் உறுப்பினர்களாக இல்லை, அதேபோன்று நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுவின் உறுப்பினர்கள் இக்குழுவிலும் இல்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் (KMP) வருகை	பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவம் (DGM – RM) ஆகியோர் இக்குழுவின் கூட்டங்களில் நிரந்தர அழைப்பாளர்களாகக் கலந்து கொள்கின்றனர். மேலதிகமாக, பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கப்பாடு (DGM – Compliance) மற்றும் ஏனைய பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தேவைப்படும் அடிப்படையில் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான நெருங்கிய ஒத்துழைப்பு	இக்குழு பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் நெருங்கிய பணி உறவைப் பேணுவதுடன், குழுவின் நியதி வரையறைகளுக்கு உட்பட்டு நிருவாக சபையின் சார்பாகத் தீர்மானங்களை மேற்கொள்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)	சுயாதீன இடர் முகாமைத்துவச் செயற்பாடு	வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான ஒரு சுயாதீன இடர் முகாமைத்துவச் செயற்பாடு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(எ)	இடர் மதிப்பீடு	பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் மூலம் வங்கியின் கடன், சந்தை, மூலோபாய, செயற்பாட்டு மற்றும் திரவத்தன்மை இடர்கள் போன்ற இடர்களை மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையை BIRMC நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், அவ்வாறான இடர்கள் பிரதிப் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம் (DGM - RM) இனால் காலாண்டு இடர் அறிக்கை மற்றும் இடர் தாய அட்டவணை மூலம் BIRMC இற்கு அறிக்கையிடப்படுகின்றன. மேலும், இடர் விருப்பு எல்லைகள் உள்ளிட்ட இடர் கட்டுப்பாட்டுப்பலகை குறித்து கலந்தாலோசிக்கும் போது துணை நிறுவனங்கள்/உப துணை நிறுவனங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு காலாண்டிற்குமான துணை நிறுவனங்களின் இடர் மீளாய்வு குழுவிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், குழு அதனை மீளாய்வு செய்து ஒவ்வொரு துணை நிறுவனத்தினதும் இடர் மட்டங்களைக் குறித்துக்கொள்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)	இடர் விருப்பு தொடர்பான அறிக்கையிடல்	குழுவின் விவாதங்கள் மற்றும் ஆலோசனைகளை விவரிக்கும் வங்கியின் விரிவான இடர் விருப்புக் கூற்றொன்று நிருவாக சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(ஐ)	பிரதான இடர் முகாமைத்துவ அதிகாரியின் (CRO) தொழிற்பாடுகளின் மேற்பார்வை	இக்குழு பிரதிப் பொது முகாமையாளர் – இடர் முகாமைத்துவத்தின் தொழிற்பாட்டினை கண்காணிக்கின்றதுடன் இடர் விபரம், ஸ்தாபிக்கப்பட்ட இடர் விருப்பு எல்லைகளுக்கு எதிரான வெளிப்பாடுகள் மற்றும் எல்லை மீறல்கள் தொடர்பான ஒழுங்கான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்கிறது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஒ)	மூலோபாய மேற்பார்வை	ஆரம்பிக்கப்பட்ட இடர் விருப்புடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, மூலதன மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவம் மற்றும் வங்கியின் கடன், சந்தை, செயற்பாட்டு, தகவல் பாதுகாப்பு மற்றும் மூலோபாய இடர்கள் போன்ற அனைத்து ஏற்புடைய இடர்களின் முகாமைத்துவம் தொடர்பில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரால் நடைமுறைப்படுத்தப்படும் மூலோபாயங்களை இக்குழு மேற்பார்வை செய்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(ஓ)	இடர் தொடர்பான முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் மீளாய்வு	குறிப்பிட்ட இடர்களைக் கையாள்வதற்கும், அக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அளவு மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்குள் அந்த இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் கடன் இடர் முகாமைத்துவக் குழு, செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு, தகவல் பாதுகாப்புக் குழு மற்றும் சொத்து மற்றும் பொறுப்புக் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் போதுமானதன்மை மற்றும் வினைத்திறனை இக்குழு மீளாய்வு செய்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(ஔ)	விவேகமான மட்டங்களை மீறும் இடர்களைத் தணிப்பதற்கான திருத்த நடவடிக்கை	வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைத் தேவைகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான மட்டங்களுக்கு அப்பால் குறிப்பிட்ட இடர்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அந்த இடர்களின் தாக்கங்களைத் தணிப்பதற்கு இக்குழு உடனடியான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(க)	கூட்டங்களின் நிகழ்திறன்	இவ்வருடத்தில் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	பகுதியளவில் இணங்கப்பட்டுள்ளது
(கா)	குறிப்பிட்ட இடர்களை அடையாளம் காணத் தவறிய அல்லது திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறிய அதிகாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகள்	நிருவாக சபையின் இணக்கத்தை மற்றும்/அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளைக் கோரி ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்து ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை நிருவாக சபைக்கு இக்குழு சமர்ப்பிக்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(கி)	நிருவாக சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கை	நிருவாக சபையின் இணக்கத்தை மற்றும்/அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளைக் கோரி ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்து ஒரு வாரத்திற்குள் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை நிருவாக சபைக்கு இக்குழு சமர்ப்பிக்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(கீ)	இணக்கப்பாட்டுச் செயற்பாடு	வியாபாரச் செயற்பாட்டுப் பரப்புகளில் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குமுறை வழிகாட்டல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டை, இணக்கப்பாட்டுச் செயற்பாடு மதிப்பிடுவதை இக்குழு உறுதிசெய்கின்றது. பிரதிப் பொது முகாமையாளர் – இணக்கப்பாடு இணக்கப்பாட்டுச் செயற்பாட்டினை முன்னெடுப்பதுடன், குழுவிற்கு அவ்வப்போது அறிக்கையிடுகின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(கு)	நிருவாக சபைக் கணக்காய்வுக்குழுடனான ஒருங்கிணைப்பு	எழுந்துவரும் இடர்கள் மற்றும் வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்குத் தேவையான ஏதேனும் சீராக்கங்கள் உள்ளிட்ட அனைத்து இடர்களின் வினைத்திறனான முகாமைத்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு, தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு கணக்காய்வுக் குழுவுடன் ஒரு பயனுள்ள தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்புப் பொறிமுறை பேணப்படுகின்றது.	இணங்கப்பட்டுள்ளது
(கூ)	ஊதிய மீளாய்வு	நிருவாக சபையின் மனித வள மற்றும் ஊதியக் குழுவின் பணிகளுக்கு எவ்வித பாதகமுமின்றி, ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் வங்கியின் இடர், மூலதனம், திரவத்தன்மை மற்றும் உழைப்புகள் ஆகியவற்றின் மட்டங்களைக் கருத்தில் கொண்டுள்ளதா என்பதை இக்குழு ஆராய்கின்றது.	இணங்கப்பட்டுள்ளது
6.6	**தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் மீளாய்வுக் குழு**		
(அ)	குழுவின் தலைமைத்துவம்	நிருவாக சபையின் அல்லது வேறு எந்தவொரு நிருவாக சபையின் உப குழுக்களினதும் தவிசாளராகக் கடமையாற்றாத ஒரு சுயாதீனப் பணிப்பாளர் இக்குழுவின் தவிசாளராகச் செயற்படுகின்றார்.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	குழுவின் ஆக்கம்	இக்குழு மூன்று சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. உரிய நிகழ்ச்சி நிரல் விடயத்திற்காகத் தேவைப்படும் அடிப்படையில் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் (CEO/GM) மற்றும் ஏற்புடைய பிரதான முகாமைத்துவ ஆளணியினர் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	கொள்கை மற்றும் செயன்முறை	ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தொடர்ச்சியான அடிப்படையில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காணுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுவதற்காகத் தொடர்புபட்ட தரப்பினர் கொள்கை நடைமுறையில் உள்ளது.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஈ)	கொடுக்கல்வாங்கல் பற்றிய மீளாய்வு	ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தொடர்ச்சியான அடிப்படையில் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காண்பதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் அறிக்கையிடுவதற்கும் தெளிவான கொள்கை, நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் நடைமுறையில் உள்ளதை இக்குழு உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	நிர்வாக சபைக்கு விபரங்களை அறிக்கையிடல்	தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அக்கொடுக்கல்வாங்கல்களின் பொருளாதார விளைவுகள் தொடர்பான விவரங்களை இக்குழு காலாண்டு அடிப்படையில் நிருவாக சபைக்கு அறிக்கையிடுகிறது.	இணங்கப்பட்டுள்ளது
(ஊ)	வட்டி முரண்பாடு GRI 2-15	பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அவரின் நெருங்கிய உறவினர்களுக்குத் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அப்பணிப்பாளருக்குக் கணிசமான வட்டியுள்ள ஒரு விடயம் தொடர்பான நிருவாக சபைத் தீர்மானங்களில் அப்பணிப்பாளர் பங்குபற்றுவதைத் தவிர்த்துக்கொள்வதை இக்குழு உறுதிசெய்கிறது.	இணங்கப்பட்டுள்ளது
(எ)	தடைசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்	ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை விடத் தொடர்புபட்ட தரப்பினருக்கு ”மிகவும் சாதகமான கவனிப்பை” வழங்கும் வகையிலான கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடவில்லை என்பதை இக்குழு உறுதிசெய்கிறது. இவை பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன: (i) வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் விவேகமான சதவீதத்தை மீறும் வகையில், தொடர்புபட்ட தரப்பினருக்கு “மொத்த தேறிய வசதி” வழங்கப்படுதல். (ii) தொடர்பற்ற ஒப்பீட்டுக்குரிய எதிர்த்தரப்பினருடனான ஒப்பீட்டுக்குரிய கொடுக்கல்வாங்கலுக்கு, வங்கியின் சிறந்த கடன் வழங்கல் வீதத்தை விடக் குறைந்த வட்டி வீதத்தை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தை விட அதிகமாகச் செலுத்துதல். (iii) தொடர்பற்ற தரப்பினருடன் மேற்கொள்ளப்படும் சாதாரண வியாபாரப் போக்கில் வழங்கப்படும் நியதிகளைத் தாண்டி, சாதகமான நியதிகள், வர்த்தக நட்டங்களை ஈடுசெய்தல் மற்றும்.'.அல்லது கட்டணங்கள்.'.தரகுப்பணங்களை தள்ளுபடி செய்தல் போன்ற முன்னுரிமை கவனிப்பினை வழங்குதல். (iv) மதிப்பீட்டுச் செயன்முறை இல்லாமல் தொடர்புபட்ட தரப்பினருக்குச் சேவைகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல். (V) நியாயமான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளைச் செய்வதற்குத் தேவைப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, தொடர்புபட்ட தரப்பினருடன் சாத்தியமான உரிமையாண்மை, இரகசியமான அல்லது ஏனைய உணர்திறன் மிக்க தகவல்களைப் பகிர்வதற்கு வழிவகுக்கும் அறிக்கையிடல் வழிகள் மற்றும் தகவல் பாய்ச்சல்களைப் பேணுதல்.	இணங்கப்பட்டுள்ளது
7.	**தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்**		
7.1	தொடர்புபட்ட தரப்பினரை அடையாளம் காணுதல்	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது அனைத்து வகையான தொடர்புபட்ட தரப்பினரையும் வரையறுக்கிறது (சம்பந்தப்பட்ட பணிப்புரையின் விதிமுறைகளின்படி தொடர்புபட்ட தரப்பினர் குறிப்பிடப்பட்டுள்ளனர்).	இணங்கப்பட்டுள்ளது
7.2	தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் வகை	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது பின்வரும் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகிறது. (அ) உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகபட்ச வசதி.'.பாரிய வெளிப்பாடுகள் தொடர்பான வங்கித் தொழில் சட்டப் பணிப்புரைகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, எந்தவொரு வகையான வசதியையும் வழங்குதல். (ஆ) வைப்புகள், கடன்கள் மற்றும் முதலீடுகளின் வடிவத்தில் வங்கியின் ஏதேனும் பொறுப்புகளை உருவாக்குதல். (இ) வங்கிக்கு வழங்கப்படும் அல்லது வங்கியிலிருந்து பெறப்படும் நிதியியல் அல்லது நிதியியல் அல்லாத தன்மையிலான ஏதேனும் சேவைகளை வழங்குதல். (ஈ) அத்தகைய தொடர்புபட்ட தரப்பினருக்கு நன்மைகளை அளிக்கக்கூடிய, சாத்தியமான உரிமையாண்மை, இரகசியமான அல்லது ஏனைய உணர்திறன் மிக்க தகவல்களைப் பகிர்வதற்கு வழிவகுக்கும், வங்கிக்கும் ஏதேனும் தொடர்புபட்ட தரப்பினருக்கும் இடையிலான அறிக்கையிடல் வழிகள் மற்றும் தகவல் பாய்ச்சல்களை உருவாக்குதல் அல்லது பேணுதல்.	இணங்கப்பட்டுள்ளது
7.3	தொடர்புபட்ட தரப்பினருக்கான வசதி வழங்குதல் தொடர்பில் வங்கித் தொழில் சட்டத்தின் 47 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுடனான இணக்கப்பாடு	தொடர்புபட்ட தரப்பினர் கொள்கையின்படி, 7.1 பணிப்புரையில் வரையறுக்கப்பட்டுள்ள அதன் தொடர்புபட்ட தரப்பினர் எவருக்கும் வழங்கப்படும் வசதிகள் தொடர்பில், வங்கித் தொழில் சட்டத்தின் 47 ஆவது பிரிவு மற்றும் 76K பிரிவின் குறித்த ஏற்பாடுகள் விளக்கப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
7.4	பணிப்பாளர்கள் மற்றும்/ அல்லது இணைக்கப்பட்ட தரப்பினருக்கு வசதி வழங்குவதற்கான கொள்கை	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஒரு ஏற்பாட்டினைக் கொண்டுள்ளதுடன், வங்கி அதற்கு இணங்குகின்றது: பணிப்பாளர்கள், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பெயர்களில் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வசதிகளுக்காக, அத்தகைய நபர் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேவையான பிணையை வழங்க வேண்டும்.	இணங்கப்பட்டுள்ளது
7.5	ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிக்கான கொள்கை	வங்கி தனது ஊழியர்களுக்கு, ஸ்தாபிக்கப்பட்ட ஆளணியினருக்கான நன்மைகளைத் தாண்டி முன்னுரிமை கவனிப்பினையோ அல்லது விசேட வசதியையோ வழங்குவதில்லை.	இணங்கப்பட்டுள்ளது
7.6	தொடர்புபட்ட தரப்பினருக்கான வசதியைப் பதிவழித்தல்	நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கையானது இது தொடர்பான ஒரு ஏற்பாட்டினைக் கொண்டுள்ளதுடன், வங்கி அதற்கு இணங்குகின்றது. 2025 ஆம் ஆண்டில் இவ்வாறான எந்தவொரு சூழ்நிலையும் எழவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
8.	சிரேஷ்ட முகாமைத்துவம்		
8.1	சிரேஷ்ட முகாமைத்துவம் மீதான நிருவாக சபையின் மேற்பார்வை	நிறைவேற்றுச் செயற்பாடுகளில் தலையிடாது, வங்கியின் நாளாந்தச் செயற்பாடுகள் மீது நிருவாக சபை ஒரு கவனமான மேற்பார்வையைப் பேணுகின்றது. அதிகாரம் மற்றும் பொறுப்பினை வரையறுப்பதன் மூலமும், வியாபாரம் மற்றும் கொள்கைகளுடனான இணக்கப்பாட்டினைக் கண்காணிப்பதற்காக ஒழுங்கான வினைத்திறன் மீளாய்வினை முன்னெடுப்பதன் மூலமும் இது அடையப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
8.2	சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தகுதி மற்றும் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள்	வங்கித் தொழில் சட்டத்தின் 42 (2), 44A ஆவது பிரிவுகள் மற்றும் 76H ஆவது பிரிவின் படி, வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அனைத்து உறுப்பினர்களும் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அவர்கள் பதவியை வகிப்பதற்குத் தகுதியான மற்றும் பொருத்தமான நபர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
8.3	சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்புகள்	வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் பின்வரும் முதன்மைப் பொறுப்புகளுக்கு இணங்கப்பட்டது:	இணங்கப்பட்டுள்ளது
		(அ) பொருத்தமான தனிப்பட்ட நடத்தை மூலம் வங்கியின் உறுதியான கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்புக்கு வினைத்திறனாகப் பங்களித்தல். (ஆ) வங்கியில் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான தொழில்சார் நேரத்தை ஒதுக்குதல் ஒரு துணை அல்லது இணை நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகச் சேவையாற்றும் போது, அத்தகைய பொறுப்புகள் வங்கிக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பாதிக்காது என்பதை உறுதிசெய்தல். (இ) வங்கியின் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார மூலோபாயங்கள், இடர் முகாமைத்துவக் கட்டமைப்புகள் மற்றும் இணக்கப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்தல். (ஈ) இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளின் சுயாதீனத்தன்மையில் தலையிடாது அதனை நிலைநிறுத்துதல் மற்றும் மதித்தல். (உ) தகைமைகளைப் பேணுவதற்கும் ஏற்புடைய மேம்பாடுகள் குறித்து இற்றைப்படுத்திய நிலையில் இருப்பதற்கும் தொடர்ச்சியான தொழில்சார் மேம்பாட்டை மேற்கொள்ளல். (ஊ) பொறுப்புகளைப் பொருத்தமான முறையில் கையளித்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட கடமைகளின் மீதான வினைத்திறனான மேற்பார்வையை உறுதிசெய்தல். (எ) வங்கி முழுவதும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் ஒரு முகாமைத்துவக் கட்டமைப்பை ஸ்தாபித்தல் மற்றும் பேணுதல். (ஏ) அடையாளம் காணப்பட்ட மீறல்கள் தொடர்பில் உரிய நேரத்திலான மற்றும் பொருத்தமான தீர்வளிக்கும் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையை உறுதிசெய்தல். (ஐ) நிருவாக சபை மற்றும் ஏற்புடைய நிருவாக சபையின் உப குழுக்களுக்குப் பொருள்வாய்ப்புள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதல். (ஒ) தகுதி மற்றும் பொருத்தத்தைப் பாதகமாகப் பாதிக்கும் எந்தவொரு பொருள்வாய்ப்புள்ள தகவலையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு உடனடியாக அறிவித்தல்.	

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
9.	**வெளிப்படுத்தல்கள்**		
9.1	**வெளிப்படுத்தல்கள் மீதான நிருவாக சபையின் பொறுப்புகள்**	வங்கியின் தொழிற்பாடுகளின் அளவு மற்றும் சிக்கல்தன்மைக்கு ஏற்ப வெளிப்படைத்தன்மை மற்றும் சந்தை ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்காக, பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள், மூலதனப் போதுமை, திரவத்தன்மை, வியாபாரச் செறிவுகள், தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் மற்றும் நிதியியல் பெறுபேறுகள் உள்ளடங்கலாக வங்கி தொடர்பான பொருள்வாய்ப்புள்ள தகவல்களின் உரிய நேரத்திலான, திருத்தமான மற்றும் விரிவான பகிரங்க வெளிப்படுத்தலை நிருவாக சபை உறுதிசெய்கிறது. வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் என்பன ஏற்புடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்புடைய மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறை அதிகாரிகளினால் விதிக்கப்பட்ட படிவங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுவதை நிருவாக சபை மேலும் உறுதிசெய்கிறது. இதற்கமைவாக வங்கி நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்துப் பிரசுரிக்கின்றது. காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் சுருக்கப்பட்ட வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, 2025 ஆம் ஆண்டிற்கான காலாண்டு நிதியியல் கூற்றுக்கள் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டன: 1 ஆம் காலாண்டு (Q1) – 2025 – டெய்லி FT, டெய்லி அருண, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 2025 மே 30 அன்று 2 ஆம் காலாண்டு (Q2) – 2025 – டெய்லி FT, டெய்லி அருண, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 2025 ஆகஸ்ட் 28 அன்று 3 ஆம் காலாண்டு (Q3) – 2025 – டெய்லி FT, டெய்லி அருண, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 2025 நவம்பர் 27 அன்று 4 ஆம் காலாண்டு (Q4) – 2025 – டெய்லி FT, டெய்லி அருண, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 2026 பெப்ரவரி 27 அன்று	இணங்கப்பட்டுள்ளது
9.2	**வருடாந்த அறிக்கைக்கான வெளிப்படுத்தல்கள்**		
(அ)	கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடனான இணக்கப்பாடு	வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், சட்டத்தினால் விதிக்கப்பட்ட அனைத்துக் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்கி, ஏற்புடைய அனைத்துக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்குகின்றன. இந்த இணக்கப்பாடு தொடர்பான விரிவான வெளிப்படுத்தல்கள் 312 ஆம் பக்கத்தில் உள்ள "நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள்" என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(ஆ)	உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் தொடர்பில் நிருவாக சபையின் அறிக்கை	நிருவாக சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் விரிவான பார்வையானது 306-307 ஆம் பக்கங்களில் உள்ள "நிதியியல் அறிக்கையிடல் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று" என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(இ)	உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் வினைத்திறன் மீதான வெளிக்களக் கணக்கா-ய்வாளர்களின் சான்றிதழ்	நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பில் வங்கி ஒரு சுயாதீனமான உறுதிப்படுத்தலை பெற்றுள்ளது. இந்த அறிக்கை 308-309 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(ஈ)	பெயர்கள், வங்கியுடனான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட கட்டணங்கள்/ஊதியத்தின் மொத்தம் உள்ளிட்ட பணிப்பாளர்கள் தொடர்பான விவரங்கள்	நிருவாக சபைப் பணிப்பாளர்களின் விபரக்குறிப்புகள் 38-43 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விவரங்கள் 410-415 ஆம் பக்கங்களில் நிதியியல் கூற்றுக்கள் மீதான குறிப்பு 43 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியம் தொடர்பான விவரங்கள் 350 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுக்கள் மீதான குறிப்பு 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(உ)	வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் சதவீதமாக, தொடர்புபட்ட தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட தேறிய வசதி.	2025 டிசம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு தொடர்புபட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வசதி பின்வருமாறு:	இணங்கப்பட்டுள்ளது

	ரூ. '000	வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் சதவீதம்
பணிப்பாளர்கள்	110.47	0.0
பணிப்பாளர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள்	–	–
பிரதான முகாமைத்துவ ஆளணியினர் (KMP)	83,235.47	0.1
KMP இன் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள்	17,205.66	0.0
துணை நிறுவனங்கள்	470,705.30	0.3
உப துணை நிறுவனங்கள்	511,762.04	0.3
அரசாங்கம் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள்	365,020,109.76	236.0
வங்கியின் எந்தவொரு பணிப்பாளரும் அல்லது வங்கியின் எந்தவொரு பணிப்பாளரின் நெருங்கிய குடும்ப உறுப்பினரும் கணிசமான வட்டி கொண்டுள்ள நிறுவனம்	–	–

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(ஊ)	பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான (KMP) ஊதியம் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த பெறுமதிகள்	2025 டிசம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான (KMP) ஊதியம் மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த பெறுமதி பின்வருமாறு:	இணங்கப்பட்டுள்ளது

ஆண்டு	ரூ. '000
குறுகிய கால ஊழியர் நன்மைகள்	835,441.23
பணிக்கொடைக்குப் பின்னரான ஓய்வூதியம், பணிநிறுத்த நன்மைகள், பங்கு சார்ந்த கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நீண்டகால நன்மைகள்	81,308.68
கடன் அட்டைகள் உட்பட கடன்களும் முற்பணங்களும்	83,235.47
வைப்புகள்	550,014.38
முதலீடுகள்	–

பிரிவு	கோட்பாடு	இணக்கப்பாடும் நடைமுறைப்படுத்தலும்	நிலை
(எ)	நிருவாக சபைக் குழு தகவல்களின் வெளிப்படுத்தல்கள்	நிருவாக சபைக் கணக்காய்வுக்குழு தொடர்பான விரிவான வெளிப்படுத்தல்கள் 298 ஆம் பக்கத்தில் உள்ள "நிருவாக சபைக் கணக்காய்வுக்குழு அறிக்கை" என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளன.	இணங்கப்பட்டுள்ளது
(ஏ)	முறையான ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் தகவல்களை வெளிப்படுத்தல்	இந்த ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வங்கி பின்வரும் தகவல்களை வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளது: i. ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்த கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து வங்கி ஒரு சான்றிதழைப் பெற்றுள்ளது. ii. பணிப்பாளர்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் நிருவாக சபையின் கட்டமைப்பு 266 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டுள்ளது
(ஐ)	விவேகமான தேவைகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் அறிக்கை	விவேகமான தேவைகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடனான இணக்கப்பாடு குறித்த விவரங்களை பின்வரும் அறிக்கைகள் வழங்குகின்றன: i. 312 ஆம் பக்கத்தில் உள்ள "நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புகள்". ii. 306 ஆம் பக்கத்தில் உள்ள "நிதியியல் அறிக்கையிடல் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று".	இணங்கப்பட்டுள்ளது
(ஒ)	இணக்கப்பாடற்ற அறிக்கை	வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் உள்ள குறைபாடுகள் அல்லது இந்த வழிகாட்டல்களுடன் இணங்காதது தொடர்பான மேற்பார்வைக் கவலைகள் எதனையும் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் சுட்டிக்காட்டவில்லை.	இணங்கப்பட்டுள்ளது
(ஓ)	சட்டரீதியற்ற விசேட கொடுப்பனவுகள்	2025 ஆம் ஆண்டில், பணிப்பாளர்கள், தலைமை நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களின் வேலைவாய்ப்பு முடிவின் போது அல்லது ஓய்வுபெறும் போது நிதியியல் நன்மைகளாக 44.1 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.	இணங்கப்பட்டுள்ளது
9.3	**இணக்கப்பாடின்மை காரணமாக மற்றும்ஃஅல்லது நிருவாக சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் படி, பணிப்பாளர்கள் ராஜினாமா செய்தல், நீக்கப்படுதல் அல்லது பதவியிலிருந்து விலகுதல் தொடர்பான வெளிப்படுத்தல்கள்**	2025 நிதியாண்டில் இவ்வாறான எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை.	இணங்கப்பட்டுள்ளது

சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கை

வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழுவானது, 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வங்கியியல் சட்டப் பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகை குழுவின் தொழிற்பாடுகளுக்கான பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் சபைக் கணக்காய்வுக் குழுவின் நடைமுறைகளானவை காணப்படுகின்றன.

ஆண்டு இறுதியின் போது, குழுவானது பின்வரும் மூன்று சுயாதீன, நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

பணிப்பாளரின் பெயர்	பதவிநிலை
திரு. எஸ்.எம்.எஸ் சஞ்சய பண்டார	தலைவர்
திருமதி. ஜீ.ஏ.எம் எட்வர்ட்ஸ்	உறுப்பினர்
திரு. என்.எஸ்.பீ வல்கம்பாய	உறுப்பினர்

குழுவிற்கான கோரமானது குறைபட்சம் குழுவின் அரைவாசி உறுப்பினர்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்களின் சபைக்கான செயலாளர், நிருவாக சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராகத் தொழிற்படுகின்றார். ஏனைய உறுப்பினரகள், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் நிதிப் பிரிவின் தலைவர், பிரதம இடர்நேர்வு உத்தியோகத்தர், ஏனைய பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்களின் பிரதிநிதி ஒருவரும், தொடர்புடைய நிகழ்ச்சிநிரலுக்கு குழுவின் அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்குபற்றுவார்கள். எவ்வாறிருப்பினும், குறைந்தபட்சம் ஒரு வருடத்தில் இரு தடவையாவது குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் இன்றிச் சந்திக்க வேண்டும்.

குறிப்பாக சபைக் கணக்காய்வுக் குழுவானது,

- நியதிச்சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட நிதி அறிக்கைத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக நிதி அறிக்கை செயன்முறையை மீளாய்வு செய்கின்றது.
- வணிக இடர்நேர்வுகளின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ முறைமையை மீளாய்வு செய்கின்றது.
- வெளி மற்றும் உள்ளகக் கணக்காய்வு செயன்முறைகளை மீளாய்வு செய்கின்றது.
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு, குறிப்பாக இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதைக் கண்காணிப்பதற்கான நடைமுறைகளை மீளாய்வு செய்கின்றது.
- தகவல் முறைமை பாதுகாப்பு தொடர்பானவை உட்பட, வங்கிச் செயற்பாடுகளின் பல்வேறு பகுதிகளில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்காக, பொருந்தக்கூடிய கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயற்பாட்டுக் கையேடுகளை மீளாய்வு செய்து, அவற்றை பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கின்றது.
- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் அவர்களின் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுகள் மற்றும் நடத்தப்பட்ட விசேட உள்ளகக் கணக்காய்வுகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்கின்றது.
- நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்து, அவற்றின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பிட்டு, பொருந்தக்கூடிய இடங்களில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த பரிந்துரைகளை வழங்குகின்றது.

மீளாய்வின் போது குழு பின்வருவனவற்றைக் அவதானித்துள்ளது:

(அ) ஒழுங்குவிதி ஆணைக்குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் பொருந்தக்கூடிய கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான காலாண்டு நிதிச் செயலாற்றுகையானது தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக அவற்றை மீளாய்வு செய்து, ஒப்புதலுக்காக பணிப்பாளர்கள் சபைக்கு பரிந்துரைத்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, அத்திட்டங்கள் உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் காலமுறைச் செயற்பாடுகளை மீளாய்வு செய்தது.

(இ) 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவக் கடிதம் உள்ளிட்ட, மக்கள் வங்கியின் அலுவல்கள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அதிபதியின் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையை மீளாய்வு செய்தது.

(ஈ) திருத்தப்பட்ட கிளைக் கணக்காய்வுக் கையேடு, திருத்தப்பட்ட முறைகேடு அம்பலப்படுத்தும் கொள்கை, உள்ளகத் கணக்காய்வுத் திணைக்களத்தின் பணியாளர் மதிப்பீடு போன்றவற்றை மீளாய்வு செய்து, பணிப்பாளர்கள் சபையின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப்பட்டது.

(இ) 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கிளைக் கணக்காய்வுகளின் போது கண்டறியப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகள் மற்றும் கிளைக் கணக்காய்வுகளின் போது பொதுவாகக் கண்டறியப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகளுக்கான மூல காரணப் பகுப்பாய்வு உள்ளிட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டில் நான்கு (04) கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சபைக் கணக்காய்வுக் குழுவானது உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைப் பரிசீலித்தது மற்றும் செயலாக்கிகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பீடு செய்தது, அதே நேரத்தில் அடையாளம் காணப்பட்ட முக்கிய சிக்கல்கள், கவலைகளைச் சரிசெய்ய உரிய உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தது மற்றும் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளைக் கண்காணித்தது. சபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் குறிப்புகளானவை தகவலுக்காக சபைக்கு அறிக்கையிடப்பட்டன.

கணக்காய்வு நோக்கத்திற்காகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் ஆவணங்களும் வழங்கப்படுவதையும், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதில் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் பின்பற்றப்படுவதையும் சபைக் கணக்காய்வுக் குழு உறுதி செய்தது. போதுமான கட்டுப்பாடுகளும் நடைமுறைகளும் செயற்பாட்டில் உள்ளதாகவும், கணக்காய்வுக் குழுவின் சாசனம் அனைத்து முக்கிய அம்சங்களிலும் பின்பற்றப்பட்டதாகவும் கணக்காய்வுக் குழு கருதுகின்றது.

சஞ்சய பண்டார
தலைவர்
சபைக் கணக்காய்வுக் குழு

2025 டிசம்பர் 31

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை

GRI 2-19, 20

உள்ளடக்கம்

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC) ஆண்டின் இறுதியில் இரண்டுக்குக் குறையாமலும் மூன்றுக்கு மிகையாகமழும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதோடு ஒவ்வொரு கூட்டத்திலும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும்.

தலைவர்

திரு. எம். ஜே திலகரத்ன (சுயாதினமல்லாத பணிப்பாளர்)

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு ஆர் பீ ஆர் எமர்சன் (சுயாதினமல்லாத பணிப்பாளர்) –
2025 ஒக்டோபர் 22 திகதியன்று

டாக்டர் ஏ ஏ கதிர்காமர் (சுயாதினமல்லாத பணிப்பாளர்) –
2025 ஜூலை 07 திகதியன்று

திரு டீ பி லொக்குஆரச்சி (சுயாதீனமான பணிப்பாளர்) –
2025 ஒக்டோபர் 22 இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில்

திரு எம் எச் எஸ் கௌஸ் (சுயாதீனமான பணிப்பாளர்) –
2025 ஒக்டோபர் 22 இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில்

திரு கிளைவ் பொன்சேக்கா –
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

அழைப்பின் பேரில் அன்றாடம் வருகை தருபவர்கள்

பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) அழைப்பின் பேரில் கூட்டத்தில் பங்குபற்றுவார் மற்றும் அழைக்கும் போது வங்கயின் எவரேனும் ஓர் உத்தியோகத்தர் வருகை தருவார்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BHRRC இன் செயலாளராக தொழிற்படுகின்றார்.

குழுவின் செயலாளர்

குழுவின் செயலாளர் BHRRC இன் செயலாளராகத் தொழிற்படுவார். 2025 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டில் நான்கு (04) கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்ட நடப்பெண்

BHRRC இன் கூட்ட நடப்பு எண்ணானது சபையின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர் ஆகியோராவர்.

குழுவின் வகிபாகம்

- மனித வளங்கள் மற்றும் ஊதியக் கொள்கைகளை வகுப்பதற்கும், மனிதவள முகாமைத்துவம் தொடர்பான மூலோபாயங்களைத் தொடங்குவதற்கும் BHRRC பொறுப்பாகும்.
- ஆட்சேர்ப்பு, சம்பளம் மற்றும் பிற ஊழியர் நன்மைகளைத் தீர்மானிப்பதில் இக்குழு முக்கியப் பங்கு வகிக்கின்றது.
- இக்குழு, பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்களின் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதுடன், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவப் பணியாளர்களுக்கான (KMP) இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிர்ணயிக்கின்றது.
- இக்குழு, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பிரதான முகாமைத்துவப் பணியாளர்களின் செயலாற்றுகையை அவ்வப்போது மதிப்பீடு செய்கின்றது, மற்றும் ஊதியம் மற்றும் நலன்கள் போன்றவற்றைத் திருத்துவதற்கான அடிப்படையையும் வழங்குகின்றது.

எதிர்கால நோக்கு

சபை மனிதவள மற்றும் ஊதியக் குழுவானது அனைத்து மனிதவள மற்றும் ஊதிய ஏற்பாடுகளும் வங்கியின் மூலோபாய நோக்கங்களை ஆதரிப்பதை உறுதி செய்யும்.

எம். ஜே. திலகரத்ன
சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

2025 டிசம்பர் 31

சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு அறிக்கை

உள்ளடக்கம்

சபை ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது (BIRMC) குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களையும் கொண்டிருப்பதோடு சுயாதீனமல்லாத பணிப்பாளர்களின் (தலைவர் உள்ளிட்ட) பெரும்பாண்மை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தலைவர்

திரு சீ எஸ் குனியன்கொட (சுயாதீனமான பணிப்பாளர்)
2025 ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்.

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு எம் ஜே திலகரத்ன (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு கே ஏ விமலேந்திரராஜா (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு டீ பி லொக்குஆரச்சி (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

தேவையின் அடிப்படையில்

திரு கிளைவ் பொன்சேக்கா - பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்

திரு அநுர பெரேரா - பிரதிப் பொது முகாமையாளர் (இடர்நேர்வு முகாமைத்துவம்)

திருமதி சமந்தி சேனாநாயக்க - பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கம்)

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BIRMC இன் செயலாளராக தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்ட நடப்பெண்

BIRMC இன் கூட்டத்திற்கான நடப்பு எண்ணானது குறைந்தபட்சம் 03 நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர்களை கொண்டிருத்தல் வேண்டுமென்பதாகும்.

குழுவின் வகிபாகம்

- சபையால் நிர்ணயிக்கப்பட்ட இடர்நேர்வு அளவுருக்களுக்குள் வங்கியின் இடர்நேர்வு விபரத்தை மீளாய்வு செய்வது இக் குழுவின் பொறுப்பாகும்.
- பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்களைப் பயன்படுத்தி, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு, தகவல் தொழில்நுட்பம், நற்பெயர் மற்றும் மூலோபாயம்சார் இடர்கள் தொடர்பான அனைத்து இடர்நேர்வுகளையும் மதிப்பிடுவது இக் குழுவின் பொறுப்பாகும்.
- இடர் முகாமைத்துவம் தொடர்பான பிற பொறுப்புகளுடன், வங்கி முழுவதும் இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளக இணக்கப்பாடு மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளின் நடைமுறைப்படுத்தல் மற்றும் மீளாய்வை இக் குழு மேற்பார்வையிடுகின்றது.
- கடன் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, தகவல் பாதுகாப்புக் குழு மற்றும் சொத்துப் பொறுப்புக் குழு போன்ற எல்லா முகாமைத்துவ மட்டக் குழுக்களின் போதுமான தன்மையையும் வினைத்திறனையும் இக் குழு மீளாய்வு செய்கின்றது. மற்றும் குழுவால் குறிப்பிடப்பட்ட அளவு மற்றும் பண்புசார் இடர் வரம்புகளுக்குள் அந்த இடர்நேர்வுகளை இக் குழுக்கள் முகாமைசெய்கின்றன.

எதிர்கால நோக்கு

சபையின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் போதுமான தன்மையையும் வினைத்திறனையும் உறுதி செய்வதில் கவனம் செலுத்தும்.

திரு சீ எஸ் குனியன்கொட
சபை ஒன்றிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு
2025 டிசம்பர் 31

சபை நிர்வாகக் கடன் முகாமைத்துவக் குழு அறிக்கை

உள்ளடக்கம்

சபை நிர்வாகக் கடன் முகாமைத்துவக் குழு (BECC) இரண்டு நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களையும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரையும் உள்ளடக்குகின்றது.

தலைவர்

திரு பிராட்லி எமர்சன் (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி அன்று

திருமதி ஜீ ஏ எம் எர்வர்ட்ஸ் (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 நவம்பர் 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு எம் ஜே திலகரத்ன (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)

திரு ஏ ஏ கதிர்காமர் (சுயாதீனமல்லா பணிப்பாளர்)
2025 ஜூலை 8 ஆம் திகதி அன்று

திரு எம் எச் எஸ் கௌஸ் (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 நவம்பர் 14 அம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு கிளைவ் பொன்சேக்கா - பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

நிரந்தர அழைப்பாளர்

திரு அநுர பெரேரா - பிரதிப் பொது முகாமையாளர் (இடர்நேர்வு முகாமைத்துவம்)

அழைப்பின் பேரில் அன்றாடம் வருகை தருபவர்கள்

வங்கியின் வேறு எந்த கடன் பிரிவு அதிகாரியும் அழைப்பின் பேரில் BECC கூட்டங்களில் கலந்துகொள்கிறார்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BECC இன் செயலாளராகத் தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது 23 கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்ட நடப்பெண்

BECC இன் கூட்ட நடப்பு எண்ணானது குறைந்தபட்சம் சபையின் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ஆகியோராவர்.

குழுவின் வகிபாகம்

- வங்கியின் கடன் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் அதிகாரக் கையளிப்பு மட்டத்தை உள்ளடக்கிய கடன் ஒப்புதல் அதிகாரங்களை நிறுவுதல்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்ட வரம்புகளுக்கு மேலான அனைத்துக் கடன்களுக்கும் ஒப்புதல் அளித்தல், மற்றும் பொருத்தமானதாகக் கருதப்படும்போது கூடுதல் உடன்படிக்கைகளையும் நிபந்தனைகளையும் விதித்தல்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்கு மேலான மீள்அட்டவணைப்படுத்தல், மொத்தத் தொகை தீர்வு மற்றும் வட்டிச் சலுகை முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.
- கடன் தொகுப்பின் தரத்தை மேம்படுத்துவதற்காக, கடன் தொடர்பான முறைமைகள், அவற்றின் செயலாக்கம், கண்காணிப்பு மற்றும் கடன் தொகுப்பு அளவிலான இடர்களை முகாமை செய்தல் ஆகியவற்றை மீளாய்வு செய்தல்.
- கடன் இடரைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

எதிர்கால நோக்கு

சபைக் கடன் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது, வங்கியின் கடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தை திறம்பட உறுதி செய்வதற்கு உறுதியளிக்கும்.

ஜீ ஏ எம் எட்வரட்ஸ்
தலைவர்
சபை நிர்வாகக் கடன் குழு

2025 டிசம்பர் 31

சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழு அறிக்கை

GRI 2-10

உள்ளடக்கம்

சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவானது (BNGC) 2025 ஒக்டோபர் 22 அன்று அமைக்கப்பட்டதோடு இது மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இக் குழுவின் தலைவர், 2025 டிசம்பர் 31 ஆகும் போது பணிப்பாளர் சபையின் தலைவராக இல்லாத ஒரு சுதந்திரப் பணிப்பாளர் ஆவார்.

தலைவர்

திரு டீ பி லொக்குஆரச்சி (சுயாதீன பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 அம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்.

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு கே ஏ விமலேந்திரராஜா (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்.

திரு எம் ஜே திலகரத்ன (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்.

அழைப்பின் பேரில் அன்றாடம் வருகை தருபவர்கள்

பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் அழைப்பின் பேரில் கூட்டத்தில் கலந்துகொள்வார்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BNGC இன் செயலாளராகத் தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது 02 கூட்டங்கள் நடைபெற்றன.

குழுவின் வகிபாகம்

- பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களை (KMP) அடையாளங்காணவும், பரிந்துரைக்கவும், மற்றும் நியமிக்கவும் ஒரு முறையான மற்றும் வெளிப்படையான நடைமுறையைச் செயற்படுத்தல்.
- வழிகாட்டுதல்கள் 3 மற்றும் 8.2 இல் கொடுக்கப்பட்டுள்ள தகுதி அளவுகோல்களின்படியும், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளபடியும், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), மற்றும் முக்கிய முகாமைத்துவப் பணியாளர்கள் (KMP) ஆகியோர் பதவி வகிக்கத் தகுதியான மற்றும் சரியான நபர்கள் என்பதை உறுதிசெய்தல்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முக்கிய முகாமைத்துவப் பதவிகளுக்கு நியமனம் அல்லது பதவி உயர்வுக்காகப் பரிசீலிக்கப்படுவதற்குத் தேவையான தகுதிகள், அனுபவம், மற்றும் முக்கியப் பண்புகள் போன்ற தகுதி அளவுகோல்களை அமைத்தல் முக்கிய மேலாண்மை முகாமைத்துவப் பணியாளர்களுக்குக் (KMP) கீழுள்ள பதவிகளுக்கான நியமனத்தை பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் அங்கீகரிப்பார்.
  - வங்கியின் செயற்பாடுகளின் அளவு, பரப்பு, பன்முகத்தன்மை மற்றும் சிக்கலான தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கு பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முக்கிய முகாமைத்துவப் பணியாளர் (KMP) பதவிகளை நிரப்புவதற்குத் தகுதியான மற்றும் திறமையான நபர்களை (உள்ளக/வெளியக) அடையாளம் காண, ஒரு திறமையான மற்றும் வெளிப்படையான செயன்முறையுடன், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவப் பணியாளருக்கான வலுவான அடுத்துரிமைத் திட்டம் வங்கியிடம் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் முக்கிய முகாமைத்துவப் பணியாளருக்குக் கீழுள்ள பதவிகளுக்கான நியமனங்களை பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது பொது முகாமையாளர் அங்கீகரிப்பார்.
  - உரிய பகுதிகளில் உள்ள திறன்/அறிவு இடைவெளிகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதன் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்துரிமையாளர்களை அப் பதவிகளுக்குப் பயிற்றுவித்தல்.
  - அடுத்துரிமைத் திட்டத்தை குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்தல்.
- வங்கித் துறைக்குத் தொடர்புடைய பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள், பேரினப் பொருளாதாரக் கொள்கைகள், சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மற்றும் வளர்ந்து வரும் நிதித்துறை மற்றும் சந்தை நிலவரங்கள் குறித்து பணிப்பாளர்களுக்குத் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- பணிப்பாளர்களின் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, பயிற்சி, திறன் மேம்பாடு, மற்றும் தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து சபைக்குத் தவறாமல் பரிந்துரைகளை வழங்கல்.
- பொருந்தக்கூடிய அனைத்துத் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், மற்றும் தொழில்/சர்வதேச சிறந்த நடைமுறைகளைக் கருத்திற் கொண்டு, வங்கியின் ஒட்டுமொத்த நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, திறம்படச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.

எதிர்கால நோக்கு

சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழுவானது பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மற்றும் பெருநிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் ஆகியோரின் நியமனங்கள் வங்கியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இருப்பதை உறுதி செய்யும்.

திரு டீ பி லொக்குஆரச்சி

தலைவர்
சபை நியமனம் மற்றும் ஆளுகைக் குழு

2025 டிசம்பர் 31

சபை முதலீட்டு வங்கியியல் குழு அறிக்கை

உள்ளடக்கம்

சபை முதலீட்டு வங்கியியல் ஊதியக் குழு (BIBC) குறைந்தபட்சம் சபையின் இரண்டு பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர், திறைசேரியின் தலைவர், பிரதிப் பொது முகாமையாளர் (இடர்நேர்வு முகாமைத்துவம்) மற்றும் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்ட எவரேனும் ஓர் அதிகாரியைக் கொண்டிருக்கும்.

தலைவர்

திரு சீ எஸ் குனியன்கொட (சுயாதீனமான பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்)

ஏனைய உறுப்பினர்கள்

திரு எஸ் எம் எஸ் சஞ்சய பண்டார (சுயாதீனமான பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திருவதி ஜீ ஏ எம் எட்வர்ட்ஸ் (சுயாதீனமான பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு கிளைவ் பொன்சேக்கா - பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்

திரு அநுர பெரேரா - பிரதிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)

திருமதி ஷமிலா லொகுகலுகே பிரதிப் பொது முகாமையாளர் (திறைசேரி, முதலீடு மற்றும் சர்வதேசம்)

அழைப்பின் பேரில் அன்றாடம் வருகை தருபவர்கள்

வங்கியின் வேறு எந்த அதிகாரியும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BIBC இன் செயலாளராகத் தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது ஒரு கூட்டம் நடைபெற்றது.

கூட்ட நடப்பு எண்

BIBC கூட்டத்தின் நடப்பு எண்ணானது நிர்வாக சபையின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்களாவர்.

குழுவின் வகிபாகம்

- வங்கியின் முதலீட்டு வங்கி மாதிரியின் அன்றாட மீளாய்வு.
- முதலீட்டு வணிகப் பிரிவின் (IBU) செயற்பாட்டு மீளாய்வு.
- வாய்ப்பான வாடிக்கையாளர்களின் பெயர் சரிபார்ப்பை உறுதி செய்தல்.
- கூட்டாக முகாமை செய்யப்பட்ட சிக்கல்களுக்கு ஒப்புதல் பெறுதல்.
- முகாமைத்துவக் கட்டணம்/தரகுப் பகிர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் பெறுதல்.
- புதிய முதலீடு மற்றும் வங்கித் தயாரிப்புகளைச் சேர்ப்பது மற்றும் அறிமுகப்படுத்துவது குறித்த மீளாய்வு.

எதிர்கால நோக்கு

சபை முதலீட்டு வங்கியியல் குழுவானது வங்கியின் முதலீடுகள் திறம்பட நடைபெறுவதை உறுதி செய்வதில் குழு கவனம் செலுத்தும்.

சீ எஸ் குனியன்கொட

தலைவர் - சபை முதலீட்டு வங்கியியல் குழு

2025 டிசம்பர் 31

சபை தந்திரோபாய திட்ட மீளாய்வுக் குழு அறிக்கை

உள்ளடக்கம்

சபை தந்திரோபாய திட்ட மீளாய்வுக் குழுவானது சபையின் தலைவர், இரண்டு நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரைக் கொண்டிருக்கும்.

தலைவர்

பேராசியர் பி என் டி பெர்னான்டோ (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு ஆர் பீ ஆர் எமர்சன் (சுயாதீனமல்லாத பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதிக்கு

திரு சீ எஸ் குனியன்கொட (சுயாதீன பணிப்பாளர்)
2025 ஒக்டோபர் 22 ஆம் திகதிக்கு முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு எம் எச் எஸ் கௌஸ் (சுயாதீன பணிப்பாளர்)
2025 நவம்பர் 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு கிளைவ் பொன்சேக்கா - பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

அழைப்பின் பேரில் அன்றாடம் வருகை தருபவர்கள்

பிரதிப் பொது முகாமையாளர் (தந்திரோபாய திட்டமிடல், செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சி) மற்றும் வங்கியின் வேறு எந்த அதிகாரியும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் BSPRC இன் செயலாளராகத் தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது நான்கு கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்ட நடப்பு எண்

BSPRC கூட்டத்தின் நடப்பு எண்ணானது சபையின் மூன்று உறுப்பினர்களாவர்.

குழுவின் வகிபாகம்

- தந்திரோபாயத் திட்டம், செயன்முறைகள், முன்னேற்றம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை மீளாய்வு செய்து, திருத்த நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.
- வங்கியின் மூலோபயம், நோக்கங்கள், திட்டங்கள் மற்றும் வரவுசெலவுத் திட்டங்களைக் கருத்திற் கொண்டு அதன் செயற் திறனை மீளாய்வு செய்து, தேவைப்பட்டால் திருத்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- கொள்கை முடிவெடுத்தல்: அதன் பணியைச் செய்வதற்குத் தேவையான அதிகாரம் உள்ளதா என்பதை உறுதிசெய்ய, அதன் செயற்பாட்டு வரம்பு, திறன்கள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்யவும் மற்றும் அது தொடர்பாகக், கூறப்பட்ட பணிகளுக்கான வேலை வரம்பு, செயற் திறன் மதிப்பீடு மற்றும் வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றைத் தீர்மானித்தல்.
- தந்திரோபயத் திட்டமிடல், செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில், அப் பிரிவு/பிரிவுகளுக்குத் திருத்த நடவடிக்கைகளைத் தீவிரமாகப் பரிந்துரைத்தல்.
- பேரின சூழல் மாற்றங்களின் அடிப்படையில், செயறபடுத்தக்கூடிய தந்திரோபயங்கள் உருவாக்கப்பட்டுப் பரிந்துரைக்கப்படுவதை உறுதிசெய்தல்.

எதிர்கால நோக்கு

வங்கியின் தூர நோக்கினை நிறைவேற்றுவதற்காக, சபை அதன் நம்பகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு உதவுவதில் சபை தந்திரோபாய திட்ட மீளாய்வுக் குழுவானது கவனம் செலுத்தும்.

பேராசியர். பி. என். டி பெர்னான்டோ
தலைவர்

2025 டிசம்பர் 31

தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு அறிக்கை

உள்ளடக்கம்

தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழுவானது (RPTRC) குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்றல்லாத பணிப்பாளர்களையும் கொண்டிருப்பதோடு சுயாதீனமல்லாத பணிப்பாளர்களின் (தலைவர் உள்ளிட்ட) பெரும்பாண்மை ஒன்றைக் கொண்டிருக்கும். குழுவின் தலைவர் சபையின் தலைவரல்லாத ஒரு சுயாதீனப் பணிப்பாளராக இருத்தல் வேண்டும். குழுவானது 2025 நவம்பர் 14 அன்று அமைக்கப்பட்டது.

தலைவர்

திருவதி. ஜீ. ஏ. எம். எட்வர்ட்ஸ் (சுயாதீன பணிப்பாளர்) 2025 நவம்பர் 14 அம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

ஏனைய உறுப்பினர்கள் (பணிப்பாளர்கள்)

திரு. சீ. எஸ். குனியன்கொட (சுயாதீன பணிப்பாளர்)
2025 நவம்பர் 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

திரு. எம். எச். எஸ். கௌஸ் (சுயாதீன பணிப்பாளர்)
2025 நவம்பர் 14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்

தேவையின் அடிப்படையில்

திரு. கிளைவ் பொன்சேக்கா - பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

திருமதி. சமந்தி சேனாநாயக்க - பிரதிப் பொது முகாமையாளர் (இணக்கம்)

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் RPTRC இன் செயலாளராக தொழிற்படுகின்றார்.

கூட்டங்கள்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த நிதியாண்டின் போது ஒரு கூட்டம் நடைபெற்றது.

கூட்ட நடப்பு எண்

RPTRC இன் கூட்டத்திற்கான நடப்பு எண்ணானது குறைந்தபட்சம் 02 ஆகும்.

குழுவின் வகிபாகம்

- இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகள் மற்றும் பிற பொருந்தக்கூடிய தரநியமங்கள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, அனைத்து தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகளையும் மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் சபைக்கு உதவுதல்.
- ஒரே வணிகத்தில் வங்கியின் ஏனைய அங்கத்தவர்களுக்கு அளிக்கப்படுவதை விட, தொடர்புடைய தரப்புகளுக்கு “அதிக சாதகமான அணுகுமுறையை” வழங்கும் விதத்தில் வங்கி அத்தகைய தரப்புகளுடன் பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதில்லை என்பதை இக்குழு உறுதி செய்கின்றது.

எதிர்கால நோக்கு

இலங்கை மத்திய வங்கியால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு இணங்க வங்கி செயற்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்கத்தில், தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு நிறுவப்பட்டுள்ளது.

திருமதி. ஜீ. ஏ. எம். எட்வர்ட்ஸ்
தலைவர்
தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனைகள் மீளாய்வுக் குழு

2025 டிசம்பர் 31

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

பொறுப்பு

2024 ஆம் ஆண்டின் வங்கிச் சட்ட பணிப்புரை இலக்கம் 5 இன் பிரிவு 9.2 (ஆ) இற்கு இணங்க, பணிப்பாளர்கள் சபை, மக்கள் வங்கியின் ("வங்கி") நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறது.

வங்கியில் நடைமுறையில் உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் போதுமான தன்மைக்கும் பயனுறுதித்தன்மைக்கும் பணிப்பாளர்கள் சபை ("சபை") பொறுப்பாகும். அத்தகைய போதுமான தன்மையையும் பயனுறுதித்தன்மையினையும் கருத்திற் கொள்ளும்போது, வங்கித் தொழிலுக்கு வெகுமதியானது இடருடன் முகாமை செய்யப்பட்ட அடிப்படையில் சமநிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதை சபை அங்கீகரிக்கிறது. எனவே, வங்கியின் இடர்நேர்வு ஏற்புத்திறனை உள்ளடக்கிய வரம்புகள் மற்றும் குறிகாட்டிகளிலிருந்து ஏற்படும் எந்தவொரு விலகல்களையும் எடுத்துக்காட்டும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் முதன்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், நிதித் தகவல்கள் மற்றும் பதிவேடுகளில் ஏற்படும் கணிசமான தவறுகளுக்கு எதிராகவோ, அல்லது நிதி இழப்புகள் மற்றும் மோசடிகளுக்கு எதிராகவோ, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நியாயமான உத்தரவாதத்தை மட்டுமே வழங்க முடியும், முழுமையான உத்தரவாதத்தை அல்ல.

வங்கியால் எதிர்கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகியவற்றுக்காக சபை ஒரு தொடர்ச்சியான செயன்முறையை நிறுவியுள்ளது. மேலும், வணிகச் சூழல் அல்லது ஒழுங்குவிதி வழிகாட்டுதல்களில் மாற்றங்கள் ஏற்படும்போதெல்லாம், நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்துவதும் இச் செயன்முறையில் அடங்கும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட "வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு கூற்று மீதான வழிகாட்டுதலின்" படி, இச் செயன்முறை பணிப்பாளர்கள் சபையால் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றது. அந்த வழிகாட்டுதலில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மதிப்பிடுவதற்கான கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டு, நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டை பணிப்பாளர்கள் சபை மதிப்பிட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை குறித்தும், வெளிப்புற நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது தொடர்பான கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதித் தேவைகளுக்கு இணங்க உள்ளது என்பது குறித்தும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு வலுவானதாகவும் போதுமானதாகவும் உள்ளது என்று சபை கருதுகின்றது.

முகாமைத்துவத்தினால், எதிர்கொள்ளப்படும் இடர்களைக் கண்டறிந்து மதிப்பிடுவதன் மூலமும், இந்த இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், இயக்குதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றின் மூலமும், இடர் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைச் செயற்படுத்துவதில் சபைக்கு உதவுகின்றது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையை மீளாய்வு செய்வதில் பின்பற்றப்பட்ட செயன்முறையின் முக்கிய அம்சங்கள்

நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மை மற்றும் நேர்மையை மீளாய்வு செய்வதில் நிறுவப்பட்டுள்ள முக்கிய செயன்முறைகள் பின்வருமாறு:

- வங்கியின் அன்றாடச் செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையை உறுதி செய்வதிலும், வங்கியின் செயற்பாடுகள் நிறுவனத்தின் நோக்கங்கள், மூலோபாயங்கள், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வணிக வழிகாட்டுதல்களுக்கு இணங்க இருப்பதை உறுதி செய்வதிலும் சபைக்கு உதவுவதற்காக, உப குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

- வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, மாதிரிகள் மற்றும் சுழற்சி முறைகளைப் பயன்படுத்தி, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதையும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் பயனுறுதித்தன்மையையும் தொடர்ச்சியாகச் சரிபார்க்கின்றது. மேலும், இணங்காத தன்மைகள் தொடர்பான முக்கியக் கண்டுபிடிப்புகளையும் அது எடுத்துரைக்கின்றது. அனைத்து அலகுகள் மற்றும் கிளைகளிலும் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சார்பற்ற மற்றும் புறநிலை அறிக்கையை வழங்குவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு மதிப்பீட்டு வழிமுறைகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படும் இடரின் அளவைப் பொறுத்து, இவற்றின் அவ்வப்போதைய தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க, உள்ளகத் கணக்காய்வுப் பிரிவானது பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி, அலுவலகத்திலும் மற்றும் அலுவலகத்திற்கு வெளியிலும் உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கண்டுபிடிப்புகள், சபைக் கணக்காய்வுக் குழுவின் (BAC) காலமுறை கூட்டங்களில் ஆய்வுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழுவானது (BAC), உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்குவிதி ஆணைக்குழுக்கள் மற்றும் முகாமைத்துவத்தினால் அடையாளம் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டுச் சிக்கல்களை மீளாய்வு செய்கின்றது மற்றும், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை மதிப்பீடு செய்கின்றது. கணக்காய்வுகளின் பரப்பு மற்றும் அவற்றின் தரம் ஆகியவற்றிற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உள்ளகக் கணக்காய்வுப் பணிகளையும் அவர்கள் மீளாய்வு செய்கின்றனர். சபைக் கணக்காய்வுக் குழுவின் கூட்டக் குறிப்புகள், வங்கியின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்களில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சமர்ப்பிக்கப்படுகின்றன. வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள், சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கையில் (பக்கம் 298 ஐப் பார்க்கவும்) குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக் கட்டுப்பாட்டை மதிப்பிடுகையில், வங்கியின் அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள், வங்கியின் நிதிக் கூற்றுக்களில் உள்ள முக்கிய கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய அனைத்து நடைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து மீளாய்வு செய்து புதுப்பித்து வந்தனர். வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் துறை, இந்த நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வடிவமைப்புப் பொருத்தத்தையும் செயற்திறனையும் தொடர்ச்சியாகச் சரிபார்த்து வந்தது.
- LKAS மற்றும் SLFRS ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், அங்கீகாரம், அளவீடு, வகைப்பாடு மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றின் தேவைகளுக்கு இணங்குவதற்கான செயன்முறைகளில் படிப்படியான மேம்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில், கடன்கள் மற்றும் முன்பணங்களின் மதிப்பிழப்பு, கடன் அட்டை செயற்பாடுகள், முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்தல்கள் குறித்த செயன்முறைகள் மேலும் வலுப்படுத்தப்படும். இந்த மதிப்பீட்டில் வங்கியின் துணை நிறுவனங்கள் சேர்க்கப்படவில்லை.
- 2018 ஆம் ஆண்டில் இலங்கை கணக்கீட்டு தரநியமம் – SLFRS 9 (நிதிக் கருவிகள்) இன் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்த வங்கி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தேவையான மாதிரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு, செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. SLFRS 9 இற்கு இணங்க சரிபார்ப்பு மற்றும் இணக்கத்திற்குத் தேவையான முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் அறிக்கைகள் மீதான செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை சபை தொடர்ந்து வலுப்படுத்தும்.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வங்கியின் முழுக் கிளை வலையமைப்பையும் உள்ளடக்கி, கணனி வழிக் கணக்காய்வு நுட்பங்கள்/கருவிகளைப் பயன்படுத்தி, வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில செயன்முறைகள் மீது தரவுப் பகுப்பாய்வை மேற்கொண்டது. உள்ளகத் கணக்காய்வுப் பிரிவால் கண்டறியப்பட்ட அனைத்து முக்கியக் கண்டுபிடிப்புகளும், சபைக் கணக்காய்வுக் குழுவின் காலமுறை கூட்டங்களில் மீளாய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.
- 2025 நிதியாண்டில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பாக வெளிக் கணக்காய்வாளர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் கருத்திற் கொள்ளப்பட்டு, பொருத்தமான இடங்களில் அவற்றை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

உறுதிப்படுத்தல்

மேற்கண்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது, நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்புற நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் ஆகியவை குறித்து நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், அது இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுக்கு இணங்க செய்யப்பட்டுள்ளது என்றும் இவ் வசனத் தொகுதி உறுதிப்படுத்துகின்றது.

சபையின் கட்டளையின்படி

எஸ். எம். எஸ். சஞ்சய பண்டார
பணிப்பாளர்

2026 பெப்ரவரி 24

ஜீ. ஏ. எம். எட்வர்ட்ஸ்
பணிப்பாளர்

2026 பெப்ரவரி 24

உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/D/PB/IC/2025 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 24 March 2026

மக்கள் வங்கியின் தலைவர்

மக்கள் வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக, கணக்காய்வாளர் நாயகம் பணிப்பாளர் குழுவிற்கு அளித்த சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை.

அறிமுகம்

2025 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் ("வங்கி") பணிப்பாளரின் உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கையில் ("கூற்று") உள்ள நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கைக்கு உறுதியளிப்பதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

உரிமம் பெற்ற வங்கிகளுக்கான பெருநிறுவன ஆளுகை குறித்த 2024 ஆம் ஆண்டின் வங்கிச் சட்ட பணிப்புரை இலக்கம் 5 இன் பிரிவு 9.2 (ஆ) இற்கு இணங்க, அறிக்கையைத் தயாரித்து வழங்குவதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

SLSAE 3050 (திருத்தம்) தொடர்பான எனது பொறுப்பும் அதற்கிணங்க செயற்படுதலும்

பணிப்பாளர்களால் அல்லது அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அக் கூற்று ஆதரிக்கப்படுகிறதா என்பதையும், வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையை அது பொருத்தமான முறையில் பிரதிபலிக்கிறதா என்பதையும் மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட, வங்கிகளுக்கான பணிப்பாளர்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு கூற்று மீதான உறுதிப்படுத்தல் அறிக்கையான, இலங்கை உறுதிப்படுத்தல் ஈடுபாடுகள் மீதான தரநிலை (SLSAE) 3050 (திருத்தம்) இற்கு இணங்க எனது பணியை நான் மேற்கொண்டேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு அறிக்கையை, முகாமைத்துவம் அனைத்து முக்கிய அம்சங்களிலும் தயாரித்துள்ளதா என்பது குறித்து வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டைப் பெறுவதற்கான நடைமுறைகளை நான் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும் என இத் தரநியமம் கோரியது.

இவ் ஈடுபாட்டின் நோக்கத்திற்காக, எந்தவொரு அறிக்கையையும் புதுப்பிப்பதற்கோ அல்லது மீண்டும் வெளியிடுவதற்கோ நான் பொறுப்பல்ல. மேலும், இந்த ஒப்பந்தத்தின் போது நான் நிதித் தகவல்களின் கணக்காய்வு அல்லது மீளாய்வை மேற்கொள்ளவில்லை.

மேற்கொள்ளப்பட்ட பணியின் சுருக்கம்

பணிப்பாளர்களால் அல்லது அவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களால் அந்த அறிக்கை ஆதரிக்கப்படுகிறதா என்பதையும், வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையை அது பொருத்தமான முறையில் பிரதிபலிக்கின்றதா என்பதையும் மதிப்பிடுவதற்காக நான் எனது பணியை மேற்கொண்டேன்.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள், முதன்மையாக வங்கிப் பணியாளர்களிடம் விசாரிப்பதற்கும், பணிப்பாளர்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறையை ஆதரிக்கும் ஆவணங்கள் மாதிரி அடிப்படையில் உள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்கும் மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்தன.

SLSAE 3050 (திருத்தம்) தரநியமமானது, அந்த கூற்றானது அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளதா என்பதை நான் கருத்திற் கொள்ள வேண்டும் என்றோ அல்லது வங்கியின் இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் பயனுறுதித்தன்மை குறித்து ஒரு கருத்தை உருவாக்க வேண்டும் என்றோ என்னைக் கட்டாயப்படுத்தவில்லை. மேலும், ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க சிக்கல்களின் முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களைக் கையாள்வதற்காக விபரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள், உண்மையில் அந்தச் சிக்கல்களைச் சரிசெய்யுமா என்பதை நான் கருத்தில் கொள்ள வேண்டும் என SLSAE 3050 (திருத்தம்) தரநியமமானது, என்னைக் கட்டாயப்படுத்தவில்லை.

வங்கியின் தன்மை, மற்றும் கூற்று தயாரிக்கப்பட்ட நிகழ்வு அல்லது பரிவர்த்தனை குறித்த எனது புரிதலைக் கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறைகள் எனது கணிப்பைச் சார்ந்துள்ளன.

எனது முடிவுக்கு அடிப்படையை வழங்க, நான் பெற்றுள்ள சான்றுகள் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளன என்று நான் நம்புகின்றேன்.

முடிவு

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை குறித்த மீளாய்வில் பணிப்பாளர்கள் சபை பின்பற்றிய செயன்முறை பற்றிய எனது புரிதலுடன், ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள கூற்று முரண்படுகிறது என்று நம்புவதற்குரிய எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை.

எல். எஸ். ஐ. ஜயரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

நிதியியல் அறிக்கைகள்

312
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

313
நிதியியல் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

316
வருமானக் கூற்று

317
அனைத்துமுள்ளடக்கிய வருமானக் கூற்று

318
நிதி நிலைமைக் கூற்று

320
உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி

322
உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம்

324
காசுப் பாய்ச்சல் கூற்று

325
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்



நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

மக்கள் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (“குழுமம்”) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்களானவை பின்வரும் அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள்

வங்கியின் நிதிக் கூற்றுக்கள், நிதித்துறையைச் சேர்ந்தவரும் சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினருமான பிரதிப் பொது முகாமையாளர்/பதிற்கடமையாற்றும் நிதித் தலைவரின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. வங்கியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் பின்வருவனவற்றின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கின்றன என்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகிறது:

- 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய வங்கி மற்றும் குழுமத்தின் நிதி நிலைமை.
- 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கி மற்றும் குழுமத்தின் நிதியச் செயற்பாடு.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஆதரவாக, பின்வரும் நிதியியல் அறிக்கையிடலில் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை பணிப்பாளர் சபை மேற்பார்வை செய்கின்றது:

- பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் அவற்றை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் கடைப்பிடித்தல், அத்துடன் பொருள் ரீதியான மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை வெளிப்படுத்துதல் மற்றும் விளக்குதல்.
- நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டுத் தரநிலைகளுக்கு (SLFRS/LKAS) இணங்கவும், அடிப்படை கணக்கேடுகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல்.
- பரிமாற்றங்களின் தன்மை மற்றும் சாராம்சம் சரியாகப் பிரதிபலிக்கும் வகையில், நியாயமான மற்றும் விவேகமான நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகத் தேவையான தகவல்களை நிதிக் கூற்றுக்கள் வழங்குவதை உறுதி செய்தல்.

நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி

வங்கி மற்றும் குழுமம் தமது வணிகத்தை எதிர்காலத்தில் தொடர போதுமான வளங்களைக் கொண்டுள்ளன என்பதையும், நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையைப் பயன்படுத்துவது நியாயமானது என்பதையும் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றது. 2025 ஆம் நிதியாண்டில், நிலவும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரப் பிரச்சினைகள், “தித்வா“ புயல் மற்றும் அதன் காரணமாக வங்கி மற்றும் குழுமத்தின் வணிகச் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்தும் பணிப்பாளர்கள் மேலதிகமாகக் கருத்தில் கொண்டுள்ளனர்.

உள்ளகக் கட்டுப்பாடு, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணக்கம்

பணிப்பாளர் சபை, பயனுள்ள மற்றும் அனைத்துமுள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவியுள்ளது. இது வங்கி வணிகத்தை ஒழுங்கான முறையில் நடத்துவதற்கும், அதன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், நடைமுறைக்குச் சாத்தியமான வரையில் பதிவுகளின் துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான உள்ளகக் கணக்காய்வு மற்றும் முழுமையான நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியது. இடர்நேர்வை மேற்பார்வையிடுதல், இடர்நேர்வுக்கான அளவுகளைத் தீர்மானித்தல், இடர்நேர்வுக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை மற்றும் நடைமுறைகளின் வினைத்திறனை உறுதி செய்தல் ஆகிய பொறுப்புகளை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. சபையின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு (BIRMC) சபையின் இடர்நேர்வு தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதில் உதவி வழங்குவதுடன், இடர்நேர்வு நிர்வாகக் கட்டமைப்புகள், கொள்கைக் கட்டமைப்புகள், தரநிலைகள் மற்றும் செயல்முறைகளைச் செயல்படுத்துவதன் போதுமான தன்மை மற்றும் வினைத்திறனை உறுதி செய்வதன் மூலம் சுயாதீனமான மேற்பார்வையை வழங்குகின்றது. BIRMC அறிக்கை 300 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை, விவேகமான தேவைகள், ஒழுங்குமுறைகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன் இணங்குவதை உறுதி செய்கிறது, மேலும் ஏதேனும் குறிப்பிடத்தக்க இணக்கமின்மைகள் காணப்படின் அவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கின்றது.

கணக்காய்வு அறிக்கை

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 வது பிரிவின் விதிகளின்படி, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் கணக்காய்வாளராக உள்ளார். அவர் வங்கியின் நிதிக் கூற்றுக்கள் குறித்த இறுதிக் கருத்தையும், நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் அறிக்கையின் மீதான உத்தரவாதத்தையும் வழங்குகின்றார். இவை முறையே 306 மற்றும் 307 பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்காக 2024 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 05 ஆம் இலக்க பெறுநிறுவன ஆளுகை குறித்த உத்தரவுகளுக்கு வங்கி இணங்குவதையும் அவர் சான்றளிக்கின்றார்.

இணக்கப்பாடு

தமது மதிப்பீட்டின் அடிப்படையில், கணக்கீட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் இணக்கப்பாட்டிற்கு போதுமானதாக இருப்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. மேலும், வங்கிக்கு ஏதேனும் பொருள் ரீதியான நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய எவ்விதமான வீழ்ச்சியும் ஏற்படவில்லை என்பதை சபை கவனத்திற் கொள்கிறது. வங்கி வருங்காலத்தில் ஒரு நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சியாக இயங்குவதற்குப் போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என்பதையும் பணிப்பாளர் சபை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. “இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமது பொறுப்புகளை தாம் நிறைவேற்றிவிட்டனர்.” என்ற அபிப்பிராயத்தினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது:

சபையின் உத்தரவின் பேரில்

ஷியாமா விஜேகோன்



சபைச் செயலாளர்

25 பெப்ரவரி 2026

நிதியியல் கூற்றுக்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/D/PB/FA/2025 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 26 February 2026

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான மக்கள் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

மக்கள் வங்கியின் நிதிநிலை அறிக்கைகள் ("வங்கி") மற்றும் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையின் ("குழுமம்") கணக்காய்வு, 31 டிசம்பர் 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக எனது வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதில் 31 டிசம்பர் 2025 அன்று நிலவரப்படியான நிதி நிலை அறிக்கை மற்றும் வருமான அறிக்கை, ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமான அறிக்கை, பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்பாய்ச்சல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (பொருள் கணக்கியல் கொள்கைத் தகவல்கள் உட்பட) ஆகியவற்றை உள்ளடக்கிய இக்கணக்காய்வானது, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் பிரிவின் விதிகளுடன் இணைந்ததாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றப்பட்டது.

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஐஐ ஆம் பாகத்தின் விதிகளிலிருந்து, அப்போதைய நிதி அமைச்சரின் கட்டளைக்கமையவும், குறித்த நிதிச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவினால் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையிலும் 14 மே 1992 அன்று வெளியிடப்பட்ட 715 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் மூலம் வங்கிக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவாக நாடாளுமன்றத்திற்கான எனது அறிக்கை உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு, பொதுப் பயிற்சியிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

எனது அபிப்பிராயப்படி, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வங்கி மற்றும் குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகள், 31 டிசம்பர் 2025 அன்றைய நிலவரப்படியான வங்கி மற்றும் குழுமத்தின் நிதி நிலைமையையும், அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அவர்களின் நிதிச் செயற்திறன் மற்றும் பணப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு காட்சியினைப் பிரதிபலிக்கின்றன.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். அந்த தரநிலைகளின் கீழ் எனது பொறுப்புகள், எனது அறிக்கையின் "நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்" பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதாக நான் நம்புகிறேன்.

1.3 வங்கியின் 2025 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்களில் வங்கியின் 2025 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் அடங்கும், ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் மீதான எனது கணக்காய்வாளர் அறிக்கை ஆகியவை இதில் அடங்காது. இத்தகவல்கள் இந்தக் கணக்காய்வாளர் அறிக்கையின் திகதிக்குப் பிறகு எனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக் கூற்றுக்கள் குறித்த எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியதாக இல்லை, மேலும் அது குறித்து நான் எந்தவிதமான உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும்போது அவற்றை வாசிப்பதும், அவ்வாறு செய்யும்போது, ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் முற்றிலும் முரணாக உள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்ற அறிவு அல்லது வேறுவிதமாக பொருள் ரீதியில் தவறாகக் கூறப்பட்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எனது பொறுப்பாகும்.

வங்கியின் 2025 ஆண்டு அறிக்கையை வாசித்தபோது, அதில் குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த விடயத்தை ஆளுகைக்குப் பொறுப்பானவர்களிடம் திருத்தம் செய்வதற்காகத் தெரிவிக்க வேண்டும். மேலும் குறிப்பிடத்தக்க திருத்தப்படாத தவறான கூற்றுகள் இருந்தால், அவை நாடாளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் சேர்க்கப்படும். அரசியலமைப்பின் 154 (6) ஆம் பிரிவின் விதிகளின்படி, அவ்வறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் ஆளுகைக்குப் பொறுப்பானோர் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கியல் தரநிலைகளின்படி உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் அவசியம் என்று தீர்மானிக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், முகாமைத்துவமானது ஒரு நிறுவனம் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தைக் கலைக்க அல்லது செயற்பாடுகளை நிறுத்த விரும்பினால் தவிர, அல்லது வேறு மாற்று வழி இல்லையென்றால், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாகத் தொடர்தல், தொடர்ந்து இயங்கும் நிறுவனத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பொருந்தக்கூடிய வகையில் வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கியலின் தொடர்ந்து இயங்கும் நிறுவன அடிப்படையைப் பயன்படுத்துதல் என்பவற்றிற்குப் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு நிர்வாகப் பொறுப்புள்ளவர்கள் பொறுப்பாவர். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இன் படி, வங்கி மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் குறிப்பிட்ட கால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க, வங்கி மற்றும் குழுமத்தின் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் முறையாகப் பதிவு செய்து, பதிவுகளை முறையாகப் பராமரிக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டுகிறேன்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுவதுமாக மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்பட்ட தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பது குறித்து நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும். ஆனால் இலங்கை கணக்காய்வு தரநிலைகளின்படி நடத்தப்படும் கணக்காய்வில் ஒரு குறிப்பிடத்தக்க தவறான கூற்று இருக்கும்போது அதை எப்போதும் கண்டறியும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. தவறான கூற்றுகள் மோசடி அல்லது பிழையிலிருந்து எழக்கூடும், மேலும் தனித்தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ, இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்கள் எடுக்கும் பொருளாதார முடிவுகளை அவை பாதிக்கும் என்று நியாயமாக எதிர்பார்க்கப்பட்டால் அவை முக்கியமானதாகக் கருதப்படும்

இலங்கை கணக்காய்வு தரநிலைகளின்படி ஒரு கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறை தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன் மற்றும் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை சந்தேகத்தைப் பராமரிக்கிறேன். மேலும்:

- மோசடி அல்லது பிழை காரணமாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பிடத்தக்க தவறான அறிக்கையிடலின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுதல், அந்த அபாயங்களுக்கு ஏற்ப கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல், மேலும் எனது கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுதல். மோசடியின் விளைவாக ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்க தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதன் இடர்நேர்வு, பிழையின் விளைவாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாகும், ஏனெனில் மோசடி என்பது கூட்டுச்சதி, மோசடி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.
- வங்கி மற்றும் குழுவின் உள்ளக கட்டுப்பாடுகளின் செயற்திறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அன்றி, சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டைப் பெற்றுப் புரிந்துகொள்ளல்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயத்தன்மையையும் முகாமைத்துவம் மதிப்பிடுதல்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயத்தன்மையையும் முகாமைத்துவம் மதிப்பிடுதல்.
- நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த விளக்கக்காட்சி, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதிக் கூற்றுக்கள் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை நியாயமான விளக்கக்காட்சியை அடையும் வகையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் குறித்த கருத்தை வெளிப்படுத்த, குழுவிற்குள் உள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறல். குழு கணக்காய்வின் இயக்கம், மேற்பார்வை மற்றும் செயல்திறனுக்கு நான் பொறுப்பு என்பதுடன் எனது கணக்காய்வுக் கருத்துக்கு நான் மட்டுமே பொறுப்பாவேன்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து, நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியது.

2.1.1 கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன், மேலும் எனது கணக்க்யாவுச் சோதனையிலிருந்து தெரியவந்த வரையில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (a) இன் தேவைக்கேற்ப வங்கியால் முறையான கணக்கியல் பதிவுகள் பராமரிக்கப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (ஐ) இன் தேவைக்கேற்ப, சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iv) இன் தேவைக்கேற்ப, முந்தைய ஆண்டில் நான் செய்த அனைத்து பரிந்துரைகளும் அடங்கும்.

2.2 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 39 (2024 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தால் திருத்தப்பட்டது) பின்வரும் தேவைகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியது.

2.2.1 இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் தேவைகளுக்கு இணங்க, இணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் அடிப்படையில், குறிப்பிடத்தக்க விடயங்களுக்கு மட்டுமே, எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை:

2.3.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (d) இன் தேவைக்கேற்ப, வங்கியால் செய்து கொள்ளப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் வங்கியின் நிர்வாகக் குழுவின் எந்தவொரு உறுப்பினருக்கும் நேரடி அல்லது மறைமுக ஆர்வம் இருப்பதாகக் கூறுதல்

2.3.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைக்கேற்ப, வங்கியின் நிர்வாகக் குழுவால் வழங்கப்பட்ட எந்தவொரு பொருந்தக்கூடிய எழுத்துப்பூர்வ சட்டம், பொது மற்றும் சிறப்பு உத்தரவுகளையும் வங்கி பின்பற்றவில்லை என்பதைக் கூறுதல்

2.3.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (g) இன் தேவைக்கேற்ப, வங்கி அதன் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளைச் செய்யவில்லை என்பதைக் கூறுதல்

2.3.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (h) இன் தேவைக்கேற்ப, பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, வங்கியின் வளங்கள் காலக்கெடுவிற்குள், பொருளாதார ரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதைக் கூறுதல்.

ஆகியவற்றையும் மேற்கொள்கிறேன்

எல்.எஸ்.ஐ. ஜயரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	வங்கி 2025 ரூ. '000	வங்கி 2024 ரூ. '000	வங்கி மாற்றம் %	குழுமம் 2025 ரூ. '000	குழுமம் 2024 ரூ. '000	குழுமம் மாற்றம் %
மொத்த வருமானம்	6	382,009,162	367,977,989	3.8	424,026,916	399,968,041	6.0
வட்டி வருமானம்		356,669,240	349,292,146	2.1	395,088,492	376,974,975	4.8
வட்டி செலவுகள்		(214,291,533)	(242,050,205)	-11.5	(230,424,375)	(254,089,257)	-9.3
தேறிய வட்டி வருமானம்	7	142,377,707	107,241,941	32.8	164,664,117	122,885,718	34.0
கட்டணம் மற்றும் தரகு வருமானம்		18,312,109	14,923,343	22.7	20,357,761	16,074,007	26.7
கட்டணம் மற்றும் தரகு செலவு		(1,904,639)	(757,783)	151.3	(1,904,639)	(757,783)	151.3
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம	8	16,407,470	14,165,560	15.8	18,453,122	15,316,224	20.5
வர்த்தகத்திலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்)	9	3,253,015	853,690	281.1	3,349,319	1,076,990	211.0
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய)	10	3,774,798	2,908,810	29.8	5,231,344	5,842,069	-10.5
மொத்த செயற்பாட்டு வருமானம்		165,812,990	125,170,001	32.5	191,697,902	145,121,001	32.1
குறைபாடு கட்டணம்	11	(15,993,696)	(5,450,173)	193.5	(16,112,228)	(4,426,337)	264.0
தேறிய செயற்பாட்டு வருமானம்		149,819,294	119,719,828	25.1	175,585,674	140,694,664	24.8
பணியாளர் செலவுகள	12	(38,230,657)	(35,834,826)	6.7	(46,801,415)	(41,787,374)	12.0
ஏனைய செலவுகள்	13	(28,170,784)	(27,102,997)	3.9	(35,786,570)	(33,940,949)	5.4
நிதி சேவைகள் மீதான வரிகளுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம		83,417,853	56,782,005	46.9	92,997,689	64,966,341	43.1
நிதி சேவைகள் மீதான வரிகள்		(19,009,128)	(15,198,298)	25.1	(21,888,517)	(17,356,567)	26.1
வரிக்கு முந்திய இலாபம்		64,408,725	41,583,707	54.9	71,109,172	47,609,774	49.4
வருமான வரிச் செலவுகள்	14	(24,179,211)	(16,495,347)	46.6	(27,625,463)	(18,833,907)	46.7
ஆண்டுக்கான இலாபம்		40,229,514	25,088,360	60.4	43,483,709	28,775,867	51.1
உடமையாக்கத்தக்க இலாபம்:							
வங்கியின் உரித்துடைமையாளர்களுக்கு		40,229,514	25,088,360	60.4	41,974,128	27,558,538	52.3
கட்டுப்பாடற்ற நலன்கள்		–	–		1,509,581	1,217,329	24.0
		40,229,514	25,088,360	60.4	43,483,709	28,775,867	51.1
இலாபத்தில் பங்குகொன்றுக்கான உழைப்புக்கள்	15						
சாதாரண பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு (ரூபா)	15.1	40,230	25,088	60.4	41,974	27,559	52.3
சாதாரண பங்கொன்றுக்கான நீர்த்த உழைப்பு (ரூபா)	15.2	165	103	60.4	172	113	52.3

பக்கங்கள் 325 முதல் 441 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிநிலை கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனைத்துமுள்ளடக்கிய வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	வங்கி 2025 ரூ. '000	வங்கி 2024 ரூ. '000	குழுமம் 2025 ரூ. '000	குழுமம் 2024 ரூ. '000
ஆண்டுக்கான இலாபம்	40,229,514	25,088,360	43,483,709	28,775,867
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் (செலவு)				
வருமான அறிக்கையில் மறுவகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்				
OCI நியாயமான பெறுமதியில் உரித்துவ கருவிகளின் தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)	1,118,525	268,521	1,377,286	378,138
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் மீதான தேறிய காப்பீட்டு இலாபங்கள்/(நட்டங்கள்)	2,166,222	(7,693,746)	2,141,861	(7,841,796)
வரையறுக்கப்பட்ட நன்மைத்திட்டங்களின் இலாபங்கள்/நட்டங்கள் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	(649,867)	2,308,124	(645,774)	2,351,888
நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீட்டின் மீதான ஆதாயங்கள	(3,235,999)	2,897,780	(2,788,213)	3,284,652
காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீட்டில் ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	970,800	(869,334)	804,685	(984,264)
	369,681	(3,088,655)	889,845	(2,811,382)
வருமான அறிக்கையில் மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்				
OCI மூலம் நியாயமான மதிப்பில் கடன் பத்திரங்களில் தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) (ECL இல் மாற்றம் உட்பட)	(9,129)	(60,740)	(9,129)	(134)
மேலே உள்ளவற்றின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	–	–	(77,628)	(50,079)
வெளிநாட்டு நடவடிக்கைகளின் நிதி கூற்றுக்களை பரிமாற்றம் செய்வதிலான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)	–	–	(140,750)	(512,493)
	(9,129)	(60,740)	(227,507)	(562,706)
ஆண்டுக்கான ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம், வரி நிகராக	360,552	(3,149,395)	662,338	(3,374,088)
ஆண்டுக்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்	40,590,066	21,938,965	44,146,047	25,401,779
உரித்துடமையாக்கத்தக்கது				
வங்கியின் உரித்துவ உடமையாளர்களுக்கு	40,590,066	21,938,965	42,613,305	24,433,391
கட்டுப்படுத்தப்படாத நலன்கள	–	–	1,532,742	968,388
	40,590,066	21,938,965	44,146,047	25,401,779

பக்கங்கள் 325 முதல் 441 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிநிலை கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31, 2024 ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2025 ரூ. '000	வங்கி 2024 ரூ. '000	வங்கி மாற்றம் %	குழுமம் 2025 ரூ. '000	குழுமம் 2024 ரூ. '000	குழுமம் மாற்றம் %
சொத்துக்கள்							
காசு மற்றும் காசுக்கு சமமானவை	17	109,138,690	71,694,016	52.2	110,598,346	72,398,306	52.8
இலங்கை மத்திய வங்கியில் மீதிகள	18	38,417,296	33,798,107	13.7	38,417,296	33,798,107	13.7
வங்கிகளில் வைப்பீடுகள்	19	85,166,913	59,831,807	42.3	89,852,936	62,005,136	44.9
பெறுதி நிதி கருவிகள்	20	4,524,930	5,842,194	-22.5	4,524,930	5,842,194	-22.5
நிதி சொத்துக்கள் – நியாய மதிப்பில் இலாபம் அல்லது நட்டம் மூலம்	21	307,296,907	329,810,350	-6.8	308,444,628	330,597,382	-6.7
நிதி சொத்துக்கள் – பெறுமதி குறைப்பு கிரயத்தில							
வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணம்	22	83,506,019	31,994,539	161.0	89,185,034	37,047,879	140.7
ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்	23	1,730,671,216	1,521,965,020	13.7	2,000,085,410	1,665,027,784	20.1
பெறுமதி குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்	24	1,230,298,162	1,123,490,537	9.5	1,242,598,653	1,138,634,981	9.1
நிதி சொத்துக்கள் – ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானத்தின் (OCI) நியாயமான பெறுமதியில							
உரிமைமுதல் கருவிகள் – OCI மூலம் நியாய பெறுமதியில	25	3,431,075	2,313,187	48.3	3,704,427	2,668,358	38.8
கடன் கருவிகள் – OCI மூலம் நியாயமான பெறுமதியில	26	7,081,782	7,110,671	-0.4	8,051,542	8,576,912	-6.1
துணை நிறுவனங்களில் முதலீடுகள்	27	6,153,102	5,191,712	18.5	–	–	–
சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டு உரிமை சொத்துக்கள	28	60,687,299	61,079,218	-0.6	74,045,961	73,034,985	1.4
அருவ சொத்துக்கள் மற்றும் நற்பெயர்	29	1,842,560	2,586,671	-28.8	2,090,486	2,760,806	-24.3
ஏனைய சொத்துக்கள்	30	40,188,540	41,091,078	-2.2	38,634,783	39,313,104	-1.7
மொத்த சொத்துக்கள்		3,708,404,491	3,297,799,107	12.5	4,010,234,432	3,471,705,934	15.5
பொறுப்புக்கள்							
வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை	31	25,969,385	36,840,228	-29.5	96,287,432	46,871,380	105.4
பெறுதி நிதி கருவிகள்	20	93,407	168,266	-44.5	93,407	168,266	-44.5
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	32	3,229,886,179	2,854,704,194	13.1	3,380,319,917	2,947,904,673	14.7
ஏனைய கடன்கள்	33	100,014,574	75,545,595	32.4	99,787,574	75,482,595	32.2
தேறிய ஒத்திவைக்கப்பட்ட		9,845,693	12,201,098	-19.3	11,372,189	12,977,145	-12.4
வரி பொறுப்புக்கள்	34	6,787,488	5,627,973	20.6	9,581,574	7,591,958	26.2
ஏனைய பொறுப்புக்கள்	35	76,217,192	76,557,500	-0.4	97,169,725	91,692,859	6.0
தாழ்நிலை கால கடன்கள்	36	40,552,963	54,156,709	-25.1	45,508,349	59,065,269	-23.0
மொத்த பொறுப்புக்கள்		3,489,366,881	3,115,801,563	12.0	3,740,120,167	3,241,754,145	15.4

டிசம்பர் 31, 2024 ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2025 ரூ. '000	வங்கி 2024 ரூ. '000	வங்கி மாற்றம் %	குழுமம் 2025 ரூ. '000	குழுமம் 2024 ரூ. '000	குழுமம் மாற்றம் %
உரிமை முதல்							
கூறப்பட்ட மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம்	37	12,201,998	12,201,998	0.0	12,201,998	12,201,998	0.0
நியதிச் சட்ட ஒதுக்க நிதியம்	38	12,201,998	11,828,689	3.2	12,201,998	11,828,689	3.2
ஏனைய ஒதுக்கங்கள்	39	70,674,271	68,981,258	2.5	74,394,779	72,407,209	2.7
நிறுத்திவைக்கப்பட்ட வருவாய்	40	123,959,343	88,985,599	39.3	155,157,874	118,455,452	31.0
மொத்த பங்குதாரர்களின் பங்கு		219,037,610	181,997,544	20.4	253,956,649	214,893,348	18.2
கட்டுப்படுத்தப்படாத நலன்கள்		–	–		16,157,616	15,058,441	7.3
மொத்த உரிமை முதல்		219,037,610	181,997,544	20.4	270,114,265	229,951,789	17.5
மொத்த உரிமை முதல் மற்றும் ஐயப்பாடான பொறுப்புக்கள்		3,708,404,491	3,297,799,107	12.5	4,010,234,432	3,471,705,934	15.5
ஐயப்பாடான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்	41	248,762,020	233,829,736	6.4	277,222,334	250,318,916	10.7
குறிப்பாணை தகவல்							
ஊழியர்களின் எண்ணிக்கை		8,122	7,633		12,489	10,994	
கிளைகளின் எண்ணிக்கை		746	751		917	862	

நிதிநிலை கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அத்தாட்சிபடுத்துகை

இந்த நிதிநிலை அறிக்கைகள், டிசம்பர் 31, 2025 நிலவரப்படி வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் விவகாரங்களின் நிலை மற்றும் அன்று நிறைவடைந்த ஆண்டிற்கான இலாபம் குறித்த உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றன.

நில்மினி பிரேமலால்
பிரதிப் பொது முகாமையாளர்/ பதிற்கடமையாற்றும் நிதித் தலைவர்

இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதற்கு பணிப்பாளர்கள் குழு பொறுப்பாகும்.

இந்த நிதிநிலை கூற்றுக்கள் பணிப்பாளர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டன:

நாரத பெர்னாண்டோ
தலைவர்

சன்ஜய பண்டார
பணிப்பாளர்

கிளைவ் பொன்சேகா
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

25 பெப்ரவரி 2026
கொழும்பு

உரிமை மாற்றங்களின் கூற்று - வங்கி

வங்கி	கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம்	
	சாதாரணப் பங்குகள்	ஒதுக்கப்பட்ட பங்குகள்
	ரூ. '000	ரூ. '000
ஜனவரி 1, 2024 நிறைவடைந்த ஆண்டுக்கான மீதி	49,998	12,152,000
ஆண்டுக்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்		
ஆண்டுக்கான இலாபம்	–	–
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவு) (வரிகளின் தேறிய)	–	–
மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம் (செலவு)	–	–
உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான பரிவர்த்தனைகள்		
இந்தக் காலகட்டத்தில் ஒதுக்க மாற்றல்	–	–
பங்குதாரர்களுடனான மொத்த பரிவர்த்தனைகள்	–	–
டிசம்பர் 31, 2024 நிலவரப்படி மீதி	49,998	12,152,000
ஜனவரி 1, 2025 நிலவரப்படி மீதி	49,998	12,152,000
ஆண்டுக்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்		
காலத்திற்கான இலாபம்	–	–
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவு) (வரிகளின் தேறிய)	–	–
மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவு)	–	–
பங்குதாரர்களுடனான பரிவர்த்தனைகள், உரிமை முதலில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை		
வருடத்தில் ஒதுக்கங்களுக்கு மாற்றுதல்	–	–
FVCOCI பங்குகள் அகற்றலுக்கான மாற்றல்	–	–
திறைசேரி முறிகளின் மீதான விசேட வரி	–	–
பங்குதாரர்களுடனான மொத்த பரிவர்த்தனைகள்	–	–
டிசம்பர் 31, 2025 நிலவரப்படி மீதி	49,998	12,152,000

	ஒதுக்கங்கள்						
	நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் ரூ. '000	மீள்மதிப்பீடு ஒதுக்கம் ரூ. '000	ஏனைய ஒதுக்கப்பட்ட ஒதுக்கம் ரூ. '000	FVOCI இல் நிதியியல் சொத்துக்கள் ரூ. '000	விசேட ஒதுக்கம் - கடன் மீள்சீரமைப்பு ரூ. '000	நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூ. '000	மொத்தம் ரூ. '000
	10,574,271	27,367,238	14,141,373	575,973	–	95,197,726	160,058,579
	–	–	–	–	–	25,088,360	25,088,360
	–	2,028,446	–	207,781	–	(5,385,622)	(3,149,395)
	–	2,028,446	–	207,781	–	19,702,738	21,938,965
	1,254,418	–	–	–	24,660,447	(25,914,865)	–
	1,254,418	–	–	–	24,660,447	(25,914,865)	–
	11,828,689	29,395,684	14,141,373	783,754	24,660,447	88,985,599	181,997,544
	11,828,689	29,395,684	14,141,373	783,754	24,660,447	88,985,599	181,997,544
	–	–	–	–	–	40,229,514	40,229,514
	–	(2,265,199)	–	1,109,396	–	1,516,355	360,552
	–	(2,265,199)	–	1,109,396	–	41,745,869	40,590,066
	373,309	–	–	–	2,849,082	(3,222,390)	–
	–	–	–	(265)	–	265	–
	–	–	–	–	–	(3,550,000)	(3,550,000)
	373,309	–	–	(265)	2,849,082	(6,772,125)	(3,550,000)
	12,201,998	27,130,485	14,141,373	1,892,885	27,509,529	123,959,343	219,037,610

உரிமை மாற்றங்களின் கூற்று - குழுமம்

குழுமம்	கூறப்பட்ட மீலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம்	
	சாதாரணப் பங்குகள்	ஒதுக்கப்பட்ட பங்குகள்
	ரூ. '000	ரூ. '000
ஜனவரி 1, 2024 நிலவரப்படி மீதி	49,998	12,152,000
ஆண்டுக்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்		
ஆண்டுக்கான இலாபம்	–	–
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவு) (வரிகளின் தேறிய)	–	–
மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம் (செலவு)	–	–
பங்குகளில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களுடனான பரிவர்த்தனைகள்		
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கான மாற்றம்	–	–
திறைசேரிக்கான விசேட தீர்வை/பங்கிலாபம் செலுத்தப்பட்ட பங்கிலாபம்	–	–
உரித்துவதார்களுடனான மொத்த பரிவர்த்தனைகள்	–	–
டிசம்பர் 31, 2024 நிலவரப்படி மீதி	49,998	12,152,000
ஜனவரி 1, 2025 நிலவரப்படி மீதி	49,998	12,152,000
ஆண்டுக்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்		
காலத்திற்கான இலாபம்	–	–
ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவு) (வரிகளின் தேறிய)	–	–
மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம் (செலவு)	–	–
உரித்துவதாரர்களுடனான பரிவர்த்தனைகள், பங்குகளில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை		
வருடத்தில் ஒதுக்கங்கங்களுக்கான மாற்றம்	–	–
FVOCI உரித்துவ பங்குகளுக்கான அகற்றலுக்கான மாற்றுதல்	–	–
திறைசேரி பங்குகளுக்கான விசேட வரி	–	–
செலுத்தப்பட்ட பங்கிலாபம்	–	–
பங்குதாரர்களுடனான மொத்த பரிவர்த்தனைகள்	–	–
டிசம்பர் 31, 2025 நிலவரப்படி மீதி	49,998	12,152,000

ஒதுக்கங்கள்								
நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் ரூ. '000	மீள்மதிப்பீடு ஒதுக்கம் ரூ. '000	ஏனைய ஒதுக்கப்பட்ட ஒதுக்கம் ரூ. '000	FVOCI ஒதுக்கத்தில் நிதிச சொத்துக்கள் ரூ. '000	விசேட ஒதுக்கம் - கடன் மீள்சீரமைப்பு ரூ. '000	நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூ. '000	மொத்தம் ரூ. '000	கட்டுப்பாடற்ற அக்கறை	மொத்த உரித்துவம் ரூ. '000
10,574,271	30,110,540	14,834,562	462,452	–	122,276,138	190,459,961	14,524,428	204,984,389
–	–	–	–	–	27,558,538	27,558,538	1,217,329	28,775,867
–	2,232,403	(191,084)	297,889	–	(5,464,359)	(3,125,151)	(248,940)	(3,374,091)
–	2,232,403	(191,084)	297,889	–	22,094,179	24,433,387	968,389	25,401,776
1,254,418	–	–	–	24,660,447	(25,914,865)	–	–	–
–	–	–	–	–	–	–	(434,375)	(434,375)
1,254,418	–	–	–	24,660,447	(25,914,865)	–	(434,375)	(434,375)
11,828,689	32,342,943	14,643,478	760,341	24,660,447	118,455,452	214,893,348	15,058,441	229,951,789
11,828,689	32,342,943	14,643,478	760,341	24,660,447	118,455,452	214,893,348	15,058,441	229,951,789
–	–	–	–	–	41,974,128	41,974,128	1,509,581	43,483,709
–	(2,053,946)	(52,546)	1,245,246	–	1,500,419	639,173	23,162	662,335
–	(2,053,946)	(52,546)	1,245,246	–	43,474,547	42,613,301	1,532,743	44,146,044
373,309	–	–	–	2,849,082	(3,222,390)	–	–	–
–	–	–	(265)	–	265	–	–	–
–	–	–	–	–	(3,550,000)	(3,550,000)	–	(3,550,000)
–	–	–	–	–	–	–	(433,568)	(433,568)
373,309	–	–	(265)	2,849,082	(6,772,125)	(3,550,000)	(433,568)	(3,983,568)
12,201,998	30,288,998	14,590,932	2,005,322	27,509,529	155,157,874	253,956,649	16,157,616	270,114,265

காசுப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	வங்கி 2025 ரூ. '000	வங்கி 2024 ரூ. '000	குழுமம் 2025 ரூ. '000	குழுமம் 2024 ரூ. '000
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்					
வரிக்கு முந்திய இலாபம்		64,408,725	41,583,707	71,109,172	47,609,774
செம்மையாக்குதல்					
வரிக்கு முந்திய இலாபத்தில் சேர்க்கப்பட்டுள்ள காசு அல்லாதவைகள் பொருட்கள்	46	23,373,938	17,342,187	25,487,991	17,079,218
செயற்பாட்டு சொத்துக்களிலான மாற்றங்கள்	47	(283,104,755)	(224,884,629)	(412,460,931)	(247,218,482)
செயற்பாட்டு பொறுப்புகளிலான மாற்றங்கள்	48	386,122,508	211,065,897	509,477,976	216,396,257
துணை நிறுவனங்கள் மற்றும் ஏனையவற்றிலிருந்து பங்கிலாப வருமானம்		(1,380,504)	(1,360,579)	(254,252)	(235,652)
தாழ்நிலைக் கடனுக்கான வட்டிச் செலவு		5,697,460	6,115,011	6,129,230	6,827,434
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்/ பணிக்கொடைக்கான பங்களிப்புகள்		2,456,402	1,243,790	2,638,565	1,437,776
செலுத்தப்பட்ட வரி		(25,054,168)	(3,442,268)	(27,159,520)	(5,411,727)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு		172,519,606	47,663,116	174,968,231	36,484,598
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்கள்					
சொத்து, பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல்		(4,513,926)	(5,687,192)	(6,219,391)	(6,741,229)
சொத்து, பொறி மற்றும் உபகரண விற்பனையிலான வருவாய் நிதியியல் முதலீடுகளை கொள்வனவு செய்தல்		125,420	109,926	137,730	162,475
நிதியியல் முதலீடுகளை கொள்வனவு செய்தல்		(107,845,103)	(30,788,643)	(105,001,150)	(10,976,040)
அருவ சொத்துக்களின் தேறிய கொள்வனவு		(224,446)	(1,559,769)	(330,142)	(1,591,263)
துணை நிறுவனங்கள் மற்றும் ஏனைய வற்றில் முதலீட்டில் பெறப்பட்ட பங்கிலாபம்		1,380,504	1,360,579	254,252	235,652
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தப்படுபவை)		(111,077,551)	(36,565,099)	(111,158,701)	(18,910,405)
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்து வரும் காசுப்பாய்சல்கள்					
தாழ்நிலை கடனிலிருந்து பெறப்பட்ட வருமானம்		–	13,515,000	–	13,515,000
தாழ்நிலை கடனை திருப்பிச் செலுத்துதல்		(12,900,000)	(6,563,000)	(12,900,000)	(6,563,000)
தாழ்நிலைக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி		(6,401,206)	(5,907,592)	(6,786,150)	(12,520,648)
குத்தகைக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல்		(1,837,577)	(1,560,655)	(2,366,990)	(1,506,142)
குத்தகை பொறுப்புக்கள் மீதான வட்டி செலுத்தல்		(858,598)	(777,336)	(1,122,782)	(973,828)
கட்டுப்பாடற்ற அக்கறைகளுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்		–	–	(433,568)	(434,375)
ஏனைய உரித்துவ உடமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்/கட்டணம்		(2,000,000)	–	(2,000,000)	–
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு		(23,997,381)	(1,293,583)	(25,609,490)	(8,482,993)
காசும் காசுக்கு சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)		37,444,674	9,804,434	38,200,040	9,091,200
வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்கு சமமானவையும்		71,694,016	61,889,582	72,398,306	63,307,106
வருடத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்கு சமமானவையும்		109,138,690	71,694,016	110,598,346	72,398,306

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

GRI 2-1

1.1 பெருநிறுவனத் தகவலகள்

1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் 1 ஜூலை 1961 இல் நிறுவப்பட்ட இலங்கையில் வதிவிடத்தினைக் கொண்ட மக்கள் வங்கியானது ("வங்கி") ஒரு அரச உடைமை வங்கியாகும். வங்கியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், இலக்கம் 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது.

1.2 அனைத்துமுள்ளடக்கிய நிதி கூற்றுகள்

31 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் வங்கியின் மற்றும் அதன் துணைநிறுவனங்களை உள்ளடக்குகின்றது (கூட்டாக "குழுமம்" என்று அழைக்கப்படுகின்றது).

மக்கள் வங்கியே குழுமத்தின் இறுதி பெற்றோர் நிறுவனமாகும்.

1.3 முக்கிய செயற்பாடுகள்

GRI 2-6

வங்கி

வங்கியின் வணிகமானது, ஏனையவற்றுக்கிடையில், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், கடன் வசதிகளை வழங்குதல், தனிப்பட்ட வங்கியியல், அபிவிருத்தி வங்கியியல், அடகு பிடித்தல், சர்வதேச வர்த்தகம், அரசாங்கப் பிணையங்களில் வர்த்தகம் செய்தல், கடன் அட்டைச் செயற்பாடுகள், முதலீட்டு வங்கியியல் மற்றும் வெளிநாட்டு நாணய வங்கியியலுக்கான கரைகடந்த வங்கியியல் அலகு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

துணை நிறுவனங்கள்

வங்கியின் துணை நிறுவனங்களின் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு:

நிறுவனத்தின் பெயர்	முதன்மை செயற்பாடுகள்
பீப்பள்ஸ் லீசிங் என்ட் பைனான்ஸ் பிஎல்சி	முக்கிய வணிக நடவடிக்கைகள் நிதி குத்தகைகள், வாடகை-கொள்முதல் சொத்து நிதி, கால கடன்கள், இஸ்லாமிய நிதி, விளிம்பு வர்த்தகம், பங்கு வர்த்தகம், கடன் கருவிகளை வழங்குதல், காரணியாக்குதல், தங்கக் கடன்கள் மற்றும் பொது வைப்புத்தொகைகளைத் திரட்டுதல் ஆகியவை ஆகும்.
பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	சுற்றுலா ஏற்பாடு மற்றும் விமான டிக்கெட் விற்பனை (பயண முகவர்)

உப நிறுவனங்கள

வங்கியின் துணை துணை நிறுவனங்களின் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு:

நிறுவனத்தின் பெயர்	முதன்மை செயற்பாடுகள்
பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மெனேஜ்மன்ட் லிமிடெட்	வாகனக் குழு முகாமைத்துவம், வாகன மதிப்பீடு, வாகன விற்பனை, காப்பீட்டு மதிப்பீடு மற்றும் வாகன பழுதுபார்ப்பு
பீப்பள்ஸ் லீசிங் பிராபர்ட்டி டிவலொப்மன்ட் லிமிடெட்	கலப்பு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சொத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது.
பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் பி.எல்.சி.	பொது காப்பீட்டு வணிகத்தை மேற்கொள்வது
பீப்பள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிடெட்	குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கும நுண் நிறுவனங்களுக்கும் வங்கி சாரா நிதி சேவைகளை வழங்குதல்.
பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிராபர்டீஸ் லிமிடெட்	ஒரு அலுவலக வளாகத்தை செயற்படுத்தல்.
லங்கன் எலையன்ஸ் பைனான்ஸ் லிமிடெட்	அசையும் மற்றும் அசையா சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் கடன்களை வழங்குதல்.

2. கணக்கியலின் அடிப்படை

2.1 இணக்க கூற்று

குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களும் வங்கியின் தனியான நிதிக் கூற்றுக்களும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS மற்றும் SLFRS) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 1961 இன 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன. நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தலானது 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் தேவைப்பாடுகளுடனும் இணைந்துள்ளது.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் வடிவங்களும், அதில் செய்யப்படும் வெளிப்படுத்தல்களும், இலங்கை மத்திய வங்கியால் 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள "உரிமம் பெற்ற வங்கிகளால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிநிலை அறிக்கைகள் மற்றும் ஏனைய வெளிப்படுத்தல்களின் வெளியீடு" என்ற வடிவத்துடன் இணங்குகின்றன. மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க, வஙகி வருடாந்த மற்றும் காலாண்டு நிதித் தகவல்களையும் ஏனைய வெளிப்படுத்தல்களையும் பத்திரிகைகளிலும் வலைத்தளத்திலும் வெளியிடுகிறது.

2.2 நிதிநிலை அறிக்கைகளுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக்கூற்றுக்கள், 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம், 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள், மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS மற்றும் SLFRS) இன் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பாளியாகும். இந்த LKAS மற்றும் SLFRS என்பன இ.ப.க. நிருவகத்தின் இணையத்தளத்தில் www.casrilanka.com இல் கிடைக்கின்றது.

இந்த நிதிநிலை அறிக்கைகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது.

வருமானக்கூற்று மற்றும் ஏனைய பூரணமான வருமானக்கூற்று	வங்கி மற்றும் குழுவின் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்கான நிதி செயற்திறன் பற்றிய தகவல்களை வழங்குதல்
நிதி நிலைமைக் கூற்று	வருட இறுதியில் நிதி நிலை குறித்து வங்கி மற்றும் குழுமம் குறித்த தகவல்களை வழங்குதல்
உரிமை மாற்றங்களின் கூற்று	மீளாய்வு ஆண்டிற்கான பங்குதாரர்களுக்கான உரிமை மாற்றங்களையும் சித்தரிக்கிறது
காசுப்பாய்ச்சல்கள் கூற்று	வங்கி மற்றும் குழுமத்தின் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளை உருவாக்க கூடிய திறன் மற்றும் அக்காசுப்பாய்ச்சல்களை பயன்படுத்தும் திறன் பற்றிய தகவல்களை பயனாளிகளுக்கு வழங்குதல்
நிதியில் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்

2.3 நிதி அறிக்கைகளின் அங்கீகாரம்

டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த மற்றும் தனி நிதிநிலை அறிக்கைகள், இயக்குநர்கள் குழுவால் பிப்ரவரி 25, 2026 அன்று வெளியிட அங்கீகரிக்கப்பட்டன.

3. அளவீட்டின் அடிப்படை

நிதிநிலை அறிக்கைகளில் உள்ள பின்வரும் உருப்படிகளைத் தவிர, நிதிநிலை அறிக்கைகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு எந்த மாற்றங்களும் செய்யப்படாமல், நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன:

விடயம்	அளவீட்டின் அடிப்படை	குறிப்புகள்
பெறுதி நிதி கருவிகள்	நியாயமான பெறுமதியில்	20
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நிதியியல் கருவிகள்	நியாயமான பெறுமதியில்	21
OCI மூலம் நியாயமான பெறுமதியில் 26 அளவிடப்படும் நிதிக்கருவிகள்	நியாயமான பெறுமதியில்	25 மற்றும் 26
காணி மற்றும் கட்டிடம்	செலவில் அளவிடப்பட்டு, பின்னர் மறுமதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் நியாயமான மதிப்புகளான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளில் அளவிடப்படுகிறது.	28
வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்	திட்ட சொத்துக்களின் தேறிய மொத்த நியாய மதிப்பைக் குறைத்து, வரையறுக்கப்பட்ட நலன் கடமையின் தற்போதைய பெறுமதியாக நடைமுறை ரீதியாக மதிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.	35

3.1 செயல்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

ஒருங்கிணைந்த மற்றும் தனித்தனி நிதிநிலை அறிக்கைகள் இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது வங்கியின் செயல்பாட்டு நாணயமாகும். வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், இலங்கை ரூபாயில் வழங்கப்பட்டுள்ள நிதித் தகவல்கள் அருகிலுள்ள ஆயிரத்திற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன.

3.2 திரள் கணக்கியல் முறை

காசுப்பாய்ச்சல் குறித்த தகவல்களைத் தவிர, இந்த நிதிநிலை அறிக்கைகள் திரள் கணக்கியல் முறையைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டுள்ளன.

3.3 பொருண்மை மற்றும் திரள்வு

இலங்கை கணக்கியல் தரநிலைகள் - LKAS 1 - “நிதி அறிக்கைகளின் முன்னிலைப்படுத்தல்” இன்படி, ஒத்த பொருண்மை ஒவ்வொரு முக்கிய வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டைக் கொண்ட அம்சங்கள் அவை முக்கியமற்றவை எனில், தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

நிதிநிலை அறிக்கைகளின் புரிந்துணர்வையும் ஒப்பீட்டுத் தன்மையையும் மேம்படுத்துவதற்காக, முக்கியமான தகவல்களை முக்கியத்துவமற்ற விபரங்களால் மறைக்காமலும் அல்லது வெவ்வேறு தன்மை அல்லது செயற்பாட்டைக் கொண்ட முக்கியமான விடயங்களை ஒன்றிணைக்காமலும், குழுமம் மற்றும் வங்கியின் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் முறையாக முன்வைக்கப்படுகின்றன.

3.4 காசுப்பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கியல் தரநிலை - LKAS 7 - "காசுப்பாய்ச்சல்களின் அறிக்கை" க்கு இணங்க பணப்புழக்கங்களைத் தயாரிப்பதற்கான "மறைமுக முறையைப் பயன்படுத்தி பணப்புழக்க அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்குச் சமமானவை குறுகிய கால, அதிக திரவ முதலீடுகளை உள்ளடக்கியது, அவை உடனடியாக அறியப்பட்ட அளவு பணமாக மாற்றக்கூடியவை மற்றும் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய இடர்நேர்விற்கு உட்பட்டவை. காசு மற்றும் காசுக்கு சமமானவை கையில் உள்ள காசு, வங்கிகளில் உள்ள மீதிகள் மற்றும் அழைப்பு மற்றும் குறுகிய கால அறிவிப்பில் காசு ஆகியவை அடங்கும்.

3.5 ஒப்பிடப்படும் தகவல்கள்

நடப்புக் காலத்தின் நிதிநிலை அறிக்கைகள் குறித்த பயனர்களின் புரிதலை மேம்படுத்தவும், காலங்களுக்கிடையிலான ஒப்பீட்டை எளிதாக்கவும், முந்தைய காலத்திற்கான ஒப்பீட்டுத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன. ஒரு சிறந்த விளக்கக்காட்சியை வழங்குவதற்காக, நடப்பு ஆண்டின் விளக்கக்காட்சியுடன் பொருந்துமாறு, தேவைப்படும் இடங்களில் ஒப்பீட்டுத் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

4. முக்கியமாக கணக்கீட்டு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

குழுவின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதில், நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளைத் தீர்மானிப்பதில் நிர்வாகம் தீர்ப்பு மற்றும் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களைப் பயன்படுத்தியுள்ளது. உண்மையான முடிவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடு திருத்தப்பட்ட காலத்திலும், எதிர்காலத்தில் பாதிக்கப்படும் காலங்களிலும் அங்கீகரிக்கப்படும்.

ஒருங்கிணைந்த மற்றும் தனி நிதிநிலை அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துவதில் செய்யப்பட்ட தீர்ப்புகள், அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

4.1 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

குழுமம் தொடர்ந்து இயங்கும் நிறுவனமாகத் தொடரும் திறனை பணிப்பாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர், மேலும் எதிர்காலத்தில் வணிகத்தில் தொடர் தேவையான வளங்கள் இருப்பதாக அவர்கள் திருப்தி அடைந்துள்ளனர். மேலும், வங்கி தொடர்ந்து இயங்கும் நிறுவனமாகத் தொடரும் திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையும் நிர்வாகத்திற்குத் தெரியாது. எனவே, நிதிநிலை அறிக்கைகள் தொடர்ந்து இயங்கும் கொள்கை அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

4.2 நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகள்

நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் பெறுமதியானது காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல் நுட்பத்தினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது கழிவிறக்க வீதங்கள், சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் விளைவுகள், எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதங்கள், மற்றும் இறப்பு வீதங்கள் என்பவற்றில் அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றது.

அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்தத் திட்டங்களின் நீண்டகாலத் தன்மையின் காரணத்தினால், அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைகளுக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட அனுமானங்களுக்கு குறிப்புகள் 35.1.5 மற்றும் 35.2.5 இணை பார்க்கவும்.

4.3 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி

குழுவின் குத்தகை நிலத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காணி ஆகியவை மறுமதிப்பீடு திகதியில் நியாயமான பெறுமதியில் பிரதிபலிக்கப்படும். திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் சேத நட்டங்களைக் குறைத்து மதிப்பிடப்படும். அத்தகைய சொத்துக்களின் நியாயமான பெறுமதியை தீர்மானிக்க குழு சுயாதீன மதிப்பீட்டு நிபுணர்களை ஈடுபடுத்தியது. இதே போன்ற சொத்துக்களின் தற்போதைய சந்தை விலைகள் கிடைக்கும்போது, இந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதியை மதிப்பிடுவதில் அத்தகைய சான்றுகள் கருதப்படுகின்றன.

4.4 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம்

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் எஞ்சிய மதிப்புகள், பயனுள்ள ஆயுள் மற்றும் தேய்மான முறைகள் ஆகியவற்றை குழு மீளாய்வுசெய்கிறது. இந்த மதிப்புகள், விகிதங்கள், முறைகள் ஆகியவற்றின் மதிப்பீட்டில் நிர்வாகத்தின் தீர்ப்பு செயல்படுத்தப்படுகிறது, எனவே அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

4.5 வரி

